# இறைதூதர் காலத்து மதீன சமூகம்

பாகம் 02



கலாநிதி அக்ரம் ளியா அல்-உமரீ

# இறைதூதர் காலத்து மதீன சமூகம்

பாகம் - 2

கலாநிதி அக்ரம் ளியா அல் உமரி

**IRAI THOOTHAR KAALATHTHU MATHEENA SAMUGAM**
VOL. II

Tamil edition of
**Madinan Society at the Time of the Prophet**
VOL II

by
Dr. Akram Diya al Umari

Originally published by
**The International Institute of Islamic Thought**
555 Grove Street,
Herndon, Virginia 2207 O-47 05,
U.S.A.
©1411/1991 ISBN 0 912463 37 6

All rights reserved

Tamil edition - 2020

ISBN 978-955-8398-63-0

Published by
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town 12090, Sri-Lanka
Cover and layout by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama

# பதிப்புரை

المجموع المدني في عهد النبوة எனும் தலைப்பில் இரண்டு பாகங்களில் வெளிவந்த பேராசிரியர் அக்ரம் ளியா அல்தீன் அல் உமரீயின் நூல் السيرة النبوية الصحيحة எனும் தலைப்பில் இரண்டு பாகங்களையும் உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டது. நூலின் ஆங்கிலப் பதிப்பு Madinan Society at the Time of the Prophet எனும் தலைப்பில் இரண்டு பாகங்களாகவும், பின்னர் இரண்டு பாகங்களையும் உள்ளடக்கிய தனிப்பதிப்பாகவும் International Institute of Islamic Thought (IIIT) வெளியிட்டது. ஆங்கில மொழிபெயர்ப்பை அதீத சிரத்தையுடன் செய் திருந்தவர் ஹுதா கத்தாப்.

''இறை தூதர் காலத்து மதீனா சமூகம்'' எனும் தலைப்பில் 2008 ஆம் ஆண்டு வெளியான நூலின் முதல் பாகத் தமிழ் மொழிப் பதிப்பு 2018 ஆம் ஆண்டு மீள்பிரசுரம் செய்யப்பட்டது. இப்போது வெளியாவது நூலின் இரண்டாம் பாகம்.

மூல நூலின் ஒவ்வொரு பக்கத்திலும், பெருமளவில் ஒவ்வொரு வசனத்துக்கும் ஏராளமான அறபு மூல ஆதார நூல்களை அடிக்குறிப்பு களாகக் காட்டிச் செல்வார் பேராசிரியர் அல் உமரீ. அறபு மூல நூலின் அடிக்குறிப்புகள் அனைத்தையும் தன்னுள் பொதிந்துள்ளது, ஹுதா கத்தாபின் கைவண்ணத்தில் வெளிவந்த ஆங்கில பதிப்பு. தமிழ்ப் பதிப்பில் அடிக்குறிப்புகள் அனைத்தும் தவிர்க்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பதிப்பில் பொதிந்துள்ள விடயங்கள் குறித்து மேலதிக விவரங்கள் திட்டிக்கொள்ள விழைவோரும், ஸீரா கற்கைநெறியில் பாண்டித்யம் பெற ஆர்வங் கொண்டோரும் அறபு மூல நூலை அல்லது ஆங்கிலப் பதிப்பைக் கலந்துகொள்வது பயனளிக்கும்.

*நூலைக் கணணிப் பதிவு செய்தவர் ரிஜா ஹமீட். அவருக்குத் துணை பயந்தவர் ரினாஸ் முஹம்மத். இருவருக்கும் எமது நன்றிகள்.*

*எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக.*

ஆகஸ்ட் 2020

பூஸின் டெக்ஸ்ட்ஸ்
Fuzin Texts

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 07 |
| அறப்போர் பிரகடனம் | 21 |
| ஆரம்ப அறப்போர்கள் | 30 |
| கிப்லா மாற்றம் | 35 |
| பத்ர் | 39 |
| உஹத் | 65 |
| பனூ-அல்-முஸ்தலிக் | 93 |
| அகழ் (அல் அஹ்ஸாப்) | 109 |
| அல்- ஹுதைபியா | 127 |
| அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நபிகளாரின் மடல்கள் | 150 |
| நாட்டரபிகளைச் சீர்படுத்துதல் | 156 |
| பதிலீட்டு உம்ரா (உம்ரா அல்-களா) | 159 |
| முஃதா | 162 |
| தாத் அல் ஸலாஸில் | 167 |
| மக்க விடுதலை | 169 |
| ஹுனைன் | 187 |
| தாயிப் | 205 |
| தபூக் | 220 |
| தூதுக்குழுக்களின் வருடம் | 239 |
| அபூபக்ர் தலைமையிலான ஹஜ் | 244 |
| இறுதி ஹஜ் யாத்திரை | 248 |
| உஸாமா-இப்ன்-ஸைத்-இப்ன்-ஹாரிஸாவின் படைதிரட்டு | 251 |
| நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மறைவு | 252 |

# அறிமுகம்

*புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ்வின் தூதருக்கும், அன்னாரின் குடும்பத்தார்க்கும், தோழர்களுக்கும் அவன் நல்லருள் பாலிப்பானாக!*

*அல்லாஹ்வின் தூதரது சரிதையைக் கோர்வை செய்து எடுக்கும் பணி மீது இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே அக்கறை மிகுந்திருந்தது. இஸ்லாத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலேயே வரலாற் றாசிரியர்களும், ஹதீஸ் வல்லுனர் (முஹத்திதூன்)களும் ஸீரா (அல் லாஹ்வின் தூதரது சரிதை)வுக்கான ஆவணங்களைச் சேகரிப்பதிலும் அவற்றை வகைப்படுத்தி அமைப்பதிலும் பாரிய ஈடுபாடு கொண்டி ருந்தனர்.*

*அல்-வாகிதீ, அல்-பலதூரி முதலாய வரலாற்று ஆசிரியர்களின் முக்கியமான பண்பு விஷயவாரியாகவும், கால வரன் முறைக்கமைய வும், நிகழ்வுகளைத் தொகுத்தெடுப்பதாகும். மறுபுறம் முஹத்திதூன் களின் தொகுப்புகளில் வரலாற்று நிகழ்வுகள் பல பட பரவிக் காணப் படும். அவர்கள் அறிவிப்புகளுக்கான அடிப்படை நியமங்களிலேயே (கவாயித்-அல்-ரிவாயா) கவனம் செலுத்தி குறித்த அறிவிப்பின் இஸ் னாத் (அறிவிப்பாளர் வரிசை)களின் தர நிர்ணயத்திலேயே அக்கறை காட்டினர். ஆக அவர்கள் தனியோர் அறிவிப்பைப் பல படப் பிரித்து, அவர்களது ஆக்கங்களின் வரலாற்று ஒழுங்குக்கு இயைய, அதன் ஒரு பகுதியை ஓரிடத்திலும் ஏனைய பகுதிகளை வெவ்வேறு இடங்களி லும் அறிவிப்புச் செய்வர். இதனை நாம் மிகத் தெளிவாக ஸஹீஹ்-அல்-புகாரீயின் மகாஸீ (இராணுவ நடவடிக்கைகள்) பற்றிய அங்கத்தில் காணலாம். சற்றே தெளிவு குன்றிய வகையில், இதனை ஸஹீஹ் முஸ்லிமிலும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஏனெனில், முஸ்லிம்*

நீண்ட அறிவிப்புகளைப் பதிவு செய்து அவற்றின் சொற்பரப்புகள் பற்றிய அபிப்பிராயங்களையும் தருவதோடு, புகாரீயை விட, அறிவிப் புகளை வரலாற்று ஒழுங்குக்கு இயைய அமைத்துக் கொள்வதில் கூடிய கவனம் செலுத்தியுள்ளார்.

சில கிரந்தகர்த்தாக்கள் இவ்விரண்டு அணுகுமுறைகளையும் கலந்து பிரயோகித்துள்ளனர். இவர்களது கிரந்தங்களில் வரலாற்றாசிரியர்களு டையதும், முஹத்திதூன்களுடையதும் முறைமைகள் விரவிக் காணப் படுகின்றன. உதாரணமாக, முஹம்மத்-இப்ன்-இஸ்ஹாக், கலீபா-இப்ன்-கய்யாத், யாகூப்-இப்ன்-ஸுஃப்யான்-அல்-பஸவீ, முஹம்மத்-இப்ன்-ஜரீர்-அல்-தபரீ ஆகியோரைக் காணலாம். அவர்கள் இஸ்னாத் களைத் தரும்போது முஹத்திதூன்களின் முறைமைகளையே பின் பற்றினர். ஒரு நிகழ்வினைப் பூரணமாக்கி வைக்கப் பல இஸ்னாத் களை இணைத்தனர் அல்லது ஒரு தலைப்பின் கீழ் பல அறிவிப்புகளைக் கொண்டு வந்தனர்.

எவ்வாறாயினும் எல்லா ஸீரா கிரந்தகர்த்தாக்களும் தம்மால் இயன் றளவு அறிவிப்புகளை சேகரிக்கவும் பதிவு செய்யவுமே விழைந்தனர். அவை அனைத்தும் ஸஹீஹ் ஆக இருக்க வேண்டும் என நியதிகள் எதனையும் அவர்கள் வகுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் தரக்கூடிய இஸ்னாத்களிலிருந்து, எவை ஸஹீஹ் ஆனவை, எவை ளயீப் ஆனவை எனக் கண்டுகொள்வதனை வாசகர்களுக்கே விட்டுவிட்டார்கள். இதற்கு விதிவிலக்காய் அமைந்தவர்கள் அல்-புகாரீயும், முஸ்லிமுமே. அவர்கள் தமது இரு ஸஹீஹிலும் பதிவு செய்த ஸீரா அறிவிப்புகளுக்கு, ஸிஹ்ஹா (ஆதார பூர்வத்தன்மை)வை ஒரு நியதியாகக் கொண்டிருந்தனர்.

இஸ்லாத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளது விற்பன்னர்கள், ஹதீஸ் அறிவிப்பாளர்களையும் அவர்களது தரங்களையும் அறிந்திருந்தனர். இஸ்னாத்கள், அவற்றின் அதிகாரபூர்வ தன்மையின் தராதரங்கள் என்பனவெல்லாம் அவர்களால் நன்கு அறியப்பெற்றிருந்தன. அவர் களால் அறிவிப்புகளை மதிப்பிடவும் பகுத்துக் காணவும் இயலுமாயி ருந்தது. என்றாலும் பின்னைய நூற்றாண்டுகளில் ஒவ்வோர் அறிவிப் பாளரதும் சரிதை பற்றிய அறிவு, இஸ்னாத் பற்றிய தெளிவு ஆகியன கற்றலின் அடிப்படை அம்சங்களாக அமையாது போயின. ஆகவே, தற்போது இத்துறைகளில் ஆர்வம் கொண்டுள்ளவர்களான அறிஞர்கள் யாரையேனும் கண்டு கொள்வது அரிதாகி விட்டது. இதனால் சமகால நூலாசிரியர்களதும், வரலாற்றாசிரியர்களதும் ஆக்கங்களில், ஹதீஸ் பிரிபாடுகள், சொற்பிரயோகங்கள் அடிப்படையில் எத்தகு வகைப்

படுத்தல்களையும் காண முடிவதில்லை. எமது காலத்தின் பிரசித்தம் பெற்ற வரலாற்றாய்வாளர்கள், கடந்த இரண்டு நூற்றாண்டுகளுள் மேற்கில் உருவாகி வளர்க்கப்பட்டு வந்துள்ள வரலாற்றுத்திறனாய்வு முறைகளையே பின்பற்றி வருகின்றனர். மேற்கத்திய வரலாற்று ஆக்கங்களில் பிரயோகமாகியுள்ள திறனாய்வு முறைகளை ஆழமாகப் பயின்று அவற்றினூடாகவே ஸீரா அறிவிப்புகளையும் இவர்கள் அணுகுகின்றனர். இஸ்லாமிய வரலாற்று அறிவிப்புகளையும் ஆவணங்களையும் அணுகுவதற்கு மேற்கத்திய முறைகள் உகந்தனவெனக் கூறுவதற்கில்லை. அவற்றிற்கெனப் பிரத்தியேக அம்சங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானது அறிவிப்பாளர் வரிசை அல்லது இஸ்னாத். இது எந்தவோர் அறிவிப்பினதும் முன்னால் வருவது. இதனையே முஹத்திதூன் இஸ்னாத் ஸஹீஹானதா எனக் கண்டு கொள்ளப் பயன்படுத்துகின்றனர்.

அறிவிப்பாளர்களது சரிதைகள், அவர்களது தராதரங்கள், அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்திருக்கக்கூடுமா என்பதற்கான சாத்தியப்பாடுகள் என்பனவற்றையெல்லாம் உள்ளடக்கிய ஏராளமான பெரிய நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவையே, அவர்களது அறிவிப்புகளைத் தீர்க்கமாக ஆய்ந்து காண்பதோடு அவர்கள் பற்றிய சமகாலத்தோரது அபிப்பிராயங்களையும் தருகின்றன. இத்துணை பரந்த தகவல்களும், பெறுமதி மிக்க நூல்களும் இஸ்லாமிய வரலாறு குறித்த அண்மைக் கால கற்கைகளில் பயன்படுத்தப்பட்டதில்லை. இதுவே ஸீரா கற்கைகளதும் நிலை. இஸ்லாமிய வரலாற்று அறிவிப்புகள் குறித்து நூற்றுக் கணக்கான பேரறிஞர்கள் மேற்கொண்ட முனைவுகள் அனைத்தையும் புறக்கணித்து விடுதல் எமக்குத் தகாது. மேற்கத்திய வரலாற்றுத் திறனாய்வுகளை மட்டுமே பயன்படுத்தி, எமது பழம் பேரறிஞர்கள் ஆற்றிய தொண்டுகளைப் பொருட்படுத்தாது விடுவோமாயின், நாம் அடையக்கூடிய நட்டம் அளவிடற்கரியதாகும்.

இஸ்லாமிய வரலாற்றுப் பதிவுகளது இஸ்னாத்களைப் புறக்கணித்து, அறிவிப்புகளின் வாசகங்களை மட்டுமே ஆய்வு செய்து காண்பது, முரண்பட்ட பல அறிவிப்புகளை நாம் எதிர்கொள்ளும் போது எங்களைக் குழப்பங்களுக்குள்ளாக்கிவிடும். அம்முரண்பட்ட அறிவிப்புகள் தர்க்க ரீதியானவையாகவும், ஆய்வுக்குப் பொருந்துவனவாகவும் அமைந்திருந்தாலும் கூட சிந்தையில் கலக்க மேற்பட்டுவிடும். இது ஏற்கெனவே வரலாற்று நிகழ்வுகளது விளக்கங்களுள் - குறிப்பாக, இஸ்லாத்தின் ஆரம்பகட்ட அறிவிப்புகளைப் பொறுத்து - விளைந்துள்ளது. ஆய்வாளர் இஸ்னாத்களை ஆய்வு செய்யும் போது, முஹத்தி

தூன்களது முறைமைகளைக் கையாள்வது அவசியம். இல்லையேல், எந்த அறிவிப்பு மிகக் கூடியளவு துல்லியமாக அமைந்துள்ளது எனக் கண்டு கொள்வதில் அளவிடற்கரிய பிரச்சினைகளை அவர் எதிர் கொள்வார்.

மேற்கத்திய திறனாய்வு முறைகளை நாம் முறைகேடான வகையில் இகழ்ந்து பேசவோ, அவற்றைத் தன்னிச்சையாக மதிப்பிடவோ முனை வதாகாது இது. மேற்கத்திய ஆய்வு முறைகள் அனுபவ ரீதியாகவும், ஆழ்ந்த கற்கைகளின் மூலமாகவும் மாபெரும் அறிஞர்கள் வளர்த் தெடுத்த முறைமைகளின் பயனாக விளைந்தனவாகும். ஒவ்வோர் அறிஞரும் தனக்கு முன்னையவர் மேற்கொண்ட முனைவுகளுக்குத் தானும் சேர்த்து, ஆழ்ந்தும் விரிந்தும் உள்ள தற்போதைய நிலைமைக்கு மேலைத்தேய ஆய்வு முறையைக் கொண்டு வந்துள்ளனர்.

பல்வேறுபட்ட விதிகள், கோட்பாடுகள், விவரங்கள் ஆகியவற்றைப் பொறுத்து, ஆய்வுகளில் ஈடுபடும் மேலைத்தேய அறிஞர் ஒருவர், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஸ்லிம் அறிஞர்கள் தத்தமது துறைகளில் நிறுவிச் சென்றனவற்றை எதிர்கொள்ளாதிருப்பது அரிது. இத்தகு சந்திப் புகள், ஐரோப்பிய சிந்தையில் இஸ்லாம் பதித்திருந்த செல்வாக்கு களின் மூலத்தைச் சுட்டுவனவாக உள்ளன. ஐரோப்பிய மத்திய காலகட்டத்தில் இருந்தே இஸ்லாமிய உலகுக்கும் மேற்குலகுக்கும் இடையிலான உறவுகள் நிலவி வந்துள்ளன.

முஹத்திதூனின் முறைமைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படு வனவல்ல முஸ்லிம்களது விஞ்ஞான ரீதியான முறைமைகள். வேறும் பல நியதிகள் 'உஸூல்-அல்-பிக்ஹ்' (இஸ்லாமிய நியாயவியல் கோட் பாடுகள்) அறிஞர்களால் நிறுவப்பெற்றன. அவை உஸூல்-அல்-பிக்ஹ் நூல்களில் பொதிந்துள்ளன. மருத்துவம், வானவியல், கணிதம் ஆகிய துறைகளிலும் முஸ்லிம் அறிஞர்கள் வேறும் பல விதிகளை அறிமுகம் செய்தனர். அவை செயன்முறை ஆய்வுகளில் பொதிந்துள்ளன. Roger Bacon இன் மேற்கத்திய சிந்தனையின் வரலாற்றோடு இம்முறைமை கள் இணைக்கப்பட்டுள்ளன எனக் கூறுவார் Gustave Lebon. தனது ஆய்வுகளில் அரபு நூல்களை மட்டுமே நம்பியிருந்தவர் ரோஜர் பேகன். இம்முறைமைகள் மேற்கின் லோகாயுத நாகரிகம் தனது மேலான தொழில்நுட்ப வல்லமையை ஈட்டிக்கொள்ளத் துணை பயந்துள்ளன.

இது அவ்வாறிருக்க, இந்த அறிமுகத்தின் நோக்கம் ஹதீஸ் அறிவிப்புகளுடன் நேரடியான தொடர்பு கொண்ட முஹத்திதூன்களின் முறைமையாகும். பின்னர் நாம் அதனை வரலாற்று அறிவிப்புகளின்

மீது பிரயோகிப்போம். முஹத்திதூனின் முறைமைகள் வரலாற்று ஆய்வு முறைமைகளை ஒத்தன.

முஹத்திதூன்களின் ஹதீஸ் வகைப்படுத்தலும், சொல் வழக்காறு களும் ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டில் அல்-கதீப்-அல்-பக்தாதீயால் ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவரப்பட்டன. அன்று தொட்டு அதில் குறிப் பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. இப்ன்-அல்-ஸலாஹ்வும் காதீ அயாத்தும் கற்பித்தல் கட்டமைப்பை முன்னிட்டு அதனை மீளமைத்திருந்தார்கள். அல்-ஹாபிஸ்-அல்-தகபீ, அல்-ஹாபிஸ் இப்ன் கஸீர், அல்-ஹாபிஸ் இப்ன் ஹஜர் ஆகியோர் தமது நூல்களில் இந்த முறைமையையே பயன்படுத்தினர். அவர்கள் சிறிய இணைப்பு களைச் சேர்த்திருந்தனர். என்றாலும் முறைமையில் பெரிய மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. ஏனெனில், அல்-தகபீ, இப்ன்-கஸீர், இப்ன் ஹஜர் ஆகியோரின் இணைப்புகள், பொதுவான விதி முறை களின் சிற்சிறு அம்சங்கள் பற்றியனவாகவே இருந்தன. என்றாலும் கூட இந்த இணைப்புகள் முக்கியத்துவம் பெறவே செய்கின்றன. ஏனெனில் முஸ்லிம் உலகின் அறிவியல் முனைவுகள் நீண்ட காலப் புறக்கணிப்புக்கு ஆளாகாமல் செயலூக்கத்துடன் இயங்கி வந்திருந்தால் இந்த முறைமை எவ்வாறு பூரணத்துவம் கொண்டதாகவும் பரந்ததாயும் அமைந்திருக்கக்கூடும் என்பதை இவ்விணைப்புகள் கோடிட்டுக் காட்டு கின்றன.

முஹத்திதூன்களின் முறைமைகளும் மேற்கத்திய திறனாய்வு முறை களும் ஒன்றிணைக்கப்பட்டு, பின்னையது இஸ்லாமிய சிந்தையின் தராதரங்களைப் பேணவும் கூடுமாயின் சிறந்த பெறுபேறுகளை நாம் கண்டுகொள்ளலாம்.

நவீன இஸ்லாமிய வரலாற்று ஆய்வு இன்னமும் தவழும் பருவத் திலேயே தள்ளாடிக் கொண்டிருக்கின்றது என்பதில் ஐயங்கள் கொள்ள வேண்டியதில்லை. சர்வதேச வரலாற்று ஆய்வுகளின் தரத்துக்கு அதனை உயர்த்தி எடுப்பதாயின் பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண் டும். உதாரணமாக, ஸீரா குறித்த நவீன நூல் ஒன்றினை ஒருவர் வாசிக் கின்றார் எனக் கொள்வோம். இப்ன் ஹிஷாம் (மறைவு 833) எழுதிய ஸீரா, இப்ன்-அல்-கையிம் (மறைவு 1350) எழுதிய ஸாத்-அல்-மஆத் ஆகிய நூல்களுக்கும் தான் வாசிக்கும் நூலுக்கும் இடையில் எந்த வொரு வித்தியாசத்தையும் அவர் கண்டுகொள்வது அரிது. இப்புதிய, பழைய நூல்களின் முறைமையும், பாணியும் வேறுபட்டிருக்கலாம். என்றாலும் நவீன காலத்தில் சமூகவியல் கற்கைளில் ஏற்பட்டுள்ள

அபாரமான அபிவிருத்திகளின் மத்தியிலும், நவீன விஞ்ஞானம் அத்தகு கற்கைகளுக்கு வழங்கிவரும் பெறுமதி மிக்க ஆதரவுகளின் மத்தியிலும், தற்கால வாசகர் வித்தியாசம் எதனையும் காணமாட்டார்.

வரலாற்றுக் கற்கைகளில் நாம் நமது முன்னோர்களிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளவை, மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் அவர் களது முன்னோர்களிடமிருந்து பெற்றுக் கொண்டவற்றை விட மிக அதிகம். என்றாலுங்கூட, துரதிஷ்டவசமாக நாம் இன்னமும் நவீன அறிவியல் உலகின் விளிம்பிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதன் உள்ளே நுழைவதில் நாம் தயக்கம் காட்டி வருகின்றோம். அதனால் நவீன அறிவியலின் பல் நலம் செறிந்த வளங்களின் பயனை அனுபவிக்க இயலாதிருக்கின்றோம்.

வரலாற்றுத் திறனாய்வு எமது கற்கைகளில் பலமிழந்து காணப் படுகின்றது. வரலாற்று அறிவிப்புகள் மீதான எமது ஆய்வுகளும் அவ்வாறே உள்ளன. அறிவிப்புகள் மீதான எமது மேலோட்டமான கண்ணோட்டம், நிகழ்வுகள் பற்றி நாம் கொண்டுள்ள தனித்தனிப் பார்வை, காரண-காரியத் தொடர்புடையனவாக நிகழ்வுகளைப் பகுத் துக் காண்பதிலுள்ள எமது பலவீனம், இஸ்லாமிய வரலாற்றின் செல் வழி குறித்துத் தெளிவான ஒரு காட்சி புலப்படாமை, அத்தகு இஸ்லாமிய சமூகத்தில் தனி மனிதன் வகிக்கும் பங்கு, விதிக்கும், சுய சிந்தனைக்கும் இடையிலான தெளிவில்லாத உறவு முறை முதலான அனைத்தும் வரலாற்றுத் திறனாய்வைப் பலவீனமாக்கிவிடும் காரணி களாக உள்ளன. மேலும் ஆரம்ப கால வரலாற்று நூல்கள் வகுத்துக் காண்பதையோ, பரந்ததொரு தீர்ப்பைத் தரும் பண்புகளையோ கொண்டிருக்கவில்லை. ஏனெனில் ஆரம்ப வரலாற்றாசிரியர்களின் பணியாக அமைந்தது அறிவிப்புகளைச் சேகரித்துத் தருவது மட்டுமே.

வரலாற்றின் செல்வழி குறித்த சமூகவியல் கோட்பாடுகள் மீது முஸ்லிம்களின் கவனத்தைக் குர்ஆன் ஈர்த்து நின்ற நிலையிலும் கூட, ஆரம்ப முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அவை பற்றி அரிதாகவே குறிப்புகள் தருகின்றனர். ஆரம்ப காலத்திலிருந்தே முஸ்லிம் அறிஞர்கள் தத்துவம், தர்க்கவியல் துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாய் மொழியியல், உஸூல்-அல்-பிக்ஹ் கற்கைகளை வளர்த்தெடுத்தனர். என்றாலுங்கூட இப்ன்-கல்தூன் தனது முகத்தமாவை எழுதும் வரை எந்த ஒரு முஸ்லிம் வரலாற்றாசிரியரும், நிகழ்வுகள், அனுமானங்கள், வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் குர்ஆனிய வரலாற்றுக் கோட்பாடு ஒன்றினைக் கட்டியெழுப்பவில்லை. அவர்கள் முன்னெச்

சரிக்கையுடன் இஸ்லாமிய சிந்தனைக்கும் விசுவாசத்திற்கும் முரணான அனைத்தையும் ஒதுக்கி வைப்பதில், தத்துவம், தர்க்கம் ஆகியன வற்றிலிருந்து பெரும் பயன்பெற்று, அதில் பெரு வெற்றியும் கண்டனர். அவர்களது சிந்தையில் எந்தளவு இஸ்லாமிய நம்பிக்கைகள், அகீதா, வேரூன்றியிருந்தனவோ அந்தளவு வெற்றிகளை அவர்கள் கண்டு கொண்டனர்.

முஸ்லிம் அறிஞர்கள், அறிவிப்புகளின் இஸ்னாத்களைப் பரீட்சிப் பதிலேயே கவனம் செலுத்தினர் என்றும், அறிவிப்புகளின் வாசகத்தை (மத்ன்)ப் பரீட்சிப்பதைப் புறக்கணித்து வந்துள்ளார்கள் என்றும் பல ஆய்வாளர்கள், குறிப்பாகக் கீழைத்தேயவியலாளர்கள் கூறுவர். கூர்ந்து கவனிக்கும் திறமை இன்மையே வாசகங்கள் பரீட்சிக்கப்படாமைக்குக் காரணம் எனவும் சிலர் கருதுவர். இவ்வாறான ஒரு முடிவினை நாம் பொதுவான ஓர் அவதானமாகக் கொள்ள இயலாது. முஸ்லிம் அறி ஞர்கள் இஸ்னாத்களைப் பரீட்சிப்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தி னார்கள். அதனால் அவர்கள் வாசகங்களைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தவில்லை எனக்கூறுவதற்கில்லை. அவர்கள் அதிலும் அதிக சிரத்தை கொண்டிருந்தார்கள். இதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றுள் ஒரு சில வரலாற்று நிகழ்வுகளை மாத்திரம் நாம் கவனத்தில் கொள்ளலாம்.

உஹுதில் பங்கு பற்றிய முஸ்லிம் படையினரின் எண்ணிக்கை குறித்த பல அறிவிப்புகளை வாசகங்களின் உள்ளடக்கத்தைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்ததன் மூலம் நிராகரித்தார் இப்ன் ஹஸ்ம்.

ஸீரா வரலாற்று ஆசிரியர்களுள் பெரும்பான்மையோர் பனூ-அல்-முஸ்தலிக்குகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஹிஜ்ரி ஆறாம் ஆண்டுள் கொண்டு வருவர். ஆனால் அறிவிப்பின் வாசகங்களைத் தீவிர பரிசோதனைக்குள்ளாக்கிய மூஸா-இப்ன்-உக்பா அது நிகழ்ந்தது, ஹிஜ்ரி நான்காம் ஆண்டு எனக் கொள்வார். அதனையே இப்ன்-அல்-கையிமும் அல் தஹபீயும் அங்கீகரிக்கின்றனர். இத்தகு முடிவைக் காண அவர்கள் கொண்டது, ஸஅத்-இப்ன்-முஆத் இந்த படையெடுப் பில் கலந்து கொண்டமையையாம். பனூ குரைளாவுக்கு எதிரான நடவடிக்கையில் அவர் வீரமரணம் அடைந்திருந்தார்.

ஆரம்ப வரலாற்றாசிரியர்கள் தாத்-அல்-ரிகாஅ படையெடுப்பின் காலம் பற்றி வேறுபட்ட கருத்துகள் கொண்டிருந்தனர். அல்-புகாரி, அதன் காலம் கைபரின் பின்னானதாகும் எனத் தந்துள்ளார். இதனை இப்ன்-அல்-கையிம், இப்ன்-கஸீர், இப்ன்-ஹஜர் ஆகியோரும் ஏற்றுக்

கொண்டுள்ளனர். இதற்கு மாறான கருத்துக்களையே இப்ன்-இஸ்ஹாக், அல்-வாகிதீ ஆகியோர் கொண்டிருந்தனர். அல்-புகாரி கொண்டிருந்த நிலைப்பாட்டுக்குக் காரணம், அபூ மூஸா-அல்-அஷ்அரி, அபூ ஹுரைரா ஆகிய இருவரும் இந்த படையெடுப்பில் பங்கேற்றிருந்தமையாகும். அவர்கள் நபிகளாரிடம் வந்து தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ள மையைப் பிரகடனம் செய்தது கைபர் கைப்பற்றப்பட்ட பின்னராகும்.

ஸலாத்-அல்-கவ்ப் (அச்ச காலத் தொழுகை) நியமமான காலம் குறித்தும் பல உரையாடல்கள் நிகழ்ந்துள்ளன. அவை அனைத்தும் அறி விப்புகளின் வாசகங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவே.

அல்-தாயிபில் வாதீ-வுஜ்ஜ், பாதுகாக்கப்பட்ட புண்ணியஸ்தலம் எனப் பிரகடனம் செய்யப்பட்டமை பின்னர் ரத்துச் செய்யப்பட்ட மையை வாசகங்களைப் பரிசீலனை செய்ததன் மூலமாகவே வெளிக் கொணர்ந்தார் அல்-கத்தாபீ.

இவையெல்லாம் இந்த நூலில் பதிவாகியுள்ளன. அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உதாரணங்கள் இவை. மேலும் பல உதாரணங் களையும் நாம் கண்டு கொள்ளலாம்.

நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதொரு வரலாற்று அம்சம், முதல் மூன்று நூற்றாண்டுகளில், வரலாற்றாசிரியர்களது கவனமெல் லாம் அறிவிப்புகளைத் தேர்ந்து கொள்வதும் அவற்றைப் பதிவு செய் வதுமாகவே இருந்தமையாகும். இந்தத் தேர்வு ஒரு தொகுப்பை அதன் மூல ஆதாரங்களோடு ஒப்பீடு செய்து காண்கையில் தெளிவாகின்றது. ஒரு குறிப்பிட்ட ஆக்கம், முன்னைய அறிவிப்புகளில் சிலவற்றைப் புறக்கணிக்கலாம் - இப்ன் இஸ்ஹாக்கைப் பொறுத்து, இப்ன் ஹிஷாம் செய்தது போல், அல்-தபரீ தனது மூலாதாரங்களில் செய்தது போல்.

தேர்ந்து கொள்வது கூட, ஆய்வு முறையின் ஓர் அங்கமாயினும், எழுத்தில் பதிப்பதும், அறிவிப்புகளைப் பாதுகாப்பதும் ஆரம்ப கால வரலாற்றாசிரியர்களது சக்தியை உறிஞ்சுவனவாக அமைந்தன. பின் னைய வரலாற்றாசிரியர்கள் முன்னையவர்களது ஆக்கங்களைச் சுருக் கியமைத்துத் தமது கருத்துக்களையும் இணைத்துள்ளனர். அறிவிப்பு களின் வாசகங்கள் பற்றிய தீவிர பரிசீலனைகள், பின்னர் வந்த ஆக் கங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை நாம் இப்ன்-கஸீரின் பிதாயா-வஅல்-நிஹாயாவில் அல்லது ஸஹீஹ்-அல்-புகாரிக்கான விரி வுரையாக அமைந்த இப்ன்-ஹஜரின் பத்ஹ்-அல்-பாரீயின் மகாஸீ குறித்த பகுதியில் கண்டு கொள்ளலாம்.

இதனால் வரலாற்றுத் திறனாய்வுத்துறையின் முறைமைகள் வரை யறுத்து வளர்க்கப்பட்டு பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு களில் ஐரோப்பிய வரலாற்று ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்ட அளவு ஆழமாக எமது ஆக்கங்கள் பரிசிலிக்கப்பட்டன என்று கூறிவிடுவதற் கில்லை. மறுபுறம் பல நூற்றாண்டு காலமாக ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்ட கற்கைகளதும், அறிவியல் ரீதியான வளர்ச்சி யினதும் தரங்களுக்கு இயைய ஆரம்பகால வரலாற்றாசிரியர்களின் ஆக்கங்களை மதிப்பிட முனைதல் எத்துணை பொருத்தமானதாக இருக்கும் என்பதும் சிந்திக்கப்பட வேண்டியது.

எவ்வாறாயினும் ஆரம்ப முஸ்லிம் அறிஞர்களது ஆய்வுத்திறன் களை வரலாற்று நூல்களைப் பரிசீலிப்பதால் மட்டும் நாம் மதிப் பிட்டுக்கொள்ள இயலாது. அவர்களது அறிவியல் ரீதியான ஒட்டு மொத்த பங்களிப்பு முழுவதுமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக பிக்ஹ், பிக்ஹ் ஒப்பீட்டு (அஹாதீஸ்-அல்-அஹ்காம்) துறை களில்.

பிக்ஹ் நூல்கள் பெருமளவு வாசகங்களையும், அவற்றின் விளக்கங் களையும், அவற்றின் இலக்கண அமைப்பு ஒழுங்குகளையும், அவற்றி லிருந்து சட்டங்களை வரைந்து எடுத்துக்கொள்வதையும் கருத்தில் கொண்டனவாயிருந்தன. முஹத்திதூன்களதும், சட்டவியலாளர்களதும் ஆக்கங்கள் ஒன்றையொன்று ஆதரித்தும், முழுமை செய்தும் வந்தன என்பதில் ஐயமில்லை. நபிகளாரின் ஸுன்னாவை முஸ்லிம் அறிஞர்கள் பெரிதும் சமநிலைக் கண்கொண்டே அணுகியிருந்தனர்.

உஸூல்-அல்-பிக்ஹ் நூல்களில், வாசகங்கள் தீவிர பரிசீலனைக்கு உள்ளாகியுள்ளமை தெளிவு. அவை தனித்துவமான திறனாய்வுத்திறன் கொண்டனவாக உள்ளன. ஆரம்ப கால வரலாற்றாசிரியர்களில் பெரும் பாலானோர், இஸ்லாமிய கற்கையின் ஏனைய பல துறைகளிலும் பெரும் பங்களிப்புகள் செய்திருந்தாலும் அவர்கள் குறித்த மதிப்பீடு, அவர்களது ஒட்டுமொத்த பங்களிப்புகளின் அடிப்படையில் அவர்களது ஆக்கங்களது காலத்தையும் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம் அவர்களது பங்களிப்புகள் குறைத்து மதிப்பிடப்படாமல் காத்துக்கொள்ளலாம்.

ஆரம்ப நூற்றாண்டின் அஹாதீஸ் திறனாய்வுகள், அதன் முறைமைகள் குறித்த நூல்களில் வாசகங்களின் திறனாய்வு பற்றிய வரைமுறைகள் பெருமளவு நிர்ணயம் செய்யப்பட்டு விட்டன என்றே கொள்ள வேண்டும். முதர்ரஜ், முஅலல், முத்தரிப், ஷாத்த், முன்கர், மவ்ழூ

முதலான சொற்பிரயோகங்கள், இஸ்னாதும் வாசகமும் பரிசீலிக்கப் பட்ட ஹதீஸ்களின் தர நிர்ணயம் பற்றிய நிலையில் பிரயோகிக்கப் படலாயின. ஆனால் ஹதீஸ்கள் பரீட்சிக்கப்பட்ட அளவு, வரலாற்று அறிவிப்புகள் பரிசீலனைக்குள்ளாகவில்லை.

நாம் நபிகளாரின் அற்புதங்கள் குறித்தும், அவை நிகழ்ந்தமைக்கான ஆதாரங்கள் குறித்தும் பேச வேண்டும். குர்ஆனே அன்னாரின் எப் போதைக்குமான அற்புதம் என்றாலும் வேறும் பல அற்புதங்களும் அன்னவரின் காலத்தில் நிகழவே செய்தன. குர்ஆனின் அற்புதத்தை விதந்துரைத்து, ஸஹீஹ் வரிசைகளால் உறுதி செய்யப்பட்ட ஏனைய அற்புதங்களை மறுத்துரைப்பது, லோகாயுத சிந்தனைக்கும் சமயச் சார்பிலா தத்துவத்துக்கும் சிந்தையை அடகுவைப்பதாகும். ஒரு முஸ் லிம் தனது கற்கைகளையும், ஆய்வுகளையும் எந்தவித வெளிச் செல் வாக்கினதும் ஆதிக்கத்துக்குள்ளாக்காமல் மேற்கொள்ள வேண்டும். ஸஹீஹ் அறிவிப்பாளர் வரிசையினால் உறுதிப்படுத்தப்பட்ட அற்புதங் களை இந்நூல் பதிவு செய்கின்றது.

நியாயவியல் சட்டங்கள் (அல்-அஹ்காம்-அல்-பிக்ஹிய்யா) குறித் தும், அவை நியமமான காலங்கள் குறித்தும் பேசுகின்றது இந்த நூல். ஏனெனில் ஸீரா குறித்ததான எந்த ஆக்கமும் அதன் சட்டவியல் அங்கம் குறித்தும் பேச வேண்டும். தனி மனிதர்களதும், சமூகங்களினதும் இயக்கத்தை வழிநடாத்தும் ஒழுக்கவியல், சட்டவியல் அம்சங்களை வெளிக்கொணர்கின்றது சட்டவியல் அங்கம். ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றின் அரசியல், இராணுவ அம்சங்களை, ஒழுக்கவியல், சட்ட வியல் நியதிகளில் இருந்து பிரித்துக் காணுதல் இயலாது. ஏனெனில் அக்காலகட்டத்தில் சமூக, பொருளாதார, அரசியல், இராணுவ தொடர் புகள் அனைத்தும் ஒன்றிலொன்று இணைந்தே செயல்பட்டன. ஆகவே அன்றைய கால கட்டத்து வரலாற்றுப் போக்கினை இஸ்லாமிய தத்துவம், கோட்பாடுகள் குறித்த தெளிவு இல்லாமல் விளங்கிக் கொள்வது சிரமம்.

இந்த நூல் தனி மனிதர்களதும், சமூகங்களினதும் இயக்கம் குறித் தும் பேசுகின்றது. சில தனி மனிதர்களது செயலூக்கம் மிக்க நட வடிக்கைகளும் அவர்களது செல்வாக்கும் மூலமாக வரலாற்றின் விசேடத்துவமும் பரிணாமமும் வெளிக்கொணரப்படுகின்றன. சமூக இயக்கத்தின் பகடைகளே அவர்கள் எனக்கொண்டு வரலாற்று நாயகர் களது சாதனைகளை நாம் தட்டிக்கழித்துவிட முடியாது. சில மனிதர் கள் தமது தனித்திறமைகள், இயலுமைகள் மூலமாக பிறரிலிருந்தும்

துலக்கம் பெற்றுத் தென்படுவர். அவர்களை வேறுபடுத்திக் காட்டும் இந்தத் தன்மைகள் அவர்களது விசுவாசத்தின் (அகீதா) அடிப்படை யிலேயே எழுகின்றன. அகீதா அவர்களது உள்ளத்தில் பதிந்து, கற்பனைக்குக் கனலூட்டி, சிந்தனையில் திருப்பத்தைக் கொண்டுவந்து விடுகின்றது. இந்த அகீதா, அரபு ஆளுமையின் அமைப்பிலும் இயல் பிலும் பாரியதொரு மாற்றத்தைக் கொண்டு வந்தது. அகீதாவுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் நாம் தனியாளைப் புகழ்ந்தேத்தல், மேலாண்மை மீதான அதீத வியப்பு ஆகியனவற்றுள் சரிந்து விடாமல் தப்பிக்கொள்ள முடிகின்றது. வீரர்களுக்கெல்லாம் வீரரான அல்லாஹ் வின் தூதர் (ஸல்) அவர்கள் இறைவன் முன்னால் சிரம் தாழ்த்தி, பணிந்து நின்று, தமது வெற்றிகள் அனைத்தும் இறைவனாலேயே நியமமாகின்றது எனக் கொண்டமையை நாம் மறந்துவிடலாகாது.

நவீன ஸீரா கற்கைகளில், குறிப்பாக கீழைத்தேயவியலாளரின் ஆக்கங்களில் குற்றமற்றன போலத் தோற்றும் வாதங்களை மறுத் துரைக்கும் முனைவுகள் மேற்கொள்ளப்படாமையையும் இந்நூலில் வாசகர் காண்பார். அவர்களது ஆக்கங்கள், வாசகங்களையும், நிகழ்வு களையும் வலிய திரித்துக் கூறுவதனால் அல்லது அரபுமொழியைத் தவறாக விளங்கியுள்ளதால் அல்லது இஸ்லாம் அதன் சட்டதிட்டங் கள், அதன் இலக்குகள் என்பனவற்றைச் சரிவரக் கிரகித்துக் கொள் ளாமையால் விளைந்துள்ளனவே. இந்த நூலின் நோக்கம், ஸீராவின் சீரிய தன்மைகளது சரியானதொரு விளக்கத்தை அளிப்பதாகும். ஸீரா குறித்த ஆய்வுகள் பற்றிய விவரங்கள் தனியொரு நூலை வேண்டி நிற்பன. முன்னம் நாம் வலிந்தோ, அறியாமையாலோ இழைத்த தவறுகள் திருத்தியமைக்கப்படுவதனைக் குறைத்து மதிப்பிடுவ தில்லை இது. ஏனைய பல ஆக்கங்கள் அப்பணியை ஏற்கெனவே, சிறப்புறவே செய்துள்ளன. பயனிலா வாதங்களை விடுத்து இஸ்லா மிய வரலாறு மீளக்கட்டியெழுப்பப்படுவதிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எனது இறுதி அவாவை இந்த நூல் பூர்த்தி செய்கின்றது எனக் கூறுவதற்கில்லை. இது முஹத்திதூன்களின் முறைமைகள் மூலம் வரலாற்றுப் பதிவுகளைத் திறனாய்வு செய்து காணும் ஒரு முயற்சி மட்டுமே. இஸ்னாத்களையும் அறிவிப்பாளர்களையும் ஆய்வு செய்வது இது. அதே வேளை ஸீராவின் ஆரம்பகால அறிஞர்கள் தமது ஆக்கங் களில் பயன்படுத்தியுள்ள பெருந்தொகையான அறிவிப்புகளிலிருந்து தேர்ந்து கொள்ளும் முகமாக அறிவிப்பின் வாசகங்களையும் அது பரீட்

சிக்கின்றது. ஆரம்ப திறனாய்வாளர்கள் அங்கீகாரம் செய்த அறிவிப்புகளிலேயே இது பெரிதும் தங்கியிருக்கும். அதற்கான முக்கிய நோக்கம், அவர்களால் பரீட்சிக்கப்படாத அறிவிப்புகளின் தரங்களை நிர்ணயிக்க அவர்களது முறைமைகளைப் பயன்படுத்திக் கொள்வதாகும். வாசகர்கள் இந்த ஆக்கத்திலிருந்து போதிய பயன்களை ஈட்டிக்கொள்வார்கள் என்றும், ஸீரா அறிவிப்புகள் குறித்துக் கூடிய தெளிவு அவர்களுக்குக் கிட்டுமென்றும் கருதுகின்றோம்.

ஆழ்ந்த சமய, ஒழுக்கவியல் பொதிந்த சில அறிவிப்புகளை அவை பலவீனமானவையாக இருக்கும் நிலையில் நான் பொருட்படுத்தாது விட்டுள்ளேன். பலவீனமான அறிவிப்புகளில் தங்கியிருக்காமல், ஸஹீஹ், ஹஸன் தரத்தனவான அறிவிப்புகளின் மூலம் ஸீராவின் வரலாற்றுப் பரிமாணங்களைத் தெளிந்து கொள்ளலாம்.

ஹதீஸ் நோக்கில் பலவீனமானவை எனக் குறிப்பிடப்படுவன முற்றிலும் புறக்கணிக்கப்படவில்லை என்பதையும் வாசகர் கண்டு கொள்வர். முஹத்திதூன்களின் தரத்தில் ஸஹீஹ் எனக் கண்டு கொள்ள இயலாத தருணங்களில் நான் அத்தகு அறிவிப்புகளை இஸ்லாமிய கோட்பாடு, சட்டவியல் (அகீதா, ஷரீஆ) தவிர்ந்த இடங்களில் பயன்படுத்தியுள்ளேன். வரலாற்றுத் திறனாய்வு முறைமைக்குத் தகவே அத்தகு அறிவிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நபிகளாரின் ஸீரா கற்கையைப் பதினைந்து வருடங்களுக்கும் மேலாக பக்தாத் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்குக் கற்பித்துள்ளேன். எனது கற்பித்தல் பணி பின்னர் மதீனாவின் இஸ்லாமிய பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தது. பல்கலைக்கழக மாணவர்களுக்கென எனது விரிவுரைகளை எழுத்தில் பதித்தும், வளப்படுத்தியும் வந்துள்ளேன். அவற்றுள் சில பிரசுரமாகியுள்ளன. இவற்றையெல்லாம் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மீளாய்வு செய்ய உத்தேசித்துள்ளேன். அதனால் அவ்விரிவுரைகள் அனைத்தையும் ஒன்றாகப் பிரசுரிக்கக் கூடுமாயிருக்கும். மதீனாவின் இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் முதுமானி, கலாநிதிப்பட்டங்களுக்கான ஆய்வுகளை மேற்பார்வை செய்து வந்தமையால் ஸீரா சம்பந்தப்பட்ட பகுதிகளை நான் திருப்பியெழுதினேன். ஸீராவுடன் சம்பந்தமான அறிவிப்புகள் அனைத்தையும் முஹத்திதூன்களின் திறனாய்வு முறைகளின் கீழ் பரீட்சிக்குமாறு எனது மேற்பார்வையின் கீழிருந்த ஆராய்ச்சி மாணவர்களை வழிப்படுத்தினேன். பாரிய இந்த முனை வின் போது ஹதீஸ், வரலாறு, சரிதை, இலக்கியம் என அனைத்துத் துறைகளிலும் பதியப்

பட்டிருந்த ஸீரா சம்பந்தமான அனைத்து அறிவிப்புகளும் பரிசீலனை களுக்குள்ளாயின. இதன் பிரதிபலனாக விளைந்த ஆய்வுகளின் தொகுப் புகள் சுமார் ஐயாயிரம் பக்கங்கள் அளவு நீண்டன.

மாணவர்களது இந்த ஆய்வுகள் மூலம் எனது அறிவையும், அனுப வங்களையும் என்னால் விரிவு படுத்திக்கொள்ள முடிந்தது. அதன் மூலம் கடந்த சில வருடங்களாக, அனைத்து ஸீரா அறிவிப்புகளையும் மீளக் கற்கவும், ஒப்பீடு செய்து காணவும் இயலுமானது. எனது மேற்பார்வையில் மேலும் பல ஆய்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. ஸீரா குறித்து எழுதுவோர் மேலும் பயன்தரும் ஆக்கங்களைப் பகுப் பாய்வு செய்து தர இவை உதவும். எமது அறிஞர்களைப் பொறுத்து இது மிக அவசியமான ஒரு கருமம். ஸீராவை நயந்து அதன் உன்னத மான செய்தியை எமது புதிய தலைமுறையினர்க்குக் கொண்டு சேர்க்க வேண்டிய பாரிய பணியை அவர்கள் எதிர்கொண்டுள்ளார்கள்.

நவீன தொழில்நுட்ப உலகம் மனிதனுக்கு வாழ்வாதாரங்களை அமைத்துக் கொடுக்கப் பெரும் முனைப்புகளுடன் செயலாற்றி வரு கின்றது. அது போலவே எமது வருங்கால சந்ததியினருக்கு ஸீராவின் செய்திகளைக் கொண்டு சேர்க்க நாம் பெரும் பிரயத்தனங்கள் மேற் கொள்ள வேண்டியுள்ளது. உடம்பின் போஷனைக்கு உணவு போலவே, மனிதன், ஆன்மாவினதும் சிந்தையினதும் மேன்மைக்காகக் கருத்து களின் போஷனை தேவைப்பட்டவனாக இருக்கின்றான். இதில் நாம் தவறுகள் இழைப்பின் நாளைய மனிதன் ஆன்மா இல்லாத வெற் றுடம்பாகவே இருப்பான். இஸ்லாமிய அறிவுலகு கண்டுள்ள பின்ன டைவும், தேக்க நிலையும் எமது புதிய தலைமுறையினரை மேற்கத் திய அறிவுலகம் நோக்கி ஈர்த்துச் சென்றுவிடும். பல நூற்றாண்டு களாக மேற்கத்திய அறிவுலகம் லோகாயுத எண்ணங்களிலேயே உழலுவதாக, இறைக் கோட்பாட்டிலிருந்தும் வெகுதூரம் விலகியதாக, ஆன்மீகப் பெறுமானங்கள் அனைத்தையும் தட்டிக்கழிப்பதாக, குழப் பங்களில் ஆழ்ந்த மத சார்பிலா சிந்தனைக்கு அடிபணிந்ததாக உள்ளது. மேற்கத்திய சமூகம் தற்போது ஆதரவு காட்டும் சமூக, ஒழுக்கவியல் ஊறுபாடுகள் மத சார்பிலா சிந்தனையின் வழி வந்த நச்சு மரங்களி லிருந்து கிட்டும் கனிகளே.

ஐரோப்பா எதிர்கொள்ள வேண்டியிருந்த சமூக விளைவுகளைத் தாமும் எதிர்கொள்ளாது எமது வாரிசுகள் பாதுகாக்கப்பட எமது அறி ஞர்கள் கடமைப்பாடு கொண்டவர்களாயுள்ளனர். நவீன தலைமுறை யினரை இஸ்லாமும், இஸ்லாமிய சிந்தனையும் கொண்டு போஷிப்

பதே எம் வசம் இருக்கும் மிகச்சிறந்த ஆயுதம். இதுவே லோகாயுதத் தாக்குதல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் சிறந்த அரணாகும்.

எனது இந்தப் பணியை ஏற்று, இவ்வுலக வாழ்வின் எனது நற்கருமங்களுள் ஒன்றாக இதனைக் கொண்டு, மறுமையிலும் எனக்கு நன்மை ஈட்டித்தருமாறு நான் அல்லாஹ்வை இறைஞ்சுகின்றேன். அவனே எமக்கான நம்பிக்கை. அவனைத் தவிர யாசிக்க வேறு எவரும் இல்லை. உலகங்கள் அனைத்தையும் போஷித்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.

**அக்ரம்-ளியா-அல்-உமரீ**
மதீனா அல் முனவ்வரா.

# அறப்போர் பிரகடனம்

*அறப்போர் (ஜிஹாத்) என்பது ஓர் இஸ்லாமிய சட்டவியல் சொல். அல்லாஹ்வின் பாதையில் போராடுவதைக் குறிப்பது இது. அதன் மூலம் ஷரீஆவை நிலைநிறுத்தி உலகில் இஸ்லாத்தின் நோக்கங்கள் ஸ்தாபிதம் பெறுவதை உறுதிப்படுத்தலாம். மக்கா காலத்தில் இது நியதி செய்யப்படவில்லை. அக்காலத்தில் முஸ்லிம்கள் முஷ்ரிகூன் (பல்தெய்வ அல்லது சிலை வணக்கஸ்தர்கள்)களை எதிர்க்கக்கூடா தென்றும், அவர்களுக்கு எதிராக ஆயுதங்கள் ஏந்தக் கூடாதென்றும் பணிக்கப்பட்டிருந்தனர். அப்போதைய காலகட்டத்தின் நியதியாக அமைந்தது:*

> ''உங்களுடைய கைகளைத் தடுத்துக் கொள்ளுங்கள்; தொழுகை யைக் கடைப்பிடியுங்கள்.'' (அல்-நிஸா 4:77)

*இஸ்லாமியத் தூது இன்னமும் புதியதாக இருந்த நிலையில் முஸ்லிம்கள் கைக்கொள்ள வேண்டியிருந்த நடைமுறை இதுதான். நீரும் போஷனையும் வேண்டி, வேர்களை நன்கு ஊன்றி, ஊறு விளைப் பனவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற்று இருக்க வேண்டிய இளம் செடி யொன்றின் நிலையிலேயே அப்போதைய சின்னஞ்சிறு முஸ்லிம் சமூகம் இருந்தது. இஸ்லாம் அவ்வேளை முஷ்ரிகூன்களை எதிர்த்து வாளேந்தியிருந்தால், முளையிலேயே அது கிள்ளி எறியப்பட்டிருக் கும். முஷ்ரிகூன்களின் துன்புறுத்தல்களையெல்லாம் பொறுமையுடன் தாங்கி, தம்மை மேலும் முன்னேற்றிக் கொள்வதில் கவனம் செலுத்தி, தமது விசுவாசத்தைத் தொழுகையைக் கொண்டும், நப்ஸுடன் போராடியும் பலப்படுத்தி வர வேண்டியிருந்த அந்த காலகட்டத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ள ஏனையோரை*

இஸ்லாத்தின்பால் அழைக்க வேண்டியதும் அவர்கள் செய்ய வேண்டுவதாக இருந்தது. அன்றாட வாழ்வைப் பொறுத்து, முஷ்ரிகூன்களிலும் முஸ்லிம்கள் வித்தியாசப்பட்டவர்களாக இல்லை. தார்-அல்-அர்கம்மிலும், ஏனைய இடங்களிலும் ஒன்று கூடினாலும் கூட இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதனால் அவர்கள் இஸ்லாமிய அடையாளத்துடன் ஒன்றுபட்டு வாழத் தனி முகாம் ஏதும் இருக்கவில்லை.

அறப்போர் பிரகடனம் அவ்வேளை மேற்கொள்ளப்பட்டிருந்தால், ஒவ்வொரு குடும்பத்திலும் யாரேனும் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றிருக்க, ஒவ்வொரு வீடும் ஒரு யுத்தகளமாக மாறியிருக்கும். முஸ்லிம்கள் மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து, அன்ஸார்கள் இஸ்லாத்துக்கு ஆதரவு வழங்கி முஸ்லிம்களின் அதிகாரத்தின் கீழான ஒரு பிரதேசமும் இருந்த போதிலேயே இறைவன் அறப்போரை நியதி செய்தான்:

> ''போர் தொடுக்கப்பட்டோருக்கு (ஓரிறை நம்பிக்கையாளர்களுக்கு) நிச்சயமாக அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த நிராகரிப்பாளர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன்.'' (அல்-ஹஜ் 22:39)

தற்காப்புக்காகவும், தமது விசுவாசத்தையும், கொள்கையையும் பாதுகாப்பதற்காகவும் போராடுதல் அனுமதிக்கப்பட்டது:

> ''உங்களுடன் போர் புரிபவர்களிடம் அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போராடுங்கள். (ஆனால்) வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை'' (அல்-பகரா 2:190)

இதுதான் அறப்போர் பிரகடனத்தின் இரண்டாவது கட்டம். இந்த வகையில் அறப்போர் மானுட வரலாற்றின் ஏனைய மோதல்களினின்றும் வித்தியாசப்படுகின்றது. அறப்போரின் நோக்கமும், சத்தியம், நீதி, கருணை மீதான அதன் கடமைப்பாடும் வேறு எந்த ஒரு மோதலில் இருந்தும் அதனை வேறுபடுத்தி வைக்கின்றன:

> ''இறை நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்கின்றனர்; இறை நிராகரிப்பாளர்களோ, ஷைத்தானுடைய பாதையில் போர் செய்கின்றனர்.'' (அந்-நிஸா 4:76)

அல்லாஹ்வின் தூதர் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

''இறைவனின் பெயரால், அவனது பாதையில் போராடுங்கள்; படையெடுப்புகளில் கலந்து கொள்ளுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள்; சூறையாடாதீர்கள்; வாக்குக்கு மாற்றம் செய்யாதீர்கள்; அங்கவீனம் செய்யாதீர்கள்; குழந்தைகளைக் கொல்லாதீர்கள்.''

பின்னர் மூன்றாம் கட்டம் உருவானது. அதில் முஸ்லிம்கள் யுத்தம் புரியும்படி கட்டளையிடப்பட்டனர். யுத்தங்களை ஆரம்பிக்கவும் பணிக்கப்பட்டனர். இது ஷிர்க்குடைய சக்திகள் இடக்கூடிய தடைகளையெல்லாம் விலக்கி, இஸ்லாத்தின் பரம்பலை உறுதி செய்து, உலகில் முஸ்லிம்கள் உயர்வானதொரு நிலையை ஈட்டிக்கொள்ள வழியமைக்கும். இதன் மூலம் விசுவாசிகள் எங்கிருந்தாலும், முஷ்ரிக்குகள் அவர்களைத் துன்புறுத்தவோ, அவர்களது விசுவாசத்தைக் கைவிட்டு விடத் தூண்டவோ மாட்டார்கள். இவற்றை மேல் வரும் வாசகங்களில் தெளிவாகக் காணலாம்.

''எனவே குழப்ப(மும் ஒழுங்கீனமு)ம் ஏற்படாமல் மார்க்கம் - அது முழுவதும் அல்லாஹ்விற்காகவே ஆகும் வரை, அவர்களிடம் நீங்கள் போரிடுங்கள்'' (அல்-அன்பால் 8:39)

''போர் செய்தல், அதுவோ உங்களுக்கு வெறுப்பாக இருக்க, உங்களின் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. ஒரு பொருளை நீங்கள் வெறுக்கலாம்; (ஆனால்) அது உங்களுக்கு நன்மையாக இருக்கும்'' (அல்-பகரா 2:216)

''வேதம் கொடுக்கப்பட்டவர்களிலிருந்து அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொள்ளாமலும் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தடைசெய்து வைத்தவற்றை அவர்கள் தடையாக்கி வைக்காமலும், சத்திய மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கிறார்களே அத்தகையோரிடம் - அவர்கள் (இஸ்லாமிய அரசுக்கு) கீழ்ப்படிந்தவர்களாக இருக்கும் நிலையில் (தம்) கையால் (தாமாகவே முன்வந்து) ஜிஸ்யா (வரியை) அவர்கள் கொடுக்கும் வரை நீங்கள் போரிடுங்கள்.'' (அத்-தௌபா 9:29)

இஸ்லாத்தின் மிக முக்கியமான கடமைகளுள் ஒன்றாகவே அறப்போர்ப் பிரகடனம் அமைந்துள்ளது. முஸ்லிம்கள் அடைந்து கொள்ள விழையும் முக்கியமானதோர் இலக்கைச் சுட்டுவது அது: உலகம் முழுவதும் பரந்து வாழும் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள உள்ள சுதந்திரத்தை உறுதி செய்வது; அவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் புதிய முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கான அரசியல்,

இராணுவ சக்திகளை உருவாக்குவது. தனியாரைப் பொறுத்து பல வந்தத்தால் செய்யக்கூடியதல்ல இஸ்லாமியப் பரம்பல். ஏனெனில்,

''மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை'' (அல்-பகரா 2:256)

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இஸ்லாம் தோற்றம் பெற்ற உலகில் அதனைப் பிரகடனம் செய்யவும், உறுதியாக நிலைபெறச் செய்யவும், உலகம் முழுவதும் அதனைப் பின்பற்றக் கூடியோரைப் பாதுகாக்கவும் இஸ்லாம் அனைத்து அரசியல் இராணுவ சக்திகளையும் மிகைத்ததாக அமைய வேண்டியது அவசியமாக இருந்தது.

அன்றைய காலகட்டத்தில் தமது குடிமக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதைத் தடுத்து வந்தன அரசுகள். மக்காவின் குறைஷியர் முஸ் லிம்களை வதை செய்தனர். அது போலவே அரேபிய தீபகற்பத்தின் எல்லைப் புறங்களிலும், ஸிரியாவிலும், எகிப்திலும், பாரசீகரும் பைஸாந்தியரும் தடைகள் இட்டு வந்தனர்.

அறப்போர்ப் பிரகடனமானது தற்காலிகமானதொன்றல்ல என்பதை இஸ்லாமியப் போதனைகள் வலியுறுத்துகின்றன. ஹதீஸ் அறிவிப்பில் போல அது ஒரு நிரந்தரமான கடமையாகும்: 'அறப்போர் மறுமைநாள் வரை கடமையாகவுள்ளது. அல்லாஹ்வின் பாதையில் போராடாது மரணித்தவர், அறப்போர் மீதான விருப்பினைக் கொண்டிராதவர், வஞ்சகனாகவே மரணித்துள்ளார்'. ஸலா, ஸவ்ம், ஹஜ், ஸகா முதலாய கடமைகளுக்குப் போலவே பிக்ஹ் நூல்கள் அறப்போர் குறித்த சட்ட நியதிகளை விளக்கும் பரந்த பகுதிகளை உள்ளடக்கியுள்ளன. ஆக, இது ஏனைய இஸ்லாமிய கடமைகள், விதிகள் போலவே முஸ்லிம் உம்மாவின் நிரந்தரமான ஒரு கடமையாக விளங்குகின்றது.

அறப்போர் பிரகடனம் பல்வேறு குழுக்களையும், அவற்றின் சக்தி கள், வளங்கள் அனைத்தையும் கூட எதிரியை எதிர் கொள்வதில் ஒன்றிணைத்தது. முஸ்லிம் படையினர் சென்றவிடமெல்லாம் அவர் களது பிரகடனங்களாக அமைந்தன: 'மனிதர்களை அடிமைத்துவத் திலிருந்தும், அல்லாஹ் அல்லாதனவற்றை வழிபடுவதிலிருந்தும் விடுதலை செய்தல்' 'இனத்தாலும், நிறத்தாலும் வேறுபட்டிருப்பினும் கூட மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே'. வாள்களால் அல்லாது இத்தகு உன்னதமான கோட்பாடுகளினாலேயே மானுட உள்ளங்கள் ஈர்க்கப்பட்டன. இதுவே இஸ்லாத்தின் பரம்பலினதும், அதன் படை களது வெற்றிகளினதும் பின்னால் உள்ள இரகசியம்.

இஸ்லாத்தின் பரம்பலுக்குக் காரணமாயிருந்த ‘புதுஹாத்’ குறித்து ஆராய்ந்த அறிஞர்கள் துரித, வெற்றிகரமான இந்தப் பரம்பலுக்குப் பல்வேறு காரணங்களை முன்வைத்துள்ளனர். Caetani யும் ஏனைய கீழைத்தேயவியலாளரும் பொருளாதாரமே அடிப்படைக் காரணம் என்பர். அவர்களது கருத்தில் அரேபிய தீபகற்பம் பாரிய காலநிலை மாற்றங்களுக்கு ஆளானது. கடுமையான வரட்சியின் காரணமாக பொருளாதார நலன்கள் கருதி தீபகற்பத்திலிருந்து செழிப்பான பகுதி களை நோக்கி மக்கள் புலம்பெயர்ந்து சென்றனர். அதனால் விளைந்த யுத்தங்களே ‘புதுஹாத்’ எனக் கொண்டனர் அவர்கள். புறவய நோக்கி லிருந்து காணும் போது இஸ்லாத்தின் அறிமுகத்துக்குச் சற்று முந்திய காலகட்டத்தில் அத்தகு பாரிய காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டில்லா மையையும், பொருளாதார நிலைமைகளிலும் திடீர் மாற்றங்கள் ஏற்படாமையையும் நாம் அவதானிக்கலாம். அரபு கோத்திரங்கள் பெருந்தொகையினராகச் செழுமையான பிரதேசங்களை நோக்கிச் சென்றமை, இஸ்லாம் நிலைபெற்று பல்வேறு கோத்திரத்தாரும் ஒரே கொடியின் கீழ் வந்து தமது உன்னத நோக்குகளை அடைந்து கொள்ள அவாக் கொண்டதன் பின்னரே.

கலீபாக்களுக்கும், புதுஹாத் தலைவர்களுக்கும் இடையிலான கடிதங்களையும் புதுஹாத் சம்பந்தமான ஏனைய அறிவிப்புகளையும் கற்கும் போது, எந்தளவு விசுவாசமும் கொள்கைத் திறமும் போராளி களைக் கட்டுக்கோப்புக்குள்ளும் சிறந்த ஒழுக்காற்றுக்குள்ளும் வைத் திருந்தன என நாம் கண்டுகொள்ளலாம். தலைவர்களையும் இராணு வத்தினரையும், இஸ்லாத்தின் உன்னதமான நோக்கங்களும், மானுட ரைச் சீரான வழிக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமென்ற உந்துதலுமே ஊக்குவித்தன. அவையே மேலும் பலரை அறப்போர் கோட்பாட்டுள் கொண்டு வந்தன. அதிலும் சிறப்பாக நாட்டுப்புற அரபிகளுள் ஏராளமானோர் - சிலருக்கு யுத்தப் பொருட்கள் மீதான பிரேமை தான் மிகுந்திருந்தாலும் கூட - இந்தப் போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டனர். எவ்வாறாயினும் புதுஹாத் பற்றியும் அவற்றைத் திட்டமிட்ட தலைவர்களது சிந்தையில் பதிந்திருந்த பொது உணர்வு குறித்தும் அவதானிப்போர் சில நாட்டுப்புற அரபிகளின் தனிப்பட்ட மனோ பாவங்களைப் பெரிதுபடுத்திக் காட்டுதல் தகாது. தலைமைகள் தமது பொறுப்புகள் குறித்து மிகுந்த கரிசனையுடன் செயல்பட்டமை தெளிவாக அமைந்துள்ளது. யுத்தப் பொருட்களின் சேகரிப்பை விட கொள்கைத்திறமே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் முஸ்லிம்கள் குடிசனங்களிட மிருந்து அறவிடப்பட்டு வந்த வரியைக் குறைத்தனர். நிலவிவரும் பொருளாதார அமைப்பைத் தொடர்ந்து கொண்டு சென்றனர். தமக் கென அவர்கள் உடைமைகள் எதனையும் கொள்ளவில்லை. அவர் களது முன்னோடி நடவடிக்கைகள் ஏனையோரையும் நேர்வழி செல் வதில் ஊக்குவிப்பனவாக அமைந்தன.

அரசியல் துறையைப் பொறுத்தும் இஸ்லாத்தின் பரம்பல் குறித்து நாம் பார்ப்போம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், குலபா-அல்-ராஷிதூன்களும், முஸ்லிம் உம்மாவைப் பிளவுபடுத்தக்கூடிய அத்தனை முனைவுகளையும் முறியடிப்பதில் அதீத கவனம் செலுத்தி வந்தனர். பாரிய பிரச்சினையாக உருவெடுத்திருந்தது ரித்தா (மதத் துறவு) இயக்கம். அதனை முறியடித்து அனைத்து வளங்களையும் இஸ்லாத்தின் பரம்பலுக்குப் பயன்படுத்தி உம்மாவுக்குள் உள்ளார்ந்த தோர் ஒற்றுமை ஏற்படுத்தி வைக்கப்பட்டது. பிரச்சினைகளுள் ஏராள மானவை அபூபக்ர்-அல்-ஸித்தீக்கின் ஆட்சிக் காலத்தில் மதம் மாறிய முர்தத் நாட்டரபிகளால் ஏற்படுத்தப்பட்டன. கிளர்ச்சி செய்தோர் அனைவரையும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அபூபக்ர், அவர்களுக்கான தண்டனையாக அவர்களது ஆயுதங்கள் அனைத்தை யும் கலைந்து விட்டார். அதனால் அம்மக்களால் இராணுவ நட வடிக்கைகளில் ஈடுபட இயலவில்லை.

அந்த நாட்டுப்புற அரபிகளின் கீழ்ப்படிவினை உறுதி செய்து கொள்ள முடியாதிருந்தது. அவர்களது மனோபாவம், நடவடிக்கைகள் என்பன பூரண இஸ்லாமியத் தன்மையைக் காட்டுவனவாக அமைய வில்லை. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் மக்களுக்கு அவர்கள் மூலம் இஸ்லாத்தின் தூய அமைப்பு கிட்டப்போவதில்லை. எனவே அபூபக்ர், தனக்குத் துணையாக நகரங்களின் (மதீனா, மக்கா, தாயிப்) மக்களையே நாடியிருந்தார். நகரப்புறங்களில் இஸ்லாமிய வாழ்வின் கோட்பாடுகள், கல்வியினால் ஆகும் சாதகங்கள் என்பன நன்கு பதிந்திருந்தன. அவர்களில் இருந்தே இராணுவத்துக்கான வீரர்கள் பணியமர்த்தப்பட்டனர்; தலைவர்கள் அனைவரும் ஸஹாபாவி லிருந்தே தேர்ந்து கொள்ளப்பட்டனர்.

புதுஹாத் சம்பந்தமான மற்றுமொரு விளக்கம் அவை அடிப்படை யில் தற்காப்புக்கானவை என்றும் இஸ்லாமிய அரசை அதனிலும் வலுவான எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே அவை மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறுகிறது. பெரும்பாலான அரபு,

முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் இத்தகையதொரு விளக்கத்தையே அளிக்கின்றனர். இத்தகையதொரு போக்கு இருபதாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பதித்துவரும் மானுட கோட்பாடுகளுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் அவர்கள் தமது சிந்தையை அடகு வைத்துள்ளமை யையே காட்டுகின்றது.

யுத்தங்களினால் விளைவது தான் என்ன? நாகரிகங்கள் அழிகின் றன, மானுட சம்ஹாரம் பெருகுகின்றது; அங்கவீனர்களதும், அகதி களதும் எண்ணிக்கை அன்றாடம் பெருகிச் செல்கின்றது. ஆக, இவற் றையெல்லாம் இல்லாதொழிக்க வேண்டுமாயின் நாடுகளிடையிலான முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும்; சர்வதேச சமாதானம் நிறுவப்பெற வேண்டும். பேச்சுவார்த்தைகள் மூலம் உடன்பாடு காணும் பண்பாடு மலர வேண்டும். இவற்றுக்காகப் பாடுபடும் சர்வ தேச நிறுவனங்களின் உதயத்தால் கவரப்பட்டனவாகவே எமது சமகால அரபு, முஸ்லிம் வரலாற்றாசிரியர்களது கருத்துக்கள் தொனிக்கின்றன.

காலத்தின் தேவை காரணமாக புதுஹாத் குறித்து எழுதும் அறிஞர் கள், இஸ்லாத்தின் அறப்போர் சிந்தனையை நவீன காலத்தில் ஏற் புடையதாகத் தோற்றும் கருத்துக்களுக்கு இயையும் வகையில் சித்த ரித்துக் காட்ட முனையும் போது, வரலாற்றில் ஏற்கெனவே நிகழ்ந்து போனவற்றுக்குச் சமாதானம் கற்பிக்கவும், வருத்தம் தெரிவிக்கவும் தமது திறமைகளைப் பயன்படுத்துவது கவலைக்குரியது. பழியேற்று மனம் வருந்தும் நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளமைக்கு ஒன்றோடொன்று இணைந்த உளவியல், அறிவியல் காரணங்கள் உள்ளன.

கற்றறிந்த முஸ்லிம் சிந்தையில் மேற்குலகக் கோட்பாடுகள் பதித் திருக்கும் செல்வாக்கு குறிப்பிடத்தக்கது. மேற்கத்திய மேலாண்மைக்கு அடிப்படையாக இருப்பது, அதன் அறிவியல் தாக்கமுமாகும். அது ஒரு வகையான தாழ்வுணர்ச்சியை எம்மவர் சிந்தையில் பதித்து விடுகின்றது. பயனாக மேற்கத்திய நாகரிகத்தின் கோட்பாடுகளுக்கும் அதன் அறிவியல் உளவியல் அம்சங்களுக்கும் முரணாக எழும் எத னையும் நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு நம்மவர்கள் தள்ளப்பட்டு விடுகின்றார்கள்.

கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு விடயம், அறப்போரின் யதார்த்தத்தையும் நோக்குகளையும் சரிவரப் புரிந்து கொள்ள இய லாதுள்ளமையாகும். அறப்போர் என்பது, இஸ்லாமிய மதத்தை யார் மீதும் திணிப்பதல்ல என்பதனை முஸ்லிம்கள் விளங்கிக் கொள்ள

வேண்டும். இஸ்லாமிய பரம்பலைத் தடுக்கும் காரணிகளை அகற்று வதாகும் அது. நிலவிவரும் அரசியல் சக்திகளைப் பலம் குன்றச் செய்வதன் மூலம் அல்லது அழித்து விடுவதன் மூலம் அவர்கள் அதனைச் செய்யலாம். விளைவாக முஸ்லிம்களின் கைகள் ஓங்க, சக விசுவாசிகள் எங்கெல்லாம் துயருறுத்தப்படுகின்றார்களோ அங்கெல் லாம் ஆதரவுக்கரம் நீட்டலாம்.

அறப்போருக்கும், மக்கள் மீது விசுவாசம் திணிக்கப்படுவதற்கும் இடையிலான தொடர்பு முதலில் கீழைத்தேயவியலாளர்களது ஆக் கங்களிலேயே பிரஸ்தாபிக்கப்பட்டது. தத்தமது பிரச்சார நோக்கங் களை வலுப்படுத்துவதற்காக நிகழ்வுகளைத் திரித்துக் கூறுவதன் ஓர் அங்கமாகவே இது எழுந்தது. இந்த முனைவு அறுக்கப்பட வேண்டும். அப்போது தான் தெளிவானதொரு காட்சி துலங்கும். கிஞ்சிற்றேனும் ஐயம் இல்லாத வகையில் குர்ஆன் தெளிவுறுத்திக் காட்டியிருக்கும் ஒரு விடயம், மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவோ, கிறிஸ்தவர் களாகவும் யூதர்களாகவும் தொடர்ந்தும் இருக்கவோ பூரண சுதந்திரம் படைத்தவர்கள் என்பது. இஸ்லாமிய சமூகத்துள்ளோ, இஸ்லாமிய அரசின் கீழ் வந்துள்ள எல்லைகளுக்குள்ளோ இந்த சுதந்திரம் அவர் களுக்கு இருக்கவே செய்கின்றது. இது குர்ஆனிய வாசகங்கள் மூல மாகவும், வரலாற்று நிகழ்வுகள் மூலமாகவும் சான்றுபடுத்தப்பட் டுள்ளது. பைஸாந்திய, பாரசீக மேலாண்மையின் கீழ் இருந்து வந்த சமூகங்கள், இஸ்லாம் கொண்டு வந்து தந்த இந்த சுதந்திரத்தினால் பெருமகிழ்ச்சி அடைந்தன. எகிப்தின் Copts களும், ஸிரியாவின் Jacobites களும் இஸ்லாம் பிரகடனம் செய்த மத சுதந்திரத் தினால் புளகாங்கிதம் அடைந்தனர். மத சுதந்திரம் பற்றிய இந்த அறிவிப்பு நேர்மையல்லாததாக இருந்திருந்தால் எல்லா சிறுபான்மை மதத்த வரும் முஸ்லிம் சமூகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அவர்கள் அனை வரும் இல்லாது போயிருப்பார்கள். இஸ்லாம் தோற்றி பதினான்கு நூற்றாண்டுகள் கழிந்தும் அந்த சிறுபான்மை மதத்தவர்கள் அனைவரும் முஸ்லிம் சமூகத்துள் தொடர்ந்து இருந்து வருகின்றமை கண்கூடு.

புதுஹாத்களைத் தற்காப்புக்கான ஒரு முனைவாகச் சித்தரிப்பதும், தீவிரமான வாதங்களின் முன்னால் எடுபடக்கூடியதல்ல. அந்தலூஸியா வினதும், Transoxiana வினதும் மக்கள் முஸ்லிம்களை வெற்றிகொள்ள வென எப்போதேனும் முஸ்லிம் எல்லைகளுக்குள் நுழைந்தார்களா? முஸ்லிம்கள் எல்லைகளைப் பலப்படுத்திக் கொள்ளத்தான் மூன்று பெரும் கண்டங்களுக்குள் புகுந்தனரா? அரேபிய தீபகற்பத்தினின்றும்

வெகு தொலைவில் எத்துணை பயங்கரமான நிகழ்வுகளும் மோதல் களும் இடம்பெற்றன! பிரான்ஸின் தென் பகுதியின் Politiers இல் நடந்த Tours யுத்தம், தென் இத்தாலியின் Crete கைப்பற்றப்பட்டமை, Transoxiana வின் Talas ஆற்றங்கரையில் நிகழ்ந்த Tiraz யுத்தம், இறுதி யாக வியன்னா முற்றுகை என்பனவெல்லாம் தற்பாதுகாப்புக்காகத் தான் நடந்தனவா?

புதுஹாத்தின் உண்மையான விளக்கம் அவர்கள் தமது மதக் கடமை யான அறப்போரை நடைமுறைப்படுத்தியமையாகும். அதையே நபிகள் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் சிகரம் எனக் குறித்தார்கள்.

# ஆரம்ப அறப்போர்கள்

*ஆரம்ப அறப்போர் நடவடிக்கைகள் கஸாவத், சிற்சிறு படை யெடுப்புகள், ஸராயா என வழங்கின. மதீனாவின் மேற்குப்புற நிலைகளின் போது தொடுக்கப்பட்ட இவை மூன்று நோக்கங்களைக் கொண்டிருந்தன.*

1. *குறைஷியரின் ஸிரியாவுக்கான வர்த்தக மார்க்கங்களைத் தடை செய்தல். இதன் மூலம் மக்காவின் வர்த்தகப் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகும்.*

2. *இந்த பிரதேசத்தில் வாழ்ந்து வந்த ஏனைய கோத்திரங்களுடன் ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்து கொள்ளல்.*

*இதன் மூலம் குறைஷுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான முரண் பாடுகளின் போது அக்கோத்திரங்களது ஆதரவை முஸ்லிம்களுக்குச் சார்பாக ஈட்டிக் கொள்ளலாம் அல்லது அவர்கள் நடுநிலை வகிக்கச் செய்யலாம். அவ்வாறு செய்து கொள்வதே முஸ்லிம்களுக்கு வெற்றி யாக அமைந்துவிடும். குறைஷுக்கும் இக்கோத்திரங்களுக்கும் இடையே வரலாற்று ரீதியான கூட்டுகள் அமைந்திருந்தன. குர்ஆன் அவற்றை 'ஈலாப்' (குர்ஆன் 106:1) என அழைத்தது. இக்கூட்டுகளின் மூலமே குறைஷியர் ஸிரியாவுடனும் யமனுடனுமான தமது வர்த்த கத்தைப் பாதுகாத்து வந்தனர்.*

*குறைஷ் மீது ஆர்வம் கொண்டவர்களாகவே இக்கோத்திரத்தார் களும் விளங்கினர். குறைஷ் கஃபாவின் காவலர்களாயிருந்தோர். அராபியர் அனைவரும் அங்குதான் கஃபாவைச் சூழவுள்ள சிலைகளை வணங்கவென யாத்திரைகள் மேற்கொண்டு வந்தனர். தமது நம்பிக் கைகளில் ஒன்று சேர்ந்திருந்த அவர்கள் இஸ்லாத்தை எதிர்ப்பதிலும்*

ஒன்று சேர்ந்திருந்தனர். இத்தகு காலகட்டத்தில் அக்கோத்திரங்களோடு ஒப்பந்தங்கள் செய்து, பிரச்சினைகளின் போது அவர்களை நடுநிலை வகிக்கும்படி செய்ய முடிந்தமை நிச்சயமாக முஸ்லிம்களுக்குக் கிட்டியதொரு வெற்றியே என்பதில் ஐயமில்லை.

*3. மதீனாவில் முஸ்லிம்களது வல்லமையை யூதர்களுக்கும், முஷ்ரிகூன்களுக்கும் நிரூபித்துக்காட்ட வேண்டுவது. மதீனாவுக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல முஸ்லிம் மேலாண்மை என்பதைக் காட்டி சுற்றுப்புறங்களிலும் அயல் கோத்திரங்களிலும் தமது ஆதிக்கத்தை நிறுவவும் செல்வாக்கைப் பதிக்கவும் முஸ்லிம்களால் இயலுமாயிற்று.*

*முதலாவது கஸ்வாவாக அமைந்தது, கஸ்வத்-அல்-அப்வா. இதுவே கஸ்வத்-அல்-வுத்தான் எனவும் அறியப்பட்டிருந்தது. அல்-அப்வா மதீனாவிலிருந்து சுமார் பதினான்கு மைல் தொலைவில் உள்ளது. இந்த கஸ்வாவின் போது மோதல்கள் ஏதும் நிகழவில்லை. என்றாலும் கினானாவின் பனூ தம்ராக்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ஸபர் பன்னிரண்டில் நிகழ்ந்தது இந்த கஸ்வா. ரபீ-அல்-அவ்வலில் மதீனாவுக்குத் திரும்பும் வரை படையினர் மதீனாவுக்கு வெளியே இருந்தனர் என்பார் மதாயினீ.*

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், உபைதா-இப்ன்-அல்-ஹாரிஸ் தலைமையில் அறுபது பேரை ஒரு ஸரீயாவில் அல்-அப்வாவுக்கு அனுப்பிவைத்ததாகக் கூறுவார் உர்வா-இப்ன்-அல்-ஸுபைர். மதீனா வுக்குத் திரும்பிய பின் ஒரு ஸரீயா ஸைப்-அல்-பஹ்ர்ருக்கு அனுப் பப்பட்டதாகக் கூறுவார் இப்ன்-இஸ்ஹாக். இதே வேளை மற்றும் ஒரு ஸரீயா முப்பது பேர் கொண்டதாக ஹம்ஸா-இப்ன்-அல்-முத்த லிப்பின் தலைமையில் அதே ஸைப்-அல்-பஹ்ர்ருக்கு, குறைஷ் வர்த்த கக் குழுவை வழி மறிப்பதற்கென அனுப்பப்பட்டது. எவ்வாறாயினும் இரண்டு ஸரியாக்களும் மோதல்களில் ஈடுபடவில்லை. ஹம்ஸாவின் ஸரீயாவைப் பொறுத்து, இருசாராருடனும் சமாதான ஒப்பந்தங்கள் செய்திருந்த கோத்திரங்கள் தலையிட்டு மோதல்கள் விளைவதைத் தடுத்துவிட்டன. இருசாராரும் ஒருவர் மீதொருவர் அம்புகள் எறிந்து கொள்வதுடன் முற்றுப்பெற்றது உபைதாவின் ஸரீயா.*

*குறைஷ் வர்த்தக முனைவுகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதே இந்த இரண்டு ஸரீயாக்களதும் நோக்கமாக இருந்தது. இஸ்லாத்தின் மீதான குறைஷியரின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் மாற்றங்கள் விளையாத பட்சத்தில் அவர்களது வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகும் என்பதை உணர்த்தும் முதல் அறிவிப்பு இது.*

ரபீ-அல்-தானியில் முஸ்லிம்கள், வர்த்தக மார்க்கங்களிலான தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். யான்பூவின் அருகில் அமைந்த ரிள்வாவில் நிகழ்ந்தது கஸ்வத் புவாத். குறைஷ் வர்த்தகக் குழுவை இடைமறிக்கவென இருநூறு வீரர்கள் அனுப்பப்பெற்றனர். பின்னர் ஜுமாதா-அல்-ஊலாவில் கஸ்வத்-அல்-அஷீரா நிகழ்ந்தது. இரண்டு இடங்களிலும் மோதல்கள் ஏற்படவில்லை. என்றாலும் அல்-அஷீரா வில் பனூ முத்லஜ்களுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இது நிகழ்ந்தது ஜுமாதா-அல்-ஆகிராவில்.

அல்-அஷீராவைத் தொடர்ந்து கரஸ்-இப்ன்-ஜாபிர்-அல்-பஹ்ரீ என் பார் மதீனாவின் அருகில் வந்து ஒட்டகங்களையும், கால்நடைகளை யும் கவர்ந்து சென்றார். கரஸ்ஸை நபிகளார் பத்ரின் அருகில் ஸப்வான் வரை துரத்திச் சென்றனர். எனவே இது பத்ர் மீதான முதல் கஸ்வா என அழைக்கப்பெறுகின்றது. கரஸ் தப்பிச் சென்றுவிட்டாலும் கூட, அண்டையிலுள்ள கோத்திரங்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டுவதன் அவசியத்தை இச்சம்பவம் உணர்த்தி நின்றது.

ஸிரிய வர்த்தக மார்க்கம் ஒரு புறமிருக்க, யமன் வர்த்தக மார்க்கத் தையும் அவதானிக்க வேண்டியிருந்தது. ரஜப் மாத இறுதியில் அப்த்-அல்லாஹ்-இப்ன்-ஜஹ்ஷ் தலைமையில் எட்டுப்பேர் கொண்ட ஒரு குழு மக்காவின் தென் புறத்தேயமைந்த நக்லாவுக்கு அனுப்பப்பட் டது. குறைஷியர் குறித்த தகவல்கள் தெரிந்து வருவது மட்டுமே இக்குழுவுக்கான பணி. என்றாலும் அவர்கள் குறைஷின் வர்த்தகக் குழு ஒன்றினை இடைமறித்துக் கைப்பற்றிக் கொண்டனர்.

வர்த்தகக் குழுவின் தலைவர் கொல்லப்பட்டார். இருவர் சிறைப் பிடிக்கப்பட்டனர். கைதிகள் இருவரும் வர்த்தகப் பொருட்களுடன் மதீனாவுக்குக் கூட்டி வரப்பட்டனர். இந்த சம்பவம் நிகழ்ந்தது புனித மாதத்தின் போது என்ற காரணத்தால் முஷ்ரிகூன் பெருங் கண்டனங் களை முன்வைத்தனர். புனித மாதத்தின் புனிதத்துவத்தை முஸ்லிம் கள் களங்கப்படுத்திவிட்டதாகச் சுமத்தப்பெற்ற குற்றச்சாட்டு நகரவாசி கள் மத்தியிலும் நாட்டுப்புற அராபியர் மத்தியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இஸ்லாத்துக்கு முன்னைய காலத்திலிருந்தே காலா காலமாக அராபிய தீபகற்பத்தில் வழக்கில் இருந்துவந்த ஒரு மரபு மீறப்பட்டிருந்தது. உண்மையில் அப்த்-அல்லாஹ்-இப்ன்-ஜஹ்ஷ் இதை உணர்ந்திருந்து, தனது சகாக்களுடன் ஆலோசனை நடாத்திய பின்னரே தாக்குதலை மேற்கொண்டிருந்தார். யுத்தப் பொருட்கள் அனைத்தும் அல்லாஹ்வின் தூதரிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றை

*ஏற்க மறுத்து நபிகளார் கூறினார்கள்: ''தாக்குதல் நடாத்தும்படி நான் உமக்குக் கூறவில்லை. முஹம்மதும் அவரது தோழர்களும் புனித மாதத்திற்குக் களங்கம் ஏற்படுத்தி, இரத்தம் சிந்தி, செல்வங்களைக் கைப்பற்றி, மக்களைச் சிறைப்பிடித்திருப்பதாகக் குறைஷியர் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.''*

*இக்கட்டான இந்த சூழலில், முஸ்லிம்களின் நிலைமை ஏற்றுக் கொள்ளக் கூடியதே என விளக்குவனவாக அமைந்தன அவ்வேளை அருளப்பெற்ற குர்ஆனிய வாசகங்கள்:*

> ''(நபியே!) புனித மாதத்தைப் பற்றி (அதாவது) அதில் போர் புரிவதைப் பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். அதில் போரிடுவது பெரும்பாவம் என்று நீர் கூறுவீராக! ஆனால் அல்லாஹ்வின் பாதையை விட்டும் (மக்களைத்) தடுப்பதும், அவனை நிராகரிப்பதும் (கஃபா எனும்) புனிதப் பள்ளியை விட்டும் (தடுப்பதும்) அதில் வசிப்போரை அதிலிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் (அதைவிடப்) பெரும் பாவங்களாகும். அன்றியும் குழப்பம் செய்வது கொலையை விட மிகக்கொடிய குற்றமாகும்''.
> (அல்-பகரா 2:217)

*புனித மாதத்தின் புனிதத்துவத்தை இந்த வாசகம் உறுதி செய்தாலும், முஸ்லிம்களைத் துயருறுத்தி, அவர்களை மக்காவிலிருந்து துரத்தி விட்ட குறைஷியரின் செய்கை, புனித மாதத்தில் முஸ்லிம்கள் மோதலில் ஈடுபட்டதை விட மோசமானது என உணர்த்தியது. ஆக, சமூக பாரம்பரியங்களதும், புனிதத்துவத்தினதும் காவலர்கள் தாமே என உரிமை கோரிக்கொள்ளும் குறைஷியர் முஸ்லிம்களைப் பொறுத்து பாரம்பரிய சம்பிரதாயங்களைப் பேணாதது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. யுத்தப் பொருட்களை ஏற்று, கைதிகள் இருவரையும் விடுதலை செய்து விட்டனர் நபிகளார்.*

*ஐயங்கள் மிகப் பெற்ற சிலர், முஷ்ரிகூன்களின் வர்த்தகக் குழுக்களை இடைமறிக்கும் முஸ்லிம்களின் நடவடிக்கை, வழிப்பறிக் கொள்ளைக்காரர்களது செயலுக்கு ஈடானது எனக் கற்பிப்பர். குறைஷியரைப் பொறுத்து முஸ்லிம்கள் யுத்த ஸ்திதியிலேயே இருந்தனர். யுத்த நிலைமையில், எதிரியை - பொருளாதார ரீதியாகவும், மானுட ரீதியாகவும், பலவீனப்படுத்த வேண்டுவது அவசியமானதொரு கருமமாகும். அதற்கும் மேலாக முஸ்லிம்கள் மக்காவிலிருந்து புலம் பெயர்ந்த வேளை, அவர்களது செல்வங்களைக் குறைஷ் கைப்பற்றிக்*

கொண்டிருந்தனர். நவீன உலகிலும் கூட யுத்த காலங்களில் எதிரிகளது மானுட, பொருளாதார வளங்களின் மீது தாக்குதல் நடாத்துவது ஏற்புடையதாகவே உள்ளது.

ரஜப் மாதம் மற்றுமொரு முக்கிய நிகழ்வு இடம் பெற்றது. அது முஸ்லிம்களின் தனித்துவத்தை உறுதி செய்து, அவர்களது 'ஸலா' வுக்கான திசை நிர்ணயம் செய்யப்பட்டமை. இதுவே ஜெரூஸலத்தின் பைத்-அல்-மக்திஸ்ஸிலிருந்து 'கிப்லா' மக்காவின் கஃபா நோக்கி திருப்பப்பட்டதாகும்.

# கிப்லா மாற்றம்

*ஹிஜ்ராவின் முன்னர் நபிகளார் ஜெரூஸலத்தை முன்னோக்கியே தொழுது வந்தார்கள். அன்னாருக்கும் பைத்-அல்-மக்திஸ் (ஜெரூஸலம்) ஸூக்கும் மத்தியில் இருந்தது கஃபா. இது ஒரு ஸஹீஹ் இஸ்னாத் துடன், அப்த்-அல்லாஹ்-இப்ன்-அப்பாஸ் வரை செல்லும் ஓர் அறிவிப் பில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சில அறிஞர்கள், அன்னார் மக்காவில் இருந்தபோது கஃபாவையும், மதீனாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் பைத்-அல்-மக்திஸ்ஸையும் முன்னோக்கித் தொழுததாகக் கூறுவர். அல்-ஹாபிஸ்-அபூ உமர்-இப்ன்-அப்த்-அல் பர்ர்-அல் குர்துபீ பின்னைய அறிவிப்புக்குச் சார்பானவராக இருக்கின்றார். என்றாலும் அல்-ஹாபிஸ் இப்ன் ஹஜர் அதனைக் கண்டித்துக் கூறுவார்: 'இது பலவீனமான ளயீப். ஏனெனில் ரத்துச் செய்தல் சம்பந்தமாக இரண்டு அறிவிப்புகள் இருந் திருக்க வேண்டும்'. முதல் அறிவிப்பு எவ்வாறாயினும் இரண்டு அறி விப்புகளையும் கொண்டுள்ளதால் கூடிய ஆதாரபூர்வமானதாக உள்ளது. அல்-ஹாகிமும் ஏனையோரும் அதனை ஸஹீஹ் எனக் கொள்வர். அன்ஸார், ஹிஜ்ராவுக்கு மூன்று வருடங்களின் முன்னரேயே பைத்-அல்-முகத்திஸை முன்னோக்கித் தொழுதனர் எனக் கூறுவார் ஸஈத்-இப்ன் -அல்-முஸய்யப்.*

*நபிகளார் மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து பதினாறு மாத காலம் பைத்-அல்-முகத்திஸை முன்னோக்கியே தொழுது வந்தனர். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, ரஜப் மாத மத்தியில் இப்றாஹீம், இஸ்மாயீல் நபிகள் போல கஃபாவை முன்னோக்கித் தொழுமாறு இறைவன் அண்ணலாருக்குக் கட்டளை பிறப்பித்தான். கிப்லா, கஃபாவை நோக்கி மாற்றப்பட்டமை பத்ருக்கு இரண்டு மாதங்களின் முன்னர் நிகழ்ந்தது எனக் கூறுவார் ஸஈத்-இப்ன்-அல்-முஸய்யப். நாம் துல்லியமாகக் கணிப்பீடு செய்யின் இது ஹிஜ்ரி 2, ரஜப் 17 ஆக அமையும். அல்லது*

பெரும்பாலான அறிஞர்கள் இணங்குவது போல, இரண்டு நாட்களைக் கழித்து ரஜப் மத்தி எனக் கொள்ளலாகும்.

கிப்லா மாற்றமுற்ற திகதி நபிகளார் மதீனாவை அடைந்து, பதினேழு மாத காலமான ரஜப் எனக் குறிப்பார் இப்ன்-இஸ்ஹாக். ஷாத்த் அறி விப்பொன்றையும் அவர் முன்வைப்பார். அதன்படி கிப்லா மாற்ற முற்றது ஹிஜ்ராவின் பதினெட்டு மாதங்களின் பின் ஷஃபானில்.

அல்-வாகிதீ, ஹிஜ்ராவின் பின் பதினேழு மாதங்கள் கழிந்த ரஜப் மாதம் எனத் திகதி நிர்ணயம் செய்கின்றார். ஒழுங்குகளுக்கமையாத மேலும் பல அறிவிப்புகளும் உள. உதாரணமாக, மூஸா-இப்ன்-உக்பா இது நிகழ்ந்தது ஜுமாதா-அல்-ஆகிராவில் எனக் கூறுவார். ஏனையோர் ஹிஜ்ராவின் பின்னர் பதின்மூன்று மாதங்கள், பத்தொன்பது மாதங்கள், இருபது மாதங்கள், இரண்டு மாதங்கள், இரண்டு வருடங்கள் எனப் பலபடக் கூறுவர்.

ஒழுங்கில்லாத அறிவிப்புகளை நாம் பொருட்படுத்தாதுவிடின், பதினாறு, பதினேழு மாதங்கள் எனக் கூறப்படுவதில் உள்ள முரண் பாட்டை ஒரு தீர்வுக்குக் கொண்டு வரலாம். பதினாறு மாதங்கள் என்போர் நபிகளார் வந்து சேர்ந்த மாதமும், கிப்லா மாற்றமுற்ற காலமும் ஒரே மாதம் எனக்கொள்வர்; மேலதிக நாட்கள் எதனையும் அவர்கள் சேர்க்காது விட்டனர். பதினேழு மாதங்கள் எனக் கூறுவோர் இந்த இரு மாதங்களையும் சேர்த்துக் கொள்வர். சில அறிஞர்கள் திகதியொன்றைக் குறிக்கத் தயங்கினர்.

நபிகளாருடன் சமாதான ஒப்பந்தம் செய்திருந்த யூதர்கள், அன்னார் பைத்-அல்-மக்திஸ்ஸை முன்னோக்கித் தொழுது வந்தமையில் மகிழ் வுற்று அதனை வரவேற்கவே செய்தனர். அவர்கள் கூறியதாக முஜா ஹித் அறிவிப்பார்: 'முஹம்மத் எங்களிலிருந்தும் வேறுபடுகின்றார். என்றாலும் எங்களது கிப்லாவை நோக்கியே அவர் தொழுகின்றார்.' இந்த அறிவிப்பு சரியானதாகவே தோற்றுகின்றது. புதிய மதம் கிப்லா வைப் பொறுத்துத் தம்மையே பின்பற்றுவதாகவும், தமது சடங்குகளை யும், சம்பிரதாயங்களையும் கைக்கொள்வதாகவும் அவர்கள் கருதினர். காலப்போக்கில் புதிய மதத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ளும் எண்ணம் அவர்களுள் இருந்திருக்கலாம். யூதர்களைக் கவர்ந்து கொள்ளும் நோக்கில் ஹிஜ்ரி ஒன்றில் பைத்-அல்-மக்திஸை நோக்கியதாகக் கிப்லா நிறுவப்பெற்றது எனச் சில அறிஞர்கள் கருதினர். நிகழ்ந்தது அவ்வாறல்ல. ஹிஜ்ராவின் முன்னர் மக்காவில் முஸ்லிம்கள் பைத்-அல்-மக்திஸை முன்னோக்கியே தொழுதார்கள். ஹிஜ்ராவின் பின்னரும் அதனையே அவர்கள் தொடர்ந்தார்கள்.

*நபிகளார் வஹீ மூலமான இறை கட்டளைகளை எதிர்பார்த்திருந்த னர். இறைவனை மட்டுமே வழிபடுவதற்கென முதன்முதல் நிறுவப் பெற்ற புண்ணியதலமான கஃபாவை முன்னிறுத்தி, இப்றாஹீம் நபிய வர்களின் கிப்லாவை நோக்கியே தொழ விரும்பினர் அல்லாஹ்வின் தூதர். முஸ்லிம்கள் தமக்கேயானதொரு கிப்லாவைக் கொண்டிருக்க வேண்டும்; அதன் மூலம் யூத பிரசாரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அன்னாரின் பிரார்த்தனைக்குப் பதில் கிட்டியது; விருப்பும் நிறைவேறியது:*

''(நபியே!) உம்முடைய முகம் (திசை மாற்றக் கட்டளையை எதிர் பார்த்து) வானத்தின் பக்கம் திரும்புவதைத் திட்டமாக நாம் காணுகி றோம். ஆகவே, நீர் விரும்புகின்ற கிப்லாவுக்கு உம்மைத் திண்ண மாக நாம் திருப்பி விடுகின்றோம். எனவே உம் முகத்தை (தொழும் போது கஃபா எனும்) புனிதப் பள்ளியின்பால் திருப்புவீராக! (இறை நம்பிக்கையாளர்களே!) நீங்களும் எங்கிருந்தாலும் (தொழும்போது) அதன் பக்கம் உங்களுடைய முகங்களைத் திருப்பிக் கொள்ளுங் கள்.'' (அல்-பகரா 2:144)

*நபிகளார் கஃபாவை நோக்கித் தொழுத முதலாவது தொழுகை ஸலாத்-அல்-ளுஹர், பனூ ஸலாமாக்களுடன் தொழுதது. மஸ்ஜித் -அந்-நபவியில் கஃபாவை முன்னோக்கித் தொழுத முதல் தொழுகை அஸர். கூபாவின் மக்கள் கிப்லா மாற்றம் பற்றிய செய்தி கிட்டித் தொழுத முதலாவது தொழுகை பஜ்ர்.*

*கிப்லாவின் மாற்றம் யூதர்களைப் பெரும் கலவரத்துக்குள்ளாக் கியது. சினம் கொண்ட அவர்கள் வதந்திகளைப் பரப்பலானார்கள். அவர்கள் கூறியனவற்றை மறுத்துரைக்கும் வகையினவாக அமைந்தன அவ்வேளை அருளப்பெற்ற இறைவாசகங்கள். பைத்-அல்-மக்திஸை நிலை நிறுத்தித் தொழுவது தான் சரியான மார்க்கம் என அவர்கள் கோரிய போது குர்ஆன் கூறியது:*

''(இறை நம்பிக்கையாளர்களாகிய) அவர்கள் எதன் மீது இருந்த னரோ அத்தகைய அவர்களுடைய கிப்லாவை விட்டும் அவர் களைத் திருப்பியது எது? என்று மனிதர்களில் அறிவீனர்கள் கூறுவார்கள். கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியன. தான் நாடியவரை நேரான வழியில் அவன் நடத்துவான் என்று (நபியே!) நீர் கூறுவீராக''. (அல்-பகரா 2:142)

*பைத்-அல்-மக்திஸிலிருந்து கஃபாவுக்குத் திசை திருப்பப்பட்டமை விசுவாசியருக்கான ஒரு பரீட்சையே எனக் குர்ஆன் கூறியது. அவர்களது*

*விசுவாசத்தின் உறுதியைப் பரீட்சிக்கவும், இறையோனின் ஆணைகளுக்கு எத்துணை துரிதமாக அவர்கள் பணிகின்றார்கள் என்பதைக் காணவும் ஆனது அது:*

> ''யார் நம் தூதரைப் பின்பற்றுகிறார்கள்; யார் (அவரைப் பின்பற்றாமல்) தமது இரு குதிங்கால்களின் மீது பின் திரும்பிச் செல்கின்றார்கள் என்பதை நாம் அறிவிப்பதற்காகவேயன்றி, எதன் மீது (இதுவரை) நீர் இருந்து வந்தீரோ அந்த கிப்லாவை நாம் மாற்றவில்லை. இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது; அல்லாஹ் உங்கள் நம்பிக்கையை வீணாக்க மாட்டான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப் பெரும் கருணை காட்டுபவன்; நிகரற்ற அன்புடையவன்.'' (அல்-பகரா 2:143)

*இதிலிருந்து தெரிய வருவது, நபிகளாரின் முதல் கிப்லாவாக இருந்த பைத்-அல்-மக்திஸிலிருந்து திரும்பச் செய்யப்பட்டமை ஒரு சோதனையே என்பதாகும். கிப்லா மாற்றப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் பற்றிய அறிவிப்புகளைக் காணும் போது இது தெளிவாகிறது. முஹம்மத் தனது மதம் குறித்துக் குழப்பமடைந்துள்ளார், அதனால் தான் கிப்லாவை மாற்றிக் கொண்டுள்ளார் எனக் கூறினர் முஷ்ரிகூன். மதீனாவின் முனாபிகூன் முஸ்லிம்கள் மத்தியில் வதந்திகள் பரப்பியோராகக் கூறினார்: முஹம்மத் எம்மை ஒரு திசையை நோக்கச் செய்தார். பின்னர் வேறொரு திசையை நோக்கச் செய்கிறார். இது ஏன்?*

*விசுவாசிகளும் கூட கவலைக்குள்ளானார்கள். தாம் இதுகாலவரை பைத்-அல்-மக்தஸை முன்னிறுத்தித் தொழுத தொழுகையெல்லாம் ஏற்கப்படாது போய்விடும் எனக் கொண்டார்கள் அவர்கள். பைத்-அல்-மக்திஸை நோக்கியவராகத் தொழுத ஒருவர், கஃபாவை முன்னோக்கித் தொழாதவராக, கிப்லா மாற்றம் பெறும் முன்னர் மரணித்திருந்தால் அவரது தொழுகை பெறுமதி இழந்து விடுவதில்லை என்பதை இறை வாசகங்கள் உறுதி செய்தன. அல்லாஹ்வினதும், நபிகளாரினதும் வழிகாட்டுதலை ஏற்று, பைத்-அல்-மக்திஸை முன்னோக்கித் தொழுதவர்களாக, கிப்லா மாற்றத்துக்கு முன்னர் மரணித்துவிட்ட ஸஹாபாக்கள் பத்துப்பேர் இருந்தனர். கிப்லா மாற்றம் பெற்ற பின்னர் தொழுது வந்தோருள் பலரும், முன்னர் பைத்-அல்-மக்திஸை முன்னோக்கித் தொழுது வந்திருந்தனர்.*

# பத்ர்

ஸிரியா நோக்கிய குறைஷியரின் வர்த்தக மார்க்கத்துக்கு முஸ்லிம் கள் ஓர் அச்சுறுத்தலாக அமைந்திருந்தாலும், வர்த்தகக் குழுக்களுடன் எவ்வித மோதல்களையும் அவர்கள் மேற்கொண்டிருக்கவில்லை. வர்த்தகக் குழுக்களின் நடமாட்டங்கள் குறித்து அவதானம் செலுத்தி வந்த முஸ்லிம்கள், ஸிரியாவிலிருந்து குறைஷிய வர்த்தகக் குழு வொன்று திரும்பி வந்து கொண்டிருக்கும் தகவல் கிட்டவே அதனை வேவு பார்த்து வரவெனச் சிலரை அனுப்பி வைத்தனர்.

அபூ ஸுப்யான்-ஸக்ர்-இப்ன்-ஹர்ப் தலைமையில் பாரிய செல்வம் மிக்கதொரு குழுவே முப்பது அல்லது நாற்பது பேர்களின் பாதுகாவ லோடு வந்து கொண்டிருந்தது. வேவு பார்த்து வரச் சென்றிருந்த பிஸ்பாஸ் திரும்பி வந்து தகவல் தெரிவித்ததும், நபிகளார் தம் சகாக் களை உடன் தயாராகும்படி வேண்டினர். வர்த்தகக் குழு தப்பிச் சென்று விடக்கூடும் எனக் கருதிய அன்னார் தம்மோடு செல்லவிருந்த நகரின் மேலைப் பிரதேசத்தவர்கள் வந்து சேரும் வரை கூட பொறுத்திராது தயாராயிருந்தவர்களோடு உடன் புறப்பட்டுச் சென்றனர்.

ஆக, பத்ரின் போது முஸ்லிம் படையினர் தமது முழு இராணுவ பலத்தையும் கொண்டவர்களாக இருக்கவில்லை. வர்த்தகக் குழுவைக் கைப்பற்றிக் கொள்ளச் சென்றிருந்த அவர்கள், குறைஷிய இராணுவத் தைத் தாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அறிந்திருக்கவில்லை.

அதீ-இப்ன்-அல்-ஸக்பா, பிஸ்பாஸ்-இப்ன்-அம்ர் ஆகியோரே வேவு பார்த்து வரவென அனுப்பப்பட்டவர்கள் எனக் கூறுவார் இக்ரிமா. இது ஸஹீஹ் முஸ்லிமிலும் பதிவு செய்யப் பெற்றுள்ளது. இது முஸ் லிம்கள் உகந்த வழி முறைகளைக் கையாளலாம் என உணர்த்துகின்றது. அவற்றுள் ஒன்று குறிப்பிட்ட ஒரு நோக்கினை அடைந்து கொள்ள

எதிரிகள் மீது வேவு பார்த்து, தேவையான தகவல்களைத் திரட்டிக் கொள்ளலாம் என்பது.

முஸ்லிம்கள் 319 ஆண்களுடனேயே பத்ர் நோக்கிச் சென்றனர். முஹாஜிரூன்களில் இருந்து நூறு பேரும், ஏனையவர்கள் அன்ஸார்களில் இருந்தும் என இந்நிகழ்வில் பங்கு பற்றிய ஸுபைர்-இப்ன்-அல்-அவ்வாம் கூறுவார். மிக்க இளமையானவர் என்ற காரணத்தினால் மோதலில் கலந்து கொள்ள நபிகளாரிடம் இருந்து அனுமதி கிடைக்கப் பெறாத அல்-பராஅ-இப்ன்-ஆஸிப், அறுபதுக்கும் மேற்பட்ட முஹாஜிரூன்களும், இரு நூற்றி நாற்பதுக்கும் அதிகமான அன்ஸார்களும் இதில் பங்கு பற்றியிருந்தனர் எனக் கூறுவார். மூலாதாரங்கள் பத்ர் களத்தில் கலந்து கொண்ட 340 தோழர்களது பெயர்களைத் தருகின்றன. பத்ர் நோக்கிச் சென்றோர் தம் எண்ணிக்கையில் காணக்கிட்டும் வித்தியாசங்களுக்குக் காரணம், யார் யாரெல்லாம் பத்ரில் கலந்து கொண்டனர் எனக் காட்டுவதில் மூல ஆதாரங்கள் வெவ்வேறுபட்ட தகவல்களைத் தருவதே.

வழியில் முஸ்லிம்களான தமது மக்களோடு இணைந்து போராடும் நோக்குடன் தைரியமும் பலமும் மிக்க ஒரு முஷ்ரிக் முன்வந்திருந்தார். அல்லாஹ்வின் தூதர் அந்த மனிதனைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். 'ஒரு முஷ்ரிக்கின் உதவியை நான் ஒரு போதும் நாடமாட்டேன்' என்றனர் அன்னார். அந்த மனிதன் மீண்டும் மீண்டும் முயன்றார். இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவராகவே அவர் முஸ்லிம்களுடன் இணைந்து கொள்ள இயலுமானது. இஸ்லாத்தின் முதலாவது போராட்டம் கொள்கை ரீதியானதாகவும், ஒழுங்கிணைந்த நோக்கம் கொண்டதாகவுமே அமைந்திருந்தமையை இது உணர்த்துகின்றது.

முஸ்லிம்களிடம் எழுபது ஒட்டகைகள் இருந்தன. ஒருவர் மாறி ஒருவர் அவற்றில் சவாரி செய்தார்கள். அல்லாஹ்வின் தூதர், அபூ லுபாபா, அலீ ஆகியோர் ஓர் ஒட்டகையில் மாறி மாறிப் பயணித்தனர். நபிகளார் மாத்திரமே ஒட்டகையில் பயணிப்பதை விழைந்தனர் அபூ லுபாபாவும் அலீயும். அன்னார் கூறினார்கள்: 'நீங்கள் என்னிலும் வலிமை வாய்ந்தவர்கள் அல்லர். உங்ளை விட நான் அல்லாஹ்வின் அருளின் தேவை குன்றியவனும் அல்லன்'. முக்கியமானதோர் அறிவுறுத்தலைத் தருகின்றது இது: யுத்த சிரமங்களை எதிர்கொள்வதில் தலைவரும் சாதாரண வீரர்களும் சமமானவர்கள்; இறையோனின் மகிழ்வையும், அருளையும் ஈட்டிக் கொள்வதில் இரு சாராருமே தூய நோக்கினைக் கொண்டவர்கள். தலைவரே சிரமங்களைத் தாங்கிக்

கொள்வதில் தம்மோடு போட்டியிடும் நிலையில், தனது வீரர்கள் தன்னை விட சிரமங்களுக்கு ஆளாகக் கூடாது என ஐம்பத்தைந்து வயதினராய் விட்ட தம் தலைவர் கருதும் நிலையில் அந்த வீரர்கள் எதைத்தான் தாங்காது விடுவார்கள்?

மதீனாவை விட்டும் தாம் வெளியேறிச் சென்றுள்ள நிலையில் அங்கே தொழுகை நடாத்தவென நபிகளார், அப்த்-அல்லாஹ்-இப்ன்-உம்ம் மக்தூம் என்ற தோழரை நியமித்தார்கள். மதீனாவிலிருந்தும் 40 மைல் தொலைவில் உள்ள அல்-ரௌஹாவை அடைந்த போது, தாம் மதீனாவில் இல்லாத வேளை அங்கு அமீர் ஆகப் பணி புரியவென அபூ லுபாபாவைத் திருப்பி அனுப்பினார்கள். பிரயாணத்தின் போதும், அல்லாத போதும், யுத்த காலத்திலும், அமைதிச் சூழலிலும் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை இது உணர்த்துகின்றது.

வர்த்தகக் குழுவைக் கைப்பற்றிக் கொள்ள முஸ்லிம்கள் திரண்டு வருகின்றமையை அறிந்து கொண்ட அபூ ஸுஃப்யான் வழக்கமான பாதையை மாற்றி, கரையோரம் சார்ந்து வேற்று வழி சென்றார். அத்துடன் தம்தம்-இப்ன்-அம்ர்-அல்-கிபாரீ என்பாரை மக்காவுக்கு அனுப்பி, யுத்தத்துக்குத் தயாராகும்படி அறைகூவல் விடுத்தார். இதனைச் செவியுற்றதும் தமது வர்த்தகக் குழுவைக் காத்துக் கொள்ளவென குறைஷ் தயாராகினர்.

இப்ன்-அப்பாஸ், உர்வா-இப்ன்-அல்-ஸுபைர் ஆகிய இருவரும் கூறினர்: ஆதிகா இப்ன்-அல்-முத்தலிப் ஒரு கனவு கண்டார். அதில் ஒரு மனிதர் குறைஷியரை யுத்தத்துக்கென அழைத்து, மக்காவின் அபூ குபைஸ் குன்றிலிருந்து ஒரு கற்பாறையை கீழே எறிந்தார். அப்பாறை தகர்ந்து குறைஷியரின் வீடுகள் அனைத்துள்ளும் புகுந்தது. இந்தக் கனவு அப்பாஸ், அபூ ஜஹ்ல் ஆகியோரிடையே வாதங்களை ஏற்படுத்தி வைத்தன. தம்தம் வந்து வர்த்தகக் குழுவின் விவகாரத்தைத் தெரிவித்ததோடு வாக்குவாதம் முற்றுப் பெற்றது.

அதிர்ச்சிக்குள்ளாயினர் குறைஷியர். முன்னைய சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் குறைஷிய வர்த்தகக் குழுக்களை அச்சுறுத்தவென மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது சிற்சிறு கைகலப்புகளே ஏற்பட்டிருந்தன. இம்முறையோ அவர்கள் வர்த்தகக் குழுவைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்குடன் வந்திருந்தனர். முஸ்லிம்களுக்கான நபிகளாரின் உரை, இதனையே உணர்த்தி நின்றது: 'இவை செல்வம் மிக்க குறைஷிய ஒட்டகைகள். அதன் மீது செல்வீர்களாக. அவற்றை இறைவன், யுத்தப் பொருட்களாக உங்களுக்குத் தரவும் கூடும்.'

ஆகவே குறைஷியர் தமது பலம் அனைத்தையும் விரைவாகவே ஒன்று திரட்டலாயினர். அவர்களது குதிரைப் படையினரோ, காலாட் படையினரோ எவரும் பின்னிற்கவில்லை - அபூ லஹப் முதலாய ஒரு சிலர் தவிர. அபூ லஹபும் தனக்குப் பிரதியாக ஒருவரை அனுப்பி வைத்திருந்தார். மிக்க சினத்துக்குள்ளாகியிருந்தனர் குறைஷியர். நிகழ்ந் துள்ளன அனைத்தும் அவர்களது பெருமை மிக்க தகைமைக்கு ஓர் இழுக்கு; அராபியர் மத்தியில் அவர்களுக்கு இருக்கும் கௌரவமான அந்தஸ்துக்கு ஒரு சவால்; அவர்களது பொருளாதார நடவடிக்கை களுக்கு ஒரு பின்னடைவு. ஆகவே எவரேனும் ஒருவர் யுத்தத்தி னின்றும் பின்வாங்குவாராயின் அவர் பெருத்த கண்டனங்களுக்குள் ளானார் -படையினருடன் அவர் வந்து இணைந்து கொள்ளும் வரை.

அவிசுவாசியரான குறைஷியரது படையில் ஆயிரம் பேர் இருந்த தாக ஆதாரபூர்வமான சான்றுகள் கூறுகின்றன. இப்ன்-இஸ்ஹாக், இஸ்னாத் ஏதும் இன்றி, இருநூறு குதிரை வீரர்களுடன் 950 படையினர் இருந்ததாகக் கூறுவார். அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக மேள தாளங்களுடன் பாடகர்கள் பலரும் சென்றனர். முஸ்லிம்களைக் கேவலம் செய்யும் பாடல்களை அவர்கள் பாடி மகிழ்ந்தனர்.

படையினரின் தேவைகளைப் பொறுத்து, குறைஷிய செல்வந்தர்கள் ஒன்பது அல்லது பத்து ஒட்டகைகளை அறுத்து இராணுவத்தினருக்கு உணவளித்து வந்ததாக இஸ்னாத்கள் ஏதும் இன்றி அல்-உமவி கூறு வார். வர்த்தகக் குழு தப்பித்துக் கொண்டது என அறிந்து கொண்ட அக்னஸ்-இப்ன்-ஷரீக்கின் ஆலோசனையின்படி பனூ ஸுஹ்ரா கோத்தி ரத்தார் மக்காவுக்குத் திரும்பி விட்டனர். ராபிஹ் பிரதேசத்தின் கிழக்கே அல்-ஜஹ்பாவில் இருந்த வேளையிலேயே அவர்கள் திரும்பினர்.

படையினருள் பெரும்பாலோர் பத்ர் பிரதேசம் வரையில் முன்னே றிச் சென்றனர். வர்த்தகக் குழு தப்பிச் சென்று விட்டது. எனவே அதனைக் காப்பாற்ற வேண்டும் என்ற தேவையேதும் இல்லை. இப்போது அவர்கள் வேண்டியதெல்லாம் இனிமேலும் தமது வர்த்தக மார்க்கத்துக்குத் தடையாக அமையாதிருக்கும் வகையில் முஸ்லிம் களைத் தண்டிப்பது; அராபியர் மத்தியில் குறைஷியரின் பலத்தையும் மேலாண்மையையும் பறைசாற்றி வைப்பது.

பத்ரின் தண்ணீர்த் துரவுகளுக்கு அண்மையில் குறைஷியரின் சேவ கர்கள் சிலர், முஸ்லிம்களால் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களிட மிருந்து நபிகளார் போதிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டார்கள்.

*படையினரின் எண்ணிக்கை, படைத்தலைவர்கள், படையின் அமைப்பு முதலியன தெரிந்து கொள்ளப்பெற்றன - அன்றாடம் உணவுக்கென அறுக்கப்படும் ஒட்டகங்களின் எண்ணிக்கையும் கூட. நபிகளார் கூறினார்கள்: 'அவர்கள் ஆயிரம் பேரளவினர். ஒரு பெண் ஒட்டகையும் அதன் குட்டியும் நூறு பேருக்குப் போதுமாகும்.'*

*வர்த்தகக்குழு தப்பிச் சென்று விட்டமை முஸ்லிம்களில் சிலருக்கு திருப்தி தருவதாக இல்லை. மேலும் யுத்தத்துக்குத் தயாரானவர்களாக இல்லாமையால் முஷ்ரிக் படையினரை எதிர்த்துப் போராடும் விருப்பும் அவர்களுள் இல்லை. இவர்களது நிலைமையைக் குர்ஆன் பின்வருமாறு விவரிக்கின்றது:*

''உம்முடைய இறைவன் உம்முடைய வீட்டை விட்டும், சத்தியத்தைக் கொண்டு உம்மை (பத்ருப் போருக்காக) வெளியாக்கிய நேரத்தில், நிச்சயமாக இறை நம்பிக்கையாளர்களுள் ஒரு பிரிவினரோ (அப்படி வெளியேறுவதை) வெறுக்கக் கூடியவர்களாக இருந்தனர். உண்மையைக் குறித்து, அது தெளிவான பின்பும் உம்மிடம் அவர்கள் தர்க்கம் செய்கின்றனர். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் மரணத்தின் பக்கம் அவர்கள் இழுத்துச் செல்லப்படுவது போன்று (தர்க்கம் செய்கின்றனர்). (எதிரிகளுடைய) இரண்டு கூட்டங்களில் ஒன்றை 'நிச்சயமாக அது உங்களுக்கு' என்று அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்த போது, நிச்சயமாக ஆயுதபாணி அல்லாத (கூட்டமான)து உங்களு(டைய சந்திப்பு)க்குக் கிடைக்க வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்கள். (ஆனால்) அல்லாஹ் தன்னுடைய (கட்டளையாகிய) வார்த்தைகளின் மூலம் உண்மையை, சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும் (ஓரிறை) நிராகரிப்பாளர்களின் வேரை அறுப்பதற்கும் நாடுகிறான்''. (அல்-அன்பால் 8:5-7)

*அகபாவில் இரண்டாவது வாக்குறுதியை அளித்த வேளை, தமக்குச் சொந்தமான பிரதேசத்தில் நபிகளாரைப் பாதுகாப்பதாகத்தான் அன்ஸார்கள் வாக்குறுதியளித்திருந்தனர். மதீனாவின் வெளியே அன்னாருடன் இணைந்து போராடுவதாக வாக்குறுதிகள் ஏதும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே பத்ருக்கு முன்னைய சிற்சிறு படையெடுப்புகள் எல்லாம் முஹாஜிரூன்களுக்கு மட்டுப்பட்டிருந்தன.*

*பத்ரில் முஹாஜிரூன்களுடன் அன்ஸார்களும் கலந்து கொண்டு, அன்ஸார்களே கூடிய தொகையினராகவும் இருந்தமையால், நபிகளார் தாம் எதிர் கொண்டுள்ள புதிய நிலைமை குறித்து அவர்கள் கருதுவ*

தென்ன எனக் கண்டுகொள்ள விழைந்தனர். இந்தக் கலந்துரையாடல் குறித்து ஸஹீஹ் இஸ்னாத் ஒன்றுடன் இப்ன் இஸ்ஹாக் கூறுவார்: குறைஷியர் தமது வர்த்தகக் குழுவைக் காப்பாற்றப் புறப்பட்டு வந்துள்ளனர் என்ற செய்தி நபிகளாரை எட்டியது. இதனை மக்களிடம் கூறி அவர்களது ஆலோசனையை அன்னார் வேண்டினார்கள். அபூ பக்ர், பின்னர் உமர் எழுந்து நின்று நன்றாகப் பேசினார்கள். பின்னர் அல்-மிக்தாத்-இப்ன் அம்ர் எழுந்து கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! இறைவன் உங்களை எங்கே போகச் சொல்கின்றானோ நீங்கள் அங்கே செல்லுங்கள். நாங்கள் உங்களுடனேயே வருவோம். இஸ்ரவேலின் புதல்வர்கள் மூஸாவுக்குக் கூறியது போல நாம் கூற மாட்டோம். 'நீரும் உமது இறைவனும் போய் யுத்தம் புரியுங்கள்; நாங்கள் வீட்டில் இருந்து கொள்வோம்.' நீங்களும் உங்கள் இறைவனும் யுத்தம் புரியுங்கள். நாங்களும் உங்களுடன் இணைந்து யுத்தம் புரிவோம். சத்தியத்தோடு உங்களை அனுப்பியவன் மீது ஆணையாக, நீங்கள் எங்களை பர்க்-அல்-கிமாத் நோக்கி அழைத்துச் சென்றாலும், நீங்கள் அதனை ஈட்டிக்கொள்ளும் வரை அதனைக் காத்து நிற்போருடன் நாங்களும் யுத்தம் செய்வோம்.'

அல்-மிக்தாதை நபிகளார் பாராட்டி அவருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். பின்னர் அண்ணலார் கூறினார்கள்: 'ஓ மக்களே! எனக்கு ஆலோசனை தாருங்கள்!'. அதன் மூலம் அன்னார் அன்ஸார்களையே கருதினர். ஏனெனில் அவர்களே பெரும்பான்மையினராக இருந்தனர். அத்துடன் அகபாவில் அவர்கள் வாக்குறுதி அளித்த வேளை, தமது எல்லைகளுக்குள் அன்னார் வந்து சேரும் வரை நபிகளாரின் பாதுகாப்புக்கு அவர்கள் உத்தரவாதம் இல்லை எனவும், அவர்களை அடைந்த பின்னர், தமது மனைவியரையும், பிள்ளைகளையும் பாதுகாப்பது போல அன்னவரைப் பாதுகாப்பர் எனவும் கூறியிருந்தனர். ஆகவே, மதீனாவில் எதிரிகள் தாக்குதல் நடாத்தினாலேயொழிய அன்னாரைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களுக்கு இல்லையென்பதால் அவர்களது எல்லைகளுக்கு அப்பால் சென்று எதிரியை எதிர்கொள்ளும் கடமைப் பாடும் அவர்களுக்கு இல்லையென்றாகிறது. நபிகளார் கூறியன கேட்டதும் ஸஅத்-இப்ன்-முஆத் கூறினார்: 'நீங்கள் எங்களைத் தான் கருதுகின்றீர்கள் போலத் தெரிகின்றது'. ஆம் என்றனர் நபிகளார். ஸஅத் கூறினார்: 'நாம் உம்மை விசுவாசிக்கின்றோம். நீங்கள் சத்தியத்தையே எமக்குக் கொண்டு வந்துள்ளீர்கள் என நாம் ஏற்றுக்கொள்கிறோம்; அதற்கு நாம் சாட்சியாகவும் இருக்கின்றோம். நீங்கள் கூறுவதைச் செவி மடுத்து அதன்படி நடந்துகொள்ள நாம் வாக்குறுதி அளித்துள்ளோம்.

எனவே நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள்; நாங்கள் உங்களுடனேயே வருவோம். இறைவன் மீது ஆணையாக, இந்தக் கடலைக் கடக்க வேண்டுமென நீங்கள் அதில் புகுந்தால், உங்களுடன் நாங்களும் புகுவோம். எங்களில் எவரேனும் பின் நிற்க மாட்டோம். நாளைய தினம் உங்களது எதிரியை எதிர்கொள்ள விரும்பாதவர்கள் அல்லர் நாம். நாங்கள் யுத்தத்தில் தேர்ச்சி பெற்றவர்கள். மோதல்களின் போது நம்பிக்கைக்குரியவர்கள். உங்களுக்கு மகிழ்வு தரக்கூடியவற்றைக் காட்டித்தர இறையோன் எம்மை அனுமதிக்கக்கூடும். அவனது ஆசியுடன் நீங்கள் எங்களை நடாத்திச் செல்லுங்கள்.' ஸஅத்தின் உற்சாகமான வார்த்தைகளினால் உளம் மகிழ்ந்த நபிகளார் கூறினார்கள்: 'உற்சாகமாக முன்னேறுங்கள்; இறைவன் எனக்கு இரண்டில் ஒன்றை வாக்களித்துள்ளான். எமது எதிரிகள் வீழ்ந்து கிடக்கின்றமையை என் கண் முன்னால் காண்பது போலத் தோற்றுகின்றது.'

இஸ்லாத்துக்காகத் தியாகங்கள் செய்யவும், யுத்த களத்தினுள் இறங்கவும் தயாரானவர்களாகத் தமது தோழர்கள் காட்டிய அடிபணிவையும், பராக்கிரமத்தையும் கண்ட நபிகளார் அவர்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினார்கள். வெள்ளை நிறக்கொடியொன்று முஸ்அப்-இப்ன்-உமைரிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டு கருநிறக் கொடிகள் அலீ-இப்ன்-அபூ தாலிப், ஸஅத்-இப்ன்-முஆத் ஆகியோருக்கு அளிக்கப்பட்டன. படையின் பின்புறப் பாதுகாப்பு அணியின் தலைமை கைஸ்-இப்ன்-அபூ ஸஃஸாஃஅஹ்வுக்கு அளிக்கப்பட்டது.

குறைஷ் படைப்பிரிவில் கருத்து வேறுபாடுகள் உருவாகின. சில முஸ்லிம்களும், முஷ்ரிகூன்களும் உறவினர்களாக இருந்தார்கள். இரு சாராரிலும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் நோக்குடன் உத்பா-இப்ன்-ரபீஆ, முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் புரிவதினின்றும் விலகித் திரும்பிச் செல்ல முனைந்தார். என்றாலும் யுத்தம் நடாத்தப்படவே வேண்டும் என்ற அபூ-ஜஹ்லின் எண்ணமே நிலைபெற்றது. முஸ்லிம்களின் தொகை குறித்து அறிந்துவர, முஷ்ரிகூன் ஓர் உளவாளியை அனுப்பி வைத்தனர்.

நபிகளாருக்கு எதிராக அபூ ஜஹ்ல் பிரார்த்தனை செய்தார்: 'எமது இறைவனே! இரண்டு சாராரிலும் யார் தமது உறவினர்க்கு இரக்கம் குன்றியவர்களாக இருக்கின்றார்களோ, நாம் அறியாத ஒன்றுக்கு எம்மைக் கொண்டு வந்திருக்கின்றார்களோ, நாளைய தினம் அவர்களை நீ அழித்து விடுவாயாக!' வெற்றிக்கான அவரது பிரார்த்தனையாக இதுவே அமைந்திருந்தமையைக் குர்ஆன் சித்தரிக்கின்றது:

''நீங்கள் இறுதித் தீர்ப்பைத் தேடினால் திட்டமாக அந்தத் தீர்ப்பு, உங்களுக்கு வந்துவிட்டது. எனவே நீங்கள் விலகிக் கொண்டால் அது உங்களுக்கு நன்மையாக இருக்கும். நீங்கள் மீண்டால் நாங் களும் மீளுவோம். உங்களுடைய கூட்டம் (எண்ணிக்கையில்) அது அதிகமாக இருந்தாலும் எப்பலனையும் உங்களுக்கு ஒருபோதும் அளிக்காது. நிச்சயமாக அல்லாஹ் இறை நம்பிக்கையாளர்களுடன் இருக்கின்றான்''. (அல்-அன்பால் 8:19)

*முஷ்ரிகூன் வருவதற்கு முன்னமேயே முஸ்லிம்கள் பத்ர் களத்தைப் பரிசீலித்துக் கொண்டனர். உர்வா வரை செல்லும் ஹஸன் இஸ்னாத் உடனான முர்ஸல் அறிவிப்பொன்றின்படி, அல்-ஹப்பாப்-இப்ன்-அல்-முன்திர், பத்ரின் கிணறுகளைத் தமது பின்னால் கொண்டு முன் செல்லும்படி நபிகளாருக்கு ஆலோசனை வழங்கினார். அவ்வாறு செய்வதனால் முஷ்ரிகூன் அக்கிணறுகளால் பயன்பெற இயலாது போகும். இந்த ஆலோசனையை நபிகளார் ஏற்றுக் கொண்டார்கள். பலம் குன்றியதோர் அறிவிப்பாகவே இது இருந்தாலும், குர்ஆனிய வாசகங்களும், ஸீறாவின் நிகழ்வுகளும் 'ஷூறா' எனும் கலந்தாலோசித்தலை நிறுவி வைத்துள்ளன.*

*நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், குர்ஆனிய அறிவுறுத்தல்கள் இல்லாத நிலைமைகளில் தமது தோழர்களுடன் ஆலோசனைகள் நடாத்தியுள்ளார்கள். சாதாரண பிரச்சினைகளின் போது, தமது தோழர் கள் அவை குறித்துச் சிந்திக்க வேண்டும் என்பதற்காக அண்ணலார் ஷூறாவை மேற்கொண்டுள்ளார்கள். இதன் மூலம் அவர்கள் பொறுப் புணர்வு கொண்டவர்களாக அமையலாம். மேலும், ஷூறா சம்பந்தப் பட்ட குர்ஆனிய அறிவுறுத்தலைப் பிரயோகம் செய்வதோடு, உம்மா அதனைப் பயன்படுத்தத் தூண்டுதல் செய்வதாகவும் இது அமைந்தது.*

*ஸஹீஹ் அறிவிப்பொன்றின்படி ரமழானின் பதினேழாம் இரவை முஷ்ரிக் இராணுவத்தைத் தம் முன்னால் கொண்டவர்களாக முஸ் லிம்கள் எவ்வாறு கழித்தார்கள் என்பதனை விவரிக்கின்றார் அலீ:*

*''பத்ருடைய தினத்தன்று நபிகளாரைத் தவிர நாம் அனைவரும் உறக்கத்தில் இருந்தோம். அன்னார் அன்றைய இரா முழுவதும் மரம் ஒன்றினை முன்னிறுத்தித் தொழுதவர்களாக இறைஞ்சுதலில் ஈடுபட்டி ருந்தனர். இரவில் சிறிதளவு மழை பெய்தது. நாம் அனைவரும் அதி னின்றும் ஒதுங்குவதற்காக மரங்களையும் தோல் துண்டுகளையும் நாடினோம். அன்றைய இரவு முழுவதும் அல்லாஹ்வின் தூதர் அவர்கள்*

*இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தார்கள்: ''ஓ என் இறைவா! இந்தக்கூட்டத்தார் இன்று அழிந்தால் இனிமேல் நீ வணங்கப்படமாட்டாய்!''. விடியும் வேளை அன்னார் அழைத்தார்கள்: ''அல்லாஹ்வின் அடியார்களே! தொழுகைக்காக வாருங்கள்!'' மரங்களின் கீழிருந்தும் தோல் துண்டுகளின் கீழிருந்தும் மக்கள் வந்து சேர்ந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் தொழுகையை நடாத்தினார்கள். பின்னர் யுத்தம் புரியும்படி எம்மைத் தூண்டினார்கள்''.*

*படையினரை யுத்தத்துக்குத் தயார்படுத்துவதும், வீரர்களுக்குரிய இடங்களை நிர்ணயிப்பதும் ஆன கருமங்கள் அன்றைய இரவிலேயே பூர்த்தி செய்யப்பட்டன எனப் பலவீனமான ஓர் அறிவிப்பு காணப் படுகின்றது. பத்ர் களத்தில் மழை பொழிந்தமையை உறுதிப்படுத்து கின்றது குர்ஆன்:*

(அல்லாஹ்வாகிய) அவன் புறத்திலிருந்து உங்களுக்கு அமைதி அளிப்பதற்காக சிறு தூக்கத்தை உங்களைப் பொதிந்து கொள்ளு மாறு அவன் ஏற்படுத்திய நேரத்தில், வானிலிருந்து மழையை உங்களுக்கு அவன் இறக்கி வைத்தான். அதைக் கொண்டு உங்களை அவன் தூய்மைப்படுத்துவதற்காகவும், ஷைத்தானுடைய அசுத் தத்தை (ஊசாட்டத்தை) உங்களை விட்டும் நீக்குவதற்காகவும், உங்களுடைய இருதயங்களை உறுதிப்படுத்தி, அதைக்கொண்டு (உங்களுடைய) பாதங்களை நிலைப்படுத்துவதற்காகவும் (மழையை இறக்கினான்)''. (அல்-அன்பால் 8:11)

*தமது படையினர் ஓய்வு பெற வேண்டுமென நபிகளார் விரும்பி யிருந்தனர் போலத் தெரிகின்றது. ஆக, அன்னவரே அவர்களை இரவு முழுவதும் பாதுகாத்திருந்தனர்.*

*ரமழானின் பதினேழாவது தினத்துக் காலைவேளை, நபிகளார் படையினரை யுத்தத்துக்கென ஒழுங்குபடுத்தினார்கள். தாக்குதல் செய்து திரும்பிவிடும் வழக்கமான அராபிய முறைகளுக்குப் பதிலாக நபிகளார் மேற்கொண்ட ஒழுங்குமுறை முற்றிலும் புதியதொன்றாக இருந்தது.*

*பத்ரிலும் முஷ்ரிகூன் பண்டைய அராபிய முறையையே பின்பற்றி னர். நபிகளாரின் வரிசைக்கிரம முறையினால் யுத்தத்தில் பாதிப்புறு பவர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்துக் கொள்ள முடிந்தது. அத்துடன் வீரர்களது தொகைகளில் முஷ்ரிகூன்களுடனான சமமின்மையைச் சமாளிக்கவும் இது துணை செய்தது. படையினர்*

*எப்போதும் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க முடிந்தமை, இதில் கிட்டியதொரு நன்மை. மேலும் படையின் பின் வரிசையை அன்னார் எப்போதும் காத்துக்கொள்ள முடிந்தது. எதிர்பார்த்திராத நிலைமைகளைச் சமாளிக்கவென அன்னார் பின் வரிசைகளில் அவசரப் படைப் பிரிவினரை வைத்திருந்தனர்.*

*நபிகளாருக்கென ஒரு தற்காலிகப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. ஸஅத்-இப்ன்-முஆதின் ஆலோசனையின் பேரில் அமைந்த அந்தப் பந்தலிலிருந்து, நபிகளார் யுத்தத்தை நெறிப்படுத்த முடிந்தது. அதே வேளை அன்னாரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பெற்றது.*

*முஸ்லிம்களை நோக்கி முஷ்ரிகூன் வந்த வேளை நபிகளார் அறிவுறுத்தினார்கள்: ''நான் கூறும் வரை உங்களில் எவரும் தாக்குதல் செய்யக்கூடாது''. முஷ்ரிகூன் மிகவும் நெருங்கி வந்ததும் நபிகளார் குர்ஆனிலிருந்தும் கூறினார்கள்:*

> ''இன்னும் உங்களுடைய இறைவனின் நின்றுமுள்ள மன்னிப்பின் பக்கமும், சுவர்க்கத்தின் பக்கமும் நீங்கள் விரைந்து செல்லுங்கள்; அதன் விசாலமாகிறது வானங்களும் பூமியுமாகும். பயபக்தியாளர்களுக்காக அது தயார் செய்யப்பட்டுள்ளது''. (ஆல இம்ரான் 3:133)

*இதனைச் செவியுற்ற உமைர்-இப்ன்-அல் ஹம்மாம் கேட்டார்: 'அல்லாஹ்வின் தூதரே! வானங்களும் பூமியும் அளவு விசாலமான தோட்டமா?' 'ஆம்' என்றனர் நபிகளார். உமைர் கூறினார்: 'அருமை! அருமை!'. 'நீர் ஏன் அவ்வாறு கூறுகின்றீர்' என வினவினர் நபிகளார். 'அல்லாஹ்வின் தூதரே! அந்த தோட்டத்தின் மக்களுள் ஒருவராக அமைய நான் விரும்பினேன் என்பது தவிர வேறு எதுவும் இல்லை' என்றார் உமைர். நபிகளார் கூறினார்கள்: 'நீர் அந்த மக்களுள் ஆவீர்'. தனது அம்பறாத் தூணியிலிருந்து சில பேரீச்சம் பழங்களை எடுத்து உண்ணத் தொடங்கிய உமைர், 'இந்த பேரீச்சம் பழங்களை உண்டு முடியும் வரை நான் உயிரோடிருந்தால் அது நிச்சயமாக நீண்டதொரு வாழ்வாக இருக்கும்' எனக் கூறியவராக கையிலிருந்த மீதிப் பழங்களை வீசியெறிந்து விட்டு களம் புகுந்து தான் கொல்லப்படும் வரை போராடினார்.*

*பத்ருடைய தினமன்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இடையறாது இறைஞ்சல்கள் செய்து வந்தனர் எனக் கூறுவார் உமர்-இப்ன்-அல்-கத்தாப்: பத்ருடைய தினமன்று நபிகளார் முஷ்ரிகூன்களை நோக்கினார்கள். அவர்கள் ஆயிரம் பேரளவினர். அன்னாரது தோழர்களோ*

*வெறும் 319 பேர். நபிகளார் கிப்லாவை நோக்கிக் கைகளை நீட்டியவர்களாகப் பிரார்த்தனை புரிந்தார்கள்: ''நீ எனக்கு அளித்த வாக்கை நிறைவேற்றி வைப்பாயாக! எனக்குத் தந்த வாக்கை அருள் செய்வாயாக! இறைவா! இஸ்லாத்தின் இந்தக் குழுவினரை நீ அழித்துவிடுவாயாயின் இந்தப் பூமியில் உன்னை வணங்க எவரும் இரார்.'' கிப்லாவை முன்னோக்கிக் கரங்கள் நீட்டி அன்னார் வேண்டுதல்கள் விடுக்க, தோள்களிலிருந்தும் அன்னவரது போர்வை வீழ்ந்து விட்டது. அபூபக்ர் வந்து போர்வையை எடுத்து அன்னாரின் தோள்களின் மீது போட்டார். அல்லாஹ்வின் தூதரைப் பின்னாலிருந்து அணைத்தவராக அபூபக்ர் கூறினார்: 'ஓ அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் உங்கள் இறைவனை வேண்டிய அளவு இறைஞ்சி விட்டீர்கள். உங்களுக்கு அளித்த வாக்கை அவன் நிறைவேற்றுவான்'.*

*அவ்வேளை அருளப்பெற்ற இறைவாசகங்கள் கூறின:*

> உங்களுடைய இறைவனிடத்தில் நீங்கள் பாதுகாவல் தேடிய பொழுது, 'தொடர்ந்து (அணி வகுத்து முன்னே) வரும்படியான ஆயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு நிச்சயமாக நான் உதவி செய்பவனாக இருக்கின்றேன்' என உங்களுக்கு அவன் பதிலளித்தான். (அல்-அன்பால் 8:9)

*இவ்வாறு தான் வானவர்கள் கொண்டு அவர்கள் பலப்படுத்தப் பட்டனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பந்தலில் இருந்து வெளிவந்து கூறினார்கள்:*

> ''(இக்)கூட்டத்தினர் விரைவில் தோற்கடிக்கப்படுவார்கள்; இவர்கள் புறமுதுகிட்டு ஓடுவார்கள்''. (அல்-கமர் 54:45)

*நபிகளார் தாமும் யுத்தத்தில் நேரடியாகப் பங்குபற்றினார்கள். அலீ கூறினார்: ''பத்ருடைய தினம், நாங்கள் நபிகளாரின் பின்னால் இருந்தோம். எங்களுள் அன்னவர் தான் எதிரியை மிகவும் அண்மியவராக இருந்தவர். அன்றைய தினம் அன்னாரே மிகப்பலம் வாய்ந்தவராகவும் இருந்தார்''.*

*தனியார் மோதலுடன் தான் யுத்தம் ஆரம்பமாயிற்று. உத்பா-இப்ன்-ரபீஆ, அவரது மகன் அல்-வலீத், அவரது சகோதரன் ஷைபா ஆகிய மூவரும் முன்வந்து சவால் விடுத்து நின்றனர். அவர்களுடன் மோத முன் வந்தனர் அன்ஸார்களின் சில இளைஞர்கள். அன்ஸார்களுடன் மோத மறுத்த முஷ்ரிகூன், தமது மக்களாக அமைந்தோரை முன்வரும்படி அழைத்தனர். ஹம்ஸா, அலீ, உபைதா-இப்ன்-அல்-*

ஹாரிஸ் ஆகிய மூவரையும் முன் செல்லும்படி பணித்தனர் நபிகளார். உத்பா, ஹம்ஸாவால் கொல்லப்பட்டார். ஷைபாவைக் கொன்றார் அலீ. வலீதை எதிர்த்து நின்றவர் உபைதா. இருவருமே காயங்களுக் குள்ளாகியிருந்தனர். உபைதாவுக்குத் துணையாக வந்த அலீயும் ஹம்ஸாவும் அல்-வலீதைக் கொன்று, உபைதாவை முஸ்லிம் பாசறைக் குத் தூக்கிச் சென்றனர்.

தனியார் மோதல் பாதகமாக அமையவே, குறைஷியர் பொதுவான தாக்குதலுக்குத் தயாராயினர். முஷ்ரிகூன் தம்மை நெருங்கி வரும் போது, அவர்களை அம்புகள் எறிந்து தாக்கும்படி நபிகளார் பணித் தார்கள்: 'அவர்கள் உங்களை நெருங்கி வரும்போது அவர்களைத் தாக்குங்கள். என்றாலும் உங்களது அம்புகளைச் சிக்கனப்படுத்திக் கொள்ளுங்கள்'. அல்லாஹ்வின் தூதர் எதிரிகளை நோக்கி சிறிய கற்களை எறிந்தமையை உர்வாவும், கதாதாவும் அறிவிப்பர். இதனை உறுதி செய்கின்றது குர்ஆன்:

> (மண்ணை அவர்களின் மீது) நீர் எறிந்த போது (அதை நபியே!) நீர் எறியவில்லை; எனினும் அல்லாஹ்தான் எறிந்தான். (இறை நிராகரிப்பாளர்களை அடக்குவதற்கும்) நம்பிக்கையாளர்களுக்குத் தன் புறத்திலிருந்து (வெகுமதி வழங்குவதற்காக) அழகான சோத னையாக சோதிப்பதற்காக(வும் இவ்வாறு செய்தான்). நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறு கிறவன்; முற்றும் அறிந்தவன். (அல்-அன்பால் 8:17)

இரு படையினரதும் போராட்டத்தின் போது முஷ்ரிக் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர். அவர்களுள் ஒருவர் அம்ர்-இப்ன்-ஹிஷாம் (அபூ ஜஹ்ல்). இவரையே நபிகளார், 'நமது காலத்தின் பிர்அவ்ன்' எனக் குறிப்பிட்டிருந்தனர். இரு இளைஞர்களால் அவர் கொல்லப் பட்டார். முஆத்-இப்ன்-அம்ர்-இப்ன்-அல் ஜமூஉ, முஆத்-இப்ன்-அப்ரா ஆகிய அவ்விருவரும் அப்த்-அர்-ரஹ்மான்-இப்ன்-அவ்ப் கூறியது வரை, தம்மால் கொல்லப்பட்டவர் யார் என அறிந்திருக்கவில்லை. நபிகளாரை நிந்தனை செய்தவன் என்ற காரணத்தினால் அபூ ஜஹ்லைக் கொல்லத் தாம் எண்ணியிருந்ததாகக் கூறினர் அந்த இளைஞர்கள். அவர்கள் இழைத்த காயங்களைத் தொடர்ந்து அபூ ஜஹ்லைக் கொன்று போட்டார் இப்ன் மஸ்ஊத்.

கொல்லப்பட்ட மற்றொரு முஷ்ரிக் தலைவர் உமையா-இப்ன்-கலாப். அவரையும், அவரது மகன் அலீயையும் யுத்தக் கைதி

*களாய்ப் பிடித்திருந்தார் அப்த்-அல்-ரஹ்மான்-இப்ன்-அவ்ப். மக்காவில் தன்னைச் சொல்லொணா வதைகளுக்கெல்லாம் ஆளாக்கிய உமை யாவை அடையாளம் கண்டு கொண்ட பிலால் கூறினார்: 'மாபெரும் இறைத் துரோகி உமையா-இப்ன்-கலாப். அவன் வாழ்வதானால் நான் உயிர் வாழாதிருக்க வேண்டும்.' அவர் அன்ஸார்களை உதவிக்கு அழைத்தார். அவர்களது துணையுடன் உமையாவையும், அவரது மகன் அலீயையும் கொன்று போட்டார் பிலால்.*

*பத்ரில் முஸ்லிம் படையினருக்கு ஆதரவாக இறைவன் வானவர் களை அனுப்பி வைத்தமை பற்றிய ஸஹீஹ் அறிவிப்புகள் இருக்கின் றன. குர்ஆனும் அதனை உறுதிப்படுத்துகின்றது:*

நீங்கள் மிகவும் சக்தி குறைந்தவர்களாக இருந்த நிலையில் பத்(ருப் போ)ரில் அல்லாஹ் உங்களுக்குத் திட்டமாக உதவி செய்தான். ஆகையால் நீங்கள் நன்றி செலுத்தியவர்களாக ஆவதற்கு அல் லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். 'வானிலிருந்து இறக்கி வைக் கப்பட்ட மூவாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுடைய இறைவன் உங்களுக்கு உதவி செய்தது உங்களுக்குப் போதாதா?' என்று இறை நம்பிக்கையாளர்களுக்கு நீர் கூறியதை(யும் நினைவு கூர்வீராக!) ஆம். நீங்கள் பொறுமையாகவும், அல்லாஹ்வுக்கு (மாறு செய்யாது) அஞ்சியும் நடந்து கொண்டால் அ(ப்பகை)வர்கள் உங்களிடம் இக்கணமே வந்தாலும் (போர்) அடையாளமுள்ள ஐயாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுடைய இறைவன் உங்களுக்கு உதவி செய்வான். உங்களுக்கு ஒரு நற்செய்தியாக வும், இதன் மூலம் உங்களுடைய இதயங்கள் அமைதி பெறுவதற் காகவுமேயன்றி (வேறு எதற்கும்) அல்லாஹ் இதனை ஆக்க வில்லை. யாவற்றையும் மிகைத்தவனும், ஞானமுள்ளவனும் ஆகிய அல்லாஹ்வின் புறத்திலிருந்தே தவிர உதவி இல்லை. (ஆல-இம்ரான் 3:123-6)

உங்களுடைய இறைவனிடத்தில் நீங்கள் பாதுகாவல் தேடிய பொழுது 'தொடர்ந்து (அணி வகுத்து முன்னே) வரும்படியான ஆயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு நிச்சயமாக நான் உதவி செய்பவனாக இருக்கின்றேன்' என்று உங்களுக்கு அவன் பதிலளித்தான். (உங்களுக்கு) ஒரு நற்செய்தியாகவும் இதைக் கொண்டு உங்களுடைய உள்ளங்கள் அமைதி பெறுவதற்காகவுமே யன்றி அல்லாஹ் இதை ஆக்கவில்லை. (உங்களுக்குக் கிடைத் துள்ள இந்த) உதவி அல்லாஹ்வின் புறத்தில் இருந்தே தவிர,

இல்லை; நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாகவும், ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான். (அல்-அன்பால் 8:9-10)

''(நபியே!) உம் இறைவன் வானவர்களை நோக்கி, 'நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கின்றேன். ஆகவே நீங்கள் இறை நம்பிக் கையாளர்களை உறுதிப்படுத்துங்கள். நிராகரிப்போரின் இருதயங் களில் விரைவில் நான் திகிலைப் போடுவேன்; நீங்கள் அவர்கள் பிடரிகளின் மீது வெட்டுங்கள்; அவர்களிலிருந்து விரல்கள் ஒவ் வொன்றையும் (ஆயதங்களைப் பிடிக்க முடியாதவாறு) வெட்டி விடுங்கள்' என்று வஹி மூலம் அறிவித்ததை நினைவுகூறும்''. (அல்-அன்பால் 8:12)

*இது நாம் 'இள்ரிபூ' (நீங்கள் வெட்டுங்கள்) என்பது வானவர்களை விளித்தது எனக் கொள்வதாயின் ஏற்புடைத்தாகும். என்றாலும் அல்-தபரீ, இது விசுவாசியரைக் குறிப்பது என்றும் எவ்வாறு தாக்க வேண் டும் என இறைவன் அவர்களுக்கு உணர்த்துகின்றான் என்றும் கூறு வார். இதனோடு இயைந்த ஹதீஸ் வருமாறு:*

*இப்ன்-அப்பாஸ் கூறினார்: அன்றைய தினம் முஸ்லிம் ஒருவர், அவிசுவாசியர் ஒருவரை துரத்திச் சென்ற வேளை சாட்டை ஒலி ஒன்றினைச் செவிமடுத்தார். அத்துடன் சவாரி செய்தவர் 'ஹைஸூம்! முன்னே செல்!' (ஹைஸூம் - வானவரது குதிரையின் பெயர்) எனக் கூறினார். தான் துரத்திச் சென்ற அவிசுவாசி நிலத்தில் வீழ்ந்து கிடந்தமையைக் கண்டார் அந்த முஸ்லிம். அவிசுவாசியின் நாசியில் காயம்பட்ட தழும்பு தென்பட்டது. முகம், சாட்டையினால் விளாசப் பட்டது போலத் திருகி, பச்சை நிறத்ததாக மாறியிருந்தது. நபிகளா ரிடம் வந்த ஓர் அன்ஸார் இந்த நிகழ்வைக் கூறினார். அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்: 'நீர் உண்மையையே கூறினீர். இதுதான் விண்ண கத்திலிருந்து வந்த உதவி'.*

*அன்ஸார்களுள் ஒருவர் அப்பாஸ்-இப்ன்-அல் முத்தலிபைச் சிறைப் பிடித்திருந்தார். அல்-அப்பாஸ் கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! இறைவன் மீது ஆணையாக, இந்தமனிதன் என்னைக் கைப்பற்ற வில்லை. வழுக்கையும், கவர்ச்சிகரமான முகமும் கொண்டு, இரட்டை நிறக் குதிரையொன்றில் சவாரி செய்த ஒரு மனிதன் தான் என்னைக் கைப்பற்றியவர். அவரை இங்கே என்னால் காண முடியவில்லை'. அந்த அன்ஸாரி கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! நானே அவரைக் கைப்பற்றினேன்'. நபிகளார் கூறினார்கள்: 'அமைதியாக இரும். சிறப்பு மிக்கதொரு வானவர் மூலம் இறைவன் உம்மைப் பலப்படுத்தினான்'.*

*அல்-உமவியின் மகாஸீயில் ஹஸன் இஸ்னாதுடன் ஒரு ஹதீஸ் பதிவாகியுள்ளது:*

*நபிகளார் தமது பந்தலில் நித்திரைக்குள்ளானார்கள். எழுந்ததும் அன்னார் கூறினார்கள்: ''உற்சாகமாக இரும், ஓ அபூபக்ர்! இறைவனின் உதவி உங்களுக்கு வந்துவிட்டது. இதோ ஜிப்ரீல்! தலைப்பாகை அணிந்து, மேகங்களுக்கூடாகத் தனது குதிரையின் கடிவாளத்தைத் தாங்கியவராக வருகின்றார். இறைவனின் உதவியும் படைப்பலமும் உங்களுக்கு வந்துவிட்டன''.*

*ஸஹீஹ் புகாரியில் மேற்காணும் ஹதீஸ் பதியப்பட்டுள்ளது:*

*நபிகளாரிடம் வந்த ஜிப்ரீல் வினவினார்: 'உங்கள் மத்தியில் பத்ருடைய மக்களை எவ்வாறு மதிப்பிடுகின்றீர்கள்?' நபிகளார் கூறினார்கள்: 'முஸ்லிம்களுள் சிறந்தவர்கள்'. ஜிப்ரீல் கூறினார்: 'அவ்வாறே பத்ரில் உதவிய வானவர்களையும் நாம் கருதுகிறோம்.'*

*பத்ர் யுத்தத்தில் வானவர்கள் கலந்து கொண்டமை குறித்த ஸஹீஹான ஹதீஸ்கள் இவை. இறைவனின் கட்டளைப்படி ஜிப்ரீல் மாத்திரமே முஷ்ரிகூன்களை அழித்திருக்கலாம். இருந்தும் பெருந்தொகையான வானவர்கள் அனுப்பப்பட்டதன் ஞானத்தை விளக்குகின்றார் அல்-ஸுபுகீ:*

*'இதற்குக் காரணம், யுத்தம் நபிகளாராலும் அன்னாரது தோழர்களாலுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். வானவர்கள், முஸ்லிம்களுக்கு உதவி செய்ய மட்டுமே, ஒரு துணைப்படைப் பிரிவாகவே, தனது படைப்புகளுக்கு அல்லாஹ் விதித்துள்ள நியமங்களுக்கு இயையவே அனுப்பப்பட்டனர். அனைத்துக் கருமங்களிலும் பின் நிற்கும் சக்தி இறைவனே. அவனே நன்கறிவான்'.*

*முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் சிலர், பத்ர் யுத்தத்தில் வானவரின் பங்கு பற்றுதல் குறித்து எழுதுவதைத் தவிர்ந்து கொள்ள முனைகின்றார்கள். லோகாயுத சிந்தனையின் தாக்கத்தின் முன்னால் காணும் தோல்வியின் அடையாளம் இது. பிரத்தியட்ச சாத்தியப்பாடான சம்பவங்களே அங்கு அங்கீகாரம் பெறுகின்றன. முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதான விசுவாசமோ, வானவர்கள் மீதான நம்பிக்கையை விழைந்து நிற்கின்றது.*

*முஷ்ரிகூன் வீழத் தொடங்கினார்கள். அவர்களுள் 70 பேர் கொல்லப்பட்டார்கள்; 70 பேர் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். யுத்தத்துக்கு*

முன்னமேயே நபிகளார் தம் தோழர்களிடம் எதிரிகளுள் சிலரது பெயர்களையும் அவர்கள் வீழும் இடங்களையும் குறிப்பிட்டுக் கூறி யிருந்தனர். அவ்வவ்விடங்களிலேயே அவர்கள் வீழ்ந்திருந்தனர். இறுதியாக முஷ்ரிகூன் ஏராளமான யுத்தப் பொருட்களை பத்ர் களத்தில் கைவிட்டுத் தப்பிச்சென்றனர்.

மரித்து விட்ட முஷ்ரிகூன், பத்ரின் சில கிணறுகளினுள் வீசப்பட வேண்டும் எனப் பணித்தனர் நபிகளார். மூன்று தினங்கள் பத்ரில் தரித்திருந்த அன்னார், முஸ்லிம் உயிர்த் தியாகிகளை அங்கேயே நல்லடக்கம் செய்தனர். பதினான்கு உயிர்த்தியாகிகளைக் குறிப்பிடு கின்றன மூலாதாரங்கள். இப்ன்-ஹஜர், தனது இஸாபாவில் மேலும் இரண்டு பெயர்களை அளிப்பார். உயிர்த்தியாகிகள் மீது ஜனாஸாத் தொழுகை நடாத்தப்பட்டதாக ஆதாரங்கள் இல்லை. ஷுஹதாக்களின் அடக்கத்தின் போது தொழுகை நடாத்தாமல் இருப்பதே ஸுன்னா. எந்த ஒரு தியாகியின் உடலும் மதீனாவில் அடக்கம் செய்யப்படு வதற்காக பத்ரிலிருந்தும் அகற்றப்படவில்லை.

பத்ரின் மூன்றாம் நாள், ஒரு கிணற்றுள் எறியப்பட்டிருந்த குறைஷித் தலைவர்கள் 24 பேரின் உடலங்களுக்கு மேலாக நின்றிருந்த அல் லாஹ்வின் தூதர், அவர்கள் ஒவ்வொருவரையும் அவ்வவர்களது தந்தையரது நாமங்களையும் இணைத்து விளித்தவர்களாகக் கூறினார் கள்: 'இறைவனையும் அவனது தூதரையும் இவ்வாறு அடிபணிந்ததில் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா? நிச்சயமாக எமது இறைவனின் வாக்குகள் உண்மையாகவே அமைகின்றன என நாம் கண்டு கொண் டோம். உங்களது இறைவனது வாக்கும் மெய்யானதே என நீங்கள் கண்டு கொண்டீர்களா?' அப்போது உமர் கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! உயிர் பிரிந்து விட்ட சடலங்களுடன் ஏன் பேசுகின்றீர்கள்?' நபிகளார் கூறினார்கள்: 'முஹம்மதின் ஆத்மா யாருடைய கரங்களில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, அவர்கள் செவிமடுப்பதை விட நன்றாக நீர் செவிமடுக்கவில்லை'.

கதாதா கூறினார்: 'இறைவன் அவர்களை மீளவும் உயிர்ப்பித்தான். அதன் மூலம் அல்லாஹ்வின் தூதரது கண்டன, அவமான, கேவலப் படுத்தும் வார்த்தைகளைச் செவிமடுத்துக் கவலையும் வியாகூலமும் அடையச் செய்தான்'.

பத்ரின் பின்னர் நபிகளார் அபூஸுஃப்யானின் வர்த்தகக் குழுவைத் தொடர்ந்து செல்லவில்லை. எதிரிகளின் இரண்டில் ஒரு குழுவினரை

இறைவன் வாக்களித்திருந்தான். முஷ்ரிக் இராணுவத்தின் மீதான வெற்றியை அளித்ததன் மூலம் இறைவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டான்.

தமது மக்களால் புறக்கணிக்கப்பட்டு விடுவோம் என அஞ்சியவர்களாய், மனதில் விருப்பு ஏதும் இல்லாமலேயே பத்ர் நோக்கிச் சென்ற சில முஷ்ரிகூன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனப் பணித்திருந்தனர் நபிகளார். மக்காவில் இருந்த வேளை அவர்கள் முஸ்லிம்களுக்கு உதவி ஒத்தாசை புரிந்துள்ளனர். அவர்களுள் பின் வருவோரும் இருந்தனர். அப்பாஸ்-இப்ன்-அல்-முத்தலிப், அபூ-பக்தரீ-இப்ன்-ஹிஷாம். அவர்கள் சிறைப்பிடிக்கப்படுதலை அனுமதித்த நபிகளார், அவர்கள் கொல்லப்படுதலை அங்கீகரிக்கவில்லை. அல்-அப்பாஸ் சிறைப்பிடிக்கப்பட்டார். அபூ-அல்-பக்தரீயோ, போராட வேண்டுமென வற்புறுத்தி நின்றதனால் கொலையுண்டார்.

சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது? என அபூபக்ர், உமர் ஆகியோரிடம் ஆலோசனை கேட்டனர் நபிகளார். ஈட்டுப்பணம் பெற்று அவர்களை விடுதலை செய்து விடலாம் என்றார் அபூபக்ர்: 'குப்பார்க்கு எதிராக இந்தப் பணம் எம்மைப் பலம் பெறச் செய்யும்; அவர்களை அல்லாஹ் இஸ்லாத்தின் பால் வழிநடாத்தவும் கூடும்'. அவர்களைக் கொன்று விட வேண்டும் என்றார் உமர்: 'குப்ரின் தலைவர்கள் இவர்கள்'. நபிகளார், ஈட்டுப் பணம் பெற்று சிறைக் கைதிகளை விடுதலை செய்து விடும் அபூபக்ரின் கருத்து உசிதமானதெனக் கொண்டனர். என்றாலும் கூட, உமரின் ஆலோசனைக்குச் சார்பாக குர்ஆன் வாசகங்கள் அருளப்பெற்றன:

''(விஷமங்கள் அடங்க) பூமியில் இரத்தத்தை ஓட்டாத வரையில் (விரோதிகளை உயிருடன்) சிறைப்பிடிப்பது எந்த நபிக்கும் தகுதியில்லை; உலகத்தின் (சொற்ப) நன்மையை நீங்கள் விரும்புகின்றீர்கள். அல்லாஹ்வோ (உங்களுக்கு நிலையான) மறுமையை விரும்புகின்றான்; அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன்; ஞானமுடையவன். அல்லாஹ்விடம் (உங்களுடைய மன்னிப்பு) ஏற்கனவே எழுதப்படாமலிருந்தால் நீங்கள் (போர்க்கைதிகளிடம் பத்ரில் ஈட்டுப்பணத்தை) எடுத்துக் கொண்டதன் காரணமாக உங்களை ஒரு பெரிய வேதனை பிடித்திருக்கும். எனவே நீங்கள் வெற்றிப் பொருட்களாக (போரில்) பெற்றதிலிருந்து அனுமதிக்கப்பட்டதாக, தூய்மை யானதாகக் கருதிப் புசியுங்கள்''. (அல்-அன்பால் 8:67-9)

இந்த ஆயா குப்ரின் தலைவர்களைக் கொன்று விடுவதற்குப் பதிலாக, ஈட்டுப்பணம் பெற்றுக் கொள்வது உசிதம் எனக் கொண்ட மையைக் கண்டித்தாலும், அவ்வாறு பெற்றுக்கொண்டன அனுமதிக் கப்பட்டவையே எனக் கூறின. இதுவே இஸ்லாத்தின் ஆரம்பகால நியதி. பின்னர், தேர்ந்து கொள்ளும் உரிமையைத் தலைவர் ஈட்டிக் கொண்டார். அவர் யுத்தக் கைதிகளைக் கொன்று விடலாம்; ஈட்டுப் பணம் பெற்று அவர்களை விடுவிக்கலாம்; ஈட்டுப்பணம் பெறாம லேயே விடுவிக்கவும் கூடும். பெண்களும், குழந்தைகளும் கொல்லப் படுவது அனுமதிக்கப்படவில்லை.

கைதிகளுக்கான ஈட்டுப்பணம் பல்தரத்ததாயிருந்தது. செல்வந்தர்கள் 4000 திர்ஹம் அளவு செலுத்தினர். நபிகளாரின் மகள் ஸைனப், தனது கணவர் அபூ அல்-ஆஸ்-இப்ன்-அல் ரபீஆவின் ஈட்டுத் தொகையாக ஓர் அட்டிகையை அனுப்பி வைத்தார். அபூ-அல்-ஆஸை விடுவித்து விட்ட ஸஹாபா, நபிகளாருக்குச் செய்யும் கௌரவமாக அட்டிகை யைத் திருப்பிக் கொடுத்தார்கள். யாரேனும் ஒரு கைதி ஈட்டுப்பணம் செலுத்த இயலாதவராக இருந்தால் அவர் அன்ஸார்களின் குழந்தை களுக்கு எழுத்து கற்பிக்க வேண்டப்பட்டார். அதுவே அவரது ஈட்டுப் பணமாகக் கருதப்பட்டது.

கைதிகளிடமிருந்து ஈட்டுப்பணம் பெறுவதுதான் முஸ்லிம்களின் நோக்கமாக இருக்கவில்லை. அவர்களது மனோ நிலையைச் சிதைப் பது தான் நோக்கம். நபிகளார் கூறினார்கள்: ‘‘முத்இம்-இப்ன்-அதீ உயிருடன் இருந்து, ஆன்மா இழந்த இந்த மக்களுக்காக என்னுடன் பேசியிருந்தால் நிச்சயமாக அவர்களை (ஈட்டுப்பணம் ஏதும் இன்றியே) அவரிடம் ஒப்படைத்திருப்பேன்’’.

அல்-அப்பாஸ், நபிகளாரின் பெரிய தந்தையார் என்பதனாலும், அவருடைய பாட்டியார் தம்மைச் சார்ந்தவர் என்பதனாலும் அவரை ஈட்டுப்பணம் ஏதுமின்றி விடுதலை செய்து விட விழைந்தனர் அன் ஸார். ‘ஒரு திர்ஹம் குறைத்துக்கூட அவரை விட்டு விடாதீர்கள்’ என்றனர் நபிகளார். அல்லாஹ்வின் தூதரது மிக நெருங்கிய உறவின ருக்குக் கூட இந்த விவகாரத்தில் சலுகைகள் காட்டப்படவில்லை. அல்லாஹ்வினதும், அவனது தூதரினதும் தீர்ப்புகளின் முன்னால் அனைவரும் சமமாகவே கருதப்பட்டனர். தான் ஒரு முஸ்லிம் என்றும், தனது விருப்பு இல்லாமலேயே தான் பத்ர் நோக்கிச் சென்றதாகவும் அப்பாஸ் கூறியிருந்தார். என்றாலும் அவருக்கான தீர்ப்பில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அல்-அப்பாஸ் 100 அவ்கியா (தங்க நிறை

*அளவு) செலுத்தினார். ஆகில்-இப்ன்-அபூதாலிப் 80 அவ்கியாவும், ஏனைய கைதிகளில் சிலர் 40 அவ்கியாவும் செலுத்தினர்.*

*யுத்தப் பொருட்களின் பங்கீடு குறித்து எந்த விதமான நியதிகளோ, கட்டளைகளோ இன்னமும் வெளியாகியிராத நிலையில் முரண்பாடுகள் தோன்றலாயின. உபாதா-இப்ன்-அல்-ஸாமித் கூறினார்: நபிகளாருடன் நாங்களும் சென்றோம். பத்ரில் அன்னாருடன் நானும் கலந்து கொண்டேன். யுத்தம் தொடங்கியது. வல்லோனான அல்லாஹ் எதிரிகளைத் தோற்கடித்தான். முஸ்லிம்களில் சிலர் எதிரிகளைத் துரத்திச் சென்றனர்; சிலர் யுத்தப் பொருட்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர்; சிலர் எதிரிகளால் தாக்குதலுக்குள்ளாகலாம் எனக்கருதி நபிகளாரைக் காத்து நின்றனர். அன்றைய இரவு, முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்த வேளை யுத்தப் பொருட்களைச் சேகரித்தவர்கள் கூறினார்கள்: 'நாமே இவற்றைச் சேகரித்தோம். எனவே வேறு எவருக்கும் இதில் உரிமை இல்லை'. 'அதில் எமக்கிருக்கும் உரிமையை விட மேலதிகமாக உங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை; எதிரிகளை எம்மிலிருந்து விலக்கி வைத்து, அவர்களைத் தோற்கடித்தோம் நாம்' என்றனர் எதிரிகளைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்றவர்கள். நபிகளாரைக் காத்திருந்தவர்கள் கூறினார்கள்: 'எமக்குள்ள உரிமையை விடக் கூடுதலான உரிமை உங்களுக்கில்லை; எதிரிகள் திடீர்த் தாக்குதல் மேற்கொள்ளலாம் எனக் கருதி நபிகளாரைக் காத்து நின்றவர்கள் நாம்'. இவ்வேளை அருள் செய்யப்பட்ட குர்ஆன் வாசகங்கள் கூறின:*

> 'அன்ஃபால் (போரில் கிடைத்த பொருள்கள்) பற்றி (நபியே!) உம்மிடம் (தோழர்களாகிய) அவர்கள் கேட்கின்றனர். அன்ஃபால் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் உரியவை. எனவே அல்லாஹ்வை அஞ்சுங்கள்; உங்களிடையே இணக்கமாக நடந்து கொள்ளுங்கள்' (அல்-அன்பால் 8:1)

*எனவே, நபிகளார் யுத்தப் பொருட்களை முஸ்லிம்கள் மத்தியில் சமமாகப் பங்கீடு செய்தனர். ஸஹீஹான அறிவிப்புகளின்படி அல்லாஹ்வின் தூதர், 'கும்ஸ்' (ஐந்தில் ஒன்று) எடுத்துக்கொண்டு எஞ்சியதை வீரர்கள் மத்தியில் பங்கிட்டனர். பத்ர் குறித்த இறைவாசகங்களுடன் 'கும்ஸ்' குறித்த வாசகங்களும் அருளப் பெற்றன:*

> ''நீங்கள் போரில் பெற்ற வெற்றிப் பொருட்களிலிருந்து நிச்சயமாக அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் (அவருடைய) உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அதில் ஐந்திலொன்று உரியதாகும்''. (அல்-அன்பால் 8:41)

யுத்தப் பொருட்களில் ஒரு பகுதி, யுத்தத்தில் பங்கு பெறாத ஒன்பது தோழர்களுக்கு வழங்கப்பட்டது. ஒன்றில் அவர்கள் மதீனாவில் ஆற்றுவதற்கென வேறு பொறுப்புகள் கொடுக்கப் பெற்றிருந்தார்கள், அல்லது பத்ர் நோக்கிச் செல்லும் வழியில் காயங்களுக்குள்ளாகி யிருந்தார்கள். இதற்கும் மேலாக வேறு காரணங்களும் இருந்தன. அவர்களுள் ஒருவர் உத்மான்-இப்ன்-அப்பான். அவரது மனைவி ருகையா தொடர்ந்து சுகவீனமுற்றவராக இருந்தார். அவரைப் பரா மரிக்கும்படி நபிகளார் உத்மானைப் பணித்திருந்தனர்.

யுத்தப் பொருட்களின் பங்கீடு சம்பந்தமான வாசகங்கள் அருளப் பெற்று, அனைவரும் இறைவனதும் அவனது தூதரினதும் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளவே, முரண்பாடுகள் அனைத்தும் முற்றுப்பெற்றன. இறைவனும், அவனது தூதரும் தெளிவான நியதிகளை விதித்த போதெல்லாம் மக்கள் இவ்வாறே பணிந்து நடந்தனர். மதீனாவுக்குத் திரும்பி வரும் வழியில் அல்-ஸப்ராவில் யுத்தப் பொருட்களின் பங்கீடு நிகழ்ந்தது.

மகிழ்ச்சிகரமான செய்தியுடன் முஸ்லிம் படையினருக்கு முன்ன மேயே ஸைத்-இப்ன்-ஹாரிஸா மதீனா வந்தடைந்தார். சேதி கேட்ட முஸ்லிம்கள் மகிழ்வடைந்தாலும்கூட இது, உண்மையல்லாததாக இருக்குமோ எனவும் அஞ்சினர். உஸாமா கூறினார்: 'இறைவன் மீது ஆணையாக! நான் அதனை உண்மையெனக் கொள்ளவில்லை, யுத்தக் கைதிகளைக் காணும் வரை'. அனைவரும் வியப்புக்குள்ளாயினர். குறைஷியர் தோற்கடிக்கப்பட்டனரா? அவர்களது தலைவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளார்களா? அவர்களது ஆணவமும் அகந்தையும் அழிக்கப்பட்டனவா? அவர்களது கடவுளர், விசுவாசம் என்பனவற்றின் பொய்ம்மை நிரூபணமாகி விட்டதா? தனது கரங்கள் கழுத்தோடு இணைத்துக் கட்டப்பட்டவராக அபூ யஸீத்-ஸுஹைல்-இப்ன்-அம்ரைக் கண்ட வேளை நபிகளாரின் மனைவியார் ஸௌதா ஆச்சரிய முற்றவராகக் கூறினார்: 'ஓ அபூ யஸீத்! நீர் இலகுவாகச் சரணடைந்து கொண்டீர். கௌரவமான ஒரு மரணத்தை நீர் அடைந்திருக்க வேண்டும்'. இதனைச் செவியுற்ற நபிகளார் கூறினார்கள்: 'அல்லாஹ் வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக நீர் குழப்பங்களை உண்டு பண்ணுகிறீரா?' ஸௌதா கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! சத்தியத் தோடு உம்மை அனுப்பியவன் மீது ஆணையாக, அபூ யஸீதை இந்தக் கோலத்தில் கண்ட என்னால் அதனைத் தாங்கிக்கொள்ள இயல வில்லை. அதனால்தான் நான் கூறியவற்றைக் கூறினேன்.'

மதீனாவுக்குத் திரும்பும் வழியில் கைதிகளுள் இருவர் கொல்லப் பட வேண்டும் என்றனர் நபிகளார். அவர்கள் நள்ர்-இப்ன்-அல் ஹாரிஸ், உக்பா-இப்ன்-அபீ முஅய்த். குப்ரின் தலைவர்கள் அவர்கள். அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் ஆழ்ந்த பகைமை பூண்டு மக்காவில் முஸ்லிம்களைச் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக் கியவர்கள். போர்க்குற்றம் இழைத்த அவர்கள் கொல்லப்படுகின் றமை, அடக்கியாள்வார்க்குச் சிறந்ததொரு பாடமாக அமையும். உக்பா, தனது அகங்காரமெல்லாம் இழந்தவராய், 'எனது பிள்ளை களை யார் பராமரிப்பார்கள் அல்லாஹ்வின் தூதரே!' எனக் கதறினார். 'நரகம்!' என்றனர் நபிகளார். நிலத்தில் சிரம் பதித்தவர்களாகத் தொழுகையில் நபிகளார் இருந்தபோது, மிருகக் கழிவுகளைக் கொண்டுவந்து அன்னாரின் தோள்களில் தான் போட்டமையையும், பாத்திமா கண்ணீர் சிந்தியவராக அவற்றை அப்புறப்படுத்தியமை யையும் உக்பா மறந்து விட்டாரா?

ஏனைய கைதிகள் அனைவரும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்றனர் நபிகளார். அபூ அஸீஸ் கைதியாக இருந்தார். ஓர் அன்ஸாரித் தோழருடன் இணைந்து அவரைக் கைப்பற்றியிருந்தவர் அவரது சகோதரரேயான முஸ்அப்-இப்ன்-உமைர். உணவு வேளை களின் போது உணவின் பெறுமதியான அங்கமான ரொட்டியை அபூ அஸீஸுக்கு அளித்து, அவரைக் கைப்பற்றிய இருவரும் பேரீத்தம் பழங்களோடு திருப்தி கண்டனர். தமக்குக் கிடைத்த ரொட்டித் துண்டு கள் அனைத்தையும் அபூ அஸீஸுக்கே அவர்கள் அளித்து வந்தனர். அவர் கூறினார்: 'நான் சங்கடத்துக்குள்ளானேன். ரொட்டிகளை அவர் களுக்குத் திருப்பியளித்தேன். அவர்கள் அவற்றைத் தொட மறுத் தார்கள்.' யுத்தக் கைதிகள் பராமரிப்பு சம்பந்தமான இஸ்லாமிய நெறிமுறைகளைக் குறித்துக்காட்டுவது இந்த நிகழ்வு. தன்னிடமுள்ள சிறந்ததையே தன்னால் கைப்பற்றப்பட்டவருக்கு அளிக்கும் உன்னத மான பண்பு இது. எந்த ஒரு சமூகத்தினதும் வரலாற்றில் இத்தகு உதாரணங்களைக் கண்டுகொள்ள முடியுமா என்பது ஐயம்.

பத்ர் சிறியதொரு மோதலாகவே இருந்தாலும் இஸ்லாமிய வர லாற்றில் ஒரு திருப்பு முனையாக அது அமைந்து விட்டது. எனவே தான் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவிக்கும் தினம் (யவ்ம்-அல்-புர்கான்) எனக் குர்ஆன் அதனைச் சித்தரிக்கின்றது. அதில்தான் இஸ்லாம் மாபெரும் வெற்றிகளை ஈட்டியது. விசுவாசி களின் உள்ளங்களில் அவர்களது தனிப்பட்ட அவாக்கள், நோக்கங்கள்,

உறவுகள் என அனைத்தையும் விஞ்சியதாக இஸ்லாமே தாள் பதித்தது. மோதல்கள் ஆரம்பமாகுமுன்னமேயே தாம் இரண்டாம் அகபாவின் போது நபிகளாரோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல தமது விசுவாசத்தின் கடப்பாடு என்பதை அன்ஸார்கள் உறுதி செய்திருந்தனர். எந்தவிதமான நியதிகளும் வரை யறைகளுமின்றி தமது மதத்துக்காக எத்தகு தியாகத்தையும் செய்யக் கூடிய, கீழ்ப்படிவுள்ள வீரர்களாக அவர்கள் இருந்தார்கள்.

மோதலின் போது முஹாஜிரூன் பெரிதும் தமது உறவினர்களையே எதிர்கொண்டனர். மகன் தந்தையை, சகோதரன் சகோதரனை எதிர்த் துப் போராடினர். அனைத்து உறவுகளையும் கடப்பாடுகளையும் விஞ்சியதாக விசுவாசம் பற்றிய உறுதி நிலை பெற்றிருந்ததன் காரண மாக பாச பந்த நியமங்கள் கூட உறவினர் தம் உயிர் போக்கத் தடை யாக இருக்கவில்லை.

பத்ரில் யுத்தம் புரிந்தவர்கள் 'பத்ரீ' என அடையாளம் காணப்பட்டு இஸ்லாமிய சமூகத்தில் உயரியதோர் அந்தஸ்தினை ஈட்டிக் கொண்ட னர். உமர் (ரலி) அவர்களது ஆட்சியின் போது ஸஹாபாக்களில் உயர் தரத்தினராகக் கௌரவிக்கப்பட்ட அவர்கள் அரசிடமிருந்தும் அதிஉயர் வருமானம் ஈட்டிக்கொண்டனர். வரலாற்றுச் சரிதைகளின் ஆரம்ப பக்கங்களில் இடம்பெறுகின்றன அவர்களது நாமங்கள். தாம் வாழ்ந்த காலங்களில் லௌகிக சம்பத்துகளையும் பெற்றுக்கொண்ட அவர்கள் காலா காலமாக அங்கீகாரமும் கௌரவமும் பெற்று வருகின்றனர்.

அல்லாஹ்வின் தூதரது வாக்குகள் 'பத்ரியூன்' (பத்ர் கள வீரர்)களது உயர் தகைமைகளையும், சுவனத்தில் அவர்களுக்குக் கிட்டும் உன்னத ஸ்தானத்தையும் விவரிக்கின்றன: பத்ர் தினத்தன்று தான் ஹாரிஸா-இப்ன்-ஸுரகா-அல்-அன்ஸாரீ வீழ்ந்தார். அவர் அவ்வேளை மிகவும் இளையவராயிருந்தார். அவருடைய தாயார் நபிகளாரிடம் வந்து கூறி னார்: 'அல்லாஹ்வின் தூதரே! ஹாரிஸா எனக்கு எவ்வாறானவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவன் சுவனத்தில் இருந்தால் நான் அவனது இழப்பைத் தாங்கிக்கொண்டு இறைவனிடம் எனக்குரிய வெகுமதியைக் காத்திருப்பேன். அப்படி இல்லையாயின் நான் என்ன செய்வேன் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்'. நபிகளார் கூறி னார்கள்: 'உனக்கு அருள் கிட்டட்டும்! சித்தத்தில் ஏதும் பிரமை ஏற்பட்டுவிட்டதா உனக்கு? சுவனம் ஒன்று தான் இருக்கின்றதா? தெரிந்து கொள். சுவனத்தில் பல படித்தரங்கள் இருக்கின்றன. அவன் மிக உயர்ந்த தரத்தில் இருக்கின்றான்'.

ஹாதிப்-இப்ன்-பல்தாஅவுடைய சம்பவமும் குறிப்பிடத்தக்க ஒன்று. நபிகளார் மக்காவைக் கைப்பற்ற வருவதாகக் குறைஷியருக் குச் செய்தி அனுப்பியிருந்தார் ஹாதிப். அவரை மன்னித்து அல் லாஹ்வின் தூதர் கூறினார்கள்: 'பத்ரில் போராடியவர்களை நோக்கி இறைவன், 'நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்; சுவனம் உங்களுக்கு நிச்சயமாய் விட்டது' எனக் கூறலாம்'. ஹாதிப்பின் வேலையாள் கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! ஹாதிப் நிச்சயம் நரகம் புகுவார்'. நபிகளார் கூறினார்கள்: 'அது உண்மையல்ல, அவர் ஒரு போதும் நரகம் புக மாட்டார். பத்ரையும், ஹுதைபியாவையும் கண்டவர் அவர்'.

பத்ரின் விளைவுகள் மதீனாவிலும் மக்காவிலும் மாத்திரமன்றி அரேபிய தீபகற்பம் முழுவதிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி யிருந்தன. யூதர்களையும், ஏனைய முஷ்ரிகூன்களையும் விட செல் வாக்கு மிக்கவர்களானார்கள் மதீனாவின் விசுவாசியர். பத்ரில் நிகழ்ந்த அதிர்ச்சியூட்டும் முடிவினால் மனங்கவல்ந்தவர்களாய் விட்ட யூதர் கள், சினமீதூறப் பெற்று, தமது வார்த்தைகளையும் செயல்களையும் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவர்களானார்கள். அவர்கள் மேற் கொண்ட சதிகார நடவடிக்கைகள் காரணமாக யூத கோத்திரமான பனூ கைனுகா மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஏராளமானோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இஸ்லாம் மேலோங்கியிருப்பதன் காரணமாக முஸ்லிம்களைச் சார்ந்திருப்பதன் மூலம் தமது சுயநலன்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இணைந்தோரும் பலர். இவர்கள் தான் இஸ்லாத்தை ஏற்றாலும் தமது உள்ளங்களில் 'குப்ர்' குடிகொண்டிருந்த முனாபிகூன் (நயவஞ்சகர்கள்). அவர்களது தலைவராக இருந்தவர் அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை-இப்ன்-ஸலூல்.

மக்காவிலோ, குறைஷியர்கள் நிகழ்ந்தனவற்றை நம்ப முடியாத வர்களாக இருந்தார்கள். அவர்களது தலைவர்களும், பெரு வீரர்களும் இறந்து பட்டிருந்தனர். ஒரு முர்ஸல் அறிவிப்பின்படி குறைஷியர் பொறுமையைக் கையாண்டனர். தமது துயரங்களினால் முஸ்லிம்கள் மகிழ்வுறக்கூடும் எனக் கருதி, தம்முள் இறந்து பட்டோருக்காகக் கண்ணீர் சிந்துவதையும், புலம்புவதையும் தவிர்த்தனர். மேலும் தமது இழப்புகளுக்காகப் பழி வாங்க வேண்டிய திட்டங்களையும் தீட்ட வேண்டியிருந்தது. நபிகளாரைக் கொல்லவென அவர்கள் உமைர் -இப்ன்-வஹ்ப்-அல்-ஜுமாஹீயை அனுப்பினார்கள். உமைர் மரணத் துக்குள்ளாவாராயின் அவரது குடும்பத்தைப் பராமரித்துப் பாதுகாக்

கும் பொறுப்பை ஸப்வான்-இப்ன்-உமையா ஏற்றுக்கொண்டார். வாளேந்தியவராய் மதீனா சென்றார் உமைர். பள்ளிவாசலின் அருகில் அவரைப் பிடித்துக்கொண்ட உமர்-இப்ன்-அல்-கத்தாப், அவரை நபிகளாரிடம் கொண்டு சென்றார். உமைருடைய வருகையின் காரணம் என்ன என வினவினர் நபிகளார். கைதிகள் சிலரை விடுவித்துச் செல்லவே தான் வந்ததாகக் கூறினார் உமைர். அவரது வருகையின் உண்மையான நோக்கத்தையும், ஸப்வானுடன் அவர் செய்து கொண்டிருந்த உடன்பாட்டின் விவரங்களையும் நபிகளார் விவரித்தார்கள். இந்நிலையில் உமைர் தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாகவும், இஸ்லாத்தின்பால் மக்கத்து மக்களை அழைக்கத்தான் உழைக்கப் போவதாகவும் கூறினார்.

முஸ்லிம்களால் கொல்லப்பட்டோருக்காகப் பழிவாங்கும் நோக்கில், அல்-ரஜீஇயில் கைப்பற்றப்பட்ட இரு முஸ்லிம்களை விலை கொடுத்து வாங்கிய குறைஷ், அவ்விருவரையும் கொன்று விட்டனர். அவர்கள் குபைப், ஸைத்-இப்ன்-அல் ததினா ஆகியோர்.

## பத்ரின் பின்

### கஸ்வத் கர்காரா-அல்-குத்ர்

குறைஷியரின் வர்த்தக நடவடிக்கைகள் மீது தாம் இட்டுள்ள தடையைத் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதில் முஸ்லிம்கள் முனைப்புக்காட்டி வந்தனர். தத்தமது எல்லைகளுக்குள்ளால் செல்லும் குறைஷிய வர்த்தக மார்க்கத்தினாலும், அவர்களது வர்த்தகத்தினாலும் பயன்பெற்று வந்த சிற்சிறு கோத்திரங்கள் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளவென படையொன்றினை அமைக்க முனைந்தன. அவற்றுள் ஒன்றாக பனூ ஸலீம், கதபான் கோத்திரங்கள் கர்காரா-அல்-குத்ர் என்ற தளத்தில் ஒன்று சேர்ந்தன. இது பனூ ஸலீமுக்குச் சொந்தமான தண்ணீர்த் துரவு கொண்ட பகுதி. நபிகளார் தாமே தலைமை தாங்கி இத்தண்ணீர்த் துரவுப் பகுதியில் திடீர்த் தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டனர். அங்கு ஒட்டகைகள் சில மட்டுமே காணப்பட்டன. நபிகளாரின் வருகை குறித்து அறிந்து கொண்ட அக்கோத்திரத்தோர்கள் தப்பிச் சென்று விட்டிருந்தனர். அல்லாஹ்வின் தூதர் அத்தளத்தில் மூன்று தினங்களைக் கழித்து விட்டுத் திரும்பினர்.

இப்னு ஸஅத், இஸ்னாத் ஏதும் இன்றி கோத்திரங்களின் படையினர் இருநூறு பேர் இருந்தனர் என்றும், ஐந்நூறு ஒட்டகைகள் கைப்பற்றப்பட்டன என்றும் கூறுவார்.

**கஸ்வத் அல்-ஸவீக்**

பழிவாங்கும் நோக்குடன் அபூ ஸுஃப்யான் இருநூறு குதிரை வீரர்களுடன் மக்காவிலிருந்து வந்து, மதீனாவை அண்மிய பனூ நுளைர் கோத்திரத்தோடு தங்கிக்கொண்டார். அங்கிருந்து மதீனாவின் ஹர்ரா வாகிம்மின் முனையில் இருந்த அல்-உரைத் வெளியின் மீது தாக்குதல் மேற்கொண்டார். அங்கு இருவரைக் கொன்று பேரீத்த மரங்கள் சிலவற்றைத் தீயிட்டு எரித்து மக்காவுக்குத் திரும்பினார் அபூ ஸுஃப்யான். கர்காரா-அல்-குத்ர் வரை, மக்கத்துப் படையினரைத் துரத்திச் சென்றனர் முஸ்லிம்கள். அவர்களைக் கைப்பற்ற இயலவில்லை. விரைந்து சென்றுவிடும் நோக்கில் பயணப் பளுவைக் குறைக்கும் வகையில், 'ஸவீக்' எனும் உணவுப் பதார்த்தப் பொதியைக் கைவிட்டுச் சென்றிருந்தனர் குறைஷியர். அதனை எடுத்துக்கொண்டு திரும்பிச் சென்றனர் முஸ்லிம்கள். எனவே இது கஸ்வத்-அல்-ஸவீக் என வழங்கியது.

**கஸ்வத்-தூ-அமர்ர்**

ஹிஜ்ரி 3ம் வருடம் துல்ஹிஜ்ஜாவின் போது நிகழ்ந்தது கஸ்வத்-அல்-ஸவீக். ஒரு மாதம் கழிய, நஜ்தின் தூ அமர்ர் பகுதியில் திரண்டிருந்த கதபான் கோத்திரத்தார்க்கு எதிராக நபிகளார் தாமே படையுடன் சென்றனர். அன்னாரின் வருகையின் முன்னமேயே கதபானிகள் தப்பிச் சென்று விட்டதனால் மோதல்கள் எதுவும் நிகழவில்லை. முஸ்லிம் படையினர் ஸபர் மாதத்தை அங்கேயே கழித்து மதீனா திரும்பினார்கள்.

அல்வாகிதீயும், இப்ன் ஸஅத்தும் தூ அமர்ர் தண்ணீர்த் துரவில் திரண்டிருந்தோர் கதபானின் ஒரு கிளைக் கோத்திரமான பனூ-தஅலபா-இப்ன்-முஹாரிப் என்றும் முஸ்லிம் படையில் மொத்தம் 450 பேர் இருந்தனர் என்றும் கூறுவர். இப்ன்-இஸ்ஹாக் படையெடுப்பின் காலம் குறித்து வேறுபடுவார். ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு ரபீயுல் அவ்வல் பன்னிரெண்டாம் திகதி வியாழக்கிழமை முஸ்லிம்கள் புறப்பட்டுச் சென்றனர் என்பார் அவர்.

**கஸ்வத் பஹ்ரான்**

மக்காவுக்கும் ஸிரியாவுக்கும் இடையிலான வர்த்தக மார்க்கத்தில் புரூஉ பிரதேசத்தில் பஹ்ரான் எனும் இடம் நோக்கிப் படையொன்றினை நடாத்திச் சென்றனர் நபிகளார். மோதல்கள் ஏதும் நிகழவில்லை. இதன் போது நபிகளார் பத்து தினங்கள் வெளியேறி இருந்தனர் என்பார் அல்-வாகிதீ. முஸ்லிம் படையினர் முன்னூறு பேர் எனக் குறிப்பார் இப்ன்-ஸஅத்.

### கஸ்வத் அல்-கரதா

தமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடையிலிருந்து மீளும் முகமாக நஜ்த் மூலமான ஈராக்கிய மார்க்கத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்தனர் குறைஷியர். இம்முயற்சியில் அபூ ஸுப்யானும், ஏனைய சில குறைஷி பிரதானிகளும் வர்த்தகக் குழுவொன்றினை நடாத்திச் சென்றனர். அவர்கள் கொண்டு சென்ற பொருட்களில் பெரு மளவினதாக இருந்தது வெள்ளி. ஸைத்-இப்ன்-ஹாரிஸாவின் தலை மையில் ஒரு படையை அனுப்பினார்கள் நபிகளார். நஜ்தின் அல்-கரதா எனும் இடத்தில் ஸைத் வர்த்தகக் குழுவை எதிர்கொண்டார். பத்ரின் பின், ஆறு மாதங்கள் கழிந்து நிகழ்ந்த இந்த சுற்றிவளைப்பின் போது வர்த்தகப் பொருட்களைக் கைவிட்டுத் தப்பிச் சென்றனர் குறைஷியர்.

ஸைத்-இப்ன்-ஹாரிஸாவின் படையில் நூறு போராளிகள் இருந்த தாகவும், முப்பதாயிரம் வெள்ளிக்காசுகளின் நிறையளவினதான ஆயி ரம் திர்ஹம் பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறுவார் இப்ன் ஸஅத். புதியதொரு வர்த்தக மார்க்கத்தை நிறுவிக் கொள்ளும் குறைஷிய முனைப்புகள் இதனால் தகர்ந்து போயின. வர்த்தக மார்க்கங்கள் அனைத்தும் தடைப்பட்டுப் போகவே, மக்கத்து வர்த்தக சமூகம் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதா யிற்று. ஆக, தமது பொருளாதாரத்தையும் சமூக அந்தஸ்தையும் நிலை பெறச் செய்து கொள்வதற்காக தீர்க்கமானதொரு முடிவை எடுக்க உந்தப்பட்டனர் குறைஷியர்.

# உஹத்

மோதல் நடந்த மலையின் பெயர் கொண்டு அழைக்கப்படுவது உஹத். இம்மலை, நபிகளாரது பள்ளிவாசலின் மஜீதி வாயிலிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் மதீனாவின் வடபுறமாக அமைந்துள்ளது. அதன் தென்புறம் காணப்படுவது அய்னய்ன் எனும் ஒரு குன்று. யுத்தத்தின் பின்னர் இது ஜபல்-அல்-ருமாஹ் (வில் வீரர்களின் மலை) என வழங்கியது. இவ்விரு மலைகளுக்கும் மத்தியில் அமைந்துள்ளது வாதீ கனாஹ் எனும் சமவெளி.

பத்ரின் பின்னர் ஒரு வருடத்துக்கும் குறைந்த ஒரு காலப்பகுதியில் குறைஷ், மதீனா மீது மேற்கொண்ட தாக்குதலின் விளைவே உஹத் யுத்தம். பத்ரில் உயிர் நீத்தவர்களுக்காகப் பழிவாங்க வேண்டும்; ஸிரியாவுக்கான வர்த்தக மார்க்கங்களை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டுக்கொள்ள வேண்டும்; பத்ரின் பின்னர் அராபியர் மத்தியில் நிலை தளர்ந்து விட்ட குறைஷிய செல்வாக்கை மீள நிலைநிறுத்த வேண்டும் என்ற காரணங்களுக்காகவே யுத்த முனைப்பில் வந்திருந்தனர் குறைஷியர். ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் தான் உஹத் நிகழ்ந்தது என ஸீரா கிரந்தங்கள் கூறுகின்றன. என்றாலும் சரியான தேதி குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. மிகவும் பிரசித்தமான அறிவிப்புகள், ஷவ்வாலின் மத்தியில் ஒரு சனிக்கிழமையன்று யுத்தம் நிகழ்ந்ததாகக் கூறுகின்றன.

பத்ரில் கண்ட தோல்வியின் பின்னர் இருந்தே குறைஷியர் உஹதுக்கான தயாரிப்பில் ஈடுபட்டனர் எனத் தனது ஆசிரியர்கள் சிலரது கூற்றுகளை ஆதாரமாகக் கொண்டு கூறுவார் இப்ன்-இஸ்ஹாக். பத்ர் காலத்தில் காப்பாற்றிக் கொள்ளப்பட்ட வர்த்தகக் குழுவின் பெறுமதி அனைத்தையும் அல்லது அதிலிருந்து கிடைத்த இலாபம் அனைத்தை

யும் முஸ்லிம்களுக்கு எதிரான படையைத் தயார் செய்வதற்காக அவர்கள் செலவழித்தனர்.

குறைஷியருடன் பெண்கள் எட்டுப்பேர் சென்றனர் எனக் கூறும் இப்ன்-இஸ்ஹாக், அவர்களது பெயர்களையும் தருவார். வாகிதீயோ பெண்கள் மொத்தம் பதினான்கு பேர் எனக் குறிப்பிட்டு அவர்களது பெயர்களையும் பதிவு செய்துள்ளார். குறைஷிப் படையில் மூவாயிரம் ஆண்கள் இருந்தனர். குதிரை வீரர்கள் இருநூறு பேர். வலதுபுறம் காலித்-இப்ன்-அல் வலீதும், இடதுபுறம் இக்ரிமா-இப்ன்-அபூ ஜஹ்லும் தலைமை தாங்கி வந்தனர். வீரர்களுள் எழுநூறு பேர் யுத்த கவசங்கள் அணிந்திருந்தனர்.

முஷ்ரிக் படையினர், குறைஷியரும் அவர்களோடு இணைந்து வந்த கினானா, திஹாமா கோத்திரங்களது மக்களும் ஆவர். முஷ்ரிகூன் மதீனாவின் மீது படையெடுத்து வருவார்கள் எனத் தெரிந்திருந்தனர் முஸ்லிம்கள். நபிகளார் ஒரு கனவு கண்டிருந்தார்கள். வஹியின் ஓர் அங்கமாகவே இறைத்தூதர்களது கனவுகளும் அமைகின்றன. தமது கனவினை அன்னார் தம் தோழர்களுக்குக் கூறினார்கள்:

''கனவொன்று கண்டேன். அதில் நான் ஒரு வாளைச் சுழற்றினேன். அது நடுவில் உடைந்தது. இது உஹதின் போது விசுவாசியர் எதிர் கொள்ளும் இழப்பை உணர்த்தியது. பின் மீண்டும் நான் வாளைச் சுழற்றினேன். அது முன்னம் இருந்ததை விடச் சிறந்ததாகத் தோற்றம் பெற்றது. அது, இறைவன் அருளால் மக்கா வெற்றி கொள்ளப்படு வதையும், விசுவாசியர் அனைவரும் ஒன்று கூடுவதையும் குறித்தது. மேலும், நான் பிராணிகள் பலியாவதைக் கண்டேன். என்றாலும், அல்லாஹ்விடம் இருந்து கிட்டுவது, உலகத்துச் செல்வங்களை விட மேலானது. நிச்சயமாக அப்பிராணிகள் உஹதின் போது உயிர் நீத்த விசுவாசிகளைக் குறித்தது''.

இக்கனவினை நபிகளார் விவரிக்கும் போது தமது தோழர்கள் தோற்கடிக்கப்படுவார்கள்; சிலர் இறந்து போவார்கள் எனக் கொண்ட னர். மற்றோர் அறிவிப்பில் அன்னார் கூறினார்கள்: 'ஊடுருவ முடியாத ஒரு கவச அங்கியை நான் அணிந்திருந்தேன். அது மதீனா என நான் கருதினேன்'.

தமது தோழர்களுடன் ஆலோசனை நடாத்தினார்கள் நபிகளார். 'தான் மதீனாவிலிருந்து அதனை மேலும் பலப்படுத்துவதா? அல்லது மதீனாவிலிருந்து வெளிச்சென்று குறைஷியரை எதிர்கொள்வதா?' மதீனா கட்டடங்களினால் நிறைந்து ஒரு கோட்டை போலவே விளங்

*கியது. அன்னார் கூறினார்கள்: 'நான் பாதுகாப்பான ஒரு தளத்தில் இருக்கின்றேன்'. அன்ஸார்களில் சிலர் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் தூதரே! மதீனாவின் வீதிகளில் நாம் கொல்லப்படுவதை விரும்ப மாட்டோம். ஜாஹிலிய்யக் காலத்திலேயே எம்மீது எவரும் படை யெடுத்து வருவதை அனுமதிக்காதவர்கள் நாம். இஸ்லாத்தின் பாலாகி விட்ட நாம் இப்போது அதனிலும் கூடுதலாகப் பிறர் எம்மை அண்ட விடமாட்டோம். ஆகவே நாம் (மதீனாவை விட்டும்) வெளிச்சென்று குறைஷிப் படைகளை எதிர்கொள்வோம்'. ஆக, நபிகளார் சென்று தம்மை யுத்தத்துக்காகத் தயார் செய்து கொண்டார்கள்.*

*மக்களுள் சிலர் அன்ஸார்களைக் குறை கூறினார்கள்: 'அல்லாஹ் வின் தூதர் ஓர் ஆலோசனையை முன்வைத்தார். நீங்கள் வேறொரு கருத்தை முன்வைக்கின்றீர்களா? ஓ ஹம்ஸா! நபிகளாரிடம் சென்று கூறும். உங்கள் முடிவின் பிரகாரமே நடப்போம்'. அல்லாஹ்வின் தூதரிடம் சென்ற ஹம்ஸா கூறினார்: 'மக்கள் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொள்கின்றார்கள் ஓ அல்லாஹ்வின் தூதரே! உங்களது முடி வையே ஏற்றுக்கொள்வதாக அவர்கள் கூறுகின்றார்கள்'. நபிகளார் கூறினார்கள்: 'யுத்த ஆயுதங்கள் பூண்ட பின்னர் யுத்தம் நிகழ்த்தாமல் அவற்றை அகற்றுதல் இறைத்தூதர் ஒருவருக்குத் தகாது'.*

*நபிகளார், தம் தோழர்கள் அவர்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவித்தார்கள் என்பது தெளிவு. அவை அன்னாரது சொந்த கருத்துகளுக்கு மாற்றமாக இருந்தாலும் சரியே. இறைவாக்குகள் அருளப்படாத விவகாரங்களில் பொதுவான பிரச்சினைகள் குறித்தும், உம்மாவின் விவகாரங்கள் குறித்தும் சிந்திக்கப் பயிற்றுவிக்கும் முகமாக நபிகளார் மக்களைக் கலந்தாலோசிக்கலானார்கள். ஒருவர் தனது சொந்தக் கருத்தை வெளியிட முடியாதாயின் ஆலோசனைகள் செய் வதில் பயனேதும் கிட்டுவதில்லை. ஒருவர் எந்தவொரு விடயத்தை யும் கிரகித்துக் கொள்வதில் இழைக்கும் தவறுகளுக்காகவோ, தவறான முடிவுகளை மேற்கொள்வதற்காகவோ நபிகளார் யார் மீதும் குறை கண்டதில்லை. தலைமைப் பொறுப்பில் இருக்குமொருவர், ஏனை யோருடன் ஆலோசனை நடாத்துதல் அவசியம். குர்ஆனிய ஷூறா எனும் கலந்தாலோசனை நடாத்துதலை அமுல்படுத்தும் பணி நபி களாருக்கு இருந்தது:*

> ''காரியங்களில் அவர்களிடம் கலந்தாலோசனை செய்வீராக! (அவற் றைச் செய்ய) நீர் உறுதி கொண்டால், அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைப்பீராக!'' (ஆல இம்ரான் 3:159)

இங்கு நாம் ஸஹாபாக்களின் அரசியல் தெளிவாண்மையைக் கண்டு கொள்ளலாம். அவர்கள் தமது கருத்தைக் கூறுவதற்குரிய உரிமையைக் கொண்டிருந்தனர். ஆனால் அவற்றைத் தலைவர் மீது திணிக்கவோ, அழுத்தங்கள் கொண்டு வரவோ அவர்களுக்கு உரிமை யில்லை. தமது கருத்துகளை அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறலாம். பின்னர் எந்த ஓர் அபிப்பிராயம் நல்லது எனத் தேர்ந்து கொள்ளும் உரிமை தலைவருக்குரியது. நபிகளார் வெளிச் சென்று யுத்தம் புரிய வேண்டுமெனத் தாம் அழுத்தம் கொடுத்தமையையும், அதன்படியே அன்னார் நடந்து கொள்ள முடிவு செய்தமையையும் கண்டவுடன் மக்கள் கவலை தெரிவித்தார்கள். நபிகளாரோ, வெற்றிகரமான ஒரு தலைமைத்துவத்தின் பண்புகள் குறித்து வேறு ஒரு பாடத்தைக் கற்பித் தார்கள். அதாவது,தீர்மானம் ஒன்றினை எடுத்ததன் பின்னர் தலைவர் தன் முடிவில் தளம்பல் செய்தல் தகாது. எடுத்துக் கொண்ட தீர்மானத் தின் பிரகாரமே செயல்படுதல் வேண்டும். இல்லையேல் மக்கள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கை தளர்ந்து அவர்களுள் குழப்பநிலை தோன்றவும் ஏதுவாகி விடும்.

சுருங்கக் கூறின், வெளிச்சென்று யுத்தம் புரிய வேண்டுமெனக் கூறியவர்கள், எதிரிகளின் முன்னால் தமது வீரத்தைக் காட்ட வேண் டும் என்ற அவாவினால் உந்தப்பெற்றிருந்தார்கள். அவர்களுள் பத்ரைத் தவற விட்டிருந்தவர்கள் அது போன்றதொரு போராட்டத்தில் பங்கு பெறும் ஆவல் கொண்டிருந்தார்கள்.

மறுபுறம், நபிகளாரும் அன்னாரின் எண்ணத்தோடு இணைந்தவர் களும் மதீனாவின் காவலரண்களைப் பயன்படுத்துவதன் மூலம் போராளிகளின் இழப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம்; எதிரிகளின் இழப்புகளைக் கூட்டிக் கொள்ளலாம்; யுத்தம் புரிய இயலாதவர்களான பெண்டிர், குழந்தைகள் உட்பட அனைத்து மக்களதும் சக்தியையும் பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் கருதியிருந்தனர்.

கருநிற துவஜம் ஒன்றும், மூன்று கொடிகளும் தயாராயின. ஒன்று முஹாஜிரூனுக்குரியது - அதனை முஸ்அப்-இப்ன்-உமைர் தாங்கியிருந் தார். இரண்டாவது அல்-அவ்ஸுகளுக்கானது - அதனைத் தாங்கியவர் உஸைத்-இப்ன்-ஹுலைர். மூன்றாவது கொடி அல்-கஸ்ரஜ்களுக்கானது - அதனை ஹப்பாப்-இப்ன்-முன்திர் தாங்கியிருந்தார். இக்கொடிகளின் கீழ் முஸ்லிம்களும், முஸ்லிம்கள் போலப் பாவனை செய்தவர்களு மாக ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். இரண்டு குதிரைகளே அவர்களிடம் இருந்தன. யுத்த கவசம் பூண்டிருந்தோர் நூறு பேர்.

*தான் கொல்லப்பட்டு விடாமல் இறைவன் தன்னைக் காத்திடுவான் என்ற நம்பிக்கை இருந்தும், இரண்டு கவசங்களை அணிந்தவர்களாக இருந்தனர் நபிகளார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து ஸ்தூலப் பொருட்களையும் பயன்படுத்தி, அல்லாஹ் வின் மீதான விசுவாசத்தைக் கொள்ள வேண்டும் என தனது உம்மத்த வர்களுக்கு உணர்த்துவதாக அமைந்தது இது.*

*முஸ்லிம் படையினர் ஹர்ரா-அல்-ஷர்கிய்யாவின் மேற்குப்பகுதி யூடாக உஹத் நோக்கிச் சென்றார்கள். இங்குதான் அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை-இப்ன் ஸலூல், முஷ்ரிகூன்களுடன் எவ்வித மோதலும் ஏற்படப்போவதில்லை எனக் கூறி முன்னூறு முனாபிக்குகளுடன் முஸ்லிம் படையினரைக் கைவிட்டுச் சென்றார். நபிகளார் மதீனாவை விட்டும் வெளியிறங்கிச் சென்று யுத்தம் செய்ய எடுத்த தீர்மானத்தை எதிர்த்தவராக, இப்ன் ஸலூல் கூறினார்: 'அவர்களை அவர் பணிந்தார்; என்னைப் புறக்கணித்தார்'.*

*உஹதை அண்மிய ஷைகைன் பகுதியிலேயே முனாபிகூன் பிரிந்து சென்றதாகக் கூறுவார் அல்-வாகிதீ. அப்த்-அல்லாஹ் இப்ன் உபையும், முனாபிகூன்களும் பிரிந்து சென்றமை அவர்களது செல்வாக்கிலிருந் தும் முஸ்லிம்களைத் தூய்மைப்படுத்துவதற்காக; முஸ்லிம்களிடையே பொய்களைப் பரப்பி அதைரியத்துக்குள்ளாக்காமல் தடுக்க முனாபிகூன் எவரும் இருக்கக் கூடாது என்பதற்காக.*

''(நயவஞ்சகர்களே!) தீயவர்களை நல்லவர்களை விட்டும் பிரித் தறிவிக்கும் வரை நீங்கள் எதன் மீது இருக்கின்றீர்களோ அதன் மீது நம்பிக்கையாளர்களை அல்லாஹ் விட்டு வைக்கிறவனல்லன்''. (ஆல-இம்ரான் 3:179)

மேலும், இரு கூட்டத்தினரும் (நீங்களும் இறை நிராகரிப்பாளர் களும் உஹதுப் போரில்) சந்தித்துக் கொண்ட நாளில் உங்களுக்கு ஏற்பட்ட துன்பம் அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டுள்ள தாகும். இறை நம்பிக்கையாளர்களை அவன் அறிவிப்பதற்காக வேண்டியுமாகும். இன்னும் நயவஞ்சகர்களை அவன் அறிவிப்ப தற்காக வேண்டியுமாகும். மேலும் ''நீங்கள் (எங்களுடன்) வாருங் கள்; அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள்; அல்லது (பகை வர்கள் அணுகாமல்) தடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அவர் களிடம் கூறப்பட்டது. ''(அதற்கு) போரை(ப் பற்றி முன்னரே) நாங்கள் அறிந்திருந்தால் உங்களை நாங்கள் பின்பற்றியிருப்போம்''

என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் அன்று நம்பிக்கையின் பக்கம் இருந்ததை விட நிராகரிப்பின் பக்கமே மிக நெருக்கமாக இருந்தார்கள். தம் இதயங்களில் இல்லாதவற்றை வாயினால் அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் (இதயங்களில்) மறைத்து வைத்திருப்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்''. (ஆல-இம்ரான் 3:166-7)

*இப்ன் இஸ்ஹாக், தனது ஆசிரியர் ஒருவரிடமிருந்து தரும் முர்ஸல் அறிவிப்பொன்றின்படி அப்த்-அல்லாஹ்-இப்ன்-அம்ர்-இப்ன்-ஹராம் திரும்பி வந்து சேர்ந்து கொள்ளும்படி முனாபிகூன்களை வேண்டினார். ஆனால் அவர்கள் மேற்கண்ட வாசகத்தில் கூறப்பட்டவற்றைக் கூறினார்கள். இப்ன் ஹராம் கூறினார்: 'அல்லாஹ்வின் எதிரிகளே! உங்கள் மீது இறைவனின் சாபம் ஏற்படுவதாக. உங்களது உதவி ஏதும் தேவைப்படாதவராக அவனது தூதரை அவன் ஆக்குவான்'.*

*முஸ்லிம்களின் இரு குழுவினர் முனாபிகூன்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்தனர். மதீனாவுக்குத் திரும்பி விடும் எண்ணத்தோராய் விட்ட அவர்கள், இறைவனின் அருளினால் தமது பலவீனங்களை எதிர்த்து நின்று முஸ்லிம்களுடன் தங்கிவிட்டனர். கஸ்ரஜ்களின் பனூ ஸலாமா, அவ்ஸ்களின் பனூ ஹாரிஸா ஆகியோர் அக்குழுவினர். இது குறித்துப் பேசியது அல்-குர்ஆன்:*

''உங்களிலிருந்து இரு பிரிவினர், தைரியம் இழந்து (போர்க்களத்தை விட்டுத் திரும்பி) விடுவதை நாடிய போது அல்லாஹ் அவ்விருவ(கை பிரிவின)ருக்கும் உதவியாளனாக இருந்தான்''. (ஆல-இம்ரான் 3:122)

*ஷைகைன் பிரதேசத்தில் முஸ்லிம் படை களம் அமைத்தது. போராட்டத்தில் பங்கு பெற வந்திருந்த இளைஞர்களைப் பரிசீலிக்கத் தொடங்கினர் நபிகளார். பதினான்கும், அதற்குக் குறைந்ததுமான வயதினரை அவர்கள் மதீனாவுக்கு திருப்பியனுப்பினார்கள், இருவரைத் தவிர. ராபி-இப்ன்-குதைஜ், வில் வித்தையில் சிறந்தவர் என்பதால் படையினருடன் இருக்க அனுமதிக்கப்பட்டார். ஸம்ரா-இப்ன்-ஜுன்துப் ராபியை விடப் பலம் மிக்கவர் என்பதால் அவரும் அனுமதிக்கப் பட்டார். இவ்வாறு மதீனாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டவர்கள் பதினான்கு சிறுவர்கள் என்பார் இப்ன்-ஸெய்யித்-அல்-நாஸ். அவர்களுள் உமரின் மகனும் அடங்குவார் என ஆதாரங்கள் கூறுகின்றன. தைரியமாகவும், சுயவிருப்புடனும் தமது மரணத்தைச் சுவைக்க முன் வந்த இந்த சிறுவர்களின் முனைப்பு வியப்பூட்டுவது. இறைவனுக்காக*

உயிர்த்தியாகம் செய்வதில் அவர்கள் ஒருவரோடொருவர் போட்டி போடுவராயினர். கொடூர ஆட்சியாளர்களின் பலவந்தமான ஆட்சேர்ப் புச் சட்டங்களுக்கு உட்பட்டவர்களல்லர் அவர்கள். நபிகளாரின் கற் பிதங்களதும், இஸ்லாமிய ஆன்மாவினதும் தன்மைகளால் ஈர்க்கப் பட்டவர்கள் அந்த சிறுவர்கள்.

உஹதின் போர்க்களத்துக்கு முஸ்லிம் படை முன்னேறியது. படை யினர் எந்த ஒழுங்கில் அணி திரள வேண்டுமென நபிகளார் திட்ட மிட்டனரோ அதே ஒழுங்கில் அவர்கள் அமைந்தனர். உஹத் மலைக் குத் தம் முதுகைக் காட்டியவர்களாக மதீனாவை நோக்கியோராய் நின்றனர் முஸ்லிம்கள். உஹதின் எதிர்ப்புறம் அய்னய்ன் குன்றின் உச்சியில் ஐம்பது வீரர்கள் அப்த்-அல்லாஹ் இப்ன் ஜுபைர் தலைமை யில் நிலைநிறுத்தப்பட்டனர். முஷ்ரிக் படையினர் பின்புறத்திருந்து திடீர்த் தாக்குதல் ஏதும் நடத்தலாம் எனக் கருதி, பின்னணிப் பாது காப்பு அணியாக நிறுத்தப்பட்ட அவர்களிடம் நபிகளார் கூறினார்கள்: ''எம்மீது கழுகுகள் வந்து இறங்கக் கூடுமாயினும் நீங்கள் உங்கள் தளத்திலிருந்து விலகி விடாதீர்கள்; நாங்கள் எதிரிகளை வெற்றி கொள் வதை நீங்கள் காணக்கூடுமாயினும் உங்கள் தளத்திலிருந்து விலகி விடாதீர்கள்''. இவ்வாறு மேட்டுப் பிரதேசங்களை முஸ்லிம்கள் தமக் காக்கிக் கொண்டனர். சமவெளி குறைஷிப் படைக்கானது. உஹத் மலையை முன்னோக்கியவர்களாக நின்றனர் குறைஷியர். அவர்களின் பின்னால் இருந்தது மதீனா.

பலவீனமான சில அறிவிப்புகள், இரு படையினரதும் மோதல் ஆரம்பிக்கு முன்னர் முஷ்ரிக் கொடி தாங்கியவராயிருந்த தல்ஹா-இப்ன்-உஸ்மான், அலீ-இப்ன்-அபீதாலிப் ஆகியோரிடையே தனியார் மோதல் ஒன்று இடம்பெற்றதாகவும், அலீ வெல்ல, தல்ஹா மரித்து விட்டதாகவும் கூறுகின்றன. அல்-அவ்ஸ்களின் தலைவர்களில் ஒருவ ரான அபூ-ஆமிர்-அல்-பாஸிக் மதீனாவை விட்டும் நீங்கி முஷ்ரிகூன் களோடு இணைந்தவராகி, அல்-அவ்ஸ்களையும் தன்னைப் போலவே முஷ்ரிகூன்களோடு சேர்ந்து கொள்ளத் தூண்டுதல் செய்ததாகவும், அம்மக்களோ, அவ்வாறு செய்வதனைத் தீவிரமாக மறுத்துரைத்ததாக வும் அறிவிப்புகள் காணப்படுகின்றன.

இரு படையினருக்குமிடையிலான மோதல் உக்கிரமமடைந்தது. முஷ்ரிகூன் தமது முகாமுக்குப் பின் வாங்கினர். முஸ்லிம்கள் பராக் கிரமம் மிக்கவர்களாக விளங்கினர். வாளொன்றினை ஏந்தியவர்களாக நபிகளார் வினவினார்கள்: ''இதனை யார் என்னிடமிருந்து பெற்றுக்

*கொள்வார்?'' முஸ்லிம்கள் அனைவரும் தமது கரங்களை நீட்டினர். 'நான்! நான்!'. மீண்டும் நபிகளார் வினவினார்கள்: ''அதன் உரிமை யோடு யார் அதனை எடுத்துக் கொள்வார்?'' மக்கள் பின்வாங்கினர். அபூ துஜானா முன்வந்து கூறினார்: 'அதன் உரிமையுடன் நான் அதனை எடுத்துக் கொள்கின்றேன்'. அவ்வாளைப் பெற்றுக்கொண்ட அவர், முஷ்ரிகூன் மீது பாரிய இழப்புகளைக் கொண்டு வந்தார்.*

*மிக்க வீரத்துடன் போர் செய்து வந்தார் ஹம்ஸா-இப்ன்-அல்-முத்தலிப். அவருக்கு சவால் விடுத்தார் ஸபாஅ-பின்-அப்த் அல்-உஸ்ஸா. ஹம்ஸாவின் தாக்குதலில் உயிர் நீத்தார் ஸபாஅ. ஹம்ஸா வைக் கொன்றால் விடுதலை அளித்து விடுவதாகத் தனது அடிமை வஹ்ஷியிடம் கூறியிருந்தார் ஜுபைர்-இப்ன்-முத்இம். ஜுபைரின் சிறிய தந்தையார் துஐமா-இப்ன்-அதீயை பத்ரில் கொன்றிருந்தார் ஹம்ஸா. பாறையொன்றின் பின்னால் ஒளிந்திருந்த வஹ்ஷி, தன்னை நெருங்கி வந்த ஹம்ஸா மீது ஈட்டியொன்றைப் பாய்ச்சி அவரைக் கொன்று போட்டார். வஹ்ஷி போன்றோர், ஹம்ஸா போன்றோரை நேருக்கு நேர் எதிர்த்து நின்று போர் புரியும் தைரியம் படைத்தவர்களாக இருப்பார்களா என்ன?*

*யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் மேலும் பலர் உயிர்த் தியாகம் செய்தனர். அவர்களுள் ஒருவர் கொடி தாங்கியவராயிருந்த இஸ்லாமிய போதகர், முஸ்அப்-இப்ன்-உமைர். கப்பாப் கூறினார்: இறைவனின் மகிழ்வை ஈட்டிக் கொள்வதற்காக அவனது தூதருடன் நாம் ஹிஜ்ரத்துச் செய்தோம். எனவே அல்லாஹ்வின் சன்மானம் எமக்குக் கிடைக்க வேண்டுவது உறுதியாயிற்று. அவனது வெகுமதிகளில் எதனையும் இந்த உலகில் அனுபவிக்காமலேயே எம்மில் சிலர் மறைந்து விட்ட னர். அவர்களுள் ஒருவர் முஸ்அப்-இப்ன்-உமைர். அவருக்குக் கபனாக அமைந்த ஒரு போர்வையைத் தவிர வேறு எதனையும் அவர் விட்டுச் செல்லவில்லை. அந்தப் போர்வை கொண்டு அவரது தலையை மூடினால் கால்கள் திறந்து கொண்டன. கால்களை மூடினால் தலை திறந்து கொண்டது. எனவே, நபிகளார் எமக்குக் கூறினார்கள்: ''அதனைக் கொண்டு அவரது தலையை மூடுங்கள்; அவரது கால்களை 'இத்கீர்' (எனும் புல்) கொண்டு மூடுங்கள்''.*

*முஸ்அப்-இப்ன்-உமைர் வீர மரணமடைய, கொடியைத் தாங்கி னார் அலீ-இப்ன்-அபீ-தாலிப். யுத்தத்தின் இக்கட்டத்தில் முஷ்ரிகூன் களுக்கு மேலாக அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம்கள் பலம் பெற்றி ருந்ததை உணர்த்துகின்றது மேல் வரும் ஆயா:*

''இன்னும் அல்லாஹ் உங்களுக்கு அளித்த வாக்குறுதியைத் திட்ட மாக மெய்ப்படுத்தினான். (அவ்வமயம் உஹது களத்தில்) பகை வர்களை அவன் அனுமதியின் பிரகாரம் நீங்கள் அழித்துவிடும் நிலையில்...'' (ஆல-இம்ரான் 3:152)

*எதிரிகள் வெற்றி கொள்ளப்பட்டமையைக் கண்ட பின்னணி வில் வீரர்கள், அப்த்-அல்லாஹ்-இப்ன்-ஜுபைரிடம் கூறினார்கள்: ''யுத்தப் பொருட்கள்! யுத்தப் பொருட்கள்! எமது தோழர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். நீங்கள் எதற்காகக் காத்திருக்கின்றீர்கள்?'' அப்த்-அல் லாஹ்-இப்ன்-ஜுபைர் கூறினார்: 'அல்லாஹ்வின் தூதர் உங்களுக்குக் கூறியவற்றை மறந்து விட்டீர்களா?' அவர்கள் கூறினார்கள்: ''நிச்சய மாக நாம் மக்களுடன் சேர்ந்து யுத்தப் பொருட்களில் எமது பங்கைப் பெற்றுக் கொள்வோம்''. ஆக, அவர்கள் யுத்தப் பொருட்களைச் சேகரிப்பதற்காகச் சென்று விட்டார்கள்.*

*மலையிலிருந்து இந்த வீரர்கள் விலகிச் சென்றதும் நிகழ்ந்தன வற்றை விவரிக்கின்றது, அல்-ஸித்தீயின் ஒரு முர்ஸல் அறிவிப்பு. முஸ்லிம்களைப் பின்புறத்திலிருந்து தாக்குதவதற்குக் கிட்டியதொரு சந்தர்ப்பமாக காலித்-இப்ன்-அல் வலீத் இதனைக் கண்டு கொண்டார். நிலைமையை உணர்ந்து கொண்ட முஷ்ரிகூன் மீளவும் போராடத் தொடங்கினார்கள். இரு புறத்திலிருந்தும் முஸ்லிம்கள் தாக்குதலுக் குள்ளானார்கள். சடுதியாக ஏற்பட்ட இம் மாற்றத்தினால் முஸ்லிம்கள் எவ்வித திட்டமும் அற்றவர்களாகப் போராடினார்கள். தம்மவரையும், எதிரிகளையும் பிரித்துக் கண்டுகொள்ள முடியாத அளவு அவர்கள் குழம்பிப் போயிருந்தார்கள். இக்குழப்பத்தின் காரணமாகவே மிகவும் முதியவரான அல்-யமானை அவர்கள் கொன்று விட்டார்கள். அவரது மகன் ஹுதைபா-இப்ன்-அல் யமான், 'அவர் எனது தந்தையார்' எனக் குரலெழுப்பினார். இருந்தும் அல்-யமான் மரணத்துக்காளாகி விட்டார். 'கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளனான அல்லாஹ் உங் களை மன்னிப்பானாக!' என்றார் ஹுதைபா.*

*முஸ்லிம்களின் பலமும், தைரியமும் எவ்வித பயனையும் அளிப்ப தாயில்லை. திட்டமிழந்து குழம்பிப் போயிருந்த அவர்களது போராட் டத்தின் விளைவாகப் பலர் உயிர்த்தியாகிகளாக யுத்த களத்தில் வீழ்ந்தார்கள். நபிகளாருடனான தொடர்பும் இல்லாதவர்களாகவே அவர்கள் போராடினார்கள். முஸ்லிம்கள் மத்தியில், அல்லாஹ்வின் தூதர் கொல்லப்பட்டு விட்டார் என்ற ஒரு வதந்தியும் பரவி விட்டது.*

*முஸ்லிம்களில் பலர் செய்வதறியாது யுத்த களத்தினின்றும் தப்பிச் சென்றனர். சிலர் களத்தின் முனைகளில் வெறுமனே அமர்ந்து கொண்டனர். நபிகளார் இல்லா நிலையில் மரணமே மேல் எனக் கொண்டனர் சிலர். அவர்களுள் ஒருவர் அனஸ்-இப்ன்-அல்நள்ர். பத்ர் களத்தில் கலந்து கொள்ளக் கிடைக்காமை குறித்துக் கவலை கொண்டிருந்த அவர் கூறியிருந்தார்: 'இறைவன் சாட்சியாக, அல்லாஹ்வின் தூதருடன் ஒரு யுத்தத்தில் கலந்துகொள்ள இறைவன் என்னை அனுமதித்தால் நான் எவ்வாறு யுத்தம் புரிவேன் என்பதை அவன் கண்டுகொள்வான்'. குழப்பத்துக்குள்ளானவர்களாய் செய்வதறியாது அமர்ந்திருந்த சில முஸ்லிம்களை விளித்து அவர் கூறினார்: 'என்னை அண்மித்துள்ள சுவனத்தின் நறுமணம் எத்துணை அற்புதமானது!' மரணத்துக்காளாகும் வரை அவர் போராடினார். அவரது உடம்பில் என்பதுக்கும் மேற்பட்ட காயங்கள் இருந்தன. அவரது விரல் நுனிகளைக் கொண்டே அவரது சகோதரி ரபீஆ-பின்த்-அல்நள்ர் அவரை அடையாளம் கண்டு கொண்டார். அவரையும் அவரே போன்ற நேர்மைத் திறம் கொண்ட முஜாஹிதீன்களையும் குறித்தே குர்ஆன் கூறியது:*

> ''இறை நம்பிக்கையாளர்களில் ஆண்கள் சிலர் இருக்கின்றனர். எதன் மீது அல்லாஹ்விடம் அவர்கள் உறுதி மொழி கூறியிருந்தார்களோ அதை உண்மைப்படுத்தினர். இன்னும் (வீர மரணமடைய வேண்டுமென்ற) தம் நேர்ச்சையை நிறை வேற்றியவரும் அவர்களில் உண்டு. (அதை) எதிர்பார்த்துக் கொண்டிருப்பவரும் அவர்களில் உண்டு. (தங்கள் உறுதியில்) சிறிதும் அவர்கள் மாறவே இல்லை''. (அல்-அஹ்ஸாப் 33:23)

*யுத்தம் முடிய நபிகளார், அனஸ்-இப்ன்-அல் நள்ரைக் கண்டு வரும்படி ஸைத்-இப்ன்-ஸாபித்தை அனுப்பினார்கள். மரித்தோர் மத்தியில் அவரைக் கண்டார் ஸாபித். உயிர் இன்னும் பிரிந்து விடவில்லை. நபிகளாரின் ஆசிக்குப் பதிலளித்த அனஸ் கூறினார்: 'சுவனத்தின் மணத்தை நான் முகர்கிறேன். அன்ஸார்கள் மத்தியில் எனது மக்களுக்குக் கூறுங்கள். உங்கள் உடம்பில் சிறிதளவேனும் உயிர் இருக்க அல்லாஹ்வின் தூதருக்கு ஏதும் துயர் விளையுமாயின், இறைவனிடத்தில் உங்களுக்கு மன்னிப்பேதும் கிடைக்காது'. கண்ணீர் சிந்தியவராய்ச் சாய்ந்தார் அனஸ். துயர் உறுத்தும் காயங்களாலும், இறப்பாலும் கலக்கமுறாத அன்னவரின் வாக்கின் அற்புதம், கொள்கைத் திறம் என்பன புலனாகின்றதல்லவா?*

*யுத்த களத்திலிருந்து அஞ்சிப் பின்வாங்கியோர் குறித்துக் குர்ஆன் கூறுகின்றது:*

''(இறை நம்பிக்கையாளர்களும், இறை நிராகரிப்போருமான) இரு கூட்டத்தாரும் (உஹதில் போருக்காக) சந்தித்துக் கொண்ட நாளில் நிச்சயமாக எவர்கள் உங்களிலிருந்து பின் வாங்கினார்களோ - அவர்கள் சம்பாதித்த (தவறுகள்) சிலவற்றின் காரணமாக - அவர்களைச் சருகும்படி செய்ததெல்லாம் ஷைத்தான்தான்; (ஆனால்) அல்லாஹ் அவர்களைத் திட்டமாக மன்னித்து விட்டான் - நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவனாக வும், மிக்க சாந்தமுள்ளவனாக வும் இருக்கின்றான்''. (ஆல-இம்ரான் 3:155)

*நபிகளார் மரணித்து விட்டார்கள் என்ற வதந்தியைச் செவியுற்றமையே முஸ்லிம்கள் விலகிச் சென்றமைக்குக் காரணம். பாதகமேதும் அண்ணலாருக்கு விளைந்து விடவில்லை என்பதை முதலில் உணர்ந்து கொண்டவர் கஅப்-இப்ன்-மாலிக். மகிழ்ச்சிகரமான இச்செய்தியை உரத்த குரலெழுப்பி முஸ்லிம்களுக்குத் தெரிவித்தார் அவர். என்றாலும் முஷ்ரிகூன் இதைச் செவியுறலாம் எனக் கருதி அவரை அமைதியாக இருக்கும்படி கூறினர் நபிகளார்.*

*நபிகளாரைச் சுற்றியிருந்த ஒரு சிறு குழுவினர் பாதுகாப்பு வலையாக அமைந்தனர். யுத்த களத்திலேயே தரித்திருந்த அன்னார், தன்னைச் சுற்ற வர நிகழ்ந்து வருவனவற்றால் சஞ்சலப்படாதிருந்தார்கள். துயருறுத்தும் சூழல்களில் எல்லாம் அன்னார் அவ்வாறுதான் இருப்பார்கள். தமது தோழர்களைத் தம் பக்கம் வருமாறு அன்னார் கூறினார்கள்:*

''(உஹது யுத்தத்தில் அல்லாஹ்வின்) தூதர் உங்களுக்குப் பின்னால் இருந்து உங்களை அழைத்துக் கொண்டிருக்க, எவர் பக்கமும் நீங்கள் பார்க்காமல் விரண்டோடிக் கொண்டிருந்ததை (நினைத்துப் பாருங்கள்)...'' (ஆல-இம்ரான் 3:153)

*முஷ்ரிகூன் சிலர் நபிகளாரை அண்மி விட்டார்கள். நபிகளாருடன் அன்ஸார் எழுவரும் முஹாஜிரூன் இருவரும் இருந்தார்கள். நபிகளார் வினவினார்கள்: ''எம்மிலிருந்தும் அவர்களைத் துரத்தி விடுபவர் யார்? சுவனத்தில் அவர் எனது தோழராயிருப்பார்''. அன்னாரைப் பாதுகாக்கும் முனைப்பில் ஒவ்வொருவராகப் போராடி அன்ஸார் எழுவரும் உயிர்த் தியாகம் செய்தனர். பின் தல்ஹா-இப்ன்-உபைத்-அல்லாஹ் தீரத்துடன் போராடினார். அம்பொன்று தைத்ததனால் அவரது ஒரு கை பலம் இழந்தது. நபிகளாரின் முன்னால் நின்றவராக ஸஅத்-இப்ன்-அபூ வக்காஸ் போராடினார். 'எறியும்! எறியும்! எனது தாயும் தந்தையும் உமக்கு அடைக்கலமாக இருக்கட்டும்' எனக் கூறியவர்களாக நபிகளார் அவருக்கு அம்புகளை எடுத்துக் கொடுத்தார்கள். அம்பெறிதலில் ஸஅத் மிக்க திறமை படைத்திருந்தார்.*

*அபூ தல்ஹா-அல்-அன்ஸாரியும் அம்புகள் எறிவதனூடாக நபிகளா ரைப் பாதுகாத்தார். எதிரிகளைக் காணவென நபிகளார் தலையை உயர்த்தினர். அபூ தல்ஹா கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே! உங்கள் தலையை உயர்த்தாதீர்கள். எதிரிகளின் அம்பொன்று உங்களைத் தாக்கலாம். தாக்கப்படுவது எனது கழுத்தாக இருக்கட்டும்'. அம்புகள் நிறைந்த ஒரு தூணியைக் கொண்டு சென்றார் ஒரு மனிதர். 'அம்புகளை விரித்து வையும், அபூ தல்ஹாவுக்காக' எனக் கூறினர் நபிகளார். அபூ தல்ஹாவின் வீரத்தை மெச்சியவர்களாக நபிகளார் கூறினார்கள்: 'அபூ தல்ஹாவின் குரல் ஒலியானது ஒரு படையணி எழுப்பக்கூடிய ஓசை யை விட முஷ்ரிகூன்களை அச்சுறுத்தக் கூடியது'.*

*ஸஹாபாக்களின் தைரியமும் வீரமும் மிக்க பாதுகாப்புப் போராட் டங்களின் மத்தியிலும் நபிகளார் பல காயங்களுக்குள்ளானார்கள். அன்னாரின் பல் ஒன்று உடைந்தது. முகத்திலும் ஒரு காயம் ஏற்பட் டது. இரத்தம் தோய்ந்த முகத்தினராக அண்ணலார் கூறினார்கள்: ''இஸ்லாத்தின்பால் தம் மக்களை அழைக்கும் இறை தூதரின் முகத்தில் ரணம் வடியச் செய்யும் மக்கள் எவ்வாறு தான் உய்வு பெறுவார்கள்?'' இது குறித்துக் குர்ஆனின் வாசகங்கள் அருளப் பெற்றன:*

''(நபியே!) இவ்விடயத்தில் உமக்கு எவ்விதப் பொறுப்பும் இல்லை. அவர்களை அவன் மன்னித்து விடலாம்; அல்லது அவர்களை அவன் வேதனை செய்யலாம். நிச்சயமாக அவர்கள் அநியாயக் காரர்கள் ஆவர்''. (ஆல-இம்ரான் 3:128)

*தனக்கு இவ்வாறெல்லாம் பாதகங்கள் இழைத்தோருக்கு இறைவன் நேர்வழிகாட்டி அருள்வான் என நபிகளார் நினைக்கக் கூடாத இந் நிலையில், அவர்களுக்கு நேர்வழி காட்டத் தான் நாடினால் அது சாத் தியப்படாத ஒரு கருமமல்ல என இறைவன் நினைவுறுத்தினான். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்ற எண்ணம் வலு வூட்டப் பெறவே நபிகளார் பிரார்த்தித்தார்கள். ''யா அல்லாஹ்! எனது மக்களை நீ மன்னித்து விடுவாயாக, அவர்கள் அறியாத மக்களாக இருக்கின்றார்கள்''.*

*அபூ துஜானா நபிகளாரை தனது முதுகைக் கொண்டு காத்தார். அவரது முதுகில் அம்புகள் பல தைத்திருந்தன. அவரது கண்களுள் ஒன்றும் காயப்பட்டது. நபிகளார் தமது கரங்களால் அதனைச் சொஸ் தப்படுத்தினார்கள். அவரது இரு கண்களிலும் மேன்மையானதாக அக்கண் அமைந்தது.*

ஒரு மனிதர் நபிகளாரிடம் வினவினார். 'நான் கொல்லப்பட்டால் எங்கிருப்பேன் என நீங்கள் கூறக் கூடுமா?' நபிகளார் கூறினார்கள்: 'சுவனத்தில்'. அந்த மனிதர் தன் கையில் வைத்திருந்த பேரீத்தம் பழங்களை வீசியெறிந்து விட்டு உயிர் பிரியும் வரை போராடினார்.

அப்த்-அல்லாஹ் இப்ன் ஜஹ்ஷ் இறைவனிடம் பிரார்த்தித்தார்: 'எமது எதிரிகளை நாம் யுத்தத்தில் சந்திக்கும் போது அவர்கள் என்னைக் கொல்ல வேண்டும். பின் எனது வயிற்றைப் பிளந்து என்னை முடம் செய்ய வேண்டும். ஆக, நான் உன்னைச் சந்திக்கும் போது 'ஏன் அவ்வாறு செய்தாய்?' என நீ என்னைக் கேட்க வேண்டும். அவ்வேளை நான் கூறுவேன்: 'உனக்காக'. தீரத்துடன் போராடிய அப்த்-அல்லாஹ் களத்திலேயே கொல்லப்பட்டார்.

கால் ஊனம் உற்றவராக இருந்தார் அம்ர்-இப்ன்-அல்-ஜமூஹ். என்றாலும் தனது புதல்வர்கள் நால்வருடன் அவர் யுத்தத்தில் பங்கு பற்றுவதில் தீவிரமாக இருந்தார். அவரது நோக்கம் உயிர்த்தியாகம். நபிகளாரிடம் அவர் கேட்டார். 'இன்று நான் கொல்லப்பட்டால் ஊனமுற்ற இந்த காலுடன் நான் சுவனம் செல்ல முடியும் என நீங்கள் கருதுகின்றீர்களா?' நபிகளார் கூறினார்கள்: 'ஆம்'. அம்ர் கூறினார்: 'சத்தியத்துடன் உம்மை அனுப்பியவன் மீது ஆணையாக! அவன் நாடக்கூடுமாயின் நிச்சயமாக இந்த காலுடன் இன்று நான் சுவனம் புகுவேன்'. அம்ர் அன்றைய தினம் களத்தில் உயிர் துறந்தார்.

ஹன்ளலா இப்ன் அபூ ஆமிர், குளியல் கடமையாயிருந்த நிலையில் கொல்லப்பட்டார். உஹதுக்கு முன்னைய இரவு திருமணம் செய்தி ருந்த அவர், யுத்தத்துக்கான அழைப்பு கிட்டியதும் கடமையான உடல் சுத்திகரிப்புச் செய்யாமலேயே போராட்டத்தில் கலந்து கொண்டார். நபிகளார் கூறினார்கள்: ''உங்களது தோழர் வானவர்களால் குளிப்பாட் டப்படுகின்றார்''.

உஹதில் கொல்லப்பட்டவர்களுள் ஒருவர் முகைரிக். பனூ நளீர் யூதர்களின் ஒரு ரப்பி அவர். தான் கொல்லப்பட்டால் தனது சொத்துக் கள், செல்வங்கள் அனைத்தும் நபிகளாரைச் சார வேண்டும் என அவர் கூறியிருந்தார். நபிகளார் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

அரண்களுக்குள்ளே பெண்கள், சிறுவர்களுடன் விடப்பட்டிருந்தனர் இரு முதியவர்கள். ஒருவர் ஹுதைபா-இப்ன்-அல் யமானின் தந்தை, அல்-யமான். மற்றவர் ஸாபித்-இப்ன்-வக்ஷ். யுத்தகளத்தை வந்தடைந்த இருவரும் கொல்லப்பட்டார்கள். ஸாபித் முஷ்ரிகூன்களால் கொல்லப்

பட்டார். அடையாளம் கண்டு கொள்ளப்படாத காரணத்தால் அல்-யமான் முஸ்லிம்களாலேயே கொல்லப்பட்டார். இழைக்கப்பட்ட தவறுக்கான நட்டஈட்டை நபிகளார் வழங்கினார்கள். என்றாலும் மகன் ஹுதைபா அதனை ஸதகாவாக அளித்து விட்டார். ஹுதைபா வுடனான நபிகளாரின் நேசத்தை இது அதிகரிக்கச் செய்தது.

இஸ்லாத்தை வெறுத்திருந்த அம்ர்-இப்ன்-உகைஷ், முஸ்லிம் களைச் சேர்ந்து கொள்ளவென உஹதை அடைந்தார். தம்மோடு அவர் இணைவதைத் தவிர்க்க முனைந்தனர் முஸ்லிம்கள். அவர் கூறினார்: 'நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளேன்'. படுகாயமுறும் வரை போராடிய அவர், தமது குடும்பத்தாரிடம் தூக்கிச் செல்லப்பட்டார். அவரது சகோதரியிடம் வந்த ஸஅத்-இப்ன்-முஆத், 'அவர் யுத்தம் புரிந்தது தனது மக்களது கௌரவத்தைப் பாதுகாக்கவா? அல்லது அல்லாஹ்வுக்காகவா? என அவரிடம் விசாரியும்' என்றார். அம்ர் கூறினார்: 'அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமாக'. பின்னர் அவர் மரணத்துக்காளானார். எந்த ஒரு தொழுகையையும் தொழாமலேயே சுவனத்தை அடைந்து கொண்டார் அம்ர்-இப்ன்-உகைஷ்.

மிக்க தீரத்துடன் போராடிய ஒரு மனிதர் குறித்துக் கூறப்பெற்றனர் நபிகளார். என்றாலும் அன்னார் கூறினார்கள்: ''அவர் ஒரு நரகவாசி''. பின்னர் அன்னார் கூறினார்கள்: ''அவர் யுத்தம் செய்தது தனது கோத்திர கௌரவத்துக்காகவே அன்றி அல்லாஹ்வுக்காக அல்ல''. யுத்த காயங் களினாலான வேதனையைத் தாங்கிக்கொள்ள இயலாத நிலையில் ஓர் அம்பினைக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார் அந்த மனிதர்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் ஜிஹாத் செய்வதன் நோக்கம் எத் துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை உணர்த்துகின்றன. அல்லாஹ்வின் வார்த்தைகளை நிலைபெறச் செய்வதற்காய்ப் போராடு கிறவர் அல்லாஹ்வின் பாதையில் போராடுகின்றார். வேற்றுக் கார ணங்கள் எதற்காகவும் போராடுகின்றவர், அது மக்களின் பார்வையில் எத்துணை முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் உயிர்த் தியாகியாகக் கொள்ளப்படமாட்டார்.

முஸ்லிம் படையினருடன் சில பெண்டிரும் உஹத் நோக்கிச் சென் றனர். அவர்களுள் ஒருவர் உம்ம்-அமாரா-நுஸைபா-பின்த்-கஅப்-அல் மாஸினியா. நபிகளாரைப் பாதுகாக்க உந்தப்பட்ட அவர் காயங்கள் பலவற்றுக்கு உள்ளானார். ஹம்னா-பின்த்-ஜஹ்ஷ்-அல் அஸதிய்யா தாகித்தோருக்குத் தண்ணீர் வழங்கியதோடு, காயமுற்றோருக்குச்

*சிகிச்சைகளும் செய்தார். உம்ம் ஸலீத் முஸ்லிம்கள் தாக சாந்தி செய்து கொள்வதற்காக ஏராளமான தண்ணீர்ப் பைகளைக் கொண்டு வந்தார்.*

*முஸ்லிம்கள் பின் வாங்கியதோடு ஆயிஷாவும், உம்ம் ஸலீமும் காயமுற்றோருக்குத் தண்ணீர் கொண்டு வந்தனர். இவற்றிலிருந்து தெரிய வருவது தேவைப்படுமிடத்து பெண்கள் காயப்பட்டோருக்குச் சிகிச்சை அளிக்கவும், அவர்களைப் பராமரிப்புச் செய்யவும் அனுமதிக் கப்பட்டுள்ளனர் என்பதாகும். பிறர் கவனத்தைத் திசை திருப்பாத வகையில் அவர்கள் உரிய மரியாதையான முறையில் ஆடைகள் அணிந்திருக்க வேண்டும். எதிரிகளால் தாக்கப்பட்டால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் யுத்தம் புரியலாம். ஆண்களுக்கு மாத் திரம் தான் ஜிஹாதுக்குரிய கடமைப்பாடு இருந்தாலும் கூட, முஸ்லிம் பிரதேசங்களுள் எதிரிகள் தாக்குதல் நடத்தக்கூடுமாயின் ஆண்கள், பெண்கள் ஆக அனைத்து முஸ்லிம்களும் போராட வேண்டும்.*

*முஸ்லிம் வீரர்கள் பலத்த காயங்களுக்குள்ளாகி இருந்தனர். நபி களாரும் உபாதைக்குள்ளாகி இருந்தனர். என்றாலும் கூட இரு தரப்பி னரும் களைப்புறும் வரை போராடினர்.*

*உஹதின் சமவெளிக்குப் பின்வாங்கிய நபிகளார், மேடு ஒன்றில் ஏறும் வரை அன்னவரை முஸ்லிம்கள் பின்தொடர்ந்தார்கள். அங்கி ருந்து அவர்கள் முஷ்ரிகூன்களை விரட்டியடிக்க முடிந்தது. நபிகளா ரைப் பாதுகாக்கும் உறுதியளித்திருந்ததன் காரணமாக இறையோன் ஜிப்ரீல், மீகாயீல் ஆகிய வானவர்கள் இருவரையும் அனுப்பி வைத்த தாக உறுதியான ஒரு சான்று உள்ளது. என்றாலும் வானவர்கள் உஹதில் வேறு வகை எதனிலும் போராடியதாக ஸஹீஹான ஆதாரங் கள் இல்லை. மூன்று நியதிகளின் கீழ் இறைவன் முஸ்லிம்களைப் பலப்படுத்துவதாகக் கூறியிருந்தான். ஸப்ர், தக்வா, எதிரிகள் நெருங்கி வந்து தாக்குதல் நடாத்துதல்.*

> ''(வானிலிருந்து) இறக்கி வைக்கப்பட்ட மூவாயிரம் வானவர் களைக் கொண்டு உங்களுடைய இறைவன் உங்களுக்கு உதவி செய்தது உங்களுக்குப் போதாதா? என்று இறை நம்பிக்கையாளர் களுக்கு நீர் கூறியதை(யும் நினைவு கூர்வீராக!) ஆம். நீங்கள் பொறுமையாகவும் அல்லாஹ்வுக்கு (மாறு செய்யாது) அஞ்சியும் நடந்து கொண்டால், அ(ப் பகை)வர்கள் உங்களிடம் இக்கணமே வந்தாலும் (போர்) அடையாளமுள்ள ஐயாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுடைய இறைவன் உங்களுக்கு உதவி செய்வான்''.
> (ஆல-இம்ரான் 3:124-5)

*நபிகளாருக்கும் தமக்கும் நேர்ந்து விட்டன குறித்து முஸ்லிம்கள் கிலேசத்துக்குள்ளாயிருந்தனர். இறைவன் அவர்களை அசதிக்குள்ளாக் கினான். விளைவாக சற்று நேரம் அவர்கள் உறக்கத்தில் ஆழ்ந்தார்கள். விழித்தெழுந்த வேளை அச்சம் அவர்களை விட்டும் நீங்கியிருந்தது. நம்பிக்கையும், உறுதியும் அவர்களது உள்ளத்துள் மீள உயிர்ப்புற்றன. அபூ தல்ஹா அல்-அன்ஸாரீ கூறினார்: 'நானும் அசதிக்குள்ளானவர் களுள் ஒருவனாக இருந்தேன். பலமுறை என் வாள், எனது கரங்களி லிருந்து வீழ்ந்தது. வாழ் வீழ நான் அதனைத் திரும்ப எடுத்தேன். மீளவும் வீழ, மீளவும் நான் எடுத்தேன்'.*

*இறைவன் கூறினான்:*

பின்னர் அத்துக்கத்திற்குப் பிறகு அமைதியளிக்கும் நித்திரையை அவன் உங்கள் மீது இறக்கி வைத்தான். உங்களில் ஒரு பிரிவினரை அது சூழ்ந்து கொண்டது. மற்றொரு (நயவஞ்சகக்) கூட்டத்தினரோ - அவர்களது மனங்கள் அவர்களுக்குக் கவலையை உண்டு பண்ணி விட்டன. அறியாமைக் காலத்தின் எண்ணம் போல உண்மைக்கு மாறாக அல்லாஹ்வைப் பற்றி அவர்கள் சந்தேகம் கொள்ளலாயினர். (அதனால்) 'இ(ப் போர்)க் காரியத்தில் நமக்கு சாதகமாக ஏதேனும் உண்டா?' என்று அவர்கள் கேட்கின்றனர். (அதற்கு) 'நிச்சயமாக, காரியங்கள் அனைத்தும் அல்லாஹ்விடமே உள்ளது' என நீர் கூறுவீராக. (ஆல-இம்ரான் 3:154)

*முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டங்களையோ, இஸ்லாத்தின் விதி குறித்தோ எவ்விதமான அக்கறையும் கொள்ளாத இக்குழு வினரே முனாபிகூன். அவர்களுள் ஒருவர் கூறினார்:*

''இக்காரியத்தில் நமக்கு ஏதேனும் சாதகம் (நாம் விரும்பியவாறு) இருந்திருந்தால் இங்கு நாம் கொல்லப்பட்டிருக்க மாட்டோம்''. (ஆல-இம்ரான் 3:154)

*உண்மையில் அந்தச் சிறு கண்ணுறக்கம் முஸ்லிம்களுக்குப் புத் துணர்ச்சி ஊட்டுவதாக அமைந்தது. பின்வாங்கிச் செல்லும் போது தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான பலத்தை அது அவர்களுக்கு அளித்தது. முஷ்ரிகூன்களில் சிலர் முஸ்லிம்களைப் பின் தொடர்ந்து வந்தார்கள். அவர்களுள் ஒருவர் உபை-இப்ன்-கலப்-அல்-ஜுமஹி. நபிகளாரைத் தான் கொன்று விடுவதாகச் சபதமிட்டு வந்திருந்தார் அவர். ஈட்டி ஒன்று கொண்டு அவரைத் தாக்கிக் காயப்படுத்தினர் நபிகளார். தமது மக்களை அடைந்து கொண்ட அவர் உஹதிலிருந்தும் திரும்பிச் செல்லும் வழியில் மரணத்துக்காளானார்.*

தீர்க்கமான ஒரு வெற்றியுடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் எண்ணத்தை முஷ்ரிகூன் கைவிட்டனர். நீண்டு சென்ற யுத்தத்தாலும், முஸ்லிம்களின் தாக்குப் பிடிக்கும் சக்தியினாலும் அவர்கள் முற்றிலும் பலம் குன்றியவர்களானார்கள். உஹதின் மலையிடுக்குகளில் முஸ்லிம்களைப் பின் தொடர்ந்து செல்வதை அவர்கள் கைவிடுத்திருந்தும் அபூ ஸுஃப்யான் முஸ்லிம்களை நெருங்கிச் சென்று, 'முஹம்மத் உங்களுள் இருக்கின்றாரா?' என வினவினார். நபிகளார் கூறினார்கள்: ''அவருக்குப் பதிலளிக்காதீர்கள்!'' அபூ ஸுஃப்யான் கேட்டார்: ''அபூ-குஹாபாவின் மகன் உங்களுள் இருக்கின்றாரா?'' நபிகளார் கூறினார்கள்: 'அவருக்குப் பதில் அளிக்காதீர்கள்'. அபூ ஸுஃப்யான் வினவினார்: 'அல்-கத்தாபின் மகன் உங்களுள் இருக்கின்றாரா?' பின்னர் அவர் கூறினார்: ''அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள்; இல்லையேல் அவர்கள் பதில் அளித்திருப்பார்கள்''.

உமரால் மேலும் அமைதியாக இருக்க முடியவில்லை. 'இறையோனின் எதிரியே! அது உண்மையல்ல. உம்மை வருந்தச் செய்வனவற்றை அல்லாஹ் பாதுகாத்துள்ளான்'. அபூ ஸுஃப்யான் கூறினார்: 'மேன்மை மிக்கது ஹுபல்'. நபிகளார் தம் தோழர்களுக்குக் கூறினார்கள்: ''அவருக்குப் பதில் கூறுங்கள்.'' ''நாம் என்ன கூற வேண்டும்?'' என அவர்கள் வினவினார்கள். அன்னார் கூறினார்கள்: ''எமக்குத் துணை அல்லாஹ். உங்களுக்குத் துணை ஏதும் இல்லை''. அபூ ஸுஃப்யான் கூறினார்: ''எம்மோடு உள்ளது அல்-உஸ்ஸா. உங்களுக்கு ஓர் உஸ்ஸா இல்லை''. நபிகளார் தோழர்களுக்குக் கூறினார்கள்: ''அவருக்குப் பதில் கூறுங்கள்!''. அவர்கள் கேட்டார்கள்: ''நாங்கள் என்ன கூறுவோம்?'' நபிகளார் கூறினார்கள்: ''எமக்குத் துணை அல்லாஹ். உங்களுக்குத் துணை ஏதும் இல்லை''.

அபூ ஸுஃப்யான் கூறினார்: ''பத்ரில் நாம் கண்ட தோல்விக்குப் பரிகாரம் இன்றைய தினம். யுத்தம் தீர்மானம் இல்லாதது; மோதலில் ஈடுபட்டோர் மாறி மாறிப் பகிர்ந்து கொள்வது. உங்களில் மரணித்தோர் சிலர் முடம் செய்யப்பட்டுள்ளதைக் காண்பீர்கள். அதனை நாம் ஏவவுமில்லை; அதனால் நான் கவலவுமில்லை''.

மற்றோர் அறிவிப்பின் படி, உமர் கூறினார்: ''எம்மில் மரித்தோர் சுவனத்தில். உங்களவர்கள் நரக நெருப்பில்''. முதலில் முஸ்லிம்கள் பதில் அளிக்காமையினால் தான் அவமதிக்கப்பட்டதாகக் கருதினார் அபூ ஸுஃப்யான். முஸ்லிம்கள் உண்மையான நிலைமையை உணர்த்தி தைரியமாகப் பதிலளிக்கும் வரையில் ஆங்காரமும், கர்வமும் கொண்டவராயிருந்தார் அவர்.

ஒரு வருட காலத்துள் மீண்டும் யுத்த களத்தில் சந்திப்பதாக அபூ ஸுஃப்யான் கூறியதாகவும், அதனை முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்ட தாகவும் இப்ன்-இஸ்ஹாக், வாகிதீ ஆகியோர் கூறுவர்.

குறைஷ் எந்தத் திசையில் செல்கின்றார்கள் என்பதைக் கண்டறிய அலீயை நபிகளார் அனுப்பியதாகக் கூறுவர் இப்ன்-இஸ்ஹாக்கும், அல்-ஸித்தீயும். அவர்கள் மதீனாவைச் சூறையாடச் செல்கின்றார் களா? அல்லது மக்காவுக்குத் திரும்புகின்றார்களா? என்றறிய விழைந்த னர் நபிகளார். இந்தப் பணிக்காக ஸஅத்-இப்ன்-அபூ வக்காஸ் அனுப் பப் பெற்றதாகக் கூறுவார் அல்-வாகிதீ. முன்னைய அறிவிப்பு ஏற்பு டையதாகத் தெரிகின்றது. எவ்வாறாயினும் தமது பழிவாங்கல் நட வடிக்கைகளில் திருப்தி கண்டு கொண்டவர்களாகக் குறைஷ் திரும்பிச் சென்றனர். இல்லையேல் அவர்கள் உஹதின் மலை இடுக்குகளில் முஸ்லிம்களைத் தொடர்ந்து சென்று அவர்களை முற்றாகத் தீர்த்துக் கட்டவோ, மதீனாவின் மீது தாக்குதல் நடத்தவோ வேண்டி இருந் திருக்கும்.

குறைஷ் சென்றதும் நபிகளார் உயிர்த்தியாகிகள் அனைவரும் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றார்கள். எழுபது பேர் உயிர்த் தியாகம் செய்திருந்தார்கள். முஸ்லிம்களுள் எவரும் யுத்தக் கைதி களாகப் பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

குறைஷியருள் இருபத்தேழு பேர் மரணித்திருந்தனர் என அவர் களது பெயர்களையும் தருவார் இப்ன் இஸ்ஹாக். முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டிருந்தார் கவிஞர் அபூ இஸ்ஸா. பத்ரில் யுத்தக் கைதி யாகப் பிடிக்கப்பட்டிருந்த அவர், இனிமேல் நபிகளாரை எதிர்த்து யுத்தம் புரிவதில்லை என வாக்களித்தமையால் விடுதலை செய்யப் பட்டிருந்தார். வாக்குறுதியை மீறியவராக உஹதில் மீண்டும் யுத்தத் தில் பங்கு பற்றியமையினால் கொல்லப்பட்டார் அபூ இஸ்ஸா.

ஒரு போர்வையினால் மரணித்தோர் இருவர் சுற்றப்பட்டு அடக்கம் செய்ததான ஒரு ஸஹீஹ் அறிவிப்பு உள்ளது. முதலில் அடக்கத்துக் குள்ளானோர் குர்ஆனில் கூடியளவு அறிந்திருந்தோர். மையத்துக் கான குளிப்பு அவர்களுக்கு நிகழ்த்தப்படவில்லை. அவர்களுக்கான தொழுகை நடாத்தப்படவும் இல்லை. நபிகளார் கூறினார்கள்: ''மறுமை யில் நானே அவர்களுக்கு சாட்சியாக நிற்பேன்''.

சில அறிவிப்புகள் நபிகளார் உஹதில் வீர மரணம் அடைந்தோ ருக்காகத் தொழுதனர் எனத் தெரிவிக்கின்றன. என்றாலும் அவை

தொழுகை நடாத்தப்படவில்லை எனும் அறிவிப்புகளை நிராகரிக்கு மளவு வலுவானவையாக அமையவில்லை. இருவர் அல்லது மூவர் ஒரு குழியில் அடக்கம் செய்யப்பட்டனர். சிலரது உடல்கள் மதீனா வில் அடக்கம் செய்யப்படவென அவர்களது உறவினர்களால் கொண்டு செல்லப் பெற்றிருந்தன. என்றாலும் அவ்வுடல்கள் அனைத்தும் திரும்பக் கொண்டு வரப்பட்டு, உஹதில் அவர்கள் எங் கெங்கு கொல்லப்பட்டார்களோ அதே இடங்களில் அடக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டனர் நபிகளார்.

*வீரத் தியாகிகள் அனைவரும் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் தமது தோழர்களை வரிசைக் கிரமத்தில் நிறுத்தி நபிகளார் பிரார்த் தித்தார்கள: ''யா அல்லாஹ்! அனைத்துப் புகழும் உனக்காயிருக்கும். நீ தந்தவற்றை யாரும் தடுக்க முடியாது; நீ தடுத்தவற்றை யாரும் தர முடியாது. நீ வழி தவற விட்டோரை யாரும் நேர்வழி செலுத்த முடியாது; நீ நேர்வழி காட்டியோரை யாரும் வழி தவறச் செய்ய இயலாது. நீ தடுத்தவற்றை யாரும் தர முடியாது; நீ தந்தவற்றை யாரும் தடுக்க முடியாது. நீ அருகில் ஆக்கிய எவற்றையும் யாரும் நெருங்க முடியாது. யா அல்லாஹ்! உனது அன்பையும் அருளையும் இரணத் தையும் தந்தருள்வாயாக! யா அல்லாஹ்! என்றும் மாறாத, எப்போதும் நிலைத்திருக்கும் உன் அருளை நான் யாசிக்கின்றேன். யா அல்லாஹ்! வறுமையின் போது உன் தாராண்மையையும், அச்சத்தின் போது உனது பாதுகாப்பையும் வேண்டுகிறேன். யா அல்லாஹ்! எம்மை நெருங்க நீ அனுமதித்த தீங்குகளினின்றும், எம்மிலிருந்தும் நீ தடுத்துவிட்ட தீங்குகளினின்றும் உன்னிடமே நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். யா அல்லாஹ்! விசுவாசத்தை நாம் நேசிக்கவும் அவிசுவாசத்தையும் அநீதி யையும், கீழ்ப்படிவின்மையையும் வெறுக்கவும் செய்வாயாக! நாம் நேர்வழியைக் கடைபிடிக்கச் செய்வாயாக! யா அல்லாஹ்! எம்மை முஸ்லிம்களாகவே மரணிக்கச் செய்வாயாக! முஸ்லிம்களாகவே நாம் மீண்டும் எழச் செய்வாயாக! வெட்கமோ பிரச்சினைகளோ இல்லாது நாம் நேர்வழி சென்றோரையே சேர்ந்து கொள்ளச் செய்வாயாக! உனது தூதரை நிராகரித்து உனது பாதையைப் பின்பற்றுவதினின்றும் ஏனை யோரைத் தடுத்து நிற்கும் அவிசுவாசிகளுக்கு எதிராகப் போராடி, உனது தண்டனைகளை அவர்கள் மீது அனுப்புவாயாக! உனது போதனைகள் அளிக்கப்பட்டு அவற்றை நிராகரித்த அவிசுவாசிகள் மீது நீ போர் தொடுப்பாயாக!''*

*பின்னர் தம் குதிரை மீதேறி நபிகளார் மதீனா திரும்பினார்கள்.*

*உஹதின் உயிர்த்தியாகிகள் பற்றிய நினைவுகள் நபிகளாரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தன. உஹதில் உயிர் துறந்தோருடன் தாமும் சங்கமித்திருக்க வேண்டுமே என்ற ஆதங்கம் அன்னவரிடம் எப்போதும் இருந்து வந்தது. அன்னார் கூறுவார்கள்: ''மலைச் சரிவின் தோழர்களுடன் நானும் விடப்பட்டிருக்க வேண்டாமா?''*

*தீரம் மிக்க அந்த யுத்த வீரர்கள் நினைவுக்கு வந்த வேளையெல்லாம் அன்னவர்களை வியந்துரைத்தனர் நபிகளார். அலீ, தனது வாளை பாத்திமாவிடம் கொடுத்துக் கூறினார்: ''இதோ எனது வாள். இன்றைய தினம் இது எனக்கு நன்கு துணை செய்துள்ளது''. நபிகளார் கூறினார்கள்: ''ஸஹ்ல்-இப்ன்-ஹனீப், அபூ துஜானா, ஆஸிம்-இப்ன்-ஸாபித்-அல்-அக்லா, ஹாரிஸ்-அல்-ஸம்மாஹ் எல்லாரும் உம்முடன் நன்கே யுத்தம் புரிந்தார்கள்''.*

*முஸ்லிம் படையினர் மதீனா திரும்பி வந்த வேளை பெண்களும் பிள்ளைகளும் கணவர்களையும் தந்தையர்களையும் தேடி வெளி வந்தனர். ஹம்னா-பின்த்-ஜஹ்ஷ் இடம் அவரது சகோதரர் அப்த்-அல்லாஹ்-இப்ன்-ஜஹ்ஷ், தாய் வழி மாமன் ஹம்ஸா-இப்ன்-அல்-முத்தலிப் ஆகியோர் மரணத்துக்காளான செய்தி கூறப்பெற்ற வேளை அவர், அல்லாஹ்வுக்கே நாம் உரிமையாவோம்; அவனிடமே நாம் மீள்கிறோம் (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) எனக் கூறி, அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரினார். பின் அவரது கணவர் முஸ்அப் கொல்லப்பட்ட சேதி கேட்டதும், அவர் வீறிட்டு அழத் தொடங்கினார். நபிகளார் கூறினார்கள்: ''கணவர், பெண்ணிடம் விசேடமான ஒரு ஸ்தானத்தை வகிக்கின்றார். அவரது சகோதரனும், மாமனும் மரணித்த செய்தி கேட்டு சுய கட்டுப்பாட்டோடு இருந்த அவர், கணவனது மறைவினால் வீறிட்டு அழுகின்றார் அல்லவா?''*

*பனூ தீனாரின் பெண்ணொருவர். அவரது கணவர், சகோதரர், தந்தையார் மூவரும் கொல்லப்பட்டிருந்தார்கள். அவர்களது மரணம் குறித்து அப்பெண் கூறப்பெற்றார். அவர் வினவினார்: ''அல்லாஹ்வின் தூதரது நிலைமை என்ன?'' அல்லாஹ்வின் அருளால் அவர் பாதுகாப்பாக இருக்கின்றார் எனக் கூறப்பெற்ற வேளை தானே அவரை நேரடியாகக் காண வேண்டும் என்றார் அப்பெண்மணி. அண்ணலார் சுட்டிக் காட்டப்பட்ட வேளை அவர் கூறினார்: ''நீங்கள் நலமாக இருப்பதனால் துயரங்கள் அனைத்தும் அற்பமாய் விட்டன''. (அற்பம் என்பதற்கு 'ஜல்ல்' எனும் சொல் பிரயோகமாயது).*

*உயிர்த்தியாகிகளுக்குக் கிட்டும் சன்மானங்கள் குறித்து நபிகளார் முஸ்லிம்களுக்குக் கூறினார்கள். ஜாபிரின் தந்தையார் அப்த்-அல்லாஹ்-இப்ன்-அம்ரின் மகளிடம் அன்னார் கூறினார்கள்: ''நீர் ஏன் கண்ணீர் சிந்துகின்றீர்? அவர் (தனது சுவனத்துக்கு) உயர்த்தப்படும் வரை வான வர்கள் தமது இறக்கைகள் கொண்டு அவருக்கு நிழல் கொடுப்பார்கள்''.*

*தம்மவருள் மரித்தோருக்காக மதீன மக்கள் கண்ணீர் சிந்தி அழு வதைச் செவியுற்ற நபிகளார் கூறினார்கள்: ''... என்றாலும் ஹம்ஸா வுக்காகக் கலங்குவார் யாரும் இலர்'' அன்ஸார்களின் சில பெண்கள் ஹம்ஸாவுக்காகக் கவல்ந்தார்கள். அவர்களோடு கனிவாகப் பேசிய நபிகளார், பெருங்குரல் எழுப்பித் துக்கம் அனுஷ்டிப்பதைத் தடுத் தார்கள். துயரத்தால் எழும் கண்ணீர் அனுமதிக்கப்பட்டாலும் பெருங் குரல் எழுப்பித் துக்கம் அனுஷ்டிப்பது என்றைக்குமாகத் தடுக்கப் பட்டது.*

*உஹதின் ஷுஹதாக்கள் குறித்துக் குர்ஆன் பேசியது:*

''அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை 'இறந்தவர் கள்' என்று திண்ணமாக நீர் எண்ண வேண்டாம். எனினும் (அவர்கள்) தங்களுடைய இறைவனிடத்தில் உயிருள்ளவர்களாக இருக்கின்ற னர். அவர்கள் உணவும் வழங்கப்படு கின்றார்கள்''. (ஆல-இம்ரான் 3:169)

*அறிஞர்கள் பலர், ஷுஹதாக்கள் உண்மையில் உயிரோடுள்ளனர் என்றும் பச்சை நிறப் பறவைகளில் அவர்களது ஆன்மாக்கள் பொதிந் துள்ளன என்றும் கூறுவர். மேலும் அவர்களது தேவைகள் சுவனத் திலிருந்து பூர்த்தியாகின்றன எனவும் அவர்கள் நன்கு உணவருந்தி, இலகுவான வசதியான வாழ்வு வாழ்கின்றார்கள் எனவும் அவ்வறி ஞர்கள் கருதுகின்றனர்.*

*முஸ்லிம்களைத் தேற்றி உஹதின் தாக்கங்களிலிருந்து அவர்களுக்கு ஆறுதலளிக்கும் வகையிலான வாசகங்களும் அருளப் பெற்றன:*

''நீங்கள் தைரியத்தை இழக்காதீர்கள். கவலையும் கொள்ளா தீர்கள். நீங்கள் (உண்மையான ஓரிறை) நம்பிக்கையாளர்களாக இருந்தால் நீங்கள் தாம் மிக்க மேலானவர்கள்''. (ஆல-இம்ரான் 3:139)

''உஹதுப் போரில் உங்களுக்குக் காயம் ஏற்பட்டதென்றால் அதே போன்று (உங்கள் எதிரிகளான) அக்கூட்டத்தாருக்கும் (பத்ரில்) காயம் ஏற்பட்டது. இத்தகைய (சோதனையான) நாட்கள், அவற்றை மனிதர்களிடையே நாம் மாறி மாறி வரச் செய்கிறோம்''.
(ஆல-இம்ரான் 3:140)

''உங்களிலிருந்து (அல்லாஹ்வின் பாதையில்) போர் செய்தவர் களை அல்லாஹ் (வெளிப்படையாக) அறிவிக்காமலும், இன்னும் (அதில்) பொறுமை மேற்கொண்டவர்களை(ச் சோதித்து) அவன் அறிவிக்காமலும் சொர்க்கத்தில் (எளிதாக) நீங்கள் நுழைந்து விட லாம் என்று எண்ணிக் கொண்டீர்களா?'' (ஆல-இம்ரான் 3:142)

*முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டம் காரணமாக மகிழ்வுற் றிருந்த யூதர்களையும், பொய் வதந்தி பரப்பி வந்த முனாபிகூன் களையும் முஸ்லிம்கள் மதீனாவில் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. மதீனாவின் சுற்றுப்புறங்களிலோ, முஷ்ரிக்கான நாடோடி அராபியக் கூட்டத்தார், மதீனாவின் செல்வ வளம் குறித்துப் பொறாமை கொண் டோராயிருந்தனர். முஸ்லிம்களை அழித்தொழிக்காது திரும்புகின் றமை குறித்துக் கைசேதப்பட்டவர்களாகக் குறைஷ் மீண்டும் மதீனா வைத் தாக்கத் திரும்பி வரக்கூடும். தமது நிலையை மீளவும் உறுதி பெறச் செய்து கொள்வது தவிர முஸ்லிம்களுக்கு வேறு மார்க்கம் ஏதும் இல்லை.*

*நபிகளார், உஹதில் பங்கு பற்றிய படையினரை அவர்களில் பெரும்பாலோர் காயங்களுக்குள்ளாகியிருந்த நிலையிலும், குறைஷிப் படையினரைப் பின்தொடர்ந்து செல்லுமாறு பணித்தனர். அவர்கள் ஹம்ரா-அல்-அஸத் வரை சென்றனர். இது மதீனாவிலிருந்து சுமார் எட்டு மைல் தொலைவில் இருந்தது. உஹதில் பங்கு பற்றியவர்கள் தவிர வேறு எவரும் இதில் பங்கு பெற நபிகளார் அனுமதிக்கவில்லை. ஸஹாபாக்களில் எழுபது பேரும் படையிலிருந்த ஏனையோருமாக மொத்தம் அறுநூற்றி முப்பது பேர் இதில் அங்கம் வகித்தனர்.*

*குறைஷியரைப் பின் தொடர்ந்து சென்றவர்களை மெச்சிப் பேசியது குர்ஆன்:*

''(போரில்) தங்களுக்குக் காயம் ஏற்பட்ட பின்பும் அல்லாஹ் மற் றும் (அவன்) தூதரின் அழைப்பை ஏற்(று, மீண்டும் போருக்குப் புறப்பட்டுச் சென்)றனர். அவர்களிலிருந்து நன்மைகள் செய்து (அல்லாஹ்வை) அஞ்சிக் கொள்பவர்களுக்கு மகத்தான (நற்)கூலி உண்டு''. (ஆல-இம்ரான் 3:172)

*உர்வாவிடம் ஆயிஷா கூறினார்: ''உமது தந்தையார் அல்-ஸுபை ரும், அபூபக்ரும் அவர்களுள் இருந்தனர். உஹதில் ஏற்பட்ட துரதிஷ் டங்களை அனுபவித்த பின்னர் மக்கத்தார் விலகிச் செல்ல, அவர்கள் திரும்பி வரக்கூடும் என அஞ்சியவர்களாக நபிகளார் கூறினார்கள்:*

''அவர்கள் சென்ற வழியில் யார் செல்லக்கூடும்?'' பின்னர் அவர்களுள் எழுபது பேரைத் தேர்ந்து கொண்டார்கள்''.

இஸ்னாத் ஏதும் இன்றி, ஹம்ரா-அல்-அஸத்தில் நபிகளார் மூன்று தினங்கள் - திங்கள், செவ்வாய், புதன் - தங்கியிருந்ததாகக் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். அவர்களைக் கடந்து சென்றார் மஅபத்-அல்-குஸாயீ. அவர் ரவ்ஹாவில் அபூ ஸுப்யானையும் முஷ்ரிகூன்களையும் சந்தித்தார். அவர்கள் மீண்டும் திரும்பி வந்து, முஸ்லிம்களைத் தீர்த்துக் கட்டக் கங்கணம் பூண்டோராயிருந்தனர். முஸ்லிம்கள் ஹம்ரா-அல்-அஸத்தில் ஒன்று கூடியிருப்பதை எடுத்துரைத்த மஅபத், குறைஷியர் மக்காவுக்குத் திரும்பிச் செல்வதே உசிதம் என அறிவுறுத்தல் செய்தார்.

உஹதில் தமக்கு நேர்ந்தன என்னவாக இருந்தாலும், தமது எதிரிகள் அனைவரையும் எதிர்த்து நிற்கும் திடசங்கற்பம் தமக்கு இருப்பதனை முஸ்லிம்கள் ஹம்ரா-அல்-அஸதில் ஒன்று கூடியதன் மூலம் புலப்படுத்தியிருந்தனர். மதீனாவுக்கு வெளியே சென்று இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மன உறுதி படைத்தோருக்கு நகரின் உள்ளேயே யூதர்களுக்கும், முனாபிகூன்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது சிரமமான ஒரு கருமமல்ல.

### உஹதின் பின்னர்

உஹதின் விளைவுகளில் ஒன்று மதீனாவைச் சூழவிருந்த நாடோடி அரபுக் கோத்திரங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகப் புத்துயிர்ப்புப் பெற்றதாகும். நஜ்த் வெளியின் பனூ ஸஅத்கள் தலீஹா-அல்-அஸதீ, அவரது சகோதரர் ஸலீமா ஆகியோரின் தலைமையில் ஒன்று கூடினர். அரபாத்தின் பனூ ஹுதைல் கோத்திரத்தார், காலித்-இப்ன்-ஸுப்யான்-அல்-ஹுதைலீயின் கீழ் ஒன்று சேர்ந்தனர். அவர்களது நோக்கமாக இருந்தது, மதீனாவின் செல்வங்களைக் கவர்ந்து கொள்வதும், தமது பண்டைய மத அனுஷ்டானங்களை நிலை நிறுத்திக் கொள்வதும். இதன் மூலம் தாம் குறைஷிகளுக்கு ஆதரவானவர்கள் எனக் காட்டிக் கொள்ளவும், அவர்களோடு நெருக்கம் கொள்ளவும் இயலுமாகும். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டின் முஹர்ரம் மாதத்தில்.

விடயங்கள் மிதமிஞ்சிச் சென்றுவிடும் முன்னமேயே நபிகளார் நடவடிக்கைகள் எடுத்தனர். தலீஹா-அல்-அஸதீயிடம் நூற்றைம்பது பேரோடு அபூ ஸலாமா-இப்ன்-அல்-அஸத் அனுப்பப்பட்டார். எதிர்பார்த்திரா விதமாக சூழப்பெற்ற தலீஹாவின் படையினர் அச்சத்தால்

சிதறி வெருண்டோட, அவர்களது ஒட்டகங்களும் கால்நடைகளும் முஸ்லிம்கள் வசமாயின.

காலித்-இப்ன்-ஸுப்யான்-அல்-ஹுதலீயிடம் அனுப்பப் பெற்றார் அப்த்-அல்லாஹ்-இப்ன்-உனைஸ்-அல்-ஜுஹனீ. அரபாத்தை அண்மிய பத்ன்-அர்னா வெளியில் வைத்து அல்-ஹுதலீ கொல்லப்பட்டார். அவரது கால்நடைகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன.

ஸுப்யான்-அல்-ஹுதலீயின் மரணத்துக்குப் பழிவாங்க ஹுதைல் கோத்திரத்தாருக்கு வாய்ப்புகள் இருந்தன. என்றாலும் அவர்கள் வஞ்சக நடவடிக்கைகளிலேயே ஈடுபடலாயினர். ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஸபர் மாதம் முளரீகளின் உதால், அல்காரா கோத்திரத்தார்கள் மதீனா வில் நபிகளாரிடம் வந்து சமய அனுஷ்டானங்களைத் தாம் கற்றுக் கொள்ள அன்னாரின் தோழர்கள் சிலரை அனுப்பி வைக்குமாறு வேண்டினர். அண்ணலார் தமது ஸஹாபாக்களில் பத்துப் பேரை அனுப்பி வைத்தார்கள். இப்ன்-இஸ்ஹாக், ஆறு பேர் என்பார். மூஸா-இப்ன்-உக்பா, அவர்கள் ஏழு பேர் எனக்கூறி, அவர்களது பெயர்களை யும் தந்து அவர்களது அமீர் ஆக ஆஸிம்-இப்ன்-ஸாபித்-அல்-அக்லா அமைந்தார் எனவும் தகவல் தருவார்.

முளரீகளிடம் அனுப்பப் பெற்ற இந்த நபித்தோழர்கள், மக்காவுக் கும் உஸ்பானுக்கும் இடையிலானதோர் இடத்தில் ஹுதைல்களின் பனூ லிஹ்யான் கிளையினரான சுமார் நூறு வீரர்களால் சுற்றி வளைத் துத் தாக்கப்பட்டனர். முஸ்லிம் குழுவினர் மேட்டுப் பகுதியொன் றினை அண்மித் தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர். முஸ்லிம்கள் கொல்லப்பட மாட்டார்கள் என வாக்குறுதியளித்தனர் நாடோடிக் கோத் திரத்தார். என்றாலும் கூட, ஆஸிம்-இப்ன்-ஸாபித் கூறினார்: ‘‘ஒரு காபிரின் பாதுகாப்பில் நான் கீழிறங்கி வரமாட்டேன்’’. ஆக, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, ஆஸிமும் அவரது தோழர்களுள் ஆறு பேரும் கொல்லப்பட்டனர். மூவர் எஞ்சியிருந்தனர். மீளவும் நாடோடி கள் பாதுகாப்பு உறுதி வழங்கவே அம்மூவரும் கீழிறங்கி வந்தனர். மூவரும் வஞ்சகமாகப் பிணைக்கப்படவே எதிர்த்து நின்ற அப்த்-அல் லாஹ்-இப்ன்-தாரிக் கொல்லப்பட்டார். ஏனைய இருவரும் பிணைக் கப்பட்டவர்களாக மக்கா கொண்டு செல்லப்பட்டு குறைஷியருக்கு விற்கப்பட்டார்கள். அவர்களுள் ஒருவர் குபைப் மற்றவர் ஸைத்.

குபைப்பை, பனூ-அல்-ஹாரிஸ்-இப்ன்-ஆமிர்-இப்ன்-நல்பல் வாங் கினர். பத்ரில் குபைபால் கொல்லப்பட்டிருந்த அல்-ஹாரிஸுக்கான வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வகையில் அவரைக் கொன்று விடலாம்.

அதுவரை அவர்களிடம் ஒரு கைதியாக இருந்தார் குபைப். அல்-ஹாரிஸின் மகள் ஒருவரிடம் சவரம் செய்து கொள்ளவென குபைப் ஒரு சவரக்கத்தியைக் கேட்டெடுத்தார். அருகிலிருந்த அப்பெண்ணின் குழந்தை இதே வேளை மெல்லச் சென்று குபைப்பின் தொடையில் அமர்ந்து கொண்டது. குபைப் கூறினார்: ''நான் இந்தக் குழந்தையைக் கொன்று விடுவேன் என நீர் அஞ்சுகின்றீரா? இறைவன் நாடக்கூடு மாயின் நிச்சயமாக நான் அவ்வாறு ஏதும் செய்ய மாட்டேன்''. பின்னர் அப்பெண்மணி கூறினார்: ''குபைப்பிலும் சிறந்த ஒரு கைதியை நான் ஒரு போதும் கண்டதில்லை. திராட்சைக் குலையொன்றிலிருந்து ஒரு முறை அவர் சாப்பிடுவதை நான் கண்டேன். அக்கால கட்டத்தில் மக்காவில் பழ வர்க்கங்கள் எதுவுமே கிடைப்பதாக இல்லை. அவரோ இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டவராக இருந்தார். இறைவ னால் அவருக்குக்கிட்டிய உணவுப் பதார்த்தமே அன்றி அது வேறு எதுவும் அல்ல''.

கொல்லப்படுவதற்கென அவர் மக்காவிலிருந்தும் வெளியே கொண்டு செல்லப்பட்டார். அவ்வேளை குபைப் கூறினார்: ''இரண்டு ரக்அத்துகள் தொழுது கொள்ள எனக்கு அனுமதி தாருங்கள்''. நிறை வேற்றிய பின் அவர் கூறினார்: ''மரணத்தை அஞ்சியுள்ளேன் என நீங்கள் கருதிவிடக்கூடும் என நான் நினைத்தேன். இல்லையேல் மிக நீண்ட நேரம் நான் தொழுதிருப்பேன்''. இவ்வாறுதான் மரணத்துக் குள்ளாக்கப்படக் கூடுமாயின் இரண்டு ரக்அத் தொழுது கொள்ளும் மரபை ஆரம்பித்து வைத்தார் குபைப். பின்னர் அவர் கூறினார்: ''முஸ்லிமாக நான் கொல்லப்படும் வேளை, இறைவன் பாதையில் எப்படி நான் கொல்லப்படுகின்றேன் என்பது எனக்கு ஒரு பொருட் டல்ல. ஏனெனில் இது அல்லாஹ்வுக்காக ஏற்படும் மரணம். அவன் நாடக்கூடுமாயின் வெட்டப்பட்ட அங்கங்களை அவன் ஆசீர்வதிப் பான்''. குபைப் கொல்லப்பட்டார்.

பத்ரில் கொல்லப்பட்டார் உமையா-இப்ன்-கலாப். அதற்குப் பழி தீர்த்துக் கொள்ளும் முகமாக ஸைத்-இப்ன்-திதன்னாவை விலை கொடுத்து வாங்கியிருந்தார் இப்ன்-கலாபின் மகன் ஸப்வான்-இப்ன்-உமையா. ஸைத் கொல்லப்படும் முன்னர் அபூ ஸுஃப்யான் வின வினார்: ''இறைவன் பெயரால் நான் கேட்கின்றேன் ஸைத், அவரது தலையைச் சீவி விடும் வகையில் இப்போது எம்முடன் நீர் இருக்கும் நிலையில் முஹம்மத் இருக்க நீர் உமது குடும்பத்தாருடன் இருந்து கொள்வதைத் தேர்ந்து கொள்ள மாட்டீரா?'' ஸைத் கூறினார்:

''அல்லாஹ்வின் பெயரால், நான் இப்போது இருக்கும் நிலையில் முஹம்மத் இருக்கக் கூடுவதையோ, ஒரு முள் தைத்த நிலையில் அவர் இருக்க என் குடும்பத்தாருடன் நான் இருப்பதையோ விரும்ப மாட்டேன்''. அபூ ஸுஃப்யான் கூறினார்: ''முஹம்மதின் தோழர்கள் அவர் மீது காட்டிய அன்பினை ஒத்து வேறு எந்த ஒரு மனிதனும் அன்பு காட்டப்பட்டதனை நான் கண்டதில்லை''.

உதால், காரா கோத்திரத்தார்களின் அங்கீகாரத்துடன் ஹுதைல் தான் இந்த சம்பவத்தைத் திட்டமிட்டோர் எனக் கருதுவார் அல்-வாகிதீ. இந்த விவகாரம் 'அல்-ரஜீஇ' சம்பவம் எனக் குறிக்கப்படுகின்றது. இது நிகழ்ந்த தண்ணீர்த் துறையைக் குறிப்பது இது. அல்-ரஜீஇயின் பின்னரும், நாட்டுப்புற அறபிகளுக்கு இஸ்லாம் குறித்த போதனைகள் செய்யத் தூதுக்குழுவினரை அனுப்புவதனை முஸ்லிம்கள் கைவிட்டு விடவில்லை. என்னதான் பாதக விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் இஸ்லாத்தின் தூதைப் பரப்புவதில் அவர்கள் சிரத்தையோடு இருந்தார்கள்.

'சாகச ஈட்டிக்கார்' எனப் பெயர் பெற்றிருந்த அபூ பராஅ-ஆமிர்-இப்ன்-மாலிக் மதீனா வந்தவேளை இஸ்லாமிய அழைப்பு விடுக்கப் பெற்றார். அவர் அதற்கு இணங்குவதாக இல்லை. என்றாலும் நஜ்த் வெளியின் நாட்டுப்புற அராபியரை இஸ்லாத்தின்பால் அழைக்கும் தூதுக்குழுக்களைப் பாதுகாக்கும் உறுதி அளித்தார் அபூ பராஅ.

ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஸபர் மாதம் முன்திர்-இப்ன்-அம்ர்-அல் கஸ்ரஜீயின் தலைமையில் ஒரு குழு அனுப்பப்பட்டது. அவருடன் குர்ஆன் பாராயணம் செய்யும் 'குர்ரா' எழுபது பேர் இருந்தனர். இப்ன் இஸ்ஹாக் அவர்கள் நாற்பது பேர் எனக் கூறுவார். மதீனாவிலிருந்தும் நூற்றியறுபது கிலோ மீட்டர் தொலைவில் பீர்-மஊனாவை அவர்கள் அடைந்த வேளை, ஆமிர்-இப்ன்-அல்-துபைல் அவர்களுக்குத் துரோகமிழைத்தார். அவரிடம் தூதுவராக அனுப்பப்பெற்றிருந்த ஹராம்-இப்ன்-மில்ஹானைக் கொன்று விட்டார் ஆமிர். அவரது கட்டளைப் படி ஹராமின் முதுகில் ஈட்டியால் குத்தினார் ஒருவர். ஹராம் குரலெழுப்பினார்: ''கஃபாவின் இறைவனது கருணையால் நான் வென்று விட்டேன்''.

ரிஇல், தக்வான் கோத்திரத்தார்கள் தூதுக் குழுவினரைச் சூழ்ந்து கொள்ள, நிகழ்ந்த போராட்டத்தில் ஒருவர் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தூதுவர்களும் கொல்லப்பட்டனர். குழுவினரிலிருந்தும் பின் தங்கி

யிருந்த அவர், அம்ர்-இப்ன்-உமையா-அல்தமரீ. நபிகளாரிடம் திரும்பிச் சென்று நிகழ்ந்தன கூறினார் அம்ர். அல்லாஹ்வின் தூதர் ஒரு மாத காலம் காலை வேளைத் தொழுகையின் போது ரிஇல், தக்வான் கோத்திரத்தார்க்கு எதிராகப் பிரார்த்தனை புரிந்தார்கள். இவ்வாறு தான் 'குனூத்' ஓதுவதன் ஆரம்பம் நிகழ்ந்தது. எழுபது 'குர்ரா'வும் முஸ் லிம்களில் மிகச் சிறந்தவர்களாயிருந்தனர். பகல் வேளையில் அவர்கள் விறகு பொறுக்குவார்கள். விற்றுக் கிடைக்கும் பணத்தை அஹ்ல்-அல்-ஸுப்பாவினருக்குத் தானமாக வழங்கிவிடுவார்கள். இரவு வேளையில் அனைவருமாகக் குர்ஆன் கற்றுக்கொள்வார்கள்.

இவ்வாறாக ஹிஜ்ரி நான்கின் ஸபர் மாதம் முஸ்லிம்கள் தம்முள் சிறந்த போதகர்கள் என்பது பேரை இழந்து விட்டனர். நாட்டுப்புற அரபிகளின் பாலை வெளியில் இஸ்லாத்தைப் பரப்புவது எளிதான கருமமாக இருக்கவில்லை. அபாயங்கள் நிறைந்து, மரண அச்சுறுத்தல் கள் விளைப்பனவாயிருந்தன, அத்தகு முனைவுகள். என்றாலும் கூட இஸ்லாமியப் பரம்பலில் போதகர்கள் தயங்காது பணியாற்றலாயினர்.

கொடூரமிக்க இந்நாட்டரபிகள் நிச்சயம் தக்க பாடம் புகட்டப்பட வேண்டும். அல்-ரஜீஇயில் 'குர்ரா'க்களைக் கொன்று விட்ட பனூ லிஹ்யான்களுக்கெதிராக நபிகளார் ஒரு படையெடுப்பினை நடாத் தினார்கள். ஹிஜ்ரி நான்கு, ஜுமதா-அல்-ஊலாவில் நிகழ்ந்தது இது. அன்னார் வருவதனைத் தெரிந்து கொண்ட நாட்டரபிகள் கலைந்து செ ன்று மலைப்புறங்களில் ஒதுங்கிக் கொண்டனர். இது அல்-மதாஇனீயின் அறிவிப்பு. இப்ன்-இஸ்ஹாக், இது நிகழ்ந்தது ஹிஜ்ரி ஆறில் என்பார். இருவரும் இரு வேறு சம்பவங்களைக் குறிப்பதாக இருக்கலாம்.

### பத்ர்-அல்-மவ்இத்

ஹிஜ்ரி நான்கு, துல்கஃதாவில் நபிகளார் ஆயிரத்தைந்நூறு தோழர் களுடனும், குதிரை வீரர்கள் பத்துப் பேருடனும், அலீ-இப்ன்-அபீ -தாலிப் கொடியேந்திச் செல்லப் புறப்பட்டுச் சென்றார்கள். உஹதின் முடிவில் குறைஷித் தலைவர் அபூ ஸுப்யானுடன் செய்து கொண்ட வாக்குறுதியின் பேரில், குறைஷியரை எதிர்பார்த்து முஸ்லிம்கள் பத்ர் நோக்கி முன் சென்றனர். எட்டு நாட்களாக முஸ்லிம்கள் பத்ரில் காத்திருந்தும் குறைஷ் வரவில்லை.

உண்மையில் அபூ ஸுப்யான் இரண்டாயிரம் பேருடனும் ஐம்பது குதிரை வீரர்களுடனும் புறப்பட்டு வந்திருந்தார். என்றாலும் மக்கா

விலிருந்து நாற்பது மைல்கள் தொலைவிலுள்ள மார்-அல்-ளஹ்ரானை அடைந்ததும், வரட்சி மிகுந்த வருடம் அது எனக் கூறிப் படையின ருடன் திரும்பிச் சென்று விட்டார்.

குறைஷியர் தமது வாக்கை நிறைவேற்ற முடியாது போனதால் முஸ்லிம்களின் நிலைமை மேலும் பலம் வாய்ந்ததாகவும், கௌரவம் மீள நிலை நிறுத்தப் பெற்றதாகவும் ஆகியது.

முஸ்லிம்கள் பல திக்குகளுக்கும் தமது படைகளை அனுப்பலாயி னர். ஹிஜாஸ், நஜ்த் வெளிகளின் நாட்டுப்புற அரபிகளுக்குப் பாடம் புகட்டுவதே நோக்கமாக இருந்தது. தய்ய், அஸத் கோத்திரங்களுக்கு எதிராக நஜ்த் வெளிக்கு அபூ உபைதா தலைமையில் படையொன்று அனுப்பப் பெற்றது. யுத்தம் ஏதும் நடைபெறவில்லை; நாட்டரபிகள் பின்வாங்கி மலைப்பிரதேசங்களுள் ஒளிந்து கொண்டனர்.

ஹிஜ்ரி ஐந்தாம் வருடம் ரபீஉல் அவ்வல் மாதம் ஆயிரம் வீரர்களு டன் தூமா-அல்-ஜந்தல் பகுதிக்கு நபிகளார் சென்றனர். முஷ்ரிகூன்கள் பலர் அங்கே கூடியிருப்பதாக அன்னாருக்குச் செய்தி கிடைத்திருந்தது. என்றாலும் அன்னவரின் வருகை குறித்துத் தெரிய வந்ததும் முஷ்ரிகூன் பிரிந்து கலைந்து சென்று விட்டனர். அப்பிரதேசத்தில் தங்கியிருந்த சில தினங்களின் போது ஸராயா எனும் வேவு பார்த்து வரும் நோக்கில் படையினருள் பலர் சுற்றுப்புறப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட னர். போராட்டங்கள் ஏதும் நிகழவில்லை. மதீனா திரும்பும் வழியில் உயைனா-இப்ன்-ஹுஸ்ன்-அல்-பிராஸீயுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டனர்.

# பனூ-அல்-முஸ்தலிக்

குஸாஅக்களின் யமனீ அஸ்தீ கோத்திரத்தில் நின்றும் பிரிந்து சென்ற ஒரு கிளையே பனூ-அல்-முஸ்தலிக். இவர்கள் மதீனா-மக்கா பாதையில் கதீத், அஸபான் பிரதேசங்களில் வாசம் செய்து வந்தனர். மக்காவிலிருந்தும் நூற்றி இருபது கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது கதீத். என்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது அஸபான். ஆக இரு பிரதேசங்களுக்கும் இடையில் நாற்பது கிலோ மீட்டர் இடைவெளி இருந்தது.

குஸாயீ பிரதேசங்கள் மக்கா-மதீனா பாதையில் முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மார்-அல்-ளஹ்ரான், இருநூற்றி நாற்பது கிலோமீட்டர் தூரத்திலுள்ள அல்-அப்வா ஆகிய பிரதேசங்களின் பாதைகளை அண்மியனவாகப் பரந்திருந்தன. ஆக, குஸாயீ பிரதேசத்தின் மத்திய பகுதியில் இருந்த பனூ-அல்-முஸ்தலிக், முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்குமிடையிலான போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தனர்.

முஸ்லிம்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணி வந்தனர் குஸாஅக்கள். இதற்கு முக்கியமான சில காரணங்கள் இருந்திருக்கலாம். அன்ஸார்களுடனான உறவு முறை பந்தங்களும், சமாதான ஒப்பந்தங்களும் இவர்களுக்கிடையிலான நெருக்கத்தை உறுதிப்படுத்தியிருக்கக் கூடும். சிரியாவுக்கான வர்த்தக மார்க்கத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் குறைஷியர் குஸாஅக்களுடன் ஒப்பந்தங்கள் செய்திருந்தனர். என்றாலும் அவற்றை விட வலுவானதாக அமைந்திருந்தன குஸாஅ-முஸ்லிம் உறவுகள். உஹதின் பின்னர் மீளவும் சென்று முஸ்லிம்களைத் தாக்குவது உசிதமானதல்ல என மஅபத்-அல்-குஸாயீ குறைஷியருக்கு அறிவுறுத்தல் செய்தமையை நாம் இங்கு நினைவில் கொள்ளலாம்.

குஸாஅ பிரதேசத்துள் சிலை வணக்கம் பரவலாக இருந்தது. மனாத்-அல்-கதீத் எனும் சிலை அங்கு முஷல்லல் எனும் மலையின் மீது நிறுவப் பெற்றிருந்தது. மேலும் அவர்களது பிரதேசம் மதீனாவை விட மக்காவையே அண்மியிருந்தது. இவையெல்லாம் குஸாஅக்களின் மத்தியில் பொதுவாகவும், பனூ-அல்-முஸ்தலிக் மத்தியில் குறிப்பாக வும் இஸ்லாம் பரம்புவதில் தடங்கல்களை ஏற்படுத்தியிருக்கலாம். வர்த்தக மார்க்கத்தில் அவர்கள் கொண்டிருந்த வகிபாகம் ஒரு புறத் திருக்க, மத ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மேலும் பல பயன்களை அவர்கள் அனுபவித்து வந்தனர். மனாத்-அல்-தாகியா எனும் சிலை அவர்களது பிரதேசத்திலேயே நிறுவப்பெற்றிருந்தது. அதனைத் தரிசிக்கவென அராபியர் யாத்திரைகள் மேற்கொண்டு வந்தனர்.

உஹதின் போது குறைஷியருக்குச் சார்பாக முன்வந்த அரபு கிரா மப்புற கோத்திரங்களுள் பனூ-அல்-முஸ்தலிக்கும் இணைந்து கொண் டமைதான் இஸ்லாத்துக்கெதிரான அவர்களது முதல் நடவடிக்கை யாக இருந்தது.

உஹதின் முடிவுகளினால் மதீனாவைச் சூழ்ந்திருந்த ஏனைய அரபு கோத்திரங்கள் போலவே பனூ-அல்-முஸ்தலிக்கும் முஸ்லிம்களுக்கு எதிரான உந்துதல் பெற்றுக் கொண்டனர். உஹதில் தமது பகைவர் களைச் சார்ந்து முஸ்தலிக் பங்கு பற்றியமையால் அவர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள முஸ்லிம்கள் முயலலாம் எனவும் பனூ-அல்-முஸ் தலிக் கருதியிருக்கலாம். மேலும் குறைஷியரின் வர்த்தக மார்க்கம் தடைப்பட்டு விடக்கூடாது என்பதிலும் அவர்கள் அவதானமாக இருந் தனர். அதன் மூலம் அவர்கள் பெருமளவு வருமானம் ஈட்டி வந்தனர். ஹாரிஸ்-இப்ன்-தராரின் தலைமையில் மக்களைக் கூட்டி, ஆயுதங்கள் சேகரித்து, சூழவிருந்த கோத்திரத்தார்களையும் தூண்டி போராட்டத் துக்குத் தயாராகினர் பனூ-அல்-முஸ்தலிக்.

நிலைமைகளை அறிந்து வரவென நபிகளார் பரீதா-இப்ன்-அல்-ஹுஸைப்-அல்-அஸ்லமீயை அனுப்பினார்கள். மதீனாவைத் தாக்கத் தீட்டப்பட்டு வந்த திட்டங்களை அறிந்து கொண்ட அவர், நபிகளா ரிடம் திரும்பி வந்து விவரங்கள் அளித்தார்.

ஹிஜ்ரி ஐந்து, ஷஃபான் மாதத்து இரண்டாம் நாள் திங்கட்கிழமை, நபிகளார் தனது படையினருடன் பனூ-அல்-முஸ்தலிக் பிரதேசம் நோக்கிச் சென்றார்கள். இதுதான் ஏற்புடையதான ஓர் அறிவிப்பு. அல்-ஸுஹ்ரீ, உர்வா ஆகியோரிடமிருந்து பெற்று இதனை அறிவிப்புச்

செய்வார் மூஸா-இப்ன்-உக்பா. இந்த அறிவிப்பையே அபூ-மஷ்அர்-அல்-ஸிந்தீ, அல்-வாகிதீ, இப்ன்-ஸஅத், இப்ன் கையிம், அல்-தகபீ ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது நடந்தது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு, ஷஃபான் மாதம் எனக் கூறுவார் இப்ன்-இஸ்ஹாக். ஆனால் இது புஹாரி, முஸ்லிம் ஆகியோரின் அறிவிப்புகளோடு முரண்படு கின்றது. ஸஅத்-இப்ன்-முஆத், பனூ-அல்-முஸ்தலிக்குக்கு எதிரான யுத்தத்தில் பங்குபற்றியதாக அவர்கள் அறிவிக்கின்றனர். ஸஅத்-இப்ன் -முஆத், அல்-கன்தக் யுத்தம் முடிவடைந்த உடனேயே நிகழ்ந்த பனூ-குரைளா படையெடுப்பின் போது மரணமுற்றார். ஆக, பனு-அல்-முஸ்தலிக் யுத்தம் அல்-கன்தக்கின் முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும்.

பனூ-அல்-முஸ்தலிக்குக்கு எதிராக மதீனாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற முஸ்லிம் படையினரின் எண்ணிக்கை குறித்து ஸஹீஹான அறிவிப்புகள் இல்லை. என்றாலும் அல்-தகபீ, முஸ்லிம் வீரர்கள் எழுநூறு பேர் எனக் கூறுவார். அவர்களுள் குதிரை வீரர்கள் முப்பது பேர் என்பார் வாகிதீ: முஹாஜிரூன்களில் இருந்து பத்துப் பேர். அன் ஸாரிகளிலிருந்து இருபது பேர்.

பனூ-அல்-முஸ்தலிக் பிரதேசத்தில் தண்ணீர்த்துரவு கொண்ட 'கதீத்'தின் அல்-முரைஸீ எனும் இடத்தில் நிகழ்ந்தன குறித்து இரண்டு முக்கியமான அறிவிப்புகள் உள்ளன. புஹாரி, முஸ்லிம் ஆகிய இரு வரும் இந்த நிகழ்வின் நேரடி சாட்சியான அப்த்-அல்லாஹ்-இப்ன்-உமரின் அறிவிப்பைக் காட்டுவர்: ''பனூ-அல்-முஸ்தலிக் தமது கால் நடைகளுக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக நபிகளார் தாக்குதல் தொடுத்து அவர்களது ஆண்களைக் கொன்று போட்டார்; பெண்களைச் சிறைப்பிடித்தார். சிறைக் கைதி களில் தமது பங்குக்காக நபிகளார் ஜுவைரியாவைப் பெற்றுக் கொண்டார்''.

முஸ்லிமின் பதிவு வருமாறு: யுத்தம் செய்யும் முன்னர் எதிரிகளை இஸ்லாத்தின்பால் அழைப்பது குறித்து நாபியிடம் நான் வினவி எழுதினேன். அவர் எனக்குப் பதிலளித்துக் கூறினார்: ''இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் அதுதான் வழக்கமாக இருந்தது. எனினும் நபிகளார், பனூ அல்-முஸ்தலிக்கை எதிர்பாராத விதமாகத் தாக்கி அவர்களைக் கைப்பற்றினார்''.

முஸ்லிமின் அறிவிப்பின்படி, பனூ-அல்-முஸ்தலிக் மீதான தாக்கு தல் எவ்விதமான முன் எச்சரிக்கையும் இல்லாமல் மேற்கொள்ளப் பட்டது என்பது தெளிவு. ஏனெனில் நபிகளார் ஏற்கெனவே அவர் களுக்கு இஸ்லாம் குறித்த அறிவுறுத்தல்கள் செய்திருந்தனர்.

ஆகவே அவர்கள் உஹதில் குறைஷியர் சார்பாகப் போராடிய தாலும், இப்போது முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் புரிய ஏனையோரை இணைத்து வருவதனாலும், முஸ்லிம்களுடன் யுத்த முனைப்புகள் கொண்டோராகவே அவர்கள் விளங்கினர். எதிர்பார்த்திராத விதம் சூழ்ந்து கொள்ளப்பட்ட அவர்கள் எதிர்த்து நிற்க இயலாதவர்களா னார்கள். புஹாரியும் முஸ்லிமும் அவர்கள் எதிர்த்து நின்றதாக குறிப் பிடவில்லை. ஆனால் இப்ன்-இஸ்ஹாக், அல்-முரைஸீயின் தண்ணீர்த் துரவில் இருசாராரும் போராடியதாகவும், பனூ-அல்-முஸ்தலிக் முற் றாகத் தோற்கடிக்கப்பட்டுச் சிலர் கொல்லப்பட, அவர்களது பிள்ளை கள், பெண்கள், செல்வம் முதலிய அனைத்தையும் முஸ்லிம்கள் தம் மத்தியில் பகிர்ந்து கொண்டதாகவும் கூறுவார்.

இங்கு எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் அல்லது கைது செய் யப்பட்டார்கள், ஈட்டிக்கொள்ளப்பட்ட செல்வம் எவ்வளவு? என்பன குறித்து ஸஹீஹ் அறிவிப்புகள் ஏதும் இல்லை. இப்ன் இஸ்ஹாக் மாத்திரம் பனூ-அல்-முஸ்தலிக்கின் நூறு குடும்பங்கள் விடுவிக்கப் பட்டன எனக் கூறுவார். அல்வாகிதி, அவர்களுள் பத்துப் பேர் கொல்லப்பட்டனர், ஏனையோர் கைதுசெய்யப்பட்டனர், அவர்களுள் ஒருவரேனும் தப்பிக்கொள்ள இயலவில்லை என்பார். மேலும் அவர் கூறுவார்: ''யுத்தப் பொருட்களாக ஆயிரம் ஒட்டகைகள், ஐயாயிரம் ஆடுகள் என்பன பெறப்பட்டன. இருநூறு குடும்பங்கள் சிறைப் பிடிக்கப்பட்டன''. எழுநூறுக்கும் மேற்பட்ட யுத்தக் கைதிகள் இருந்த தாகக் குறிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலமளவு வெளிச் சென்றிருந்த நபிகளார், ரமழான் மாதம் ஆரம்பமாகும் வேளை மதீனா திரும்பினார்கள்.

முரைஸீயின் தண்ணீர்த் துரவுப் பிரதேசத்தில் முனாபிகூன், இஸ் லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராகத் தாம் கொண்டிருந்த காழ்ப் புணர்வை வெளிக்காட்டலாயினர். இஸ்லாம் அடைந்து கொண்ட மற்றுமொரு வெற்றியினால் அவர்களது கசப்புணர்வு மேலும் அதி கரிக்கலாயது. முஸ்லிம்கள் தோல்வி காணும் ஒரு நாளையே அவர்கள் அவாவியிருந்தார்கள்.

முரைஸீயில் முஸ்லிம்கள் வெற்றி காணவே, முனாபிகூன், முஹா ஜிரூன்-அன்ஸார்களிடையே பழம் கோத்திர உணர்வுகளைத் தூண்டி விட முனைந்தனர். அந்த முயற்சியும் பயனளிக்காது போகவே, நபிகளாரையும் அன்னாரது குடும்பத்தாரையும் தாக்குதலுக்குள்ளாக் கும் வகையில் வதந்திகளைப் பரப்பும் முனைப்பைக் கையெடுத்தனர். இது ஹதீஸ்-அல்-இப்க் என வழங்குகின்றது.

முதலாவது முனைப்பின் போது ஸஹாபியான ஸைத்-இப்ன்-அர்கம் ஒரு நேரடி சாட்சியாக விளங்கினார். அவர் அறிவித்தார்: படை யெடுப்பில் நான் பங்கு கொண்டிருந்த வேளை, அப்த்-அல்லாஹ் -இப்ன்-உபை கூற நான் செவிமடுத்தேன்: ''அல்லாஹ்வின் தூதரோடு உள்ளவர்கள் மீது செலவு செய்யாதீர்கள். அதன் மூலம் அவர்கள் அவரை விட்டுச் சென்று விடுவார்கள். நாம் மதீனா திரும்பினால் அவர்களுள் கௌரவம் மிக்கவர்கள், தமக்குள் இழிந்தோரை வெளி யேற்றி விடுவார்கள்''. இதனை நான் எனது மாமனாரிடம் அல்லது உமரிடம் கூறினேன். இது நபிகளாருக்கு அறிவிக்கப்பட்டது. நபிகளார் என்னை அழைத்தார்கள். நிகழ்ந்தன அனைத்தையும் நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபையை யும் அவரது சகாக்களையும் அழைத்தார்கள். அவர்கள் அவ்வாறு ஏதும் கூறவில்லை எனச் சத்தியம் செய்தார்கள். ஆக, நபிகளார் நான் கூறியதை நம்பாது அவர் கூறியதை ஏற்றுக் கொண்டனர். ஒரு போதும் இல்லாத வகையில் நான் கவலையில் ஆழ்ந்தேன். நான் வீட்டிலேயே இருந்து கொண்டேன். எனது மாமனார் கூறினார்: ''அல்லாஹ்வின் தூதர் அவர்கள், நீர் கூறியவற்றை ஏற்காது உம்மை வெறுக்கும்படி செய்து கொண்டீர்''. அவ்வேளை வல்ல அல்லாஹ்வின் வாசகங்கள் அருளப் பெற்றன. **''நபியே! வஞ்சகர்கள் உம்மிடம் வந்தால்...'' (அல்-முனாபிகூன் 63:1)** என ஆரம்பித்தன அவ்வாசகங்கள். என்னை அழைத்து அவ்வாசகங்களை ஓதிய நபிகளார் கூறினார்கள்: ''ஓ ஸைத்! உமது வார்த்தைகளை அல்லாஹ் உறுதி செய்து விட்டான்''.

மற்றுமொரு நேரடி சாட்சி ஜாபிர்-இப்ன்-அப்த்-அல்லாஹ்-அல் -அன்ஸாரீ. அல்-முரைஸீ தண்ணீர்த் துரவில் முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைக்கவென அஸபிய்யாவின் தன்மைகளைக் கிளறிவிடும் வகையில் முனாபிகூன் மேற்கொண்ட நடவடிக்கைகளை விவரிப்பார் அவர்: ''நாங்கள் ஒரு படையெடுப்பில் இருந்தோம். அவ்வேளை முஹாஜிரூன்களில் ஒருவர், அன்ஸார்களுள் ஒருவரை உதைத்து விட்டார். அன்ஸார் ஓலமிட்டார்: ''ஓ அன்ஸார்! எனக்கு உதவி செய்யுங்கள்''. முஹாஜிர் ஓலமிட்டார்: ''ஓ முஹாஜிரூன்! எனக்கு உதவி செய்யுங்கள்''. இவற்றைச் செவியுற்ற நபிகளார் கூறினார்கள்: ''நீங்கள் ஏன் ஜாஹிலிய்யாக் கால வழக்கங்களை நினைவுறுத்து கின்றீர்கள்?'' மக்கள் கூறினார்கள்: ''ஓ அல்லாஹ்வின் தூதரே! முஹா ஜிரூன்களுள் ஒருவர் ஓர் அன்ஸாரியை உதைத்து விட்டார்''. இது அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபையின் செவியிலும் வீழ்ந்தது. அவர் கூறினார்: ''ஓ! அவ்வளவு தூரம் சென்று விட்டார்களா இவர்கள்?

இறைவன் பெயரால், நாம் மதீனா திரும்பிய பின் எம்மில் மேலோர், எம்மில் இழிந்தோரை வெளியேற்றி விடுவோம்''. இது குறித்து நபிகளார் கூறப் பெற்றார்கள். உமர் எழுந்து நின்று கூறினார்: ''இந்த முனாபிக்கின் தலையை நான் சீவி விடுகின்றேன்''. நபிகளார் கூறி னார்கள்: ''அவரை அப்படியே விட்டுவிடும். முஹம்மத் தனது தோழர்களைக் கொன்று போடுகின்றார் என மக்கள் கூறாதிருக்கட் டும்'' முஹாஜிரூன் மதீனா வந்த வேளை அன்ஸார்கள் கூடிய தொகையினராக இருந்தார்கள். காலப் போக்கில் முஹாஜிரூன்களின் தொகை பெருகிவிட்டது''.

மேலும் பலமான அறிவிப்புகள் உள்ளன. மேற்கண்ட அறிவிப்பு களுக்கு முரணாக, அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை இதைக் கூறியது தபூக் யுத்தத்தின் போது தான் என அவை அறிவிக்கின்றன. இது தவ றான அறிவிப்பாகும். ஸஹீஹான அறிவிப்புகள், தபூக் யுத்தத்தில் அவர் பங்கு பெறவில்லை என்றே காட்டுகின்றன.

'அஸபிய்யா'வானது, ஜாஹிலிய்யாவைச் சார்ந்தது என்றே நபிகளார் காட்டித் தந்துள்ளார்கள். அன்னார் கூறினர்: ''உமது சகோதரருக்கு உதவுங்கள். அவர் ஒடுக்குபவராகவோ, ஒடுக்கப்பட்டவராகவோ இருந் தாலும் கூட. அவர் ஒடுக்குபவராயின் அவரைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் அவருக்கு உதவுங்கள். ஒடுக்கப்பட்டவராயின் அவருக்கு ஆதர வளியுங்கள்''. நபிகளார் சத்தியத்தையும் நீதியையும் ஈட்டிக்கொள்ள ஒருவருக்கொருவர் ஆதரவளித்துக் கொள்வதனைப் பிரதானமான தொரு நியதியாக்கி, ''உமது சகோதரருக்கு உதவுங்கள்; அவர் ஒடுக்கு பவராகவோ அல்லது ஒடுக்கப்பட்டவராகவோ இருந்தாலும்கூட'' என் பதற்கு ஜாஹிலிய்யாக் காலத்துக் கருத்தினை மாற்றியமைத்தார்கள்.

பல்வேறு கோத்திரத்தாரிடையிலும் முஸ்லிம்களின் கண்ணியம் நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதற்காக அன்னார், முனாபிக்கான அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபையைத் தண்டிக்காது விட்டனர். கோத்தி ரங்கள் அனைத்தையும் இஸ்லாத்தின்பால் நெருங்கச் செய்வதற்குத் தான் அன்னார் முனைந்தனர். இஸ்லாத்தை விட்டும் அவர்களைச் சேய்மைப்படுத்தக்கூடிய அனைத்து விடயங்களையும் அன்னார் தவிர்ந்து கொண்டார்கள். நபிகளார் தமது தோழர்களுடன் உரையாடு வது கொண்டு மாத்திரம் நிலைமையை நிர்வகித்து விடவில்லை. அன்னார் தமது தோழர்களுடன் இரவு வரை நடந்தார்கள். இரவு முதல் காலை வரையும் மீண்டும் காலை முதல் கதிரவனின் தாக்கத்தால் தகிக்கும் வரை நடந்தார்கள். பின்னரே மக்களை ஓய்வெடுக்க அனு

மதித்தார்கள். களைப்பின் காரணமாக மக்கள் தாம் நிறுத்தப்பட்ட தளத்திலேயே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள். அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை பிரிவினையைத் தோற்றுவிக்க எடுத்த முனைப்புகளி லிருந்தும் மக்களது கவனத்தைத் திசை திருப்பி அமைப்பதற்காக இவ்வாறே அண்ணலார் கருமமாற்றினார்கள்.

அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை-இப்ன்-ஸலூலின் தகைமை அவரது மக்கள் மத்தியிலேயே சோபை இழக்கத் தொடங்கியது. அவர் தவறுகள் இழைத்த போதெல்லாம் மக்கள் குறை கூறலானார்கள். அவரது மகன் அப்த்-அல்லாஹ், தனது தந்தையாரைக் கொன்று விட நபிகளாரிடம் அனுமதி வேண்டினார். அன்னார் கூறினார்கள்: ''அல்ல. அவரோடு அன்புடன் நடந்து கொள்ளும்; நல்லுறவைப் பேணிக் கொள்ளும்''. தனது தந்தையார் மதீனாவினுள் நுழைவதை நபிகளார் அனுமதி வழங்கும் வரை தடுத்து நின்றார் அப்த்-அல்லாஹ். தனது தந்தையாரை நன்கே கௌரவித்து தக்க மரியாதை செய்து வந்த நிலையிலும் அப்த்-அல்லாஹ் அவ்வாறு தான் நடந்து கொண்டார். ஜாஹிலிய்ய அஸபியாவின் செல்வாக்குகளை மிகவும் அண்மிய தலைமுறையின ராய் இருந்தும்கூட, அதன் தாக்கங்களிலிருந்தும் முற்றும் விடுதலை பெற்றிருந்த ஒரு மகனின் தூய்மையான விசுவாசத்தை உணர்த்தும் வியப்புறு அம்சம் இது. தன்னை ஏற்றுக் கொண்டவர்கள் மீது இஸ் லாம் கொண்டிருக்கும் செல்வாக்கை உணர்த்துவது அது. அவர்களது தகைமையிலும், நடவடிக்கைகளிலும் அது கொண்டுவரும் உன்னத மாற்றங்களை இது புலப்படுத்துகின்றது.

அஸபிய்யா உணர்வுகளைக் கிளறிவிடும் தமது முனைப்புகள் தோல்வி கண்ட நிலையில் கொண்ட சினத்தால் அவர்கள் குருடாகி விட்டார்கள். இந்நிலையிலேயே நபிகளாரையும், அன்னாரது குடும்பத் தாரையும் பாதிப்புக்குள்ளாக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்கு வாய்த்தது.

பனூ-அல்-முஸ்தலிக் படையெடுப்பின் போது நபிகளாருடன் சென்றிருந்தார் ஆயிஷா. இது இறைவனால் ஹிஜாப் பற்றிய கட்டளை அறிவுறுத்தப்பட்ட பின்னர் நிகழ்ந்தது. படையெடுப்பினின்றும் திரும்பிவரும் வேளை. மதீனாவை அண்மியதொரு தரிப்பிடத்தில் தனது இயற்கைத் தேவையை நிவர்த்தி செய்து கொள்ள 'ஹௌதா'வை விட்டும் வெளிச் சென்றார் ஆயிஷா. திரும்பிய தருணம் தான் அணிந் திருந்த மாலை தவறிவிட்டமையை உணர்ந்தார். அதனைத் தேடிக் கொள்ளவெனத் திரும்பிச் சென்றார் அவர். இதேவேளை அங்கு வந்த

வேலையாட்கள், ஆயிஷாவின் ஹௌதாவைத் தூக்கி அவரது ஒட்ட கத்தின் மேல் ஏற்றினார்கள். அவர் உருவில் சிறியவராகவும், எடையில் குறைந்தவராகவும் இருந்தமையால் ஹௌதாவின் பளுவிலிருந்த வித்தியாசத்தை வேலையாட்கள் உணரவில்லை. படையினர் மதீனா செல்ல, ஆயிஷா பாலையில் தனித்து விடப்பட்டார். தான் தனிமைப் பட்டு விட்டமையை உணர்ந்த அவர், தன்னைத் தேடி மக்கள் வரும் வரை படையினரின் தரிப்பிடத்திலேயே காத்திருக்க முடிவு செய்தார். அவ்வேளை, நலமிக்கதொரு ஸஹாபியான ஸப்வான்-இப்ன்-அல்-முஅத்தல்-அல்-ஸலமீ அவ்வழியாக வந்தார். ஆயிஷாவைத் தனது ஒட்டகத்தில் ஏற்றி அவரை மதீனாவுக்குக் கூட்டி வந்தார் ஸப்வான். ஸப்வான் மதீனாவை அடைந்த வேளை நபிகளார் ஏற்கெனவே நகருள் நுழைந்திருந்தார்கள்.

இந்நிகழ்வு முனாபிகூன்களுக்குச் சாதகமாக அமைந்தது. வதந்திகள் உருவாகி பரவத் தொடங்கின. இதனைப் பரப்புவோரின் தலைவராக இருந்தவர் அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை-இப்ன்-ஸலூல். இவரால் தூண்டப்பட்டவர்கள், மிஸ்தா-இப்ன்-அதாதா, ஹஸ்ஸான்-இப்ன்-ஸாபித், ஹம்னா-பின்த்-ஜஹ்ஷ் ஆகியோர். இவ்வாறாக உம்ம்-அல்-முஃமினீன் ஆயிஷா அவதூறுக்கும், பொய்க் குற்றச்சாட்டுக்கும் ஆளானார்.

முனாபிகூன்களின் வதந்திகளாலும், அவதூற்றுக் கதைகளினாலும் நபிகளார் மிக்க மனத் துயருக்காளானார்கள். பள்ளிவாசலில் முஸ்லிம்களுக்கு இதனை அறிவுறுத்தவும் செய்தார்கள். தமது மனைவி மீதும், தோழர் ஸப்வான்-இப்ன்-முஅத்தல் மீதும் தாம் கொண்டுள்ள நம்பிக்கையைப் பகிரங்கமாகவே உறுதிப்படுத்தினார்கள். அல்-அவ்ஸ்களில் இருந்து இவ்வாறான வதந்திகள் பரப்புவோர் எவராயினும் அவரைக் கொன்றுவிடத் தான் தயார் எனக் கூறினார் ஸஅத்-இப்ன்-முஆத். அவரை எதிர்த்துப் பதிலளித்தார் ஸஅத்-இப்ன்-உபாதா.

இவ்விருவரையும் நபிகளார் அமைதிப்படுத்தியிருக்காவிடின் அவ்ஸ்-கஸ்ரஜ் கோத்திரங்களுக்கிடையில் பெரும் மோதல்கள் ஏற்பட்டிருக்கலாம்.

சுகவீனமுற்றிருந்த ஆயிஷா, தனது தந்தையின் வீடு செல்ல அனுமதி வேண்டினார். நபிகளாரின் அனுமதியுடன் தந்தை வீடு சென்ற வேளை தான், தன் மீதான அவதூற்றுக் காதைகளைத் தெரிய வந்தார் அவர். அவரது அழுகையை நிறுத்த முடியவில்லை. அவருக்குக் கண்ணுறக்கம் வருவதாகவும் இல்லை. தான் நிரபராதி என்பதை இறையோன் தனது

*வாசகங்கள் மூலமாக அவனது தூதருக்கு அறிவுறுத்தல் செய்ய வேண்டு மென அவாவினார் ஆயிஷா. ஒரு மாத காலமளவு இறைவாசகங்கள் அருளப்பெறவில்லை. நபிகளார் மிக்க துயருக்குள்ளானார்கள். தமது சிந்தை அமைதி பெறுவதற்காக, முனாபிகூன்களின் வாய்களை மூடு வதற்காக, தமக்கு மிகவும் விருப்பமானவர்களாக அமைந்த தனது மனைவியையும், அவரது தந்தையாரையும் பாதுகாப்பதற்காக இறை வாசகங்கள் அருளப் பெற வேண்டும் என அண்ணலாரும் அவாவி னார்கள். அவ்வேளை அருளப்பெற்ற வாசகங்கள் கூறின:*

''நிச்சயமாக எவர்கள் (நபியின் மனைவியான ஆயிஷா மீது) அவதூறைக் கொண்டு வந்தார்களோ, அவர்களும் உங்களில் ஒரு கூட்டத்தினர் தாம்; அ(வ்வாறு நேர்ந்த)தை உங்களுக்குத் தீமை என்று நீங்கள் எண்ண வேண்டாம். எனினும் (இறுதியில்) அது உங்களுக்கு நன்மை தான். (அவதூறு சொன்ன) அவர்களிலிருந்து ஒவ்வொரு மனிதனுக்கும் பாவத்திலிருந்து அவன் சம்பாதித்தது (தண்டனை) உண்டு; அவர்களிலிருந்து எவன் இதனுடைய பெரும் பங்கைச் சுமந்து கொண்டானோ அவனுக்குக் கடுமையான வேதனை உண்டு''.

''இதனை நீங்கள் கேள்விப்பட்ட பொழுது, இறை நம்பிக்கையா ளர்களான ஆண்களும் இறை நம்பிக்கையாளர்களான பெண்களும் தங்களுடைய மனங்களில் நல்லதையே எண்ணி, இது பகிரங்கமான அவதூறு என்று சொல்லியிருக்க வேண்டாமா?''

''இதன் மீது நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டாமா? அவ்வாறு சாட்சிகளை அவர்கள் கொண்டு வராத பொழுது அவர்கள் தாம் அல்லாஹ்விடத்தில் பொய்யர்கள்''.

இன்னும் அல்லாஹ்வுடைய கருணையும் அருட்கொடையும் உங்கள் மீது இவ்வுலகிலும் மறுமையிலும் இல்லையானால், எதில் நீங்கள் மூழ்கி இருந்தீர்களோ அந்த ஒன்றில் மகத்தான வேதனை உங் களைத் தொட்டிருக்கும்.

இதனை உங்களுடைய நாவுகளைக் கொண்டு நீங்கள் ஒருவருக் கொருவர் எடுத்து(ச் சொல்லி)க் கொண்டும் எது பற்றி உங்களுக்கு (உறுதியான) அறிவு இல்லையோ அந்த ஒன்றை உங்களுடைய வாய்களினால் நீங்கள் கூறிக் கொண்டிருந்த பொழுது (உங்களுக்கு வேதனை ஏற்பட்டிருக்கும்.) அதனை இலேசாக நீங்கள் எண்ணிக் கொண்டீர்கள். அதுவோ அல்லாஹ்விடத்தில் (குற்றத்தால்) கடுமை யானதாகும்.

அதனை நீங்கள் கேள்விப்பட்ட பொழுது, ‘‘இதனை நாம் பேசுவது நமக்கு(த் தகுதி) இல்லை. (அல்லாஹ்வே) நீ மகாத் தூய்மையான வன். இதுகடுமையான அவதூறு’’ என்று நீங்கள் கூறி இருக்க வேண்டாமா?

நீங்கள் இறை நம்பிக்கையாளர்களாக இருந்தால் இதுபோன்றதன் பால் எக்காலத்திலும் நீங்கள் மீளலாகாது என்று அல்லாஹ் உங்க ளுக்கு உபதேசிக்கிறான்.

அல்லாஹ் உங்களுக்கு(த் தன்) வசனங்களை விவரிக்கிறான். அல்லாஹ் முற்றும் அறிந்தவன், ஞானமுள்ளவன்.

இறைநம்பிக்கை கொண்டவர்களிடையே மானக்கேடான காரியம் (அவதூறு பற்றிய செய்தி) பரப்புவதை நிச்சயமாக எவர்கள் விரும்புகின்றனரோ அத்தகையோர் - அவர்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் நோவினை தரும் வேதனையுண்டு. - அல்லாஹ் (அனைத்தையும்) அறிவான் ஆனால் நீங்கள் அறியமாட்டீர்கள்.

இன்னும் உங்கள் மீது அல்லாஹ்வுடைய பேரருளும் அவனின் கிருபையும் இல்லாதிருந்தால் (உங்களை வேதனை) பிடித்திருக் கும். நிச்சயமாக அல்லாஹ் மிக்க இரக்கமுடையவன். மிக்க கருணை யுடையவன். (அந்நூர் - 24:11-20)

*தனது உறவினரான மிஸ்தாவுக்கு உபகாரங்கள் பல செய்து வந்தார் அபூபக்ர். அவதூறு பரப்புவதில் அவர் வகித்த பங்கின் காரணமாக மனங்கவல்ந்த அவர், இனிமேல் மிஸ்தாவுக்கு எவ்வித உதவியும் செய்வதில்லை எனச் சத்தியம் செய்தார். அவ்வேளை மேல்வரும் இறைவாசகம் அருளப்பெற்றது:*

இன்னும் உங்களில் (இறைவனின்) கொடை அருளப் பெற்றவர்கள் (பொருள்) வசதியுடையவர்கள், உறவினர்களுக்கும் ஏழைகளுக் கும் அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்கிறவர்களுக்கும் கொடுக்காமல் இருக்க சத்தியம் செய்ய வேண்டாம். எனவே (அவர்களை) அவர்கள் மன்னித்து விடவும். பொருட்படுத்தாமல் இருக்கவும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன். மிகக் கிருபையுடையவன். (அந்நூர்-24:22)

*அபூபக்ர் மிஸ்தாவுக்கான உதவிகளைத் தொடர்ந்தும் செய்யலானார்.*

*அவதூறு பரப்புவதில் நான்மேலே குறிப்பிட்ட மூவரும் பங்கேற்றி ருந்தனர் என்பதில் ஐயங்கள் இல்லை. என்றாலும் பாரிய பங்களிப்பு செய்தவர்கள் இப்னு உபை இப்னு ஸலூல் இன் தலைமையிலான முனாபிகூன்களே. நாம் மேற்கண்ட மூவரையும் பெயர் சுட்டிக் குறிப் பிட்டமைக்கான காரணம் அவர்கள் மூவரும் முஸ்லிம்கள் என்பத னாலாகும். நிச்சயமாக அவர்கள் முனாபிகூன்களின் வலையில் வீழ்ந்திருக்கக் கூடாது. அவர்கள் மீது குறை கூறியது அல் குர்ஆன்:*

இதனை நீங்கள் கேள்விப்பட்ட பொழுது இறைநம்பிக்கையாளர் களான ஆண்களும் இறைநம்பிக்கையாளர்களான பெண்களும் தங்களுடைய மனங்களில் நல்லதையே எண்ணி இது பகிரங்கமான அவதூறு என்று சொல்லியிருக்க வேண்டாமா? (அந்நூர் - 24:12)

*நபிகளாரின் இல்லத்து விவகாரங்கள் குறித்து விசுவாசிகளுள் ஏராளமானோர் நன்கு அறிந்திருந்தனர். நபிகளாரின் குடும்பம் மீது ஆழ்ந்த மதிப்பும் கௌரவமும் செலுத்தினர் அவர்கள். முனாபிகூன் களின் அவதூற்றுக் கதைகளைச் செவியுற்ற அபூ அய்யூப் அல் அன்ஸாரி கூறினார்:*

''இதனை நாம் பேசுவது நமக்கு(த் தகுதியில்லை.) நீ மகாத் தூய் மையானவன்; இதுகடுமையான அவதூறு!'' (அந்நூர் - 24:16)

*மிஸ்தா, ஹஸ்ஸான் மற்றும் ஹம்னா ஆகிய மூவருக்கும் அவதூறு பரப்பியமைக்காக 'ஹத்த்' தண்டனை அளிக்கப்பட வேண்டும் என விதித்தனர் நபிகளார். பொய்யான வதந்திகளைப் பரப்புவதில் பெரும் பங்காற்றிய அப்துல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூல் மீது எவ்வித தண்டனையும் நியமமாகவில்லை. தண்டனையானது இழைத்த குற் றங்களுக்குப் பரிகாரமாக அமைவது. இறைவன், அப்துல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூலுக்கு மறுமையில் கடுமையான தண்டனையை வாக்களித்திருந்தான். ஆதலால் அவர் இங்கு தண்டிக்கப்படவில்லை. இந்த முனாபிக் தனக்கு எதிரான ஆதாரமாகக் கொள்ளக்கூடிய எத னையும் செய்ததாகத் தெரியவில்லை என்று கூறப் பெற்றது. ஆக, அவர் விசுவாசிகளின் முன்னால் 'இப்ஃக்' அவதூறு குறித்து எதுவும் பேசியதில்லை. பலவீனமான சில அறிவிப்புக்கள் அவர் தண்டிக்கப் பட்டதாகக் கூறுகின்றன.*

*உண்மையில் (ஹதீஸ் அல் இப்ஃக்) அவுஸ் மற்றும் கஸ்ரஜ் போன்ற கோத்திரத்தாரிடையே அஸாபீயா உணர்வுகளைக் கிளறி விடவே பயன்படுத்தப்பட்டது. அவர்களது தலைவர்கள் பள்ளிவாசலில்*

தீவிரமான வாக்குவாதங்களில் ஈடுபட்டார்கள். முனாபிகூன்களின் நோக்கமாக இருந்ததும் அதுவே. முஸ்லிம்களிடையிலான ஒற்றுமையைச் சீர்குலைத்து, அவர்களது தலைவர்கள் மீதிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்து, அவர்கள் மத்தியில் பித்னா முரண்பாடுகளை உருவாக்கி அவர்களிடையே பிரிவினைத் தீயை மூட்டி விடுவதே அவர்கள் அவாவியது. என்றாலும் வல்ல அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்து விட்டான். இரு கோத்திரத்தாரையும் சாந்தப்படுத்தி அவர்களது ஒற்றுமை குலைந்து விடாமல் நபிகளார் காப்பாற்றியதன் காரணமாக மிகவும் கடுமையான ஒரு பரீட்சையை அவர்கள் இலகுவாகக் கடந்து சென்றார்கள்.

ஆயிஷா, இறைவன் மீது கொண்டிருந்த அசையாத நம்பிக்கை, கைக்கொண்ட பொறுமை என்பவற்றால் அவரது குற்றமற்ற தன்மையை பறைசாற்றும் குர்ஆனிய வசனங்கள் சில அருளப் பெற்றன. காலா காலமாக தமது தொழுகைகளில் முஸ்லிம்கள் அவற்றைப் பாராயணம் செய்து வருகின்றனர்.

நபிகளார் மதீனாவுக்குத் திரும்பியவுடன் ஜுவைரியா பின்த் அல்ஹாரிஸ் இப்ன் அபூ ளிரார் அன்னாரைச் சந்தித்தார். யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்டவர்களுள் ஒருவரான அவர் ஸாபித் இப்ன் கைஸ் இப்ன் அல் ஷம்மாஸ் பெற்றுக் கொண்ட கைதிகளுள் ஒருவர். தனது விடுதலைக்காக ஜுவைரியா ஸாபித்துடன் ஓர் ஒப்பந்தம் செய்திருந்தார். நபிகளாரைச் சந்தித்த ஜுவைரியா தனது மக்கள் மத்தியில் தனக்கிருக்கும் உயர்ந்த ஸ்தானம் குறித்து கூறினார். அவரது எஞ்சிய ஈட்டுப் பணத்தைச் செலுத்தி நபிகளார் அவருக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தனர். பின்னர் ஜுவைரியாவை மணந்து கொண்டனர் நபிகளார். இந்த திருமண பந்தத்தைச் செவியுற்று மக்கள் ஏனைய கைதிகள் அனைவரையும் விடுதலை செய்து விட்டனர். 'இந்தக் கைதிகள் திருமணத்தின் மூலம் நபிகளாரின் உறவினர்களாகி விட்டனர்' என்றனர் மக்கள். தமது மக்களுக்கு ஜுவைரியாவை விடச் சிறந்தொரு அருட்கொடை கிட்டியிருக்க முடியாது. நூறு குடும்பங்கள் விடுதலை ஈட்டிக்கொண்டன. அவருக்கான மஹர் அவரது விடுதலையாக அமைந்தது.

அல் ஹாரிஸ் அபூ ளிரார் மதீனா வந்து ஜுவைரியாவை விட்டு விடும்படி வேண்டுகோள் விடுத்தார். 'அவரே தேர்ந்து கொள்ளட்டும்' என்றனர் நபிகளார். ஜுவைரியா நபிகளாரோடு தங்குவதையே தேர்ந்து கொண்டார். அல்-ஹாரிஸும் அவருடைய மக்களும் இஸ்லாத்தை

ஏற்றுக் கொண்டனர். அம்மக்களது ஸதகாவைச் சேகரிக்கும் பொறுப்பை நபிகளார் அல்-ஹாரிஸிற்கு கொடுத்தார்கள்.

ஜுவைரியாவுடனான நபிகளாரின் திருமணம், அவரது மக்கள் ஈட்டிக் கொண்ட விடுதலை என்பன அம்மக்களது இதயங்களை இஸ்லாத்தின்பால் ஈர்த்து விட்டன. ஆக, இஸ்லாத்தைப் பாதுகாக்கவும் இறைவனுக்கும் அவனது கட்டளைகளுக்கும் அடிபணியவுமென அவர்கள் ஜிஹாதில் பங்கு பெறும் காலம் கனிந்தது.

ஒருமுறை சதகா சேகரிப்பாளரின் வருகை தாமதமான நிலையில், ஹாரிஸ் இப்ன் அபீ ளிராரும் அவரது மக்களும் கவலைக்குள்ளாகி காரணத்தை அறிந்து கொள்ள நபிகளாரிடம் செல்வதற்குத் தயாரானார்கள்.

நபிகளார் ஸகாத்தைக் சேகரிக்கவென வலீத் இப்ன் உக்பாவை அனுப்பியிருந்தார்கள். இடையில் அச்சம் கொண்ட அவர், மதீனா திரும்பி வந்து அம்மக்கள் தமது ஸகாத்தைக் கொடுக்க மறுத்து, தன்னை கொலை செய்யவும் முனைந்தனர் எனக் கூறி நின்றார். நபிகளார் அவர்களுக்கு எதிராக ஒரு படையணியை அனுப்பி வைத்தார்கள். இதற்கிடையில் அல்ஹாரிஸ் தான் அல்-வலீதைக் காணவே இல்லை எனச் சத்தியம் செய்து தனது நிலையை தெளிவுறுத்த நபிகளாரிடம் சென்றார். இவர் குறித்தே மேல்வரும் வாசகம் அருளப்பெற்றது:

> ‘‘இறைநம்பிக்கையாளர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தியை உங்களிடம் கொண்டு வந்தால், அதனை நன்கு விசாரித்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். இல்லையேல் அறியாமையினால் நீங்கள் ஒரு கூட்டத்திற்கு தீங்கிழைத்து விடுவீர்கள். அப்போது நீங்கள் செய்தவற்றின் மீது வருத்தப் படுவோராக ஆகிவிடுவீர்கள்’’. (அல்-ஹுஜுராத் 49:6)

இந்த இறைவாசகம் அருளப் பெற்றமைக்கான காரணங்கள் பற்றிய அறிவிப்புக்களில் மிக ஏற்புடைய விளக்கம் இதுவே என்பார் இப்ன் கஸீர்.

இது நிகழ்ந்தது, மக்கா வெற்றியின் போதாகும். அல்-வலீத் இப்ன் உக்பா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னராகும். இதிலிருந்து பனூ அல்-முஸ்தலிக் மீது மேற்கொள்ளப்பட்ட படை எடுப்பின் பின்னரான வருடங்களில் அவர்களது விசுவாசம் நன்கு உறுதி பெற்றுவிட்டமை தெளிவாகின்றது.

இந்தப் படையெடுப்பின் போது பல நியமங்கள் நிறுவப் பெற்றன. அவற்றுள் பின்வருவனவும் அடங்கும்.

1) ஏற்கனவே இஸ்லாம் குறித்து அறிவுறுத்தப் பெற்றவர்கள் எவ்வித முன்னெச்சரிக்கையும் அளிக்கப்படாமல் தாக்கப்படலாம். இஸ்லாத்தின் தூதுத்துவம் குறித்து அறியாதவர்கள் இருக்கக் கூடுமாயின் யுத்தத்தை ஆரம்பிக்கும் முன்னர் அவர்கள் இஸ்லாத்தின்பால் அழைக் கப்பட வேண்டும்.

2) இந்தப் படையெடுப்பில் நடந்ததுபோல கைதியாக அமைந்த வரை விடுதலை செய்வது அவருடைய மஹராக அமையலாம் என்பது. இது போலவே மற்றும் ஒரு சம்பவத்தை நாம் பின்னர் காண்போம். அது கைபர் படையெடுப்பின் போது ஸபியா பின்த் ஹுயை இப்ன் அக்தாப் சம்பந்தப்பட்டதாகும்.

3) தமது பிரயாணங்களின் போது தம் மனைவியருள் எவர் அழைத்துச் செல்லப்படலாம் என அவர்களிடையே சீட்டுப் போட்டுத் தேர்வு செய்யலாம் என்பது. இம்முறை ஆயிஷா இவ்வாறு தேர்வாகி, படையெடுப்பில் கலந்துகொண்டார். உம்ம் ஸலாமாவும் இப்படை யெடுப்பில் கலந்து கொண்டதாகக் கூறுவார் அல் வாகிதீ. ஆனால் அது உறுதிப்படுத்தப்படவில்லை. ஆயிஷா இதில் இணைந்து கொண் டமை இராணுவ நடவடிக்கைகளில் பெண்கள் பங்கு கொள்ளலாம் என்பதை உணர்த்துகின்றது. இது குறித்தும் அதற்கான நியதிகள் குறித்தும் நான் ‘உஹத்’ பற்றிய அத்தியாயத்தில் விளக்கியுள்ளேன்.

4) அவதூறு பரப்புவோர் மீது ‘ஹத்த்’ கசையடி தண்டனையைப் பிரயோகம் செய்தல்.

5) இந்த யுத்தத்தில் நிகழ்ந்தது போல அரேபியர் யுத்தக் கைதிகளாக கொள்ளப்படலாம் என்பது. இதுவே பெரும்பாலான அறிஞர்களது அபிப்பிராயமாக உள்ளது.

அல் குர்ஆன் மூலம் ஆயிஷா குற்றமற்றவர் என நிரூபணம் ஆனதன் பின்னர் எவரேனும் அவரை இகழ்ந்துரைக்கவோ குற்றம் சுமத்தவோ முனைவாராயின் நிச்சயமாக அவர் ஒரு காஃபிர் என்பதில் அறிஞர்கள் அனைவருமே ஒத்த கருத்தினராக உள்ளனர். அவ்வாறு செய்பவர் குர்ஆனுக்கு முரண்பட்டு நிற்பவராவார்.

இந்த யுத்தத்தின் போது நிலைபெற்ற மற்றுமொரு நியதி ‘‘புணர்ச்சி இடைநிறுத்தம்’’ Coitus Interruptus பற்றியது. நபித் தோழர்கள் இது

*குறித்து நபிகளாரிடம் வினவினார்கள். அதனை அனுமதித்த நபிகளார் கூறினார்கள். 'நீங்கள் ஏன் அதைசெய்யக் கூடாது, உருவாக வேண்டி நியமமாக உள்ள எந்த ஓர் உயிரும் உருவாகியே தீரும். உலக முடிவு வரை இவ்வாறே நிகழும்.' உலமாவுள் பெரும்பாலானோர், சுதந்திர மான ஒரு மனைவியுடன் புணர்ச்சி இடைநிறுத்தம் செய்வது, அவரது அனுமதியுடன் செய்யப்படுமாயின் ஏற்புடையதாக அமையும் எனக் கருதுகின்றனர்.*

*'ஹதீஸ் அல் இப்ஃக்' நபிகளாரின் மானுடத் தன்மையை தெளி வாகக் காட்டுகின்றது. தமது மனைவி மீது முனாபிகூன்கள் மேற் கொண்ட தாக்குதலின் காரணமாக அன்னார் பெரிதும் துயருழந்திருந் தார்கள். தமது மனைவி மீது கொண்டிருந்த அக்கறை, பாசம் அவரது தந்தையார் மீது கொண்டிருந்த நெருக்கம், அன்பு என்பனவெல்லாம் எப்படி இருந்தாலும் நிலைமையைத் தெளிவுறுத்திக்கொள்ள அன்னார் இறை வாசகங்களை யாசிக்க இயலாதிருந்தனர். அன்னாரைத் தீவிர பரீட்சைக்கு உள்ளாக்கும் வகையில் ஒரு மாதகாலமளவு இறை வாச கங்கள் தாமதமாகின. அன்னாரின் உள்ளுணர்வின் காரணமாகவோ அல்லது சிந்தையின் செயல் வடிவமாகவோ தான் ஏற்படுவதாயின் அன்னார் அனுபவிக்க வேண்டியிருந்த தீவிர அழுத்தத்தின் பளுவே, இறை வாசகங்கள் அருளப்பெறுவதற்கான உந்துதல்களை அளித்தி ருக்கலாம். அதன் மூலம் அன்னாரைத் துயருறுத்தி வந்த குழப்பங்கள், கவலைகள் அனைத்துக்கும் விடிவு கிட்டியிருக்கும். ஆனால் குர்ஆன் கூறுவது போல அன்னார் ஒரு சாதாரண மனிதனாகவே விளங்கினார்கள்:*

> ''நபியே! நீர் கூறும், நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற மனிதன் தான். எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்படுகின்றது.''
> (அல் கஹ்ப் 18:110)

*இறை வாசகங்கள் மீது அன்னார் எவ்வித ஆதிக்கமும் செலுத்த இயலாதவர்களாக அதனை வரவைக்கவோ, அதற்கு எதனையும் இணைக்கவோ சக்தியற்றவர்களாக இருந்தார்கள்:*

> ''அன்றியும் (ஏதேனும் நாம் சொல்லாத) கற்பனையான செய்தி களில் சிலவற்றை நம்மீது (நபியாகிய) அவர் இட்டுக்கட்டி இருந் தால், அவருடைய வலக்கரத்தை நாம் பிடித்து, பிறகு அவரி லிருந்து கழுத்து நரம்பை துண்டித்து விடுவோம். உங்களிலிருந்து அவரை விட்டும் வேதனையை தடுக்கிறவர் எவரும் இலர்.''
> (அல்ஹாக்காஹ் 69:44-47)

அரேபிய தீபகற்பம் முழுவதுமான முஸ்லிம் படையெடுப்புகள், குறைஷியரை எதிர்த்து நிற்பதற்காக பத்ர் அல்-மவ்இதில் முஸ்லிம் கள் தோற்றம் பெற்றமை, வர்த்தக மார்க்கங்களில் முஸ்லிம்களின் ஆதிக்கம் காரணமாக மக்காவின் பொருளாதாரம் மீது பதிந்த அழுத் தங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மதீனாவின் யூத கோத்திரங்களோடு கூட்டு ஒப்பந்தங்கள் செய்துகொள்ள முஷ்ரிகூன்களை உந்தி நின்றன. யூத கோத்திரங்களுள் இரண்டனை -பனூ கைனுரகா, பனூ நளீர்- பின்னர் முஸ்லிம்கள் பிரஷ்டம் செய்தனர். முஸ்லிம்களுடன் தாம் ஏற்கனவே செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை இன்னமும் கௌர விப்பதாக பாசாங்கு செய்து வந்தனர் பனூ குரைளா. உண்மையில் முஸ்லிம்களைத் தாக்கவும் பழிவாங்கவும் கிடைக்கக் கூடிய முதல் சந்தர்ப்பத்தை அவாவியவர்களாகவே அவர்கள் இருந்தனர். கஸ்வத் அல் அஹ்ஸாபின் போது இவை எல்லாம் துலக்கமாகின.

# அகழ் (அல் அஹ்ஸாப்)

ஹிஜ்ரி ஐந்து ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது கஸ்வத் அல் அஹ்ஸாப். இதுவே இப்ன் இஸ்ஹாக், அல்வாகிதீ ஆகியோரைப் பின்பற்றியோரும் ஏனைய பல அறிஞர்களும் கொண்டுள்ள கருத்து. அல்-ஸுஹ்ரி, மாலிக் இப்ன் அனஸ், மூஸா இப்ன் உக்பா ஆகியோர் இது ஹிஜ்ரி நான்கில் நிகழ்ந்ததென்பர். உண்மையில் இவ்விரண்டு அபிப்பிராயங்களுக்கிடையில் பெரும் முரண்பாடுகள் எதுவும் காணப்படவில்லை. ஹிஜ்ரி நான்கு என்றவர்கள் ஹிஜ்ராவின் பின்னரான முஹர்ரம் முதல் காலக்கணிப்பு செய்து, அதன் முன்னரான ரபீஉல் அவ்வல் முதலான மாதங்களைப் பொருட்படுத்தாது விட்டனர். இவ்வாறாக, அவர்களது நோக்கில் பத்ர் ஹிஜ்ரி ஒன்றிலும் உஹத் ஹிஜ்ரி இரண்டிலும் அல்-கந்தக் நான்கிலும் நிகழ்ந்தன. இது பெரும்பாலானோரின் கணிப்பீட்டில் இருந்தும் சற்று வேறுபடுகின்றது. அவர்கள் ஹிஜ்ராவின் முஹர்ரத்திலிருந்தே கணிப்பை ஆரம்பிக்கின்றனர். ஆகவே வரலாற்றாசிரியர்கள் அல்-கந்தக் நிகழ்ந்தது ஹிஜ்ரி ஐந்தில் எனக் கொள்வர்.

இப்ன் ஹஸ்ம் மாத்திரம், அல்கந்தக் நிகழ்ந்தது உஹதின் பின்னர் ஒரு வருடத்துள் என்பார். அதற்காக அவர் அப்துல்லாஹ் பின் உமரின் ஓர் அறிவிப்பை ஆதாரமாகக் கொண்டுள்ளார் போலத் தெரிகின்றது. தான் பதினான்கு வயதினராக இருந்தமையால் உஹதிலிருந்து தன்னை திருப்பி அனுப்பிவிட்ட நபிகளார், பதினைந்து வயதினராக இருந்த வேளை அல்-கந்தக்கில் பங்குபெறத் தன்னை அனுமதித்ததாகக் கூறுகிறார் இப்ன் உமர். அல் பைஹகி, இப்ன் கையிம், அல்தகபி, இப்னு ஹஜர் ஆகிய அனைவரும் உஹதின் போது இப்ன் உமர் அப்போதுதான் பதினான்கு வயதுக்கு உட்பட்டார் என்றும் அல்-கந்தக்கின் போது அவர் பதினைந்து முடிந்து பதினாறுள் நுழைந்திருந்தார் என்றும் கூறுவர்.

இந்த விளக்கம் சீறா வரலாற்றாசிரியர்களுள் பெரும்பாலானவர்களது கருத்துக்களுக்கு இயைபானதாக அமைந்துள்ளது.

கஸ்வத் அல் அஹ்ஸாப் முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்கும் இடையிலான யுத்தங்களின் வரிசையில் ஒன்றாகக் கொள்ளப்படுகின் றது. இரு திரத்தாரும் யுத்த முனைப்பில் உள்ளோர் என ஏற்கனவே பகிரங்கமாகி இருந்ததனால் விசேட காரணங்கள் ஏதும் கஸ்வத் அல் அஹ்ஸாபுக்கு எனத் தேவைப்படவில்லை. என்றாலும் சில நேரடி, உடனடிக் காரணங்கள் இருந்திருக்கக்கூடும். அவை குறித்து நாம் அவதானித்தல் அவசியம். இந்த கஸ்வா நிகழ முக்கிய காரணம், உஹதின் பின்னரும் சிரியாவுக்கான தமது வர்த்தக மார்க்கத்தை ஈட்டிக் கொள்ள குறைஷியரால் இயலாது போனமையாகும். உஹதில் முஸ் லிம்களுக்குப் பலத்த சேதங்களை விளைக்க முஷ்ரீகூனால் இயலுமாக இருந்தது. என்றாலும் முஸ்லிம்களை முற்றாக முறியடித்து விட அவர் களால் முடியவில்லை. முஸ்லிம் பிரதேசங்களைத் தாக்கவும் அவர் களால் இயலவில்லை. குறைஷியரின் வர்த்தக மார்க்கங்கள் இன்னமும் முஸ்லிம்களின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியவனவாகவே இருந்தன.

உஹதில் தமக்கு ஏற்பட்ட பாதகமான விளைவுகளைச் சரிசெய்து கொள்ளும் வகையில் மதீனாவிலும் அதன் சுற்றுப்புறப் பாலைகளி லும் முஸ்லிம்களின் படையெடுப்புகளும் தாக்குதல்களும் தொடர்ந்து வந்தன. இப்பின்னணியில் முஸ்லிம்களை முற்றாகவே தீர்த்துக் கட்டி விடும் முனைப்பில் இராணுவ தயாரிப்புகளை மேற்கொண்டு வந்த குறைஷியர், தாம் மட்டும் தனியாக இயங்கி தமது இலக்கை அடைந்து கொள்ள முடியாது என உணர்ந்திருந்தனர். எனவே ஏனையோரையும் தம்மோடு இணைத்து உடன்படிக்கைகள் செய்து கூட்டுப் படையெடுப் பொன்றினை நடாத்தத் திட்டமிட்டு வந்த குறைஷியர்களுக்கு மதீனா விலிருந்து நபிகளார் பனூ அந்நளீரின் யூதர்களை வெளியேற்றியது சாதகமாக அமைந்தது.

வெளியேற்றப் பெற்றிருந்த பனூ நளீரின் யூதர்கள் பெரும் மனக் கிலேசத்துக்கும் சினத்துக்கும் ஆளாகி மற்றுமொரு யூதக் குடியிருப் பான கைபருக்குச் சென்றார்கள். அங்கிருந்து அவர்கள் குறைஷி யருடனும் ஏனைய கோத்திரத்தாருடனும் தொடர்புகளை ஏற்படுத்தி, முஸ்லிம்களைப் பழிவாங்குவதன் மூலம் மதீனாவில் தமது சொந்த நிலத்தையும் சொத்துக்களையும் மீட்டிக் கொள்ளத் திட்டமிட்டார்கள். குறைஷியரிடம் ஒரு தூதுக்குழு அனுப்பப் பெற்றது. அக்குழுவில் ஸலாம் இப்ன் அபூ அல்-ஹகீக் அந்-நளரி, ஹுயை இப்ன் அல்-

*அக்தாப் அந்-நளரி ஆகியோரும் அடங்கியிருந்தனர். குறைஷியரோடு இணைந்து முஸ்லிம்களுக்கு எதிராகப் போராட வாக்குறுதியளித்த தூதுக்குழுவினர் இஸ்லாத்தை விட ஷிர்க் மேலானது எனக் கூறி நின்றனர். இது குறித்துப் பேசியது குர்ஆன்:*

> வேதத்திலிருந்து ஒரு பங்கு வழங்கப்பட்டவர்களை (நபியே) நீர் பார்க்கவில்லையா? சிலைகளையும் ஷைத்தானையும் அவர்கள் நம்பிக் கொண்டு, இறை நிராகரிப்பாளர்களைப் பற்றி, ‘இவர்கள் ஓரிறை நம்பிக்கையாளர்களை விட மிக நேரான பாதையில் இருக்கின்றனர்’ என்று கூறுகின்றனர். (அந்நிஸா - 4:51)

*மக்காவிலிருந்து யூதர்கள் நஜ்த் வெளி நோக்கிச் சென்றார்கள். அங்கே பலம் வாய்ந்த கதபான் கோத்திரத்தாருடன் முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் செய்ய ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். பனூ நளீரின் யூதர்களது முனைவினால் கோத்திரங்கள் பல ஒன்றிணைந்த கூட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இக்கூட்டமைப்பில் இணை ந்து கொள்வதற்குக் கைமாறாக, கைபரின் விவசாய வருமானத்தில் பாதியை கதபான்களுக்கு வழங்க யூத தூதுக் குழுவினர் வாக்களித்த தாகக் கூறுவார் மூஸா-இப்ன்-உக்பா.*

*குறைஷிப் படையினரும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்த பாலை நிலக் கோத்திரங்களும் மார்-அல்-ளஹ்ரான் வெளியில் ஒன்று சேர்ந்த னர். இது மக்காவிலிருந்து நாற்பது கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு பிரதேசமாகும். அங்கு இணைந்து கொண்டோர் பனூ ஸலீம், கினானா, திஹாமா உட்பட ஏனைய அஹாபிஷ் மக்களு மாவர்.*

*அங்கிருந்து அவர்கள் மதீனா நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தார்கள். ரூமா பிரதேசத்தின் முஜ்தமா அல்-அஸ்யால் எனும் இடத்தில் அவர் கள் தங்கினார்கள். இது அல்-ஹர்ப், தகாபா எனும் பிரதேசங்களுக்கு இடைப்பட்டது.*

*கதபான், பனூ அஸத் கோத்திரங்கள் உஹத் பிரதேசத்தை அண்மித்த தன்ப்-நக்மா எனும் இடத்தை அடைந்து கொண்டனர். இந்தக் கூட்ட மைப்பில் இணைந்து கொண்ட நஜ்த் கோத்திரங்களைப் பட்டிய லிடுவார் அல்-ஸுயூதி. அவற்றுள் பல, கதபான் கோத்திரத்தின் கிளைக் கோத்திரங்களாகும்: கதபான், பனூ ஸலீம், பனூ அஸத், பஸாரா, அஷ்ஜா மற்றும் பனூ முர்ரா.*

எதிரிகளின் கூட்டுப் படையினரது வருகை குறித்த செய்திகள் நபிகளாரை எட்டியதும் அன்னார் நிலைமையை எதிர்கொள்ள என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் எனத் தமது தோழர்களுடன் ஆலோசனை நடத்தினார்கள். தம்மைப் பின்பற்றியோர் இஸ்லாத்தை நேசிக்க, அண்ணலார் கையாண்ட கற்பித முறை இது. தமக்குப் பின்னால் வரக்கூடிய தலைவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை யாகவும் இது அமைந்தது. யுத்தம் உட்பட ஏனைய பாரிய விவகாரங் களில் இறை ஆணைகள் பிறப்பிக்கப்படாத விடத்து அன்னார் தமது தோழர்களின் உயரிய ஆலோசனைகளை வேண்டி நின்றார்கள். சமூக மும் அரசும் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் குறித்து அவர்கள் சிந்திப்பதை ஊக்குவித்தார்கள். விளைவாக கீர்த்தி மிக்க தலைவர் களும் அனுபவமிக்க அரசியலாளர்களும் தோற்றுவர். பொது விவகா ரங்கள் குறித்த தமது கடமைகளை உணர்ந்து அவற்றுள் அவர்கள் பங்கேற்பர்.

ஸல்மான் அல்ஃபாரிஸி மதீனாவின் வடபுறத்தில் ஓர் அகழ் தோண்டுவதற்கான ஆலோசனையை முன்வைத்தார். அதன்மூலம் ஹர்ரா வாகிம், ஹர்ரா அல்-வபரா ஆகிய இரண்டையும் இணைத்துக் கொள்ளக்கூடும். இந்த பகுதி மட்டுமே தாக்குதலுக்குள்ளாகக் கூடிய தாக இருந்தது. ஏனைய பகுதிகள் ஒரு கோட்டையைப் போல் அமைந்திருந்தன. கட்டடங்களும் பேரீத்த மரங்களும் நெருக்கமாக அமைந்திருந்த அப்பகுதிகள் பல ஹர்ராக்களால் சூழப்பட்டு ஒட்டகங் களும் காலாட் படையினரும் நடந்து செல்லத் தடைகளை அமைத்தன.

மதீனாவின் பாதுகாப்புக்கான இந்த ஆலோசனையை எவரும் எதிர்த்துப் பேசவில்லை. கூட்டுப்படைகளில் இணைந்து வந்தோரின் தொகை பாரியதாக இருந்தது. அத்துடன் உஹத் கற்பித்த பாடங்கள் முஸ்லிம்களின் சிந்தையில் இன்னமும் பசுமையாகவே இருந்தன. எதிரிகளும் முஸ்லிம்களும் நேரடி மோதல்களில் ஈடுபடுவதற்கும் மதீனாவின் மீது ஆக்கிரமிப்புக்கள் மேற்கொள்வதற்கும் அகழ் பெரும் தடையாக அமையும். அகழின் பின்புறமிருந்து எதிரிகளின் மீது அம்புகள் எய்வதன் மூலம் பாரிய நட்டங்களை விளைவிப்பதற்குத் தளமாக அகழின் பின்னால் இருந்த மேட்டுநிலங்கள் காணப்பட்டன.

அகழ் அமைக்கும் பணி தொடங்கியது. கிழக்கில் பனூ ஹாரி ஸாக்களின் ஷைகைன் முதல் மேற்கே மதாத் வரையும் நீண்டதாக அமையப் பெற்றது அகழ். ஐயாயிரம் கியூபிட் நீளமும் ஒன்பது கியூபிட் அகலமும் ஏழுக்கும் ஒன்பதுக்கும் இடைப்பட்ட கியூபிட் ஆழமும்

கொண்டதாக இது அமைந்திருந்தது. பத்துப் பேரைக் கொண்ட ஒவ்வொரு முஸ்லிம் குழுவினரும் நாற்பது கியூபிட்கள் தோண்டி னார்கள். கிழக்கே ராதிஜ் கோட்டையிலிருந்து துபாப் கோட்டை வரையும் முஹாஜிர் தோண்டினார்கள். அன்ஸார் துபாப் முதல் மேற்கே அபித் குன்று வரைதோண்டினார்கள்.

கடுமையான குளிர் ஒருபுறம். மதீனாவை அவ்வேளை தாக்கி யிருந்த கடுமையான பஞ்சம் மறுபுறம். என்றாலும் அகழ் தோண்டும் முனைப்பு விரைவாகவே நடந்து முடிந்தது. படையினரின் உணவு ஊசிப்போன கொழுப்போடு கலந்த சிறிதளவு வாற்கோதுமையாக இருந்தது. பழையதாகி இருந்ததால் அதில் முடை நாற்றம் வீசியது. வெறுப்பூட்டும் சுவையுடன் கமழும் துர்மணத்தின் மத்தியிலும் பசி யின் காரணமாக அவற்றை அவர்கள் புசித்தார்கள். சில சந்தர்ப்பங் களில் பேரீத்தம் பழம் தவிர்ந்த வேறு பதார்த்தங்கள் எதுவும் அவர் களுக்குக் கிடைக்கவில்லை. சிலபோது மூன்று நாட்களாக உணவு களேதுமின்றி இருந்தார்கள். ஈமான் அளித்த உந்துதலின் காரணமாகப் பசியினதும் குளிரினதும் தாக்கத்தைத் தாங்கியவர்களாகக் கருமமாற்றி னார்கள். மண் மூடைகள் சுமந்தார்கள். உடலுழைப்பில் சாதாரணமாக ஈடுபடாத வர்த்தகர்கள்,தலைவர்கள் ஆகியோரும் மண் வெட்டு வதிலும் சுமப்பதிலும் மகிழ்வோடு சமபங்கு வகித்தார்கள். உற்சாக மிகுதியில் பாடல்களை இசைக்கவும் செய்தனர்.

நபிகளாரும் மக்களோடு இணைந்து கருமமாற்றினார்கள். அகழ் தோண்டுவதிலும் மண் மூடைகள் சுமப்பதிலும் தீவிரமாக ஈடுபட்ட தால் அன்னாரின் உடம்பு முழுவதும் தூசு படர்ந்திருந்தது. பசித்துயர் தாங்காது அண்ணலார் தமது வயிற்றில் கல்லொன்றைக் கட்டி இருந்தார்கள். பெரிய பாறைகள் எதிர்ப்பட்ட போதெல்லாம் நபித் தோழர்கள் அண்ணாரின் உதவியை நாடினார்கள். கடப்பாரை ஒன்று கொண்டு பாறைகளை உடைப்பார்கள் நபிகளார். மக்களது கவிதைகள், பாடல்களோடு அண்ணாரும் இணைந்து கொள்வார்கள்.

ஓ இறைவா!
நீயில்லாது எமக்கில்லை நேர்வழி.
இல்லை தர்மம்; இல்லை தொழுகை.
அருள்செய் நமக்கு! சாந்தியை.
எதிரிகளை நாம் எதிர்கொள்கையில்
உறுதி செய் எமது பாதங்களை.
இழைக்கின் பகைவர் எமக்கு இடுக்கண்
நிற்போம் நாம் உள்ளத்துறுதியுடன்.

இதன் இறுதி வாசகங்களை நபிகளார் நீட்டிக் கூறுவார்கள். தோண்டுதலும் மண் சுமத்தலும் செய்து வருகையில் முஸ்லிம்கள் பாடினார்கள்:

அளித்துள்ளோம் வாக்குறுதி
அல்லாஹ்வின் தூதரிடம்
இஸ்லாத்துக்காக நாம் வாழும் காலமெல்லாம்

இதற்கு பதில் வழங்குவது போல நபிகளார் பாடுவார்கள்:

ஓ இறைவா!
மறுமை நலன் தவிர வேறு நலன் ஏதுமில்லை.
அருள்வாய் நீ மன்னிப்பை
அன்ஸார்க்கும் முஹாஜிர்க்கும்.

சிலவேளை நபிகளார் பாடலை ஆரம்பித்துவைக்க, நபித்தோழர்கள் தமது பாடலடிகளால் பதிலிறுப்பர்.

வெறும் வாய்ச்சொல் அளவில் இருந்து விடாது நபிகளார் அனைத்து வேலைகளிலும் தாமே நேரடியாகப் பங்குபற்றியமை மக்கள் அனைவருக்கும் பெரும் உந்துதலாக அமைந்து விடவே அகழ் அமைக்கும் பணி ஆறே நாட்களில் முடிவடைந்தது. அதாவது மதீனாவைப் பாதுகாக்கும் பணிக்கான அத்தனை திட்டங்களும் கூட்டுப் படையினர் வந்து சேரும் முன்பே முற்றுப் பெற்றிருந்தன.

அகழ் தோண்டி வந்தவேளை நபிகளார் மூலம் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. அவற்றுள் ஒன்று உணவின் பெருக்கம். நபித்தோழர் ஜாபிர் இப்ன் அப்துல்லாஹ் நபிகளார் பசியினால் துயருறுவதை அவதானித்தார். எனவே அவர் தனது மனைவியிடம் சென்று அன்னாருக்கு சிறிது உணவு தயார் செய்யும்படி வேண்டினார். மனைவி ஒரு சிறிய பாத்திரத்தில் வாற்கோதுமை இடித்து எடுக்க, ஜாபிர் தன்னிடம் இருந்த ஓர் ஆட்டை அறுத்தெடுத்தார். உணவு உட்கொள்ள வருமாறு நபிகளாரை அழைத்த ஜாபிர், சிறிதளவே உணவு இருப்பதையும் அன்னாருக்கு உணர்த்தினார். ஜாபிரின் இல்லத்தில் உணவருந்த முஸ்லிம்கள் அனைவரையும் அழைத்தனர் நபிகளார். ஆயிரம் பேர் அளவு வந்தனர். ஜாபிரும் குடும்பத்தாரும் திகைப்புக்குள்ளாகியிருக்க, நபிகளார் பாத்திரத்தை ஆசீர்வதித்தார்கள். ஒவ்வொருவரும் திருப்தியோடு உணவருந்தியும் பாத்திரத்தில் இன்னமும் பெருமளவு உணவு மீதமாகி இருந்தது. ஜாபிரின் குடும்பத்தார் ஏனையோருடனும் பகிர்ந்து தாமும் உணவு உட்கொண்டனர்.

*அம்மார் பின் யாஸிர் அகழ் தோண்டி வந்த வேளை, பின்னைய ஒரு காலகட்டத்தில் நிகழவிருக்கும் ஒரு விடயம் குறித்துப் பேசினார்கள் நபிகளார்: 'நீர் கலகக்காரர்களால் கொல்லப்படுவீர்'. ஸிப்பீன் யுத்தத் தின் போது அவ்வாறே அவர் கொல்லப்பட்டார்.*

*நபித் தோழர்கள் பெரும் பாறை ஒன்றை எதிர்கொண்டனர். எவ் வளவு முயன்றும் அதனை உடைக்க முடியவில்லை. நபிகளாரிடம் இது குறித்து கூறப்பட்டது. அன்னார் ஒரு கடப்பாரை கொண்டு அப் பாறை மீது மூன்று முறை அடித்தார்கள். பாறை தகர்ந்தது. முதல் அடியின் போது நபிகளார் கூறினார்கள்: ''அல்லாஹு அக்பர்! ஸிரியா வின் திறவுகோல்கள் எனக்கு அளிக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் பெயரால் அதன் செந்நிற மாளிகையை நான் காண்கிறேன்.'' இரண் டாவது அடியின் பின்னர் கூறினார்கள்: ''அல்லாஹு அக்பர்! பாரசீகத் தின் திறவுகோல்கள் எனக்கு வழங்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் பெயரால் மதாஇனின் வெண் மாளிகையை என்னால் காண முடிகின் றது.'' மூன்றாம் அடியின் போது அண்ணலார் கூறினார்கள்: ''அல்லாஹு அக்பர்! நான் யெமனின் திறவுகோல்களைப் பெற்றுள்ளேன். இறை வன் பெயரால் நான் நிற்கும் இடத்திலிருந்து ஸன்ஆவின் வாயிற் கதவு களைக் காண்கிறேன்.''*

*அகழின் பின்புறமாக பசியும் குளிரும் வருத்த, முற்றுகைக்குள்ளா னோராய் இருந்த நிலையிலும் நபிகளார் தான் வெற்றி கொள்ளும் நாடுகள் குறித்த நற்செய்தி கூறினார்கள். விசுவாசிகள் அவ்வேளை கூறியன குறித்துக் குர்ஆன் பதிவுசெய்துள்ளது:*

> ''அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு வாக்களித்தது இதுவே யாகும். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மை சொன் னார்கள்''. மேலும் அவர்களுக்கு நம்பிக்கை கொள்வதையும் (அல்லாஹ்வை) வழிபடுவதையும் தவிர இது அதிகமாக்கவில்லை. (அல் அஹ்ஸாப் 33:22)

*இந்த நற்செய்தியை பரிகசித்தவர்களாக முனாபிகூன் கூறினார்கள்:*

> ''அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஏமாற்றத்தைத் தவிர வேறு எதனையும் நமக்கு வாக்களிக்கவில்லை.'' (அல்அஹ்ஸாப் 33:12)

*கோழைத்தனம் மிக்கோராக, பொய் வதந்திகளைப் பரப்புவோராக, விசுவாசிகளை அதைரியப்படுத்துவோராக முனாபிகூன் நடந்து வந்த தாகச் சில பலவீனமான அறிவிப்புகள் குறிப்பிடுகின்றன. எவ்வாறா யினும் அல்குர்ஆன் அவர்களது தன்மையைத் துல்லியமாகத் தெளிவு படுத்தியது:*

நயவஞ்சகர்களும் எவர்களுடைய உள்ளங்களில் (பலவீனம், சந்தேகம் போன்ற) நோய்கள் இருந்ததோ அவர்களும் ‘அல்லாஹ் வும் அவனுடைய தூதரும் ஏமாற்றத்தைத் தவிர (வேறு எதையும்) நமக்கு வாக்களிக்கவில்லை’ என்று கூறிய நேரத்தையும் நினைத்துப் பாருங்கள்.

அவர்களில் ஒரு கூட்டத்தினர் ‘‘(யத்ரிப்) மதீனாவாசிகளே! (பகை வர்கள் மிகைத்திருப்பதால் இங்கு) தங்குவது உங்களுக்கு (சிறந்த த)ல்ல. எனவே திரும்பிச் செல்லுங்கள்’’ என்று கூறிய போது, அவர்களில் ஒரு பிரிவினர் நிச்சயமாக எங்களுடைய வீடுகள் பாது காப்பற்றவையாக இருக்கின்றன என்று கூறியவர்களாக (அங்கி ருந்து வெளியேற) நபியவர்களிடம் அனுமதி வேண்டினர். (உண் மையில்) அவை பாதுகாப்பற்றவையாக இல்லை. (அங்கிருந்து அவர்கள்) வெருண்டோடுவதைத் தவிர வேறு எதனையும் அவர்கள் நாடவில்லை. அ(ந்நகரத்)தின் பல திக்குகளில் இருந்தும் அவர் களின் மீது (எதிரிப்படைகள்) புகுத்தப்பட்டு (அவர்கள் வெற்றி கொள்ளப்பட்டு) பிறகு (இறை நம்பிக்கையைத் துறந்து) குழப்பம் செய்ய இவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டால் (மனநிறைவுடன்) அ(க்குழப்பத்)தை இவர்கள் செய்து விடுவார்கள். ஆனால் அ(ந் நகரத்)தி(லுள்ள அவர்களது வீடுகளி)ல் சொற்ப நாட்களே தவிர இவர்கள் தங்கி இருக்க மாட்டார்கள். (அதற்குள் அழித்தொழிக்கப் பட்டு விடுவார்கள்.)

இதற்கு முன் புறமுதுகிட்டு தாம் ஓடுவதில்லை என்று அல்லாஹ் விடம் திட்டமாக இவர்கள் வாக்குறுதி கொடுத்து இருந்தனர். அல்லாஹ்வுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி விசாரிக்கப்படக் கூடிய தாகும்.

மரணத்தை விட்டும் அல்லது கொல்லப்படுவதை விட்டும் பயந்து நீங்கள் விரண்டோடினாலும், அவ்வாறு விரண்டோடுதல் ஒரு காலும் உங்களுக்குப் பயன் தராது. அப்பொழுது நீங்கள் சிறிது காலமே அன்றி சுகம் கொடுக்கப்பட மாட்டீர்கள் என்று நபியே! நீர் கூறுவீராக.

‘‘அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஒரு கெடுதியை செய்ய அவன் நாடினால் உங்களைப் பாதுகாப்பவர் யார்? அல்லது உங்களுக்கு அருள் செய்ய அவன் நாடினால் (அதனை தடை செய்பவர் யார்?) அல்லாஹ்வைத் தவிர தங்களுக்கு எந்த பாதுகாப்பாளனையும்

எந்த உதவியாளனையும் அவர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள்'' என்றும் நீர் கூறுவீராக.

உங்களில் போருக்கு செல்வோரைத் தடுப்போரையும் தம் சகோத ரர்களிடம் (போருக்குச் செல்லாமல்) எங்களிடம் வந்து விடுங்கள் என்று கூறுவோரையும் அல்லாஹ் திட்டமாக அறிவான். (அவர் களில்) குறைவானவர்களே தவிர (பெரும்பாலானோர்) போருக்கு வருவதில்லை.

(போருக்குப் பண உதவி தேவைப்பட்டால் போரில் கலந்துகொள்ள வரும் அவர்கள்) உங்களிடம் கஞ்சத்தனமாகவே இருப்பார்கள். (பகைவர்களைப் பற்றி) பயம் வந்துவிட்டால் மரணத்தினால் மயக்க மாக்கப்பட்டவர்களைப் போன்று அவர் களுடைய கண்கள் சுழல் கின்ற நிலையில் உம் பக்கம் பார்க்கிறவர்களாக அவர்களை நீர் காண்பீர். பயம் போய் விட்டால் (போரில் கைப்பற்றப்பட்ட) பொருட்களின் மீது பேராசை உள்ளவர்களாய் கூர்மையான நாவுகளைக் கொண்டு உங்களை அவர்கள் குறை கூறுவார்கள். அத்தகையோர் (உண்மையாக) நம்பிக்கை கொள்ளவில்லை. எனவே அல்லாஹ் அவர்களுடைய (நற்)செயல்களை அழித்து விட்டான். அது அல்லாஹ்வுக்கு மிக சுலபமானதேயாகும்.

(எதிரிப்) படையினர் (இன்னும் மக்காவுக்கு திரும்பிப்) போக வில்லை என்று (நயவஞ்சகர்களாகிய) இவர்கள் எண்ணிக் கொண்டி ருக்கிறார்கள். (ஒருவேளை) படையினர் (திரும்பி) வந்தால், நிச்சய மாக இவர்கள் காட்டறபிகளிடம் ஓடிச் சென்று (மறைந்து கொண்டு,) உங்களுடைய செய்திகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டுமே என்று தான் விரும்புவார்கள். இவர்கள் உங்களுடன் இருந்தாலும் மிக குறைவாகவேயன்றி போரிட மாட்டார்கள்.
(அல்-அஹ்ஸாப் 33:12-20)

*இந்த வாசகங்கள் கபடத்தனம் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் பேசுகின்றன. மனவிகாரம், கோழைத்தனம், இறைவன் மீதான நம்பிக்கையீனம் என்பன அத்தகு விளைவுகளாகும். இக்கட் டான துயர் மிகுந்த வேளைகளில் இறைவனிடம் தஞ்சம் கோரி நிற்பதற்குப் பதிலாக அவனோடு அகந்தை மிகுந்தோராய் நடந்து கொள்வர் அம்மக்கள். கபடம் என்பது நம்பிக்கைகளை மாத்திரம் பாதிக்கும் ஒன்றல்ல. பிறரை அதைரியப்படுத்துதல், பொய் வதந்தி களைப் பரப்புதல் என்பனவெல்லாம் தொடர்ந்து வருவன. அவர்கள் நபிகளாரிடம் தமது வேலைத் தளத்திலிருந்தும் யுத்த களத்திலிருந்தும்*

வெளியேற அனுமதி வேண்டி நின்றார்கள். அதற்காக அவர்கள் முன் வைத்த காரணங்களோ மிகப் பலவீனமானவை. அவர்களது வீடுகள் எதிரிகளால் தாக்கப்படக் கூடும் என்றார்கள். உண்மையில் தமது விசுவாசத்தின் பலவீனம் காரணமாக அச்சம் மீதூரப்பெற்று மரணத்திலிருந்து தப்பிக் கொள்ளவே அவர்கள் முனைப்புக் காட்டினார்கள். தமது விசுவாசம், இஸ்லாத்தின் மீதான தமது கடப்பாடு என எதனையும் பொருட்படுத்தாதது மட்டுமல்ல, ஏனையோரையும் தமது பொறுப்புக்களைக் கைவிட்டுத் தத்தம் வீடுகளுக்குத் திரும்பி விடும் படியும் அவர்கள் தூண்டினார்கள்.

முனாபிகூன்களது துர்நடவடிக்கைகள், வதந்திகள் மத்தியிலும் பஞ்சமும் பட்டினியும் இழைத்த தொல்லைகளின் மத்தியிலும் மனம் தளர்ந்து விடாதவர்களாக முஸ்லிம்கள் தமது கடமைகளைச் செவ்வனே செய்து, மதீனாவின் பாதுகாப்புக்கான திட்டங்களைப் பூர்த்தி செய்தனர். அகழ் பூர்த்தியானதன் பின்னர் நபிகளார் பெண்களையும் சிறார்களையும் பனூ ஹாரிஸாக்களது கோட்டையுள் தங்க வைத்தார்கள். இதுவே முஸ்லிம்களின் பலம் வாய்ந்த கோட்டையாக இருந்தது.

நபிகளார் படையினரை ஒழுங்கு படுத்தினார்கள். மதீனாவின் உள்ளே ஸலாஆ மலை, படையினரின் பின்புறத்தில் அமைந்திருந்தது. முஷ்ரிகூனுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அகழ் இருந்தது. முஷ்ரிகூன் ரூமாவில் முகாம் அமைத்திருந்தனர். இது அல்-ஜர்ப், அல்-காபா, அல்-நக்மா என்பவற்றுக்கு மத்தியில் அமைந்திருந்தது.

எண்ணிக்கையில் மிகைத்தோராய் இருந்தனர் முஷ்ரிகூன். படையினர் பத்தாயிரம் பேர். இப்ன் ஸஅதின் அறிவிப்பின் படி குறைஷ், அஹாபீஷ் அவர்களோடு இருந்த ஏனைய அரபிகள்நாலாயிரம் பேர் இருந்தனர். அவர்களிடம் முன்னூறு குதிரைகளும் ஆயிரத்தி ஐநூறு ஒட்டகைகளும் இருந்தன. பின்னர் மார் அல்-ளஹ்ரானில் வைத்து பனூ ஸலீம்கள் எழுநூறு பேருடன் இவர்களோடு இணைந்து கொண்டனர். பஸாராக்கள் ஆயிரம் பேரும் அஷ்ஜா, பனீ முர்ரா இணைந்து நானூறு பேரும் இருந்ததாக கூறுவார் இப்ன் அல்-ஜவ்ஸி. ஆக மொத்த எண்ணிக்கை ஆறாயிரத்து நூறாக அமைந்தது. பத்தாயிரம் பேரில் ஏனையோர் பனூ அஸதையும் எஞ்சியகதபான் கோத்திரத்தார்களையும் சார்ந்திருந்தனர்.

முஸ்லிம்படையினர் மூவாயிரம் பேர் என்பார் இப்ன் இஸ்ஹாக். ஸீறா கிரந்த கர்த்தாக்களுள் பலர் இதனை ஏற்பர். அவர்கள் தொள்ளாயிரம் பேர் என்பார் இப்ன் ஹஸ்ம்.

இவரது கருத்தின் படி உஹதின் போது முஸ்லிம்கள் எழுநூறு பேராக இருந்தனர். உஹதுக்கும் அல்-கந்தக்கிற்கும் இடையில் ஒரு வருடகால குறுகிய இடைவெளியில் முஸ்லிம்களின் எண்ணிக்கை மூவாயிரமாகக் கூடியிருக்க முடியாது என்று அவர் குறிப்பிடுகிறார்.

தீர்மானமாக, இப்ன் ஹஸ்ம் தெரிவிக்கும் இக்கருத்து ஸஹீஹ் ஆனதல்ல. ஸஹீஹ் ஆன ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள படி ஜாபிர் இப்ன் அப்துல்லாஹ்வின் வலீமாவின் போது ஆயிரம் பேர் இருந்தனர். மதீனாவின் காவலுக்காக ரோந்துப் பணியில் ஈடுபட்டோர் ஐநூறு பேர் ஆவர். இப்படி இருக்க முழு ராணுவமும் எவ்வாறு தொள்ளாயிரமாக இருக்கலாம்? உண்மையில் உஹதுக்கும் கந்தக்கிற்கும் இடையில் இரண்டு வருடங்கள் இருந்தன. இந்தக் கால இடைவெளியில் உஹதில் போதிய வயதினராக இல்லாமையால் யுத்தத்தில் கலந்துகொள்ள இயலாதிருந்த இளவயதினர் பலர் தக்க பருவம் எய்தி இருந்தனர். அத்துடன் முஸ்லிம்கள் தஃவாப் பணிகளை ஏராளமாகச் செய்திருந்த னர். இஸ்லாத்தில் இணைந்து கொள்வதுடன் மக்கள் பொதுவாக மதீனாவிலேயே குடியேறி வந்தனர். ஆக முஸ்லிம் படையினரின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு விசித்திரமானதல்ல.

கூட்டுப் படையின் பெருந்தொகையினரைக் கண்ட நபிகளார் மதீனா வின் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் கதபான்களுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளத் திட்டமிட்டார் கள். அதன்படி மதீனாவின் வருடாந்த விவசாய வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவர்களுக்கு வழங்குவது அன்னாரின் உத்தேசமாக இருந்தது. தமது எண்ணம் குறித்து அவ்ஸ்களின் தலைவர் ஸஅத் இப்ன் முஆத் மற்றும் கஸ்ரஜ்களின் தலைவர் ஸஅத் இப்ன் உபாதா ஆகி யோருடன் நபிகளார் ஆலோசனை நடத்திய போது, அவர்கள் கூறினார் கள்: ‘‘இல்லை அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஜாஹிலியா காலத் திலேயே இவ்வாறெல்லாம் எங்களைத் தாழ்த்திக் கொள்ள மாட் டோம், இறையோன் எங்களுக்கு இஸ்லாத்தை அருள் செய்துள்ள இந்த நிலையில் நாம் எவ்வாறு இதனைச் செய்யலாம்?’’

அல்-தபராணியின் அறிவிப்பின்படி அவர்கள் கூறினார்கள்: ‘‘அல் லாஹ்வின் தூதர் அவர்களே! இது இறைவனால் தீர்மானிக்கப்பட்ட ஒரு முடிவாயின் நாம் அதற்குக் கட்டுப்பட வேண்டும். அல்லது இது உங்களது சொந்த எண்ணமும் தீர்மானமுமாக இருப்பின் நிச்சயமாக நாம் அதனைப் பின்பற்ற வேண்டும். ஆனால் வெறுமனே எமது நலனை மாத்திரம் கருத்தில் கொண்டு நீங்கள் அவ்வாறு செய்ய உத்தே

சித்து இருந்தால் நீங்கள் மனதில் கொள்ள வேண்டியது-முன்னம் நாங்களும் அவர்களும் சமமானவர்களாக இருந்தோம். எங்களது பயிர்களில் இருந்து நாங்கள் விற்றாலேயன்றி அல்லது விருந்தினர் களாக அவர்கள் நம்மிடம் வந்த வேளைகளில் நாம் அவர்களுக்கு அளித்தாலே அன்றி அவர்கள் எமது பயிர்களில் இருந்து எதனையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்!'' விளைவாக, நபிகளார் நாட்டுப்புற அறபிகளுடனான தமது பேச்சுவார்த்தைகளை நிறுத்திக் கொண்டார்கள். இந்த விவகாரத்தில் அண்ணலாருடன் பேச்சுவார்த்தை நடாத்தியவர் பனூ முர்ராக்களின் தலைவர் ஹாரிஸ் அல்-கதபானி ஆவார்.

முஸ்லிம் சாராருக்குப் பெரும் பாதகத்தை இழைப்பதாக அமைந் தது, அவர்களுடன் ஒப்பந்தம் செய்திருந்த யூத கோத்திரமான பனூ குறைளா ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதாக வந்த செய்தி. பனூ குறைளாக்களின் பிரதேசம் மதீனாவின் தென்கிழக்கே வாதி மஹ்ளூர் பகுதியின் அல்அவாலியில் அமைந்திருந்தது. அங்கிருந்து அவர்கள் முஸ்லிம்களைப் பின்புறமாகத் தாக்குவது இலகு. பனூ குறைளாக் களது உண்மை நிலையை அறிந்துவரவென ஸுபைர் இப்ன் அல்-அவ்வாம் நபிகளாரால் அனுப்பி வைக்கப்பட்டார். அவர் திரும்பி வந்த தும் நபிகளார் கூறினார்கள்: எனது தாயும் தந்தையும் உமக்கு ஈடாக இருக்கட்டும், ஒவ்வொரு நபியும் ஒரு 'ஹவாரி'யை (சீடரை)க் கொண்டிருந்தனர். எனது ஹவாரி அல்-ஸுபைர். பின்னர் ஸஅத் இப்ன் முஆத், ஸஅத் இப்ன் உபாதா ஆகிய இருவரையும் குறைளாக்களிடம் அனுப்பி வைத்தார்கள். பனூ ஸஅனாக்கள் தவிர்ந்து குறைளாக்கள் ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்திருந்தமையை இரு ஸஅத்களும் கண் டனர். பனூ ஸஅனாக்கள் மாத்திரம் கோட்டையில் இருந்து வெளி யேறி முஸ்லிம் அணியைச் சார்ந்து கொண்டனர்.

குறைளாக்கள் மேற்கொண்ட ஒப்பந்த முறிவுக்குக் காரணகர்த்தா வாக இருந்தவர் ஹுயை இப்ன் அக்தாப் அந்-நளரீ. அவரே ஒப்பந் தத்தை முறித்து விடும்படி கஅப் இப்ன் அஸத் அல்-களரீயைத் தூண்டியவர். கூட்டுப் படையினரின் பலம் குறித்துப் பேசிய ஹுயை, ''நிச்சயமாக அவர்கள் முஸ்லிம்களை முற்றாக அழித்து விடுவார்கள்'' என உறுதிபடக் கூறினார். ஏதேனும் ஒரு காரணத்தினால் கூட்டுப் படையினர் மதீனாவை விட்டு வெளியேறி விடக் கூடுமாயின் தான் கஅபுடன் அவரது கோட்டைக்குள் நுழைந்து கொள்வதாகக் கூறினார் அவர். அதன் மூலம் குறைளாக்களுக்கு ஏதேனும் தண்டனை கிட்டு மாயின் தானும் அதனைப் பகிர்ந்து கொள்வதாகக்கூறி நின்றார் ஹுயை. ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டனர் பனூ குறைளா.

முஸ்லிம்கள் மத்தியில் இச்செய்தி பரவியதும் தமது பெண்டிரும் குழந்தைகளும் பனூ குறைளாக்கள் மூலம் பாதிப்புக்குள்ளாகலாம் என அவர்கள் கவலந்தனர்.

முஸ்லிம்களுக்கு விளைந்த சோதனை குறித்துக் குர்ஆன் பேசியது:

உங்களுக்கு மேற்புறத்திலிருந்தும் உங்களின் கீழ்ப் புறத்திலிருந்தும் உங்களிடம் அ(ப்பகை)வர்கள் வந்தபோது, (உங்களுடைய) பார்வைகள் (முற்றாக) சாய்ந்து இதயங்கள் தொண்டைக் குழிகளை அடைந்து, அல்லாஹ்வைப் பற்றிய (பலவாறான) எண்ணங்களை நீங்கள் எண்ணினீர்கள். அவ்விடத்தில் இறைநம்பிக்கையாளர்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டு கடினமான அதிர்ச்சியாக அதிர்ச்சிக் குள்ளாக்கப்பட்டனர். (அல்-அஹ்ஸாப்- 33:10-11)

மேலிருந்து வந்தனர் கூட்டுப் படையினர். கீழிருந்து வந்தனர் பனூ குறைளாக்கள். இறையோன் குறித்த வீணான எண்ணங்களை வளர்த்து வந்தனர் முனாபிகூன். இவற்றால் பேரதிர்ச்சிக்குள்ளாகி இருந்தனர் முஸ்லிம்கள். என்றாலும் அவர்களது அசைக்கவியலாத விசுவாசமும் தேர்ந்த பயிற்சியும் காரணமாக அத்துணை ஆபத்துக்களையும் உறுதியாக எதிர்த்து நிற்கும் துணிவு அவர்களுக்கு இருந்தது.

மதீனாவைப் பாதுகாக்கவென ரோந்துப் படையினர் அமைக்கப் பட்டனர். ஸலாமா இப்ன் அஸ்லம் அல்-அவ்ஸியின் தலைமையில் இருநூறு பேரும் ஸைத் இப்ன் அல்ஹாரிஸாவின் தலைமையில் முந்நூறு பேரும் இக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். மதீனாவைப் பாதுகாத்த அவர்கள் உரத்த குரலில் 'அல்லாஹு அக்பர்' என தக்பீர் முழங்கினர். அதன் மூலம் தாம் அங்கு எதற்கும் தயாரான நிலையில் இருப்பதாக பனூ குறைளாக்களுக்கு உணர்த்த முடிந்தது. கோட்டை யினுள் தமது பெண்டிரதும் குழந்தைகளதும் பாதுகாப்புப் பணியை அவர்கள் செவ்வனே ஆற்றி வந்தனர்.

குறைஷியரைத் திகைப்புறுத்தியது அகழ். அதனைக் கடந்து கொள் வது அவர்களுக்குப் பெரும் சவாலாக அமைந்தது. அதனை அவர்கள் கடக்க முயன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்கள் ஏராளமான அம்புகளைக் கொண்டு தாக்குதல் நடத்தினார்கள். முற்றுகை பதினான்கு நாட்களாகத் தொடர்ந்தது. இரு புறத்தாரும் அம்புகள் எறிந்து தாக்கு தல்கள் நடாத்தினரே தவிர நேரடி மோதல்கள் ஏதும் நடைபெற வில்லை. முற்றுகை ஒரு மாத காலமளவு நீடித்தது என்பார் கதாதா. இருபது நாட்கள் நீடித்தது என்பார் மூஸா இப்ன் உக்பா.

இஸ்னாத்கள் எதுவுமின்றி இப்ன் இஸ்ஹாக்கும் இப்ன் ஸஅதும் முஷ்ரிகூன் சிலர் அகழியைக் கடந்தனர் எனக்கூறி ஐவரின் பெயர் களைக் குறிப்பிட்டுள்ளனர். அவர்களின் அறிவிப்பின்படி குறைஷி யரின் பலமிக்க குதிரை வீரனாக இருந்த அம்ர் இப்ன் அப்த் அல்வத்த் என்பாரைத் தனியார் மோதலில் கொன்றுபோட்டார் அலி. நவ்பல் அல் மக்ஸுமியைக் கொன்றுபோட்டார் அல்-ஸுபைர். முஷ்ரிக்கூன் களுள் மூவர் உயிர் பிழைத்துத் தமது பாசறையை அடைந்து கொண்டனர்.

கூட்டுப் படையினரின் முற்றுகையோ தாக்குதலோ முடிவடைந்து விடவில்லை. நபிகளாரும் முஸ்லிம்களும் சில நாட்களாக உரிய நேரத் தில் தொழுது கொள்ளவும் இயலாதவர்களாக சூரியன் மறைந்த பின்னரே அஸர் தொழுகையை நிறைவேற்றினர். அச்சத்தின் போதான 'ஸலாத் அல்-கவ்ப்' தொழுகை இன்னமும் நியமமாகவில்லை. பின்னர் தாத் அல்-ரிகா கஸ்வாவின் போதே அது அறிமுகமானது.

நீண்டதொரு முற்றுகையாக இருந்த போதிலும் முஸ்லிம்களுள் எட்டுப் பேரே மரணத்துக்குள்ளாகியிருந்தனர். அவர்களில் ஒருவர் ஸஅத் இப்ன் முஆத்-அவ்ஸ்களின் தலைவர். அவரது கை நடுப்பகுதி நரம்பில் ஓர் அம்பு பாய்ந்திருந்தது. பள்ளிவாசலிலேயே அவருக்கான ஒரு கூடாரம் அமைக்கப்பட்டது. அதனால் நபிகளார் அவரை அடிக்கடி சென்று காண முடிந்தது. பனூ குறைளாக்களின் மீதான கஸ்வாவின் பின்னர் தனது காயத்திலிருந்து அதிக இரத்தம் வெளியேறியமையால் மரணமுற்றார் ஸஅத். குணாதிசயங்களில் சிறந்தவராக இஸ்லாத்துக் காகப் பெரும் தியாகங்கள் புரிந்த அவர், ஸஹாபாக்களுள் உன்னதமான ஒருவராக விளங்கியவர்.

முஷ்ரிகூன் நால்வர் கொல்லப்பட்டிருந்தனர். இரு தரப்பிலிருந்தும் பெரும் தொகையினர் அகழ் யுத்தத்தில் பங்கெடுத்திருந்தனர். என் றாலும் கஸ்வத் அல் கந்தக்கிலேயே மிகச் சிறிய தொகையினர் உயிர் நீத்திருந்தனர். காரணம், அங்கு நேரடி மோதல்கள் ஏதும் நிகழ்வதற்குத் தடையாக இருந்தது அகழ்.

முற்றுகை நீண்டு செல்லச் செல்ல, கூட்டுப் படையினரின் ஆர்வ மும் உற்சாகமும் குன்றிச் செல்லலாயின. அதற்குக் காரணம், கூட்டுச் சேர்ந்திருந்தவர்கள் வெவ்வேறு நோக்கங்களுடன் ஒன்றுபட்டு வந்தி ருந்தமையாகும். குறைஷியர்களது நோக்கமாக இருந்தது தமது வர்த்தக மார்க்கங்களைத் திறந்து கொள்வதும் தமது பண்டைய பாரம்பரியங் களை மீட்டு நிலை நிறுத்திக் கொள்வதுமாகும். நாட்டுப்புற அரபிகள்

உடனடி வெற்றி ஒன்றினை ஆசித்திருந்தனர். அதன் மூலம் மதீனாவைச் சூறையாடிக் கொள்ளும் அவர்களது நோக்கம் பூர்த்தியாகிவிடும்.

நபிகளாருடனான ஒப்பந்தங்களை முறித்துக் கொண்டாலும் கூட யுத்தத்தில் தீவிரமாகக் கலந்து கொள்வதில் தயக்கம் காட்டினர் யூதர்கள். கூட்டுப்படையினர் முற்றுகையைக் கைவிட்டுத் திரும்பிவிடக் கூடுமாயின் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விடுவார்கள். பின்னர் தனியாகவே அவர்கள் முஸ்லிம்களை எதிர்கொள்ள வேண்டிவரும். எனவே தாமும் யுத்தத்தில் நேரடியாகக் களம் இறங்கும் முன்னர் குறைஷியரில் இருந்து சிலரைப் பணயமாக வேண்டினர் யூதர்கள்.

இப்ன் இஸ்ஹாக், மூஸா இப்ன் உக்பா, அல்வாகிதீ ஆகியோர், நயீம் இப்ன் மஸ்ஊத் அல்-கதபானி அகழ் யுத்தத்தின் போது ஆற்றியன குறித்துப் பேசுவர். அண்மையில் தான் அவர் இஸ்லாத்தை ஏற்றிருந்தமை குறித்து குறைஷியரோ யூதர்களோ நாட்டுப்புற அரபிகளோ அறிந்திலர். நபிகளாரின் உத்தரவின் பேரில் அவர் கூட்டுப் படையினரின் மத்தியில் சந்தேகங்களைக் கிளறிவிடலானார். யூதர்களிடம் சென்ற அவர், குறைஷியரிடம் இருந்து பணயமாகச் சிலரை வேண்டும்படி அறிவுறுத்தினார். கூட்டுப் படையினர் முற்றுகையைக் கைவிட்டுத் திரும்பி விடுவராயின் யூதர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விடாதிருப்பதற்கான ஒரு யுக்தியாக இதனை அவர் காட்டினார். பின்னர், குறைஷியரிடம் கூறினார் நயீம்: 'யூதர்கள் உங்களில் சிலரைப் பணயமாகக் கேட்கின்றார்கள். முஸ்லிம்களுடன் தாம் செய்து கொண்ட ஒப்பந்தங்களை முறித்து விட்டமையால் அவர்கள் கைசேதப்படுகிறார்கள். பரிகாரமாக, பணயமாக வரும் குறைஷியரை ஒப்படைத்து முஸ்லிம்களுடன் நல்லுறவு பாராட்டிக் கொள்ளலாம் என அவர்கள் கருதுகிறார்கள்'. இவை ஹதீஸ் பரிசீலனைகளின் போது தேர்ச்சி பெறா விட்டாலும் ஸீரா நூல்களில் நன்கு அறியப்பட்டனவாயிருக்கின்றன. இவை அரசியல் சம்பந்தப்பட்ட ஷரீஇ நியதிகளுக்கு முரண்பட்டவை அல்ல. ஏனெனில் வஞ்சனை கலந்ததே யுத்தம்.

எவ்வாறாயினும், முற்றுகை நீண்டு சென்று கொண்டிருந்தமையினால் கூட்டுப் படையினரின் ஊக்கம் தளர்வு காணலாயிற்று. மேலும் அவர்களைத் துயருறுத்துவதாய்க் கடுங்குளிரும் பலமான காற்றும் அமைந்தன. கீழைக்காற்று கொண்டு இறைவன் முஸ்லிம்களுக்குத் துணை செய்தான். அது கூட்டுப் படையினரின் கூடாரங்களைக் கழற்றி எறிந்தது. உணவுப் பாத்திரங்களைப் புரட்டிப்போட்டது. மூட்டிய தீயை அணைத்து விட்டது. சேணங்களோடு இணைந்த பொதிகள்

*அனைத்தையும் புதைத்துப்போட்டது. உடனே அனைவரையும் புறப் படும் படி அபூஸுஃப்யான் குரல் எழுப்பினார். இந்த கஸ்வா மூலம் அவர்களுக்கு எவ்வித பயனும் கிட்டவில்லை. தம்மைத் தாமே அவர்கள் வருத்திக் கொண்டார்கள்; பிரயோசனம் ஏதும் இல்லாச் செலவுகளைச் செய்திருந்தார்கள். குர்ஆன் கூறியது:*

> இறை நம்பிக்கையாளர்களே! உங்களின் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடையை நினைவுகூர்வீர்களாக. (எதிரிப்) படையினர் உங்களிடம் வந்தபோது (புயற்)காற்றையும் எவற்றை நீங்கள் பார்க்கவில்லையோ அத்தகைய (வானவர்களின்) படையினரையும் அவர்கள் மீது நாம் அனுப்பினோம். அல்லாஹ் நீங்கள் செய்ப வற்றைப் பார்ப்பவனாக இருக்கிறான். (அல்-அஹ்ஸாப் 33:9)

*இந்த நிகழ்வுக்கு ஒரு நேரடி சாட்சி ஹுதைபா இப்ன் அல்யமான். கூட்டுப் படையினரின் நிலைமையை அவதானித்து வரும்படி அவரை அனுப்பி வைத்தனர் நபிகளார். ஹுதைபா கூறினார்: ''அஹ்ஸாப் யுத் தத்தில் நான் அல்லாஹ்வின் தூதருடன் இருந்தேன். அன்றைய இரவு பயங்கரமான காற்றும் கடுங்குளிரும் எம்மைச் சூழ்ந்து கொண்டன. அல்லாஹ்வின் தூதர் கூறினர்: 'கேளுங்கள்! யார் எதிரிப் படைகளிடம் சென்று அவர்களது நிலைமையை அறிந்து வந்து என்னிடம் கூறு வாரோ அவர் இறுதித் தீர்ப்பு நாளில் என்னோடு இருப்பார்'. நாம் அனைவரும் அமைதியாக இருந்தோம். எங்களில் எவரும் நபிகளாருக் குப் பதிலளிக்கவில்லை. இதே அறிவிப்பை அன்னார் மேலும் இரண்டு முறை மேற்கொண்டார்கள். எவரும் பதில் கூறுவதாக இல்லை. அப்போது அன்னார் கூறினர்: 'எழும் ஹுதைபா! எதிரிகளின் செய்தியை எமக்குக் கொண்டு வாரும்'. அன்னார் என்னைப் பெயர் குறிப்பிட்டுக் கூறியதுமே எழுவதைத் தவிர எனக்கு வேறு மார்க்கம் எதுவும் இருக்க வில்லை. அன்னார் கூறினர்: 'எதிரிகள் குறித்த தகவல்களை எனக்குக் கொண்டு வாரும்; என்னை எதிர்க்க அவர்களைத் தூண்டக்கூடிய எதனையும் செய்து விடாதீர்'. அங்கிருந்து சென்றபோது உஷ்ணமான குளியலறையில் நடப்பது போன்ற சூட்டினை நான் உணர்ந்தேன். அபூஸுஃப்யான் தனது முதுகை நெருப்புக்குக் காட்டிச் சூடேற்றிக் கொண்டிருந்தார். வில்லின் நடுவே நான் ஒரு அம்பைப் பொருத்தி னேன், அவர் மீது எரியும் எண்ணத்துடன். உடன் எனக்கு நபிகளாரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன: 'என்னை எதிர்க்க அவர்களைத் தூண்டக் கூடிய எதனையும் செய்து விடாதீர்'. அம்பை எய்திருந்தால் அவரை நான் தாக்கி இருப்பேன். என்றாலும் நான் உடன் திரும்பினேன். உஷ்ணமான குளியலறை (ஹம்மாம்)யில் நடப்பது போன்ற*

*உணர்வுடன் நான் நடந்தேன். நபிகளாரின் முன்னால் வந்து எதிரிகள் பற்றிய தகவல்களை வழங்கினேன். அது முடிவுற, நான் குளிர்மையை உணரலாயினேன். எனவே நபிகளார் தமது தேவைக்கும் அதிகமாகக் கொண்டிருந்த ஒரு போர்வையால் என்னைப் போர்த்தினார்கள். அதைக் கொண்டே அன்னார் தொழுகையின் போது தம்மைப் போர்த்திக் கொள்வார்கள். விடியும் வரை நான் நன்கு உறங்கினேன். அன்னார் கூறினார்கள்: எழும், ஓ அதிகம் உறக்கம் கொள்பவரே!''*

*அல்பஸ்ஸாரின் அறிவிப்பின் படி, ஹுதைபா நபிகளாரிடம் வந்து கூறினார்: ''ஓ அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூ சுப்ஃயானை விட்டு மக்கள் கலைந்து சென்றுவிட்டார்கள். ஒரு சிறு கூட்டத்தாரே அவரோடு எஞ்சியிருந்து நெருப்பு மூட்ட எத்தனிக்கின்றார்கள். நாம் எந்தக் குளிரினால் துயர்பட்டுக் கொண்டிருக்கின்றோமோ அதே துயரை அவர்கள் மீதும் இறைவன் சாற்றியுள்ளான். என்றாலும் எமக்கு அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை உள்ளது. அவர்களுக்கோ எதுவும் இல்லை.''*

இவ்வாறாக கூட்டுப் படையினர் சிதறடிக்கப்பட்டு மதீனாவில் இருந்து கலைந்து செல்ல, முஸ்லிம்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

> நிராகரிப்பாளர்களை அவர்களுடைய கோபத்திலேயே (நிலைத்தி ருக்குமாறு) இறைவன் தடுத்து விட்டான். (இப்போரில்) எந்த நன்மையையும் அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. போரில் (இறை) நம்பிக்கையாளர்களுக்கு (வெற்றியளிக்க) அல்லாஹ் போதுமானவன். அல்லாஹ் பேராற்றலுடையவனாகவும் (யாவற் றையும்) மிகைத்தவனாகவும் இருக்கிறான்.(அல்-அஹ்ஸாப் 33:25)

முற்றுகையின் போது நபிகளார் செய்த பிரார்த்தனைக்கு இறை யோன் பதிலளித்தான்: *''யா அல்லாஹ்! வேதத்தை அருளியவனே! தீர்ப்பு வழங்குவதில் துரிதமானவனே! கூட்டுப்படையினரைத் தோற் கடித்து விடுவாயாக! யா அல்லாஹ்! அவர்களைத் தோற்கடித்துத் திகிலில் ஆழ்த்தி விடுவாயாக!''*

*தமது சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி வந்திருந்தும் மதீனாவைக் கைப்பற்றுவதில் கூட்டுப்படையினர் அடைந்த தோல்வி யின் முக்கியத்துவத்தை நபிகளார் விளக்கினார்கள்: ''அவர்கள் இனிமேல் ஒரு போதும் எம்மை முற்றுகையிட மாட்டார்கள். நாம் தான் அவர்களை முற்றுகையிடுவோம். அவர்களது எல்லைகளுக்குள் ளேயே இனி நாம் சென்று அவர்களைத் தாக்குவோம்''.*

*ஆக இது வரையிலான மதீனாவைக் காக்கும் நிலையிலிருந்து மதீனாவிலிருந்து தாக்கும் நிலைக்கு யுத்தோபாயங்கள் மாற்றமுற லாயின. இனிமேல் முஸ்லிம் தலைமைத்துவமான மதீனாவிலிருந்து சேய்மையிலேயே களங்கள் அமையும்: மக்கா, தாயிப், தபூக் இவ்வாறாக.*

### *அகழின் பின்னர்*

### *கப்த் அல்லது சைப் அல் பஹ்ர்*

*கூட்டுப் படையினருக்கு நிகழ்ந்தன அனைத்தினதும் விளைவாக குறைஷியர் மீதான பொருளாதார நெருக்குதல்களை முஸ்லிம்கள் தீவிரப்படுத்தினர். கரையோரப் பகுதியில் குறைஷிய வர்த்தகக் குழு ஒன்றை மறிக்கவென 300 பேர் கொண்ட ஒரு படையினை அபூ உபைதா இப்ன் அல்-ஜர்ராஹ் தலைமையில் அனுப்பினர் நபிகளார். பசியின் கொடூரம் தாங்காமல் பாலைவெளி முட்செடிகளின் இலைகளான 'கப்த்'தையும் சாப்பிடலானார்கள் படையினர். எனவே இவர்கள் ஜெய்ஷ் அல்-கப்த் என அழைக்கப்பட்டார்கள். தம் வசமிருந்த ஒட்ட கங்கள் பலவற்றை அவர்கள் அறுத்தனர். என்றாலும் தமது யுத்த கைங்கரியங்களுக்காக ஒட்டகங்கள் தொடர்ந்தும் அறுக்கப்படுவதைத் தடைசெய்தார் அபூ உபைதா. கடற்கரையில் பாரியதொரு சுறாமீன் கரைபட்டது. அதிலிருந்தும் சுமார் அரை மாதகாலம் சாப்பிட்டார்கள். சிறிதளவு மதீனாவுக்கும் கொண்டு சென்றார்கள். நபிகளாரும் அதி லிருந்து சாப்பிட்டார்கள்.*

*இந்த 'ஸரீஆ' தான் மக்காவின் வர்த்தகத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்த இறுதி நடவடிக்கையாகத் தெரிகின்றது. மக்காவின் வர்த்தகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துவிடவே, ஹுதைபியா ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த ஸராயாக்கள் கைவிடப்பட்டன. அபூசுஃப்யான் கூறி னார்: 'யுத்தம் எமக்குப் பேரிடியாக அமைந்து விட்டது'.*

# அல்- ஹுதைபியா

அல்-ஹுதைபியா என்பது ஒரு கிணற்றின் பெயர். மக்காவின் வடமேற்குப் புறமாக இருபத்தியிரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது இது. அதன் தற்காலப் பெயர் அல்-ஹுமைஸி. இது அல்-ஹுதைபியாவின் தோட்டங்களையும் அல்-றிழ்வான் பள்ளிவாசலை யும் கொண்டுள்ளது. மக்காவின் ஹரத்துடைய எல்லைகளை அல்-ஹுதைபியாவின் எல்லைகள் சில தொடுகின்றன. என்றாலும் அதன் பெரும்பகுதி ஹரத்து எல்லைகளுக்கு வெளியேயே அமைந்துள்ளது. இந்த கஸ்வா இப்பெயர் கொண்டமைந்தமைக்குக் காரணம், அல்-ஹுதைபியாவில் முஸ்லிம்கள் தரித்திருந்த போது அவர்களை மக்கா வுள் நுழைய விடாமல் குறைஷியர் தடுத்தமையாகும்.

நபிகளார் ஹிஜ்ரி ஆறு, துல்கஃதா ஆரம்பத் திங்கட்கிழமையொன் றில் ஹுதைபியா நோக்கிச் சென்றார்கள். உம்ரா செய்வதே இதற்கான காரணம். அதன் மூலம் கஃபா குறித்த முஸ்லிம்களது உண்மையான உணர்வுகளையும் அதன் மீது அவர்கள் கொண்டுள்ள கௌரவத்தையும் வெளிப்படுத்தலாம்; 'முஸ்லிம்கள் கஃபாவைக் கண்ணியப்படுத்து பவர்கள் அல்லர்' என்ற குறைஷியரின் தவறான பிரச்சாரங்களுக்கு பதிலடி கொடுக்கலாம்.

முஸ்லிம்களது இந்த முனைவு முழு அரேபிய தீபகற்பத்தாருக்கும் அவர்களது வலிமையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. கூட்டுப் படையினர் ஏற்கனவே தோல்வி கண்டிருந்தனர். முஸ்லிம்கள் மக்கா வினுள் நுழைவதையும் உம்ரா செய்வதனையும் குறைஷ் தடுத்து நின்றமை, இந்த நடவடிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. குறைஷ் தம்மைத் தடுப்பர்; போராடவும் முனைவர் என்றெல்லாம் உணர்ந்திருந்தமையினாலேயே நபிகளார் இயன்றளவு பெரும் தொகை

*யினரான முஸ்லிம்களுடன் சென்றார்கள். தம்மோடு இணைந்து கொள்ளுமாறு நாடோடி அறபிகளையும் வேண்டினர் அன்னார். அவர்களது பதில் தாமதமாகி வரவே நபிகளார் தம்மோடிருந்த முஹாஜிர் மற்றும் அன்ஸார்களுடன் புறப்பட்டார்கள். நாட்டறபி களின் பலவீனமான மனோபாவம் குறித்துப் பேசியது குர்ஆன்:*

> நாட்டுப்புற அரேபியர்களில் (உங்களுடன் போருக்கு வராமல்) பின்தங்கி விட்டவர்கள் உம்மிடம் வந்து, 'எங்களுடைய பொருட் களும் எங்களுடைய குடும்பத்தினரும் (நாங்கள் போருக்கு வர முடியாதவாறு) எம்மைப் பராக்காக்கிவிட்டன. ஆகவே எங்களுக்கு பாவமன்னிப்புக் கோருவீராக!' என்று கூறுவார்கள். தம் இதயங் களில் இல்லாததைத் தம் நாவுகளால் அவர்கள் கூறுகின்றார்கள். (நபியே!) நீர் கூறுவீராக: உங்களுக்கு ஏதேனும் ஒரு கெடுதியை அவன் நாடினாலும்; அல்லது ஏதேனும் ஒரு பலனை அவன் உங்களுக்கு நாடினாலும் அல்லாஹ்விடத்திலிருந்து எதனையும் உங்களுக்குத் தடுக்கும் அதிகாரம் பெற்றவர் யார்? (நீங்கள் எண்ணுவது போல்) அல்ல, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.
>
> மேலும், (போருக்குச் சென்ற இறைத்)தூதரும் இறை நம்பிக்கை யாளர்களும் தம் குடும்பத்தாரிடம் ஒருகாலும் திரும்பி வரவே மாட்டார்கள் என்று நீங்கள் எண்ணினீர்கள். அ(ப்படி எண்ணுவ)து உங்களுடைய இதயங்களில் அலங்காரமாக்கப்பட்டது. தீய எண் ணத்தையே நீங்கள் எண்ணினீர்கள். நீங்கள் அழிந்துவிடும் கூட்டத் தினராகிவிட்டீர்கள். (அல்-ஃபத்ஹ் 48:11-12)

*இங்கு குறிப்பிடப்பட்ட நாட்டுப்புற அரேபியர் மதீனாவில் வாழ்ந்து வந்த இரு கோத்திரத்தவர்களான ஜுஹைனா, மஸீனா என்பனவாகும் என்பார் முஜாஹித். குறைஷியர் தம்மை எதிர்ப்பர் அல்லது யுத்தம் செய்வர் எனக் கருதியமையினால் போராட்டத்திற்குத் தயாராக தமது ஆயுதங்களையும் கொண்டு சென்றனர் முஸ்லிம்கள். இது, அவர்கள் ஆயுதங்கள் தரித்து இருக்கவில்லை எனும் அல்வாகிதீயின் அறிவிப் புக்கு முரணாக உள்ளது.*

*ஹுதைபியாவின் முஸ்லிம்களின் தொகை ஆயிரத்து ஐநூறு. நேரடிச் சாட்சியாளர்களாக அமைந்த பலர் இவ்வாறே அறிவித்துள்ளனர். அவர் கள்: ஜாபிர் இப்ன் அப்துல்லாஹ், அல் பராஆ பின் ஆஸிப், மஃகால் இப்ன் யஸ்ஸார், ஸலாமா இப்ன் அல்-அக்வா மற்றும் முஸய்யப் இப்ன் ஹஸன் ஆகியோர். ஓர் அறிவிப்பில் ஜாபிர் இந்த எண்ணிக்கை*

ஆயிரத்து ஐநூறு என்றார். மற்றொரு தோழர் அப்துல்லாஹ் இப்ன் அபூ அவ்பா ஆயிரத்து முந்நூறு என்பார். ஐந்து நேரடி சாட்சிகள் ஆயிரத்து முந்நூறு என்பதில் இணக்கம் காண்கின்றனர். இதனால் இதுவே கூடிய பலம் வாய்ந்த அறிவிப்பாக இருக்கின்றது. அறிவிப்புகளின் மத்தியில் காணப்படும் வித்தியாசம் பாரியதல்ல. அவற்றை ஒருமைப்படுத்தி எடுப்பது சிரமமானதுமல்ல.

முஸ்லிம்கள் து அல்-ஹுலைபாவில் தொழுது உம்ராவுக்கான இஹ்ராம் அணிந்து கொண்டார்கள். பலியீட்டுக்கென அவர்களிடம் எழுபது கால்நடைகள் இருந்தன. நபிகளார் புஸ்ர் இப்ன் ஸுப்யான் அல்குஸாஇ அல்காஃபி என்பவரை மக்காவில் உளவு பார்த்து வரும்படி அனுப்பினார்கள்.

மதீனாவில் இருந்து எழுபத்தி மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ள றவ்ஹாவை முஸ்லிம்கள் அடைந்ததும் இன்னமும் இஹ்ராம் அணியாது இருந்த அபூ கதாதா அல் அன்ஸாரியை மேலும் சில தோழர்களுடன் செங்கடலை அண்மிய கய்காவுக்கு அனுப்பிவைத்தனர் நபிகளார். அங்கிருந்த சில முஷ்ரிகூன் முஸ்லிம்கள் மீது திடீர் தாக்குதல் ஒன்றினை மேற்கொள்ளலாம் என அன்னார் அஞ்சியிருந்தனர். அபூ கதாதா முஸ்லிம் படையினர்க்காக வரிக் குதிரை ஒன்றினை வேட்டையாடினார். படையினர் இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்ததனால் அவர்களால் வேட்டையாட முடியவில்லை. என்றாலும் அதிலிருந்தும் சாப்பிட்டார்கள். இதனை உட்கொண்டது ஏற்புடையதா என்ற ஐயம் அவர்களுள் எழுந்தது. மதீனாவில் இருந்து நூற்றி எண்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள அல்ஸுக்யாவை அடைந்ததும் இந்த விவகாரம் குறித்து நபிகளாரிடம் வினவினார்கள். வேட்டையில் அவர்கள் பங்குபற்றாத வரை இறைச்சியை உட்கொள்வது ஆகும் என அன்னார் கூறினார்கள்.

மக்காவிலிருந்து என்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அஸபான் பகுதியை முஸ்லிம்கள் அடைந்து கொண்டனர். புஸ்ர் இப்னு ஸுப்யான் அல் காஃபி குறைஷ் குறித்த தகவல்களோடு வந்து சேர்ந்தார். முஸ்லிம்களின் வருகை குறித்துத் தெரிந்து கொண்ட குறைஷ், அவர்கள் மக்காவினுள் நுழைவதைத் தடுக்கும் வகையில் படையணி ஒன்றைத் தயார் செய்துள்ளதாகத் தெரிவித்தார் அவர். குறைஷின் ஒரு முன்னணிப் படையாக காலித் இப்ன் வலீத் சில வீரர்களுடன் மக்காவிலிருந்து அறுபத்தி நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கிரஆ அல்கமீமுக்குச் சென்றிருந்தார்.

குறைஷியருக்கு ஆதரவளிக்கக்கூடிய கோத்திரத்தார்களது பிரதேசங் களைத் தாக்கலாமா? எனத் தமது தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள் நபிகளார். அதன் மூலம் அவர்கள் தமது சொந்தப் பிர தேசங்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு குறைஷியரை விட்டும் விலகி நிற்கக் கூடும். அவ்வேளை இறைத்தூதர் அவர்கள் கூறினார்கள்: ''ஓ மக்களே! உங்களது கருத்துக்களைக் கூறுங்கள். கஃபாவிலிருந்தும் எம்மைத் தடுப்போரின் குடும்பங்களையும் அவர்களது வாரிசுகளையும் நான் அழித்துவிட வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்களா? அவர்கள் எம்மிடம் (சமாதானத்துக்கென) வருவார்களாயின், இறைவன் முஷ்ரி கூன்களிலிருந்து வேவு பார்ப்பான் ஒருவனை அழித்து விடுவான். இல்லையேல் நாம் அவர்களைப் பரிதாபகரமான ஒரு நிலைக்கு ஆளாக்குவோம்.'' அவ்வேளை அபூபக்ர் கூறினார்: ''இறைத்தூதர் அவர்களே! நீங்கள் யாரையும் கொல்லவோ யுத்தம் புரியவோ வரவில்லை. கஃபாவை தரிசிக்கும் எண்ணத்துடனே வந்திருக்கின்றீர் கள். அதனை இலக்காகக் கொண்டு நாம் பயணிப்போம். அதிலிருந்து நம்மைத் தடுப்பவரை நாம் தாக்குவோம்!'' நபிகளார் கூறினார்கள்: ''அல்லாஹ்வின் பெயரால் தொடர்ந்து செல்லுங்கள்''. அண்ணலார் அடிக்கடி தம் தோழர்களுடன் கலந்து கொள்வார்கள்.

முஷ்ரிகூன்களின் குதிரைப்படை தம்மை நெருங்கி வந்துள்ள மையை அறிந்த நபிகளார், தம் தோழர்களுக்கு அச்சத்தின் போதான தொழுகையை (ஸலாத் அல் கவ்ப்) நடாத்தினார்கள். ஸலாத் அல்-கவ்ப் முதன் முதலில் தொழப்பட்ட சந்தர்ப்பம் இதுவே. கஸ்வத் தாத் அல்-ரிகா ஆனது கைபரின் பின்னர் நிகழ்ந்ததெனக் கருதுவோரின் கருத்தும் இதுவே. இது இப்ன் இஸ்ஹாக், அல்வாகிதீ மற்றும் அவர்களோடு இணங்கியோரின் கருத்துக்கு மாற்றமாக உள்ளது. ஏனெனில் அபூ மூஸா அல் அஷ்அரி, அபூஹுரைரா ஆகியோர் கைபரின் பின்னரே நபிகளாரிடம் வந்தார்கள். அதன் முன்னர் அல்ல. இருவருமே கஸ்வத் தாத் அல்-ரிகாவில் பங்கெடுத்திருந்தார்கள். ஆக, அது கைபரின் பின்ன ரேயே நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஹுதைபியாவின் அஸபாணிலேயே ஸலாத் அல்-கவ்ப் நிகழ்ந் திருத்தல் வேண்டும் என்ற கருத்தே ஏற்புடையது. ஏனெனில் அதனை உடனடியாகப் பின்தொடர்ந்தது சமாதான ஒப்பந்தம். மேலும் மக்கா விலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மக்கா வெற்றி கொள்ளப்படும் வரை யுத்தங்கள் ஏதும் நடைபெறவில்லை.

நபிகளார் ஹுதைபியாவின் ஒரு சரிவுப் பகுதியாக அமைந்த தானியா அல்-முரார் வழியாக சிரமங்கள் மிக்கதொரு பாதையைத் தெரிந்து

கொண்டனர். அன்னார் கூறினார்கள்: ''மலையின் மீது, முரார் மலையின் மீது எவர் ஏறுகின்றாரோ, பனீ இஸ்ராயீல்களின் பாவங்கள் அழிக்கப்பட்டது போல அவர்களது பாவங்களும் அழிக்கப்பட்டு விடும்.'' முதன்முதலாக மலையில் ஏறியவர்கள் பனூகஸ்ரஜ்களின் குதிரை வீரர்களாவர்.

நபிகளார் தமது படையினர் செல்லும் பாதையை மாற்றியமைத்தார்கள். காலித் இப்ன் அல்-வலீதுடனும் முஷ்ரிகூன்களின் குதிரைப் படையினருடனுமான மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதே இதன் நோக்கமாக இருந்தது. பாதை மாற்றத்தைத் தெரிந்து கொண்ட காலித் உடன் மக்கா திரும்பினார். குறைஷியர் வெளியேறி, பல்தா எனும் தண்ணீர்த் துரவை முஸ்லிம்கள் அடைய முன்னர் சென்றடைந்து, அங்கு முகாம் அமைத்துக் கொண்டனர்.

அல் ஹுதைபியாவை அடைந்ததும் நபிகளாரின் ஒட்டகை அமர்ந்து கொண்டது. அதனை எழுப்ப இயலவில்லை. நபித்தோழர்கள் கூறினார்கள்: ''ஒட்டகம் எழுவதாக இல்லை.'' அப்போது நபிகளார் கூறினார்கள்: ''அது எழ மறுக்கவில்லை. அதன் இயல்பு அல்ல இது. மக்காவிலிருந்து யானையைத் தடுத்தவனே இதனையும் தடுத்துள்ளான்.'' தொடர்ந்து கூறினர் அன்னார்: ''எனது ஆத்மா யாருடைய கையில் இருக்கின்றதோ! அவன் மீது சத்தியமாக! இறையோனின் பார்வையில் அவனது உரிமைகளைக் கௌரவிக்கும் எந்த ஒரு சகாயத்தையும் குறைஷியர் வேண்டி நிற்பராயின் நிச்சயமாக நான் அவற்றை அளிப்பேன்''. பின்னர் மக்காவுக்கான தமது பாதையை மாற்றி அல் ஹுதைபியாவின் சேய்மையான ஒரு பகுதிக்குச் சென்று சிறிதளவே தண்ணீர் இருந்த ஒரு கிணற்றடியில் நபிகளார் முகாம் அமைத்தார்கள். தாகம் குறித்து முறையிட்டனர் படையினர். தமது அம்பறாத் தூணியிலிருந்து ஓர் அம்பை எடுத்த அண்ணலார், அதனை அக்கிணற்றினுள் விடுமாறு கூறினார்கள். தண்ணீர் பெருகியது. அனைவரும் தாகம் தணிந்தனர். ஹுதைபியாவின் போது நிகழ்ந்த அற்புதங்களில் ஒன்று இது.

குறைஷியர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கமும் அது நிகழ்ந்து விடுவது இஸ்லாத்துக்கு மாபெரும் சக்தியாக அமையப்பெறும் என்ற உணர்வும் காரணமாக குறைஷியரை அழிக்காது விடுவதே நலம் எனக் கருதினர் நபிகளார்.

அத்தோடு அன்னார் கூறியிருந்தார்கள்: 'மக்கள் உலோகத்தைப் போன்றோர். ஜாஹிலிய்யாவில் சிறந்தவர்களாக இருந்தோர். இஸ்லாத்

திலும் சிறந்தோராய் இருப்பர். அவர்கள் அதனைச் சரிவர விளங்கிக் கொள்வார்களாயின்!'' அரேபியர் மத்தியில் நா வன்மையிலும் புத்தி சாதுர்யத்திலும் அனுபவத்திலும் மிக்கோராயும் உயர் அந்தஸ்தினராயும் விளங்கியோரே குறைஷ். இஸ்லாத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார் கள் என்ற எதிர்பார்ப்போடு சாதுரியமாக அவர்களைக் கையாளக் கூடு மாயின் அதுவே இஸ்லாமிய பரம்பலுக்கும் அரசுக்கும் பெரும் சக்தி யாக அமையும். பின்னைய காலங்களில் ஊர்ஜிதமாகியதும் இதுவே. குறைஷியரின் முரட்டுத்தனமான போக்கு குறித்து நபிகளார் கவலை கொண்டார்கள்; முஸ்லிம்களை எதிர்த்துப் போராட எடுத்து வரும் பிரயத்தனங்களால் அவர்கள் தம்மைத் தாமே துயருறுத்திக் கொள்கின் றமை குறித்து ஆதங்கமுற்றார்கள். அன்னார் கூறினார்கள்: ''பாவம் குறைஷியர், யுத்தம் அவர்களைச் சூறையாடி விட்டது. அவர்கள் என்னையும் ஏனைய அராபியரையும் தம் சொந்த வழிகளில் செல்ல விட்டிருப்பின் என்ன தான் பாதகங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்? இறைவன் அவர்கள் மீதான வெற்றியை எனக்கு அருள்வானாயின் அவர்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தினுள் நுழைவார்கள். இல் லையேல் பலம் இருக்கும் வரை யுத்தம் செய்வார்கள். குறைஷியர் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவன் என் மீது சுமத்தியுள்ள பொறுப்புக்காகப் போராடு வதில் இருந்து நான் ஓயமாட்டேன். அவன் அதனை வெற்றி பெறச் செய்யும் வரை அல்லது நான் அழியும் வரை.''

நடுநிலையான சிலரை அல்லது தூதுவர்கள் சிலரைக் குறைஷி யரிடம் அனுப்பித் தமது நோக்கம் யாருடனும் யுத்தம் புரிவதல்ல எனவும் புனிதத் தலத்தை தரிசித்தலுமே எனவும் உணர்த்த விழைந்த னர் நபிகளார். புதைல் இப்ன் வர்கா அல்-குஸாயீ நபிகளாரிடம் வந்து மக்காவிலிருந்து முஸ்லிம்களைத் தடுக்கக் குறைஷியர் தீர்மானித் துள்ளதாகக் கூறினார். தமது உண்மையான நோக்கத்தையும் நிலைமை யையும் புதைலுக்குத் தெரியப்படுத்தினர் நபிகளார். இதனைக் குறை ஷியரிடம் புதைல் தெரிவித்த வேளை அவர்கள் கூறினார்கள்: 'அவர் யுத்தம் புரியும் நோக்கம் ஏதும் இல்லாமல் இங்கு வந்திருக்கலாம். என்றாலும் எமது விருப்புக்கு மாறாக அவர் இங்கு வருதல் தகாது. நாம் இதனை அனுமதித்தோம் என அரேபியர் கூறாதிருக்கட்டும்!'

மக்காவினுள் நுழைந்தாலும் நுழையா விட்டாலும் கூட முஸ்லிம் கள் அரசியல் ரீதியானதொரு வெற்றியை ஈட்டிக் கொள்ள முடிந்தது. அவர்கள் மக்காவினுள் நுழைந்து, அரேபியர் அது குறித்துப் பேசி னாலும் சரி, 'முஸ்லிம்கள் கஃபாவைக் கௌரவிப்பவர்கள் அல்லர்

எனக் கூறி, குறைஷியர் கஃபாவை கௌரவிக்க வந்தவர்களைத் திருப்பி அனுப்பி விட்டார்கள்' என அரேபியர் பேசினாலும் சரியே.

நபிகளார் குறைஷியரிடம் தொடர்ந்தும் தூதுவர்களை அனுப்பித் தமது நோக்கத்தைத் தெளிவுபடுத்த விழைந்தார்கள். கராஷ் இப்ன் உமையா அல்-குஸாயி அனுப்பப்பட்டார். அஹாபீஷ் தலையிட்டி ருக்காவிட்டால் அவர் கொல்லப்பட்டிருக்கக் கூடும். உமர் இப்ன் அல்-கத்தாப் அவர்களை அனுப்ப எண்ணிப் பின்னர் தம் எண்ணத்தை மாற்றி உஸ்மான் இப்ன் அஃப்பான் அவர்களை அனுப்பினார்கள். குறைஷியர் மீது உமர் கொண்டிருந்த அடங்காப் பகைமை குறைஷி யராலும் நன்கு அறியப்பட்டிருந்தது. உமரின் சொந்தக் கோத்திரமான பனூ அதீ கூட அவருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இல்லை. உஸ்மான் குறைஷியரிடம் சென்றார். அவர் நபிகளாரின் செய்தியை அறிவிப்புச் செய்யும் வரை அப்பான் இப்ன் ஸஈத் இப்ன் அல்-ஆஸ் அவருக்குப் பாதுகாப்பு வழங்கினார். உஸ்மான் தவாஃப் செய்து கொள்ளக் குறை ஷியர் அனுமதித்தனர். என்றாலும் நபிகளாரை முந்தியவராக தவாப் செய்வதிலிருந்தும் உஸ்மான் தவிர்ந்து கொண்டார். அவரைத் தடுத்து வைத்து அவர் திரும்பிச் செல்வதைத் தாமதப்படுத்தினர் குறைஷ்.

உஸ்மான் கொல்லப்பட்டு விட்டார் என்றே முஸ்லிம்கள் கருதினர். நபிகளார் தமது தோழர்களிடம் விசுவாச வாக்குறுதி (பய்ஆ) அளிக்கும் படி வேண்டினார்கள். முட்கள் செறிந்த ஒரு மரத்தின் கீழ் நிகழ்ந்தது இது. முனாபிக்கான ஜத்த் இப்ன் கைஸ் தவிர்ந்த ஏனையோர் அனை வரும் வாக்குறுதி அளித்தனர். மரண பரியந்தம் என அமைந்தது இந்த வாக்குறுதி. ஏனைய அறிவிப்புகளின்படி மக்கத்தாருடன் போராட்டங் கள் ஏதும் தொடங்குமாயின் தாம் யுத்தகளத்தில் இருந்து தப்பிச் செல்ல மாட்டோம் எனத் தோழர்கள் வாக்குறுதி அளித்தனர். என்றா லும் மரணபரியந்தம் என அவர்கள் வாக்குறுதி அளிக்கவில்லை. எவ் வாறாயினும் இந்த அறிவிப்புகளில் முரண்பாடுகள் இல்லை. ஏனெனில் வாக்குறுதியானது யுத்தகளத்தில் இருந்து தப்பிச் செல்ல மாட்டோம் என்றே அமைந்தது.

விசுவாச வாக்குறுதி அளிக்க முதலில் முன்வந்தவர் அபூ ஸினான் அப்துல்லாஹ் இப்ன் வஹ்ப் அல்-அஸதீ. அவரின் பின் தோழர்கள் ஒவ்வொருவராக முன்வந்தனர். தமது தோழர்களது மனோபாவத்தை யும் வாக்குறுதியையும் மெச்சிப் பேசினார்கள் நபிகளார். ''நீங்கள் தான் உலகில் சிறந்த மனிதர்கள். இன்ஷா அல்லாஹ் இந்த விருட்சத்தின் கீழ் வாக்குறுதியளித்த தோழர்கள் (அஸ்ஹாப் அல்ஷஜரா) எவரும்

நரகம் நுழைய மாட்டார்கள்.'' உஸ்மான் குறைஷியரால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததால் நபிகளார் தமது வலது கரத்தை உயர்த்தி ''இதுதான் உஸ்மானின் கரம்'' எனக் கூறி மறுகரத்தை அதில் பதித்து இது ''உஸ்மானுக்கானது!'' எனக் கூறினார்கள். ஆக உஸ்மானும் விருட்சத்தின் கீழ் இருந்து வாக்குறுதி அளித்தோருள் ஒருவராக கணிக்கப் பெற்றார். வாக்குறுதி அளித்தல் நிறைவு பெறும் வேளை உஸ்மான் திரும்பி வந்து சேர்ந்து கொண்டார். இந்த வாக்குறுதி ''பய்ஆ ரிள்வான்'' திருப்திகர வாக்குறுதி எனவும் வழங்கப்படுகிறது.

முஸ்லிம்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவென குறைஷ் பல தூதுவர்களை அனுப்பி வைத்தார்கள். அதில் முதலாவதாக அனுப்பப் பட்டவர் உர்வா இப்ன் மஸ்ஊத் அல் தகபீ. முஸ்லிம்கள் எந்தளவு நபிகளாரை கௌரவித்தார்கள், அவரது கட்டளையை நிறைவேற்று வதில் எத்துணை ஆர்வமாக இருக்கின்றார்கள் என்பதனை எல்லாம் அவர் கண்டுகொண்டார். குறைஷியரிடம் திரும்பிய அவர் கூறினார்: 'ஓ எனது மக்களே! நான் அரசர்களிடம் சென்றிருக்கிறேன். சீஸரிடம், குஸ்ரோவிடம், நெகூஸ் இடம். என்றாலும் முஹம்மதுடைய தோழர் கள் முஹம்மதை வைத்திருக்கும் உயர் ஸ்தானத்தில் ஏனைய எந்த ஒரு மன்னரது தோழர்களும் அன்னவர்களை வைத்திருந்ததனை நான் கண்டதில்லை'.

குறைஷ் பின்னர் அஹாபீஷ்களின் தலைவரான ஹுலைஸ் இப்ன் அல்கமா அல்-கினானியை அனுப்பி வைத்தார்கள். அவர் வருவதை அவதானித்த நபிகளார் தம் தோழர்களிடம் பலியீட்டுக்கெனக் கொண்டு வந்த ஒட்டகங்களை ஹுலைஸின் முன்னால் அனுப்புமாறும் அவர் செவியுறும் வகையில் தல்பியா கூறுமாறும் கூறினார்கள். அதற்குக் காரணம் இவ்வாறான வழக்கங்களைக் கௌரவிக்கும் மக்களுள் ஒருவரே ஹுலைஸ் என நபிகளார் அறிந்திருந்தமையாகும். குறைஷி யரிடம் திரும்பிச் சென்ற ஹுலைஸ் கூறினார்: 'அவர்களது ஒட்டகை கள் பலியீடு செய்வதற்கான மாலைகள் அணியப் பெற்றிருந்ததை நான் கண்டேன். எனவே அவர்கள் கஃபாவுக்குச் செல்வதை விட்டும் தடுக்கக் கூடாது என்றே நான் எண்ணுகிறேன்'. குறைஷ் கூறினார்கள்: ''அமர்ந்துகொள்ளும்; எதுவும் அறியாத ஒரு நாட்டறபி தானே நீர்!''

பின்னர் குறைஷ் மக்ரஸ் இப்ன் ஹப்ஸை அனுப்பினார்கள். அவரைத் தொடர்ந்து ஸுஹைல் இப்ன் அம்ர் அனுப்பப்பட்டார். 'உங்களது நிலைமை உங்களுக்கு இலகுவாகி விட்டது' என நபிகளார் நம்பிக்கையுடன் கூறினார்கள். அரபுமொழியில் 'ஸஹல' என்ற சொல்

லுடன் இணைந்த சொற்சிலம்பம் இது. 'இலகுவாகி விடுவது' ஸுஹைல் என்ற பெயரின் வேர்ச்சொல்லிலிருந்து விளைவது. நபிகளார் கூறினார்கள்: ''மக்கள் சமாதானத்தை வேண்டுகின்றார்கள். அதனால்தான் இந்த மனிதனை அனுப்பி இருக்கிறார்கள்.'' இந்த முறை உம்ரா செய்யாமல் முஸ்லிம்கள் திரும்பிவிட வேண்டும் என்பதே குறைஷியர் சமாதான உடன்படிக்கையில் பிரதானமாக வலியுறுத்த விளைந்தது. நபிகளாருக்கும் ஸுஹைல் இப்ன் அம்ருக்கும் இடையிலான நீண்ட பேச்சுவார்த்தை அல் ஹுதைபியா சமாதான ஒப்பந்தத்தில் முடிவு பெற்றது.

ஒப்பந்தத்தின் ஆரம்ப வசனங்களை எழுதுவதில் சில முரண்பாடுகள் தோற்றின. நபிகளார் ஒப்பந்தத்துக்கு இஸ்லாமிய மணம் அளிக்க விரும்பினார்கள். ஸுஹைல் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். ஒப்பந்தத்தை எழுத்தில் பதித்து வந்தவர் அலீ இப்ன் அபீதாலிப். நபிகளார் கூறினர்: எழுதும்! 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'. ஸுஹைல் கூறினார்: 'அர்- ரஹ்மான்' என்பது குறித்து நான் ஏதும் அறிய மாட்டேன். வழக்கம் போல 'பிஸ்மிக் அல்லாஹும்ம' (ஓ இறைவா! உன் பெயர் கொண்டு) என எழுதும். முஸ்லிம்கள் கூறினார்கள்: நாம் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' தவிர்த்து வேறு எதுவும் எழுத மாட்டோம். நபிகளார் கூறினார்கள்: எழுதும்! 'பிஸ்மிக் அல்லாஹும்ம'. பின்னர் கூறினார்கள்: எழுதும்! இதுவே அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் இணங்கியவை! ஸுஹைல் கூறினார்: இறைவனின் பெயரால் நீர் அல்லாஹ்வின் தூதர் என்பதை நாம் ஏற்றிருந்தால் நீர் கஃபாவைத் தரிசிப்பதிலிருந்து உம்மை நாம் தடுத்திருக்க மாட்டோம். உம்மோடு யுத்தம் செய்திருக்கவும் மாட்டோம். எழுதும்! 'முஹம்மத் இப்ன் அப்துல்லாஹ் இணங்கியவை!' நபிகளார் கூறினார்கள்: இறைவன் பெயரால் நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதராவேன், நீங்கள் என்னை நம்பாவிட்டாலும் கூட. எழுதும்! முஹம்மது இப்ன் அப்துல்லாஹ்! தொடர்ந்து அண்ணலார் கூறினார்கள்: நீங்கள் எம்மை கஃபாவுக்குச் சென்று தவாஃப் செய்ய அனுமதிக்கும் பட்சத்தில்! இடைமறித்தார் ஸுஹைல்: 'இறைவன் பெயரால் நாம் அவற்றைப் பலவந்தமாகப் பிடித்து வைத்துள்ளோம் என அரபிகள் கூறாது இருப்பார்களாக. நீர் இந்த வருடம் மக்காவிற்குள் நுழைய மாட்டீர். அடுத்த வருடம் நீர் நுழைவீர்'. இது எழுத்தில் பதியப்பட்டது.

ஸுஹைல் கூறினார்: 'எம்மில் எவரேனும் உம்மிடம் வருவாராயின், அவர் முஸ்லிமாக இருந்தாலும் கூட, அவரை நீர் எம்மிடம்

ஒப்படைப்பீர்!' முஸ்லிம்கள் கூறினார்கள்: 'இறைவனுக்கே புகழ் அனைத் தும். ஒருவர் முஸ்லிமாக எம்மிடம் வந்து சேரும் போது அவரை நாம் எவ்வாறு இறைநிராகரிப்பாளர்களிடம் திருப்பி ஒப்படைக்கலாம்?' இவர்கள் இது குறித்து உரையாடி வந்த வேளை அபூ ஜந்தல் இப்ன் ஸுஹைல் இப்ன் அம்ர் விலங்குகள் பூட்டப் பட்டவராக அங்கு வந்து சேர்ந்தார். மக்காவின் கீழ்ப்பகுதியில் இருந்து தப்பியவராக முஸ்லிம்களோடு இணைந்து கொள்ள வந்திருந்த அவர் ஸுஹைலின் மகனாவார். அவரைக் கண்டதும் ஸுஹைல் கூறினார்: 'ஓ முஹம்மத்! இவர்தான் நீர் எமக்குத் திருப்பியளிக்க வேண்டிய முதலாமவர்'. நபிகளார் கூறினார்கள்: 'நாம் இன்னமும் எமது ஒப்பந் தத்தை எழுதி முடிக்கவில்லை'. ஸுஹைல் கூறினார்: 'அப்படியானால் இறைவன் பெயரால் நான் உம்மோடு எந்தவித சமாதான ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை!' நபிகளார் கூறினார்கள்: 'அவரை எம்மிடம் விட்டு விடும்!' ஸுஹைல் கூறினார்: 'நீர் அவரை வைத்துக் கொள்ள நான் விடமாட்டேன்'. நபிகளார் கூறினார்கள்: 'அதைச் செய்யும்!' ஸுஹைல் கூறினார்: 'நான் செய்ய மாட்டேன்'. அவ்வேளை மக்ரஸ் கூறினார்: 'நாம் அவரை உமக்குத் தருவோம்'.

ஒப்பந்தம் பின்வருமாறு முடிவுசெய்யப்பட்டது: பத்து வருடங்கள் யுத்தங்கள் நிகழாது. இக்காலத்தில் மக்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். பகைமையிலிருந்தும் விலகி இருப்பார்கள். தனது பாதுகாவலரின் அனுமதியின்றி எவரேனும் முஹம்மதிடம் வந்தால், அவரை முஹம் மத் குறைஷியரிடம் ஒப்படைப்பார். முஹம்மதின் முகாமிலிருந்து எவரேனும் குறைஷியரிடம் சென்றால், அவர் மீண்டும் முஹம்மதிடம் ஒப்படைக்கப்பட மாட்டார். நாம் ஒருவருக்கொருவர் பகைமை காட்ட மாட்டோம். கபட நடவடிக்கைகளோ நம்பிக்கைத் துரோக முயற்சி களோ மேற்கொள்ளப்படக்கூடாது. முஹம்மதுடன் யாரேனும் ஒப் பந்தம் செய்துகொள்ளக் கூடுமாயின் அவ்வாறே செய்யலாம். குறைஷி யருடன் யாரேனும் ஒப்பந்தம் செய்யக் கூடுமாயின் அவ்வாறே செய்து கொள்ளலாம்.

இதைக் கேட்டதும் குஸாஆ எழுந்து கூறினார்கள்: 'நாங்கள் முஹம்மதுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறோம்'. பனூ பக்ர் எழுந்து, 'நாங்கள் குறைஷியருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறோம்' எனக் கூறினார்கள்.

ஒப்பந்த வாசகங்கள் தொடர்ந்தன: இந்த வருடம் நீர் திரும்பிச் செல்வீர். எமது விருப்பத்துக்கு மாறாக நீர் மக்காவுள் நுழைய மாட்டீர்.

அடுத்த வருடம் நாம் உமக்கு வழி அமைப்போம். நீர் உமது தோழர் களுடன் மக்கா வந்து அங்கு மூன்று தினங்கள் தங்கலாம். சவாரி செய்பவரது ஆயுதங்கள் மாத்திரம் தரித்திருக்கலாம். வாள்கள் அவற் றின் உறைகளுக்குள் இருக்கவேண்டும். மேலதிகமாக எதையும் நீர் கொண்டு வர மாட்டீர்.

இவ்வாறாக முஸ்லிம்கள் அடுத்த வருடம் வரை மக்காவுள் நுழைய மாட்டார்கள், அங்கு மூன்று தினங்களே தங்குவார்கள், உறைகளுக் குள்ளாலான வாள்களை மாத்திரமே அவர்கள் தரித்திருப்பார்கள், ஆகிய நியதிகளோடு பத்து வருடங்களுக்கான யுத்த நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அது, இரு சாராரும் பகைமையையும் பிரசார உத்திகளையும் மேற்கொள்ள மாட்டார்கள் எனவும், ஏனைய அரபு கோத்திரத்தாருடன் அவர்கள் சமமான உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம் எனவும் கூறியது. குறைஷியரிடம் இருந்து தப்பிச் செ ன்று முஸ்லிம்களுடன் சேர்ந்து கொள்ளும் எந்த ஒரு முஸ்லிமையும் முஸ்லிம்கள் திருப்பி அளித்துவிட வேண்டும்; குறைஷியரைச் சென்ற டைந்து கொள்ளும் எந்த ஒரு முஸ்லிமும் குறைஷியரால் திருப்பி அளிக்கப்பட வேண்டுவதில்லை.

இந்த ஒப்பந்தம் குறித்து, அதிலும் குறிப்பாக அதன் இஸ்லாமியத் தன்மை மாற்றியமைக்கப்பட்டமை குறித்து முஸ்லிம்கள் பேரதிருப்தி கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் தூதர் என்ற வாசகத்தை ஒப்பந்தத் திலிருந்து அழித்து விடுவதை அலீ இப்ன் அபீதாலிப் மறுத்தார். எனவே நபிகளார் பத்திரத்தை அலீயிடமிருந்து எடுத்து ஸுஹைல் கூறியதனைப் பதிவு செய்ய வேறொருவரிடம் கொடுத்தார்கள். தம் மிடம் வந்து சேர்ந்து கொள்ளும் முஸ்லிம்களைத் திருப்பி அளித்து விடும் கடப்பாடு முஸ்லிம்களுக்குப் பெரும் மனக் கிலேசத்தை ஏற்படுத்தியது. ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் இதற்கு இணங்குகின்றீர்களா?'' எனக் கேட்டார்கள் அவர்கள். அன்னார் கூறினார்கள்: ''எம்மிலிருந்தும் பிரிந்து அவர்களிடம் செல்பவர்களை அல்லாஹ் எம்மிலிருந்தும் பிரித்து விடுகின்றான். எம்மிடம் வருவார் எவருக்கும் அல்லாஹ் நிவாரணம் அளித்து அவருக்கு ஒரு வழியைக் காட்டி அருள்வான்.''

சினம் கொண்டார் உமர் இப்ன் அல்-கத்தாப். ஒப்பந்தம் குறித்து வினவ நபிகளாரிடம் சென்ற அவர் பின்னர் கூறினார்: நபிகளாரிடம் சென்று நான் வினவினேன்: ''நீங்கள் உண்மையிலேயே இறைவனின் தூதர் தானே?'' அன்னார் கூறினர்: ''ஆம்'' நான் வினவினேன்: ''நாம்

நேரான வழியிலும் எமது எதிரிகள் தவறான பாதையிலும் இருக்கி றார்கள் அல்லவா?'' அன்னார் கூறினர்: ''ஆம்'' நான் கூறினேன்: ''அப்படியானால், எமது விசுவாசம் அவதூறு செய்யப்படுவதை நாம் எவ்வாறு அனுமதிக்கலாம்?'' அன்னார் கூறினர்: ''நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதராவேன். நான் அவனையே கீழ்ப்படிவேன். அவனே எனக்கு ஆதரவளிப்பவன்''. நான் கூறினேன்: ''நாங்கள் கஃபா வுக்குச் சென்று, அதனைச் சுற்றி தவாப்ஃ செய்வோம் என நீங்கள் கூறினீர்கள் அல்லவா?'' அன்னார் கூறினர்: ''ஆம். ஆனால், இந்த வருடம் நீங்கள் அவ்வாறு செய்வீர்கள் என நான் உங்களுக்குக் கூறி னேனா?'' நான் கூறினேன்: ''இல்லை''. அன்னார் கூறினர்: ''நிச்சய மாக நீர் கஃபாவுக்குச் செல்வீர். அதைச் சுற்றி நிச்சயமாக நீர் தவாஃப் செய்வீர்''. என்றாலும் உமர் அத்துடன் திருப்தி கண்டவராக இல்லை. அவர் அபூபக்ர் இடம் சென்று, அதே வினாக்களைத் தொடுத்தார். அபூபக்ர் கூறினார்: ''ஓ உமர்! அவர் கூறுவதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும். அன்னார் அல்லாஹ்வின் தூதர் என நான் சாட்சி கூறு கின்றேன்.'' உமர் கூறினார்: ''நானும் அவ்வாறே சாட்சியம் கூறுகின் றேன்.''

உமர் கூறினார்: 'நான் அன்றைய தினம் கூறியவற்றை வெகுவாக அஞ்சினேன். அதிலிருந்து எனது நிலையை மேம்படுத்திக் கொள்வ தற்காக நான் அதிகமதிகம் தானங்கள் செய்கின்றேன்; நோன்பு வைக் கின்றேன்; அடிமைகளை விடுதலை செய்கின்றேன்.' ஒப்பந்த விதி களை நபிகளார் ஏற்றுக்கொண்டமையின் விவேகம் குறித்துத் தெரிந்து கொள்ளவே உமர் விழைந்தார். முஷ்ரிகூன்களை இழிவு செய்தலே உமரின் நோக்கம். அவர் ஆற்றிய கருமங்கள் அனைத்தினதும் பின்ன ணியில் ஒரு காரணம் இருக்கவே செய்தது. அதற்கான கூலியும் அவருக்கு கிடைக்கவே செய்தது. ஏனெனில் அவற்றை விளங்கிக் கொள்ள பெரும் சிரத்தை எடுத்தவர் அவர்.

முஸ்லிம்கள் எவ்வித ஐயமும் இன்றி மக்காவுள் நுழையும் நோக்கி னராகவே சென்றிருந்தனர். என்றாலும் அவர்கள் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் நிகழும்போது முற்றும் மனம் தளர்ந்து, மரணத்தை எதிர்கொண்டோர் போல் கதிகலங்கிப் போனார்கள். குறிப்பாக அபூ ஜந்தல், ''ஓ முஸ்லிம்களே! என்னை என் மதத்திலிருந்தும் பிரித்து விடுவதற்காய் சிலைவணங்கிகளிடம் என்னை நீங்கள் ஒப்படைக்கின் றீர்களா?'' என வினவி நின்ற வேளை, முஸ்லிம்கள் செய்வதறியாது கலங்கி நின்றார்கள். நபிகளார் கூறினார்கள்: ''ஓ அபூ ஜந்தல்! உம்மைக்

*கட்டுப்படுத்திக் கொள்ளும். பொறுமையாக இரும். இறைவன் உமக்கு ஆறுதலளிக்கட்டும். உம்மைப்போல் நிர்க்கதியுற்றிருப்போர்க்கு அவன் நிச்சயம் ஒரு வழியைக் காட்டுவான்.''*

*உமர் அபூ ஜந்தலின் அருகில், அவரது தந்தையாருக்கு எதிராக அவரைக் கிளறிவிடுபவராக நடந்தவராய் தனது வாளையும் அபூ ஜந்தலின் அருகாமையில் கொண்டு சென்றார். என்றாலும் அபூஜந்தல் எதுவும் செய்துவிடவில்லை. அவர் குறைஷியரிடம் ஒப்படைக்கப் பட்டார்.*

*ஸிப்பீன் யுத்தத்தின்போது ஸஹ்ல் இப்ன் ஹனீப்ஃ கூறியன, ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் பின்னரான முஸ்லிம் உணர் வுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளது: ''உங்கள் அபிப்பிராயம் தவறான தாக இருக்கலாம் என்பதை நீங்கள் ஏற்க வேண்டும். அபூஜந்தல் விவகாரத்தில் எனது சொந்த அபிப்பிராயத்தைப் பின்பற்றவே நான் தூண்டப்பட்டேன். நபிகளாரின் கட்டளையைப் புறக்கணித்து விடும் வல்லமை மாத்திரம் அப்போது என்னிடம் இருந்திருந்தால், நான் அவ்வாறு புறக்கணித்து சிலை வணக்கஸ்தரோடு போராடியிருப் பேன்''. சமாதான உடன்படிக்கையை எதிர்த்த உமரும் ஏனையோரும் தாம் நபிகளாரின் முடிவுக்கு மாற்றமான நிலைப்பாட்டைக் கொண்டி ருந்தமைக்காக ஆழ்ந்த கவலைக்குள்ளாயினர். உண்மையில் இறை வாசகம் ஒன்றின் அடிப்படையிலேயே அது அமைந்திருந்ததால் அது குறித்து வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. நபிகளாரின் முடிவு இறையோனின் கட்டளைப்படியே ஆனது எனத் தெரிந்து கொண்ட விடத்து அனைவரும் அதற்குக் கீழ்ப்படிந்து நடந்தனர்.*

> ''இன்னும் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏதேனும் ஒரு காரி யத்தை முடிவு செய்து விட்டால், இறைநம்பிக்கையாளர்களான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் அவற்றிற்கு மாற்றமாக வேறு எதையும் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லை.'' (அல்-அஹ்ஸாப் 33:36)

*குறைஷ், பேச்சுவார்த்தைகளின் போதும் சமாதான ஒப்பந்தம் முடி வான பின்னரும் கூட முஸ்லிம்கள் சினம் கொள்ளும் வகையிலேயே நடந்து கொண்டமை கண்கூடு. அவை அவர்களது தலைவர்களின் அனுமதியுடன் நடந்திருக்கலாம்; பேச்சுவார்த்தைகளின் போது முஸ் லிம்களின் மீது மேலதிக அழுத்தம் கொண்டு வருவதற்கான யுக்தி யாகப் பிரயோகிக்கப்பட்டு இருக்கலாம்; அனுபவமற்ற இளைஞர் களது பொறுப்பற்ற நடவடிக்கைகளாக இருந்திருக்கலாம். அவை*

எவ்வாறாயினும், முஸ்லிம்கள் அனைத்தையும் ஆழ்ந்த பொறுமை யுடன் சகித்துக் கொண்டனர். மக்காவிலிருந்து என்பது பேர் கொண்ட ஒரு குழு முஸ்லிம் முகாம் மீது திடீர் தாக்குதல் நடத்தி, முஸ்லிம் களைக் கைப்பற்றிக் கொள்ள முனைந்தது. பிடித்துக்கொள்ளப்பட்ட அக்குழுவினர் நபிகளார் முன் கொண்டு செல்லப்பட, அன்னார் அவர் களை மன்னித்து விடுதலை செய்துவிட்டார்கள். ஒப்பந்தம் எழுதப் பட்டு வந்த வேளை முப்பது குறைஷிய வாலிபர்கள் முஸ்லிம் பாச றையைத் தாக்கவெனத் திரண்டு வந்தனர். கைப்பற்றப்பட்ட அவர் களையும் நபிகளார் விடுதலை செய்து அனுப்பினார்கள்.

ஒப்பந்தம் முடிவாகி முஷ்ரிகூன்களுடன் முஸ்லிம்கள் சுமுகமாகப் பழகி வந்த நிலையிலும் முஷ்ரிகூன்கள் நால்வர் நபிகளார் குறித்து இழிவாகப் பேசினர். ஸலாமா இப்ன் அல்-அக்வா அந்நால்வரையும் நபிகளாரிடம் கொண்டு சென்றார். அண்ணலார் அவர்களை மன்னித்து விட்டார்கள். இவ்வாறே சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் முஸ்லிம் களால் பிடிக்கப்பட்டிருந்த ஏனைய எழுபது முஷ்ரிகூன்களும் விடு தலையாகினர். இது குறித்து குர்ஆன் பேசியது:

> ‘‘அவன் தான் (ஓர் இறை நிராகரிப்பாளர்களாகிய) அவர்களுக்கு எதிராக உங்களுக்கு வெற்றியளித்தான். அதன் பின் மக்காவின் பள்ளத்தாக்கில் அவர்களுடைய கைகளை உங்களை விட்டும் உங்க ளுடைய கைகளை அவர்களை விட்டும் தடுத்தான்.’’ (அல்பத்ஹ் 48:24)

சமாதான உடன்படிக்கையின் விதிகள் தமக்குப் பாதகமாக அமைந் திருந்தமையினால் மனமுடைந்து போயிருந்தனர் முஸ்லிம்கள். எனவே பலியீடுகளை மேற்கொள்ளும் படியும் தலையை மழித்து விடும்படி யும் நபிகளார் கூறிய போது, எவரும் அசைவதாக இல்லை. ஒப்பந்தம் ரத்தாகி விடலாம் என அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். உம்ம் ஸலாமா வின் ஆலோசனையின் பேரில் நபிகளார் எழுந்து பலியீடு செய்து தலையையும் மழிக்கவே, எல்லோரும் எழுந்து தமது பலியீடுகளை மேற்கொண்டனர்; ஒருவருக்கொருவர் தலையை மழிக்கத் தொடங் கினர். மழிக்கும் வேளை, மனத் துயரின் காரணமாக ஒருவரையொரு வர் படுகாயங்களுக்குள்ளாக்கி விடுவர் போல் தோற்றியது. தலையை முற்றாக மழித்தவர்கள் மீது நபிகளார் மூன்று முறை பிரார்த்தித்தார் கள். தலைமயிரில் சிறிதளவு வெட்டிவிட்டவர்கள் மீது ஒரு முறை பிரார்த்தித்தார்கள். முஸ்லிம்களால் பலியிடப்பட்ட ஒட்டகங்களின் எண்ணிக்கை எழுபதாகும். ஒவ்வொரு பலியீடும் ஏழு பேர் சார்பாக மேற்கொள்ளப்பட்டது.

*நபிகளார் ஓர் ஒட்டகையைப் பலியிட்டார்கள். அது முன்னர் அபூ ஜஹ்லுக்குச் சொந்தமாக இருந்து, பத்ர் யுத்தத்தின் போது யுத்தப் பொரு ளாகக் கைப்பற்றப்பட்டிருந்தது. இது முஷ்ரிகூன்களுக்கு சினத்தை மூட்டியது. பலியீடுகள் ஹரத்தின் எல்லைகள் தாண்டி, அல்லது ஹுதை பியாவில் மேற்கொள்ளப்பட்டன. நாஜியா இப்ன் ஜுன்துப் சில பலி யீட்டுப் பிராணிகளை ஹரத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிக்குக் கொண்டு சென்று அவற்றை அங்கே பலியிட்டார். இவ்வாறாக முஸ் லிம்கள் உம்ராவுக்கான தமது இஹ்ராமைக் கலைந்து கொள்ள முடிந் தது. இதன் மூலம் ஒரு விதியும் அறிமுகமாகியது. அதாவது உம்ரா செய்வதற்கு மறுக்கப்பட்ட ஒருவர் உம்ரா செய்யாமலேயே இஹ்ராம் நிலையிலிருந்து வெளியாகி விட அனுமதிக்கப்பட்டவர் ஆகின்றார்.*

*தோழர்கள் ஹுதைபியாவில் இருபது நாட்கள் தங்கிய பின்னர் மதீனா திரும்புவதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். மொத்தத்தில் இந்தப் பிரயாணம் ஒன்றரை மாத காலம் கொண்டதாக அமைந்தது.*

*ஹுதைபியாவின் போது, கஅப் இப்னு உஜ்ரா என்ற நபித்தோழர் உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்தும் கூட சுகயீனம் காரணமாகத் தனது தலையை மழித்துக் கொள்ள நபிகளார் அனுமதி அளித்தார்கள். இந்த அனுமதி ஒரு செம்மறியாட்டைப் பலியிட, அல்லது மூன்று தினங்கள் நோன்பு நோற்க, அல்லது வறியவர்களான ஆறு பேருக்கு உணவளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப் படையிலேயே வழங்கப்பட்டது. இது குறித்து குர்ஆன் வாசகங்கள் அருளப் பெற்றன:*

> ''உங்களில் எவரேனும் நோயாளியாகவோ அல்லது தலையில் ஏற் பட்டுள்ள ஏதேனுமொன்றினால் நோவினைப்படுவராகவோ இருக் கும் நிலையில் (தலையை மழித்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டால்) அவர் நோன்பு வைத்தல் அல்லது தர்மம் செய்தல் அல்லது ஹத்யுவை (ஓர் ஆட்டை) பலிகொடுத்தல் ஆகிய (மூன்றில்) ஏதாவது ஒன்றை பரிகாரமாக மேற்கொண்டு அதனைச் செய்து கொள்ளட்டும்.'' (அல்பகரா 2: 196)

*மழை பெய்த வேளைகளில் நபித்தோழர்கள் தமது கூடாரங்களுக் குள் தொழுதுகொள்ள நபிகளார் அனுமதித்தார்கள்.*

*இஸ்லாத்தில் 'ஷூரா' பற்றிய அறிவுறுத்தல்களை நபிகளார் ஹுதைபியாவின் போது பயன்படுத்தினார்கள். உதாரணமாக, முஷ்ரி*

கூன்கள் பிரதேசங்களைத் தாக்கி அவர்களது குழந்தைகளைக் கைப் பற்றிக் கொள்வது குறித்து முஸ்லிம்களிடம் ஆலோசனை கேட்டார் கள். இதில் அன்னார் அபூபக்ரின் ஆலோசனையை ஏற்றுக் கொண் டார்கள். மக்கள் தமது பலியீடுகளை மேற்கொள்ளவும் தலையை மழித்து விடவும் வேண்டப்பட்ட வேளை எவரும் அதற்கு இயையாத நிலையில், நபிகளார் உம்ம் ஸலாமாவின் ஆலோசனையைக் கேட் டார்கள். பின் அவரது ஆலோசனைப்படி நடந்தார்கள்.

குப்பார்களுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அதி கூடியதாக எவ்வளவு காலத்துக்கு செய்யப்படலாம் என்பது ஹுதைபியாவின் மூலம் உணர்த் தப்பட்டது. அவ்வேளை குப்பார்களுடனான உறவு சுமுகமாக அல் லாமல் பகைமையானதாகவே இருந்தது. மேலும் குப்பார்களிடமி ருந்து முஸ்லிம்களிடம் வந்துசேரும் ஒரு முஸ்லிமை மீண்டும் அவர் களிடமே ஒப்படைக்கும் நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து கொள் வது இயலுமானது என்ற விதியும் இதிலிருந்தே பெறப்பட்டது.

இதன் போது நபிகளார் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் சம்பந்தமான சில தெளிவுறுத்தல்களையும் வழங்கினார்கள். 'இன்ன இன்ன நட்சத்திரங்களால் எமக்கு மழை கிட்டப் பெற்றுள்ளோம் நாம்' எனக் கூறும் ஒருவர் அல்லாஹ்வை விசுவாசித்தவர் அல்லர், அவர் நட்சத்திரத்தையே விசுவாசித்தார் எனக் கூறினார்கள் நபிகளார்.

ஸுஹைல் இப்ன் அம்ர் தம்மிடம் வந்த போது அன்னார் கூறினார் கள்: 'உங்களது நிலைமை இலகுவானதாக ஆகிவிட்டது'. இதன் மூலம் நன்மையே விளையும் என்ற மனோபாவத்தை ஊக்குவித்தனர் அன்னார்.

நபிகளார் பயன்படுத்திய எதனைக் கொண்டும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளல் அனுமதிக்கப்பட்டது எனவும் இதன்போது உணர்த் தப்பட்டது. உதாரணமாக அன்னார் பயன்படுத்திய அதே தண்ணீரைப் பயன்படுத்தி 'வுழூ' செய்வது. என்றாலும் இது நபிகளாரைப் பொறுத்து மட்டுமே அனுமதிக்கப்பட்டது. உம்மாவில் நேர்வழி சென்ற ஏனையோரைப் பொறுத்து இது ஏற்புடையதாகாது.

மதீனாவுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் முஸ்லிம்கள் ஒரு சந்தர்ப்பத்தில் உறக்கத்தின் காரணமாக ஃபஜ்ர் தொழுகையைத் தவற விட்டுவிட்டனர். சூரியோதயத்தின் காரணமாகத் தான் அவர்கள் நித்திரை கலைந்து எழுந்தனர். அவர்களுக்குக் காவலராக இருந்தவர் பிலால் இப்ன் ரபாஹ். அவரும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். உரிய நேரம் கழிந்த பின்னரே அவர்கள் பஜ்ர் தொழுகையை நிறைவேற்றி

*னர். உறக்கம் அல்லது மறதி காரணமாக தொழுகையைத் தவற விடுபவர்களுக்கான ஸுன்னா இதுவாகும்.*

*மதீனாவுக்குத் திரும்பும் வழியில் நபிகளாரது அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. உணவும் தண்ணீரும் பெருக்கமடைவதோடு தொடர்புபட்டது அது. ஸலாமா இப்ன் அல்-அக்வா கூறினார்: ''நாங்கள் அல்லாஹ்வின் தூதருடன் ஒரு படையெடுப்பில் கலந்துகொண்டோம். களைப்பும் பசியும் மீதூறவே நாம் சில ஒட்டகங்களை அறுக்க எண்ணினோம். நபிகளார் எம்மிடமிருந்த ஆகாரங்களை ஒன்று சேர்க்கும் படி கூறினார்கள். தோல் ஒன்றினை விரித்து எங்களிடமிருந்த உணவுப் பதார்த்தங்கள் அனைத்தையும் அதில் சேகரித்தோம். எவ்வளவு சேர்ந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள நான் என் கழுத்தை நீட்டிப் பார்த்தேன். சேர்ந்திருந்த மொத்த உணவு பதார்த்தங்கள், அமர்ந்திருக்கும் ஓர் ஆட்டின் அளவாகத் தான் இருந்தன. நாம் மொத்தம் ஆயிரத்து நானூறு பேர் இருந்தோம். திருப்தி காணும் வரை அனைவரும் சாப்பிட்டோம். பின் எமது உணவு பாத்திரங்களையும் நிரப்பிக்கொண்டோம்.*

*நபிகளார் வினவினார்கள் 'வுழூச் செய்ய தண்ணீர் ஏதும் உள்ளதா?' என. தனது தண்ணீர்ப் பையுடன் ஒரு மனிதர் வந்தார். அதில் ஒருசில சொட்டுக்கள் தான் தண்ணீர் இருந்தது. அதனை ஒரு பாத்திரத்தில் ஊற்றினார்கள். நாங்கள் மொத்தம் ஆயிரத்து நானூறு பேரும் வுழூச் செய்வதற்காகத் தண்ணீரைத் தாராளமாகப் பயன்படுத்தினோம்''.*

*மதீனாவுக்குத் திரும்பும் வழியில் ஸூரா அல்-ஃபத்ஹ் அருளப் பட்டது:*

(நபியே!) நிச்சயமாக நாம் உமக்குத் தெளிவான வெற்றியாக வெற்றி வழங்கினோம். (அல்-ஃபத்ஹ் 48:1)

*நபிகளார் அளவிறந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். ''இன்றிரவு எனக்கு ஒரு ஸூரா அருளப் பெற்றுள்ளது. சூரியன் எதன்மீது உதிக்கின்றதோ அதைவிட எனக்கு இது விருப்பமானது'' என்றனர் நபிகளார்.*

*அனஸ் இப்ன் மாலிக் கூறினார்: ''நிச்சயமாக நாம் உமக்குத் தெளிவான வெற்றியாக வெற்றியை வழங்கினோம் என்பது அல்-ஹுதைபியாவைக் குறிக்கிறது.'' அன்னாரின் தோழர்கள் கூறினார்கள்: 'அது உமக்கு நன்மையையே விளைக்கட்டும். எம்மைப் பொறுத்து என்ன?' அவ்வேளை அருளப் பெற்றன குர்ஆன் வாசகங்கள்:*

''(ஓரிறை) நம்பிக்கை கொண்ட ஆண்களையும் (ஓரிறை) நம்பிக்கை கொண்ட பெண்களையும் சொர்க்கங்களில் அவன் நுழையச்

செய்வதற்காக (இவ்வாறு செய்தான்). அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும்.''(அல்-பத்ஃஹ் 48:5)

*நபிகளார் கிராஆ அல்கமீம் இல் தமது ஒட்டகையின் மீது அமர்ந் திருந்த வேளை மக்கள் அன்னாரிடம் விரைந்து சென்றார்கள். அன்னார் அவர்களுக்கு இறைவாசகங்களை ஓதிக்காண்பித்தார்கள்:*

'நிச்சயமாக நாம் உமக்குத் தெளிவான வெற்றியாக வெற்றியை வழங்கினோம்'.

*ஒருவர் வினவினார்: ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது ஒரு வெற்றியா?'' அன்னார் கூறினார்கள்: ''ஆம், எனது ஆத்மா யாருடைய கைவசம் இருக்கின்றதோ, அவன் மீது சத்தியமாக, இது ஒரு வெற் றியே.'' முஸ்லிம்களது கவலைகள் எல்லாம் உடன் மறைந்து, மகிழ்ச் சிப் பிரவாகம் பொங்கியது. இந்த உடன்படிக்கையின் காரணங் களையோ, அதன் விளைவுகளையோ தாம் பூரணமாக அறிந்து கொண் டிருக்கவில்லை என்பதை மக்கள் உணர்ந்து கொண்டு, இறைவனின் கட்டளைகளுக்கு அடிபணிவதே தமக்கும் இஸ்லாமியப் பணிக்கும் நலமாக இருக்கும் என்ற தெளிவினைப் பெற்றனர்.*

*தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகள் இறைவன் 'தெளிவான வெற்றி' எனக் குறிப்பிட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னால் இருந்த விவேகத்தையும் உன்னதமான விளைவுகளையும் வெளிக் காட்டலாயின. வேறு என்னவாகத் தான் இருக்க முடியும்? குறைஷியர் முஸ்லிம்களின் இருப்பை அங்கீகரித்து முதன்முறையாக அவர் களுடன் சமமான நிலையில் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார்கள். இதுவரை காலமும் முஸ்லிம்கள் குறித்து இகழ்ச்சியாகவும் கேவல மாகவும் பேசி வந்தவர்கள் அவர்கள். இது மக்காவின் உள்ளே மாத் திரமின்றி அரேபிய தீபகற்பம் முழுவதும் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்தி வைத்தது. இதன் முதல் ஆதாரமாக அமைந்தது, குறைஷி யரை அஞ்சாதவர்களாக குஸாஅ, பகிரங்கமாகவே முஸ்லிம்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டமை. இப்புதிய மனோபாவம் ஆழ்ந்த வர லாற்று மூலங்களைக் கொண்டிருந்தது. காலாகாலமாக குஸாஅக்க ளுக்கும் கினானாவின் பனூ பக்ர்களுக்கும் இடையில் பகைமையே நீடித்து வந்தது. பனூ பக்ருக்கு ஆதரவளித்த குறைஷியரின் மனோ பாவம் காரணமாக முன்னம், குஸாஅக்கள் நபிகளாரின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அல்-ஹிஷாமுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள உந்தப் பெற்றிருந்தனர். இந்த ஒப்பந்தத்தினையே அம்ர் இப்ன்*

ஸாலிம் தனது கவிதையில் ‘எமது தந்தையர்க்கிடையிலான பழம் ஒப்பந்தம்’ எனக் குறித்து, மக்கா வெற்றி கொள்ளப்படுவதற்குச் சற்று முன்னர் நபிகளாரின் உதவியை வேண்டி நின்றார்.

மதீனாவில் முஸ்லிம்கள் தமது அரசை நிறுவிய ஆரம்பகாலத்தில் இருந்தே குஸாஅ, தெளிவாக முஸ்லிம்கள் மீது அனுதாபம் கொண்டவர்களாக இருந்து வந்தனர், ஹுதைபியாவின் போது பகிரங்கமாகவே முஸ்லிம்களுடன் கூட்டுச் சேர்ந்தது வரை. மக்காவில் நிகழ்ந்து வருவன குறித்து முஸ்லிம்களும் குஸாஅக்களின் முஷ்ரிகூன்களும் நபிகளாருக்குச் செய்திகள் அனுப்பி வந்ததோடு, இரகசியமான ஆலோசனைகளும் வழங்கி வந்தனர். எவ்வாறாயினும் குஸாஅ தமது உண்மையான உணர்வுகளை குறைஷியரிடமிருந்து மறைத்தே வந்தனர், ஹுதைபியாவில் பகிரங்கமாக முஸ்லிம்களுடன் கூட்டுச் சேர்ந்தது வரை. இதனால் குஸாஅ நீண்ட காலமாக முஸ்லிம்களுடனான தமது உறவைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள முடிந்தது.

ஹுதைபியா ஒப்பந்தத்தின் பின்னரான சமாதான காலம், கைபரின் யூதர்களுடனான விவகாரங்கள் மீது கவனம் செலுத்த முஸ்லிம்களுக்குப் போதிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. கந்தக் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் முஸ்லிம்களுக்கு எதிராக ஏனையோரைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த யூதர்கள் இயங்கக் கூடிய இறுதித் தளமாக விளங்கியது கைபர்.

இச்சமாதான காலம் இஸ்லாமிய பரம்பலுக்கும் சாதகமாக அமைந்தது. அல்ஸுஹ்ரியின் கருத்துப்படி, ‘‘இதன் முன்னரான இஸ்லாத்தின் எந்த ஒரு வெற்றியும் இதைவிடப் பாரியதாக அமையவில்லை.’’ முன்னர் மக்கள் சந்தித்த போதெல்லாம் யுத்தம் அல்லாது வேறெதுவும் இருக்கவில்லை. யுத்த நிறுத்த ஏற்பாடு விளைந்து, போர் தவிர்க்கப்பட்டதன் பின்னர் மக்கள் பாதுகாப்புடன் ஒருவரையொருவர் கலந்து கொண்ட வேளைகளில், இஸ்லாத்தில் நுழைந்து கொள்ளாமல் எவரும் இஸ்லாம் குறித்து நுண்ணறிவுடன் பேசவில்லை. இந்த இரண்டு வருடங்களிலும் முன்னரை விட இருமடங்கினர் இஸ்லாத்தினுள் நுழைந்தனர்.

இப்ன் ஹிஷாமின் கருத்துப்படி அல்ஸுஹ்ரியின் கருத்து சரியானதே; நபிகளார் ஹுதைபியாவுக்கு ஆயிரத்து நானூறு பேருடன் சென்றார்கள். இரண்டு வருடங்கள் கழித்து மக்காவை வெற்றி கொள்ளச் சென்ற போது பத்தாயிரம் பேர் அவருடன் இருந்தார்கள்.

இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் விவேகம் இன்னும் பல வகைகளிலும் புலனாகியது. நபிகளார் மதீனாவை அடைந்ததும் குறைஷியரிடமிருந்து தப்பியவராக நபிகளாரைச் சென்று சந்தித்தார் அபூ பஸீர். அவரைத் திருப்பித் தந்து விடுமாறு கூறித் தம்மவர் இருவரை நபிகளாரிடம் அனுப்பி வைத்தார்கள் குறைஷியர். அன்னாரும் அபூ பஸீரை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். மூவருமாக மக்கா நோக்கிப் பயணமானார்கள். வழியில் அவ்விருவரில் ஒருவரை அபூபஸீர் கொலை செய்து விட்டார். மற்றவர் அபூபஸீரால் துரத்தப் பட்டவராக மதீனா வந்து சேர்ந்தார். அபூபஸீர் நபிகளாரைச் சந்தித்த போது கூறினார்: 'உங்களது கடமைப்பாடு முடிந்துவிட்டது. அதனை இறைவன் உங்களிடமிருந்து நீக்கிவிட்டான். நீங்கள் முறையாக என்னை அவர்களிடம் ஒப்படைத்து விட்டீர்கள். அவர்களிடமிருந்து இறைவன் என்னை விடுவித்து விட்டான்.' நபிகளார் கூறினார்கள்: 'அந்தோ அவரது தாயார்! அவருடன் பிறரும் இருந்திருந்தால் அவர் ஒரு யுத்தத்தையே கிளறி விட்டிருப்பார்'. இதைச் செவியுற்ற அபூ பஸீர் தன்னை நபிகளார் மீண்டும் குறைஷிகளிடம் ஒப்படைத்து விடக் கூடும் எனக் கருதி மதீனாவை விட்டும் விலகி ஸைப் அல்-பஹ்ர் பிரதேசத்தைச் சென்றடைந்தார்.

மக்காவில் வதைகளுக்குள்ளாகியிருந்த முஸ்லிம்கள் நபிகளார் கூறியவற்றிலிருந்து அபூ பஸீருக்கு மேலும் மக்கள் தேவை என்பதை உணர்ந்தனர். அவர்கள் மக்காவிலிருந்து தப்பியவர்களாக ஸைப் அல் பஹ்ரில் அபூபஸீரோடு சேர்ந்து கொண்டனர். அவ்வாறு இணைந்து கொண்ட ஒருவர், அபூ ஜந்தல் இப்ன் ஸுஹைல் இப்ன் அம்ர். மேலும் பலர் இவ்வாறே அங்கு சென்று சேர்ந்து ஒரு குழு உருவாகிவிட்டது. இவர்கள் குறைஷிய வர்த்தகக் குழுக்களை இடைமறித்து அவற்றின் காவலர்களைக் கொன்று, செல்வங்களைச் சூறையாடலாயினர். குறைஷ் நபிகளாருக்குச் செய்தி அனுப்பினார்கள். தமது உறவு முறைகளையும் பந்தங்களையும் நினைவுறுத்தி இறைவனுக்காகக் குழுவினரிடம் இருந்து தமது உடைமைகளைப் பாதுகாத்துத் தரும்படி வேண்டினர். மேலும் நபிகளாரிடம் சென்றடையும் எவரும் தம்மிடமிருந்து பாதுகாக்கப்படுவார்கள் எனவும் அவர்கள் திருப்பி அளிக்கப்பட வேண்டுமென கேட்கப்பட மாட்டார்கள் எனவும் கூறினார்கள். அவ்வேளை அல்-அய்ஸ் பிரதேசத்திலிருந்த அக் குழுவினருக்கு நபிகளார் செய்தி அனுப்பினார்கள். குழுவில் அப்போது அறுபது முதல் எழுபது பேர் வரை இருந்தார்கள்.

தமது விசுவாசம் காரணமாய்ப் பெரும் துயரங்களுக்குள்ளானார்கள் அபூ பஸீரும் அபூ ஜந்தலும். அவர்கள் உறுதியும் நேர்மையும் திடமும் கொண்டவர்களாக நேரடியாகவே போராடலானார்கள். அல்ஹுதைபி யாவில் முஷ்ரிகூன் முஸ்லிம்கள் மீது திணித்த நியதிகளை அவர்களே கைவிட்டு விடும் வரை முஷ்ரிகூன்களைப் பெரும் அவஸ்தைக்குள் ளாக்கினர் அபூபஸீர் குழுவினர். இவர்களது சரிதை, விசுவாசத்தில் உறுதி பூண்டோராக அதனை ஆதரிக்க கடும் முயற்சிகள் மேற் கொள்வதனைச் சித்தரிப்பதாக உள்ளது. சமாதான ஒப்பந்தத்தின் காரணமாக இஸ்லாமிய அரசால் குறைஷியருக்கு எதிரான நடவடிக் கைகள் எதுவும் மேற்கொள்ள இயலவில்லை. ஆனால் தனித்து இயங்கிய அபூபஸீர் குழுவினரால் குறைஷியருக்குப் பலத்த சேதங் களை விளைவிக்க முடிந்தது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது அபூ பஸீரும் அவரது சகாக்க ளும் அரசின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவர்களாகவே தோற்றம் பெற்றனர். என்றாலும் அவர்களது நடவடிக்கைகள் சுயமாகவே மேற் கொள்ளப்பட்டன, நபிகளாரின் அங்கீகாரமின்றியே நிகழ்ந்தன எனக் கூறி விடுவதற்கில்லை. ஆரம்பத்திலிருந்தே முஷ்ரிகூன்களின் வர்த்த கக் குழுக்களைத் தாக்குவது தகாது என்றும் மக்காவுக்குத் திரும்பி விடும் படியும் நபிகளார் அபூபஸீருக்கு அறிவுறுத்தல் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாது விட்டமை, இந்தத் தாக்குதல்களை அன்னார் அங்கீகரித்ததாக உணர்த்துகிறது. அபூ பஸீரினதும் அவரது சகாக்களதும் மனோபாவமும் புத்தி சாதுரியமானது. தமது விசுவாசத்திலிருந்து தம்மைத் திசை திருப்பி விடவும் தாம் மதீனாவை அடைந்து கொள் வதைத் தடுத்துவிடவும் மேற்கொள்ளப்பட்ட மக்கத்து அடக்குமுறை களுக்கு எதிராகக் கிளர்ந்தெழாது அமைதியாக இருந்துவிட அவர்கள் இணக்கம் காட்டுவதாக இல்லை. அவர்கள் தேர்ந்து கொண்ட பாதை யின் மூலம் அவர்களே அவர்களது விடுதலையைப் பெற்றுக் கொண்ட னர்; மக்கத்து பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தமது அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டனர்; சமாதான உடன்படிக்கை காலத்தின் போது தாம் பாதுகாப்பாக இருந்து கொள்ளலாம் எனக் குறைஷியர் கொண்டிருந்த எண்ணத்தை ஆட்டங்காணச் செய்தனர். ‘அவருடன் பிறரும் இருந்திருந்தால் அவர் ஒரு யுத்தத்தையே கிளறி விட்டிருப்பார்’ என நபிகளார் அபூ பஸீர் குறித்துக் கூறியிருந்தமை, அன்னார் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு மறைமுக உந்துதலளித்தமையையே காட்டுகின்றது.

*இவற்றாலும், சரிவர திட்டமிடப்பட்ட ஒரு செயல் என்பதனாலும் தலைவர்களுக்கும் படையினருக்கும் இடையே பூரண ஒத்துழைப்பு இருந்ததனாலும் அபூபஸீர் குழுவினரது நடவடிக்கைகளால் மதீனா வின் உள்ளேயோ வெளியேயோ முஸ்லிம்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இறுதி முடிவுகளினால் முஸ்லிம்கள் அனைவருமே பயன் ஈட்டிக்கொள்ள முடிந்தது.*

*நபிகளார் தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இயைய, குறைஷி யரிடமிருந்து தம்மை வந்து சேர்ந்த ஆண்களை மட்டுமே திருப்பி யளித்தனர். மதீனாவுக்கு வந்து சேர்ந்த பெண்கள் எவரையும் அன்னார் திருப்பியளிக்கவில்லை. உம்ம் குல்தூம் பின்த் உக்பா இப்ன் அபீ முஅய்த் ஒரு முஹாஜிராவாக மதீனா வந்து சேர்ந்தார். அவரைத் திருப்பி அளித்து விடுமாறு அவரது குடும்பத்தார் வேண்டினர். ஆனால் அதற்கு நபிகளார் இணங்கவில்லை. குர்ஆன் வாசகங்கள் கூறின:*

> ''(ஓரிறை) நம்பிக்கை கொண்டவர்களே! இறைநம்பிக்கையாளர் களான பெண்கள் ஹிஜ்ரத் செய்து (நாடு துறந்தவர்களாக) உங்க ளிடம் வந்தால், அவர்களை நீங்கள் சோதித்துக் கொள்ளுங்கள்; இறைவன் அவர்களது விசுவாசத்தை நன்கறிந்தவனாக இருக்கின் றான். எனவே அவர்கள் இறை நம்பிக்கையாளர்களான பெண்கள் தான் என நீங்கள் அறிந்தால் (ஓரிறை) நிராகரிப்பாளர்களிடம் அவர்களைத் திருப்பி அனுப்பி விடாதீர்கள்; ஏனெனில் அந்தப் பெண்கள் அந்த ஆண்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் அல்லர். அந்த ஆண்களும் இந்தப் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் அல்லர்.'' (அல் மும்தஹினா 60:10)

*நபிகளார் பெண்களைப் பரீட்சித்துப் பார்ப்பார்கள். அவர்கள் இஸ் லாத்துக்காக மக்காவை விட்டும் வந்திருந்தால் அவர்களது கணவர்கள் அப்பெண்கள் மீது வழங்கியிருந்த மஹர் பெறுமானத்தை நபிகளார் அக்கணவர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். சமாதான ஒப்பந்தத்தின் முன்னர் நபிகளார் அத்தகு மஹரைச் செலுத்தி இருக்கவில்லை.*

*விசுவாசிகளான பெண்கள் திருப்பி அனுப்பப்படாமைக்கான கார ணம், ஒன்றில் அவர்கள் சமாதான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாமல் ஆண்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தமை. ஸஹீஹ் அல்புஹாரீ யின் பதிவுக்கு இணங்க,''எமது ஆண்களுள் எவரும் உம்மை வந்து சேர முடியாது'' அல்லது குர்ஆன் பெண்கள் குறித்த செய்திகளைப் பின்வரும் வாசகத்தில் போல ரத்து செய்துவிட்டமை.*

''இறை நம்பிக்கையாளர்களான பெண்கள் ஹிஜ்ரத் செய்து உங்க ளிடம் வந்தால் அவர்களை நீங்கள் சோதித்துக் கொள்ளுங்கள்''. (மும்தஹினா 60:10)

*இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் அனுமதிக்கப்பட்டு இருந்தாலும் கூட இணைவைப்பாளர்களான ஆண்களை முஸ்லிம் பெண்கள் மணந்து கொள்வதைத் தடை செய்யும் வாசகமாக அமைந்தது இதுவே. முஸ்லிம் ஆண்களும் இணைவைப்பாளர்களான பெண்களுடனான திருமணத்தை முறித்துக் கொள்ளும்படி இவ்வாறே கட்டளையிடப் பட்டனர்.*

''மேலும் இறை நிராகரிப்பில் இருக்கும் பெண்களின் விவாக பந்தத்தை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டாம்.'' (அல் மும்தஹினா 60:10)

*மக்காவில் மிகப் பிரபல்யம் வாய்ந்த இருவரான காலித் இப்ன் அல்-வலீத், அமர் இப்ன் அல்-ஆஸ் ஆகியோர் இஸ்லாத்தை ஏற்று மதீனா சென்றடைந்தனர். இது நிகழ்ந்தது, மக்காவிலிருந்தும் மதீனா சென்றடைந்தோரை முஸ்லிம்கள் திருப்பி அளிக்க வேண்டும் என்ற ஹுதைபியா நியதியைக் குறைஷியர் கைவிட்டதன் பின்னராகும். ஏனெனில் இவ்விருவரையும் திருப்பி அனுப்பும் படி வேண்டுகோள் எதுவும் விடுக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் தென்பட வில்லை.*

*யுத்த நிறுத்த ஒப்பந்தம் பதினேழு அல்லது பதினெட்டு மாத காலம் நீடித்தது. மக்காவை அண்மிய அல்-வதீர் நீர்த்துரவின் அருகே முஸ் லிம்களின் கூட்டுறவாளர்களான குஸாஅ மக்களுக்கு எதிராகக் குறைஷியர் தமது ஆதரவாளர்களான பனூ பக்ர்களுக்குச் சார்பாக முன் வந்ததுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்தது.*

*குஸாஅ மக்கள் முஸ்லிம்களின் ஆதரவை வேண்டி நின்றனர்.*

*யுத்த நிறுத்த ஒப்பந்த முறிவின் நேரடி விளைவாய் அமைந்தது மக்காவின் விடுதலை.*

# அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நபிகளாரின் மடல்கள்

*அல்ஹுதைபியாவின் சமாதான ஒப்பந்த காலம், முஸ்லிம்களுக்குத் தமது தஃவாப் பணிகளை அரேபிய தீபகற்பம் முழுவதும், அதற்கு அப்பாலும் விஸ்தரித்துக் கொள்ளப் போதிய வாய்ப்பை அளித்தது. நபிகளார் திஹ்யா இப்ன் கலீபா அல்கல்பீயை பைசாந்தியப் பேரரசர் ஹெராக்லியஸிடம் அனுப்பினார்கள். பாரசிகப் பேரரசர் கொஸ்ரோ விடம் அப்தல்லாஹ் இப்ன் ஹுதபா அல் ஸஹமீயை அனுப்பினார் கள். அபீஸீனியாவின் நஜ்ஜாஷியிடம் அம்ர் இப்ன் உமையா அல் ளமரீ அனுப்பப்பட்டார். எகிப்தின் ஆட்சியாளர் முகவ்கிஸிடம் ஹாதிப் இப்ன் அபு பல்தஅ அல்லுகமீயை அனுப்பினார்கள். யமாமாவின் ஹவ்தா இப்ன் அலீ அல்ஹனபீயிடம் ஸலீத் இப்ன் அம்ர் அல் ஆமிரி அனுப்பப்பட்டார்.*

*அல்வாகிதீயும் அல் தபரீயும் இந்தத் தூதுவர்கள் அனுப்பப்பட்ட காலம் ஹிஜ்ரி ஆறாம் ஆண்டின் துல்ஹஜ்ஜாஹ் மாதம் என்பர். இப்ன் ஸஅத் இவை அனுப்பப் பெற்றது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டின் முஹர்ரம் மாதம் என்பார். இப்னுல் கையிமும் அவ்வாறே கூறுவார். குஸ்ரோ வுக்கான கடிதம் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு ஜுமாதா அல் ஊலா மாதம் பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முந்தைய நாள், அதாவது குஸ்ரோ கொல்லப்பட்ட இரவுக்கு முந்திய தினம் அனுப்பப்பட்டது என்பார் இப்ன் ஸஅத். ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டின் பின்னர், கஸ்வத் அல் தபூக்கின் பின் நடந்த நிகழ்வுகளில் இதனை வரிசைப் படுத்துவார் அல் புஹாரீ. தனது ஸஹீஹில் உள்ளடக்கப்பட்டவற்றை ஒழுங்கு படுத்தும் போது அவர், காலக்கிரமத்தைக் கருத்தில் கொள்ளவில்லை*

போலவே தோற்றுகிறது. அல்-ஹாபில் இப்ன் ஹஜர் கருதியது போல, அல்புஹாரீயும் இந்த மடல் தபூக்கின் பின்னர் அனுப்பப்பட்ட தெனவே குறிக்க விளைந்துள்ளார்.

எவ்வாறாயினும் இது வெறும் ஊகம் மட்டுமே. மிக உறுதியான ஒரு முடிவு என இதனைக் கொள்ள இயலவில்லை. ஹிஜ்ரி பத்தில் நிகழ்ந்த இறுதி ஹஜ்ஜின் பின்னரே மன்னர்களிடம் தூதுவர்கள் அனுப்பப் பெற்றனர் எனக் கூறுவார் இப்ன் ஹிஷாம். என்றாலும் பத்திரத்து வாசகங்கள் அது நிகழ்ந்தது அல்ஹுதைபியா உம்ராவின் பின்னரே எனக் குறிப்புணர்த்துகின்றன. அதனால் எனது நிலைப்பாடு வலுப்பெறுகின்றது.

இப்ன் ஹிஷாமின் ஸீராவினது காலக்கிரம வரிசை அல்-புஹாரீ யின் ஸஹீஹை விட வலுவானது. ஸஹீஹ் அல்-புஹாரீயின் சில அறிவிப்பாளர்கள் தமது அறிவிப்புகள் சிலவற்றின் காலக் கிரமத்தை மாற்றியமைத்திருக்கக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன எனக் கூறுவார் அல் ஹாஃபிழ் இப்ன் ஹஜர். உதாரணமாக: அபூபக்ரின் ஹஜ்ஜை ஹிஜ்ரி ஒன்பதில் தூதுக் குழுக்களின் முன்னராக வைத் துள்ளமை, இறுதி ஹஜ் யாத்திரையை தபூக் படையெடுப்பின் முன் னால் வைத்துள்ளமை முதலியன. மேலும் இமாம் அல்-புஹாரீ, தான் வகுத்துக் கொண்ட நியதிகளுக்கு அமைவாக உள்ள நடவடிக்கைகள், படையெடுப்புக்கள், தூதுக் குழுக்கள் பற்றிய அறிவிப்புகளை அவை நிகழ்ந்தன வெவ்வேறு காலகட்டங்களில் என்ற அம்சத்தைப் புறக் கணித்து வெறுமனே தொகுப்பாக முன்வைத்துள்ளார் என்பார் இப்ன் ஹஜர்.

இரு கால நியமங்களுக்கிடையிலான வேறுபாடு மிகக் குறுகியது. இப்ன் ஹஜர் இதனை சரி செய்து கொள்ள முனைகிறார். அவரது கருத்தின் படி நபிகளார் அல் ஹுதைபியாவிலிருந்து திரும்பிய ஹிஜ்ரி ஆறாம் ஆண்டின் இறுதிப் பகுதியில் திஹ்யா, ஹெராக்லியஸிடம் அனுப்பட்டார். அவர் ஹெராக்லியஸைச் சென்றடைந்தது ஹிஜ்ரி ஏழு முஹர்ரம் மாதத்திலாகும். ஸஹீஹான ஹதீஸ் ஒன்றின் அறிவிப்பின் படி நபிகளாரின் மடல் ஹெராக்லியஸுக்குக் கிடைத்தது ஹுதைபியா ஒப்பந்த காலத்திலாகும். அது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு என்பார் இப்ன் ஹஜர்.

அனஸ் இப்ன் மாலிக் கூறுவார்: ‘நபிகளார் ஒவ்வொரு கொடுங் கோல் அரசருக்கும் அவர்களை இறைவன்பால் அழைத்துக் கடிதம் அனுப்பினார்கள்’. அவர்களாக அனஸ் குறிப்பிடுவது ஸீஸர், நஜ்ஜாஷி,

குஸ்ரோ ஆகியோரை. அந்த நஜ்ஜாஷி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நஜ்ஜாஷி அல்ல என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அரேபிய தீபகற்பத்திற்கு அப்பாலும் அரசர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டமை இஸ்லாமிய தூதுத்துவத்தின் அகிலத்துவத் தன்மையைச் சுட்டுவதாக உள்ளது. அல்குர்ஆனின் மக்கத்து வாசகங்கள் சிலவற்றில் குறிப்பிடப்பட்டிருந்த அகிலத்துவ எண்ணமாகும் இது:

''அகிலத்தார்க்கு ஓர் அருளாகவே தவிர (நபியே!) நாம் உம்மை அனுப்பவில்லை.'' (அல் அன்பியா 21:107)

நபிகளாரின் தஃவாப் பணிகள் அன்னாரது அரசியல் செல்வாக்கு பெருகிச் சென்றமைக்குச் சமமாகத்தான் உள்ளூர் தரத்திலிருந்து அகிலத்துவ தரத்துக்கு விரிவடைந்து சென்றது என்ற கருத்தோட்டம் தவறானது என்பதை இந்த வாசகம் உறுதிப்படுத்துகிறது. முஸ்லிம்கள் மக்காவில் பெரும் அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்களாக, '(எந்த நேரத்திலும்) மனிதர்கள் உங்களை இறாய்ஞ்சிக் கொண்டு போவதை அஞ்சியவர்களாக' (அல்அன்பால் 8:26) இருந்த காலத்திலேயே இஸ்லாத்தின் அகிலத்துவத் தன்மை ஸ்தாபிக்கப்பட்டு விட்டது.

அல்-புஹாரீ தனது ஸஹீஹில் ஹெராக்லியஸிடம் ஒப்படைக்கவென (ஸிரியாவின்) புஸ்ராவின் ஆளுநரிடம் திஹ்யா கையளித்த கடிதத்தின் வாசகங்களைப் பதிவு செய்துள்ளார். அரசர்களுக்கும் ஏனைய ஆட்சியாளர்களுக்கும் அனுப்பப்பட்ட இக்கடிதத்தின் வாசகங்கள் முஹத்திதூன்களின் நியதிகளுக்கு இயைந்தவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இது போலவே, ஏனைய கடிதங்கள் வரலாற்று ஆவணங்களாகக் கொல்லப்படுவதாயின் அவை இஸ்னாத் வரிசைக்கும் வாசகத்துக்குமாகத் தீவிர பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக அவை சட்ட மூலங்களாகப் பயன்படுத்தப்படுவதாக இருப்பின் பரிசீலனை மிக அவசியமானதாக இருக்கும். வாசகம் வருமாறு:

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் அல்லாஹ்வின் தூதரும் சேவகனுமாகிய முஹம்மதிடமிருந்து ரோமின் ஆட்சியாளர் ஹெராக்லியஸுக்கு. உண்மையான வழிகாட்டுதலைப் பின்பற்றுவோர் அனைவருக்கும் சாந்தி உண்டாவதாக! நான் உம்மை இஸ்லாத்தின்பால் அழைக்கின்றேன். முஸ்லிமாகி இரட்சிப்பை ஈட்டிக் கொள்ளும். இறைவன் உமக்கு இரு மடங்கு வெகுமதி அளிப்பான். நீர் மறுத்தால் உமது மக்களனைவரது பாவங்கள் அனைத்தையும் நீரே சுமப்பீர்.

'ஒ வேதக்காரர்களே! நமக்கும் உங்களுக்கும் மத்தியில் சமமாக இருக்கும் ஒரு பொதுவிடயத்தின் பக்கம் வாருங்கள். (அதாவது) அல்லாஹ்வைத் தவிர (வேறு எவரையும் எதையும்) நாம் வணங்கக் கூடாது. அவனுக்கு எந்தப் பொருளையும் இணையாக்கக் கூடாது. அல்லாஹ்வை விடுத்து நம்மில் சிலர் சிலரை தெய்வங்களாக்கிக் கொள்ளக் கூடாது' என்று (நபியே!) நீர் கூறுவீராக. (இறைநம்பிக்கையாளர்களே!) அவர்கள் (இதனைப்) புறக்கணித்தால் 'நிச்சயமாக நாங்கள் முஸ் லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சியமாக இருப்பீர்கள்' என்று (அவர்களிடம்) நீங்கள் கூறி (ஒதுங்கி) விடுங்கள். (ஆல இம்ரான் 3:64)

*பின்னைய அறிஞர்கள் குழப்பத்துக்குள்ளாயினர். கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் குர்ஆனிய வசனம் அருளப்பெற்றது ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு நஜ்ரானில் இருந்து வந்த ஒரு தூதுக் குழுவினர் சம்பந்தமாகவே எனக் கொள்ளப்பட்டிருக்க இது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டின் இறுதியில் அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அறிஞர்களுக்கிடையே பிரச்சினையாக அமைந்துவிட்டது. சில அறிஞர்கள் இந்த அறிவிப்புகளுக்கு இடையில் உடன்பாடு கண்டு நிலைமையைத் தெளிவுபடுத்த முனைந்தனர். அவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர். உதாரணமாக: இந்த வாசகம் இரு முறை அருளப் பெற்றிருக்கலாம் (இதனை பின்னர் அவர்களே நிராகரித்தார்கள்); நபிகளார் இந்த வாசகத்தை எழுதினார்கள், பின்னர் அவை இறை வாசகங்களாக அருளப்பட்ட போது வாசகங்கள் அவ்வாறே அமைந்தன; முன்னமே அவை ஹிஜ்ராவின் ஆரம்பத்தில் அருளப் பெற்றிருந்தன அல்லது அவை யூதர்கள் குறித்ததாக அருளப் பெற்றன.*

*இத்தகைய குழப்ப நிலையிலிருந்து தெளிவு பெற்றுக் கொள்ள ஐயமின்றி நாம் இந்த வாசகங்கள் அருளப்பெற்ற சூழல் பற்றிய விளக்கத்தை (ஸபப் அல் நுஸூல்)ப் பெற்றுக்கொள்ள வேண்டும். நஜ்ரான் தூதுக் குழுவினர் சம்பந்தமாகத் தான் இந்த வாசகங்கள் அருளப் பெற்றன எனக் கூறுவதற்கு ஸஹீஹ் முஸ்னத் அறிவிப்புகள் ஏதும் இல்லை. இப்ன் இஸ்ஹாக் இதே மாதிரியான அறிவிப்பினை முஹம்மத் இப்ன் ஜஅஃபர் இப்ன் அல் ஸுபைர் மூலம் பதிவுசெய்துள்ளார். அவர் திகாஹ். இப்ன் இஸ்ஹாக் வரை செல்லும் அல்-தபரீயின் இஸ்னாத் முஹம்மத் இப்ன் ஹமீத் அல்-ராஸியை உள்ளடக்கியுள்ளது. அவர் ளயீப்.*

இந்த வாசகங்கள் நஜ்ரான் தூதுக்குழுவினர் சம்பந்தப்பட்டு அருளப்பட்டனவல்ல எனக் கூறுவார் அல்-ஸித்தீ. மேலும் அஸ்ஸித்தீ வரை செல்லும் அல்-தபரீயின் இஸ்னாத் அஸ்பாத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. அவர் ஸதூக் என்றாலும் தவறுகள் இழைப்பவர்; மிகைப்படுத்திக் கூறுபவர். அலீ இப்ன் ஸைத் இப்ன் ஜத்ஆன் இதனையே ஒரு முர்ஸல் அறிவிப்பில் கூறுகின்றார். என்றாலும் அவர் பலவீனமானவர். இம்மூன்று அறிவிப்புகளும் முர்ஸல் என்பதோடு அவற்றின் இஸ்னாத்கள் சில பலவீனங்களைக் கொண்டுள்ளன.

ஸஹீஹ் முஸ்லிமில் நபிகளார் நஜ்ஜாஷிக்குக் கடிதம் அனுப்பியமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நஜ்ஜாஷி அல்ல எனக் கூறுவார் முஸ்லிம். கடிதத்தின் வாசகங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. என்றாலும் கூட இப்ன் இஸ்ஹாக் இஸ்னாத் ஏதும் இல்லாது இதனை அறிவிப்புச் செய்துள்ளார்.

எகிப்தின் ஆட்சியாளர் அல் முகவ்கிஸுக்கு அனுப்பப்பட்ட இரு கடிதங்களின் வாசகங்களோ, அவர் பதிலாக அனுப்பிய இரு கடிதங்களின் வாசகங்களோ எந்த ஒரு ஸஹீஹ் அறிவிப்பிலும் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய கடிதங்களும் இது போன்று அமைந்தனவே: டமஸ்கஸின் ஆட்சியாளர் அல்-ஹாரிஸ் இப்ன் 'நிம்ர் அல்கஸ்ஸானிக்கு அனுப்பப்பட்ட கடிதம்; யமாமாவின் ஆட்சியாளர் ஹவ்தா இப்ன் அலீ அல் ஹனபீக்கு அனுப்பப்பட்ட கடிதம்; உமான் ஆட்சியாளர்களான ஜய்பர், அப்த் இப்னாய் அல்ஜலந்தி ஆகியோருக்கு அனுப்பப்பட்ட கடிதம். இவை அனைத்தும் ஹதீஸ் நோக்கில் ஸஹீஹ் என ஆதாரப்படுத்தப்படவில்லை. அதனால் இந்த அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இந்தக் கடிதங்கள் அனுப்பப்படவில்லையென்றோ வரலாற்று நோக்கில் கடிதங்களது வாசகங்கள் நிராகரிக்கப்பட வேண்டுமென்றோ நாங்கள் கொள்ள வேண்டுவதில்லை.

கடிதங்களின் அமைப்பு, உள்ளடக்கம் என்பனவற்றைப் பொறுத்து அவை ஸஹீஹ் என நாம் ஏற்றுக்கொள்ள இன்னமும் இடம் இருக்கின்றது. எவ்வாறாயினும் சட்டமூலங்களுக்கான சாதக ஆதாரங்களாகக் கொள்வதற்கான தரங்களை இவை எட்டுவனவாக இல்லை. ஆக இப்போதைக்கு ஹெராக்லியஸுக்கு அனுப்பட்ட கடிதத்தின் வாசகங்கள் மட்டுமே ஹதீஸ் நோக்கில் ஸஹீஹ் ஆக அமைந்துள்ளன. ஏனைய கடிதங்களது வரலாற்று ரீதியான ஆய்வுகளின் போது ஒப்பீடு செய்து காண இதனை ஒரு முன்மாதிரியாக நாம் அமைத்துக் கொள்ளலாம்.

ஹதீஸ் நோக்கில் ஸஹீஹ் எனக் காண இயலாத விடத்து ஸீறா காலத்தின் ஏனைய ஆவணங்களுக்கும் இப்படியானதொரு அணுகு முறை பிரயோகம் செய்யப்படவேண்டும். ஸஹீஹ் புஹாரியில் குறிக் கப்பட்ட ஹெராக்லியஸுக்கு அனுப்பப்பட்ட கடிதம், ஸுனன் அபூ தாவூதில் பொதிந்த உமைர் தூ-மரானுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தவிர்ந்து ஆறு ஸஹீஹ் கிரந்தங்களிலும் இக்கடிதங்கள் குறிக்கப்பட வில்லை. வரலாற்று நோக்கில் கடிதங்கள் பல ஸஹீஹ் எனக் கொள்ளப்பட முடியுமாயினும் இஸ்லாமிய கோட்பாடு, சட்டவியல், அகீதா, ஷரீஆ ஆகிய துறைகளில் சான்றுகளாகக் கொள்வதற்கான தரத்தில் மிகவும் குன்றியனவாகவே இவை உள்ளன.

பைஸாந்தியப் பேரரசுக்கு எழுத முனைந்த வேளை, முத்திரை பொறிக்கப்படாத கடிதம் எதனையும் அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என உணர்த்தப்படவே நபிகளார் வெள்ளியில் ஒரு முத்திரை செய்து அதில் 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' எனப் பொறித் துக் கொண்டார்கள். ஏற்கப்பட்ட சமகால முறைமைகள், சம்பிரதா யங்கள் மூலம் பயன் பெற்றுக் கொள்ள, அவை இஸ்லாமிய சட்ட விதிகளுக்கும் ஷரீஆ விதிமுறைகளுக்கும் முரண்படாத நிலையில், நெகிழ்ந்து கொடுக்கும் இஸ்லாமிய அரசியலின் தன்மையை இது சுட்டிக் காட்டுகிறது.

ஹெராக்லியஸுக்கு அனுப்பப்பட்ட கடிதம் இஸ்லாமியத் தன்மை கொண்டதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பாஸ்மலாவுடன் துவங்கும் அக்கடிதம் இஸ்லாத்தின்பாலும் நபிகளாரின் தூதுத்துவத் தின் பாலும் விடுக்கும் அழைப்பில் வெளிப்படையாகவே அமைந் துள்ளது. அத்தோடு இது விவேகம் மிக்கதாக, அழகான அழைப்பு விடுப்பதாக, பெறுநரை மிக்க கௌரவமாக விளிப்பதாக உள்ளது; அவரது சமூகத்தில் அவர் பெற்றிருக்கும் மேலான ஸ்தானத்தை அங்கீ காரம் செய்து, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அவரை ஊக்குவிக் கின்றது. அவர் பெறக்கூடிய வெகுமதிகளைக் கூறித் தனது மக்களை இஸ்லாத்திலிருந்து விலக்கி வைப்பதால் கிடைக்கும் தண்டனை களையும் குறிப்பிடுகின்றது.

# நாட்டரபிகளைச் சீர்படுத்துதல்

*சமாதான ஒப்பந்த காலத்தின்போது நாட்டரபிகளின் தொல்லைகள் சிலவும் நிகழவே செய்தன. என்றாலும் அவை தீவிரமானவையாகவோ இஸ்லாத்தைப் பரப்புவதில் முஸ்லிம்களுக்கு இருந்த சுதந்திரத்திற்குப் பங்கம் விளைவிப்பனவாகவோ அமையவில்லை. பின்வருவன அவற்றுள் அடங்குவன:*

### கஸ்வத் தாத் அல்-கரத்

*இது கைபர் மீதான படையெடுப்புக்கு மூன்று தினங்கள் முன்னர் நிகழ்ந்தது. அப்துர்ரஹ்மான் இப்ன் ஹுயைனா இப்ன் ஹுஸ்ன் அல்-பஸரீ நபிகளாரின் ஒட்டகைகள் சிலவற்றைக் கவர்ந்து சென்றார். முஸ்லிம்களை உஷார் படுத்திவிட்டு ஸலாமா இப்ன் அல்-அக்வா அவரைப் பின் தொடர்ந்து சென்றார். நபிகளார் வந்தவேளை, ஸலாமா ஒட்டகைகளைத் திருப்பிக் கொண்டு வந்திருந்தமையையும் கொள்ளையர்கள் துரத்தியடிக்கப்பட்டிருந்தமையையும் கண்டுகொண்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தாத் அல்-கரத் வரை சென்று மதீனா திரும்பினார்கள்.*

### உக்ல், உரைனா கோத்திரத்தார்

*தாத் அல்-கரத் கஸ்வாவின் பின்னர் உக்ல், உரைனா கோத்திரத்தார்களான சிலர் மதீனா வந்து தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளமையைத் தெரிவித்தார்கள். பின்னர் மதீனாவின் சீதோஷ்ண நிலை தமக்குப் பாதகம் விளைவிக்கின்றதெனக் கூறித் தமது கிராமப் புறங்களுக்கே சென்று விட அனுமதி கோரினர். அவர்களுக்குச் சில கறவை ஒட்டகைகளையும் ஓர் இடையனையும் வழங்கும்படி நபிகளார்*

பணித்தனர். அங்கிருந்து வெளியேறிய அம்மக்கள் அல் ஹர்ராவை அடைந்ததும் தமது விசுவாசத்தைத் துறந்து இடையனைக் கொன்று ஒட்டகைகளைக் கடத்திச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து செல்லச் சிலரை அனுப்பினர் நபிகளார். கண்கள் சுடப்பட்டு கரங்கள் துண்டிக்கப் பெற்றோராய் மரணபரியந்தம் ஹர்ராவிலே அவர்கள் கைவிடப்பட்டு இருந்தனர். பின்னர் முடம் செய்தலைத் தடை செய்தனர் நபிகளார்.

### கஸ்வத் தாத் அல்-ரிகாஆ

இதன் காலம் குறித்து ஸீறா கிரந்த கர்த்தாக்கள் கருத்து வேறுபடுவர். கைபரின் பின்னர் இது நிகழ்ந்தது எனும் கருத்தை ஆதரிப்பார் அல்-புகாரீ. பனூ அந்நளீர் வெளியேற்றப்பட்ட பின்னரும் கந்தக் யுத் தத்திற்கு முன்னரும் ஹிஜ்ரி நான்கில் இது நிகழ்ந்தது என்பார் இப்ன் இஸ்ஹாக். ஹிஜ்ரி ஐந்தின் முஹர்ரம் மாதம் இது இடம்பெற்றதாக இப்ன் ஸஅத் மற்றும் இப்ன் ஹிப்பான் ஆகியோர் கருதுகின்றனர். பனூ குறைளா, அல்-கந்தக் ஆகிய யுத்தங்களின் பின்னர் இது நிகழ்ந்த தாகக் கூறுவார் அபூ மஃஷர். ஏற்புடைத்ததான கணிப்பாக அல்-புஹாரீ, அபூ மஃஷர் ஆகியோரது குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்தப் படையெடுப்பில் அபூ மூஸா அல் அஷ்அரி கலந்து கொண் டுள்ளார். கைபரின் பின்னரே அவர் அபீஸீனியாவில் இருந்து திரும்பி யிருக்கிறார். அபூஹுரைராவும் இதில் பங்கெடுத்துள்ளார். அவர் இஸ் லாத்தில் நுழைந்தது கைபர் கைப்பற்றப்பட்ட போது. இது ''கஸ்வத் தாத் அல்-ரிகாஆ'', ''கஸ்வத் நஜ்த்'', ''கஸ்வத் பனூ முஹாரிப் வ பனூ தஅலபா மின் கதபான்'' என்றும் பலபட வழங்கப்படுகிறது.

போராட்டம் ஏதும் நிகழாமலேயே முஸ்லிம்கள் கதபான்களை அண்மினர். எவ்வாறாயினும் முஸ்லிம்கள் சிலர் அச்சமுற்றவர்களாக மதீனாவிலிருந்தும் இரண்டு நாள் பிரயாணத் தொலைவில் உள்ள நக்ல் பிரதேசத்தில் ஸலாத் அல்-கவ்ப் தொழுது கொண்டார்கள். பின்னர் அவர்கள் மதீனா திரும்பினார்கள். தாத் அல் ரிகாஆ என இது அழைக் கப்பட்டமைக்கான காரணம் குறித்துப் பல கருத்துக்கள் உள்ளன. படையினரது காலணிகள் கிழிந்து போக, அவர்கள் கந்தை(ரிகாஆ) யால் தமது கால்களைச் சுற்றிக் கட்டிக் கொண்டார்கள் என்பது அபூ மூஸா அல் அஷ்அரியின் கருத்தாகும். அறுவருக்கு ஓர் ஒட்டகம் என்றே இருந்ததனால் அவர்கள் சுழற்சி முறையில் சவாரி செய்தனர்.

ஆரம்பகால வரலாற்றாசிரியர்கள் இந்த நிகழ்வுகள் குறித்துப் போதிய கவனம் செலுத்தவில்லை. அரசர்களும் ஆட்சியாளர்களும்

இஸ்லாத்தின்பால் அழைக்கப்பட்டுக் கடிதங்கள் அனுப்பப் பெற்றமை; கைபர் கைப்பற்றப்படுதல் பற்றிய மேலதிக தகவல்களில் சிரத்தை கொண்டிருந்தமை; உம்ரா அல் களாவுக்காக முஸ்லிம்கள் மக்கா சென்றமை முதலியன கூடிய முக்கியத்துவம் பெற்றிருந்தமை இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

எவ்வாறாயினும் கைபரின் வீழ்ச்சி, ஸிரியாவை அண்மிய வடபுறப் பகுதிகளை தம்வசமாக்கிக் கொள்ள முஸ்லிம்களுக்குப் போதிய வாய்ப்பினை அளித்தது. கைபரின் யூதர்களை அடுத்து இப்பிரதேசத்தில் பலம் வாய்ந்தவர்களாக விளங்கிய கதபான்களுக்கு எதிராக தாத் அல்-ரிகாஆ படையெடுப்பு திட்டமிடப்பட்டிருக்கலாம். உடனடியாக அதே திசையில் முஃதா படையெடுப்பினால் இது தொடரப்பட்டது. என்றாலும் ஹுதைபியாவின் காரணமாகத் தவறவிடப்பட்ட உம்ராவைச் செய்து கொள்ளும் முஸ்லிம்களின் ஆர்வம், முஃதா மீதான படையெடுப்பை ஆரம்பிப்பதில் சிறியதொரு தாமதத்தை ஏற்படுத்தியது.

# பதிலீட்டு உம்ரா (உம்ரா அல்-களா)

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டின் துல் கஃதா மாதம் நபிகளார் உம்ரா செய்யும் நோக்குடன் மக்கா நோக்கிப் புறப்பட்டார்கள். அல் ஹுதை பியாவில் குறைஷியருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு இயைவாக நடந்தது இது: 'நீர் மக்காவுக்குள் எந்த ஓர் ஆயுதத்தையும் கொண்டு வரமாட்டீர், உறைக்குள் இடப்பட்ட வாள் தவிர்த்து'. மக்காவின் மக்களுள் எவரும் தாம் அங்கேயே இருந்து கொள்ள விரும்பினால் அங்கிருந்து வெளியேற வேண்டியது இல்லை. நபிகளார் மூன்று நாட்கள் அங்கு தங்கவும் அதன்பின்னர் வெளியேறிவிடவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

குறைஷ் துரோகம் இழைத்து விடக்கூடும் என்ற எண்ணத்தில் முஸ்லிம்கள் தங்களது ஆயுதங்களைக் கொண்டு சென்றதாகக் கூறும் மூஸா இப்ன் உக்பா ஹரத்தின் வெளியே அவற்றை அவர்கள் விட்டுச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். உம்ரா அல் களாவின் போது பெண்கள் குழந்தைகள் தவிர்ந்து இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டனர். நபி களார் மக்காவுள் நுழைந்த வேளை அன்னாரின் முன்னால் குரல் எழுப்பிச் சென்றார் அப்துல்லாஹ் இப்ன் ரவாஹா: ''ஓ அவிசுவாசி களே! வழியை விட்டும் ஒதுங்கி விடுங்கள், அதன் சத்தியத்துடன் நாம் உங்களோடு போராடுவோம். தலைகள் தோள்களில் இருந்து பிரிக்கப்படும். நண்பர்கள் தம் நண்பர்களை அலட்சியம் செய்வர்.''

முஸ்லிம்கள் கஃபாவைச் சுற்றி 'தவாப்' செய்தார்கள். யஸ்ரிபின் காய்ச்சல் காரணமாகப் பலமிழந்தோராகி விட்டனர் முஸ்லிம்கள் எனக் குறைஷ் வதந்திகளைப் பரப்பியிருந்தமையால் தவாப்பின்போது உறுதியானவர்களாகவும், பலமானவர்களாகவும் தோற்ற வேண்டு மென நபிகளார் தம் தோழர்களைப் பணித்திருந்தனர். ஆக, முதல்

மூன்று சுற்றுகளிலும் அவர்கள் ஓடினர். மக்காவை விட்டும் வெளி யேறியிருந்த குறைஷ், முஸ்லிம்கள் தவாப் செய்வதைக் காணக் குஅய்கன் குன்றின் மீது ஏறியிருந்தனர். கஃபாவின் இரண்டு முனை களை எதிர்கொண்ட குஅய்கன் குன்றிலிருந்து, தவாப் செய்து வரும் முஸ்லிம்களை அவதானித்து வந்த குறைஷ், அவர்களது பலம் குறித்து வியப்புற்றனர்.

மூன்று தினங்கள் கழிய, முஷ்ரிகூன் அலீயிடம் கூறினார்கள்: ''நாம் ஒத்துக் கொண்ட காலம் கழிந்து விட்டது. எம்மை விட்டும் வெளியேறி விடுமாறு உமது தோழரிடம் கூறும்.'' ஆக நபிகளார் மக்காவை விட்டும் நீங்கினார்கள். உம்ரா-அல்-களா குறித்து இறை வாசகங்கள் விளம்பின:

> அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு, (அவர் கண்ட) கனவை உண் மையைக் கொண்டு திட்டமாக மெய்ப்படுத்திவிட்டான். இறைவன் நாடினால் நீங்கள் அச்சமற்றவர்களாகவும், உங்களுடைய தலை களைச் சிரைத்தவர்களாகவும் (முடியைக்) கத்தரித்தவர்களாகவும், பயமற்றவர்களாகவும் (கஃபா என்னும்) புனித மஸ்ஜிதில் திண்ண மாக நீங்கள் நுழைவீர்கள்; எனவே நீங்கள் அறியாத ஒன்றை அவன் அறிந்துள்ளான்; இதைத் தவிர அண்மையிலான ஒரு வெற்றியை யும் (ஹுதைபியா உடன்படிக்கை வடிவில்) ஆக்கினான்.
> (அல் பத்ஹ்- 48:27)

இந்த உம்ராவின் போது தெளிவுறுத்தப்பட்ட சட்டங்களில் ஒன்று, உம்ராவுக்குத் தயாரான ஒருவர், கஃபாவைத் தரிசிப்பதிலிருந்தும் தடுக்கப்பட்டால் என்ன செய்யக்கூடும் என்பது. பெரும்பாலான அறிஞர்கள், அவர் பலியீட்டைச் செய்ய வேண்டும், ஆனால் உம்ரா வைப் பிரதியீடு செய்ய வேண்டியதில்லை எனக் கொண்டனர். எழுந்த கேள்வி: நிறைவுபடுத்தப்படாது விடப்பட்ட அல் ஹுதைபியாவின் உம்ராவுக்கான பிரதியீடுதான் உம்ரா அல்களாவா அல்லது, இது புதியதொரு உம்ராவின் ஆரம்பமா?

மற்றுமொரு சட்டம் குழந்தை பராமரிப்பு பற்றியது: ஹம்ஸாவின் மகள், அமாரா-பின்த்- ஹம்ஸா-இப்ன்-அல்-முத்தலிப், நபிகளாரும் ஏனைய முஸ்லிம்களும் மக்காவை விட்டும் வெளியேறிச் சென்ற வேளை சிறு குழந்தையாக இருந்தார். அலீ அமாராவை எடுத்து பராமரிப்புக்காக பாத்திமாவிடம் கொடுத்தார். தனது தந்தையாரின் வழியில் அமாரா, பாத்திமாவுக்கு ஒன்றுவிட்ட சகோதரி. ஸைத்-

இப்ன்-ஹாரிஸாவும் உரிமை கொண்டாடினார்: முஆகாவின் பிரகாரம் தான் ஹம்ஸாவின் சகோதரர் என்ற அடிப்படையில். ஜஅபர் வாதாடினார்: தான் அமாராவுக்கு மஹ்ரம், ஏனெனில் ஒருவர் ஒரு பெண்ணையும், அவரது தாய் வழி அன்னையையும் மணமுடிக்க இயலாது என்பதனால்.

# முஃதா

முஃதா படையெடுப்புக்கான நேரடிக் காரணத்தை அல்- வாகிதீ மட்டுமே குறிப்பிடுகின்றார்: ''அல்லாஹ்வின் தூதர், புஸ்ராவின் அரசருக்குத் தமது கடிதம் ஒன்றினை அல்-ஹாரிஸ்-இப்ன்-உமைர்-அல்-அஸ்தீ மூலம் அனுப்பி வைத்தனர். இந்தத் தூதுவரை ஷராஹ் பில்-இப்ன்-அம்ர்அல்-கஸ்ஸானி கொன்று போட்டார். தூதுவர்கள் கொல்லப்படக்கூடாது என்பதனால் நபிகளார் சினங் கொண்டவர் களாகி முஃதாவுக்கு ஒரு படையினரை அனுப்பினார்கள்.'' எவ்வாறா யினும் அல்-வாகிதீ ளயீப். அவர் மீது நம்பிக்கை வைத்தல் இயலாது. அதுவும் குறிப்பாக அவர் மட்டுமே ஓர் அறிவிப்பைச் செய்யும் போது.

சிரியாவின் எல்லைப் புறங்களிலான அரபு கோத்திரங்களுக்கெதி ரான படையெடுப்புகளுக்கு நேரடிக் காரணங்கள் ஏதும் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. அத்தகு காரணங்கள் நிகழ்வுகளை விவ ரிப்பதில் பெரும் பங்குகளேதும் ஆற்றப் போவதில்லை. ஜிஹாத் பற்றிய அறிவுறுத்தல்கள், அரபுக் கோத்திரங்கள் ஒரு கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டு இஸ்லாமிய அரசின் எல்லைகள் விஸ்தரிக் கப்பட வேண்டுவதனை வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன. உட னடிக் காரணங்கள் என எதுவும் அதற்கு வேண்டியிருக்கவில்லை. பைஸாந்தியரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கிறிஸ்தவ அரபுக் கோத் திரங்களை எவ்வாறேனும் முஸ்லிம் செல்வாக்குக்குள் கொண்டுவர வேண்டுவது அவசியமாயிருந்தது. பைஸாந்தியப் பேரரசு, இளம் துளிர் விட்டுக் கொண்டிருக்கும் இஸ்லாமிய அரசுக்கு எதிராக நடவடிக்கை கள் எடுக்கும் முன்னர், பைஸாந்திய செல்வாக்குக்கு உள்ளாகியுள்ள பகுதிகளில் முன் கூட்டியே முஸ்லிம்கள் தமது ஆதிக்கத்தை நிலை பெறச் செய்ய வேண்டியிருந்தது.

உம்ரா-அல்-களாஅ வின் பின்னர் நபிகளார் துா-அல்-ஹிஜ்ஜாவின் எஞ்சிய காலத்தையும், ஜுமாதா-அல்-ஊலாவையும் மதீனாவிலேயே கழித்தார்கள். அவ் வேளையிலேயே மூவாயிரம் பேர் கொண்ட ஒரு படையை சிரியாவுக்கு அனுப்பத் தயார் செய்தனர் அன்னார். அதற்கு அமீர் ஆக நியமிக்கப் பெற்றவர் ஸைத்-இப்ன்-அல்ஹாரிஸா. அவர் கொல்லப்பட்டால் ஜஅபர்-இப்ன்-அபூ-தாலிப் தலைமை தாங்குவார். அவரும் கொல்லப்பட்டால் அப்தல்லாஹ்-இப்ன்-அபூ-ரவாஹா தலைமையை ஏற்பார் என நபிகளார் நியமம் செய்தார்கள்.

மாற்றுத் தலைவர்கள் நியமம் செய்யப்பட்டமை, ஓர் அமீரின் நியமனத்தின் போது சில விதிகள் இடப்படலாம் என்பதையும், ஒருவரையொருவர் பின் தொடரும் வகையில் பல அமீர்கள் நியமிக்கப்படலாம் என்பதையும் அனுமதிப்பதாகின்றது. அத்தகு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவே. மிகவும் சேய்மையான ஒரு பிரதேசத்தில் யுத்த முனைவொன்றை மேற்கொள்வது அபாயங்கள் நிறைந்ததே என நபிகளார் கொண்டிருக்கலாம். சிரியாவினதும் அதன் எல்லைப் புறங்களதும் அரபுக் கோத்திரங்களைத் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்த பைஸாந்தியப் பேரரசின் செல்வாக்கு பொதிந்த பிரதேசங்களில் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டிருக்கவில்லை.

முஸ்லிம் படையினர் மஆன்னை அடைந்த போது அங்கே ஹெராக்லியஸ் ஓர் இலட்சம் பைஸாந்திய வீரர்களையும், கிறிஸ்தவ அரபு கோத்திரங்களான லுகம், ஜுத்ஆம், களாஅ (பஹ்ரா, பலிய்ய், பல்கீன்) என்பவற்றிலிருந்து மேலும் ஓர் இலட்சம் வீரர்களையும் கொண்டதொரு படையுடன் மஆப் (அல்- பில்கா)பில் முகாமிட்டிருப்பதாச் செய்தி கிட்டியது. மஆன்னில் இரண்டு இரவுகள் தங்கியிருந்து எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலைமை குறித்து ஒருவரை ஒருவர் ஆலோசித்துக் கொண்டனர். சிலர் எதிரிகளின் பலம் குறித்து நபிகளாருக்குத் தகவல் கொடுக்கலாம் என்றும், அன்னார் மேலதிகப் படைகளை அனுப்பக்கூடும் அல்லது வேறு கட்டளைகளைப் பிறப்பிக்கக் கூடும் என்றனர். அபூ ரவாஹா படையினரை உற்சாகப்படுத்திக் கூறினார்: ‘‘ஓ மக்களே! எதனை நீங்கள் அடைந்துகொள்ள நாடி வந்தீர்களோ, அதையே தவிர்க்க விரும்புகின்றீர்கள். அதுதான் வீர மரணம். நாங்கள் எமது பகைவர்களை எதிர்கொள்வது எண்ணிக்கையாலோ, பலத்தாலோ, சாதனங்களாலோ அல்ல. அல்லாஹ் எம்மை எதைக் கொண்டு கௌரவித்தானோ அந்த மதத்தைக் கொண்டுதான் போராடு

கின்றோம். ஆகவே முன்னேறுங்கள்! இரண்டில் எது கிட்டினாலும் பாக்கியமே. வெற்றி அல்லது வீர மரணம்.''

படையினரை உற்சாகமூட்டுவனவாக அமைந்தன இந்த வாசகங்கள். தயக்கம் காட்டியோரின் அபிப்பிராயங்கள் வலுவிழந்தன. ஸைத் இப்ன் ஹாரிஸா படையினரை, அல்-கர்க்குக் பகுதிக்குச் சற்று தெற்கே அமைந்த முஃதாவுக்கு இட்டுச் சென்றார். அங்குதான் அவர் பைஸாந்தியப் படையினரை எதிர்கொள்ள விழைந்தார். யுத்தம் மிக்க தீவிரமானதாக இருந்தது. மூன்று தலைவர்களும் மிகத் தீரத்துடன் போராடினர். மூவருமே மரணத்திற்கு உள்ளானார்கள். எதிரிகளின் ஈட்டிகளது தாக்குதலுக்குள்ளான ஸைத் இப்ன் ஹாரிஸா பெருமளவு இரத்தம் வெளியேறியதால் மரணத்தைத் தழுவினார். கொடியைத் தனது கையில் ஏந்தியவராகப் போராடினார் ஜஅபர் இப்ன் அபூ தாலிப். அவரது வலக்கரம் வெட்டப்பட இடது கையில் கொடியை ஏந்தினார். இடது கையும் வெட்டுப்பட, கொடியை அணைத்துக் கொண்டவராக மரணிக்கும் வரை போராடினார். அப்த் அல்லாஹ் இப்ன் ரவாஹா கொடியைத் தூக்கி சற்றே தயங்கி, பின்னர் எதிரிப்படையினுள் நுழைந்து உயிர் பிரியும் வரை போராடினார். பின்னர் ஸாபித் இப்ன் அர்கம் கொடியைக் கையிலெடுத்து ஒரு தலைவரைத் தெரிந்து கொள்ளும்படி முஸ்லிம்களை வேண்டினார். படையினர் காலித் இப்ன் அல் வலீதைத் தேர்ந்து கொண்டனர். நிலைமையின் அபாயகர தன்மையை உணர்ந்தவராக, காலித் படையினரை மீள் ஒழுங்குபடுத்தினார். மிகத் துரிதமாக இயங்கிய அவர், வலது இடது புற அணிகளிலிருந்து மற்றுமோர் அணியை உருவாக்கி, அதனைப் பின்புறத்திலிருந்து வரச் செய்தார். புதியதொரு படைப்பிரிவு போலவே தோற்றியது அது. அதன் மூலம் பைஸாந்தியரை சஞ்சலத்துக்குள்ளாக்கலாம் என அவர்கள் கருதியிருக்கக்கூடும். இவ்வாறாக, காலித் திட்டமிட்ட ஒரு பின்வாங்குதலை வெற்றிகரமாக நடத்தினார். ஒரு சிலரையே அவர் இழந்திருந்தார். ஆக, இந்த முனைவில் வீரமரணம் அடைந்தவர்களாகப் பதின்மூன்று பேரையே ஆதாரங்கள் சித்தரிக்கின்றன.

ஒழுங்காகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இப்பின்வாங்குதல் பாரியதொரு வெற்றியாகவே கொள்ளப்பட்டது. காலித் மிகச் சொற்பமான இழப்புகளுடன் தனது படையினரைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. அதே வேளை முஸ்லிம் படையினர் பைஸாந்தியர்க்கு இயலுமான அளவு இழப்புகளையும் ஏற்படுத்தவே செய்தனர். எதிரிகளுள் ஏராளமானோர் கொல்லப்பட்டார்கள். பெரும் எண்ணிக்கையானோர் காயங்களுக்குள்ளாகினர். முஸ்லிம்களது தீரமிக்க போராட்டம், போற்றத்தக்க

தைரியம், வீரமரணத்தை ஈட்டிக்கொள்ளும் அவா, அனைத்துக்கும் மேலாக காலிதின் இராணுவ உத்தி அனைத்தும் இணைந்து, முஸ் லிம்களை ஓர் இக்கட்டான நிலையிலிருந்தும் காப்பாற்றி வைத்தன.

ஜஅபர்-இப்ன்-அபூதாலிபின் உடம்பில், ஈட்டிகளாலும், அம்புகளா லும் விளைந்த, தொன்னூற்றுக்கும் மேற்பட்ட காயங்கள் காணப்பட் டன. என்றாலும் இறுதிவரை போராடும் அவரது துணிவை இவை எவையும் தடுத்து விடவில்லை. காலித்-இப்ன்-அல்-வலீத், ஒன்பது வாள்களை, அவை உடைந்து போகுமட்டும் பிரயோகித்தார்.

நபிகளாரின் அற்புதங்களுள் ஒன்று, யுத்த களத்திலிருந்து செய்திகள் வரும் முன்னமேயே அண்ணலார் தம் தோழர்களிடம் கண்ணீர் மல்கிய வர்களாக, மூன்று தலைவர்களினதும் வீர மரணச் செய்தியை விவரித் துக் கூறியமையாகும். பின்னர் காலித் கொடியை ஏந்தியவராக வெற் றிக்கு வழி வகுத்த பாங்கினை அவர்களுக்குக் கூறினார்கள். இந்த ஸஹீஹ் ஹதீஸில் வெற்றி எனக் கொள்ளப்பட்டது, சரிவர திட்ட மிடப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட பின்நகர்வு அல்லது எண்ணிக்கையில் பெருமளவு மிகைத்தவர்களாயிருந்த பைஸாந்தியர் மீது முஸ்லிம்கள் இழைத்த இழப்புகள் ஆகும்.

வெற்றிகரமான பின்நகர்வின் பின்னும் மக்கள் மண்ணை வாரி எறிந்தவர்களாகப் படையினரைப் பழித்துரைக்களாயினர்: ''ஓ புற முதுகு காட்டி ஓடியவர்களே! அல்லாஹ்வின் பாதையினின்றும் நீங்கள் தப்பியோடினீர்களா?'' எனக் கூச்சலிட்டனர். நபிகளார் கூறினார்கள்: ''அவ்வாறன்று, அவர்கள் ஓடிப்போனவர்களல்லர். அல்லாஹ் நாடி னால் மீண்டும் யுத்தம் புரியச் செல்பவர்கள்''. பொதுமக்கள் அவ் வேளை கொண்டிருந்த அபிப்பிராயம், அவ்வேளை நிலவி வந்த இஸ்லாமிய உணர்வின் வெளிப்பாடாக அமைந்ததே.

முஃதாவில் வீர மரணம் எய்தியோரின் நிலைமையை விவரித்தனர் நபிகளார்: ''அவர்கள் இப்போது எம்முடன் இருக்கக் கூடுவதை நான் விரும்ப மாட்டேன்'' (அல்லது அவர்கள் இப்போது எம்முடன் இருக்க விரும்ப மாட்டார்கள்). அதற்குக் காரணம், தமது வீரமரணத்துடன் அவர்கள் ஈட்டிக்கொண்ட மாபெரும் கௌரவம். ஜஅபர் இப்ன் அபூதாலிப்பின் குழந்தைகள் நபிகளாரிடம் அழைத்து வரப்பட்டார்கள். அண்ணலார் அவர்களுடன் விளையாடினார்கள். அவர்களது தலை களை மழித்து விடக்கூறி, அவர்களுக்காகப் பிரார்த்தித்தார்கள். குழந் தைகள் அனாதைகளாகிவிட்ட துயரத்திலிருந்த தாயாரிடம் அன்னார் கூறினார்கள்: ''நானே அவர்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும்

பாதுகாவலனாக இருக்கும் நிலையில் அவர்கள் வறுமைப்பட்டு விடுவார்கள் என நீர் அஞ்சுகின்றீரா?'' பைஸாந்திய இராணுவத்துடனான முதல் மோதலின் மூலம் கிட்டிய அனுபவங்கள் முஸ்லிம்களுக்குப் பெரும் படிப்பினையாக அமைந்தன. அவர்களது பின்னைய கால ஜிஹாத் முனைவுகளில் அவை பெரும் பயன் தருவனாக அமையும். எதிரிகளின் பலம், எண்ணிக்கை, யுத்த முறைமைகள், போருக்கான திட்டமிடல், நிலப்பரப்பின் தன்மை முதலாய அனைத்துக் குறித்தும் அவர்கள் போதியளவு கற்றுக் கொண்டனர்.

# தாத் அல் ஸலாஸில்

முஃதாவில் இருந்து படையினர் மதீனா திரும்பிய சில நாட்களுள் நபிகளார், அம்ர் இப்ன் அல் ஆஸ்ஸின் தலைமையில் ஒரு படையைத் தயார் செய்தார்கள், தாத் அல் ஸலாஸில் நோக்கிச் செல்வதற்காக. முஃதாவில் பைஸாந்தியப் படையினருக்குச் சார்பாகப் பங்கு பற்றிய கதாஅ கோத்திரத்தார்க்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்பதே நோக்கம். முஃதாவின் நிகழ்வுகளைத் தவறாக அர்த்தம் கொண்டிருந்த கதாஅ, மதீனாவுக்கு எதிரான திட்டங்களைத் தீட்டிப் படையொன்றை யும் தயார் செய்திருந்தனர். அவர்களது எல்லைக்குள் அமர்-இப்ன்-அல்-ஆஸ், முஹாஜிரூன், அன்ஸார்களை உள்ளடக்கிய முன்னூறு பேர் கொண்டதோர் அணியுடன் புகுந்தார். கதாஅ கோத்திரத்தின் கிளைக் கோத்திரங்களான பலிய்ய், உதாரா, பல்கீன் ஆகியவற்றின் உதவியை கதாஅவுக்கு எதிரான நடவடிக்கையில் வேண்டி நிற்குமாறு நபிகளார் பணித்திருந்தார்கள்.

பாரியதொரு படையணியைத் திரட்டியிருந்தனர் கதாஅ. எனவே அமர்-இப்ன்-அல்-ஆஸ் நபிகளாருக்குச் செய்தி அனுப்பி மேலதிகப் படையினரை வேண்டி நின்றார். அண்ணலார் அபூ உபைதா-ஆமிர்-இப்ன்-அல்-ஜர்ராவின் தலைமையில் மேலும் இருநூறு பேர் கொண்ட ஒரு படையணியை அனுப்பி வைத்தனர். அதில் அபூபக்ர், உமர் ஆகிய சிரேஷ்ட தோழர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

ஆமிர்-இப்ன்-அல்-ஷஅபீ, அபூ உபைதாவை முஹாஜிரூன்களுக் கும், அம்ர்-இப்ன்-அல்-ஆஸை நாட்டரபிகளுக்கும் தலைமை தாங்கும் படியும், ஒருவருக்கொருவர் இணைந்து பணியாற்றும் படியும் நபி களார் பணித்திருந்ததாகக் கூறுவார். அம்ர்-இப்ன்-அல்ஆஸ் கதாஅ வுக்கு எதிராக தாக்குதல் நடாத்த, மேலதிகப் படையினர் பனூபக்ர் களுக்கு எதிராக அனுப்பப்பட்டதாகவும் கூறுவார் ஆமிர்.

கதாஅ படையினருக்கு எதிராக முஸ்லிம்கள் முன் செல்ல, அவர்கள் சிதறி விலகிச் சென்றுவிட்டனர். முஃதாவின் பின்னர் நடந்தனவற்றால் சற்றே ஆட்டம் கண்டிருந்த முஸ்லிம் தகைமை இதனால் மீண்டும் நிலை நிறுத்தப் பெற்றது.

இந்தப் படையெடுப்பின் போது அம்ர்-இப்ன்-அல்-ஆஸ் தயம்மம் செய்து முஸ்லிம்களைத் தொழுகையில் முன்நின்று நடாத்தினார். அவருக்குக் குளியல் கடமையாயிருந்த நிலை அது. குளிக்கக் கூடு மாயின், குளிரின் காரணமாகத் தான் சுகவீனத்துக்கு உள்ளாகலாம் என அஞ்சி இருந்தார் அம்ர். பின்னர் விவரங்கள் தெரியப்படுத்தப்பட்ட போது நபிகளர் அம்ரின் அத்தனிப்பட்ட இஜ்திஹாத்தை அங்கீகரித்து விட்டார்கள்.

அம்ர் இப்ன் அல் ஆஸ்ஸின் கீழ், அபூபக்ர், உமர் முதலாய சிரேஷ்ட தோழர்களும் அனுப்பப்பட்டனர். இது குறிப்பிட்ட ஒரு கருமத்துக்குத் தேவையான சிறப்பியல்புகள் கொண்ட ஒருவரின் கீழ் அவருக்கும் மேலான தகைமைகள் கொண்டோரையும் அமைக்கலாம் என்பதனை உணர்த்துகின்றது.

ஹுதைபியாவின் சமாதான ஒப்பந்தத்தின் பின்னர், முஸ்லிம் இராணுவ முனைப்புகள் அனைத்தும் வடபுறத்தை நோக்கியன வாகவே அமைந்திருந்தன. அதனால் தென்புற, தென்மேற்குப் புறப் பகுதிகளிலான நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் கண்டிருந்தன. ஆக, சமா தான உடன்படிக்கையின் காரணமாக மக்கா அமைதியாகவும் பாது காப்பாகவும் இருந்தது. எவ்வாறாயினும் சுமுகநிலை நீடிக்க இயல வில்லை. அமைதியும் பாதுகாப்பும் கொண்டுவரும் அருளை அனுப விக்கக் குறைஷியரின் இயல்பு தடைபோட்டது. அவர்கள் ஒப்பந் தத்தை முறிக்கத் தலைப்பட்டார்கள். அதனால் மக்காவிலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் முஸ்லிம் இராணுவ நடவடிக்கை மீளவும் பிரயோகிக்கப்பட வேண்டியதாயிற்று.

# மக்க விடுதலை

*தமது ஆதாரவாளர்களாக இருந்த பனூபக்ருக்குக் குறைஷியர் குதிரைகளையும், மக்களையும், ஆயுதங்களையும் வழங்கினர். இதன் மூலம் அவர்கள் பாரிய தவறொன்றினை இழைத்துக் கொண்டனர். பனூபக்ரின் நடவடிக்கைகள் முஸ்லிம்களின் ஆதரவாளர்களாக இருந்த குஸாஅவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது நிகழ்ந்தது குஸாஅவின் எல்லைக்குள் இருந்த வதீர் என்ற நீர்த்துரவில். பெரும் பாதிப்புக்கு உள்ளாகிவிட்ட குஸாஅ முஸ்லிம்களின் உதவியை நாடினர். அம்ர் இப்ன் ஸாலிம் அல் குஸாஈ மதீனா சென்று கவிதை வரிகள் சில மூலம் அல்லாஹ்வின் தூதரது உதவியை வேண்டி நின்றார். நபிகளார் கூறினார்கள்: ''நீர் நிச்சயம் உதவி செய்யப்படுவீர், ஓ! அம்ர் இப்ன் ஸாலிம்.''*

*குஸாஅவை ஹரத்தின் எல்லைக்குள் பல வந்தமாக வரச் செய்து பனூபக்ர் தாக்குதல் நடாத்தியதாகக் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். குஸாஅக்களில் 20 பேர் கொல்லப்பட்டதாகக் கூறுவார் அல்வாகிதீ. குஸாஅவுக்கு எதிராக பனூபக்ர்களுக்கு உதவியோர் குறைஷித் தலை வர்களே எனக் கூறும் மூஸா இப்ன் உக்பா, அவர்களுள் ஸப்வான் இப்ன் உமையா, ஷைபா இப்ன் உஸ்மான், ஸுஹைல் இப்ன் அம்ர் ஆகியோர் உள்ளடங்குவர் என்றும், ஆயுதங்களையும், அடிமைகளை யும் கொடுப்பதன் மூலம் உதவி அளிக்கப்பட்டது என்றும் கூறுவார்.*

*குறைஷியரின் செயற்பாடானது தெளிவாகவே ஹுதைபியாவில் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்து விடுவதாகவும், முஸ் லிம்களோடு ஒப்பந்தம் செய்திருந்தோருக்கு எதிரான பகைமையின் வெளிப்பாடாகவும் அமைந்தது. நிலைமையின் அபாயகரத் தன்மை யைக் குறைஷியர் உணர்ந்து கொண்டனர். சில அறிவிப்புக்களின் படி*

நபிகளார் குறைஷுக்குச் செய்தி அனுப்பி அவர்கள் தேர்ந்து கொள்ள சில ஆலோசனைகளை வழங்கினார்கள். குஸாஅவுள் உயிர் இழந்தோருக்கான இரத்த ஈட்டுப் பணத்தைக் குறைஷியர் வழங்கலாம்; பனூ பக்ருடனான ஒப்பந்தத்தை ரத்துச் செய்யலாம்; யுத்தம் புரியலாம். குறைஷ் தேர்ந்து கொண்டது யுத்தம் புரிதலையே. தமது தேர்வு குறித்துப் பின்னர் கவலைக்குள்ளான அவர்கள் சமாதான ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொள்ளவென அபூ ஸுப்யானை மதீனாவுக்கு அனுப்பினார்கள். ஒப்பந்த நீட்டிப்பைப் பெற்றுக்கொள்ள அவரால் இயலவில்லை. யுத்தத்திற்குத் தயாராகும்படி நபிகளார் தம் தோழர்களைப் பணித்தார்கள். என்றாலும் தாம் எந்தத் திசையில், யாருக்கு எதிராக செல்கிறோம் என அன்னார் தெரிவிக்கவில்லை. அதனை இரகசியமாக வைத்துக் கொள்வதே உசிதம். அதன் மூலம் குறைஷ் யுத்தத்திற்குத் தயாராவதைத் தவிர்க்கலாம்.

மதீனாவின் சுற்றுப் புறத்திருந்த கோத்திரங்களை யுத்தத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தனர் நபிகளார். அவற்றில் பிரதானமானவை அஸ்லம், கிபார், மஸீனா, ஜுஹைனா, அஷ்ஜா, ஸலீம் என்பன. சில மதீனா வந்தடைந்தன. சில இடைவழியில் இணைந்து கொண்டன. முஸ்லிம் படை சுமார் பத்தாயிரம் வீரர்களைக் கொண்டிருந்தது. முஹாஜிரூன், அன்சார்களுள் அனைவரும் நபிகளாரோடு சென்றனர். ஒருவர் கூட பின் நிற்கவில்லை. அக்கால கட்டத்தில் இராணுவப் படையொன்றைத் திரட்டிக் கொள்ள முஸ்லிம்களுக்கு இருந்த இயலுமையை இது காட்டுகின்றது. படையில் மஸீனாவின் ஆயிரம் பேரும், ஸலீம்மின் ஆயிரத்து நூறு (அல்லது எழுநூறு) பேரும் உள்ளடங்கினர். ஹுதைபியாவின் சமாதான உடன்படிக்கைக்கும் மக்க விடுதலைக்கும் இடையில் முஸ்லிம் படையினர் கண்டிருந்த வளர்ச்சியை இது காட்டுகின்றது.

பத்ர் யுத்தத்தில் பங்கு பற்றியிருந்த ஹாதிப் இப்ன் பல்தஆ, குறைஷியரைத் தாக்குவதற்கு முஸ்லிம்கள் திட்டம் தீட்டி வருவதாக குறைஷுக்கு ஒரு கடிதம் அனுப்பிவைத்தார். இக்கடிதத்தைக் கொண்டு சென்றவர் ஒரு முதிய மாது. அலீ, அல் ஸுபைர், அல் மிக்தாத் ஆகியோரை, அப்பெண்ணைத் தொடரும்படி அனுப்பினர் நபிகளார். மதீனாவிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள ரவ்லா ஹாக் எனுமிடத்தில் அப்பெண்ணை அவர்கள் சந்தித்தனர். கடிதத்தைத் தராவிட்டால் அவளைப் பரிசோதிப்பதாக அச்சுறுத்தல் செய்யவே அப்பெண் கடிதத்தைக் கொடுத்தாள்.

*நபிகளார் கூறினார்கள்: ''இது என்ன? ஓ ஹாதிப்!'' ஹாதிப் கூறினார்: ''என் மீது அவசரமாகத் தீர்மானம் எடுத்து விடாதீர்கள் அல்லாஹ்வின் தூதரே! குறைஷியரோடு இணைந்துள்ளவனே தவிர குறைஷ் கோத்திரத்தைச் சார்ந்தவனல்ல நான். உங்களுடனான முஹாஜி ரீன்களது மக்கத்துக் குடும்பங்களையும், ஆதனங்களையும் பாதுகாக்கப் போதியளவு உறவினர்களை அவர்கள் மக்காவில் கொண்டுள்ளார்கள். எனக்கோ யாரும் இல்லை. எனவே குறைஷுக்கு ஏதேனும் சகாயம் செய்து, மக்காவில் எனது உறவினர்களுக்கு அவர்களது பாதுகாப்பை ஈட்டிக் கொள்ளலாம் என்றே நான் கருதினேன். அவிசுவாசம் காரண மாகவோ, எனது மதத்தைத் துறக்கும் எண்ணத்துடனோ நான் இதைச் செய்யவில்லை''.*

*நபிகளார் தம் தோழர்களிடம் கூறினார்கள்: ''அவர் உண்மையே பேசினார்.'' உமர் கூறினார்: ''இந்த வஞ்சகனின் தலையைத் துண் டித்துவிட அனுமதி தாருங்கள்.'' நபிகளார் கூறினார்கள்: ''பத்ரைக் கண்டவர் அவர். 'நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள், நான் உங்களை மன்னித்து விட்டேன்' என பத்ரின் மக்களை நோக்கி அல்லாஹ் கூறியிருக்க மாட்டான் என நீர் அறிவீரா? ஓ உமர்''. இவ்வேளை அருளப்பட்ட இறை வாசகங்கள் கூறின:*

> ''இறை நம்பிக்கையாளர்களே! என்னுடைய விரோதியையும் உங்க ளுடைய விரோதியையும் அன்பின் காரணத்தால் அவர்களிடம் நீங்கள் (இரகசியத்) தூது அனுப்புகின்ற நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்; சத்தியத்திலிருந்து உங்களிடம் வந்ததைத் திட்ட மாக அவர்கள் நிராகரித்து விட்டனர்; உங்க ளுடைய இறைவ னாகிய அல்லாஹ்வின் மீது நீங்கள் நம் பிக்கை கொண்டதற்காக இறைத்தூதரையும் உங்களையும் (ஊரை விட்டு) வெளியேற்று கின்றார்கள்; என்னுடைய பாதையில் போர் செய்வதற்காகவும் என்னுடைய பொருத்தத்தைத் தேடுவதற்காகவும் நீங்கள் புறப் பட்டால் (நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்); அன்பின் காரணத்தால் அவர்களிடம் இரகசியத்தைத் தெரியப்படுத்துகின் றீர்கள்; நானோ நீங்கள் மறைத்து வைப்பதையும், நீங்கள் பகிரங்கமாக்குவதையும் மிக அறிந்தவன்; (அன்றியும்) உங்களில் எவர் இதனைச் செய்கின்றாரோ திட்டமாக அவர் நேர்வழி தவறி விட்டார்.'' (அல்- மும்தஹினா 60:1)

*இந்த அறிவித்தல் மூலம், இறைவன், முஸ்லிம்கள் குப்பாருடன் வெளிப்படையாகவே பகைமை பாராட்ட வேண்டுமென்று கூறி,*

அவர்களை நண்பர்களாகவும் பாதுகாவலர்களாகவும் கொள்வதைத் தடுத்துவிட்டான்.

நபிகளாரின் அற்புதங்களில் ஒன்று இந்த சம்பவத்தில் இருந்து தெரிய வருகின்றது. ஹாதிப் கடிதம் அனுப்பியமையையும், அதனை அந்தப் பெண் கொண்டு சென்றமையையும் அன்னார் அறிந்திருந்தார்கள் என்பது அது. சில சட்டங்களும் தெளிவுறுத்தப்பட்டன. உளவாளிகள் சம்பந்தமான சட்டங்கள், தேவை ஏற்படின் உளவாளியின் இரகசியத் தன்மையைப் பரிசோதனைக்குள்ளாக்கலாம் என்பன அவை. மற்றது ஹாதிப் மாபெரும் தவறு ஒன்றனை இழைத்திருந்தாலும் கூட, அவர் ஒரு 'காபிர்' எனக் கொள்ளப்படாமை.

நபிகளார் ஹிஜ்ரி எட்டு, ரமழானில் மதீனாவிலிருந்தும் புறப்பட்டார்கள் மக்காவிலிருந்து என்பத்தாறு கிலோமீட்டர் தொலைவிலும், மதீனாவிலிருந்து முன்னூற்றொரு கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்த குதைத் எனும் பாலைச் சோலையை அடையும் வரை படையினர் நோன்பு பிடித்திருந்தனர். குதைத்தில் அவர்கள் நோன்பை முறித்துக் கொண்டனர்.

நபிகளார் மதீனாவில் நின்றும் வெளியேறியிருந்த வேளை அங்கு பொறுப்பாளராக அபாரஹூம் குல்ஸூம் இப்ன் ஹுஸைன் அல் கிபாரி நியமிக்கப்பெற்றார்.

முஸ்லிம் இராணுவத்தினர் தமது நகர்வுகள் குறித்துக் குறைஷியர் ஏதும் அறியாமலேயே மார்ர் அல் ளஹ்ரானை அடைந்து கொண்டனர். ரமழான் பத்தில் மதீனாவை விட்டும் புறப்பட்ட முஸ்லிம்கள் பத்தொன்பதில் மக்காவுள் நுழைந்தனர். இதுவே மகாஸி நூல்களிலிருந்து கிட்டும் நன்கு அறியப்பட்ட அறிவிப்பு. மக்க விடுதலை நிகழ்ந்தது பதின்மூன்று, பதினாறு, பதினேழு, பதினெட்டு எனப் பலபடகூறப்பட்டாலும், அது ஹிஜ்ரி எட்டு, ரமழான் மாதத்தில் நிகழ்ந்ததென்பது அனைவர்க்கும் ஏற்புடைத்து.

முஸ்லிம்கள் மக்காவுக்குச் சென்று கொண்டிருந்த வழியில் சில முஷ்ரிக் தலைவர்கள் முன் வந்து தமது இஸ்லாத்தைப் பிரகடனப் படுத்தினர். அல் அப்வாவில், நபிகளாரின் ஒன்று விட்ட சகோதரரான அபூ ஸுப்யான் இப்ன் அல் ஹாரிஸ், அப்த் அல்லாஹ் இப்ன் அபூ உமையா இப்ன் அல் முகைரா ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இருவரும் இஸ்லாத்தை எதிர்ப்பதில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டவர்கள். அபூ ஸுப்யான் இப்ன் அல் ஹாரிஸ், முஸ்லிம்களை

இகழ்ந்தவராய், அவர்களை எதிர்த்து நடந்த அத்தனை யுத்தங்களிலும் பங்குபற்றியவர். இறைவன் அவரது உள்ளத்தில் இஸ்லாத்தை விதைத் தான். பின்னர் நடந்த ஹுனைன் யுத்தத்தின் போது, ஏனைய பலரும் விலகிச் சென்றுவிட, நபிகளாருடனேயே இருந்து போராடிய சிலருள் அவரும் ஒருவராக இருந்தார். அபூ அப்த் அல்லாஹ் இப்ன் அபூ உமையாவும் இஸ்லாத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்தவர். அவர், நபி களாரின் மனைவியார் உம்ம் ஸலாமாவின் உடன் பிறந்த சகோதரர். மதீன-மக்க மார்க்கத்தில் அல் ஸக்யாவுக்கும் அல் அரஜ்ஜுக்கும் இடை யில் வந்து மனப்பூர்வமாகவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் அவர். மக்க விடுதலையை அவர் காண முடிந்தது. அல் தாயிப் முற்றுகையின் போது அவர் ஷஹீதானார்.

தற்போதைய 'ராபிக்ஹ்' ஹின் அண்மையிலான அல் ஜஹ்பாவில், அல் அப்பாஸ் இப்ன் அல் முத்தலிப் ஒரு முஹாஜிராக நபிகளாரை வந்து சேர்ந்து கொண்டார். சில பலவீனமான அறிவிப்புகள், அவர் பத்ரின் முன்னால் அல்லது ஹிஜ்ராவின் முன்னால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறுகின்றன. இப்பலவீனமான அறிவிப்புக்கள் வலுவிழந்து போகக் காரணமாக அமைகின்றது, பத்ரின் போது அவர் கைதுசெய்யப்பட்ட வேளை, ஈட்டுப் பணம் செலுத்தித் தன்னைத் தானே விடுதலை செய்துகொள்ளும்படி நபிகளார் பணித்தமை. எவ்வா றாயினும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள முன்னர் இஸ்லாத்துக் காகப் பாரிய உதவிகளைப் புரிந்துள்ளார் என்பதில் ஐயமில்லை. குறைஷியர் குறித்த செய்திகளை அவர் நபிகளாருக்கு வழங்கி வந்தார். மக்காவில் அடக்குமுறைக்கு ஆளானோருக்கு பாதுகாப்பு வழங்கினார்.

முஸ்லிம்கள் மார் அல்-ளஹ்ரானில் முகாம் அமைத்து இருந்தார்கள். அவர்களது நகர்வுகள் குறித்துக் குறைஷியர் அறிந்திருக்கவில்லை. அபூஸுப்யான் இப்ன் ஹர்ப், ஹாகிம் இப்ன் ஹஸாம், புதைல் இப்ன் வர்கா அல்-குஸாயீ ஆகியோர் முஸ்லிம்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள விழைந்து, அல் அப்பாஸ் இப்ன் அப்துல் முத்த லிபைச் சந்தித்தார்கள். நபிகளார் மக்காவினுள் படையினருடன் நுழைய முன்னர் குறைஷியர் நபிகளாருடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தும் வகையில் மக்கத்து மக்களுக்குத் தூதுவர் ஒருவரை அனுப்பி வைக்க அல்-அப்பாஸ் எண்ணி இருந்தார். மார் அல்-ளஹ்ரானில் முகாமிட்டிருந்தோர் பற்றி அபூ ஸுப்யானும் அவரது தோழர்களும் உரையாடி வந்தனர். அவர்களில் ஒருவர் இந்த இராணுவம் குஸாஅவுடையது எனக் கருதினார். மக்காவை நெருங்கி

வந்த முஸ்லிம் படைகள் தமது நடவடிக்கைகளை மிகச் சாதுரியமாக மறைத்து வைத்திருந்தமையைக் காட்டுகின்றது இது.

அது முஸ்லிம் இராணுவம்தான் என அல்-அப்பாஸ் கூறியதும் தாம் செய்ய வேண்டுவதென்ன என வினவினர் குறைஷியர். அபூ ஸுப்ஃயானைத் தனது பாதுகாப்பின் கீழ் முஸ்லிம் பாசறைக்குச் செல்ல வரும்படி அழைத்தார் அல்-அப்பாஸ். இருவரும் தம்மிடம் வந்த வேளை, அபூ ஸுப்யானை இஸ்லாத்தின்பால் அழைத்தனர் நபிகளார். மிக்க மரியாதையுடன் உரையாடினாலும் கூட இஸ்லாத்தில் நுழையத் தயக்கம் தெரிவித்தார் அபூ ஸுப்ஃயான். அவரைத் தமது கூடாரத்துக்கு அழைத்துச் சென்று மறுநாள் காலை கூட்டி வரும்படி அல்- அப்பாஸிடம் கூறினர் நபிகளார். அல்- அப்பாஸ் அவ்வாறே செய்தார். அடுத்த நாள் காலை அபூ ஸுப்ஃயான் இஸ்லாத்தின் பாலானார். அவரின் முன்னால் படையினர் அணிவகுத்துச் சென்றனர். படைகளின் வலிமை குறித்து விவரித்துக் கூறினார் அல்-அப்பாஸ். குறைஷியர் முஸ்லிம்களை வெற்றி கொள்வது இயலாது எனக் கண்டார் அபூ ஸுப்ஃயான். முஹாஜிரூனும் அன்ஸாரும் இணைந்த ஒரு படையணி முன் வந்தது. அதனுள் நபிகளாரும் இருந்தார்கள். அபூஸுப்ஃயான் கூறினார்: ''இறைவனின் பெயரால் உமது சகோதரரது ராஜாங்கம் இன்று நன்றாகப் பெருத்துவிட்டது!'' இதனைச் செவியுற்ற அல்-அப்பாஸ் கூறினார்: ''நீர் நாசமாவீராக! அது அவரது இறைத்தூதுவத்தால் ஏற்பட்டது''. ''அவ்வாறாயின் அது ஆசீர்வதிக்கப்படுவதாக!'' என்றார் அபூ ஸுப்யான். பின்னர் மக்கா சென்று முஸ்லிம்களது பலத்தை விவரித்து எதிர்ப்புக் காட்டுவதைக் கைவிடுமாறு மக்களை வேண்டினார் அவர்.

படை அணிவகுத்து வந்த வேளை, ஸஅத் இப்ன் உபாதா அன்ஸார்களின் கொடியை ஏந்தியவராக முன்வந்தார். அபூ ஸுப்ஃயானைக் கடந்து செல்லும் போது அவர் கூறினார்: 'இன்றைய தினம் யுத்தத்தின் தினமாகும். இன்று நீங்கள் கஃபாவில் புகலிடம் கோர முடியாது'. ஸஅத் கூறியன குறித்து நபிகளாரிடம் முறையிட்டார் அபூ ஸுப்யான். அண்ணலார் கூறினார்கள்: ''ஸஅத் தவறாகக் கொண்டுள்ளார். இறைவன் கஃபாவை மேன்மைப்படுத்தும் நாள் இது. கஃபா போர்த்தப்படும் நாள் இன்றையது''. ஸஅதிடம் இருந்து எடுக்கப்பட்ட கொடி அவரது மகன் கைஸிடம் ஒப்படைக்கப்பட்டது. தனது மகனும் தவறுகள் இழைத்து விடலாம் எனக்கூறித் தன் மகனிடமிருந்தும் கொடியை எடுத்து விடும் படி வேண்டினார் ஸஅத். நபிகளார் அவ்வாறே செய்தார்கள்.

மார் அல்-ளஹ்ரானில் மக்காவுக்கு எதிராகச் செல்ல முடிவெடுத்த நபிகளார் வலது, இடது, மத்திய என மூன்று பிரிவினராகப் படையினரை ஒழுங்குபடுத்தினார்கள். வலதுபுற அணி காலித் இப்ன் அல்-வலீதின் தலைமையிலும் இடதுபுற அணி அல்-ஸுபைர் இப்ன் அவ்வாம் தலைமையிலும் செல்ல, காலாட்படை அபூ உபைதாவின் தலைமையில் சென்றது. கொடி கருப்பு நிறத்திலும் துவஜம் வெள்ளை நிறத்திலும் இருந்தன.

ஒவ்வொரு படைப்பிரிவு குறித்தும் அவற்றின் கொடிகள் குறித்தும் அல்வாகிதீ மிக விளக்கமான பதிவுகளை முன்வைத்துள்ளார். படை வீரர்களின் எண்ணிக்கை குறித்து அவர் கூறுவார். முஹாஜிரூன் எழுநூறு பேர், அன்சாரிகள் நான்காயிரம் பேர், ஸலீம் நானூறு பேர், ஜுஹைனா என்னூறு பேர், பனூ கஅப் இப்ன் அம்ர் ஐநூறு பேர் என ஆக மொத்தம் ஆறாயிரத்து நானூறு பேர். இவர்களிடம் தொள்ளாயிரத்து என்பது குதிரைகள் இருந்தன. அல்வாகிதீ குறிப்பிடும் எண்ணிக்கைகள் ஏனைய ஸஹீஹ் அறிவிப்புகளில் இருந்தும் வித்தியாசப்படுகின்றன. அவரது அறிவிப்புகள் 'மத்ரூக்' நிராகரிக்கப்பட்டனவாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றில் தங்கியிருத்தல் தகாது, குறிப்பாக ஏனையோர் அவருடன் முரண்படும் போது.

முஸ்லிம்களுக்கு எதிராகச் செல்ல ஏனைய பல கோத்திரங்களையும் அவர்களது ஆதரவாளர்களது படை வீரர்களையும் ஒன்று சேர்த்திருந்தனர் குறைஷ். உண்மையில் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதே அவர்களது நோக்கமாக இருந்தது. வெற்றி பெற்றால் அவர்கள் ஏனைய கோத்திரங்களுக்கு உதவுவர்; தோல்வி கண்டால் முஸ்லிம்களுடன் சமாதானம் செய்து கொள்வர்.

குறைஷியரைத் தாக்கும்படி முஸ்லிம்களைப் பணித்தார்கள் நபிகளார். மக்காவுக்குள் நுழைந்த அன்னாரின் படைகள் அஸ்ஸபாஃ வரை சென்றன. எதிர்த்துப் போராட முனைந்த எவரும் கொல்லப்பட்டனர். நபிகளார், நகரின் மேற்புறத்தில் இருந்த கிதாஆ வழியாக மக்காவுக்குள் நுழைந்தார்கள். காலித் இப்ன் அல்-வலீத் கீழ்ப்புறத்தூடு வந்தார். குறைஷியரின் எதிர்ப்பு நீடிக்கவில்லை. அல்கந்தமா எனும் இடத்தில் காலித் இப்ன் அல்வலீத் முஷ்ரிகூன்களை எதிர்த்துப் போராடிய போது முஸ்லிம்களின் மூன்று குதிரை வீரர்கள் கொல்லப்பட, முஷ்ரிகூன் பன்னிரெண்டு பேர் மரணத்துக்குள்ளானதாகக் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். முஷ்ரிகூன் இருபத்தி நான்கு பேர் கொல்லப்பப்பட்டனர் எனக் கூறுவர் மூஸா இப்ன் உக்பா. இந்த எண்ணிக்கையை இருபத்தெட்டு

எனக் கூறுவார் அல்வாகிதீ. இன்னும் ஒரு பலவீனமான அறிவிப்பில் அல்தபரானீ இந்த எண்ணிக்கை எழுபது எனக் கூறுவார்.

இந்த அறிவிப்புகளில் இப்ன் இஸ்ஹாக் மற்றும் மூஸா இப்ன் உக்பா ஆகியோரது அறிவிப்புக்கள் வலுவானவை. இப்ன் உக்பா அவர்களது மகாஸீ, இப்ன் இஸ்ஹாக்கின் ஸீராவை விட நம்பகத் தன்மை கூடியது. குறைஷியர் பலர் மரணமுற்றமை குறித்துக் கவலை யில் ஆழ்ந்தார் அபூ ஸுப்ஃயான். அவர் நபிகளாரிடம் கூறினார்: ''அல் லாஹ்வின் தூதரே! குறைஷியர் இரத்தம் மிக்க மலிவாகி விட்டது. இன்றைய நாளின் பின்னர் குறைஷியர் இருக்கமாட்டார்கள்.'' நபி களார் கூறினார்கள்: ''யாரெல்லாம் அபூ ஸுப்யானின் இல்லத்தில் தங்கி விடுகிறார்களோ அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்''. மக்கள் அபூ ஸுஃப்யானின் வீட்டுக்கு வந்தார்கள். ஏனையோர் தத்தமது வீடு களிலேயே தாழ்ப்பாள் இட்டுக் கொண்டார்கள்.

குறைஷியருக்கு நபிகளார் அளித்த பாதுகாப்பு உத்தரவாதம் குறித்து அன்சாரிகள் கவலை கொண்டனர். நபியவர்கள் தம் சொந்த மக்கள் மீது கொண்ட பரிவே இதற்குக் காரணம் என நினைத்த அவர்கள், நபிகளார் மக்காவிலேயே தங்கிவிடவும் எண்ணங் கொண்டுள்ளார் எனக் கருதலாயினர். அவர்களது மனங்களை ஆறுதல் படுத்தும் வகையில் அண்ணலார் கூறினார்கள்: ''உங்களுடனேயே நான் வாழ் வேன்; உங்களுடனேயே மரணிப்பேன்.''

தம்மை எதிர்த்துப் போராடுபவர்களுடனேயே யுத்தம் புரியுமாறு மக்களைப் பணித்திருந்தனர் நபிகளார். அத்துடன் அன்னார் மக்க ளனைவருக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கினார்கள், நான்கு ஆண்கள், இரண்டு பெண்கள் தவிர - அந்த அறுவரும் கஃபாவின் திரைச்சீலைகளுக்குப் பின்னால் தஞ்சமடைந்திருந்தாலும் கூட. அவர் கள், இக்ரிமா இப்ன் அபூ ஜஹ்ல், அப்துல்லாஹ் இப்ன் கத்ல், மிக்யாஸ் இப்ன் ஸுபாபா, அப்துல்லாஹ் இப்ன் ஸஅத் இப்னு அபூ ஸராஹ். அப்துல்லாஹ் இப்ன் கத்ல் கஃபாவின் திரைச்சீலையில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில் கொல்லப்பட்டார். மிக்யாஸ் இப்ன் ஸுபாபா மக்காவின் சந்தைப் பகுதியில் கொல்லப்பட்டார். இக்ரிமா இப்ன் அபூ ஜஹ்ல், அப்துல்லாஹ் இப்ன் ஸஅத் இப்ன் அபூ ஸராஹ் ஆகியோர் நபிகளாரை அணுகித் தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகப் பிரகடனம் செய்யவே, அவ்விருவரும் மன்னிக்கப்பட்டனர்.

மன்னிப்பேதும் இன்றி அவசியம் கொல்லப்பட வேண்டியவர்கள் என நபிகளார் அறிவித்தோரின் பெயர்களைப் பல அறிவிப்புகளி

லிருந்து தொகுத்துத் தருவார் இப்ன் ஹஜர். அதில் ஒன்பது ஆண்கள், எட்டுப் பெண்கள். முஸ்லிம்களுக்குப் பெரும் பாதகங்கள் விளைத்த வர்களே இவ்வாறு கொல்லப்பட வேண்டுமென நியமம் செய்யப் பட்டவர்கள். இந்த நியமமானது, இஸ்லாத்தின் கருணை காரணமாக வும் அதனைப் பின்பற்றுவோரின் நல்ல நோக்கங்கள் காரணமாகவும் தாம் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்ளும் சாத்தியமுள்ளது எனக் கருதி அக்கிரமங்களும் அடக்குமுறையும் செய்து வருவோருக்குத் தக்க பாடமாக அமைந்தது.

மக்க விடுதலை தினத்தன்று அஸர் வரையும் பனூ பக்ர்களுடன் பழி தீர்த்துக் கொள்வதற்கு குஸாஅவை நபியவர்கள் அனுமதித்திருந்தார் கள். இது படையெடுப்பின் முன்னர் குஸாஅவுக்கு எதிராக பனூ பக்ர் செய்த நம்பிக்கைத் துரோகத்திற்குப் பிரதியாகவாகும். ஹுதைபிய சமாதான ஒப்பந்தத்தில் இணைந்திருந்தும் கூட அவர்கள் துரோகம் இழைத்திருந்தனர்.

அஸருடன் மக்காவினுள் போராட்டங்கள் அனைத்தும் முற்றுப் பெற்று விட்டன என நபிகளார் அறிவித்தார்கள். மக்கா ஒரு பாது காப்பான புண்ணிய ஸ்தலம் எனவும் பிரகடனம் செய்யப்பட்டது. குஸாஅ, பழிதீர்க்கும் வகையில் ஒரு மனிதனைக் கொலை செய்து விட்டனர். அதற்கான இரத்த ஈட்டுப் பணத்தை நபியவர்கள் செலுத்தி னார்கள். இனிமேலும் யாரும் கொல்லப்படுவராயின் அவரது குடும் பத்தார் பழிக்குப் பழி வாங்க அல்லது நட்டஈடு 'தியா' பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிப்புச் செய்யப்பட்டது.

மக்காவின் பெரும்பாலான மக்களுக்குப் பொது மன்னிப்பு வழங் கப்பட்டது. நபிகளாருக்கும் அன்னாரது பணிகளுக்கும் சொல்லொ ணாப் பாதகங்கள் விளைத்திருந்தும், முஸ்லிம் படையினர் மிக இலகுவாக அவர்களை அழித்து விடக் கூடியதாக இருந்தும் கூட அவர்கள் மன்னிப்பு அளிக்கப் பெற்றார்கள். அவர்கள் கஃபாவின் அருகில் தமக்கான தீர்ப்பை எதிர்நோக்கிக் கூடியிருந்த நிலையிலேயே இந்த பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டது.

நபியவர்கள் வினவினார்கள்: ''உங்களைப் பொறுத்தவரையில் நான் என்ன செய்வேன் என நீங்கள் கருதுகின்றீர்கள்?'' அவர்கள் கூறினார்கள்:

''நன்மையே. நீர் ஓர் உன்னதமான சகோதரர்; உன்னதமானதொரு சகோதரரின் மகன் நீர்''. அண்ணலார் கூறினார்கள்:

''இன்று உங்களின் மீது எவ்வித பழி சுமத்தலும் இல்லை, அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக!''. (ஸூரா யூசுப் 12:92)

*அவ்வேளை அருளப்பட்ட இறைவசனங்கள் கூறின:*

(விசுவாசிகளே! உங்களைத் துன்புறுத்தியவர்களை) நீங்கள் பழி வாங்க நினைத்தால், உங்கள் மீது எந்தளவு அக்கிரமம் புரியப் பட்டதோ அதே அளவுக்குப் பழிவாங்குங்கள். (அதற்கு மேல் இல்லை; ஆயினும்) நீங்கள் (பழிவாங்காமல்) பொறுமையைக் கடைப்பிடிப்பீர்களானால், அதுவே பொறுமையாளர்களுக்கு மிகச் சிறந்ததாகும். (அந்நஹ்ல் 16:126)

*குறைஷ் தமக்கிழைத்த அத்துணை கொடுமைகளின் மத்தியிலும் நபிகளார் அவர்களை மன்னித்துப் பொறுமையைக் கடைப்பிடித்தார்கள். தமது கருணையின் காரணமாகவும், அல்லாஹ்வுக்காகவும் அன்னார் கூறினர்: ''நாங்கள் பொறுமையைக் கடைபிடிப்போம்; அவர்களை நாம் தண்டிக்க மாட்டோம்.''*

*இந்தப் பொது மன்னிப்பின் காரணமாகப் பல உயிர்கள் பாது காக்கப்பட்டன, மக்கள் சிறைப்படுவதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடிந்தது. அசையும், அசையா ஆதனங்கள் அனைத்தும் அவற்றின் உரிமையாளர்கள் வசமே இருந்தன. வரிகள் ஏதும் அவற்றின் மீது விதிக்கப்படவில்லை. மக்கா தனது தூய்மை, புனிதத்துவம், இறை சன்னிதானம் என்பன காரணமாக கைப்பற்றப்பட்ட ஏனைய பிரதேசங் களைப் போலன்றி, முற்றிலும் வித்தியாசமான முறையிலேயே கையா ளப்பட்டது. இவற்றால் முன்னைய, பின்னைய சட்டவியலாளர்கள் பலர் மக்காவின் நிலங்கள் விற்கப்படுவதனையோ அங்குள்ள வீடுகள் வாடகைக்கு விடப்படுவதனையோ அங்கீகரிக்காது விட்டார்கள். மக்கா, முதலில் அங்கு வந்து சேர்ந்தவர்களது ஜீவிதத் தலமாகும். அவர்களுக்குத் தேவையான அளவு எடுத்துக்கொண்டு மீதமாக உள்ள அனைத்தும் தொழவும் ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் வருபவர்களை உபசரிக்கவென உள்ளனவாகும். சில சட்டவியலாளர்களது கருத்தில் மக்காவின் நிலங்கள் விற்கப்படலாம், வீடுகள் வாடகைக்கு விடப் படலாம். பின்னையோரது சான்றுகள் வலுவானவை. அதனைத் தடை செய்பவர்களது வாதங்கள் 'முர்ஸல்' ஆகவும் 'மவ்கூப்' ஆகவும் அமைந்துள்ளன.*

*நபியவர்கள் மக்காவில் தமது இல்லத்தில் தங்கவில்லை. அவர் களுக்கு அல்-ஹுஜூன் பகுதியில் ஒரு கூடாரம் அமைக்கப்பட்டது.*

*இந்த இடத்தில்தான் முன்னர், பனூ ஹாஷிம்களையும் முஸ்லிம்களை யும் சமூகப் பிரஷ்டம் செய்து விடும் தீர்மானத்துக்காகக் குறைஷியர் கூடியதும், இணக்கம் கண்டதும். உஸாமா இப்ன் ஸைத் நபிகளாரிடம் அன்னாரின் வீட்டில் அவர் தங்கிக் கொள்வாரா? என வினவிய போது, நபிகளார் ''அகீல் எங்களுக்கு ஏதும் ஒரு வீட்டை அல்லது நிலத்தை விட்டுள்ளாரா?'' எனக் கேட்டார்கள். ஓர் அவிசுவாசியின் வாரிசாக ஒரு முஸ்லிம் இருக்க முடியாது என்பதை விளக்கும் வகையிலேயே இந்த வினா எழுப்பப்பட்டது. அகீல், அபூதாலிபின் வாரிசாக இருந்தார். அவரும் அவரது சகோதரர் தாலிப்பும் இணைந்து வீடுகள் அனைத்தை யும் விற்று விட்டார்கள். அலீயும் ஜஅபரும் தாம் முஸ்லிம்கள் என்ற காரணத்தினால் தமது தந்தையிடமிருந்து எதனையும் பெற்றுக் கொள்ள வில்லை. மேலும் அபூதாலிப் காபிராகவே மரணித்தார்.*

*நபியவர்கள் வெற்றி வீரன் ஒருவனது இறுமாப்புடன் மக்காவினுள் செல்லவில்லை. இறைவனுக்கு முன்னால் சிரம் பணிந்தவர்களாக, அவனது அருட்கொடைகளுக்கெல்லாம் நன்றி பாராட்டியவர்களாகத் தமது ஒட்டகை மீது அமர்ந்து, ஸூரா பத்ஹ்ஹை அதிர்வும் நடுக் குறுவதுமான குரலில் ஓதியவர்களாகத்தான் அன்னார் மக்காவினுள் நுழைந்தார்கள். கஃபாவைச் சுற்றி தவாஃப் செய்த வேளை, தவாஃப் செய்யும் ஏனையோரை நெருக்கடிக்கு உள்ளாக்காத்திருக்கவும் தனது உம்மாவுக்கு நல்லதொரு முன்மாதிரியை நிறுவுவதற்காகவும், தமது கைத்தடியினாலேயே (யெமனி) முனையைச் சுட்டினார்கள்.*

*மக்கா புகலிடமளிக்கும் புண்ணியஸ்தலம் என்பதால், அதன் விடு தலையின் பின்னர் எவ்வித படையெடுப்பும் அதன்மீது மேற்கொள் ளப்பட மாட்டாது எனப் பிரகடனம் செய்த நபிகளார், மக்க விடுதலை முதல் மீள உயிர்ப்பிக்கும் நாள்வரை எந்தவொரு குறைஷுயும் கைப் பற்றப் படவோ கொல்லப்படவோ மாட்டார்கள் எனக் கூறிக் குறைஷி யருக்கு உயரிய ஸ்தானம் ஒன்றினை வழங்கினார்கள்.*

*கஃபாவில் வைக்கப்பட்டிருந்த சிலைகள் அனைத்தும் அழிக்கப் பட்டு கஃபா தூய்மைப்படுத்தப்பட வேண்டும் எனப் பணித்த நபி களார், தாமே அதனை முன்நின்று நடத்தினார்கள். குர்ஆனிய வசனங் களை ஓதியவர்களாகத் தமது வில்லினைக் கொண்டு சிலைகளை உடைத்து வீழ்த்தினர் அன்னார்:*

''இன்னும் சத்தியம் வந்துவிட்டது; அசத்தியம் அழிந்து விட்டது; நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் என்று (நபியே) நீர் கூறு வீராக.'' (பனீ இஸ்ராயீல் 17:81)

மொத்தமாக முந்நூற்றறுபது சிலைகள். கஅபாவினுள்ளே குறி சொல்லும் அம்புகளுடன் வைக்கப்பட்டிருந்த இப்றாஹீம், இஸ் மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் உருவப்படங்களை மஞ்சள் நிறப் போர்வையினால் மூடிக் கூறினார்கள்: ''இறைவன் அவர்களை (குப் பார்) அழித்து விடுவானாக! இப்றாஹீம் ஒரு போதும் குறி சொல்லும் அம்புகளைப் பயன்படுத்தியதில்லை.'' கஃபாவினுள்ளே மர்யத்தின் உருவப்படமொன்று இருந்ததாகவும் ஓர் அறிவிப்பு உள்ளது. இந்த உருவப்படங்கள் அனைத்தும் அழிக்கப்படும் வரை நபிகளார் கஃபா வினுள்ளே செல்லவில்லை. பின்னர் உள்ளே சென்ற நபிகளார், முன்னா லிருந்த இரு தூண்களுக்கு மத்தியில் இரண்டு ரக்அத்துகள் தொழு தார்கள். கஃபா ஆறு தூண்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. அதன் கதவு தமது முதுகுப்புறம் அமையும் வகையிலேயே நபியவர்கள் தொழுதார்கள். அந்த வகையில் அண்ணலாரின் இடது புறம் இரண்டு தூண்களும் வலது புறம் ஒரு தூணும் பின்புறமாக மூன்று தூண்களும் அமைந்தன. வெளியே வந்த நபிகளார், உஸ்மான் இப்ன் தல்ஹாவை அழைத்து கஃபாவின் சாவிகளை அவரிடம் ஒப்படைத்தார்கள். ஜாஹி லியாக் காலத்தில் கஃபாவின் பாதுகாவலர்களாக பனூ ஷைபாவே திகழ்ந்தார்கள். ஆகவே அவர்களது கட்டுப்பாட்டின் கீழேயே அது விடப்பட்டது.

நபிகளார் கரு நிறக் கல்லைத் தொட்டு 'லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்' எனக் கூறியவர்களாகக் கஃபாவைத் தவாஃப் செய்ய ஆரம்பித்தார்கள். அன்னார் இஹ்ராம் அணிந்திருக்கவில்லை. தலைக்கவசம் ஒன்று அணிந்திருந்த நபிகளார் அதனைக் கருப்பு நிற தலைப்பாகையொன்றினால் சுற்றியிருந்தார்கள். இதன் மூலம், ஹஜ் அல்லது உம்ரா செய்யும் எண்ணம் இல்லாத ஒருவர் இஹ்ராம் அணி யாத நிலையிலும் மக்காவினுள் நுழையலாம் என்பது உணர்த்தப்படு கின்றது.

இவ்வாறாக, கஃபா எல்லா வகையான சிலை வணக்க வழிபாடு களிலிருந்தும் ஜாஹிலிய மூடப் பழக்க வழக்கங்களது எச்சங்களிலிருந் தும் முற்றாகத் தூய்மைப்படுத்தப்பட்டது. இப்றாஹீமும் இஸ்மாயீலும் எந்த நோக்கத்துடன் அதனை முதலில் நிறுவினார்களோ அதே அடிப் படையில் ஏக இறையோனை மட்டுமே வணங்கும் தளமாக, இறை வனது விருப்பத்துக்கு இயைந்ததாக அது அமைக்கப்பட்டது. கஃபா சிலை வணக்கத்தின் பிரதான மத்தியஸ்தலமாக விளங்கி வந்தமையால் அங்கிருந்த சிலைகள் அனைத்தும் அகற்றப்பட்டமை, முழு அரேபியா வினதும் சிலை வணக்கத்திற்குப் பாரிய பேரிடியாக அமைந்தது.

*மக்க விடுதலையின் பின், கஃபா தூய்மைப்படுத்தப்பட்ட உடனேயே நபிகளார் காலித் இப்ன் அல்-வலீதை நக்லாவுக்கு அனுப்பி, அல்-உஸ்ஸா சிலையை அழித்துவிட்டு வரப் பணித்தார்கள். முளர் கோத்திரத்தார் அனைவரும் அதனையே வழிபட்டு வந்தனர். காலித் அதனை அழித்தார். ஸுவாஅவுக்கு அனுப்பப்பட்ட அம்ர் இப்ன் அல்-ஆஸ் இனால், அங்கிருந்த ஹுதைல் சிலை அழிக்கப்பட்டது. மக்கா-மதீனா பாதையில் அமைந்திருந்த கதீத் பிரதேசத்தின் முஷல்லல் சிலையை ஸஅத் இப்ன் ஸைத் அல்-அஷ்ஹலீ தகர்த்தார். இவ்வாறாக சிலை வணக்கத்தின் முக்கிய தளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. அதுபற்றி அல்குர்ஆன் கூறியது:*

''நீங்கள் வணங்கும் 'லாத்'தையும் 'உஸ்ஸா'வையும் பார்த்தீர்களா? இன்னும் மூன்றாவதான 'மனாத்'தையும்!'' (அந்நஜ்ம் 53:19-20)

*மக்க விடுதலை குறித்து அருளப்பட்டது, ஸூரா அல்-நஸ்ர்:*

அல்லாஹ்வுடைய உதவியும் வெற்றியும் வரும்போது, இன்னும் (நபியே!) அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக பிரவேசிப்பதை நீர் கண்டால். அப்போது உம்முடைய இறைவனின் புகழைக் கொண்டு (அவனைத்) துதி செய்வீராக! அவனிடம் பாவமன்னிப்புக் கோருவீராக! நிச்சயமாக அவன் மன்னிப்புக் கோருதலை ஏற்றுக் கொள்பவனாக இருக்கின்றான். (ஸூரா அல்-நஸ்ர் 110:1-3)

*முஸ்லிம்களுக்கும் குறைஷிகளுக்கும் இடையிலான போராட்டம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும் என அரேபியர் அனைவரும் காத்திருந்தனர். மக்கா வெற்றி கொள்ளப்பட்டதுமே அவர்களில் பெருந்தொகையினர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாகப் பிரகடனம் செய்தார்கள். அம்ர் இப்ன் ஸலாமா அல்-ஜுரமீ கூறினார்: ''யார் வெற்றி கொள்வார் என அவர்கள் காணும் வரை அரேபியர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினர். அவர்கள் கூறினார்கள்: 'பொறுத்திருங்கள்! அவர் அவர்களைத் தோற்கடித்தால் அவர் உண்மையையே பேசுகின்றார்; அவர் ஓர் இறைத்தூதர் ஆவார்'. எமக்கு வெற்றி கிட்டிய போது, ஒவ்வொரு கோத்திரமும் தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாகப் பிரகடனம் செய்தார்கள்''.*

*மக்க விடுதலை குறித்து இப்ன் இஸ்ஹாக் கூறுவார்: குறைஷிகளுக்கும் நபிகளாருக்கும் இடையிலான பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும் வரை இஸ்லாம் குறித்த தமது நிலைப்பாட்டை வெளிப்*

படுத்துவதில் அரபிகள் பின் நின்றனர். ஏனெனில் குறைஷிகள்தான் மக்களின் தலைவர்கள்; 'கஃபாவின் மக்கள்'; இப்றாஹீம் இஸ்மாயீல் வழி வந்தவர்கள். அரபு மக்களின் தலைவர்கள் அனைவரும் இதனை ஏற்றிருந்தனர். குறைஷிகள்தான் நபிகளாருக்கு எதிராக யுத்தத்தைத் தொடக்கி வைத்தவர்கள். மக்கா வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னர் குறைஷியர் நபிகளாரை ஏற்று இஸ்லாத்தைத் தழுவ, அரபிகள் தாம் நபிகளாரை எதிர்த்து நிற்க எவ்வித சக்தியும் படைத்தவர்களல்லர் என உணர்ந்து அனைவருமே இஸ்லாத்தினுள் நுழைந்தார்கள். இறைவன் கூறுவது போல, 'எல்லாத் திக்குகளிலுமிருந்தும், கூட்டம் கூட்டமாக!'

நபிகளார் மக்காவில் பல போதனைகள் செய்தார்கள். கஃபாவின் வாசற் கதவிலிருந்து செய்த முதலாவது போதனையின் போது, வேண்டு மென்றே இழைக்கப்படும் கொலைகளுக்கான இரத்த ஈட்டுப் பணம் குறித்துப் பேசினார்கள். அத்துடன் ஜாஹிலியக் காலத்துப் பாரம்பரி யங்கள் அனைத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். இரண்டு விடயங்களைத் தவிர: யாத்திரிகர்களுக்கு தண்ணீர் வழங்கும் பொறுப்பு, கஃபாவைப் பாதுகாக்கும் பொறுப்பு. இவ்விரண்டு பாரம்பரியங்களை யும் முன்னர் இருந்தது போலவே தொடர அனுமதித்தார்கள்.

இரண்டாவது போதனையின் போது, ஜாஹிலியக் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட எல்லா விதமான கூட்டு ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்தார்கள். நன்மைகள் செய்ய, சத்தியத்தை நிறுவ, உறவினருக்கு உதவ என மேற்கொள்ளப்பட்டவற்றைத் தவிர.

மூன்றாவது போதனையின் போது, மக்கா பாதுகாப்பான ஒரு புனி தஸ்தலம் எனப் பிரகடனப்படுத்தினார்கள். அங்கு வேட்டையாடவோ, செடி கொடிகளைப் பிடுங்கவோ, மரங்களை வெட்டவோ, தவற விடப்பட்ட அல்லது காணாமற் போன பொருட்களைப் பொறுக்கவோ அல்லது வைத்துக் கொள்ளவோ முடியாது. அங்கே சண்டைகள் இடக் கூடாது. மக்க விடுதலையின் போது மாத்திரம், ஒரு சிறிது நேரத்தை இறைவன் தனக்கு சண்டை செய்ய அனுமதித்திருந்தான் என்றார்கள். மேலும் நபிகளார் கூறினார்கள்: 'மக்க விடுதலையுடன் ஹிஜ்ரா முடி வுற்றது; ஜிஹாதும் நிய்யாவுமே நிலைபெறும்.'

மதீனாவுக்கான ஹிஜ்ரா இனிமேலும் கடமையானதல்ல என்றா லும், ஒரு 'குப்ரியத்தான' நாடொன்றிலிருந்து இஸ்லாமிய நாடொன் றுக்கான ஹிஜ்ரா பற்றிய கருத்தாக்கம் நியாயத்தீர்ப்பு நாள் வரையும் வலுவானதாகவே இருக்கும். முஸ்லிம்கள் தமது இறைவனை எவ்விதத்

தடையுமின்றி தொழுது கொள்ளவும்; தமது பகைவர்களிடமிருந்து இஸ்லாமிய அரசைப் பலமுள்ளதாக ஆக்கவும்; தமது அரசைப் பாது காத்து ஜிஹாத் மூலம் அதன் எல்லைகளை விஸ்தரித்துக் கொள்ளவு மாகவே மதீனாவுக்கான ஹிஜ்ரா உருவாக்கப்பட்டது. மக்க விடுதலை யின் பின்னர் ஹிஜ்ரா அவசியப்படவில்லை. ஏனெனில் இஸ்லாம் பலம் வாய்ந்ததாக உறுதி பெற்றது. முஸ்லிம்கள் தத்தமது வீடுகளி லிருந்து கொண்டே இஸ்லாமிய வழிபாடுகளை மேற்கொள்ளவும், எல்லாத் திக்குகளுக்கும் இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பரப்பவும் முடியுமாக இருந்தது. இறுதித் தீர்ப்பு நாள் வரை ஜிஹாத் கடமையாக இருக்கும். எனவே நபிகளார் மக்க விடுதலையின் பின்னர் முஸ்லிம் களிடமிருந்து இஸ்லாம், ஈமான், ஜிஹாத் ஆகியன குறித்த வாக்குறு தியை வேண்டினார்கள். ஹிஜ்ரா தவிர்க்கப்பட்டது. இதனை இப்ன் உமர் இவ்வாறு விவரித்துக் கூறினார்: ''நபிகளாருக்கு மக்க விடுதலை யுடன் ஹிஜ்ரா இடைநிறுத்தப்பட்டது. ஆனால் யுத்தம் புரிவதற்குக் காபிர்கள் இருக்கும் வரை ஹிஜ்ரா என்பது நிறுத்தப்பட மாட்டாது.'' அதாவது உலகில் 'குப்பாரிய' பிரதேசங்கள் இருக்கும் வரை, இஸ் லாத்தை ஏற்று தமது மதத்திலிருந்து கவரப்பட்டு விடுவோமோ என்ற அச்சங் கொண்டோராக முஸ்லிம்கள் இருக்கும் வரை ஹிஜ்ரா கடமைப்பாடாகவே இருக்கும்.

நான்காவது போதனையில் கொல்லப்பட்ட ஒருவரது குடும்பத்தி னர், இரத்த ஈட்டுப் பணம் பெற்றுக்கொள்ள அல்லது பழிக்குப் பழியாக கொன்றவரைக் கொல்ல உரித்துடையோர் என்பதை விளக்கினார்கள்.

மக்க விடுதலையின் போது பல ஷரீஆ விதிமுறைகள் நியமமாகின. பிரயாணி ரமழானில் நோன்பு வைக்கவோ அல்லது குற்ற உணர்வுகள் ஏதுமின்றி நோன்பை முறித்துக் கொள்ளவோ அனுமதி கிட்டியது: நபிகளார் மதீனாவிலிருந்து படையுடன் புறப்பட்ட வேளை நோன்பு பிடித்தவர்களாக இருந்து, கதீத்தை அடைந்ததும் நோன்பை முறித்துக் கொண்டமை.

நபிகளார் எட்டு குறுகிய ரக்அத்துகளைக் கொண்ட ஸலா அல் -ளுஹா தொழுதார்கள். இந்தத் தொழுகை, ஸுன்னா முஅக்கதாவாக இருக்கும்.

தொழுகையை நடாத்தக் கூடிய தகைமை உடையவர் குர்ஆனை அதிகளவு மனனம் செய்திருப்பவரே.

பிரயாணி தனது பயணத்தின் போது தொழுகையைச் சுருக்கிக் கொள்ள அனுமதிக்கப்படக் கூடிய கால எல்லை: நபிகளார் மக்காவில்

பத்தொன்பது நாட்கள் தங்கியிருந்தார்கள். அக்கால அளவில் தமது தொழுகையைச் சுருக்கிக் கொண்டார்கள்.

பெண்கள் அளிக்கும் பாதுகாப்புறுதி: உம்ம் ஹானீ தனது உறவி னர்களான இருவருக்குப் பாதுகாப்புறுதி வழங்கினார். நபிகளார் அதனை அங்கீகரித்தார்கள். பெண்கள் பாதுகாப்பளிப்பது அங்கீகரிக்கத் தக்கது என்பர் அறிஞர்கள்.

முத்ஆ திருமண முறைகளுக்கான தடை. மூன்று நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த இது பின்னர் எல்லாக் காலத்துக்கு மாக ஹராமாக்கப்பட்டது. இரு சந்தர்ப்பங்களில் முத்ஆ அனுமதிக்கப் பட்டு தடை செய்யப்பட்டது. கைபரின் முன்னால் அனுமதிக்கப்பட்ட முத்ஆ, கைபர் தினத்தன்று தடை செய்யப்பட்டது. மக்க விடுதலைத் தினமன்று அனுமதிக்கப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் தடை செய்யப்பட்டது. இந்தத் தடை நியாயத் தீர்ப்பு நாள் வரை வலுவான தாக இருக்கும்.

'குழந்தை படுக்கையின் உரிமையாளருக்கு; கல் சோரம் இழைத்த வனுக்கு' எனும் சட்ட விதியின் விளக்கம். ஸம்ஆ எனும் அடிமைப் பெண்ணின் மகன் பற்றிய விவகாரமாகும் இது. ஸஅத் இப்ன் அபூ-வக்காஸும், அப்த் இப்ன் ஸம்ஆவும் இக்குழந்தை குறித்து உரிமை கொண்டாடலாயினர். நபிகளார் அப்த் இப்ன் ஸம்ஆவுக்குச் சாதக மாகத் தீர்ப்பு வழங்கினர். ஏனெனில் குழந்தை பிறந்தது அப்த் இப்ன் ஸம்ஆவின் தந்தையாரது படுக்கையிலாகும்.

ஒருவர் தான் இஸ்லாத்தை ஏற்கும் முன்னர், அவரது மனைவி முஸ்லிமாகி விட்டால் அவர்களது திருமணம் பற்றிய விதி. ஸப்வான் இப்ன் உமையா, இக்ரிமா இப்ன் அபூஜஹ்ல் ஆகியோரின் விவகா ரங்களில் இது நிகழ்ந்தது. இவர்களிருவரும் தம் மனைவியரது இத்தா காலம் முடியும் முன்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை காரண மாக, அவர்களதும் மனைவியரதும் திருமணபந்தம் இன்னும் வலு வானதாகவே கொள்ளப்பட்டது.

உயில் சம்பந்தப்பட்ட விதி. தனது செல்வத்தின் மூன்றிலொரு பங்குக்குக் கூடுதலாக ஒருவருக்கு உயில் எழுத முடியாது. ஸஅத் இப்ன் அபீ-வக்காஸ் சுகவீனமுற்ற வேளை,அன்னார் தனது செல்வத்தி லிருந்து மூன்றிலொரு பகுதிக்கு மேலாக வஸீயா செய்வதை நபிகளார் நிராகரித்தார்கள்.

தனதும் தனது குழந்தைகளதும் தேவைகளுக்குப் போதுமானளவு செலவினங்களைக் கணவன் தராதவிடத்து, கணவனது பணத்திலிருந்து நியாயமான ஒரு தொகையை எடுத்துக்கொள்ள மனைவி ஈட்டிக் கொள்ளும் அனுமதி: அபூஸுப்யானின் மனைவி ஹிந்த் பின்த் உத்பா தன் நிலைமை குறித்துப் பிரஸ்தாபித்த வேளை அந்த அனுமதியை நபியவர்கள் வழங்கினார்கள்.

மது, அழுகிய மாமிசம், சிலைகள் ஆகியவற்றின் விற்பனை தடை செய்யப்பட்டது.

நரைத்த மயிர்களை மருதோன்றி அல்லது ஸுப்ரா கொண்டு நிறம் மாற்றல் பற்றிய அனுமதி. (அபூபக்ரின் தந்தையார்) அபூ குஹாபாவின் நரைத்த மயிர்களை நிறமாற்றம் செய்ய நபியவர்கள் ஆலோசனை வழங்கினார்கள்.

இறைவனால் விதிக்கப்பட்ட ஒரு தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் நிலையில் அதில் எவரேனும் தலையீடு செய்தல் பற்றிய விதி. களவெடுத்த குற்றச்சாட்டில் கை வெட்டப்பட்ட மக்ஸூமி பெண்ணுடைய விவகாரத்தில் இது நிகழ்ந்தது. அப்பெண்ணின் சார் பாக உஸாமா இப்ன் ஸைத் தலையீடு செய்தமையால் கடுஞ் சினம் கொண்ட நபிகளார் கூறினர்: ‘மக்களே! உங்களுக்கு முன்னால் சென்ற வர்கள் அழிக்கப்பட்டார்கள். ஏனெனில் அவர்களுள் உயர்வானோர் களவுகள் செய்தால், அவர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள். தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் களவுகள் செய்தால் நியமமான தண்டனை களை வழங்குவார்கள். முஹம்மதின் உயிர் எவனுடைய கரங்களில் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக, முஹம்மதின் மகள் பாத்திமா களவெடுக்கக் கூடுமாயின் அவரது கையையும் நான் வெட்டுவேன்.’

இந்த அறிவிப்பானது ஷரீஆ சட்டங்களின் முன்னால், மக்கள் அனை வரும் சமமானவர்கள் என்பதை உணர்த்துகின்றது; அத்துடன் நியம மான தண்டனைகளைப் பலவீனமானோர் மீது மாத்திரம் பிரயோ கிப்பது குறித்துத் தலைவர்களை எச்சரிப்பதாகவும் அமைந்துள்ளது. பலம் மிக்கவர்கள், தமக்குப் பரிச்சயமிக்க செல்வாக்கு கொண்டோர் மூலமாக அல்லது வேறும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் குறித்த தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். எந்த ஓர் அரசும் சமூகமும் நிலைத்து நிற்பதற்கு, நீதி நிலைபெறுவது அவசிய மாகும். அடக்குமுறையைக் கையாளும் ஓர் அரசை அழித்து விடுவது அதன் எதிரிகளுக்கு இலகுவானதாக இருக்கும். அரசின் அடக்கு

முறையே அதனால் பாதிப்புக்குள்ளானவர்கள் ஒன்று சேர்வதற்குத் தக்க காரணமாக அமைந்துவிடும். அதுவே அரசை வீழ்த்துவதற்கான தியாகங்களைச் செய்யப் போதிய உந்துதல்களையும் அளிக்கும்.

மக்க விடுதலையின் விளைவாக ஷிர்க்குடைய மத்திய தளம், குறைஷியரிடமிருந்து விலகி ஹவாஸின், தகீப் ஆகிய இரு கோத்தி ரத்தவர்களது பிரதேசங்களை அடைந்தது. ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பி, இஸ்லாத்துக்கெதிரான முஷ்ரிகூன்களது தலைமைத்துவத்தை அளிக்க அவர்கள் முன்வந்தனர். இதனால் ஹுனைன் மீதான படை யெடுப்பு, தாயிப் மீதான முற்றுகை என்பன நிகழ்ந்தன.

# ஹுனைன்

அராபியரின் முளர் அத்னான் கிளையைச் சேர்ந்த ஹவாஸின் வடபுறத்தின் பிரசித்தி வாய்ந்ததோர் அரபுக் கோத்திரம். ஹவாஸின் பல கிளைகளைப் பிறப்பித்திருந்தது. அவற்றுள் ஒன்று தகீப். நன்கு பாதுகாக்கப்பட்ட அரண்களைக் கொண்ட தாயிபின் உள்ளேயும் அதன் சுற்றுப்புறங்களிலும் தகீப் வசித்து வந்தனர். ஹவாஸின்களின் ஏனைய கிளையினர் திஹாமாவில் செங்கடலை அண்மி ஸிரியாவின் தென் எல்லைகளிலும், யமனின் வட எல்லைகளிலும் பரந்து வாழ்ந்து வந்தனர்.

ஜாஹிலிய்ய காலத்தில், அரபியரின் சந்தைகள் தகீப் எல்லைக்குள்ளேயே நடத்தப்பட்டு வந்தன. அவற்றுள் மிகப்பிரசித்தம் வாய்ந்த உகாஸ் சந்தை நக்லாவுக்கும் தாயிபுக்கும் இடையில் அமைந்திருந்தது. இச்சந்தையில் பண்டமாற்றும் பொருள் விற்பனையும் நடந்தன. அத்தோடு இலக்கிய, கவிதா போட்டிகளும் நிகழ்ந்தன. இது போன்ற மற்றுமொரு சந்தை அரபாவின் அருகில் இருந்த தூ-அல்-மஜாஸ். தாயிபை நோக்கிய பாதையில் அரபாவிலிருந்து ஒரு பர்ஸக் தொலைவில் அமைந்தது இது. மற்றுமொரு சந்தை மார்ர்-அல்-ளஹ்ரானில் அமைந்த மஜன்னா. இது தாயிபில் இருந்தும் சேய்மைப்பட்டதாக மக்காவை அண்மி இருந்தது.

தகீபின் மக்கள் இந்த அரபுச் சந்தைகளிலிருந்து பெரும் பயன் ஈட்டிவந்தனர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தமது சொந்த வர்த்தக நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர். அத்துடன் தமது விவசாய பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தினர். ஏராளமான திராட்சை, மாதுளை தோட்டங்களையும், மரக்கறி, மூலிகைத் தோட்டங்களையும் கொண்டிருந்தனர் தகீப். காலா

காலமாக நடந்து வரும் இவ்வர்த்தக சந்திப்புக்களின் விளைவாகக் கலாச்சாரப் பரிவர்த்தனைகளும் நிகழலாயின. அதனால் அவர்களது இலக்கியப் பண்பாடுகளும், உலகியல் பார்வைகளும் விரிவு பெற லாயின. மேலும், தகீப், சிரியா, யமன் பிரதேசங்களுடனும், பாலை நில கோத்திரங்களுடனும் நிகழ்ந்து வந்த வர்த்தக நடவடிக்கைகளின் தரகர்களாகவும் விளங்கினர். குறைஷியர்களது நோக்கங்களோடு மிக நெருக்கமானவையாக அமைந்திருந்தன, ஹவாஸின்களதும், தகீப்கள தும் நோக்கங்கள்.

அவர்கள் வெகு தொலைவில் அல்லாது அருகிலேயே வாழ்ந்து வந்தனர். தொண்ணூறு கிலோமீட்டர் இடைவெளியே அவர்களுக் கிடையே இருந்தது. குறைஷியர் தமது கோடை காலத்தைத் தாயிபி லேயே கழித்தனர். 'குறைஷியரின் பூங்கா' என வழங்கிய தாயிபில் குறைஷியர் பல தோட்டங்களையும் வீடுகளையும் கொண்டிருந்தனர். குறைஷ் -ஹவாஸின்களுக்கிடையிலான பழம் தொடர்புகளுக்கும் மேலாக அண்மைக்காலத் திருமண பந்தங்கள் மேலும் நெருக்கங் களை ஏற்படுத்தி விட்டிருந்தன. இவ்விரு சாராரதும் மூலத்தைக் காணின் இவர்கள் முளர்ரின் பரம்பரையினராகவே உள்ளமையைக் கண்டுகொள்ளலாம். ஹவாஸின்னின் ஆறாம் தலைமுறைப் பாட்டனா ராகவும் குறைஷியரின் ஏழாம் (அல்லது ஐந்தாம்) தலைமுறைப் பாட்டனாராகவும் உள்ளார் முளர். ஸஹாபாக்களது சரிதா நூல்களைக் காணின், குறைஷ்-ஹவாஸின்களுக்கிடையில் திருமண பந்தங்கள் மூலமாய் விளைந்த, புதிர்கள் நிரம்பிய உறவு முறைகளைத் தெளி வாகக் கண்டு கொள்ளலாம். இவ்வாறான உறவுகளின் ஓர் அங்க மாகவே, ஹுதைபியாவில் முஸ்லிம்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்ற தூதுவர் உத்பா-இப்ன்-மஸ்ஊத்-அல்-தகபீ யை நாம் காண்கின் றோம்.

குறைஷ்-ஹவாஸின்களின் இத்தகைய நெருங்கிய உறவின் காரண மாக, முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஹவாஸின்கள் குறைஷியர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டிருந்தமை வியப்புக் குரியதல்ல. மக்க விடுதலையின் பின், இஸ்லாத்துக்கு எதிரான துவஜம், ஹவாஸின்களால் ஏந்தப்பட்டது. அரேபிய தீபகற்பத்தின் 'ஷிர்க்' தளத்து நாயகர்களாக விளங்கிய குறைஷியரது வீழ்ச்சியினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவோராக ஹவாஸின்களே அமைந்தனர்.

நபிகளார் தாயிபில், தகீப்களை இஸ்லாத்தின்பால் அழைக்க வெனச் சென்றிருந்தனர். இது நிகழ்ந்தது ஹிஜ்ராவின் முன்னர். அவர்கள்

அன்னாரின் வேண்டுகோளை நிராகரித்தனர். என்றாலும் தாம் அவர்களிடம் சென்றமை பற்றிய நிகழ்வை இரகசியமாக வைத்திருக்கும்படி வேண்டினர் நபிகளார். அவர்கள் வெளிப்படையாகவே தமது எதிர்ப்பையும், பகைமையும் காட்டியவர்களாய், அன்னாரைக் கல்லெறிந்து வதை செய்யத் தமது சிறார்களைத் தூண்டிவிட்டார்கள். குறைஷிகளதும் ஹவாஸின்களதும் நலன்கள் ஒரே மாதிரியானவையாக இருந்தன. குறைஷின் மதத்துக்கும் நலன்களுக்கும் எதிராகச் செல்வோர், ஹவாஸின்னின் மதத்துக்கும் நலன்களுக்கும் அச்சுறுத்தல் விடுப்போரே.

தகீப்களது இராணுவ, பொருளாதார மேன்மை, அவர்கள் குறைஷுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவு என்பன காரணமாக நபிகளார், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை நன்கே உணர்ந்திருந்தனர். தகீப்களிடம் கண்ட தோல்விகளின் மத்தியிலும் நபியவர்கள், அவர்களது தலைவர்களை இஸ்லாத்தின்பால் அழைப்பதில் சளைக்கவில்லை. கோத்திரத் தலைவர்களுடனான தமது சந்திப்புக்களின் போது அன்னார், இப்ன் அப்த்-யா-லைல்-இப்ன்-அப்த்கலாலை அகபாவில் சந்தித்தார்கள். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் மனமுடைந்த நபியவர்கள் மக்காவை விட்டும் வெகுதூரம் சென்றுவிட்டார்கள். திரும்பி வரும் மார்க்கத்தையும் அன்னார் தவறவிட்டு விட்டனர்.

ஹிஜ்ராவின் பின்னர் முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்கும் இடையில் நிகழ்ந்த முரண்பாடுகள் அனைத்திலிருந்தும் ஹவாஸின் ஒதுங்கியே இருந்தனர். அப்பிரச்சினைகளைக் குறைஷியர் தாமாகவே எதிர்கொண்டு விடக்கூடும் என அவர்கள் கருதியிருக்கலாம். பத்ர், உஹத், அல் கந்தக் அனைத்தையும் அவர்கள் பெரும் பார்வையாளர்களாகவே கண்டுவந்தனர். பனூ ஸஹ்ராவின் கூட்டுறவாளராக இருந்த அல்-அக்னஸ்-இப்ன் ஷுரைக்-அல்-தகபீ, பத்ரின் போது, தமது சொந்த வர்த்தகத்துக்குப் பாதிப்புக்கள் ஏற்படாதிருப்பின், பத்ரில் பங்குபற்றுவதை விட்டுத் திரும்பி விடும்படி பனூ ஸஹ்ராவுக்கு அறிவுறுத்தல் செய்தார். உர்வா-இப்ன் மஸ்ஊத்அல்-தகபீ, நபிகளார் முன்வைத்த திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி குறைஷுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், இவை, தகீபின் சில தலைவர்களது விவேகமான அணுகுமுறைகளாக அமைந்தனவே தவிர, முஸ்லிம்களுடனான உறவில் தகீப்களும் ஹவாஸின்களும் சமாதானமான அணுகுமுறைகளைக் கையாண்டமைக்குச் சான்றுகளாக அமையவில்லை.

மக்க விடுதலைக்கு முன்னரான விவகாரங்களில் தகீப் பங்கு பெறாது விட்டமைக்கு அவர்கள் குறைஷியரிலேயே தங்கியிருந்ததும், முஸ்லிம்களது பலம் குறித்து மேலோட்டமாகவே அவர்கள் அறிந்திருந்தமையுமே காரணங்கள் என்று தோன்றுகின்றது. இதனால் மக்க விடுதலையின் முன்னர் முஸ்லிம்களால் விடுக்கப்பட்டிருந்த அச்சுறுத்தல் குறித்து ஹவாஸின் அறிந்திருக்கவில்லை என்பது கருத்தாகாது. முஸ்லிம்களைப் பொறுத்து தமது பலவீனமான நிலைமையை உணர்ந்த குறைஷ், அல்-ஹுதைபியாவில் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டிருந்தனர். காலங்கள் கழிய, குறைஷ் மேலும் பலவீனமுற்றனர்; இஸ்லாத்தின் செல்வாக்கு மிகுந்து வந்தது. மக்க விடுதலையின் போதோ குறைஷியரின் மனோநிலை மிகவும் பலவீனமுற்றிருந்தது. அண்டையில் வாழ்ந்த தகபீக்கள் இது குறித்து நன்கு அறிந்திருந்தனர்; அவர்களுள் சிலர் நேரடியாகவே நிகழ்வுகளைக் கண்டிருந்தனர்.

ஹவாஸின்களும் தகீப்களும் குறைஷியருக்கு ஆதரவாக முன்வராமைக்கு முஸ்லிம்கள் தமது நகர்வுகளின் நோக்கையும் இலக்கையும் சாதுரியமாக மறைத்து வைத்திருந்தமையும் காரணம். முஸ்லிம் அணிகள் முன்னேறி வந்தவேளை ஹவாஸின் தமது சொந்த இல்லங்கள் குறித்த அச்சத்தில் ஆழ்ந்திருந்தார்கள். எனவே மக்காவைக் காக்க வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் இருக்கவில்லை. முஸ்லிம்களின் இலக்கு குறைஷியரா அல்லது ஹவாஸின்களா என்று அறிந்து கொள்ள ஹவாஸின் ஓர் உளவாளியை அனுப்பியதாகக் கூறுவார் அல்வாகிதீ. முஸ்லிம்கள் மதீனாவை விட்டும் புறப்பட்டதிலிருந்தே ஹவாஸின்கள் தம்மை உஷார்படுத்தி முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டிருந்தனர். தாமே முஸ்லிம்களின் இலக்கு எனவும் அவர்கள் கருதியிருந்தனர். அல்ஹுதைபியா ஒப்பந்தத்தின் விதி குறித்து முஸ்லிம்கள் கொண்டிருந்த மனப்பாங்கு பற்றிய தெளிவின்மை இதற்குக் காரணமானது.

மக்க விடுதலையோடு குறைஷ் தலைமைத்துவம் வீழ்ந்து இணைவைப்பின் துவஜம் ஹவாஸின் வசமாகவே, நிலைமையை எதிர்கொள்ள அவர்கள் ஆவன செய்யலாயினர். மக்க விடுதலையின் பின்னர் நபிகளார் முஸ்லிம் இராணுவ நடவடிக்கைகளை முற்றுப் பெறச் செய்யாமை அவர்களுக்கான அச்சுறுத்தலை மேலும் உறுதி செய்வதாக அமைந்தது. நபிகளார் அல்-உஸ்ஸா சிலையை தகர்க்கவென காலித் இப்ன் அல்-வலீத் தலைமையில் நக்லாவுக்கு குதிரைப் படையினர் முப்பது பேரை அனுப்பி இருந்தனர். அரேபியர் வழிபட்ட

இந்த தளம் தகீப் எல்லைக்குள் அமைந்திருந்தது. இந்த நடவடிக்கை ரமழான் முடிய முன்னர் ஐந்து இரவுகளைக் கொண்டிருந்தது. ரமழான் முடிவுற ஆறு இரவுகள் இருந்த போது நபிகளார் குதிரைப்படையினர் இருபது பேருடன் ஸஅத் இப்ன் ஸைத் அல்-அஷ்ஹலீயை அல்-முஷல்லல் (தற்போதைய கதீதியா) பகுதிக்கு மனாத் சிலையைத் தகர்க்கவென அனுப்பி வைத்தார்கள். மனாத் அரபிகளால் வழிபடப் பட்ட, குறிப்பாக இஸ்லாத்தை ஏற்க முன்னர் அன்ஸார்களால் வழி படப்பட்ட ஒரு சிலையாகும். அதனை அழித்து தன் குழுவினருடன் மக்கா திரும்பினார் ஸஅத். மற்றுமொரு அறிவிப்பின்படி இதனை அழித்தவர் அலீ. மக்க விடுதலையின் முன்னர் மக்கா செல்லும் வழியில் அலீ மனாத்தை அழிக்க அனுப்பப்பட்டார் எனக் கூறுகிறது அந்த அறிவிப்பு.

ஹதீஸ் ஆய்வு நோக்கில் இந்த இரு அறிவிப்புகளுமே பலவீன மானவையாக உள்ளன. இப்ன் ஸஅத் இதனை இஸ்னாத் இல்லாமல் தனது ஆசான் அல்-வாகிதீ மூலம் அறிவித்தார். அல்வாகிதீ ளயீப். இப்ன் அல்-கல்பீயும் கூட ளயீப். மனாத் சிலையை அழித்தவர் அபூ ஸுப்யான் என்ற ஓர் அறிவிப்பும் உள்ளது. இதுவும் ஏனைய இரு அறிவிப்புகளையும் விடப் பலம் வாய்ந்தது அல்ல. எவ்வாறாயினும் மனாத் சிலை அழிக்கப்பட்டது என்பதில் ஐயங்கள் இல்லை. வர லாற்று ரீதியாக நிறுவப்பெற்றுள்ளது இது. ஆதாரங்களின் வலிமை யைப் பொருத்து, ஹதீஸ், வரலாற்றைப் போன்றதல்ல.

ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம் முன்னூற்றைம்பது பேர் கொண்ட ஒரு படையை காலித் இப்ன் அல்வலீத் தலைமையில் மக்காவின் தெற்கே என்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள யலம்லம் பிரதேசத்தின் பனூ ஜதீமா கோத்திரத்தை இஸ்லாத்தின் பால் அழைக்கவென அனுப்பினர் நபிகளார். அங்கு சென்றதும் காலித் அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார். பனூ ஜதீமாவால் ‘அஸ்லம்னா’ (நாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம்) எனக்கூற இயலவில்லை. அவர்கள் ‘சபஅனா’ (நாம் நமது மார்க்கத்தை மாற்றிக் கொண்டோம்) எனக் கூறினார்கள். காலித் அவர்களுள் சிலரைக் கொன்று போட்டார். இன்னும் சிலரைக் கைது செய்தார். சற்று பின்னர் கைதிகளும் கொல்லப்பட வேண்டுமெனப் பணித்தார் காலித். அப்துல்லாஹ் இப்ன் உமர், அப்துர் ரஹ்மான் இப்ன் அவ்ப், மற்றும் சில ஸஹாபா கைதிகளைக் கொள்வதினின்றும் தவிர்ந்து கொண்டார் கள். நபிகளாரிடம் திரும்பி வந்த வேளை, நிகழ்ந்தனவற்றை அவர்கள்

கூறினார்கள். இதனைச் செவியுற்றதும் நபிகளார் தமது இரு கரங்களையும் மேல் உயர்த்தி இருமுறை கூறினார்கள்: ''ஓ இறைவா! காலித் செய்தவற்றிலிருந்து நான் குற்றமற்றவன்.''

பனூ ஜதீமா மக்கள் கூறியதைத் தவறாகப் புரிந்துகொண்ட காலித் இப்ன் அல்-வலீத் ஒன்றில், அவர்கள் இஸ்லாத்தை ஏற்க மறுக்கின்றார்கள் அல்லது இஸ்லாத்தை இகழ்ந்துரைகின்றார்கள் எனக் கொண்டார். எனவே காலித் அவர்களைக் கொன்று போடலானார். அப்துர் ரஹ்மான் இப்ன் அவ்ஃப், அப்தல்லாஹ் இப்ன் உமர் ஆகிய இருவரும் பனூ ஜதீமா மக்கள் தாம் அறிந்திருந்த வாசகங்கள் மூலம் இஸ்லாத்தை ஏற்பதாகக் கூறியுள்ளார்கள் எனக் கொண்டனர். ஷரீஆவின் சொற்பிரயோகங்கள் அராபியர் அனைவர் மத்தியிலும் தெளிவாகி இருக்கவில்லை. இதனால் காலித் தனது அவசரத்தில் செய்ததை ஏற்காதுவிடினும் நபிகளார் அவரைத் தண்டிக்கவோ இராணுவ தலைமைப் பதவியில் இருந்து அவரை கீழிறக்கிவிடவோ இல்லை. இஜ்திஹாத் செய்து தவறிழைத்தமையே காலித் இழைத்த தவறு.

முன்கத்இ என்பதனால் சான்றாகக் கொள்ள முடியாததோர் அறிவிப்பு உள்ளது. அதன்படி ஜதீமா மக்களுள் மரணத்துக்குள்ளான அனைவருக்கும் நபிகளார் நட்டஈடு வழங்கினார்கள். இழப்பினால் துயருற்ற மக்களுக்கு மேலதிக உதவித் தொகையும் வழங்குவதன் மூலம், நிகழ்ந்தவை தமக்கு ஏற்புடைத்தனவல்ல என்பதனை அன்னார் உணர்த்தினார்கள். இது தவறுதலாகக் கொல்லப்பட்டவர் குறித்த இஸ்லாமிய சட்டங்களுக்கு இயைவானதாகும். இந்த முன்கத்இ அறிவிப்பை நாம் ஏற்கக் கூடுமாயின், அதனை முழுமையாக ஏற்க வேண்டும். அதன் பிரகாரம் காலித் இப்ன் அல்-வலீத் பனூ ஜதீமாவை அடைந்த வேளை, அம்மக்கள் ஆயுதங்கள் ஏந்தி இருந்தார்கள். ஆயுதங்கள் அனைத்தையும் கீழே போடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்ட காலித், அனைவரும் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் எனப் பணித்தார். அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டனர். பின்னர் அவர்களைக் கட்டிப்போட்ட காலித் அவர்களுள் பலரைக் கொன்று போட்டார். இப்ன் இஸ்ஹாக் இதனையும் மேலும் பல அறிவிப்புகளையும் பதிவு செய்துள்ளார். அதன்படி, ஜாஹிலிய்யாக் காலத்தின் போது பனு ஜதீமா, காலிதின் நெருங்கிய உறவினரான அல்பஃகீஹ் இப்ன் அல்முகீராவைக் கொலை செய்தமைக்கான பழிவாங்குதல் ஆகவே இது நிகழ்த்தப்பட்டுள்ளது என அமைகிறது. இப்ன் இஸ்ஹாக்கின் இந்த அறிவிப்பு குறித்து இப்ன் கஸீர் கூறுவார்: 'இந்த அறிவிப்புகள் முர்ஸலும் முன்கத்இயுமாக இருக்கும்!' அதாவது

இவை சான்றுகளாக ஏற்கப்பட முடியாதவையாகும். நபிகளார், காலி தைத் தண்டிக்காது விட்டமையே, அவர் இஜ்திஹாத் செய்து தவறி ழைத்துவிட்டமைக்குக் கிட்டும் சான்றாகும். காலிதின் செய்கை ஏற்புடையதல்ல என்றே நபிகளார் கருதினார்கள்.

மக்க விடுதலையின் பின்னர் உஸ்ஸாவையும் மனாத்தையும் அழிப் பதற்காக மேற்கொள்ளப்பட்ட இரு படையெடுப்புகளும் ஹவாஸின் தகீப் எல்லைகளுக்குட்பட்டே அமைந்திருந்தன. மக்க விடுதலையின் பின்னர் அரை மாத காலத்துக்குள் ஹவாஸின்கள் முஸ்லிம்களை எதிர்கொள்ளவெனத் தமது படைகளைத் தயார் செய்ய ஆரம்பித்து விட்டனர். முஸ்லிம்கள் தம்மைத் தாக்க முன்னர் தாம் முஸ்லிம் களைத் தாக்குவதே உசிதம் எனக் கருதினார்கள். தீர்க்கமான ஒரு முடிவைக் கண்டுகொள்ள வேண்டுமென அவர்கள் கொண்டிருந்த உறுதி தெளிவாக இருந்தது. எவரும் தமது உடைமைகளைக் கைவிட்டு யுத்தகளத்தில் இருந்து பிரிந்து சென்று விடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகத் தமது செல்வங்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்தையும் உள்ளடக்கியதாகவே படையை அமைத்திருந்தனர். படைக்குத் தலைமை தாங்கியவர் மாலிக் இப்ன் அவ்ஃப் அந்நஸ்ரி. ஹவாஸின் கஅப், கிலாப் கோத்திரங்கள் தவிர்த்து, கதபானின் ஏனைய கோத்திரங்கள் அனைத்தும் ஹவாஸின்னை இணைந்து கொண்டன.

தமது மக்களை மாலிக் ஒழுங்குபடுத்தியிருந்த முறை தாக்க பூர்வ மானதாக அமைந்திருந்தது. முதலில் குதிரைப்படை, அடுத்து காலாட் படை, பின்னால் பெண்டிரும் குழந்தைகளும் ஆட்டு மந்தைகளும் ஒட்டகங்களும் எனப் படையணி அமையப் பெற்றது. முப்பது வயது டையவராக இருந்த மாலிக் அன்நஸ்ரி யுத்த களத்துப் பராக்கிரமங் களுக்குப் பெயர் பெற்றவராக விளங்கினார். பெண்டிர், குழந்தைகள், உடைமைகள் அனைத்தையும் படையணியுடன் இணைத்து, தமது மக்களனைவரையும் அவர் யுத்தத்துக்கென அழைத்துச் சென்றமையை துரைத் இப்ன் அஸ்-ஸிம்மா கண்டனம் செய்ததாக ஓர் அறிவிப்பு உள்ளது. தோற்கடிக்கப்பட்டு ஒருவர் தப்பி ஓடுவராயின் அவரை எதுவும் தடுத்து நிறுத்த முடியாது என்றார் துரைத். எனினும், அவரது கண்டனத்தை மாலிக் பொருட்படுத்தாது விட்டார்.

அல்வாகிதீ மட்டுமே ஹவாஸின்னின் எண்ணிக்கையைத் தருகின் றார். படையினர் இருபதாயிரம் பேர் என்பார் அவர். இதனை அங்கீ கரிக்கும் அல் ஹாபிழ் இப்ன் ஹஜர் முஸ்லிம் படையினரை விட ஹவாஸின் இருமடங்கினர் என்பார்.

ஹவாஸின் படைகள் குறித்து அறிந்து வரவென நபிகளார் அப்தல் லாஹ் இப்ன் அபூஹத்ரத் அல்-அஸ்லமீயை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் மத்தியில் ஓரிரு நாட்களைக் கழித்த அவர், தான் அறிந்து கொண்டவற்றைத் திரும்பி வந்து நபிகளாரிடம் கூறினார். பின்னர் முஸ்லிம்கள் ஹவாஸினை எதிர்கொள்ளத் தயாராகினார்.

இன்னமும் முஷ்ரிக்காக இருந்த ஸப்வான் இப்ன் உமையாவிடம் இருந்து நபிகளார் நூறு யுத்த கவசங்களை இரவலாகப் பெற்றுக் கொண்டார்கள். இவற்றை அன்னார் பெற்றுக்கொள்வது பலவந்த மாகவா? அல்லது கடனாகவா? என வினவினார் ஸப்வான். கட னாகவே எனக் கூறினர் நபிகளார். ஹுனைன் யுத்தத்தின் பின்னர் நன்றி கூறி கவசங்களை ஸப்வானிடம் திருப்பி அளித்தார்கள். இப்ன் அப்துல் பர்ர் இஸ்னாதுகள் இன்றி அறிவிக்கும் ஓர் அறிவிப்பில் நபிகளார் ஹுவைதிப் இப்ன் அல் உஸ்ஸாவிடம் நாற்பதாயிரம் திர்ஹம்கள் கடனாகக் கேட்டதாகவும் நவ்பல் இப்ன் அல்-ஹாரிஸ் இப்ன் அல்முத்தலிபின் உதவியை ஏற்று மூவாயிரம் ஈட்டிகள் பெற்றுக் கொண்டதாகவும் கூறுவார். இவ்விருவரிடமிருந்தும் நபி களார் உதவிகளைப் பெற்றுக் கொண்டனர் என்பதை மறுப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் காண்பதற்கில்லை. ஸப்வான் ஒரு முஷ்ரிக்காக இருந்தும் கூட நபியவர்கள் அவரிடம் உதவி கேட்டுள்ளார்கள். மேலும் இஸ்லாம் இப்போது நன்கு வேரூன்றி உள்ளது. ஏனையோரின் உதவிகளை ஏற்பதனால் அதன் இஸ்லாமியத் தன்மையில் குறை யேதும் ஏற்படப் போவதில்லை, முஸ்லிம்களின் மதவியல் ஒழுங்கு கள் எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கப்படாத வரையில்.

முஸ்லிம்கள் யுத்தத்திற்குத் தயாராவதில் கால தாமதங்கள் ஏதும் ஏற்படவில்லை. கந்தமா பகுதியில் நிகழ்ந்த சிறு கைகலப்பு தவிர மக்க விடுதலையில் பங்கெடுத்த படையினர் பாரிய மோதல் எதிலும் ஈடுபடவில்லை. ஹவாஸின்களைச் சந்திக்கத் தயாரான அவர்கள் ஷவ்வால் மாதம் ஐந்தாம் நாள் ஹுனைனை நோக்கிப் புறப்பட் டார்கள். ரமழான் பத்தொன்பதாம் நாள் மக்கா வெற்றி கொள்ளப் பட்டதன் பின்னர், அவர்கள் பதினைந்து நாட்கள் அங்கு தங்கி இருந்தார்கள். ஷவ்வால் மாதம் பத்தாம் தினம் முஸ்லிம் படையினர் ஹுனைனைச் சென்றடைந்தார்கள். தற்போது அல்-ஷராயீ என வழங் கப்படுவதே ஹுனைன் பகுதியாகும். மக்காவின் கிழக்கே இருபத் தாறு மைல்கள் தொலைவில் இருந்தும் அதை நெருங்கி வரவர முஸ்லிம்கள் மிக மெதுவாகவும் அவதானத்துடனுமே முன்னேறிச் சென்றனர். தாம் இல்லாத நிலையில் மக்காவில் அமீராகப் பணியாற்ற

நபிகளார் அத்தாப் இப்ன் உஸைத்தை நியமித்தார்கள். முன்னைய படையெடுப்புகள் அனைத்தையும் விட முஸ்லிம் இராணுவம் கூடிய தொகையினரைக் கொண்டிருந்தது. மக்க விடுதலைக்காக வந்த சுமார் பத்தாயிரம் பேருக்கு மேலாக மக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட இரண்டாயிரம் பேர் இணைந்து கொண்டனர். புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டவர்கள் 'துலகா' (விடுவிக்கப்பட்டோர்) என அழைக் கப்பட்டனர். பல அறிவிப்புகள் இதில் உடன்பாடு காண்கின்றன. ஹதீஸ் ஆய்வு முறையில் படையில் இணைந்து கொண்ட துலகாவின் எண்ணிக்கை சரியாக அமையாவிடினும் கூட அவற்றை வரலாற்று ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளலாம். ஆக, ஹுனைன் யுத்தமே நபி களாரின் வாழ்வில் இடம்பெற்ற மிகப் பெரியதும் தீவிரமானதுமான யுத்தம் எனக் கொள்ளலாம்.

முஸ்லிம்கள் எதிரிகளை அண்மித்து வந்த வேளை, இஷாத் தொழு கைக்கான நேரமாகியது. தமது படையினரின் பாதுகாப்புக் குறித்த அக்கறையின் காரணமாக, தமது தோழர்களில் ஒருவரை ஹுனைன் பள்ளத்தாக்கினை நோக்கி இருந்த ஒரு மலைக்குன்றின் மீதேறி, எதிரிகள் குறித்து அறிந்து வரப் பணித்தனர் நபிகளார். அவர் ஹவா ஸின் எண்ணிக்கை, அவர்களது உடமைகள் பற்றிய தகவல்களை இறைத்தூதரிடம் கொண்டு வந்தார். இறைவன் மீதான நம்பிக்கையும் அவனது உதவி பற்றிய உறுதியும் கொண்டனராக நபிகளார் கூறினார் கள்: 'இறைவன் நாடினால் நாளைய தினம் முஸ்லிம்களுக்கான யுத்தப் பொருட்களாக இருக்கும் அவை!' இரவில் படையினர் உறக்கம் கொள்ளும் வேளை, தான் படையினரின் பாதுகாப்புக் கட மையில் ஈடுபடுவதாகக் கூறினார் அனஸ் இப்ன் மர்தக் அல்-கனவீ. அடுத்த பஃஜ்ர் வரை காவல் செய்வதிலிருந்தும் தவறி விடாதிருக்கும் படி நபிகளார் கூறினர். தன் கடமைகளை அனஸ் திறம்படவே நிறை வேற்றியமையினால் அவருக்கு சுவனம் வாக்களிக்கப்பட்டது.

முஸ்லிம் படையினருள் 'துலகா'வின் பிரசன்னம் சில பாதகங் களை விளைவிப்பதாகவும் அமைந்தது. அவர்களது உள்ளங்களிலும் வாழ்விலும் ஆழ்ந்து பதிந்திருந்த ஜாஹிலிய கால செல்வாக்குகளி லிருந்து இன்னமும் முற்றாக அவர்கள் விடுபட்டிராததன் காரணமாக விளைந்தவை அவை. ஹுனைனுக்கான வழியில் அவர்களுள் சிலர் தாத் அன்வாத் என வழங்கப்பட்ட ஒரு மரத்தைக் கண்டார்கள். அக்கால முஷ்ரிகூன் தமது ஆயுதங்களை அதிலேயே தொங்க விடு வார்கள். அம்மரத்தைக் கண்டதும் அவர்கள் கூறினார்கள்: ''ஓ அல் லாஹ்வின் தூதரே! இறைநிராகரிப்பாளர்கள் கொண்டுள்ளது போல

*ஒரு தாத் அன்வாத் மரத்தை எமக்கும் அமைத்துத் தருவீர்களாக!'' நபிகளார் கூறினார்கள்: ''அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். மூஸா விடம் அவரது மக்கள் கூறியதையே நீங்கள் என்னிடமும் கூறுகிறீர் கள். அவர்களது கடவுளர்களைப் போல் எமக்கும் ஒரு கடவுளை அமைத்துத் தரும்படி அவர்கள் வேண்டினார்கள். யாருடைய கரங்களில் எனது ஆத்மா உள்ளதோ அவன் பெயரால், உங்களுக்கு முன் சென்ற வர்களின் சம்பிரதாயங்களையே நீங்கள் பின்பற்றுகிறீர்கள்.''*

தாம் இஸ்லாத்தை ஏற்றிருந்தும் இறையோனின் ஏகத்துவம் குறித்து அவர்களது மனதில் திடமான ஒரு தெளிவு இருக்கவில்லை என்ப தையே அவர்களது வேண்டுகோள் எடுத்துக்காட்டுகின்றது. அவர்களது வேண்டுகோளில் மறைந்துள்ள பல்தெய்வ ஏற்பின் தன்மையைச் சுட் டிக் காட்டி அவர்களை எச்சரித்தனர் நபிகளார். அவர்கள் இஸ்லாத் துக்குப் புதியவர்கள் என்பதால் நபிகளார் அவர்களைத் தண்டிக்கவோ கடிந்துரைக்கவோ இல்லை.

மற்றொரு பாதக விளைவு, தமது எண்ணிக்கை குறித்து முஸ்லிம் கள் கொண்டிருந்த பெருமித உணர்வு. எதிர்பார்க்கப்பட்ட வெற்றி குறித்து ஒருவர் வெளிப்படையாகவே பேசினார்: *'சிறிய தொகை யினரே அவர்கள் என்பதனால் நாம் ஒருபோதும் தோற்கடிக்கப்பட மாட்டோம்'*. வேறு சிலரும் அவ்வாறே கருதினர். எனவே குர்ஆன் அவர்களைக் கண்டிக்க வேண்டிய தாயிற்று. இறைவனைத் தவிர வேறு எதிலும் அவர்கள் நம்பிக்கை கொள்வது தகாது எனவும் அவ்வாறு செய்யின் அவர்களது முனைவுகளிலேயே அவர்கள் தங்கிக்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் உணர்த்த வேண்டி இருந்தது:

> ''ஹுனைனுடைய நாளில் நீங்கள் அதிகமாயிருந்தமை உங்களை மகிழ்ச்சி அடையச் செய்தது; (எனினும்) அது எதனையும் உங்க ளுக்கு (உறுதியாக) பலனளிக்கவில்லை. -பூமியாகிறது- அது விசாலமானதாக இருந்தும் உங்களுக்கு நெருக்கடியானதாக ஆகி விட்டது. பிறகு நீங்கள் புறமுதுகிட்டு திரும்பினீர்கள்.'' (அல்தவ்பா 9:25)

நபிகளார் இதனைத் தெளிவாக அறிந்திருந்தார்கள். தமது பிரார்த்த னைகள் மூலம் நபிகளார், தாம் இறைவனது துணையை மாத்திரமே ஆசிப்பதாகவும் அவனிலேயே தாம் தஞ்சம் அடைவதாகவும் முஸ் லிம்களுக்கு உணர்த்தினார்கள்: *''ஓ இறைவா! உனது உதவியுடனேயே நான் பாடுபடுகிறேன்; உனது உதவியுடனேயே நான் தாக்குகிறேன்; உனது உதவியுடனேயே நான் யுத்தம் புரிகிறேன்.''* தனது 'உம்மா'வின்

பாரிய எண்ணிக்கை குறித்துப் பெருமை பேசிய ஒரு நபி குறித்தும், எவ்வாறு அவர்களுக்கு இறைவன் மரணத்தை விளைவித்தான் என்பது குறித்தும் அம்மக்களுக்கு நபிகளார் எடுத்துரைத்தார்கள். ஆக, அண்ணலார் முஸ்லிம்கள் மீது அவதானம் செலுத்தியவர்களாக அவர்களது சிந்தனையிலும் நடத்தையிலும் ஏற்படக்கூடிய சிறு சருகுதல்கள், பிறழ்வுகள் என அனைத்தையும் திருத்தி அமைத்தார்கள்.

தம்மிலும் வலிமை மிக்க பகைவருடன் மிக அபாயகரமான போராட்டங்கள் நிகழ்த்திய வேளைகளிலும் அன்னார் இவ்வாறே நடந்து கொண்டார்கள். ஏனெனில் வெற்றி நிர்ணயம் ஆவதற்கு ஒரு நியதி இருந்தது.

> ''நீங்கள் இறைவனுக்கு உதவி செய்தால் இறைவன் உங்களுக்கு உதவி செய்வான்.'' (முஹம்மத் 47:7)

ஆனாலும் இத்துணை பெரிய கூட்டத்தாருக்குக் கற்பித்தல் இயலுமான கருமமா? அல்லது அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்த ஜாஹிலிய்யாவின் எச்சங்களை அத்துணை துரிதமாகக் கலைந்து விடத்தான் முடியுமா? தமது எண்ணிக்கை குறித்த இறுமாப்பு யுத்தத்தின் ஆரம்பத்தில் அவர்களை வெருண்டோடச் செய்தது. அவர்கள் தப்பி ஓடியமையும் போராட்டத்தின் பயங்கரமும் இணைந்து அவர்களை யதார்த்த நிலைக்கு கொண்டுவந்து, இறையோனில் மாத்திரமே அவர்களைத் தங்கியிருக்கச் செய்தது. அவிசுவாசிகள் அன்றி முஸ்லிம்களே யுத்தத்தின் பின்னைய பகுதியில் தீர்க்கமான வெற்றியை ஈட்டினர்.

துலகாவினதும், சில நாடோடி அரபுக் கோத்திரங்களதும் மக்களுள் பெரும்பாலானோர் யுத்தப் பொருட்களை அடைந்து கொள்வதிலேயே அதிக அக்கறை செலுத்தினர். அதனால் யார் தோல்வி அடைவார் எனக் கண்டு கொள்வதிலேயே அவர்கள் ஆர்வம் மிக்கோராய் இருந்தனர். இதுவும் பாதகங்களை விளைவிக்கும் ஓர் அம்சமாக விளங்கியது. தாம் ஒரு கொள்கைக்காகவோ உன்னதமான ஒரு கோட்பாட்டுக்காகவோ போராடுகிறோம் என்ற உணர்வற்றவர்களாக அவர்கள் இருந்தார்கள். இஸ்லாத்தில் புதியவர்களாக, விசுவாசத்தின் மகிமையை இன்னும் நுகராதவர்களாக, இறைவனுக்காகப் போராடுகிறோம் என்ற அவாவின் சுவையை அறியாதவர்களாக இருந்தார்கள். சிலர் நல்ல முஸ்லிம்களாக இருக்க, சிலர் அவிசுவாசிகளாகவே இருந்தனர். அவர்கள் யுத்தப் பொருட்களை அடைந்து கொள்வதில் காட்டிய ஆர்வம் வியப்பூட்டுவதல்ல. யுத்தத்தின் ஆரம்பத்தில் அவ்வாறே நடந்து கொண்ட

வர்கள் ஏனைய படையினரையும் தம்மோடு இணைந்து கொள்ள வேண்டினர். யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் முஸ்லிம்கள் தப்பி ஓடுவதைக் கண்டு, ஒருவர் தனது மகிழ்வைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்தினார்: ஸப்ஃவான் இப்ன் உமையா அல்-ஜுஹமீயின் சகோதரர் கில்தா இப்ன் உமையா கூறினார்: ''நிச்சயமாக சூனியம் இன்று பயனற்று விட்டது.'' ஸப்வான், இன்னமும் ஒரு முஷ்ரிக்காக இருந்தும்கூட கூறினார்: ''நிறுத்திக்கொள்ளும்! உமது வாயை இறைவன் தகர்ப்பானாக! இறைவனின் பெயரால் நான் ஹவாஸின் ஒருவரால் ஆளப்படுவதை விட குறைஷியரின் ஒருவரால் ஆளப்படுவேனாக!''

மூஸா இப்ன் உக்பாவின் அறிவிப்பின்படி அபூஸுப்யான், ஸப் வான், ஹாகிம் இப்ன் ஹஸாம் முதலான குறைஷித் தலைவர்கள் யுத்த வரிசைகளின் பின்னால் நின்றவர்களாக யார் வெல்வார் எனக் காண விழைந்தோராய் இருந்தனர். யுத்த விவகாரங்களை அறிந்து வரவென ஸப்வான் இப்ன் உமையா தனது அடிமைகளில் ஒருவரை அனுப்பிய தாக கூறுவார் உர்வா இப்ன் அல்-ஸுபைர். முஸ்லிம்கள் தப்பி ஓடிக் கொண்டிருப்பதைக் கண்ட அபூஸுஃப்யான் 'கடலை அடையும் வரை இவர்களது ஓட்டம் தடைப்படாது' எனக் கூறியதாகவும், தனது அம்பறாத் தூணியில் அவர் குறிபார்க்கும் அம்புகளை வைத்திருந்தார் எனவும் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். எவ்வாறாயினும் ஹதீஸ் ஆய்வு முறைகளில், மூஸா இப்ன் உக்பா, உர்வா இப்ன் இஸ்ஹாக் ஆகி யோரின் அறிவிப்புகள் ஸஹீஹ் எனக் கொள்ளப்பட மாட்டா. ஏன் எனில் அவை முர்ஸல். என்றாலும் மூவரது அறிவிப்புகளும் ஒன்றை ஒன்று ஒத்துப் போவதால் அவை மக்கத்துத் தலைவர்களது மனோ பாவங்களைச் சித்தரிக்கும் வரலாற்றுக் காட்சியொன்றினைத் தருகின் றன. அவர்களுள் ஸப்வான் இன்னமும் ஒரு முஷ்ரிக்காக இருந்தார். அபூஸுஃப்யான் அவ்வேளை தான் சத்தியத்தின் பால் இதயம் ஈர்க் கப்பட்டு (அல்-தவ்பா 9:60) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்.

### போர்க் களம்

முஸ்லிம்களின் முன்னரேயே ஹவாஸின் வாதி ஹுனைனை அடைந்து கொண்டனர். தமது தரிப்பிடங்களைக் கவனமாகத் தேர்ந்துகொண்ட அவர்கள் படையினரைப் பல திக்குகளிலும் பரவச்செய்து, மலை இடுக்குகள், கணவாய்கள், பள்ளத்தாக்குகள், வளைவுகள் எனப் பல இடங்களிலும் சிதறி இருக்கச் செய்தனர். போர்த் திட்டங்கள் சரிவர தீட்டப் பெற்றிருந்தன. ஹுனைனின் சரிவான வெளி நோக்கி முஸ்லிம்கள் இறங்கும் போது திகைப்பூட்டும் வகையில்

அவர்களைச் சூழ்ந்து அம்பு மாரி பொழிவது அவர்களது நோக்கமாக இருந்தது. இது காலவரையில் யுத்த கைங்கரியத்திலும் பராக்கிரமத் திலும் எண்ணிக்கையிலும் மிகைத்த தன்மைப் போன்ற யாருடனும் முஸ்லிம்கள் பொருதியதில்லை என ஹவாஸின் தலைவர் மாலிக் அன்-நஸ்ரி தனது வீரர்களிடம் எடுத்துரைத்துப் போதிய உற்சாகமளித் திருந்ததால் அவர்களது மனோதிடம் உயரியதாக இருந்தது. முஸ்லிம் அணியில் காலித் இப்ன் அல்-வலீதின் தலைமையில் குதிரைப்படை முதலில் வந்தது. அதில் முன்னணியில் இருந்தோர் பனூ ஸலீம். அவர்களின் பின்னால் ஏனைய படைப் பிரிவினர் வந்தனர்.

யுத்தத்தின் ஆரம்பத்தில் ஹவாஸின்களின் பிரபல்யமிக்க முன்னணி வீரர்கள், முஸ்லிம்கள் முன்னேறி வருவதை எதிர்த்து நிற்க இயலாது தமது உடைமைகள் சிலதையும் கைவிட்டுப் பின் வாங்கினார்கள். ஹவாஸின் முறியடிக்கப்பட்டு விட்டனர் என்ற எண்ணத்தில் அவர்கள் விட்டுச்சென்ற உடைமைகளைக் கைப்பற்றிக் கொள்ளத் தலைப்பட்ட னர் முஸ்லிம் படையினர். என்றாலும், பள்ளத்தாக்கின் பல திசை களிலிருந்தும் அம்பு மாரி பொழிவதன் மூலம் முஸ்லிம்களைத் திகைப் புக்குள்ளாக்கினர் ஹவாஸின்கள். முஸ்லிம்களில் சிலர் போதுமான ஆயத்தங்கள் இல்லாமலேயே களத்துக்கு வந்திருந்தனர்; சிலர் தலைக் கவசம் ஏதும் இல்லாமல் இருந்தனர்; இன்னும் சிலர் போதியளவு ஆயுதங்கள் இல்லாமல் வந்திருந்தனர்; இன்னும் சில இளைஞர்கள் யுத்த ஆயத்தங்களில் தக்க சிரத்தை காட்டி இருக்கவில்லை. அனைத் துக்கும் மேலாகத் திகைப்பூட்டும் வகையில் எல்லாத் திசைகளிலும் இருந்து எறியப்பட்டு வந்த எண்ணிறந்த அம்புகளினால் முஸ்லிம்கள் அதிர்ச்சித் தாக்குதலுக்கு உள்ளாகினர். ஹவாஸின் வீரர்களின் இலக்கு வழுவாத அம்பு வீச்சு மிகப் பலமாக இருந்தது. களத்தில் நேரடி சாட்சியாக இருந்த ஸஹாபி, பராஆ இப்ன் ஆஸிப்ஃ கூறுவார்: ‘ஒவ்வொரு அம்பும் ஒருவரைத் தாக்கவே செய்தது. அம்பு எய்வதில் அவர்கள் எவ்வித தவறும் செய்யவில்லை’. முஸ்லிம்களின் குதிரைப் படையும் பின்னால் வந்த காலாட்படையும் தாக்குதலுக்கு எனத் திறந்துவிடப் பட்டிருந்தன. ‘துலகா’வும் நாட்டுப்புற அரபிகளும் தப்பியோடினர். அவர்களைப் பின் தொடர்ந்து தப்பியோடினர் ஏனைய வீரர்கள். இறுதியில் நபிகளாரின் உறுதியான நிலைப்பாடு காரணமாக அவருடன் ஒரு சிறு குழுவினரே எஞ்சியிருந்தனர்.

முதல் கட்டத்தில் போராட்டம் அதிகாலை பஃஜ்ர் முதல் இரவில் இஷா வரை நடந்து இரவிலும் தொடர்ந்தது. அவ்வேளை முஸ்லிம்கள் தாக்குதலுக்குள்ளாகித் தப்பியோடினர். பகல் பொழுதுகளில் உஷ்ணம்

கடுமையாக இருந்தது. மர நிழல்களை நாடியிருந்த முஸ்லிம்கள் போர் துவங்கியதும் எரிக்கும் கதிரவனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நிலப்பரப்பு மணல் பரவியதாக இருக்கவே தூசுப் படலங்கள் முகத்தை மறைக்கலாயின. பார்வை மட்டுப்படுத்தப்பட்டது. அவர்களில் ஒருவர் கூறினார்: 'எமது முகங்களின் முன்னால் எமது கரங்களைக் காணமுடியவில்லை!' மறுபுறம் ஹவாஸின் மலை இடுக்குகளிலும் வளைவுகளிலும் பதுங்கியிருந்த தமது துருப்பினரை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

குதிரைகளைக் கொண்டிருந்திருக்க முடியுமாயினும் நபிகளார் தமது கோவேறு கழுதை 'தல்தல்'லின் மீதே சவாரி செய்தார்கள். முஸ்லிம்கள் சிந்தையில் உறுதியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை இதன் மூலம் உணர்த்த முடிந்தது. ஏனெனில், குதிரைகளைப் போலன்றி கழுதைகள் தாக்குதல் நடாத்திப் பின் வாங்குதற்கு அல்லது தப்பிச் செல்வதற்கு உகந்தவை அல்ல.

தப்பியோடிக் கொண்டிருந்த முஸ்லிம்களை நோக்கி நபிகளார் உறுதியாக நிற்கும்படி குரல் கொடுத்தார்கள்: 'நிச்சயமாகவே நான் இறைத்தூதராவேன்! நான் அப்துல் முத்தலிபின் மகன்!' எதிரிகளின் மத்தியில் நபிகளார் சென்று விடாத வகையில் அல்-அப்பாஸும் அபூ-ஸுஃப்யான் இப்ன் அல்-ஹாரிஸும் கழுதையின் கடிவாளத்தைப் பற்றிப் பிடித்திருந்தார்கள். முஸ்லிம்களில் சிலர் கொஞ்ச தூரமே பின்வாங்கி இருந்தனர்.

பெரும்பாலானோர் போராட்டத்திலிருந்து தப்பியோடி வெகு தூரம் சென்று விட்டனர். நபிகளாரைச் சூழ்ந்தவர்களாக உறுதியாக நின்றிருந்தவர்கள் பத்து அல்லது பன்னிரண்டு தோழர்களே. அவர்களுள் அல் அப்பாஸ், அபூ-ஸுப்யான் இப்ன் அல்-ஹாரிஸ், அபூ-பக்ர், உமர், அலீ ஆகியோர் இருந்தனர். உரத்த குரல் கொண்டிருந்தவர் அல் அப்பாஸ். மக்களைத் திரும்பி வரும்படி குரல் எழுப்புமாறு நபிகளார் அவரைப் பணித்தார்கள். பின்னர் அண்ணலார் அன்ஸார்களையும் மரத்தின் கீழ் தமக்கு வாக்களித்த அஸ்ஹாப் அல்-ஷஜராக்களையும், பனூ அல்-ஹாரிஸ் இப்ன் கஸ்ரஜ்களையும் அழைத்தார்கள். என்பது முதல் நூறு பேரளவு படிப்படியாகத் திரும்பி வந்தனர். அவர்கள் ஹவாஸினுடன் போராடினர்.

புதியதொரு சுற்று அங்கு ஆரம்பமானது. தைரியம், திடசங்கற்பம், விசுவாசம், இறைவன் மீதான நம்பிக்கை ஆகிய உணர்வுகளனைத்தும் ஒன்றிணைந்ததாக அமைந்தது அந்தச் சுற்று. வெற்றியை யாசித்து

*இறைவனிடம் பிரார்த்தித்தார்கள் நபிகளார்: ''நாங்கள் அழிவதை நீ நாடுவாயாயின், இன்றைய நாளின் பின்னர் நீ வழிபடப்பட மாட்டாய்''. எதிரிகள் அண்மித்து வந்தபோது, அன்னார் கழுதையை விட்டு இறங்கி நடந்தே முன் சென்றார்கள். போராட்டம் தீவிரமடைந்த நிலையில் தைரியமும் உறுதியும் நிறைந்தனராக இருந்த காரணத்தால், இறைத்தூதரிடமே தஞ்சமடைந்தனர் முஸ்லிம்கள். தப்பியோடிய முஸ்லிம்கள் இதனை கண்ணுற்றதோடு அல்-அப்பாஸ் அழைப்பதைச் செவியேற்கவும் செய்தனர். உடனே அவர்கள் 'லப்பைக்','லப்பைக்' எனக் குரலெழுப்பியவர்களாக மீண்டு வந்து நபிகளாரைச் சேர்ந்து கொண்டனர். தமது ஒட்டகைகளைத் திருப்பிக் கொள்ள இயலாது போனவர்கள், அவற்றை விட்டு ஆயுதங்களை மாத்திரம் எடுத்துச் சென்றனர். போராட்டம் மீண்டும் தீவிரம் அடைந்தது. 'இதுதான் யுத்தம் வன்மம் பெரும் கட்டம்' எனக் கூறியவர்களாக நபிகளார் சிறிது மண் அல்லது கூழாங்கற்களை அவிசுவாசிகளின் மீது எறிந்து கூறினார்கள்: 'இந்த முகங்கள் உருக்குலைந்து போகட்டும்! முகம்மதின் இறைவன் பெயரால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர்'.*

> ''பின்னர் அல்லாஹ் தன்னுடைய ஸகீனா எனும் நிம்மதியைத் தன் தூதர் மீதும் (அவனை) நம்பிக்கை கொண்டவர்கள் மீதும் இறக்கி வைத்தான். இன்னும் கண்களுக்கு புலப்படாத வகையிலான படைகளையும் அவன் இறக்கி வைத்தான். இன்னும் நிராகரித்துக் கொண்டிருந்தோரை வேதனை செய்தான். இது நிராகரிப்போருக்கான கூலியாகும்.'' (அத்-தவ்பா 9:26)

*இந்த இரண்டாவது கட்டத்தில் ஹவாஸினாலும் தகீபினாலும் நீடித்து நிற்க இயலவில்லை. அவர்கள் யுத்த களத்தில் இருந்து தப்பியோடினார்கள். ஹுனைனில் இருந்து வெகுதொலைவு வரை அவர்களை முஸ்லிம்கள் துரத்திச் சென்றார்கள். யுத்த களத்தில் பலரை அவர்கள் இழந்திருந்தனர். பெரும் செல்வங்களை விட்டுச் சென்றனர். தமது பின்வாங்குதலை ஒழுங்குபடுத்திக் கொள்ள இயலாது போகவே ஹவாஸின் தமது சிறுசிறு படைக் குழுக்களை ஆங்காங்கே விட்டுச் சென்றனர். கைவிடப்பட்ட அக்குழுக்களை முஸ்லிம்கள் தமது அம்புகளைக் கொண்டு இலகுவாக வீழ்த்தி விட முடிந்தது. ஹவாஸின் பின்வாங்கிச் செல்லும் போது அடைந்த இழப்புகள், யுத்தகளத்தில் அவர்கள் இழந்ததை விடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.*

*தப்பியோடும் எதிரிகளைத் துரத்திச் சென்று கொல்லும்படி நபிகளார் பணித்தார்கள். அதன் மூலம் அவர்கள் மீண்டும் ஒன்றிணைந்து*

தாக்குதல் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தகர்த்துவிடலாம். முஷ்ரிக் ஒருவரைக் கொலை செய்யக்கூடிய எவரும் அவரது உடைமைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. பெண்ணொருவர் கொல்லப்பட்டிருப்பதைக் கண்ட நபிகளார், பெண்கள் கொல்லப்படு வதைத் தடுத்துக் கூறினார்கள்: 'இவள் உங்களோடு போராடி இருக்க முடியாது'. சில முஸ்லிம்கள், சிறார்களைக் கொல்வதாக அறிந்த நபிகளார் அதனைத் தடுத்தார்கள். 'அவர்கள் முஷ்ரிகூன்களின் பிள்ளை கள் அல்லவா?' என அவர்கள் தெரிவித்தபோது, நபிகளார் கூறினார் கள்: 'உங்களில் சிறந்தவர்களும் முஷ்ரிகூன்களின் பிள்ளைகள் அல் லவா? யாருடைய கையில் முஹம்மதின் ஆன்மா இருக்கின்றதோ! அவன் பெயரால், பிறக்கும் ஒவ்வொருவரும் எவ்வித களங்கமும் இல்லாத இயற்கை நிலையான 'பித்ரா'விலேயே இருக்கின்றார், தான் பேசக் கற்கும் வரை!'

முஸ்லிம்களில் தப்பியோடிய எவரையும் நபிகளார் கண்டிக்கவில் லை. உம்ம் ஸுலைம் அல்-அன்ஸாரியா தப்பியோடிய 'துலகா'க்கள் கொல்லப்பட வேண்டும் என நபிகளாரிடம் கூறிய வேளை அன்னார் கூறினார்கள்: 'மாறாக அல்லாஹ் என்னை அதிலிருந்தும் காப்பான்!' யுத்தத்தின் போது தனது பாதுகாப்புக்கென உம்ம் ஸுலைம் பிச்சுவா ஒன்றைத் தம் வசம் கொண்டிருந்தார்.

இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்பின்படி தகீபின் பனூ மாலிக்கில் இருந்து மாத்திரம் ஹவாஸின்கள் எழுபத்தி இரண்டு பேர் கொல்லப் பட்டனர். தகீபுடன் கூட்டுச் சேர்ந்திருந்த அஹ்லாப்பிலிருந்து இருவர் மட்டுமே உயிரிழந்தனர். ஏனெனில் அவர்கள் யுத்த களத்தில் இருந்து விரைவாகவே வெளியேறியிருந்தனர். ஹவாஸின் முறியடிக்கப்பட்ட போது பனூ மாலிகின் முன்னூறு பேர் அவ்தாஸில் வைத்து அல் ஸுபைர் இப்னுல் அவ்வாம் தலைமையில் கொல்லப்பட்டனர். ஏனைய பலரும் கூட அவ்தாஸில் மரணித்தனர். அபூ தல்ஹா மாத்திரம் அவர்களில் இருபது பேரைக் கொன்று அவர்களது உடைமைகளைக் கைப்பற்றிக் கொண்டார். பனூ நஸ்ர் இப்ன் முஆவியாவின் நூற்றுக் கணக்கானோர் வீழ்ந்தனர். ஹவாஸின்னின் மிக முக்கியத்துவம் வாய்ந்த கிளையான பனூ ரிஆப்பும் பல இழப்புகளைக் கண்டது.

ஹவாஸினதும் தகீபினதும் இழப்புகள் பாரியனவாக இருந்தன. காயப்பட்டிருந்தோரினது எண்ணிக்கையும் அதிகூடியதாக இருந்தது. ஸஈத் இப்ன் முஸய்யபின் அறிவிப்புகளின் படி கைதுசெய்யப்பட்ட வர்கள் ஆறாயிரம் பேர். இவர்களுள் பெண்களும் குழந்தைகளும் கூட

அடங்குவர் என்பார் உர்வா. இப்ன் இஸ்ஹாக்கும் அவ்வாறே கருது கின்றார். அவர்கள் பெரும் தொகையினர் என்பதை விவரிக்கும் வகையில் இமாம் அல்-ஸுஹ்ரீ கூறினார்: 'மக்காவின் தோட்டப் புறங்கள் எல்லாம் இவர்களால் நிறைந்திருந்தன'. பணமாக நான்கா யிரம் அவ்கியா வெள்ளி கிடைத்தது; இருபத்தி நான்காயிரம் ஒட்ட கங்கள்; நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட ஆட்டு மந்தை. குதிரைகள், மாடுகள், கழுதைகள் என்பனவும் பெரும் தொகையாகக் காணப் பட்டன. என்றாலும், இந்த மிருகங்களுள் எவ்வளவு தொகையை முஸ்லிம்கள் யுத்தப் பொருட்களாகப் பெற்றுக் கொண்டார்கள் என் பதை மூலாதாரங்கள் குறிக்கவில்லை. தாம் தாயிபில் இருந்து திரும்பி வரும்வரை இந்த பொருட்கள் அனைத்தும் ஜரானாவில் வைக்கப்பட வேண்டும் என நபிகளார் பணித்தார்கள்.

முஸ்லிம்களின் தியாகம் பற்றிக் குறிப்பிடும் போது அவர்களுள் நால்வர் வீரமரணம் எய்தியிருந்தனர் எனக் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். பலர் காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர். அவர்களுள் அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ, அப்துல்லாஹ் இப்ன் அபூ அவ்பா, காலித் இப்ன் அல் வலீத் ஆகியோரும் அடங்குவர்.

முஸ்லிம்களின் இழப்புகள் பாரியனவாக இல்லாமைக்குக் காரணம் அவர்கள் தப்பிச் சென்ற ஆரம்ப சுற்றின் போது நடந்த சண்டை பெரிதும் அம்புகள் வீசப்படுவதற்கு மாத்திரம் மட்டுப் படுத்தப்பட்டிருந்தமை யாகும். இரண்டாம் சுற்றில் நேரடி மோதல்கள் பலத்தனவாக இருந்தன. இதன்போது ஹவாஸின்களும் தகீபும் கண்ட இழப்புகள் பாரியன. முஸ்லிம்களின் இழப்புகள் எனக் கருதப்பட்டவை அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மாத்திரமே. அவற்றிலிருந்தும் அவர்கள் சொஸ் தப்பட்டுக் கொண்டனர்.

முஸ்லிம் படையினர் ஹுனைனில் இருந்து வெகுதூரம் எதிரி களைத் துரத்திச் சென்று தோற்கடித்தமை; இந்த தீர்க்கமான போராட் டத்தின் தாக்கங்களிலிருந்து ஓய்வுகள் ஏதும் நாடாமல் உடனடியாகவே தாயிப் முற்றுகைக்காக புறப்பட்டுச் சென்றமை ஆகியன அவர்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் இருந்தமையைப் புலப்படுத்துகின்றது. பத்ர் போலவே இந்த யுத்தமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளப் பட்டது. ஏனெனில் ஹவாஸின் போலவே முஸ்லிம்களும் தமது வளங் கள் அனைத்தையும் இதில் உட்படுத்தியிருந்தனர். தாம் ஒரு நிலைப் பாட்டுக்கு வரும் வரை அராபியரும் நாட்டுப்புறத்தாரும் யுத்தம் யாருக்குச் சார்பாகச் செல்கிறது என்பதைக் கண்டு கொள்வதிலேயே

அவதானமாக இருந்தனர். ஹவாஸின் தோற்கடிக்கப்பட்டதும் புதிய மதத்தை ஏற்றுக் கொள்ளும் பிரகடனத்துடன் தூதுக் குழுக்கள் வர லாயின.

## தப்பியோடும் எதிரிகளைத் துரத்தி நக்லா, அவ்தாஸ் பகுதிகளுக்குச் செல்லல்

அல்-ஹவாஸின் தோற்கடிக்கப்பட்டு மலைகளிலும் சமவெளி களிலும் சிதறிச் சென்றிருந்தனர். மாலிக் இப்ன் அவ்ஃப் அந்-நஸ்ரி தாயிப் கோட்டைகளுக்குள் புகுந்து கொண்டார். ஏனையோர் தாயிபுக் கும் ஹுனைனுக்கும் இடையிலான அவ்தாஸ் வெளியில் முகாமிட்ட னர். தகீப்களின் பனூ கீராஹ்வின் முகாம் ஸிப்வாஹா, அல்-ஷராயி பிரதேசங்களுக்கு இடைப்பட்ட நக்லாவில் அமைக்கப்பட்டது.

முஸ்லிம் குதிரைப்படை ஹவாஸின்களின் பின்னால் நக்லாவை நோக்கிச் சென்றது. நபிகளார் அபூ ஆமிர் அல்-அஷ்அரியை அவ்தா ஸுக்கு அனுப்பினர். அங்கு அவர் யுத்தம் செய்து துரைத் இப்ன் அல்ஸிம்மாவைக் கொன்றார். இதன்போது காயத்துக்கு உள்ளான அபூ ஆமிர் பின்னர் இறந்து போனார். அவர் மரணிக்க முன்னர் அபூ மூஸா அல்-அஷ்அரியைத் தனது பிரதிநிதியாக நியமித்திருந்தார். தனது ஸலாத்தைக் கூறி நபிகளாரிடம் தனக்குப் பாவ மன்னிப்புக் கோரு மாறு அபூமூஸா வேண்டப்பட்டிருந்தார். அபூமூஸா தன்னிடம் வந்த வேளை நபிகளார் அபூ ஆமிருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களுள் ஒருவர் அல்-ஷைமா. நபி களாரின் வளர்ப்புச் சகோதரி. இப்ன் இஸ்ஹாக்கினதும் ஏனையவர் களதும் வரலாற்று அறிவிப்புகள் இதற்கு வலுவூட்டுவனவாக அமை கின்றன. பனூ ஸஅதில் தமது சிறிய வயதின் போது நபிகளார் கடித்த தால் ஏற்பட்ட காயத்தை காட்டியவேளை அவர் கூறியது உண்மையே எனக் கண்ட நபிகளார் அவரை மிகவும் கண்ணியமாக நடாத்தினார் கள். பலவீனமான அறிவிப்புகளாக இருந்தாலும், அவை ஒன்றை யொன்று ஒத்துச் செல்வதனால் வரலாற்று ஆதாரமாகக் கொள்ளக் கூடியன சில நபிகளாரின் வளர்ப்புத் தாயார் ஹலீமா அல்-ஸஅதியா நபிகளாரிடம் வந்ததாகவும் அவர் அமர்ந்துகொள்ள அண்ணலார் தமது போர்வையை விரித்துக் கொடுத்ததாகவும் கூறுகின்றன.

# தாயிப்

ஹவாஸின்களை முறியடித்து நக்லா, அவ்தாஸ் பிரதேசங்கள் வரை அவர்களைத் துரத்திச் சென்ற முஸ்லிம்கள் பின்னர் தாயிப் நோக்கிச் சென்றனர். அதனையே தகீபும் மாலிக் இப்ன் அவ்ப்ஃ அந்-நஸ்ரீயும் தமது பாதுகாப்புத் தளமாகக் கொண்டிருந்தனர். தாயிபின் கோட்டைக் கதவுகள் தவிர்த்து அதனுள் நுழைய வேறு வழிகளேதும் இருக்க வில்லை. ஒரு வருட கால அளவுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் அரண்களுக்குள் கொண்டு சென்ற தகீப், அரண்களின் கதவுகளை மூடி நீண்ட காலத்துக்குத் தாக்குப்பிடிக்கும் வகையில் யுத்த ஆயத்தங்களில் ஈடுபடலாயினர். ஷவ்வால் இருபதில் முஸ்லிம்கள் தாயிபை அடைந்து கொண்டனர். ஹுனைன், நக்லா, அவ்தாஸ் தாக்கு தல்கள் ஷவ்வால் பத்தில் ஆரம்பித்து ஒரு வாரகாலம் நீடித்தன. ஆக, முஸ்லிம் படையினருக்குப் போதிய ஓய்வு கிடைத்திருக்கவில்லை.

உர்வா இப்ன் ஸுபைர், மூஸா இப்ன் உக்பா ஆகியோரின் அறிவிப்பு களின் படி முஸ்லிம்கள் பத்து நாட்களுக்கும் மேலாகத் தாயிபை முற்றுகையிட்டிருந்தனர். உர்வாவின் மற்றுமொரு அறிவிப்பின்படி முற்றுகை இரண்டு வாரங்கள் நீடித்தது. இந்த அறிவிப்புகள் அனைத்தும் முர்ஸல். எனவே சான்றுகளாகக் கொள்ள இயலாதவை. என்றாலும் உர்வாவும் மூஸாவுமே நம்பத் தகுந்த மகாஸீ ஆசிரியர்களாக உள்ளனர். அவர்களது அறிவிப்புகள் வரலாற்று நிகழ்வுகளைச் சரிவர வரிசைப் படுத்தித் தருகின்றன. மேலும் பல அறிவிப்புகள் முற்றுகை நீடித்த காலம் இருபத்தைந்து நாட்கள், ஒரு மாதம், நாற்பது நாட்கள் எனப் பலபடக் கூறுகின்றன. ஆனால் அவை வரலாற்றின் ஏனைய நிகழ்வு களது கால அளவுகளோடு சமனப்படுவதாக இல்லை. நபிகளார் அல்-ஜரானாவில் பத்து இரவுகள் தங்கிய பின்னர், துல்-கஃதா முடிவடைய

ஆறு நாட்களின் முன்னர் மதீனாவை வந்தடைந்தார்கள். பின்னர் அன்னார் உம்ரா செய்தார்கள். தாயிப் முற்றுகை கைவிடப்பட்டு குறைந்தது பதினெட்டு நாட்களை இது எடுத்திருக்கும்.

தென்புறத்தால் நகரை அடையும் பழைய பாதையூடாக முஸ்லிம்கள் தாயிபை அடைந்தனர். வழியில், நக்லா அல்-யமானியா, கர்ன் அல்மனாஸில் பகுதிகளையும் தாண்டி வந்தனர். இவை மக்காவிலிருந்து என்பது கிலோமீட்டர் தொலைவிலும் தாயிபிலிருந்து ஐம்பத்தி மூன்று கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளன. பின்னர் அவர்கள் தாயிபின் சமவெளிகளில் ஒன்றான முலைஹைத் தாண்டி, தாயிபின் தெற்கே பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள புஹ்ரத் அல்-ருகாஹ் ஊடாக சென்றனர். மக்கா தாயிபுக்கிடையில் தொன்னூறு கிலோ மீட்டர் தூரமே கொண்ட நவீன பாதைகளை அவதானிக்கும் போது அவர்கள் கடந்து வந்த பாதை மிக நீண்டதாகத் தெரிகின்றது. தாயிபின் மீது வடபுறத்தில் இருந்து படை எடுப்பது சிரமமான காரியமாகும். அப்பகுதி நில அமைப்பில் காணப்படும் குழப்பகரமான ஏற்ற இறக்கங்கள் அதற்கு இயற்கையாகவே அரணாக அமைந்துள்ளன. தாயிபின் கிழக்கிலும் தெற்கிலும் நிலைகொண்டிருந்த மேலதிக ஹவாஸின் படையினர் நகரை நெருங்குவதைத் தடுக்கவே நபிகளாரும் விழைந்தார்கள்.

முஸ்லிம்கள் தாயிபின் கோட்டையை அண்மியதாகவே தமது முகாமை அமைத்துக்கொண்டனர். தகீப்களின் அம்புகளின் தாக்குதலுக்கு உட்படும் தூரத்திலேயே அவர்கள் இருந்ததனால், சிலர் மீது அம்புகள் வீழலாயின. எனவே அவர்கள் வேறு இடத்திற்கு மாறினார்கள். பின்னர் அங்கு பள்ளிவாசல் ஒன்றினை அமைத்துக் கொண்டனர். இன்று அது மஸ்ஜித் அப்துல்லாஹ் இப்ன் அப்பாஸ் என்று அழைக்கப்படுகிறது. முன்னைய காலங்களில் பள்ளிவாசலின் தென்மேற்குப் புறமாக அமைந்திருந்தது தாயிப்.

சேய்மையிலிருந்து அம்புகள் எறிந்து கொள்வதற்கு மட்டுப்பட்டிருந்தது போராட்டம். முஸ்லிம்கள் தோலால் மூடப்பட்ட, சக்கரங்கள் இணைக்கப்பட்ட, கனமான பலகையொன்றினால் வடிவமைக்கப்பட்ட ஒரு சாதனத்தைக் கோட்டைச் சுவர்களை நெருங்கிக் கொள்ளவெனப் பயன்படுத்தினார்கள். தற்போது கவச வாகனங்களைக் குறிக்கும் ‘தப்பாபா’ என்பது தான் அதன் பெயராகும். எறியப்படும் அம்புகளில் இருந்து தப்பிக்கொள்ளவென உருவாக்கப்பட்ட அந்த சாதனத்தின் மீது தகீப் நன்கு சூடாக்கப்பட்ட இரும்புத் துண்டங்களை எறிந்

தார்கள். அதனால் தப்பாபா தீப்பற்றி எரிந்தது. அதன் கீழிருந்த வீரர்கள் வெளியே வர, அவர்கள் அம்புகளால் தாக்கப்பட்டனர். முஸ்லிம்கள் கோட்டை ஒன்றினைத் தாக்குவதற்கு அத்தகு சாதனங்களைப் பயன் படுத்திய முதலாவது சந்தர்ப்பம் இது. வாதி பீஷாஹ் பள்ளத்தாக்கின் குன்றுகள் மீது இன்னமும் எச்சங்களைக் கொண்டுள்ள ஜர்ஷ் அல்-யமானிய்யா, அத்தகு தப்பாபா, கவண், தபூர் முதலாய யுத்த சாதனங் கள் உருவாக்கும் பிரசித்தம் வாய்ந்த தளமாக இருந்தது. தாயிபின் பாதுகாப்புக்குப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் தகீப் தலைவர் களில் இருவர் ஜர்ஷ் சென்று இந்த சாதனங்களை உருவாக்கும் முறை களைக் கற்று வந்திருந்தனர்.

முஸ்லிம்கள் எவ்வாறு இந்த யுத்த சாதனங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பது குறித்த ஓர் அறிவிப்பில் காலித் இப்ன் ஸயீத் இப்ன் அல்-ஆஸ், ஜர்ஷிலிருந்து இரண்டு கவண்களையும், இரண்டு தப்பாபாக்களையும் கொண்டு வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஓர் அறிவிப்பு ஸல்மான் அல்-பாஃரிஸி தானாகவே இந்தக் கவண்களை உருவாக்கினார் எனக் கூறுகின்றது. மொத்தத்தில் முஸ்லிம் கள் இத்தகு சாதனங்களைப் போதியளவு கொண்டிருக்கவில்லை என் பது தெளிவாகின்றது.

தகீப்களின் மீது கூடுதலான அழுத்தத்தைச் செலுத்தும் முகமாகத் தாயிபைச் சுற்றி வர இருந்த திராட்சைத் தோட்டங்களையும் மரங் களையும் தீயிட்டுக் கொளுத்தி விடும்படி நபிகளார் பணித்தார்கள். அவ்வாறு ஏதும் செய்துவிட வேண்டாம் என தகீப்கள் இறைத்தூத ரிடம் வேண்டிக் கொண்டனர். தகீப்களின் மன உறுதியை இந்த பணிப்புரை குலைத்து விட்டிருந்ததனால் நபிகளார் அந்த முயற்சியைக் கைவிட்டார்கள்.

இது போலவே, நபிகளார் தாயிபின் அடிமைகளுக்கு அழைப்பு விடுத்தார்கள். யாரெல்லாம் கோட்டையைவிட்டு வெளியேறி முஸ் லிம்களை வந்தடைந்து கொள்கின்றார்களோ, அவர்கள் எல்லோரும் விடுதலையை ஈட்டிக் கொள்வார்கள் எனப் பிரகடனம் செய்யப்பட் டது. அபூபக்ரா அல்தகபீ உட்பட இருபத்தி மூன்று அடிமைகள் கோட் டையை விட்டு வெளிவந்து இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். நபிகளார் அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். பின்னைய காலங்களில் இந்த முன்னாள் அடிமைகளின் முன்னாள் எஜமானர்கள் இஸ்லாத்தின் பாலானார்கள். அப்போதும்கூட இந்த முன்னாள் அடி மைகளை அவர்களிடம் நபிகளார் ஒப்படைக்காது விட்டார்கள்.

முஸ்லிம்களில் பலர் காயங்களுக்கு உள்ளாகினர். பன்னிரண்டு பேர் வீரமரணம் எய்தினர். கோட்டையின் சுவர்கள் நன்கு பாதுகாக்கப் பட்டிருந்ததன் காரணமாக முஷ்ரிகூன்களில் மூவர் மாத்திரமே கொல் லப்பட்டனர்.

ஒரு ஸஹீஹ் அறிவிப்பின்படி தகீபைப் பலவீனப்படுத்துவது தான் நபிகளாரின் நோக்கமாக இருந்ததே தவிர தாயிபைக் கைப்பற்றிக் கொள்வதல்ல. முஸ்லிம்களால் கையகப்படுத்தப்படக் கூடியவர்களா கவே அவர்கள் உள்ளனர் என்பதையும் எந்நேரத்திலும் அவர்கள் மீது ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்படலாம் என்பதையும் தகீபிற்கு உணர்த்துவதே முக்கிய நோக்கமாக இருந்தது. முஸ்லிம்கள் பலர் வீர மரணம் எய்திவிட்ட சூழலில் நபிகளார் தமது படையினரை மேலும் சிரமங்களுக்கு உட்படுத்த விரும்பவில்லை. நன்கு பாதுகாக்கப்பட்ட நகரமான தாயிப் எல்லாத் திக்குகளிலும் இஸ்லாத்தால் சூழப் பெற்றி ருந்தது. அண்மையில் அல்லது சற்றுப் பிந்தியாவது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழிகள் எதுவும் இல்லை. முன்னர் குறைஷியர் மீது போலவே, தகீப் மீதும் அக்கறை மிகுந்தவர்களாக இருந்தனர் நபிகளார். புத்தி சாதுர்யம் மிக்கவர்களான தகீப் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது, இஸ்லாத்துக்குப் பெரும் பலத் தையும் நன்மைகளையும் கொண்டுவரும். முஸ்லிம்கள் மக்காவில் ஆதரவற்றவர்களாக இருந்த வேளையிலேயே தகீப்கள் மத்தியில் இஸ் லாத்தைப் பரப்ப முயன்றிருந்தனர் நபிகளார். அவ்வேளை அவர்கள் நபியவர்களை நிராகரித்து சொல்லொணாத் துயரங்களையும் இழைத்த னர். அவ்வேளையிலும் கூட அவர்கள் நேர்வழி பெற வேண்டும் என்றே நபிகளார் பிரார்த்தித்தார்கள். தாயிப் முற்றுகையின் போது தோழர்கள் சிலர், தகீபைச் சபிக்குமாறு அண்ணலாரை வேண்டினார் கள். அவ்வேளை நபிகளார் பிரார்த்தித்தார்கள்: ''யா அல்லாஹ்! தகீபுக்கு நேர்வழி காட்டுவாயாக!''

ஆக, நபிகளார் தமது தோழர்களிடம் முற்றுகையைக் கை விடுமாறு வேண்டிக் கொண்டது ஆச்சரியத்திற்குரியதல்ல. படையினர் போராட ஆர்வம் கொண்டிருந்த வேளை, சிற்சிறு மோதல்களை மாத்திரம் அன்னார் அனுமதித்திருந்தார்கள். அது யுத்தம் புரிவது பிரயோசனம் அளிக்கக் கூடியதல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்தி இருந்தது. ஆக, முற்றுகையைக் கைவிட ஆலோசனை வழங்கிய போது அதனைப் படையினர் உடன் ஏற்றுக்கொண்டார்கள். அங்கிருந்து புறப்பட்ட முஸ்லிம் படையினர் துல்-கஃதா ஐந்தாம் நாள் ஜரானாவை அடைந் தார்கள்.

*ஹுனைனில் கிட்டிய பெருந்தொகையான யுத்தப் பொருட்கள் ஜரானாவில் வைக்கப்பட்டிருந்தன. சிறிதளவு வெள்ளி மட்டுமே பகிரப்பட்டிருந்தது. அது தவிர்ந்த ஏனையவற்றின் பங்கீட்டை தாயிப் முற்றுகையில் இருந்து திரும்பி வரும்வரை நபிகளார் பிற்படுத்தி இருந்தார்கள். மேலும் பத்து தினங்கள் பங்கீடு தாமதப்படுத்தப்பட்டது. ஹவாஸின் வருவார்கள்; தமது இஸ்லாத்தைப் பிரகடனப்படுத்து வார்கள் என நபிகளார் எதிர்பார்த்திருந்தார்கள். என்றாலும் ஹவாஸின் களின் வருகை தொடர்ந்தும் தாமதப் படவே, பங்கீடு ஆரம்பிக்கப் பட்டது. அடிப்படை நியதியாக அமைந்தது, யுத்தப் பொருட்களின் 'கும்ஸ்' (ஐந்தில் ஒன்று) ஒதுக்கப்பட வேண்டும் என்பது. அதனைக் குர்ஆனிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப நபிகளார் பங்கீடு செய்யலாகும்:*

> '(இறைநம்பிக்கையாளர்களே!) நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் போரில் பெற்ற வெற்றிப் பொருட்களிலிருந்து நிச்சயமாக அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் அவருடைய உறவினர் களுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக் கும் அதில் ஐந்தில் ஒன்று உரியதாகும்'. (அல்-அன்ஃபால் 8:41)

*மற்ற ஐந்தில் நான்கு பங்குகள் யுத்தத்தில் பங்கு பற்றிய வீரர் களுக்கு உரியதாகும். அவர்கள் மத்தியில் அது சமமாகப் பகிரப்பட வேண்டும். காலாட் படை வீரர் ஒருவருக்கு ஒரு பங்கு. குதிரைப் படை வீரர் ஒருவருக்கு மூன்று பங்குகள், அதில் ஒன்று வீரருக்கு இரண்டு குதிரைக்கு. இதுவே அசையும் ஆதனம் பற்றிய யுத்தப் பொருட்களின் பங்கீட்டு நியதி. அசையா ஆதனத்தைப் பொறுத்தவரையில், அதனை 'இமாம்' (அரச தலைவர்) பங்கீடு செய்யவோ, அரச உடைமை எனக் கொண்டு வைத்துக்கொள்ளவோ முடியும். யுத்தம் மூலமாகக் கிட்டக் கூடிய பொருட்கள் 'கனீமா' ஆக மேற்கூறியவாறு பங்கீடு செய்யப்படு வன. அதுவல்லாத வழிகளில் கிட்டக்கூடிய செல்வம் 'பய்இ' என வழங்கப்படும். அவை அரச தலைவரின் உசிதத்தின் பேரில் பொது நலன் கருதி பங்கிடப்படுவன. அரச தலைவர் தமது முனைப்பில் சிறந்த முறையில் பணியாற்றிய படையினருக்குத் தனது உசிதத்தின் பேரில் அன்பளிப்புகள் அளிக்கலாம். யுத்தப் பொருட்களில் இருந்து ஐந்தில் ஒரு பங்கு எடுக்கப்படுவதற்கு முன்னரோ பின்னரோ அவை கொடுக்கப்படலாம். ஐந்தில் ஒரு பங்கிலிருந்து கூட இது கொடுக்கப் படலாம். தம்மால் கொல்லப்படும் எதிரிகளின் உடைமைகளை அவ் வீரர்களே எடுத்துக் கொள்ளலாம்.*

*ஸஹாபாக்களுள் சிலர் யுத்தப் பொருட்களின் பங்கீட்டு முறை மையை சரிவர விளங்கிக் கொள்ள இயலாதவர்களாக இருந்தனர்.*

சத்தியத்தின் மீது அவர்களது உள்ளங்கள் அமைதி கண்டு கொள்வதற் காக யுத்தப் பொருட்களிலிருந்து ஒரு பங்கு ‘துலகா’க்களுக்கும் நாட் டரபிகளுக்கும் கொடுக்கப்பட்டது. அவர்கள் இஸ்லாத்துக்குப் புதிய வர்களாக இருந்தனர்; அவர்களது விசுவாசம் இன்னமும் உறுதி பெற்றி ருக்கவில்லை. பின்வரும் ஒவ்வொருவரும் நூறு ஒட்டகங்கள் வீதம் பெற்றுக்கொண்டனர்: கதபாஃன் தலைவர்களில் ஒருவரான உயைனா இப்ன் ஹிஸ்ன், தமீம்களின் தலைவரான அல் அக்ரா இப்ன் ஹாபிஃஸ், குறைஷித் தலைவர்களான அல்கமா இப்ன் அலாதா, அல்அப்பாஸ் இப்ன் மர்தாஸ், ஸுஹைல் இப்ன் அம்ர், ஹகீம் இப்ன் ஹஸாம், அபூ ஸுப்ஃயான் இப்ன் ஹர்ப், ஸப்ஃவான் இப்னு உமையா.

இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்பின்படி நூறு ஒட்டகைகள் வீதம் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை பன்னிரெண்டு. அதனை விடக் குறைந்த தொகையைப் பெற்றுக் கொண்ட நால்வரின் பெயர் களையும் அவர் குறிப்பிடுகின்றார். இப்ன் ஹிஷாம், ‘சத்தியத்தின் பால் உள்ளம் அமைதி கொள்ள’ என அன்பளிப்புகள் கொடுக்கப்பட்ட இருபத்தி ஒன்பது பேரைக் குறிப்பிடுகின்றார். ஏனையோர் இருபத்தி மூன்று பேர் என்பர். எவ்வாறாயினும் மொத்த எண்ணிக்கை ஐம்பத்தி யிரண்டாக அமைந்தது.

இந்த அன்பளிப்புகள் அத் தலைவர்களதும் அவர்களைப் பின்பற் றியவர்களதும் உள்ளங்களைக் கவர்ந்தன. இஸ்லாத்தை ஏற்றுக் கொள் ளும் எண்ணமும் அவர்களுள் வளர்ந்தது. ஒரு சிலரைத் தவிர, அவர் கள் அனைவரும் சிறந்த முஸ்லிம்களாகி இஸ்லாத்துக்காகத் தம் உள்ளத்தாலும், செல்வத்தாலும் பெரும் தொண்டாற்றினர். உயைனா இப்ன் ஹிஸ்ன் அல்-பஸரீ தொடர்ந்தும் ஒரு பலவீனமான மனித ராகவே இருந்தார் எனக் கூறுவார் இப்ன் ஹஸ்ம். அனஸ் இப்ன் மாலிக் கூறினார்: ‘‘உலகியல் அம்சங்களுக்காக மக்கள் இஸ்லாத்தை ஏற்றனர். இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் உலகையும் அதன் செல் வங்கள் அனைத்தையும் விட இஸ்லாம் அவர்களுக்குப் பெறுமதி யானதாக மாறியது.’’

சத்தியத்தின் மீதாக உள்ளங்கள் கவரப்பட்ட சிலர், அது அவர்கள் உள்ளங்களில் ஏற்படுத்திய தாக்கங்களை விவரித்தனர்: ஸப்வான் இப்ன் உமையா கூறினார்: ‘அல்லாஹ்வின் தூதர் எனக்குத் தர வேண் டியவற்றைத் தந்தார். அவர் என்னால் அதிகம் அதிகம் வெறுக்கப் பட்டவராக இருந்தவர். என்னால் அதிகம் அதிகம் விரும்பப்படும் ஒருவராக ஆகும் வரை அவர் எனக்கு அன்பளிப்புகள் தந்து கொண்டி ருந்தார்’.

*சத்தியத்தின் பால் உள்ளங்கள் கவரப்பட்ட ஸப்வான் இப்ன் உமைய்யா நபிகளாரிடம் இருந்து அன்பளிப்புகளைப் பெற்றுக் கொள் வதை மிகவும் விரும்புபவராக இருந்தார். ஏதேனும் கிடைத்த போதெல்லாம் இன்னும் அதிகமதிகமாக வேண்டினார். செல்வங்கள் குறித்த இஸ்லாமிய மனப்பாங்கை நபிகளார் அவருக்கு விளக்கி வைத்தார்கள். ஆக, பின்னைய காலங்களில் பொதுத்திறை சேரியில் (பைத்துல்மால்) இருந்து கிட்டும் வருடாந்த சகாய நிதியைப் பெற்றுக் கொள்வதைக் கூட ஸப்வான் விரும்பாது விட்டார். இது சத்தியத்தின் பால் கவரப்பட்டவர்களது உள்ளங்களில் ஏற்பட்டு வந்த மாற்றங் களைக் காட்டுகின்றது. காலங்கள் கழிந்து செல்ல அவர்களது உள்ளங் கள் இஸ்லாத்தின் முக்கியத்துவத்தால் நிரம்பின.*

*ஆரம்பத்தில் அன்பளிப்புகள் அளிக்கப் பெற்றோருள் தாமும் உள்ளடக்கப்படாமை குறித்து முஸ்லிம்களில் சிலர் அதிருப்தி கொண் டோராய் இருந்தனர். தமது நடவடிக்கைகளின் தாத்பரியத்தை நபி களார் அவர்களுக்கு விளக்க வேண்டியதாயிற்று: ''இறைவனின் பெயரால், சிலரைத் தவிர்த்து சிலருக்கு நான் அன்பளிப்புகளை வழங்குகிறேன். என்றாலும் அன்பளிப்புகள் அளிக்கப்பட்டவர்களை விட, அளிக்கப்படாதவர்களையே நான் அதிகம் நேசிக்கின்றேன். நான் சிலருக்கு அன்பளிப்புகளை அளிக்கக் காரணம், அவர்களது உள்ளத் தில் நான் காணும் அமைதியின்மை, விசாரம் என்பனவாகும். நான் ஏனையோரை இறைவன் அவர்களது உள்ளத்தில் பதித்துள்ள திருப்தி யின் பால் விட்டுவிடுகின்றேன்.''*

*நபியவர்கள் கூறினார்கள் : ''இன்னமும் 'குப்ர்'ரை அண்மியவர்களாக (புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களாக) இருப்போரை இஸ்லாத் தோடு உறவாக்கிக் கொள்வதற்காகவே நான் அவர்களுக்குக் கொடுக் கிறேன்.'' மேலும் கூறினார்கள்: ''வேறொருவரை நான் நேசித்தும் கூட, இன்னொருவருக்குக் கொடுக்கின்றேன். ஏனென்றால் அவரை இறைவன் நரகத்தில் எறிந்து விடுவான் என நான் அஞ்சுவதால்.''*

*தமக்கு அன்பளிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை என்பதனால் அன்ஸாரிகள் மனமுடைந்து போயுள்ளனர் என்ற செய்தி நபியவர் களுக்குக் கிடைக்கப்பெற்றது. அவர்களது வாலிபர்களில் சிலர் கூறினார் கள்: ''பிரச்சினைகள் வரும்போது நாங்கள் அழைக்கப்படுகின்றோம்; பொருட்கள் பகிரப்படும் போது அவர்களுக்கே அளிக்கப்படுகின்றன. எமது வாள்களிலிருந்து இன்னமும் குறைஷியரின் இரத்தம் வடிந்து கொண்டிருக்க, அவர் குறைஷியருக்கு அளித்துவிட்டு எம்மை விட்டு*

விடுகின்றார்''. அவர்கள் அனைவரையும் நபிகளார் ஒரு தோல் கூடாரத்திற்கு அழைத்துக் கூறினார்கள்: ''குறைஷி மக்கள் இன்னமும் அவர்களது இஸ்லாத்துக்கு முன்னைய காலத்து அறியாமையையும் ஆபத்துக்களையும் நெருங்கியவர்களாகவே இருக்கின்றனர். நான் அவர்களுக்கு உதவவும் அவர்களது உள்ளங்களை இணங்கச் செய்யவும் முனைகின்றேன். அவர்கள் தங்கள் இல்லங்களுக்கு இந்த உலகத்தின் பொருட்களை எடுத்துச் செல்லும் அதே வேளை, நீங்கள் உங்கள் இல்லங்களுக்கு அல்லாஹ்வின் தூதரைக் கொண்டு செல்வது உங்களுக்குத் திருப்தி தரவில்லையா? இம்மக்கள் ஒரு பரந்த வெளியினூடாகவும் அன்ஸார்கள் மலை முகடுகளூடாகவும் வழிகள் அமைத்துச் சென்றால், நிச்சயமாக நான் அன்ஸாரிகளின் மலை முகட்டுப் பாதையிலேயே செல்வேன்''.

பங்கீடுகளின் பின்னாலிருந்த விவேகம் தெரியவந்ததும், அன்ஸாரிகள் தாம் திருப்தி கண்டதாகப் பிரகடனம் செய்தார்கள். இஸ்லாத்துக்காகவே இவை செய்யப்பட்டுள்ளன. அதன் விசுவாசத்துக்காகவே தாம் தமக்கும், தமது இதயங்களுக்கும் மிக்க விருப்புடையதான அனைத்துச் செல்வங்களையும் தியாகம் செய்திருந்தனர். தமது தலைவரான அல்லாஹ்வின் தூதர் ஏனைய அனைவரிலும் தம்மையே தேர்ந்தெடுத்து, தமது விசுவாசத்தையும் அகீதாவையும் மெச்சியிருக்கும் நிலையில் அவர்கள் எப்படி திருப்தி காணாதிருக்க முடியும்? அன்ஸாரிகள் குறித்து நபிகளார் கொண்டிருந்த நல்லெண்ணங்களுக்கெல்லாம் இலக்கணமாகவே அவர்கள் இருந்தார்கள். அண்ணலாரின் வார்த்தைகளைக் கேட்டுக் கண்ணீர் மல்கியவர்களாக அவர்கள் கூறினார்கள்: ''எமது பங்காக அல்லாஹ்வின் தூதரைக் கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்''.

அல்-ஜரானாவில் யுத்தப் பொருள் பங்கீட்டின் போது நாட்டரபிகளில் சிலர் முரட்டுத்தனமாக நடந்து கொண்டனர். அவர்களுள் ஒருவர், 'நியாயமாக நடந்து கொள்ளும்' என்றார். நபியவர்கள், 'நான் நியாயமாக நடக்காவிட்டால் நீங்கள் துயரத்தில் இருப்பீர்கள்' என்று கூறினார்கள். நாட்டரபியின் வார்த்தைகளால் சினம் கொண்ட உமர் இப்ன் அல்கத்தாப், அந்த மனிதனைக் கொன்று போட நபிகளாரிடம் அனுமதி வேண்டினார். அதனை மறுத்துரைத்து நபியவர்கள் கூறினார்கள்: 'நான் எனது தோழர்களைக் கொல்கிறேன் என மக்கள் கூறுவதிலிருந்தும் நான் இறைவனிடம் பாதுகாவல் தேடுகின்றேன்'.

நாட்டரபிகளின் மனோபாவம் விசித்திரமானதல்ல. அவர்களில் பெரும்பாலானோர் யுத்தப் பொருட்களை எதிர்பார்த்தே வந்திருந்

தார்கள். பங்கீடு செய்யும் பொழுது அவர்கள் நபிகளாரைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போது அண்ணலாரின் மேலங்கி மரக்கிளையொன்றில் சிக்கிக்கொண்டது. அன்னார் கூறினார்கள்: ''என்னிடம் இங்கு இருக்கும் 'அளாஹ்' (அப்பிரதேசத்தை நிறைத்திருந்த முள் மரங்கள்) வுக்கு நிகரான யுத்தப் பொருட்கள் இருந்திருப்பின், அத்தனையையும் நான் உங்களுக்குப் பகிர்ந்தளித்திருப்பேன். என்னை ஒரு கருமியாகவோ, பொய்யனாகவோ, கோழையாகவோ நீங்கள் காணமாட்டீர்கள்'' பின்னர் ஒட்டகத்தின் முதுகிலிருந்து ஒரு மயிரை எடுத்துக் கூறினார்கள்: ''இறைவனின் பெயரால், ஐந்தில் ஒரு பங்கைத் தவிர இந்த மயிரின் அளவுகூட மேலதிகமாக என்னிடம் ஏதுமில்லை. ஐந்திலொன்றையும் நான் உங்களுக்கே திருப்பியளிப்பேன்.'' பின்னர் பொருட்கள் பங்கீடு செய்யப்படும் முன்னர் அதிலிருந்து எதனையும் எடுத்துக் கொள்வது ஹராம் எனக் கூறினார்கள். யுத்தப் பொருட்களுள் இருந்த ஒட்டக மயிர்க்கற்றை ஒன்றினை அன்ஸாரி ஒருவர் கொண்டு வந்து கொடுத்தார்.

நபிகளாரால் விடுவிக்கப்பட்டிருந்த கர்காரா மரணித்த வேளை நபியவர்கள் கூறினார்கள்: ''அவர் நரக நெருப்பில் இருக்கின்றார்.'' பின்னர் அவரது உடைமைகள் பரிசீலிக்கப்பட்ட போது, அவர் மறைத்து வைத்திருந்த மேலங்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பொது உடைமைகள் பாதுகாக்கப்படுவது குறித்த நபிகளாரின் அறிவுறுத்தல்கள் மிகத் தெளிவானவை. எவ்வித பெறுமதியும் இல்லாத ஒட்டக மயிர்க்கற்றை ஒன்றைத் திருப்பிக் கொடுத்துவிட்ட அந்த அன்ஸாரி தோழரின் மனோபாவம், அவரது தக்வாவையும் நபிகளாரின் உத்தரவுகளை உடனே ஏற்று நடக்கும் பண்பையும் காட்டுகின்றது.

நாட்டரபிகளின் முரட்டு சுபாவத்தை நபிகளார் பொறுமையாகவே கையாண்டார்கள். செல்வத்தின் மீதான பேராசை, லௌகீக பொருட்கள் மீது அவர்கள் கொண்டிருந்த அவா அனைத்தையும் நபிகளார் மிக்க பொறுமையுடன் கையாண்டார்கள். அவர்களது சந்தர்ப்ப சூழ்நிலைகளை நன்கு அறிந்து கொண்டதோர் ஆசான் ஆகவே அன்னார் தோற்றினர். நாட்டரபிகள் மீது அவர்களது சூழல் கொண்டிருந்த தாக்கம், அவர்களது வாழ்வமைப்பின் இயல்பு, அவர்களது கடின உள்ளம், முரட்டு சுபாவம், ஆத்ம கௌரவம் அனைத்தையும் அன்னார் நன்கு அறிந்திருந்தார்கள். அன்பான உள்ளத்தோடு அவர்களை அணுகிய அண்ணலார், அவர்களது தேவைகள் குறித்து உத்தரவாதமளித்தார்கள்; அவர்களது சிந்தனைப் போக்குடன் இயைந்து கருணை காட்டினார்கள்;

கற்பித்துச் சீர்திருத்தினார்கள். அக்காலத்தில் அரசர்கள் தம் குடிகளோடு நடந்து கொண்டதைப் போல நபிகளார் நாட்டுப்புற அரபிகளோடு நடந்து கொள்ளவில்லை. நாட்டரபிகள் தமது அரசர்கள் மறைவாக இருந்தாலும் குனிந்தும், நிலத்தில் வீழ்ந்தும் அவர்களை வணங்கினர். குடிமக்கள் அரசர்களை விளிக்கும் போது, இறைவனை வணங்கும் ஒருவர் தன்னை ஓர் அடிமையாகக் கொள்வது போல தெய்வீக அந்தஸ்தில் வைத்துப் புகழ்ந்தேத்துவது வழக்கம். நபிகளாரோ நாட்டரபிகளைப் பொறுத்து அவர்களுள் ஒருவராகவே விளங்கினார்கள். நாட்டரபிகள் அன்னாரோடு நேரடியாகவே பேசினார்கள்; அன்னாரைத் தூற்றவும் செய்தார்கள். அன்னவர் அவர்களிலிருந்தும் மறைந்திருக்கவில்லை.

ஸஹாபாக்களோ நபிகளாரின் முன்னால் மிகவும் மரியாதையாக நடந்து கொண்டார்கள். அடக்கமாகப் பேசினார்கள். தமது உள்ளங்களில் அன்னார் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். நபிகளாரை விளிக்கும் போது நாட்டரபிகள் காட்டிய முரட்டு சுபாவம், மரியாதையீனம், உரத்த குரல், அகந்தை என்பனவற்றைக் குர்ஆன் கண்டனம் செய்தது.

யுத்தப் பொருட்களின் பங்கீடு முடிவடைந்த பின்னர், ஹவாஸின்னிலிருந்து ஒரு தூதுக்குழு தமது இஸ்லாமிய பிரகடனத்திற்கென வந்து சேர்ந்தது. குழுவினர், தமது செல்வங்களையும் கைதிகளையும் திருப்பித் தந்து விடுமாறு வேண்டினர். ஒன்றில் செல்வங்கள் இன்றேல் கைதிகள், இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு நபிகளார் கூறவும் அவர்கள் கைதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

நபியவர்கள் விசுவாசிகளை நோக்கிக் கூறினார்கள்: ''உங்களது இந்த சகோதரர்கள், வருந்தியவர்களாக உங்களிடம் வந்திருக்கின்றார்கள். அவர்களது கைதிகளைத் திருப்பிக் கொடுக்க நான் விரும்புகின்றேன். தமது கைதிகளை இலவசமாக விடுவித்துவிட உங்களில் எவரேனும் விரும்பினால் அவ்வாறே செய்யலாம். அல்லது தமக்குரிய பங்கை இறைவன் எமக்கருளும் முதலாவது யுத்தப் பொருட்களிலிருந்து, நாம் எதையேனும் கொடுக்கும் வரை வைத்திருக்க விரும்பினால் அவ்வாறே செய்யலாம்.''

மக்கள், ''அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் இலவசமாகவே அவர்களை விடுவிப்போம்'' என்று கூறினார்கள். நபியவர்கள் கூறினார்கள்: ''உங்களில் எவர் அனுமதியளிக்கின்றார், எவர் அனுமதியளிக்காது விடுகின்றார் என நான் அறிய மாட்டேன். ஆகவே நீங்கள் திரும்பிச்

சென்று, இந்த விவகாரத்தை எம்முடன் பேசுவதற்கு உங்களது தலைவர்களை அனுப்பி வையுங்கள்''. மக்கள் திரும்பிச் சென்று தமது தலைவர்களுடன் உரையாடினார்கள். பின்னர் அத்தலைவர்கள் நபிகளாரைக் கண்டு, அனைவரது இணக்கத்துடனும் கைதிகளை இலவசமாகவே விடுதலை செய்து விடுவதாகக் கூறினர்.

கைதிகளை, போராளிகளின் அனுமதியுடனேயே நபியவர்கள் ஹவாஸின்னிற்குத் திருப்பியளித்தமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். யுத்தத்தில் கைப்பற்றப்பட்டவற்றுக்கு அவர்களே உரிமையாளர்கள். எனவே அவர்களது சம்மதமின்றி கைதிகளைத் திருப்பியளிக்க முடியாது. இணங்காதவர்களுக்கு, அவர்களது நஷ்டத்திற்குப் பிரதியீடு வழங்குவதாக நபிகளார் கூறினார்கள். இதனைப் போராளிகளின் தலைவர்களாக இருந்தவர்களுக்கு அன்னார் உணர்த்தினார்கள். தமீம் கோத்திரத்தின் சார்பாகப் பேசிய அல்-அக்ரா இப்ன் ஹாபிஸ், பஸாரா கோத்திரத்தின் சார்பாகப் பேசிய உயைனா இப்ன் ஹிஸ்ன் ஆகியோரைத் தவிர, பெரும்பாலான போராளிகள் தமது கைதிகளை விட்டுவிட இணங்கினார்கள். தமீம் கோத்திரத்தாரினதும் பஸாரா கோத்திரத்தாரினதும் கைதிகளுக்கான இழப்பீட்டைத் தருவதாக நபியவர்கள் கூறினர். இதிலிருந்து ஹவாஸின் தூதுக்குழு, செல்வங்களும் கைதிகளும் பங்கிடப்பட்ட பின்னரே வந்து சேர்ந்தனர் என்பது தெளிவாகிறது, இப்ன் இஸ்ஹாக் கூறுவது போல, அதற்கு முன்னர் அல்ல.

ஹவாஸின் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை நபிகளாருக்கு மகிழ்ச்சியூட்டியது. அவர்களது தலைவர் மாலிக் இப்ன் அவ்ப் அல்-நஸ்ரீ குறித்து அன்னார் வினவினார்கள். அவர் தாயிபில் தகீப்களுடன் இருப்பதாக மக்கள் கூறினர். அவர் இஸ்லாத்தை ஏற்றவராகத் தம்மிடம் வரக் கூடுமாயின், அவரது செல்வங்கள் மற்றும் குடும்பத்தினரோடு நூறு ஒட்டகங்களையும் அளிப்பதாக நபிகளார் கூறினார்கள். மாலிக் ஒரு முஸ்லிமாக வந்து சேர்ந்தார். அவருக்காக வாக்களிக்கப்பட்ட அனைத்தையும் அவர் பெற்றுக்கொண்டார். மேலதிகமாக அவரது மக்களுக்கும் அவரை அண்மித்த ஏனைய சில கோத்திரங்களுக்கும் அமீராக மாலிக் நியமனம் பெற்றார்.

மாலிக் ஒரு நல்ல முஸ்லிமாக இயங்கினார். தாயிபில் தகீபுக்கு எதிரான முற்றுகையில் அவர் கலந்து கொண்டு, தகீப் தலைவர்கள் மீது பாரிய அழுத்தங்களைக் கொடுத்தார். தாம் எதிர்கொண்டுள்ள சங்கடமான சூழ்நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர தாயிப் தலைவர்கள் தீர்மானித்தனர். இஸ்லாம் எல்லாத் திக்குகளாலும்

தாயிபைச் சூழ்ந்து கொண்டது. அவர்களால் எங்கும் செல்ல முடிய வில்லை. வர்த்தக நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்தவும் இயல வில்லை. தாயிப் தலைவர்களுள் சிலர் இஸ்லாத்தோடு இணக்கம் காண விழைந்தார்கள். அவர்களுள் ஒருவரே உர்வா இப்ன் மஸ்ஊத் அல்-தகபீ. ஜிரானாவில் யுத்த பொருட் பங்கீட்டை முடித்துவிட்டு உம்ராச் செய்து மதீனாவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வழியில், உர்வா நபிகளாரைச் சந்தித்து தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மையைப் பிரகடனம் செய்தார். தகீப்களின் மதிப்புக்குரிய தலைவர் களுள் ஒருவரான அவர், தாயிப் திரும்பியதும் தகீப்களை இஸ் லாத்தின்பால் அழைத்ததோடு, தனது வீட்டுக் கூரை மீதேறி அதான் கூறினார். தகீப்களில் சிலர் அவர்மீது அம்புகளை எய்தனர். உர்வா, தாயிப் முற்றுகையின் போது மரணித்த முஸ்லிம்களோடு தம்மையும் அடக்கம் செய்யுமாறு வேண்டினார்.

தகீப் தலைவர்கள் நிலைமையின் தீவிரத் தன்மையை உணர்ந்து, தம்மையும் தமது உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்ளும் எண்ணத் துடன், ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு ரமழான் மாதம் நபிகளார் தபூக்கி லிருந்து திரும்பியதும் அவர்களிடம் ஒரு தூதுக்குழுவினை அனுப்பி வைத்தனர். அப்த் யா லைல் இப்ன் அம்ர் தலைமையில், பனூ மாலிக்கிலிருந்து மூவரும் தகீப்பின் கூட்டுக் கோத்திரங்களிலிருந்து இருவரும் அக்குழுவில் அடங்கியிருந்தனர். மதீனாவுக்குச் சற்று வடக்கே வாதீ கனாஹ்வில், அல்-முகீரா இப்ன் ஷுஃபா தூதுக் குழுவைச் சந்தித்தார். அல்-முகீரா அவர்களின் வருகையை அபூ பக்ரிடம் தெரிவித்தார். அபூபக்ர் இந்நற்செய்தியை நபிகளாரிடம் கொண்டு சென்றார்.

அல்-முகீரா, அவர்களுக்கு இஸ்லாமிய வாழ்த்து முறையையும் நபிகளாருடன் உரையாடும் போதான ஒழுக்க விதிகளையும் கற்பித் தார். தூதுக் குழுவினரைப் பள்ளிவாசலில் ஒரு கூடாரத்தினுள் இருக்கும்படி நபியவர்கள் கூறினர். ஏனென்றால், அங்கிருந்து அவர்கள் குர்ஆனைச் செவிமடுக்கவும் முஸ்லிம்கள் தொழுவதைக் காணவும் கூடும். தூதுக்குழுவினர் தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாகப் பிரகடனப் படுத்தினர். பின்னர் அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இஸ்லாத்தை ஏற்ற தூதுக்குழுவினர் தமது மக்களது எதிர்ப்பை அஞ்சியவர்களாக, ‘அல்-லாத்’தை அழிப்பதை மூன்று வருட காலம் பிற்படுத்தும்படி வேண்டினர். அதனை மறுத்த நபிகளார், அதற்கென அபூஸுப்யான் இப்ன் ஹர்ப்பையும் முகீரா இப்ன் ஷுஃபா

வையும் அனுப்பினார்கள். தொழுவதிலிருந்தும் தமக்கு விலக்கு அளிக் கும்படி தூதுக்குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர். ஏனென்றால் 'அல்-லாத்'தினதும் ஏனைய சிலைகளினதும் கற்களினதும் முன்னால் செய்வது போல, இறைவனின் முன்னால் குனிந்தும் நிலத்தில் வீழ்ந்தும் வணங்குவதை தரக்குறைவான செயலாக அவர்கள் கருதினர். அவர் களது இந்த வேண்டுகோளை மறுத்துரைத்த நபிகளார், 'ருகூஉ இல்லாத ஒரு மதத்தில் எந்த நன்மையுமில்லை' என்றார்கள். தூதுக் குழுவினர் ஸகாத்திலிருந்தும் ஜிஹாதிலிருந்தும் விலக்களிக்குமாறு வேண்ட, நபியவர்கள் அதற்கு இணங்கினார்கள். 'இஸ்லாத்தில் நுழைந்த பின்னர் ஸதகா கொடுப்பார்கள். ஜிஹாதில் போராடுவார்கள்' என நபிகளார் கூறக் கேட்டார் ஜாபிர் இப்ன் அப்துல்லாஹ். மேலும் தூதுக் குழுவினர் (தமது பிரதேசம் குளிர்ச்சியானது என்பதால்) வுழூ செய்வதிலிருந்து விலக்களிக்குமாறும், போதையூட்டக் கூடிய 'நபீத்' செய்யவும் அருந்த வும் அனுமதிக்குமாறும், அபூபக்ரா அல்-தகபீயை விடுதலை செய்து தம்மிடம் ஒப்படைத்து விடுமாறும் வேண்டினார்கள். இவையனைத் தையும் நபிகளார் மறுத்துவிட்டனர்.

அவர்கள் அனைவருள்ளும் உஸ்மான் இப்ன் அபூ அல்-ஆஸ் தான் குர்ஆனைக் கற்பதிலும் மதத்தை விளங்கிக் கொள்வதிலும் கூடிய சிரத்தை காட்டியவர். மிகவும் இளையவராக இருந்தவரும் அவரே. இருந்தாலும் நபிகளார் அவரையே தாயிபின் அமீராக நியமித்தார்கள்.

இஸ்லாத்தை ஏற்றதன் பின்னர் தகீப் தூதுக்குழுவினர் நபிகளாரிடம் பல வினாக்களைத் தொடுத்தனர். ஸஹாபாக்களிடம் குர்ஆன் எவ்வாறு 'அஹ்ஸாப்'களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என அவர்கள் வினவினார் கள்: ''நீங்கள் குர்ஆனை எப்படிப் பிரிக்கின்றீர்கள்?'' அதற்கு ஸஹாபா, ''முதல் 'ஹிஸ்ப்'பில் மூன்று ஸூராக்கள் உள்ளன. இரண்டாவதில் ஐந்தும், மூன்றாவதில் ஏழும், நான்காவதில் பதினொன்றும், ஐந்தாவ தில் பதின்மூன்றும், ஆறாவது ஹிஸ்ப் அல்-முபஸ்ஸலாக ஸூரா 'காப்'பிலிருந்து இறுதி வரை செல்கின்றது'' என்று பதிலளித்தனர். இதுவே இன்றும் நாம் அறிந்துள்ள குர்ஆனின் வரிசையாகும்.

நபிகளாருடனான சந்திப்பு, ஸஹாபாக்களுடனான உரையாடல்கள் என்பன அவர்களுள் பதித்த செல்வாக்கின் காரணமாக ரமழானின் எஞ்சிய நாட்களில் தூதுக்குழுவினர் நோன்பு வைக்கலாயினர்.

தூதுக்குழு மதீனாவில் பதினைந்து நாட்கள் தங்கியிருந்து விட்டு தாயிபிற்குத் திரும்பியது. 'லாத்'தை அழிக்கவென அபூஸுப்யான் இப்ன் ஹர்ப், அல்-முகீரா இப்ன் ஷுஃபா அல்-தகபீ ஆகியோர் தூதுக் குழு

வுடனேயே சென்றனர். லாத்தின் அழிவையும், அதனைச் சுற்றி தகபீ பெண்கள் சூழ்ந்திருந்தமையையும் விவரிப்பார் இப்ன் இஸ்ஹாக்.

*அல்-முகீரா அதனை முற்றாகவே அழித்து, அதன் தங்கத்தையும் வைடூரியங்களையும் கொண்டு செல்லும் வரை அப்பெண்கள் அழுத வண்ணமே இருந்தார்கள். இதற்கு லாத் பழிவாங்குமென தாயிப் மக்கள் நினைத்தார்கள். அவர்களை வேடிக்கை செய்யக் கருதிய அல்-முகீரா, தனது கைக்கோடாரியைக் கீழே போட்டுவிட்டு ஓடலானார். மக்கள் 'லாத் பழிவாங்கிவிட்டது' என்று கூறினார்கள். வாய்விட்டுச் சிரித்தவராகத் திரும்பி வந்த அல்-முகீரா, அவர்களிடம் ஏக இறை யோனை மட்டுமே விசுவாசிக்கும் படி கூறிச் சிலையை முற்றாகவே அழித்துவிட்டார். இறைவனுக்குப் பதிலாக மிக நீண்டகாலமாக வழிபடப்பட்டு வந்த லாத் இவ்வாறு அழிக்கப்பட்டது.*

*இந்த நடவடிக்கையின் நிகழ்வுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முக்கியமான சட்ட நியதிகள் கீழே தரப்படுகின்றன. சட்ட விதிகளின் காலங்கள் பற்றித் தெரிந்து கொள்வது குர்ஆனிய வாசகங்களை ரத்துச் செய்தல் (அல்-நாஸிக் வ அல்-மன்ஸூக்) பற்றி அறிந்து கொள்ளப் பெரும் துணை பயக்கும்; முரண்பாடுகள் தோன்றும் வேளைகளில் எந்த அறிவிப்பு கூடிய வலுவுள்ளது எனத் தெரிந்து கொள்ள இலகு வாயிருக்கும். சட்ட விதிகளின் தோற்றப்பாடு பற்றிய சந்தர்ப்ப சூழ் நிலைகளைத் தெரிந்து கொள்வதானது, அவற்றிற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவதாக அமையும்.*

## ***ஹுனைன், தாயிப் படையெடுப்புக்கள் மூலம் உருவான சட்டங்கள்.***

*01)* ''அன்றியும் பெண்களில் கணவனுள்ளவர்களும் (உங்களின் மீது விலக்கப்பட்டுள்ளது). (அடிமைப் பெண்களில்) உங்களுடைய வலக் கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களைத் தவிர''(ஸூரா நிஸா 4:24) *என்ற வாசகம் அருளப்பட்டமை. இது அல்-அவ்தாஸ் தினத்தின் போது கையகப்படுத்திக் கொள்ளப்பட்ட திருமணமான பெண்கள் குறித்த சட்ட விதியை விளக்குவதற்காக அருளப்பட்டது. அவர்கள் கைப்பற்றப் படுதல் அவர்களது கணவர்களிடமிருந்து அவர்களைப் பிரித்து விடு கிறது. இந்த வாசகம் அவ்வாறான பெண்களுடன் இணைவது, அவர்களுடைய 'இத்தா' காலம் ஒன்றில், குழந்தை பேற்றினால் அல்லது கருத்தரிக்காவிடின் மாதவிடாய்க் கணிப்பு முடிவடைந்த பின்னராகும் என உணர்த்தியது.*

*02)* பெண் தன்மையுடையரான ஆண்கள், உறவினரல்லாத பெண் களை அண்மிப்பதைத் தடுத்தல். முன்னர் அது அனுமதிக்கப்பட்டி ருந்தது. ஏனெனில் பெண் தன்மையுடைய ஆண்கள் பெண் கவர்ச்சி இல்லாதவர்கள் எனக் கருதப்பட்டிருந்தமையாலாகும். ஆனால் தாயிப் முற்றுகையின் சற்று முன்னர் பெண் தன்மையுடைய ஓர் ஆண், பாதியா பின்த் கைலான் அல்-தகபீ எனும் பெண்ணை வர்ணித்துக் கொண்டி ருப்பதை நபிகளார் செவியுற்றிருந்தமையே இத்தடைக்குக் காரணம். இது முஸ்லிம் சமூகத்தின் நலன் கருதி அமுலாக்கப்பட்டது.

*03)* முஸ்லிம்களுக்கு எதிரான யுத்தங்களில் பங்கு பெறாத பெண் கள், சிறார்கள், முதியோர்கள், கூலித்தொழிலாளர்கள் ஆகியோரை வேண்டுமென்றே கொல்லுதல் தடைசெய்யப்பட்டது.

*04)* ஹுனைன் உடைய தினத்தில் மதுவருந்தியவரை நபியவர்கள் தண்டித்தது போல, முஸ்லிமல்லாத பிரதேசத்திலும் (தார் அல்-ஹர்ப்) ஹத்த் தண்டனையை நிறைவேற்றல்.

*05)* முஷ்ரிகூன்களிடமிருந்தும் உதவி பெற்றுக் கொள்வதற்கான அங்கீகாரம். ஸப்வான் இப்ன் உமையாவிடமிருந்து நபியவர்கள் யுத்த ஆயுதங்களைப் பெற்று, அவற்றைத் திருப்பித் தருவதாக உறுதியளித் தமை. முஷ்ரிகூன்களிடமிருந்து உதவி பெறுதல் என்பது அவர்கள் மீது நம்பிக்கை இருந்தால் மாத்திரமே பெறப்படலாம். மேலும் அந்த முஷ்ரிகூன்கள் யுத்தத்தைத் தம் கையிலெடுத்து அவர்களது விருப்பின் பேரில் கொண்டு நடாத்த முனைவதை அனுமதிக்க முடியாது. ஏனெ னில் இஸ்லாத்தின் நோக்கமும் போதனையும் உன்னதமானவை.

*06)* சத்தியத்தின் பால் உள்ளங்களைக் கவருவதற்காக, யுத்தப் பொருட்களில் சிலவற்றைக் கொடுப்பதற்கான அங்கீகாரம். அரசின் தலைவர் (இமாம்) இவ்வாறு செய்தல், அவர்களை இஸ்லாத்தின் பால் ஈர்க்கும், அல்லது முஸ்லிம்களுக்குப் பாதகங்கள் இழைப்பதி லிருந்தும் அவர்களைத் தடுக்கும். அனஸ் இப்ன் மாலிக் கூறினார்: 'மக்கள் உலகியல் இலாபங்களுக்காக இஸ்லாத்தைத் தழுவுவார்கள். இஸ்லாத்தைத் தழுவியதன் பின்னர், உலகையும் அதிலுள்ள அனைத் தையும் விட இஸ்லாமே அவர்களுக்குப் பெறுமதியுடையதாக இருக் கும்'.

*07)* அல்-ஜரானாவிலிருந்து உம்ராச் செய்வதன் சட்ட விதி.

# தபூக்

*தாயிப் முற்றுகையின் பின் ஆறு மாத காலமளவு கழிந்து, ஹிஜ்ரி ஒன்பது ரஜப் மாதம் கோடை காலத்தின் போது தபூக்குக்கான பயணம் ஆரம்பமாயிற்று. வரலாற்றாசிரியர்கள் வழக்கம் போலவே இதற்கான நேரடிக் காரணம் ஒன்றைக் காண முயன்றுள்ளனர். பைஸாந்தியத் துருப்பினரையும் தன்னோடிணைந்த அரபுக் கோத்திரங்களது துருப்பினரையும் ஹெராக்லியஸ் ஒன்று சேர்த்துள்ளதாகக் கிட்டிய செய்தியைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தபூக் நோக்கிச் சென்றனர் என்கிறார் இப்ன் ஸஅத். ஜஅபர் இப்ன் அபூ-தாலிப் கொல்லப்பட்டமைக்குப் பழிவாங்குதலே இப்படையெடுப்புக்கான நேரடி காரணம் என்கிறார் அல்-யாகூபி. எவ்வாறாயினும் ஜிஹாத் எனும் கட்டாயக் கடமைக்கென விடுக்கப்பட்ட அறைகூவலுக்கான இயல்பான பதிலே இது என்பதுதான் இதற்கான சரியான விளக்கமாகும். அல்-ஹாபிஸ் இப்ன் கஸீர் இதனையே உணர்த்துகின்றார்: ''பைஸாந்தியரோடு போர் தொடுப்பதற்கு நபிகளார் முடிவெடுத்தமைக்குக் காரணம், புவியமைப்பில் அவர்களே மிக நெருங்கியவர்களாக இருந்தமை. அத்துடன் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் கூட அவர்கள் மிக நெருங்கியவர்களாக இருந்தமையால், சத்தியத்தின் பால் அவர்களை அழைக்கும் கடப்பாடும் இருந்தது.''*

*அல்லாஹ் கூறினான்:*

''விசுவாசிகளே இறை நிராகரிப்பாளர்களுள் நின்றும் உங்களை அடுத்திருப்பவர்களுடன் நீங்கள் அறப்போர் செய்யுங்கள்; உங்களில் கடினத்தன்மையை அவர்கள் காண வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோர்களுடன் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.'' (அல் தவ்பா - 9:123)

முஸ்லிம்களை மதீனாவிலிருந்து அகற்றி பைஸாந்தியருடன் யுத்தம் புரியும்படித் தூண்டி, மீள உயிர்ப்பிக்கும் நாளில் மரணித்தோர் அனைவரும் ஒன்று கூட்டப்படும் தளமாகவும் இறைத்தூதர்களது பூமியாகவும் விளங்கக் கூடிய தபூக்குக்குச் செல்ல முஸ்லிம்களை நெறிப்படுத்தியோர் யூதர்களெனக் கூறுவது தவறாகும்.

அவ்வாறே:

''நிச்சயமாக (நபியே! மக்கா) பூமியிலிருந்து உம்மை இடம்பெயரச் செய்து, அதிலிருந்து உம்மை வெளியேற்றிவிட அவர்கள் முனைகின்றார்கள்.'' (பனீ இஸ்ராயீல் 17:76)

எனும் வாசகம் இது குறித்து அருளப்பட்டதே எனக் கூறுவதும் தவறாகும்.

இத்தகு அறிவிப்புகள் முர்ஸலும், ளயீபுமாகும். மேலும் இவை மக்காவில் அருளப்பெற்றன. இதுவரை காலமும் நடந்த படையெடுப்புகளும் யுத்தங்களும், யூதர்களுக்கும் முஷ்ரிக் அரபு கோத்திரங்களுக்கும் எதிரானவையாக இருக்க, முன்னைய முஃதாவும் தற்போதைய படையெடுப்பும் பைஸாந்தியருக்கும் கிறிஸ்தவ அரபு கோத்திரங்களுக்கும் எதிரானவையாக அமைந்தது ஒரு விஷேட அம்சமாகும்.

கிறிஸ்தவம் தனது மூலாதாரங்களையும் ஆரம்பப் போதனைகளையும் இழந்து பல பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தது. ஈஸா நபி குறித்த விசுவாசத்திலேயே அவர்களது அடிப்படை முரண்பாடுகள் புலனாகின்றன. பெரும்பாலானோர் திருத்துவக் கொள்கையாளர்களாக (பிதா, மகன், தூய ஆவி என) தெய்வீக, மானுட அம்சங்கள் ஈஸா நபியினுள் பொதிந்துள்ளன எனக் கொண்டார்கள்.சில கிறிஸ்தவர்கள், அன்னார் தனியொரு குணாம்சத்தை அதாவது, தெய்வீகத் தன்மையை மாத்திரமே கொண்டுள்ளார் எனக் கருதினார்கள். இவர்கள் சிரியாவினதும் எகிப்தினதும் ஏகஇயல் விசுவாசியராக (Jacobites-யாகூபிகள்) என குறிக்கப்பட்டனர். இவ்விரு சாராருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் ரோம சாம்ராஜ்யத்தை ஒற்றுமையுடன் தக்க வைத்துக் கொள்ளலாம் எனும் முயற்சியில் ஹெராக்லியஸ் ஈடுபட்டார். அதனால் பயனேதும் கிட்டவில்லை. பேரரசு யாகூபிகளைத் துன்புறுத்தவே, மதவியலாளர்களுள் சிறந்த சிலர் எகிப்திலிருந்தும் பிரஷ்டம் செய்யப்பட்டனர். மேலும் ஏராளமானோர் வெவ்வேறு பிரதேசங்களுக்குத் தப்பிச் சென்றனர்.

இத்தகு ஒழுங்கீனங்கள் மதத் துறையை மட்டும் சார்ந்ததாக இருக்கவில்லை. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இது தடம் பதித்திருந்தது. மக்கள் மீதான வரிகள் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்றன. மக்களிடையே பிறப்பின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளப் பட்ட வர்க்க வேறுபாடுகள் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் ஊடுருவியது. இவற்றால் கிறிஸ்தவருக்கும் பல்தெய்வ வணக்கஸ்தருக்கும் இடையில் வித்தியாசங்கள் ஏதுமில்லாத நிலை உருவானது. முன்னர் முஷ்ரிகூன்களுக்கு எதிராக ஜிஹாதை அறிவுறுத்தியது போலவே, இறைவன் தற்போது வேதமளிக்கப்பட்டோர் மீதான ஜிஹாதை மேற்கொள்ளப் பணித்தான். எவ்வாறாயினும் கிறிஸ்தவர்கள் முஸ்லிம் அரசுக்கு உட்பட்டு இராணுவ விலக்கு வரியைச் செலுத்துவார்களாயின் தமது மதத்தைத் தொடர்ந்தும் பின்பற்ற அனுமதிக்கப்பட்டனர். எனினும் இந்த 'ஜிஸ்யா' வரி, சிலை வணக்கஸ்தர்களிடமிருந்து ஏற்கப்படவில்லை. மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டுமாயின் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது விதியாக்கப்பட்டது.

> ''வேதம் கொடுக்கப்பட்டவர்களிலிருந்து அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்ளாமலும்; அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தடைசெய்தவற்றை அவர்கள் தடையாக்கி வைக்காமலும் சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கிறார்களே, அத்தகையோரிடம் அவர்கள் (இஸ்லாமிய அரசுக்கு) கீழ்ப் படிந்தவர்களாக இருக்கும் நிலையில் (தம்) கையால் (தாமாகவே முன் வந்து) 'ஜிஸ்யா'வை (வரியை) அவர்கள் கொடுக்கும் வரை நீங்கள் போரிடுங்கள்''. (அல்-தவ்பா 9:29)

அரேபிய தீபகற்பத்தில் சிலை வணக்கத்தை ஒழித்து, வேதம் வழங்கப் பெற்ற யூத மக்களை வெளியேற்றிய பின் முஸ்லிம்கள் புதியதொரு நிலைமைக்கு உள்ளாகின்றார்கள். அது வேதமளிக்கப் பெற்ற மற்றொரு சாராரான கிறிஸ்தவ மதஸ்தவர்களை எதிர்கொள்வது. இஸ்லாத்தின் இயல்புக்கும், இஸ்லாமிய வாழ்வின் இலட்சியங்களுக்கும் இயைந்ததே இது. இதற்கானதோர் ஆதாரமாகவே தபூக் படையெடுப்பு கொள்ளப்படுகின்றது.

ஹிஜாஸின் வடபுறத்தே நவீன பாதைகளினூடு மதீனாவிலிருந்து எழுநூற்றி எழுபத்தெட்டு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது தபூக். பைஸாந்திய பேரரசின் ஆளுகைக்குள் அமைந்த பிரதேசத்தின் ஓர் அங்கமாக விளங்கியது இது. நபிகளார் இதனை தபூக் எனக் குறிப்பிட்டார்கள். என்றாலும் இதன் போது முஸ்லிம்கள் எதிர்கொண்ட

பொருளாதார பிரச்சினைகள் காரணமாக இது சிரமங்கள் நிறை படையெடுப்பு (கஸ்வத்-அல்-உஸ்ரா) எனவும் வழங்கியது. இதுவே குர்ஆனிலும் குறிக்கப்பெற்றது.

> ''நபியின் மீது நிச்சயமாக அல்லாஹ் அருள்புரிந்தான். (அவ்வாறே) கஷ்ட காலத்தில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்கள் மீதும், அன்ஸார்கள் மீதும் அருள்புரிந்தான்''. (அல்-தவ்பா 9:117)

குர்ஆன் விளக்கவுரையாளர்களுள் பிரசித்தம் பெற்ற கதாதா, முஜாஹித் ஆகியோர் ஓர் அறிவிப்புக்கு விளக்கமளிக்கும் வகையில் கூறினர்: ''இருவர் ஒரு பேரீச்சையைப் பகிர்ந்து கொள்வர். ஒரு குழுவினர் ஒரு பேரீச்சையை எடுத்து அவர்களுள் ஒருவர் அதனைச் சப்பி சிறிது தண்ணீர் அருந்துவார். பின்னர் மற்றொருவர் அதனைச் சப்பிச் சிறிது தண்ணீர் அருந்துவார்''. பேரீச்சைகள் அறுவடை செய்யப்படும் முன்னரான காலப்பகுதியில் இந்தப் படையெடுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது தான் இத்தகு பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக இருந்ததோ, அல்லது வேறு ஏதும் மறைமுகக் காரணிகள் இருந்தனவோ தெளிவாகவில்லை.

## தபூக் படையினருக்கு உதவி செய்தோர்

படையினர்க்காய்ச் செலவு செய்யும்படி நபிகளார் முஸ்லிம்களை வேண்டினர். அவ்வாறு செய்வோர்க்கு இறைவனிடமிருந்து பாரிய வெகுமதி கிட்டும் என வாக்களித்தனர். செல்வந்த ஸஹாபாக்கள் மட்டுமன்றி வறிய ஸஹாபாக்களும் கூட இதற்கெனச் செலவழிக்க விரைந்தனர். தபூக் படையினர் மீது உஸ்மான்-இப்ன்-அப்பான் அதிகம் செலவு செய்தார். நபிகளார் கூறினார்கள்: ''கஸ்வத்-அல்-உஸ்ரா'வுக்கு யாரெல்லாம் செலவு செய்கிறார்களோ, சுவனம் அவர்களுடையதாகும்''. உஸ்மான் ஆயிரம் தீனார்கள் கொண்டு வந்து நபிகளாரிடம் கொடுத்தார். ''இன்றிலிருந்து இப்ன்-அப்பான் செய்யக்கூடிய எதுவும் அவருக்குப் பாதகமாக அமையாது'' எனக் கூறினர் அண்ணலார். அதனை அன்னார் பலமுறை திருப்பித் திருப்பிக் கூறினார்கள். பலவீனமான சில அறிவிப்புகள், உஸ்மான் மேலும் பல உதவிகளையும் படையினருக்காகச் செய்ய முன்வந்தார் எனக் கூறுகின்றன - ஒட்டகங்கள், அவற்றுக்கான உபகரணங்களுடன் உஸ்மான் படைக்கான ஆயுதங்கள் அளித்தமையை ஸஹாபா உறுதி செய்துள்ளனர். முப்பதாயிரம் பேரளவு படையில் இருந்தனர். ஆகவே அவர்களது ஆயுதங்களின் பேரில் பாரியதொரு செலவினை அவர் செய்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

*பல இஸ்னாத்களுடன் முற்றுமே தவறுகள் அற்றன எனக் கூற முடியாவிடினும் ஒன்றையொன்று ஆதரித்து நிற்பதால் வரலாற்று ரீதியில் ஆதாரமாகக் கொள்ளக்கூடிய சில அறிவிப்புகளின் மூலம் அல்-தபரீ, அப்த்-அல்-ரஹ்மான்-இப்ன்-அவ்ப் தனது செல்வத்தில் பாதியைப் படையினர் மீது செலவழித்ததாகக் கூறுவார்.*

*வறிய முஸ்லிம்கள் மிக்க சாதாரணமான தொகைகளையே கொடுக்க முடிந்தது. ஆக முனாபிகூன் அவர்களைப் பரிகசிக்கலானார்கள். இதனால் அவர்கள் சஞ்சலமுற்றார்கள். கைதமா-அல்-அன்ஸாரீ ஒரு ஸாஅ பேரீத்தம் பழம் கொண்டுவந்தார். அவர் கேலி செய்யப்பட்டார். அகீல், அரை ஸாஅ பழங்கள் கொண்டு வந்தார். முனாபிகூன் கூறினர்: ''இறைவனுக்கு இவருடைய ஸதகா தேவையில்லை; மற்றவர் பிறருக்குக் காட்டவே செய்தார்''. குர்ஆன் கூறியது:*

''(ஓரிறை) நம்பிக்கையாளர்களில் தாராளமாக தர்மங்கள் செய்கிறவர்களையும் இன்னும் தங்களுடைய உழைப்பைத் தவிர (வேறு எதனையும் தானம் செய்வதற்குக்) காண மாட்டார்களே (அதாவது இயலாது இருக்கின்றார்களே) அத்தகைய (எளிய)வர்களையும் குறை கூறிப் பரிகாசம் செய்கின்றனர். அல்லாஹ் அவர்களைப் பரிகசிக்கின்றான். மேலும் நோவினை தரும் வேதனையும் அவர்களுக்கு உண்டு''. (அத்-தவ்பா 9:79)

*முனாபிகூன்கள், செல்வந்தர்கள் கொடுத்தால் பெருமைக்கு என்றார்கள்; வறியவர் கொடுத்தால் பரிகாசம் செய்தார்கள்.*

### *தபூக்கின் போது வஞ்சகர்களின் மனப்பாங்கு*

*முனாபிகூனின் மனப்பாங்கு இந்த படையெடுப்பின் போது வெட்ட வெளிச்சத்துக்கு வந்தது. படைகள் திரட்டப்பட ஆரம்பித்த போதே வஞ்சகர்கள் தமது பிரசாரங்களை ஆரம்பித்து விட்டனர். 'இந்தக் கோடையில் செல்லாதீர்கள்' என மக்களை அதைரியப்படுத்தினார்கள். கொடூரமான உஷ்ண காலமாக இருந்தது அது - மக்கள் மரங்களின் நிழல்களை நாடியவர்களாக இருந்தார்கள். சிலர் பொய்க் காரணங்கள் கூறித் தமக்கு விலக்களிக்கும்படி வேண்டினர். இறைவனே நபிகளாரைக் கண்டித்தான்:*

''(நபியே!) அல்லாஹ் உம்மை மன்னிப்பானாக! (போருக்கு வராத அவர்களில்) உண்மை சொன்னவர்கள் (யாரென்று) உமக்குத் தெளிவாவதற்குள் இன்னும் பொய்யர்களை நீர் அறிந்து கொள்வதற்குள்

(போருக்கு வராமலிருக்க) அவர்களுக்கு ஏன் நீர் அனுமதியளித்தீர்?''
(அத்-தவ்பா 9:43)

*நாட்டரபிகள் மத்தியிலான வஞ்சகர்களை மதீனாவின் முனாபிகூனைவிட அவிசுவாசத்திலும் வஞ்சனையிலும் மிஞ்சியவர்களாகச் சித்தரித்தது குர்ஆன். நபிகளாரின் முன்மாதிரி, இஸ்லாமிய விதிமுறைகள் என்பன குறித்த தெளிவான அறிவு இல்லாமை காரணமாக அவர்களது உள்ளங்கள் இறுகியிருந்தன.*

''நாட்டுப்புற அரபிகள் இறை நிராகரிப்பிலும் நயவஞ்சகத்திலும் (நகரவாசிகளை விட) மிகக் கடினமானவர்கள்; அல்லாஹ் தன் தூதரின் மீது இறக்கிவைத்த கட்டளைகளை அவர்கள் அறியாமலிருப்பதற்கே தகுதியானவர்கள். அல்லாஹ் முற்றும் அறிந்தவன், ஞானமுள்ளவன்''. (அத்-தவ்பா 9:97)

*வஞ்சகம் மதீனாவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது பாலையிலும் பரவியிருந்தது:*

''உங்களைச் சுற்றியுள்ள நாட்டுப்புற அரபியர்களுள் நயவஞ்சகர்களும் இருக்கின்றனர். மதீனாவாசிகளில் சிலரும் நயவஞ்சகத்தில் திளைத்து விட்டனர். அவர்களை நீர் அறியமாட்டீர்; நாம் அறிவோம்''. (அத்-தவ்பா 9:101)

*வஞ்சகர்கள் கூறும் காரணங்களையும், அவர்களை நம்புவதையும் குர்ஆன் கண்டித்தது:*

''(போர் முடிந்து) அவர்களின்பால் நீங்கள் திரும்பிய பொழுது (அவர்கள் போருக்கு வராததற்கு) உங்களிடம் அவர்கள் சாக்கு போக்குகள் கூறுகின்றனர். (நபியே! அவர்களிடம்) நீர் கூறுவீராக! 'நீங்கள் சாக்குபோக்குகள் கூறாதீர்கள். உங்களை நாங்கள் நம்பவே மாட்டோம்; அல்லாஹ் உங்களுடைய செய்திகளை எங்களுக்குத் திட்டமாக அறிவித்து விட்டான். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உங்களுடைய செயலை விரைவில் பார்த்துக் கொள்வார்கள். பின்னர் மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிந்தவனிடத்தில் நீங்கள் மீள்விக்கப்படுவீர்கள். அப்பொழுது நீங்கள் (உலகில்) செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு அவன் அறிவிப்பான்''. (அத்-தவ்பா 9:94)

*அவர்களை 'அசுத்தமானவர்கள்' **(9:95)** என்றே குர்ஆன் விவரிக்கின்றது. விசுவாசியர்க்கும் வஞ்சகர்க்கும் இடையில் ஒரு தடுப்புச் சுவர் ஏற்படுத்தப்பட்டது. வஞ்சகர்களுடனான தொடர்புகள் இனி*

*மேல் மோதலற்ற நிலையிலிருந்தும் மாற்றம் பெறுகிறது. அவர் களுடனான உறவில் முஸ்லிம்களுக்கும் வஞ்சகர்களுக்கும் இடை யிலான வித்தியாசங்களே மேலோங்கி நின்றன. வஞ்சகர்களது தவறு களைப் பகிரங்கப்படுத்தலாயது குர்ஆன். வஞ்சகர்கள் கட்டிய அல்-ளிரார் பள்ளிவாசலில் தொழுவதைக் கைவிட்ட நபிகளார், அதனைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். அவர்களுள் மரணித்தோருக்காகத் தொழு வதனையும் தவிர்த்துக் கொண்டார்கள். தபூக்கிலிருந்தும் திரும்பிய பின்னர், அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபை-இப்ன்-ஸலூல் மரணிக்க, அவருக்காக நபிகளார் தொழுகை நடாத்தியிருந்தார்கள். அல்லாஹ் அவ்வாறு செய்வதைத் தடை செய்தான்:*

> ''அன்றியும் (நயவஞ்சகர்களாகிய) அவர்களிலிருந்து இறந்து விட்டவரின் மீதும் ஒரு போதும் நீர் (ஜனாஸாத் தொழுகை) தொழ வேண்டாம்; அவருடைய அடக்கஸ்தலத்தின் அருகில் (மன்னிப்புக் கோர) நிற்கவும் வேண்டாம்''. (அல்-தவ்பா 9:84)

*கூட்டங்கள் நடாத்தவும், முஸ்லிம்களுக்கு எவ்வாறெல்லாம் பாத கங்கள் விளைக்கலாம் எனத் திட்டமிடவுமாக தபூக் படையெடுப்பின் சற்று முன்னால் வஞ்சகர்கள் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். முஸ்லிம்களுக்கு மேலும் கூடிய வசதி செய்து கொடுக்கும் முகமாகவே அது நிறுவப்பெறுவதாக அவர்கள் கூறினர். மதீனாவின் நபிகளாரது பள்ளிவாசலில் ஒன்றுகூடும் விசுவாசியரைப் பிரித்து, அவர்களில் சிலரைத் தமது பள்ளிவாசலில் தொழச் செய்வதே அவர்களது திட்ட மாயிருந்தது. வஞ்சகர்கள், தமது பள்ளிவாசலில் தொழுவதற்காக நபிகளாரை அழைத்தார்கள். அதன் மூலம் மக்களுக்குத் தவறான சமிக்ஞை கொடுக்கலாகும். குர்ஆன் அதனைத் தடை செய்து அதனை 'மஸ்ஜிதன் ளிராரன்' (விஷம மஸ்ஜித்) என அழைத்தது.*

> ''இன்னும் (நயவஞ்சகர்களில்) சிலர் - அவர்கள் எத்தகையோரென் றால் (முஸ்லிம்களுக்கு) இடையூறாகவும், நிராகரிப்பதற்கா(ன காரியத்திற்கா)கவும், இறை நம்பிக்கை உடையவர்களுக்கிடையே பிரிவினையை உண்டாக்கவும், இதற்கு முன் அல்லாஹ்விடத் திலும், அவனுடைய தூதரிடத்திலும் போர் செய்தவனுக்கு எதிர் பார்க்கும் (பதுங்கும்) இடமாகவும் ஒரு பள்ளிவாசலை அமைத் தார்கள். '(இதனை அமைத்ததன் மூலம்) நன்மையைத் தவிர (வேறெதனையும்) நாங்கள் நாடவில்லை' என திண்ணமாகச் சத் தியம் செய்கின்றனர். - நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள் என்று அல்லாஹ் சாட்சி கூறுகின்றான்.

''(நபியே!) நீர் ஒரு போதும் அதில் (தொழுவதற்காக) நிற்க வேண்டாம்; ஆரம்ப நாளிலேயே (அல்லாஹ்வின்) பயபக்தியின் மீது அடித்தளம் இடப்பட்ட ஒரு பள்ளிவாசல் உள்ளதே அதில் தான் நீர் (தொழ) நிற்பது மிகத் தகுதியானதாகும். அதில் பரிசுத்த மாக இருப்பதை விரும்பும் (நல்ல) மனிதர்கள் உள்ளனர். அல் லாஹ்(வும்) பரிசுத்தவான்களையே நேசிக்கின்றான்''. (அல்-தவ்பா 9:107-8)

*வஞ்சகருள் பெரும்பாலோர் தபூக்குக்குச் செல்வதைத் தவிர்த்துப் பின் தங்கி விட்டனர். படையில் இணைந்து கொண்ட அவர்களில் சிலரது நோக்கமாக இருந்தது சதிகள் தீட்டுவதும் வதந்திகள் பரப்பு வதுமே.*

*தபூக் செல்வதற்கென அராபிய நாட்டுப்புறக் கோத்திரங்களைத் திரட்டுவதற்காக நபிகளார் சிலரை அனுப்பி வைத்தார்கள் என அல்-வாகிதீ மட்டும் கூறுவார். எவ்வாறாயினும் படையணி திரட்டப் பொதுவாகவே விடுக்கப்பட்ட பிரகடனத்தோடு இது இயைந்து செல் கின்றது. ஸூறா அல்-தவ்பா குறிப்பிடுவது போல அரபு கோத்திரங்கள் திரட்டப்படவே செய்தன.*

*குர்ஆன் கூறுவது போல மதீனாவினுள் படைதிரட்டு அறிவிக்கப் பட்டது:*

''இறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுடைய பாதையில் (போர் புரிய) நீங்கள் புறப்படுங்கள்'' என்று உங்களுக்குக் கூறப் பெற்றால் (அப்படி புறப்பட ஆயத்தமாகாமல்) பூமியின் பக்கம் நீங்கள் சாய்ந்து விடுகின்றீர்களே, உங்களுக்கு என்ன (நேர்ந்தது)? மறு மையை விட இவ்வுலக வாழ்வை நீங்கள் (இசைவானதாய்ப்) பொருந்திக் கொண்டீர்களா? மறுமை(யின் சுகவாழ்வு)க்கு எதிரில் இவ்வுலக வாழ்வின் சுகம் அற்ப (சொற்ப)மானதே தவிர (வேறு) இல்லை. (அல்-தவ்பா 9:38)

*தபூக் குறித்தே இந்த வாசகம் அருளப்பட்டதாகக் கூறுவார் முஜாஹித். அவர்கள் திரட்டப்பட்டு வந்த வேளை, பேரீச்சை அறு வடை நடந்து கொண்டிருந்தது. பேரீச்சை பழுத்து, மக்கள் வெயிலில் நிழல் தேடி வந்த வேளை, வெளியே புறப்பட்டுச் செல்வது அவர் களுக்குச் சிரமமாயிருந்தது. முஜாஹித்தின் கருத்தில் குர்ஆன், இளையோர், முதியோர், செல்வந்தர், வறியவர் என அனைவரையும் புறப்படும்படி கூறியது.*

''சுமையில்லாதவர்களாகவும், சுமையுள்ளவர்களாகவும் (போருக்கு) நீங்கள் புறப்படுங்கள்; உங்களுடைய பொருட்களைக் கொண்டும், உங்களுடைய உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் போர் புரியுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், இது தான் உங்களுக்கு நன்மையுடையதாக இருக்கும்''. (அல்-தவ்பா 9:41)

*அவர்களில் சிலர் பின்தங்கிவிட அனுமதி கேட்ட போது அவர்கள் குறித்துப் பின்வரும் வாசகம் அருளப்பட்டது:*

''(நபியே! நீர் எதன்பால் அவர்களை அழைத்தீரோ) அது சமீபமான (உடனே கிடைக்கக் கூடியதான) பொருளாகவும், (வெகு தூரமில்லாத) நடுநிலையான பயணமாகவுமிருந்தால் அவர்கள் உம்மைப் பின்பற்றி வந்தே இருப்பார்கள். எனினும், பயண தூரம் அவர்களுக்கு (மிகத்) தொலைவாகப்பட்டது. ஆதலால் (பின்தங்கி விட்ட) அவர்கள், 'நாங்கள் சக்தி பெற்றிருந்தால் நிச்சயமாக நாங்கள் உங்களுடன் வந்திருப்போம்' என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்(து கூறு)வார்கள். இதனால் அவர்கள் தங்களையே அழித்துக் கொள்கின்றனர். மேலும் நிச்சயமாக அவர்கள் பொய்யர்கள்தான் என்பதை அல்லாஹ் நன்கறிவான்''. (அல்-தவ்பா 9:42)

*தபூக் மதீனாவிலிருந்தும் வெகு தொலைவில் இருந்தமை, மிக்க சிரமங்களை ஏற்படுத்தும் பிரயாணம், யுத்தப் பொருட்களைக் கைப்பற்றிக் கொள்வது இலகுவாக அமையாது என்ற கணிப்பு என்பனவெல்லாம் இப்படையெடுப்பில் இணைந்து கொள்வதில் காணப்பட்ட தயக்கத்துக்குக் காரணங்களாம். நாட்டரபிகள், வஞ்சகர்கள் மட்டுமன்றி, தோழர்கள் சிலரும் கூட பின் தங்கி விட்டனர். தாம் பின் தங்கி விட்டமைக்கு, தோழர்கள் மூவர் தவிர ஏனையோர் தக்க காரணங்கள் கொண்டிருந்தனர். அம்மூவருக்கு மாத்திரம் காரணங்கள் கற்பிக்க இயலவில்லை.*

## விசுவாசிகள் ஜிஹாத் அழைப்புக்கு உடன் செவிசாய்த்தல்.

*பிரயாணத்தின் சேய்மை, படையினரின் பாரிய எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு நபிகளார் தமது இலக்கை முஸ்லிம்களுக்கு முன்னமேயே அறிவிப்புச் செய்தார்கள். எதிரிகள் உஷார் ஆகிவிடுவார்கள் என்பதனால் நபிகளார் தான் நாடியுள்ள இடத்தை வழக்கமாக அறிவிப்பதில்லை. தமது யுத்த வழமைகளுக்கு மாற்றமாயினும், படையினர் தக்க ஆயத்தங்கள் செய்து கொள்வதற்காக முன்னமேயே இலக்கு பகிரங்கப்படுத்தப்பட்டது.*

விசுவாசிகள் படையெடுப்பில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். அலீ-இப்ன்-அபூ தாலிப்பைப் பின் தங்கிக் குடும்பத்தைப் பராமரித்துக் கொள்ளும்படி வேண்டினர் நபிகளார். அலீ கூறினார்: ''ஓ அல்லாஹ் வின் தூதர் அவர்களே! நீங்கள் என்னைப் பெண்களுடனும் குழந்தை களுடனும் இருந்து கொள்ளச் சொல்கின்றீர்களா?'' நபிகளார் கூறி னார்கள்: ''மூஸாவுக்கு ஹாரூன் இருந்தது போல நீர் எனக்கு இருப் பது உமக்குத் திருப்தியளிக்கவில்லையா? எனக்குப் பின்னால் தூதுத் துவம் இல்லை என்பது தவிர்த்து''. பழங்களுடனும் நிழல்களுடனும் திருப்தி கண்டுகொள்பவர்களல்லர் விசுவாசியர் என்பதை உணர்த்தி யது அவர்களது மனப்பாங்கு. அவர்கள் வேண்டியதோ உஷ்ணம், பசி, தாகம் -அத்தனையும் அல்லாஹ்வுக்காக.

அபூ கைதமா-அல்-அன்ஸாரீ கூறினார்: ''நபிகளார் புறப்பட்டுச் செல்ல நான் பின் தங்கிக் கொண்டேன். எனது தோட்டத்துக்குச் சென் றேன். என் மனைவியை அங்கு கண்டேன். தண்ணீர் தெளிக்கப்பட்ட தொரு பந்தலும் இருந்தது. நான் கூறினேன்: ''இது நியாயமல்ல. அல் லாஹ்வின் தூதர் அங்கு வெட்ட வெளியில் உஷ்ணத்திலும், சூறைக் காற்றிலும் ஆக இருக்கின்றார். நான் இங்கே நிழலில் அமர்ந்து, சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்''. கொஞ்சம் இறைச்சி யையும், பேரீச்சம் பழங்களையும் எடுத்துக்கொண்டு நான் புறப்பட் டேன். படையினரை நான் நெருங்க மக்கள் என்னைக் கண்டு கொண்டார்கள். நபிகளார் கூறினார்கள்: ''அது அபூ கைதமாவாகத்தான் இருக்க வேண்டும்''. நான் முன் வந்தேன். அன்னார் எனக்காகப் பிரார்த்தித்தார்கள்.

தம்மால் ஜிஹாதுக்குச் செல்ல முடியவில்லையே என வறிய விசு வாசியர் கவல்ந்தார்கள். அவர்களுள் ஒருவர் உலபா-இப்ன்-ஸைத். அல்-பக்காஈன்னில் புலம்புவோர்களில் ஒருவர். ''அல்லாஹும்ம யா அல்லாஹ்! நீயே ஜிஹாதை விதி செய்துள்ளாய். எமக்கும் அதைப் பணித்துள்ளாய். என்றாலும் உனது தூதருடன் நான் செல்வதற்கான வசதியை எனக்குத் தராது விட்டாய். அதற்கான ஸதகாவாக எனக்கு உடல் ரீதியாக அல்லது எனது கௌரவத்தைப் பாதிப்பதாக எனக்குத் தீங்கு விளைவித்தோர் அனைவரையும் நான் மன்னித்து விட்டேன்''. அவரை இறைவன் மன்னித்து விட்டதாகக் கூறினர் நபிகளார்.

அபூ-மூஸா-அல்-அஷ்அரீயின் தலைமையில் அஷ்அரீக்கள் சிலர் நபிகளாரிடம் ஜிஹாத்தில் தாமும் பங்குபற்றுவதற்காக ஒட்டகங் களை வேண்டி நின்றார்கள். உடனடியாக அன்னாரால் ஒட்டகங்

*களைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. பின்னர் அவர்களுக்கு மூன்று ஒட்டகங்கள் வழங்கப்பட்டன.*

*பலவீனம் அல்லது அங்கவீனம் காரணமாக அல்லது போதிய வசதி யின்மை காரணமாக ஜிஹாதில் கலந்து கொள்ள முடியவில்லை எனக்கொண்டு பின்தங்கிவிட வேண்டிய நிலையில் கண்ணீர் மல்க நின்றோர் குறித்துப் பேசியது குர்ஆன்:*

> ''பலவீனர்களின் மீதும், நோயாளிகளின் மீதும் (போருக்காகச்) செலவு செய்வதற்குரிய (பொருள் முதலிய)வற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் மீதும், அல்லாஹ்விற்காகவும், அவனுடைய தூதருக்காகவும் அவர்கள் நலம் நாடியவர்களாக இருந்தால் (அவர்கள் போருக்குச் செல்லாமலிருப்பதில்) எவ்விதக் குற்றமும் இல்லை. (இத்தகு) நன்மை செய்வோரின் மீது (குறைகூற) எவ்வித வழியுமில்லை. அல்லாஹ் மிக்க மன்னிக்கிறவன்; மிகக் கிருபை யுடையவன்.
>
> இன்னும் சிலரின் மீதும் (எவ்விதக் குற்றமும்) இல்லை. அவர்கள் எத்தகையோரென்றால் (போருக்குச் செல்ல) அவர்களுக்கு நீர் வாகனமளிப்பதற்காக (அதனைக்கேட்டு) உம்மிடம் அவர்கள் வந்த நேரத்தில், 'எதன் மீது உங்களை நான் ஏற்றிச் செல்வேனோ அத் தகைய (வாகனத்)தை நான் பெற்றுக்கொள்ளவில்லையே' என்று நீர் கூறினீர். (அப்பொழுது அல்லாஹ்வுடைய பாதையில்) அவர்கள் செலவு செய்கின்ற (பொருள் முதலிய)வற்றைப் பெற்றுக்கொள்ள வில்லையே என்ற கவலையால் தம் கண்கள் கண்ணீர் பொழிகின்ற நிலையில் அவர்கள் திரும்பிச் சென்றார்கள். (இத்தகையோரின் மீதும் எவ்விதக் குற்றமும் இல்லை)''. (அல்-தவ்பா 9:91-2)

*பின்தங்கிவிட்டவர்களில் தக்க காரணங்கள் கொண்டிருந்தவர் களை அவர்கள் நல்லெண்ணம் கொண்டவர்களாக இருந்தமையால் நபிகளார் தனியாக எடுத்துக் காட்டினார்கள். ''மதீனாவில் சில மக்கள் இருக்கின்றார்கள். நீங்கள் எங்கு சென்றாலும் நீங்கள் ஒரு வெளியைக் கடந்தாலும் அவர்கள் உங்களோடு இருக்கின்றார்கள்.'' மக்கள் கேட் டார்கள்: ''அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் மதீனாவில் இருக்கின் றார்களா?'' அண்ணலார் கூறினார்கள்: ''அவர்கள் மதீனாவில் இருக் கின்றார்கள். தக்க காரணம் கொண்டு எம்மோடு வராமலிருக்கச் செய்யப்பட்டார்கள்''. மதீனாவில் எஞ்சியிருந்தவர்கள் முனாபிகூனும், பலவீனங்கள் காரணமாகத் தக்க காரணங்களுடன் பின் தங்கியவர் களுமே எனக் கூறினார் கஅப்-இப்ன்-மாலிக்.*

## *தபூக்குக்கான படையினரின் எண்ணிக்கை*

*தபூக் படையினரின் எண்ணிக்கை குறித்துச் சில அறிவிப்புகள் உள்ளன. அவை ஒன்றிலொன்று முரண்படுவனவாகத் தோற்றுகின்றன. என்றாலும் அவற்றை ஒரு சமன்பாட்டுக்குக் கொண்டுவரலாம். கஅப்-இப்ன்-மாலிக் கூறினார்: ''அல்லாஹ்வின் தூதருடன் ஏராளமான முஸ்லிம்கள் இருந்தனர். அவர்களது பெயர்கள் எங்கும் பதியப்பட வில்லை''. கஅப்பின் மற்றுமோர் அறிவிப்பு: ''அவர்கள் (முஸ்லிம்கள்) பத்தாயிரத்திலும் கூடியோராக இருந்தனர்''.*

*'அல்-இக்லீல்'லில், அல்-ஹாகிம், இருபதினாயிரத்துக்கும் மேற் பட்டோர் இருந்தனர் என்பார். இதனை அங்கீகரிக்கின்றார் இப்ன்-இஸ்ஹாக். நபிகளாரிடம் பத்தாயிரம் குதிரை வீரர்கள் இருந்தனர் எனக் கூறுவார் அல்-வாகிதீ. கஅப்பின் அறிவிப்பு, குதிரை வீரர்களைக் குறித்ததாகவும், காலாட் படையினரை அவர் சேர்க்காது விட்டிருக்க வும் கூடும். அபூ-ஸுர்ஆ-அல்-ராஸீ படையினர் நாற்பதினாயிரம் எனக் கூறினார். ஸைத்-இப்ன்-ஸாபித்தின் பார்வையில் அது முப்பதினாயிரம்.*

*வரலாற்றாசிரியர்களுள் பெரும்பாலானோர் படையினர் தொகையை முப்பதினாயிரம் எனக் கொள்வதிலேயே இணக்கம் காண்கின்றனர். மிகக் கொடூரமான சூழலில் பாரிய உஷ்ண காலத்தில் பல்வேறு சிர மங்களை அனுபவித்து வந்த வேளையில் தமது விசுவாசத்தின் அழைப் புக்கு முஸ்லிம்கள் எத்துணை ஆர்வத்துடன் செவிமடுத்துள்ளனர் என்பதை இது காட்டுகின்றது. இதுவே நபிகளார் தமது வாழ்நாளில் நடாத்திச் சென்ற மிகப்பெரிய படை. படையினர் திரட்டப்பட்டவுடன் நபிகளார் அவர்களை மதீனாவிலிருந்து ஸிரியா செல்லும் பாதையில் நாற்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள தூ-கஷப் வரை நடாத்திச் சென்று அங்கிருந்து தபூக் நோக்கிப் புறப்பட்டனர் என்பார் வாகிதீ. அன்னாரின் வழிகாட்டியாகச் சென்றவர் இல்கிமா-இப்ன்-அல்-பக்வா-அல்-குஸாயீ.*

*தபூக்கில் மிகப் பெரிய துவஜம் அபூ-பக்ர்-அல்-ஸித்தீக்குக்குக் கொடுக்கப்பட்டது. மிகப் பெரிய கொடி அல்-ஸுபைருக்குக் கொடுக் கப்பட்டது. அல்-அவ்ஸ்களின் கொடி உஸைத்-இப்ன்-ஹுலைரிடம். கஸ்ரஜ்களின் கொடி அபூ துஜானாவிடம். சிலர் அக்கொடி அல்-ஹப்பாப்-இப்ன்-முன்திர்ரிடம் கொடுக்கப்பட்டதென்பர். அன்ஸார் களின் ஒவ்வொரு கிளையினரும் தத்தம் கொடிகளையும் துவஜங் களையும் கொண்டிருக்கப் பணிக்கப்பட்டனர். அவ்வாறே பணிக்கப்*

பட்டனர் அரபு கோத்திரத்தார்களும். பனூ-மாலிக்-இப்ன்-அல்-நஜ் ஜாரின் கொடியைத் தாங்கியிருந்தார் ஸைத்-இப்ன்-ஸாபித்; பனூ-அம்ர்-இப்ன்-அவ்பின் கொடி அபூ-ஸைத்திடம்; முஆத்-இப்ன்-ஜபல் தாங்கி யிருந்தது பனூ-ஸலாமாவின் கொடியை. படையினர் சென்ற பாதை, தாங்கிய கொடிகள் பற்றிய விளக்கங்கள் அனைத்தையும் அல்-வாகிதீ மட்டுமே தருகின்றார். அவர் மத்ரூக் ஆயினும் ஸீரா குறித்து ஏராள மான தகவல்களை அவரே தருகின்றார். அவரிடமிருந்து இத்தகு தகவல்களைப் பெற்றுக் கொள்வது அனுமதிக்கப்பட்டதே.

### பின் தங்கியவர்களும், தபூக்கில் பங்குபற்றாதோரும்.

ஸஹாபாக்களுள் மூவர் தபூக் செல்வதிலிருந்தும் பின் தங்கியிருந்த னர். அவர்கள் கஅப்-இப்ன்-மாலிக், மராரா-இப்ன்-அல்-ரபீ, ஹிலால்-இப்ன்-உமையா-அல்-வாகிபீ ஆகியோர். அன்ஸாரிகளான இம்மூவ ரும் தம் விசுவாசத்தில் மிக உறுதியாயிருந்தோர். கஅப்-இப்ன்-மாலிக் பத்ர் தவிர்ந்த அனைத்துப் படையெடுப்புகளையும் கண்டவர்; அல்-அகபாவின் இரண்டாவது சந்திப்பில் கலந்து கொண்டவர். படை யெடுப்புக்குத் தயாராவதில் இவர் தாமதம் செய்தாலும் பின்தங்கி விடும் எண்ணம் அவருக்கிருக்கவில்லை. நிழலும் கனிகளும் குறித்த அவரது ஈடுபாடு மிகுந்து தாமதம் நீண்டு அவர் இல்லாமலேயே படை புறப்பட்டுச் சென்று விட்டது.

மராரா-இப்ன்-அல்-ரபீஇ, ஹிலால்-இப்ன்-உமையா இருவரும் பத்ரில் பங்கெடுத்தவர்கள். மேலும் என்பதுக்கு மேற்பட்டோர் பின் தங்கி விட்டனர். இந்த எண்ணிக்கை மதீனாவின் வஞ்சகர்களையும் உள்ளடக்கியது எனக் கூறுவார் அல்-வாகிதீ. பனூ-கிபார், ஏனைய அரபு கோத்திரங்களிலிருந்து பின் தங்கியவர்கள் என்பத்தியிரண்டு பேர் என்றும் அவர் குறிப்பிடுவார். இந்த எண்ணிக்கை அப்த்-அல்லாஹ்-இப்ன்-உபையையும் அவரது சகாக்களையும் கொண்ட பெருந்தொகை யினருக்கும் மேலதிகமாக அமைந்தது எனவும் அவர் கூறுவார். படையில் தாம் இல்லாமையை எவரும் அவதானிக்க மாட்டார் என்றே ஒவ்வொருவரும் கருதினர்.

தபூக் செல்லும் வழியில், நபிகளார் பின்தங்கியோர் குறித்து விசாரித்தார்கள். அபாரஹூம்-குல்ஸூம்-இப்ன்-ஹூஸைன்-அல்-கிபாரி யிடம், பனூ கிபார், பனூ அஸ்லம் குறித்து விசாரித்தார்கள். தபூக்கில் வைத்து கஅப்-இப்ன்-மாலிக் குறித்து விசாரித்தார்கள்.

பின் தங்கிவிட்டோரின் மனோபாவம் குறித்து ஸூறா அல்-தவ்பா நன்கு விளக்கியது. படை திரட்டு குறித்த பகிரங்க அறிவிப்பு, ஜிஹாதை ஒவ்வொருவரதும் கட்டாயக் கடமையாக, பர்ள்-அய்ன் ஆக ஆக்கிய நிலையில் அவர்கள் பின்தங்கிவிட்டமையைக் கண்டனம் செய்தது. பின்னர் ஸூறா தவ்பா, இறைவன் அவர்களது பாவமன்னிப்பை ஏற்று அவர்களது செல்வத்திலிருந்து ஸதகாவைப் பெற்றுக் கொள்வதனை அங்கீகரித்தமையைக் கூறியது. தாம் இழைத்த தவறுக்கு வருந்தியவர்களாய் தமது ஸதகாவை ஏற்கும்படி அவர்கள் பிரார்த்தனை செய்திருந்தார்கள். ஸூறா, முனாபிகூன்களின் தீய நடத்தைகளை வெளிக்கொணர்ந்தது. அவர்கள் இறைவனின் தீர்மானங்களை, 'கத்ர்'ரை விசுவாசிக்காதவர்கள்; இவ்வுலக வாழ்வின் மீது ஆழ்ந்த விருப்புக் கொண்டவர்கள்; மரணத்தை அஞ்சுவதால் ஜிஹாதில் பங்கு பெறுவதை விரும்பாதவர்கள் எனக் காட்டப்பெற்றது. முனாபிகூன்களின் பலவீனங்கள் மேலும் பல: நன்நோக்கம் ஏதும் இன்றி, விருப்பில்லாமலேயே அவர்கள் செலவு செய்வர்; தீய வார்த்தைகள் பேசுவதில் தீரம் படைத்தவர்கள்; பிறரைக் கோழைகள் எனக் கண்டனம் செய்வர். அவர்கள் கூறியன குறித்து கேள்வி கேட்டால் பரிகாசத்துக்காகவே தாம் அவ்வாறு பேசினர் என்பர். குர்ஆன் அவர்களது சாக்குப் போக்குகளை ஏற்க மறுத்து அவர்களைக் 'காபிர்கள்' என சித்தரித்தது. அவர்களுக்காக யாரும் மன்னிப்பை யாசிப்பதையோ, அவர்களது ஜனாஸாவுக்காகத் தொழுவதையோ அது தடுத்தது. நிலையில்லாத இந்த உலக வாழ்வில் அவர்களது சிரிப்புக்குப் பதிலாக நரகில் அழுகையே கிட்டும் எனவும் அது கூறியது. இனிமேல் வரும் எந்த ஒரு ஜிஹாதிலும் அவர்கள் பங்கு பெறுவது தடை செய்யப்பட்டது. முஸ்லிம்களை அத்தகு மனிதர்களிலிருந்தும் தூய்மைப்படுத்தவும், விசுவாசியரிலிருந்து அவர்களைப் பிரித்துக் காட்டவும் இது துணை பயந்தது. இல்லையேல் அவர்கள் முஸ்லிம்களுடனேயே இருந்து, அவர்களைப் பலவீனப்படுத்தி, அதைரியத்துக்குள்ளாக்கி விடுவார்கள். குர்ஆனின் ஒரு வாசகம் ஒருசாரார் குறித்து முடிவு எடுப்பதைத் தாமதப்படுத்தியது. அவர்கள் பின் தங்கி அதற்காகக் கவலை மீதூரப் பெற்றோர். அவர்கள் காரணங்கள் கற்பித்த வஞ்சகர்களும் அல்லர்; பின் தங்கியமைக்குக் காரணங்கள் கற்பித்தவர்களும் அல்லர்.

ஜிஹாதின் பாரிய வெகுமதிகளை விவரிக்கும் போது மதீனாவிலும், நாட்டுப்புற அரபியரிலும் பின் தங்கிவிட்டோரைக் கண்டனம் செய்தது ஸூறா. பொதுவான படைதிரட்டலின் போது ஜிஹாதில் பங்கு பற்றுவது பர்ள் அய்ன் ஆக விதிக்கப்பட்டிருந்தது.

**தபூக்கை அடைதல்.**

தபூக்கில் நபிகளார் ஆற்றிய நீண்ட பிரசங்கம் ஒன்றின் வாசகங் களை சில அறிவிப்புகள் தருகின்றன. இந்த 'குத்பா' ஸஹீஹ் இஸ்னாத் மூலம் ஆதாரப்படுத்தப்படவில்லை. என்றாலும் அதன் சில பாகங்கள் ஏனைய ஹதீஸ்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. அதில் சில ஸஹீஹ்; சில ஹஸன். இந்த ஹதீஸ்களிலிருந்து சில அறிவிப்பாளர்கள் இந்த குத்பாவைத் தொகுத்து எடுத்துள்ளார்கள் போலத் தெரிகின்றது.

தபூக்கில் நபிகளார் காலித்-அல்-வலீதை ஸஹாபாக்கள் பலருடன் தவ்மா-அல்-ஜந்தல்லுக்கு அனுப்பினார்கள். நானூற்றி இருபது குதிரை வீரர்களுடன் அனுப்பப் பெற்றார் அவர் என ஸஹீஹ் இஸ்னாத் ஒன்றுடன் அறிவிப்பார் உர்வா-இப்ன்-அல் ஸுபைர். நகரின் வெளியே வேட்டையில் இருந்த வேளை, தவ்மா-அல்-ஜந்தலின் அரசன் உகைதிர்-இப்ன்-அப்த்-அல்-மாலிக்கைக் கைப்பற்றிக் கொண் டார் காலித். ஜிஸ்யா செலுத்தும் நியதியுடன் அவரோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர் நபிகளார். உகைதிர் அணிந்திருந்த ஒரு மேலங் கியை வியப்புடன் பார்த்தவர்களாயிருந்தனர் முஸ்லிம்கள். நபிகளார் கூறினார்கள்: ''இதைக் கண்டு நீங்கள் வியப்புறுகின்றீர்களா? எனது வாழ்வு யாருடைய கரங்களில் இருக்கின்றதோ அவனது பெயரால், சுவனத்தில் ஸஅத்-இப்ன்-முஆத்தின் கைக்குட்டைகள் இதை விடச் சிறந்தவை''. உகைதிரிடமிருந்து காலித் பெற்றுக்கொண்ட யுத்தப் பொருட்கள், ஆயிரம் ஒட்டகங்கள், நானூறு கவசங்கள், நானூறு ஈட்டிகள், என்னூறு கைதிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தபூக்கில் அய்லாவின் அரசனிடமிருந்து நபிகளாருக்கு ஓர் அன்ப ளிப்பு கிட்டியது. வெள்ளை நிற கோவேறு கழுதையும், ஒரு மேலங் கியும். அவருடனும், ஜிஸ்யா செலுத்தும் நியதியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

தபூக்கில் நபிகளாருக்கும், பைஸாந்திய ஆட்சியாளர் ஹெராக்லி யஸுக்கும் இடையில் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகப் பலவீனமான சில அறிவிப்புகள் கூறுகின்றன. அதன்படி நபிகளார் திஹ்யா-அல்-கல்பீயை ஹெராக்லியஸிடம் அனுப்பி வைத்தனர். நபித்துவத்தின் அடையாளங்களைக் கண்டு கொள்ளவென ஹெராக் லியஸ் அல்-தனூகியை அனுப்பினார். இந்த அறிவிப்பு ஸஹீஹ் ஆயின், இது இரண்டாம் முறை நபிகளார் திஹ்யாவை அனுப்பிவைத்ததாக அமையும். முன்னம் ஹிஜ்ரி ஏழின் ஆரம்பத்தில் நபிகளார் திஹ்யா வைத் தனது கடிதம் ஒன்றுடன் ஸீஸரிடம் அனுப்பியிருந்தார்கள்.

இந்தப் படையெடுப்பின் போது பைஸாந்தியருடன் யுத்தம் ஏதும் நிகழவில்லை. தபூக் சென்றடைந்த முஸ்லிம்கள், பைஸாந்திய, கிறிஸ் தவ அரபு கோத்திரங்களைச் சந்திக்கவும் இல்லை. நகரங்களது ஆட்சி யாளர்கள், ஜிஸ்யா செலுத்தும் நியதியுடன் சமாதான ஒப்பந்தங்கள் செய்து கொள்வதே உசிதம் எனக் கொண்டனர். படையினர் தபூக்கில் இருபது நாட்களைக் கழித்து மதீனா திரும்பினர்.

## தபூக்கிலிருந்து திரும்புதல்.

தபூக்கிலிருந்து மதீனா திரும்பும் வழியில் முஸ்லிம்கள் அல்-ஹிஜ்ர் பிரதேசத்தைக் கடந்து வந்தனர். ஸமூத் மக்களின் பகுதி அது. (குர்ஆன் கூறுவது போல) அவர்கள் ஓர் ஒட்டகை கொண்டு பரீட்சிக்கப்பட் டார்கள். அதனை அவர்கள் பலியிட்டு விடவே மாபெரும் முழக்கம் கொண்டு அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அல்-ஹிஜ்ரின் பாழடைந்த வீடுகளின் உள் நுழைய முஸ்லிம்கள் அவசரப்பட்டனர். அவர்களைத் தடுத்து நபிகளார் கூறினார்கள்: ''தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டோரின் வதிவிடங்களுக்குள், கவலையுடனேயே அன்றி நீங்கள் புகாதீர்கள் - அவர்களுக்கு ஏற்பட்ட அழிவு உங்களுக்கும் ஏற்பட்டு விடக்கூடும்.'' பின் அன்னார் தமது தலையை மறைத்தவர்களாக அந்த வெளியைத் தமது குதிரையில் மிக வேகமாகக் கடந்தார்கள். அல்-ஹிஜ்ர் கிணறுகளிலிருந்து தண்ணீர் அருந்தவோ, வுழு செய்யவோ கூட நபிகளார் தடை விதித்தார்கள். அக்கிணற்று நீரிலிருந்து ஒட்ட கங்களுக்கான உணவுகள் செய்யப்பட்டிருப்பின் அவற்றைக் கொடுக்க லாமாயினும் படையினர் பயன்படுத்தக் கூடாது எனவும் கூறினார்கள்.

திரும்பும் வழியில் தமது ஒட்டகங்கள் பெரிதும் களைப்புற்று விட்டமை குறித்து முஸ்லிம்கள் நபிகளாரிடம் முறையிட்டார்கள். அன்னார் இறைவனிடம் பிரார்த்தித்தார்கள்: ''யா அல்லாஹ்! ஒட்ட கங்கள் தமது பளுவைச் சுமக்கும்படி செய்வாயாக! நீயே எளியாரை யும், வலியாரையும், ஈரமானதையும், காய்ந்ததையும், கடலிலும், நிலத் திலும் பளுக்களைச் சுமக்கச் செய்கிறாய்!'' ஒட்டகங்கள் தம் சக்தியை மீளவும் ஈட்டி சுமைகள் அத்தனையையும் மதீனாவுக்குக் கொண்டு வந்து சேர்த்தன. அதன் பின்னர் மக்கள் அவை குறித்து முறையிடவில்லை.

இடையில் வஞ்சகர்கள் தாம் அடையாளம் காணப்படாமல் தமது முகங்களை மறைத்தவர்களாக நபிகளாரின் ஒட்டகையைத் திகைப் புறுத்தி அன்னாரைக் கீழே தள்ளிவிட முனைந்தார்கள். என்றாலும் அவர்களைக் கண்டு கொண்ட நபிகளார், அவர்கள் அகற்றப்பட வேண்டும் எனப் பணித்தனர்.

*படையினர் மதீனாவை நெருங்கி வருகையில் இளம் சிறார்கள், அவர்களைச் சந்திக்கவென தானியத்-அல்-வதாவுக்கு வந்து சேர்ந்தனர். மதீனாவுள் நுழைந்ததும், நபிகளார் தமது பள்ளிவாசலில் இரண்டு ரக்அத் தொழுது மக்களுடன் அமர்ந்தார்கள். பின் தங்கிவிட்ட வஞ்சகர்கள் அன்னாரிடம் வந்து பல பட்ட காரணங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வெளிப்படையாகக் கூறியனவற்றை அன்னார் ஏற்றுக் கொண்டார்கள்; அவர்களது விசுவாச வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டார்கள்; அவர்களது மன்னிப்புக்காகப் பிரார்த்தித்தார்கள். அவர்களது உள்ளங்களில் இருந்தனவற்றை அல்லாஹ்வின் பால் விட்டு விட்டார்கள். கஅப்-இப்ன்-மாலிக் வந்தார். அவருக்கு முன்னால் ஹிலால்-இப்ன்-உமையாவும், மராரா-இப்ன்-அல்-ரபீஇயும் வந்திருந்தார்கள். தாம் பின் தங்கி விட்டமைக்குக் கற்பிக்கக் காரணங்கள் ஏதும் இல்லை என முடிவு செய்திருந்த அவர்கள் ஏற்கெனவே தபூக் செல்லாது விட்ட குற்றத்திற்கு மேலாகப் பொய் கூறும் குற்றத்தையும் செய்ய விரும்பவில்லை. முஸ்லிம்கள் இம்மூவருடனும் பேசுவதற்கு நபிகளார் தடைவிதித்தார்கள். இது ஐம்பது நாட்களாக நீடித்தது. அவர்களது மனைவியர் அவர்களிடமிருந்து பிரிந்திருக்க வேண்டுமென பணிக்கப்பட்டது. ஆக, அவர்கள் தமது உறவினர்களது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர், ஹிலாலின் மனைவியைத் தவிர. நன்கு முதுமையடைந்திருந்த ஹிலாலைப் பார்த்துக் கொள்ளவென நபிகளாரின் அனுமதியுடன் அவர் கணவருடன் தங்கி விட்டார். மூவரும் கதிகலங்கிப் போயிருந்தனர். கஸாஸினாவின் அரசன், நிலைமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் தன்னோடு வந்து இணைந்து கொள்ளும்படி கஅப்-இப்ன்-மாலிக்குக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தான். தான் மேலும் சோதனைகளுக்குள்ளாக்கப்படுவதாகவே கொண்ட கஅப், கடிதத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார். இவ்வாறு அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தமை மேல்வரும் குர்ஆன் வாசகம் அருளப்படும் வரை தொடர்ந்தது:*

''(அந்த) மூவர் மீதும் (பாவமீட்சியை ஏற்றுக் கொண்டான்;) அவர்கள் எத்தகையவர்களென்றால் (அல்லாஹ்வின் உத்தரவை எதிர்பார்த்துத் தீர்ப்பு வழங்கப்பெறாமல்) அவர்களின் மீது பூமி - அது விசாலமாக இருந்தும் நெருக்கடியாகி இன்னும் அவர்களின் மீது அவர்களது உயிர்களும் நெருக்கடியாகி, நிச்சயமாக அல்லாஹ்வை விட்டும் (வேறு) ஒதுங்குமிடம் அவன் பக்கமே தவிர வேறில்லை என்பதை அவர்கள் உறுதியாக அறிந்து கொள்ளும் வரையில் - அவர்கள் பிற்படுத்தி வைக்கப்பட்டிருந்தனர். பின்னரும் பாவங்களை

விட்டும் அவர்கள் மீள்வதற்காக அவர்களின் பாவமீட்சியை ஏற்றுக் கொண்டான். நிச்சயமாக அல்லாஹ், அவன் தான் பாவமீட்சியை ஏற்கிறவனாகவும் மிகக் கிருபையுடையவனாகவும் இருக்கிறான்.'' (அத்தவ்பா 9:118)

## *தபூக் படையெடுப்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அஹ்காம்.*

*1. நபிகளார், அப்த்-அல்-ரஹ்மான்-இப்ன்-அவ்ப்பின் பின்னாலிருந்து தொழுதார்கள். அவ்வேளை அப்த்-அல்-ரஹ்மான்-இப்ன்-அவ்ப் தபூக்கில், ஸலாத்-அல்-பஜ்ரில், முஸ்லிம்களுக்குத் தொழுகை நடாத்திக் கொண்டிருக்க, ஏதோவொரு காரணத்தினால் தாமதப்பட்டிருந்த நபிகளார் பின்னால் வந்து இணைந்து கொண்டனர். அன்னார் வந்த வேளை அப்த்-அல்-ரஹ்மான் பின்னால் வர எத்தணித்தார். ஸலாவைப் பூரணப் படுத்தும்படி அப்த்-அல்-ரஹ்மானுக்கு சைகை செய்து அவரின் பின்னால் நின்று தொழுதனர் நபிகளார். இதிலிருந்து சிறியோர் ஸலாவை நடாத்துவதும் மேலோர் பின் நின்று தொழுவதும் அனுமதிக்கப்பட்டதாயது.*

*2. முஆத்-இப்ன்-ஜபல், மதீனா திரும்பும் வழியில் தனக்குச் சுவனம் புகுவதற்கு வழிவகுக்கும் ஒரு கருமம் குறித்து வினவினார். நபிகளார் கூறினார்கள்: அத்தகு கருமத்தின் சிரசு 'ஷஹாதா'வாக இருக்கும். அதன் கட்டமைப்பு 'ஸலா'வும் 'ஸகா'வும் ஆகும். அதன் சிகரம் 'ஜிஹாத்'.*

*3. இதன் போது 'ஸலா'வில் ஈடுபட்டிருப்போரது 'ஸுத்ரா' (இடப் பரப்பு) பற்றி அன்னார் வினவப்பட்டார்கள். அது ஒட்டகச் சேணத்தின் இறுதிப்பகுதியின் அளவு என்றார்கள் நபிகளார்.*

*4. நபிகளார் ஸலாத்-அல்-ளுஹர்ரையும், அல்-அஸ்ர்ரையும் சேர்த்துத் தொழுதார்கள். அவ்வாறே மஃரிபையும் இஷாவையும்.*

*5. அன்னார் தபூக்கில் இருபது தினங்கள் தங்கினார்கள். அக்காலத்தில் 'ஸலா'வைச் சுருக்கித் தொழுதார்கள்.*

*6. தபூக் செல்லும் வழியில் நபிகளார் வாதி-அல்-குராவின் ஒரு பழத் தோட்டத்தில், அதனை மதிப்பீடு செய்தார்கள். அதாவது பேரீச்சை மரங்களிலிருந்து எவ்வளவு பழுத்த பழங்களை அறுவடை செய்யலாம் என. ஆக மதிப்பீடு செய்தல் அனுமதிக்கப்படலாகும்.*

*7. தபூக்கில் ஒரு வீட்டில் நபிகளார் தண்ணீர் வேண்ட, தோலி னாலான ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொடுக்கப் பெற்றார்கள். மரித்த மிருகத்துத் தோல் குறித்து அன்னார் கூறினார்கள்: 'பதனிடுவதால் அது தூய்மையடைகிறது'.*

*8. மூன்று ஸஹாபாக்களை அவர்கள் பின் தங்கி விட்டமைக்காகச் சமூகத்திலிருந்து புறக்கணித்து வைத்தமை, ஒரு முஸ்லிமை, 'ஷர்இ' காரணம் ஏதும் இருப்பின் மூன்று நாட்களுக்கு மேல் புறக்கணித்து வைக்கலாம் என்பதை உணர்த்துகின்றது.*

*இந்த படையெடுப்பு அரேபிய தீபகற்பத்தின் வட பிரதேசங்களில் இஸ்லாமிய ஆதிக்கத்தை நிறுவும் நோக்கில் வெற்றி கண்டது. அதுவே பரந்த ஸிரியாவின் விடுதலைக்கு முன்னோடியாகவும் அமைந்தது. தமது மறைவுக்குச் சற்று முன்னர் நபிகளார் உஸாமா-இப்ன்-ஸைத்-இப்ன்-ஹாரிஸாவின் தலைமையில் ஒரு படையைத் தயார் செய்தனர். நபிகளாரின் மறைவு காரணமாக படையினர், அபூ பக்ர்-அல்-ஸித்தீக் கின் கிலாபா வரையில் புறப்பட்டுச் செல்ல முடியவில்லை. மதீனா வையும் இஸ்லாத்தையும் அச்சுறுத்தி வந்த 'ரித்தா' (மதத்துறவு) இயக் கங்களின் மத்தியிலும் அபூபக்ர், படையினர் ஸிரியாவுக்கு அனுப் பப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். நிலைமை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டவுடனேயே ஸிரியாவையும் ஈராக் கையும் விடுவிக்க அபூபக்ர் படைகளைத் தயாரித்து அனுப்பினார். மானுட இனத்தைக் கொடுங்கோன்மை, அடக்குமுறை ஆகியவற்றி லிருந்தும், அல்லாஹ்வைத் தவிர்த்து வேறெதனையும் வணங்குவதி லிருந்தும் விடுவிக்கும் இஸ்லாமியப் பணிக்காக இது மேற்கொள் ளப்பட்டது:*

''குழப்ப(மும், ஒழுங்கீனமு)ம் ஏற்படாமல் மார்க்கம், அது முழு வதும் அல்லாஹ்வுக்காகவே ஆகும் வரையில்...'' (அல்-அன்ஃபால் 8:39)

# தூதுக்குழுக்களின் வருடம்

ஹிஜ்ரி ஒன்பதாம் வருடம் தூதுக்குழுக்களின் வருடம் 'ஆம்-அல்-வுபூத்' என வழங்கியது. ஹிஜ்ரி எட்டின் இறுதியில் நபிகளார் அல்-ஜரானாவில் இருந்து திரும்பியதும், அரேபிய தீபகற்பத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து தாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமையைப் பிரகடனப்படுத்தும் முகமாக அரபு கோத்திரங்களது தூதுக்குழுக்கள் வர ஆரம்பித்தன. மக்க விடுதலை நடைபெற்ற வரை, இஸ்லாம் குறித்த தமது தீர்மானத்தைத் தாமதப்படுத்தி வந்த அரேபியர், அது நிகழ்ந்த வுடன் தமது இஸ்லாத்தைப் பிரகடனப்படுத்தத் துரிதப்பட்டார்கள். இந்தத் தூதுக்குழுக்கள் பற்றிய பூரணமான விளக்கங்களை அளிப்ப தாயுள்ளது இப்ன்-ஸஅத்தின் 'தபகாத்' என்றே கொள்ளப்படுகின்றது. தூதுக்குழுக்களின் மொத்த எண்ணிக்கை அறுபதுக்கும் மேற்பட்ட தென்றே மூல ஆதாரங்கள் காட்டுகின்றன.

தூதுக்குழுக்கள் பற்றிய இந்த அறிவிப்புகள், பொதுவாக இஸ்னாத் ஏதும் இல்லாமலேயே பதிவாகியுள்ளன. இது குறித்த விவரமான அறிவிப்புகளைத் தரும் ஆரம்ப அறிஞர், இப்ன்-இஸ்ஹாக். அவரும் சில சந்தர்ப்பங்களிலேயே தனது மூல ஆதாரங்களையும், அதற்கான இஸ்னாத்களையும் தருகின்றார். அரிதான இந்த அறிவிப்புகள் ஸுஹ்ரீ, அப்த்-அல்லாஹ்-இப்ன்-அபூபக்ர், ஹஸன்-அல்-பஸரீ ஆகியோரது 'மராஸீல்' மூலம் கிட்டுவன. திமாம்-இப்ன்-தஅலபா தூது வந்த சம்பவத்துக்கு மாத்திரம் அவர் இப்ன்-அப்பாஸ் வரை செல்லும் ஓர் இஸ்னாத்தை அளிக்கின்றார். அந்த இஸ்னாத் வரிசையில் அடங்கியுள்ள முஹம்மத்-இப்ன்-அல்-வலீத்-இப்ன்-நுவைபீ ஏற்கப்பட்டவராயினும் பலமானவரல்லர். அதனால் இந்த அறிவிப்பு பலவீனமடைகின்றது. இப்ன்-இஸ்ஹாக் தரும் தூதுக்குழுக்கள் வருமாறு: பனூ தமீம், பனூ ஆமிர், பனூ ஸஅத்-இப்ன்-பக்ர், அப்த்-அல்-கைஸ், பனூ ஹனீபா,

தய்ய், பனூ-ஸுபைத், கின்தா, ஹிம்யார் அரசர்கள், பனூ-அல்-ஹாரிஸ்-இப்ன்-கஅப், ஹம்தான், அதிய்ய்-இப்ன்-ஹாதிம், பர்வா-இப்ன்-மஸீக்-அல்-முராதீ, ஸரத்-இப்ன்-அப்த்-அல்லாஹ்-அல்-அஸ்தீ, பர்வா-இப்ன்-அம்ர்-அல்-ஜிதாமீ. தூதுக்குழுக்கள் பற்றிய இந்த அறிவிப்புகளில் இப்ன்-இஸ்ஹாக் பல கவிதைகளை உள்ளடக்கியுள்ளமையும் கவனிக்கத் தக்கது.

இப்ன் ஸஅத், தூதுக்குழுக்கள் பற்றிய அறிவிப்புகள் அனைத்தையும் மிக நுனுக்கமாகப் பரிசீலனை செய்துள்ளார். என்றாலும் கூடுதலான அறிவிப்புகள், அல்-வாகிதீ, ஹிஷாம்-அல்-கல்பீ ஆகியோரிடமிருந்தே பெறப்பட்டுள்ளன. இருவரும் மத்ரூக். சில அறிவிப்புகள் தவிர்த்து ஏனையவை அலீ-இப்ன்-முஹம்மத்-அல்-மதாயினீயிடமிருந்து வந்துள்ளன. இவர் ஸதூக். எவ்வாறாயினும் இப்ன்-ஸஅத் தரும் அறிவிப்புகளின் இஸ்னாத்கள் அனைத்தும் பலவீனமான அறிவிப்பாளர்களைக் கொண்டுள்ளன, அல்லது 'முர்ஸல்' ஆக அமைந்தன. அவர் தரும் அறிவிப்புகளில் சில அப்பான்-இப்ன்-முஸ்லிம், ஆரிம்-இப்ன்-அல்-பத்ல்-அல்-ஸதூஸீ ஆகியோரிடமிருந்து கிட்டுவன.

தூதுக்குழுக்கள் பற்றி வரலாற்றாசிரியர்கள் தரும் விரிவான அறிவிப்புகள் அனைத்தும் முஹத்திதூன்களின் பார்வையில் ஸஹீஹாக அமைவனவல்ல. என்றாலும் இத்தூதுக்குழுக்களில் சிலவற்றின் வருகை ஸஹீஹ் அறிவிப்புகளினால் மெய்ப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஆதாரமாக மேலும் சில அறிவிப்புகளும் காணப்படுகின்றன. அல்-இமாம்-அல்-புஹாரீ, பனூ தமீம் தூதுக்குழுவினரின் வருகையைப் பதிவு செய்துள்ளார். ஸூரா-அல்-ஹுஜுராத், அத்தூதுக்குழுவின் சிலர் எவ்வாறு முரட்டு சுபாவத்தராக ஒழுக்கங்குன்றிய வகையில் நடந்து கொண்டனர் எனக் காட்டுகின்றது. நபிகளாரின் அனுமதிகள் ஏதும் பெறாது அவர்கள் அன்னாரின் அறைக்கு வெளியே இருந்து அன்னவரை உரத்த குரலில் அழைத்தமை குறிக்கப்படுகின்றது. ஐயங்களேதுமின்றி, ஸூரா-அல்-ஹுஜுராத், இந்த சந்தர்ப்பத்தில் நபிகளாரை விளிக்கும் ஒழுக்கமுறை, அன்னாரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் முதலானவற்றை முஸ்லிம்கள் அனைவருக்குமே கற்பிப்பதாக அமைகின்றது.

மேலும் அல்புஹாரி, அப்த்-அல்-கைஸ், பனூ ஹனிபா கோத்திரங்களது தூதுக்குழுக்களின் வருகை குறித்தும் பேசுவார். அவர்களுள் கபடவேஷதாரி முஸைலிமாவும் இருந்தான். நபிகளாரின் பின்னர் அன்னாருடைய பொறுப்புகள் அனைத்தும் தனக்கே கிடைக்க வேண்டும் என்ற நியதியுடன் இஸ்லாத்தை ஏற்கத் தயார் என்றான் அவன்.

*பேரீச்ச மரக்கிளையின் ஒரு சிறு பகுதியைக்கூட அவனுக்குத் தரு வதற்கில்லை எனக் கூறிய நபிகளார், அவன் விளைக்கக்கூடிய கல கங்கள், அடக்குமுறை என்பனவற்றை விவரித்தனர். நஜ்ரான் தூதுக் குழு பற்றியும் விவரித்தார் அல்-புஹாரி. அதில் நஜ்ரானின் ஆட்சி யாளர்களாயிருந்த அல்-ஆகிப், அல்-ஸெய்யித் ஆகியோரும் இருந்த னர். நபிகளார் அவர்களை இஸ்லாத்தின்பால் அழைக்க, அவர்கள் மறுத்தார்கள். எனவே அவர்களை பிரார்த்தனை மூலமான பரீட்சை (முபாஹலாஹ்)க்கு அழைத்தனர் அண்ணலார். அவ்வேளை அருளப் பட்ட இறைவாசகங்கள் கூறின:*

> ''அல்லாஹ்விடம் நிச்சயமாக ஈஸாவுக்கு உதாரணமாகிறது ஆத முடைய உதாரணத்தைப் போன்றதாகும். அவரை (அவர் வடி வத்தை) மண்ணிலிருந்து அவன் படைத்துப் பின் அதனை நோக்கி 'குன்' (நீ ஆகுக) என்று கூறினான். உடனே அது (மனிதனாக) ஆகி விட்டது. இது உமது இறைவனிடத்திலிருந்து (வந்து)ள்ள உண்மை யாகும். ஆகவே சந்தேகிப்பவர்களில் உள்ளவராக நீர் ஆகிவிட வேண்டாம். (நபியே! ஈஸாவைப் பற்றியுள்ள உண்மை) ஞானம் உமக்கு வந்தபின், இது பற்றி எவரேனும் உம்மிடம் தர்க்கம் செய்தால், (அவரிடம்) ''வாருங்கள். எங்களுடைய ஆண் மக்களை யும், உங்களுடைய ஆண் மக்களையும், எங்களுடைய பெண் களையும், உங்களுடைய பெண்களையும், இன்னும் எங்களையும், உங்களையும் நாம் அழைத்து (ஒன்று திரட்டி) பிறகு அல்லாஹ் விடம் நாம் இறைஞ்சுவோம்; பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபத்தை நாம் ஆக்குவோம்'' என்று நீர் கூறுவீராக.
> (ஆல-இம்ரான் 3:59-61)

*பிரார்த்தனை மூலமான இந்த சோதனைக்கு உட்பட அவர்கள் இணங்கினார்கள். என்றாலும் தீர்வு தமக்கு எதிராகச் செல்லலாம் என்ற அச்சத்தில் ஜிஸ்யா செலுத்த ஒப்புக் கொள்வதன் மூலம் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள அவர்கள் முன்வந்தார்கள். நபிகளார் அபூ-உபைதா-ஆமிர்-இப்ன்-அல்-ஜர்ராவை, ஜிஸ்யா அறவிட்டு வர அனுப்பி னார்கள். ஜிஸ்யா செலுத்தும் கடப்பாட்டுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள எடுக்கப்பட்ட முடிவின் மூலம் நஜ்ரான் மக்கள் இஸ்லாமிய அரசின் சார்பினராகவே, பைஸாந்தியருடனான அவர்களது உறவுகள் துண்டிக்கப்பெற்றன. இது ஸிரியாவில் பைஸாந்தியருக் கெதிராக முஸ்லிம்கள் தொடுக்கவிருந்த போராட்டங்களுக்கு மேலதிக பாதுகாப்பை வழங்குவதாயமைந்தது.*

அல்-புஹாரி மேலும், அஷ்-அரீக்கள், யமன், மூஸா, தய்ய், அதிய்ய்-இப்ன்-ஹாதிம்-அல்-தாயீ கோத்திரங்களது வருகையையும் பதிவு செய்துள்ளார்.

பனூ-ஸஅத்-இப்ன்-பக்ர்- கோத்திரத்தார், மதீனாவுக்கு திமாம்-இப்ன்-தஅலபாவைத் தூதுவராக அனுப்பியமையை இப்ன் அப்பாஸ் குறிப்பிடுகின்றார். முரட்டு சுபாவத்தரான அவர், கற்றையான கூந்தலை இரண்டு பின்னல்களாக வகுத்திருந்தார். பள்ளிவாசல் கதவருகில் தனது ஒட்டகையை முழந்தாளிட வைத்து அதனைக் கட்டியபின் பள்ளிவாசலுள் நுழைந்தார் அவர். நபிகளார் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அவர் கேட்டார்: ''உங்களில் யார் அப்த்-அல்-முத்தலிபின் மகன்?'' நபிகளார் கூறினார்கள்: ''நான் தான் அப்த்-அல்-முத்தலிபின் மகன்''. திமாம் கேட்டார்: ''முஹம்மத்?'' நபிகளார் கூறினார்கள்: ''ஆம்!''. திமாம் கூறினார்: ''ஓ முஹம்மத்! நான் உம்மிடம் தெளிவான சில கேள்விகள் கேட்பேன். நீர் கோபப்படாதீர். ஏனெனில் உம்முடன் எனக்குக் கோபமில்லை''. நபிகளார் கூறினார்கள்: ''நீர் வேண்டுவதைக் கேளும்''. திமாம் கூறினார்: ''உம்மை நான் இரந்து கேட்கின்றேன்; இறைவன் பெயரால், உம்மை இறைவன் எமக்கு ஒரு தூதுவராக (ரஸூல்) அனுப்பியுள்ளானா?'' அன்னார் கூறினார்கள்: ''அல்லாஹூம்ம, ஆம்!''. திமாம் கேட்டார்: ''இறைவன் பெயரால் நான் உம்மிடம் இரந்து கேட்கின்றேன். இறைவன் நாம் அவனை மட்டுமே வணங்க வேண்டும் என்றும், அவனுக்கு இணையாக எதையும் கொள்ளக் கூடாது என்றும், எமது முன்னோர் வழிபட்டு வந்த சிலைகளையும் ஏனையவற்றையும் துறந்து விட வேண்டுமென்றும் கட்டளையிட்டுள்ளானா?'' நபிகளார் கூறினார்கள்: ''அல்லாஹூம்ம, ஆம்!''

பின்னர் திமாம், இஸ்லாத்தின் பராயில் ஆக அமைந்த ஒவ்வொரு கடமை குறித்தும் இறைவன் பெயரால் வினவினார். அனைத்தும் முடிய திமாம் கூறினார்: ''வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் மட்டுமே என்றும், நீர் அவனுடைய சேவகனும், தூதுவரும் ஆவீர் என்றும் நான் சாட்சியம் கூறுகின்றேன். இந்தக் கடமைகள் அனைத்தையும் நான் நிறைவேற்றுவேன். நீர் தடுத்துள்ள அனைத்தையும் தவிர்ந்திருப்பேன். இவற்றில் எதையும் கூட்டவோ, குறைக்கவோ மாட்டேன்''. திமாம் அங்கிருந்து அகன்றதும் நபிகளார் கூறினார்கள்: ''அவர் சொல்வதைச் செய்வாராயின் சுவனம் புகுவார்''.

தமது மக்களிடம் சென்ற திமாமை அவர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் முன்னிலையில் அவர் 'அல்-லாத்'தையும், 'அல்-உஸ்ஸா'வையும் நிராகரித்துப் பேசினார். அவர்கள் கூறினார்கள்: ''ஓ திமாம்!

குஷ்டரோகம், சித்த சுவாதீனம் குறித்து எச்சரிக்கையாக இருப்பீராக!'' திமாம் கூறினார்: ''உங்களுக்குக் கேடு விளைவதாக! இறைவன் பெயரால் இவை இரண்டாலும் நன்மை பயக்கவோ, கேடு விளைக் கவோ முடியாது. இறைவன் உங்களுக்கு ஒரு தூதுவரை அனுப்பி யுள்ளான். நீங்கள் இதுவரை இருந்த நிலையிலிருந்து உங்களைக் காப்பாற்றவென ஒரு வேதத்தையும் அனுப்பியுள்ளான். அல்லாஹ் வைத் தவிர கடவுளர் எவரும் இல்லை எனவும், முஹம்மத் அவனது சேவகரும், தூதரும் ஆவார் எனவும் நான் கூறுகின்றேன். அவரிட மிருந்தே நான் வந்துள்ளேன் - உங்களுக்கான கடமைகளுடனும், நீங் கள் தவிர்க்க வேண்டியவைகளுடனும்''. மாலையான வேளையில், சமூகமளித்திருந்த ஆண்-பெண் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றி ருந்தனர்.

ஆக, ஹிஜ்ரி ஒன்பதில் இஸ்லாத்தை ஏற்கும் முகமாக தூதுக் குழுக்கள் மதீனா வரத் தொடங்கியமை தெளிவு. என்றாலும் இது சம்பந்தமான அறிவிப்புகளின் விவரணங்கள், வரலாற்று ரீதியில் நன்கு அலசப்பட வேண்டும். இவற்றுள் அமைந்துள்ள கவிதைகளும் ஆழ்ந்த பரிசீலனைகளுக்குள்ளாக வேண்டும் - அவை வரலாற்று நோக்கில் ஸஹீஹ் ஆனவையா? அல்லவா? எனக் கண்டு கொள்ள.

ஆக, அராபிய தீபகற்பத்தில் ஹிஜ்ரி ஒன்பதில் இஸ்லாம் தனது ஆதிக்கத்தை உறுதி செய்து கொண்டது. தீபகற்பம் இஸ்லாத்துக்கு முன்னர் சிற்சிறு அரசுகளையும், அரசியல் முறைகளையும் கண்டி ருந்தாலும், முதன் முறையாக அது இஸ்லாமிய கொடியின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டது. முன்னம் இருந்த எந்த ஓர் அரசும் - மாஈன், ஸபாஅ, ஹிம்யார், கிந்தா, அல்-கஸாஸினாஹ், அல்-முனாதிரா எது வுமே - அரேபிய தீபகற்பத்தைத் தமது கொடியின் கீழ் ஒன்றிணைக்க இயலவில்லை. மேலும் இந்த சிறு அரசுகளின் அமைப்பும் பலம் குன்றி, இஸ்லாத்தின் வருகைக்கு முன்னால் நாடோடி வாழ்க்கை யமைப்பே பரந்திருந்தது. அராபிய சிந்தையில் ஆழ்ந்து வேரூன்றி யிருந்த அஸபீயா, ஜாஹிலீ மனப்பாங்குகள் அனைத்துக்கும் மத்தியில் நபிகளார் பத்து வருட காலத்துள் முழு அராபிய தீபகற்பத்தையும் ஒன்றுபடச் செய்து விட்டனர். இது வெறுமனே மேல் வாரியானதோர் ஒற்றுமையாக அமையவில்லை. அது மக்களது ஆன்மாவிலும், சிந்தை யிலும், நடத்தையிலும் ஆழப் பதிந்திருந்தது. அதனால், இஸ்லாமிய அரசொன்று கட்டியெழுப்பப்பட உறுதியானதோர் அத்திவாரமாக அராபிய தீபகற்பம் அமைந்தது. அதுவே பின்னைய காலங்களில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா என சகல திக்குகளிலும் பரந்தது.

# அபூபக்ர் தலைமையிலான ஹஜ்

*மக்க விடுதலை நிகழ்ந்த வருடம் நபிகளார் ஹஜ் செய்யவில்லை. அன்னார் உம்ரா செய்து மதீனா திரும்பினர். முஸ்லிம்களும் முஷ்ரி கூன்களும் இணைந்து ஹிஜ்ரி எட்டில் ஹஜ் செய்தனர். ஹிஜ்ரி ஒன்பதில் நபிகளார் அபூபக்ரை ஹஜ் செய்யும்படி பணித்தனர். அபூபக்ர், தூ-அல்-ஹிஜ்ஜாவில் மக்கா சென்றார். அவருடன் ஹஜ் செய்தவர்களின் எண்ணிக்கையைத் தருபவர் அல்-வாகிதீ மட்டுமே. அவர் கூறினார்: ''அபூ பக்ருடன் முன்னூறு ஸஹாபாக்கள் சென்றனர்; பலியீட்டுக்காக இருபது பிராணிகளைக் கொண்டு சென்றனர்''.*

*தமது தோழர்களுடன் அபூபக்ர் மதீனாவை விட்டும் சென்ற வேளை ஸூறா-அல்-தவ்பா (பராஅஹ்) அருளப்பட்டது. நபிகளார் ஸூறாவின் முதல் பாகத்தை ஹஜ்ஜின் போது மக்களுக்கு அறிவிப்பதற்காக அலீ-இப்ன்-அபூ தாலிப்பை அனுப்பினார்கள். பலியீட்டு நாளான தூ-அல்-ஹிஜ்ஜாவின் பத்தாவது நாளன்று. நபிகளார் கூறினார்கள்: ''எனது சொந்த இல்லத்தார் ஒருவரேயன்றி, வேறு எவரும் அதனை அறிவிக்க மாட்டார்.'' அபூபக்ர், அலீயைக் கண்டதும் அவர் வந்தது கட்டளைகள் பிறப்பிக்கவா? அல்லது அவற்றை அறிவிக்கவா? என வினவினார். அலீ கூறினார்: ''அவற்றை அறிவிக்கவே!'' இருவரும் ஒன்றாகச் சென் றனர். அபூபக்ர், ஹஜ்ஜின் அமீர் ஆக; அலீ, ஸூறா பராஅஹ்வின் முதல் பாகத்தை அறிவிப்பதற்காக. அபூ ஹுரைரா உட்பட ஸஹாபாக்கள் பலர் அதனை மக்களுக்கு எத்திவைப்பதில் உதவினர்.*

*அலீ-இப்ன்-அபூ-தாலிப் நான்கு கட்டளைகளுடன் அனுப்பப்பட் டார் என அறிவிக்கப்பட்டுள்ளது: ''அவிசுவாசி எவரும் சுவனம் புகமாட்டார்; நிர்வாணத்தவராக எவரும் கஃபாவை தவாப் செய்ய மாட்டார்; இந்த வருடத்தின் பின் முஷ்ரிக் எவரும் ஹஜ் செய்ய*

*மாட்டார்; நபிகளாருடன் யாரும் ஒப்பந்தம் செய்திருப்பின் அதன் காலம் முடியும் வரை அது வலுவானதாயிருக்கும்''.*

*ஸூரா 'பராஅஹ்'வின் முதல் பாகம், முஸ்லிம்களுக்கும் சிலை வணக்கஸ்தர்களுக்கும் இடையில் தெளிவான பிரிபாட்டை முன்வைத் தது. சிலை வணக்கஸ்தர்கள் ஹிஜ்ரி ஒன்பதின் பின்னர் ஹஜ் செய்வ தைத் தடுத்து, அவர்கள் மீது போர் தொடுக்க அனுமதித்தது அது. முஸ்லிம்களோடு கூட்டு சேர்ந்திருந்தோர்க்கு ஒப்பந்த காலம் முடியும் வரை அவகாசம் அளிக்கப்பட்டது. முஸ்லிம்களுடன் ஒப்பந்தங்கள் செய்திருந்தோர்க்கு (அஹ்த்) கால எல்லை வரையறை அற்றதாக நீடிக் கப்பட்டது அல்லது தூ-அல்-ஹிஜ்ஜாவின் பத்தாவது தினத்திலிருந்து நான்கு மாத காலத்துக்கு நீட்டிக்கப்பட்டது. முஸ்லிம்களுடன் ஒப்பந் தங்கள் ஏதும் செய்திராத சிலை வணக்கஸ்தர்களுக்கு புனித மாதங்கள் முடியும் வரை, முஹர்ரம் மாதத்தின் ஆரம்பம் வரை, அதாவது ஐம்பது நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டது.*

> ''(இறை நம்பிக்கையாளர்களே!) இணைவைப்பவர்களில் நின்றும் நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்டீர்களே, அத்தகையோரள வில் அல்லாஹ்விலிருந்தும், அவனுடைய தூதரிலிருந்தும் (இது) விடுதலையாகும். (இணைவைப்பவர்களை நோக்கி) 'ஆகவே (இந்த மக்கா) பூமியில் (துல்ஹஜ் பத்தாம் நாளான இன்றிலிருந்து ரபீஉல் ஆகிர் பத்தாம் நாள் முடியவுள்ள இந்)நான்கு மாதங்கள் (எங்கும்) நீங்கள் சுற்றித் திரியுங்கள். (அதன் பின் புனித பூமியான மக்காவை விட்டும் வெளியேறி விட வேண்டும்; இந்த இடைப்பட்ட காலத்தில்) நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வைத் தோற்கடிக்க முடி யாது என்பதையும் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்களை இழிவுபடுத்துவான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்' (என்று நபியே! நீர் கூறுவீராக) இந்த மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் மக்கள் பால் அறிவிக்கப்படுவதாவது: 'நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இணைவைப்பவர்களிடம் (செய்து கொண்ட உடன்படிக்கையில்) இருந்து நீங்கிக் கொண்டார்கள்' (என்பதாகும்). எனவே (இணைவைப்பவர்களே!) நீங்கள் பாவமன்னிப்புக் கோரி னால் அது உங்களுக்கு நலமாகும்''. (அத்-தவ்பா 9:1-3)

*இஸ்லாமியத் தூதின் இருபத்தியிரண்டு வருடங்கள் கழிந்துவிட் டன. இந்த கால கட்டத்தில் முஸ்லிம்கள் தம்மால் இயன்ற அனைத்து முயற்சிகளையும், அனுமதிக்கப்பட்ட அனைத்து வழிமுறைகளையும்*

அத்தூதைப் பரப்பிவைப்பதற்குப் பயன்படுத்தினார்கள். என்றாலும், சில முஷ்ரிகூன், இன்னமும் சிலைகளை வணங்கவும், ஜாஹிலிய்ய பழக்கவழக்கங்களின்படி கஃபாவைத் தவாப் செய்யவும் பிடிவாதம் செய்து வந்தனர். அவர்களைத் தெளிவாகவே அடையாளம் கண்டு, அவர்களது முரட்டு சுபாவத்துக்கும், சத்தியத்தின் அழைப்பு குறித்த அவர்களது அறியாமைக்கும் ஒரு முடிவு கட்ட காலம் இப்போது கனிந்து விட்டது.

விவகாரம் அதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. ஏற்கெனவே மக்களுக்குத் தெளிவூட்டும் முனைவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கு இஸ்லாமிய நெறிமுறைகள் போதிக்கப்பட்டன. இஸ்லாத்தின் கீழ் புதிதாக வந்த தூரப் பிரதேச பின் தங்கிய பகுதிகள் ஒழுங்கமைக்கப்பட்டன. தமது இறுதி ஹஜ்ஜின் முன்னர் நபிகளார், அபூ-மூஸா-அல்-அஷ்அரீயையும், முஆத்-இப்ன்-ஜபல்லையும் ஒவ்வொரு மாகாணத்தை நிர்வகிக்கவென யமனுக்கு அனுப்பி வைத்தார்கள். இருவருக்கும் அறிவுரை பகர்ந்தனர் அன்னார்: ''மக்களுக்கு இலகுவாக்கி வையுங்கள்; விவகாரங்களை அவர்களுக்குச் சிரமமாக்காதீர்கள்; மக்களுடன் அன்பாகவும், கருணையுடனும் நடந்து கொள்ளுங்கள்; அவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ளாதீர்கள்; அவர்களுக்கு நன்மை பயப்பனவற்றையே செய்யுங்கள்; அவர்களைத் துரத்தி விடாதீர்கள்.''

அன்னார் முஆதுக்குக் கூறினார்கள்: ''வேதங்கொடுக்கப்பட்டவர்களிடம் நீர் செல்வீர். அவர்களைச் சேர்ந்ததும், அவர்களை அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவும் வணக்கத்துக்குரியதல்ல எனவும், முஹம்மத் அவனது தூதுவர் ஆவார் எனவும் சாட்சியம் கூறும்படி அழையும். அதனை அவர்கள் ஏற்பார்களாயின் இறைவன் அவர்கள் மீது ஒவ்வொரு இரவும் பகலும் ஐவேளை 'ஸலாஹ்'வை நியமம் செய்துள்ளான் எனக் கூறும். அதில் அவர்கள் உம்மைப் பின்பற்றுவார்களாயின் இறைவன் அவர்கள் மீது ஸதகாவை (ஸகாஹ்) செல்வந்தரிடமிருந்து பெற்று வறியவர்களுக்கு அளிக்கும்படி கூறியுள்ளான் எனக் கூறும். அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களாயின் கவனமாக இருந்து கொள்ளும். அவர்களது பொருட்களில் சிறந்தவற்றை (ஸகாவாக) எடுத்துக் கொள்ளாதீர். ஒடுக்கப்பட்ட ஒரு மனிதனின் சாபம் குறித்து எச்சரிக்கையாக இருந்து கொள்ளும். ஏனெனில் அத்தகு ஒரு மனிதனின் பிரார்த்தனைக்கும் இறைவனுக்கும் இடையில் எவ்வித திரையும் இல்லை''.

*நபிகளார் முதலில் காலித்-இப்ன்-அல்-வலீதை யமனுக்கு அனுப்பி னார்கள். பின்னர் அவருடைய இடத்துக்கு அலீ-இப்ன்-அபூ-தாலிபை அனுப்பினார்கள். அங்கேயே தங்கியிருந்த அலீ, நபிகளாரின் இறுதி ஹஜ்ஜின் போது அன்னாரை இணைந்து கொள்ளவெனத் திரும்பி வந்தார். ஹமதான் கோத்திரங்களுக்கு மத்தியில் இஸ்லாத்தைப் பரப்புவதில் அலீ வெற்றி கண்டிருந்தார்.*

# இறுதி ஹஜ் யாத்திரை

*இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்று ஹஜ். இது கடமையென விதி செய்யப்பட்ட ஆண்டு ஹிஜ்ரி பத்து, ஒன்பது, ஆறு எனப் பல வாறான அறிவிப்புகள் உள்ளன. ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு, தாம் ஹஜ் செய்ய உத்தேசித்திருப்பதாக நபிகளார் அறிவித்தார்கள். மதீனாவுக் கான ஹிஜ்ராவின் பின்னர் நபிகளார் மேற்கொண்ட ஒரேயொரு ஹஜ் இதுவாகும். அரேபிய தீபகற்பத்தின் எல்லாத் திக்குகளிலிருந்தும் முஸ்லிம்கள் அன்னாருடன் இணைந்து ஹஜ் செய்வதற்கென வந்து சேர்ந்தார்கள். தூ-அல்-கஃதா முடிவடைய ஐந்து தினங்கள் இருக்க நபிகளார் புறப்பட்டார்கள். அன்னார் அரபாவில் தரித்திருந்த வேளை மேல் வரும் வாசகம் அருளப் பெற்றது:*

> ‘‘இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்கு நான் பரிபூரணமாக்கி விட்டேன்; மேலும் என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது நிரப்பமாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்கு இஸ்லாத்தை(யே நன்)மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன்.’’ (அல்-மாயிதா 5:3)

*முஸ்லிம்கள் ஹஜ் சம்பந்தமான ஆசாரங்களை நபிகளாரிடமிருந்து கற்றுக் கொண்டனர். அன்னார் கூறினார்கள்: ‘‘உங்களது ஆசாரங்களை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.’’ அன்னாருடைய ஹஜ், ஷரீஆவுக்கான சட்டங்கள் நிரம்பப் பெற்றதாயிருந்தது. அரபாவின் உரையில் பொதுவான அறிவுறுத்தல்களும், சட்டங்களும் தெளிவுறுத் தப்பட்டன. அதனால் அறிஞர்கள் இறுதி ஹஜ் யாத்திரை குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டோராயிருந்தனர். அதிலிருந்து ஹஜ் குறித் தும், அதனோடியைந்த விவகாரங்கள் குறித்தும் பல சட்டவிதிகளை அவர்கள் நிர்ணயம் செய்து கொண்டார்கள்.* ‘பிக்ஹ்’ தொகுப்புகளும்,

ஹதீஸ் விவரணங்களும் இவற்றால் நிரம்பியுள்ளன. சில அறிஞர்கள் இறுதி ஹஜ் யாத்திரை சம்பந்தமாக மாத்திரம் தனி நூல்கள் எழுதி யுள்ளனர்.

இந்நிகழ்வில் பெரும் தொகையினர் பங்கு பற்றினர். தூ-அல்-ஹிஜ்ஜாவின் பின்னரான மூன்று தினங்களைக் குறிக்கும் அய்யாம்-அல்-தஷ்ரீகின் மத்தியில் அன்னார் செய்த பிரசங்கத்தை அனைவரும் செவிமடுத்தனர். அது ‘குத்பத்-அல்-வதாஅ’ என வழங்கியது:

‘‘உங்களது இந்த தினத்தை, இந்த பூமியை இந்த மாதத்தைப் புனிதமானதாக உங்களுக்கு ஆக்கி வைத்தது போல, இறைவன் நீங்கள் அவனைக் காணும் வரை ஒவ்வொருவர் இரத்தத்தையும் ஒவ்வொருவர் உடைமையையும் புனிதமானதாக ஆக்கி வைத்துள்ளான். தெரிந்து கொள்ளுங்கள். அறியாமைக் காலத்தன அனைத்தும் முற்றும் அழிக்கப் பட்டனவாக என் கால்களின் கீழ் உள்ளன. அறியாமைக் காலத்தின் இரத்தப் பழிவாங்கல்களும் அழிக்கப்பட்டுள்ளன. எமது இரத்தப் பழிவாங்கலாக நாம் முதலில் அழிப்பது, ரபீஆ-இப்ன்-அல்-ஹாரிஸின் மகனுடையதாகும். இஸ்லாத்துக்கு முன்னைய வட்டிக் கொடுப்பனவு களும் அழிக்கப்பட்டுள்ளன. எமது வட்டியில் நாம் முதலில் அழிப்பது, அப்பாஸ்-இப்ன்-அல்-முத்தலிப் உடையதாகும். அவை அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன. பெண்கள் விடயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் பாதுகாவலுடன் நீங்கள் அவர்களை எடுத்துக் கொண்டுள்ளீர்கள். இறைவன் தன் வார்த்தைகள் கொண்டு நீங்கள் அவர்களுடன் கூடுவதைச் சட்டபூர்வமாக்கி வைத்துள்ளான். அவர்களிடம் உங்களுக்கும் சில உரிமைகள் உண்டு. நீங்கள் விரும்பாத எவரையும் உங்கள் விரிப்பில் அமர அவர்கள் அனுமதிக்காமல் இருப்ப தாகும். அவ்வாறு அவர்கள் அனுமதித்தால் காயம் ஏற்படாதவாறு நீங் கள் அவர்களைத் தண்டிக்கலாம். உங்களிடம் அவர்களுக்கு உள்ள உரிமை, முறையான உணவும், உடையும் நீங்கள் அவர்களுக்கு அளிப்பதாகும். நான் அல்லாஹ்வின் வேதத்தை உங்கள் மத்தியில் விட்டுச் செல்கின்றேன். அதை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் ஒரு போதும் வழி தவற மாட்டீர்கள்.’’

‘‘(மறுமை நாளில்) என்னைப் பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். அப்போது நீங்கள் என்ன சொல்வீர்கள்?’’ என வினவினர் நபிகளார். மக்கள் கூறினார்கள்: ‘‘நீங்கள் (உங்கள் தூதை) எங்களுக்கு அறிவித்து விட்டீர்கள்; நபித்துவப் பொறுப்பை நிறைவேற்றி விட்டீர்கள்; எங்க ளுக்கு நேர்மையான நல் உபதேசங்கள் செய்தீர்கள்’’. உடன் நபிகளார்

தமது சுட்டுவிரலை வானை நோக்கி உயர்த்தி, பின் மக்களை நோக்கித் தாழ்த்தி, ''இறைவா! நீயே இதற்குச் சாட்சி'' என மூன்று முறை கூறினார்கள்.

மினாவில் மற்றுமோர் உபதேசம் செய்தார்கள். அதன் போது கூறினார்கள்: ''எனக்குப் பின்னால் ஒருவரை ஒருவர் கொன்று, 'குப்ரு'க்குத் திரும்பி விடாதீர்கள்''.

தமது இறுதி ஹஜ் யாத்திரையிலிருந்து திரும்பும் வழியில், ஜஹ்பாவுக்கு அண்மையிலான 'காதிர்-கும்' எனும் இடத்தில் தூ-அல்-ஹிஜ்ஜாவின் பதினெட்டாம் நாள் மக்களுக்கு உரையாற்றினர் நபிகளார். அலீ-இப்ன்-அபூ தாலிபின் கையைப் பிடித்து உயர்த்தி அன்னார் கூறினார்கள்: ''நான் யாருடைய நண்பனாக இருக்கின்றேனோ அவனுடைய நண்பராவார் அலீ''. யமனிலிருந்து திரும்பி வந்து இறுதி யாத்திரையில் கலந்து கொண்டிருந்தார் அலீ. அவர் குறித்து துருப்பினர் சிலர் முறைப்பாடு செய்திருந்தனர்: அவர் தங்களுடன் கொடூரமாக நடந்து கொண்டதாகவும், அவரது உதவியாளர் தமக்களித்த ஆடைகளை அவர் திருப்பிப் பெற்றுக் கொண்டதாகவும். காதிர்-கும் மில் நபிகளார் அலீயின் மீதான முறைப்பாடுகளைக் களையும் முகமாக அவரது ஸ்திதி குறித்து விளக்கினார்கள்; அவருடைய யோக்யதைகள் குறித்துப் பேசினார்கள்.

# உஸாமா-இப்ன்-ஸைத்-இப்ன்-ஹாரிஸாவின் படைதிரட்டு.

தமது இறுதி ஹஜ் யாத்திரையை முடித்துக் கொண்டு நபிகளார் மதீனா திரும்பினார்கள். தூ-அல்-ஹிஜ்ஜாவின் எஞ்சிய நாட்களும், ஹிஜ்ரி பத்தாம் ஆண்டின் முஹர்ரம், ஸபர் மாதங்களும் கழிந்தன. பின்னர் நபிகளார் ஸிரியா நோக்கிச் செல்லப் படையொன்றினைத் தயார் செய்தார்கள். அதற்குத் தளபதியாக நியமிக்கப்பட்டவர் உஸாமா-இப்ன்-ஸைத்-இப்ன்-ஹாரிஸா. அவர் அல்-பில்கா, பலஸ்தீன் பிர தேசங்கள் நோக்கிச் செல்லுமாறு பணிக்கப்பட்டார். மக்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளலானார்கள். அவர்களுள் முஹாஜிரூன்களும், அன்ஸார்களும் இருந்தனர். படையணியில் அபூபக்ர், உமர் கூட இருந்தனர். உஸாமா அவ்வேளை பதினெட்டு வயதினராகவே இருந் தார். உஸாமா விடுவிக்கப்பட்ட ஒருவராக வயதில் மிகவும் இளைய வராக இருக்க, அவரின் கீழ் மிக மூத்தவர்களான முஹாஜிரூன்களும், அன்ஸார்களும் அனுப்பப்படுகின்றமை குறித்து மக்கள் பலவாறாகப் பேசலாயினர். உஸாமாவின் நியமனம் குறித்த சர்ச்சைகளைப் பொருட் படுத்தாத நபிகளார் அவரை நன்கு உபசரிக்கும்படி பணித்தார்கள். படை திரட்டு திட்டமிடப்பட்ட இரண்டு நாட்களுள் நபிகளார் சுக வீனத்துக்குள்ளாகினர். படை புறப்பட இயலவில்லை. நபிகளாரே கையளித்த துவஜத்தைப் பெற்றுக் கொண்ட உஸாமா, அல்-ஜார்ப்பில் முகாமிட்டிருந்தார். அல்-வாகிதீ மட்டுமே படையினரின் எண்ணிக் கையைப் பதிவு செய்துள்ளார். அதில் மூவாயிரம் பேர் இருந்தனர்.

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மறைவு

*நபிகளார் தமது யாத்திரையிலிருந்து திரும்பி, சுமார் மூன்று மாத காலமளவில் சுகவீனமுற்றார்கள். சுகவீனம் மைமூனாவின் இல்லத்தில் ஆரம்பித்து பத்து நாட்களாகத் தொடர்ந்தது. ரபீ-அல்-அவ்வல் பன்னிரெண்டாம் நாள் திங்கட்கிழமை அறுபத்திமூன்று வயதினராக அண்ணலார் மரணித்தார்கள். ஹிஜ்ரி ஏழில் கைபர் கைப்பற்றப் பட்டதன் பின்னர் ஸலாம்-இப்ன்-மஷ்கம்மின் யூத மனைவி கொடுத்த நஞ்சூட்டப்பட்ட இறைச்சித் துண்டொன்றை உட்கொண்டதிலிருந்து நபிகளார் அசௌக்கியத்துக்குள்ளாகியிருந்தமை ஸஹீஹ். அன்னார் அதனை உட்கொள்ளாது துப்பிவிட்டாலும் கூட, நஞ்சின் தாக்கம் அன்னவருள் இருந்தது. உம்ம்-அல்-முஃமினீன் ஆயிஷாவின் இல்லத்தில் தாம் பராமரிக்கப்பட வேண்டும் என நபிகளார் தம் மனைவியர்க்கு உணர்த்தினர். குர்ஆனின் இறுதி இரண்டு ஸூறாக்களையும் (முஅவ்வததைன்) அவற்றின் நன்மைகள் கருதி ஓதியவராக நபிகளாரின் கரங்கள் கொண்டே அன்னவரின் உடம்பைத் தடவி விடுவார் ஆயிஷா.*

*சுகவீனம் முற்றியிருந்த வேளை நபிகளார் தமது ஸஹாபாவிடம் வினவினார்கள்: ''நீங்கள் வழி தவறி விடாமல் இருப்பதற்காக நான் உங்களுக்கு சிலதை எழுதட்டுமா?'' ஸஹாபா முரண்பட்டனர். சிலர் எழுதுவதற்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முனைந்தனர். அன்னாருக்குச் சிரமங்கள் உண்டாகும் எனக் கொண்டு சிலர் வாழா விருந்தனர். எழுதுவதற்கான உபகரணங்களைக் கொண்டு வரக்கூறியமை ஓர் ஆலோசனையேயன்றி கட்டளையாக அமையவில்லை எனக் கொள்வதற்கான குறிப்புகள் கிட்டுகின்றன. 'இறைவனின் நூல் எமக்குப் போதுமானதாயிருக்கும்' என உமர் கூறியதுடன், நபிகளார்*

தமது ஆலோசனையை மீட்காது விட்டனர். தாம் கூற விழைந்தமை, கடமைப்பாடாக அமைவதொன்றாயின் நபிகளார் அதனை வாய் மொழி மூலம் கூறியிருப்பார்கள். ஏற்கெனவே தமது சுகவீனத்தின் போது அராபிய தீபகற்பத்திலிருந்து சிலை வணக்கஸ்தர்களை வெளி யேற்றி விடும்படியும், தூதுக்குழுக்கள் வரும் வேளை அவர்களை கண்ணியமாகவும், தயாளத்துடனும் நடாத்துமாறும் அண்ணலார் வாய் மொழியாகவே கூறியிருந்தனர்.

பாத்திமாவைத் தம் அருகில் அழைத்த அல்லாஹ்வின் தூதர் அவரிடம் ஏதோ இரகசியமாகக் கூறினர். கண்ணீர் சிந்தலானார் பாத்திமா. மீண்டும் அழைத்துத் திரும்பவும் இரகசியமாக ஏதோ கூறினர் நபிகளார். பாத்திமா மகிழ்ச்சியாகச் சிரித்தார். நபிகளாரின் மறைவின் பின்னர் பாத்திமா கூறினார்: ''அன்னார் தாம் மரணிக்கப் போவதாகக் கூறினர். நான் அழுதேன். பின்னர் அன்னாரின் குடும்பத் தோருள் அன்னாரை இணைந்து கொள்ளும் முதலாமவர் நான் தான் என்றனர். அதனால் மகிழ்ந்து நான் சிரித்தேன்.'' அவ்வாறே நிகழ்ந்தது. நபித்துவத்தின் ஓர் அடையாளம் இது.

நபிகளாரின் சுகவீனம் கடுமையாயிற்று. மக்களை 'ஸலா'வில் முன்னின்று நடாத்தவும் இயலாது போக அன்னார் கூறினர்: ''ஸலாவை நடாத்துமாறு அபூபக்ருக்குக் கூறுங்கள்''. தனது தந்தையாரை ஒரு தீய சகுனம் என மக்கள் கருதக்கூடும் எனக் கொண்ட ஆயிஷா இதனை விரும்பவில்லை. அவர் கூறினார்: ''அபூபக்ர் மிகவும் மென்மை யானவர்; அவரது குரலும் மென்மையானது; மேலும் குர்ஆன் ஓதும் போது அவர் அதிகமாகக் கண்ணீர் சிந்துவார்''. என்றாலும் நபிகளார் அதனையே வற்புறுத்தினார்கள். ஆகவே அபூபக்ர் முன் சென்று தொழுகையை நடாத்தினார். அல்-அப்பாஸும், அலீயும் துணை செய்ய, நபிகளார் ஒரு முறை வெளிவந்து உரையாற்றினார்கள். அபூ பக்ரை மெச்சிப் பேசி, அவரது குணநலன்கள் பற்றிக் கூறினார்கள். இந்த உலகை அல்லது மறுமையைத் தேர்ந்து கொள்ள இறைவன் சந்தர்ப்பமளித்துள்ளதாகவும் தாம் மறுமையைத் தேர்ந்து கொண்ட தாகவும் அன்னார் குறிப்புணர்த்தினார்கள்.

நபிகளாரின் இறுதி குத்பா, அன்னார் மறைவுக்கு ஐந்து நாட்கள் முன்னர் நிகழ்த்தப் பெற்றது. அதில் அன்னார் கூறினார்கள்: ''அல் லாஹ்வின் ஓர் அடிமை இவ்வுலகையும் அதன் அழகையும் காட்டப் பெற்றார். அவரோ மறுமையைத் தேர்ந்து கொண்டார்''. தம்மைத்தாம் நபிகளார் சுட்டிக் கொள்கின்றார்கள் என உணர்ந்த அபூபக்ர் கண்ணீர்

சொரியலானார். மக்கள் அவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அபூபக்ர் கொண்டிருந்த விளக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை.

தமது மறைவு தினத்து ஸலாத்-அல்-பஜ்ரின் போது ஆயிஷாவின் அறையின் திரைச்சீலையை ஒதுக்கி நபிகளார் ஸலாவுக்காக மக்கள் வரிசையில் நிற்பதைக் கண்ணுற்றார்கள். அன்னார் புன்னகை பூத்தார் கள். அவர்களுக்குப் பிரியாவிடை கூறுவது போலும் சிரித்தபடி அன் னார் வெளியே வந்தார்கள். மக்கள் மகிழ்ந்தனர். ஸலாவை நடாத்த நபிகளார் வெளிவந்துள்ளனர் எனக் கொண்டு அபூபக்ர் பின் செல்ல முனைந்தார். என்றாலும் ஸலாவை நிறைவு செய்யும்படி அபூபக்ருக் குச் சைகை செய்து அறைக்குத் திரும்பிய நபிகளார் திரைச்சீலையை மூடிவிட்டார்கள்.

அறைக்குள் வந்த பாத்திமா கூறினார்: 'ஓ எனது தந்தையாருக்குத் தான் எத்துணை வேதனை!' நபிகளார் கூறினார்கள்: ''இன்றைய தினத் தின் பின்னர் உமது தந்தை வேதனைகளை அனுபவிக்க மாட்டார்''.

உஸாமா-இப்ன்-ஸைத் உள்ளே வந்தார். அவருக்காக நபிகளார் சைகை மூலம் பிரார்த்தனை செய்தனர். சுகவீனம் முற்றியமை காரண மாக அன்னாரால் பேச இயலவில்லை.

நபிகளார் ஆயிஷாவின் மார்பில் சாய்ந்தவர்களாக இருந்தார்கள். தனது சகோதரன் அப்த்-அல்-ரஹ்மானிடமிருந்து 'ஸிவாக்' ஒன்றினைப் பெற்ற ஆயிஷா, அதன் ஒரு முனையைச் சப்பி மென்மையாக்கிக் கொடுக்க அண்ணலார் அதைக்கொண்டு தம் பற்களைச் சுத்தம் செய்து கொண்டார்கள்.

தண்ணீர்ப் பாத்திரமொன்றினுள் கைவிட்டுத் தமது முகத்தைத் துடைத்தவராக நபிகளார் கூறினார்கள்: ''லா இலாஹ இல்லல்லாஹ் - மரணத்தின் வேதனை இருக்கின்றது''. **''அல்லாஹ்வின் அருள் கிட் டியவர்களின் தோழமையுடன்...'' (அல்-நிஸா 4:69)** எனக் கூறுகை யில் அன்னாரின் குரல் கரகரக்கலாயிற்று. தொடர்ந்து, ''சுவனத்தின் உன்னதமான தோழருடன்...'' எனக் கூறினர். நபிகளாருக்குத் தேர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது எனக்கொண்ட ஆயிஷா, அண்ண லார் உன்னதமான தோழரைத் தேர்ந்து கொண்டனர் எனத் தெளிந்து கொண்டார்.

நபிகளார், இறைவன் அவருக்கு சாந்தியையும் அமைதியையும் அருள் செய்வானாக! ஆயிஷாவின் மார்பில் தலையைச் சாய்த்தவர் களாக இருந்த வேளை, பகல் பொழுதில் இவ்வுலகை நீத்தார்கள்.

*அல்-ஸனாஹ்வில் இருந்த அபூபக்ர் வந்து நபிகளாரின் முகத்தை மூடியிருந்த திரையை விலக்கி, குனிந்து, முத்தமிட்டு மக்களிடம் சென்றார். நிகழ்ந்ததை மக்களில் சிலர் நம்பினர்; சிலர் நம்பாது விட்டனர். நபிகளார் இறந்துவிடவில்லையென மக்களிடம் உமர் கூறிக் கொண்டிருந்தமையைக் கண்டார் அபூபக்ர். மக்கள் அபூபக்ரைச் சூழ்ந்து கொண்டனர். அவர் கூறினார்: ''ஐயம் ஏதும் இல்லை. முஹம் மதை யாரும் வணங்கி வந்திருந்தால் அவர்கள் தெரிந்து கொள்ளட்டும் - முஹம்மத் இறந்து விட்டார். இறைவனை வழிபடுபவர்களுக்கு இறைவன் உயிரோடிருக்கின்றான்; அவன் ஒரு போதும் மரணிப்ப தில்லை. இறைவன் கூறினான்:*

''முஹம்மது (அல்லாஹ்வின்) தூதரேயன்றி (வேறு) அல்லர். அவ ருக்கு முன்னரும் (அல்லாஹ்வின்) தூதர்கள் (பலர்) திட்டமாக(க் காலம்) சென்று விட்டனர். எனவே அவர் இறந்து விட்டாலோ, அல்லது கொல்லப்பட்டாலோ உங்களுடைய குதிங்கால்களின் மேல் நீங்கள் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களா? (அவ்வாறு) எவரேனும் தம் குதிங்கால்களின் மேல் திரும்பிவிட்டால் அல்லாஹ் வுக்கு அவர் எந்த இடையூறும் செய்திடவே முடியாது. அல்லாஹ் நன்றியுள்ளவர்களுக்கு விரைவில் (நற்)கூலி வழங்குவான்''.
(ஆல-இம்ரான் 3:144)

*மக்கள் அமைதியடைந்தனர். உமரை அவரது கால்கள் தாங்க இயலாது அவர் தளர்ந்து விட்டார். இந்த 'ஆயா'வை இதன் முன்னர் அவர்கள் செவியுற்றதே இல்லை போலத் தோற்றியது.*

*பாத்திமா, அல்லாஹ் அவருக்கு அருள்பாலிப்பானாக, கூறினார்:*

*ஓ என் தந்தை - அவரது இறைவனது அழைப்புக்கு அவர் பதிலளித்து விட்டார்.*

*ஓ என் தந்தை - சுவனத்துச் சோலையில் இருக்கிறது அவர் இருப்பிடம்.*

*ஓ என் தந்தை - அவரது மரணத்தை ஜிப்ரீலுக்கு அறிவிக்கிறோம்.*

*அல்லாஹ், அவனது தூதருக்கும், அன்னாரின் குடும்பத்தார்க்கும், தோழர்களுக்கும் கருணையும், சாந்தியும், அமைதியும் அருள்வானாக.*

*உலகங்கள் அனைத்தையும் பரிபாலித்துப் போஷிக்கும் அல்லாஹ் வுக்கே புகழ் அனைத்தும். வல்-ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.*

இறைதூதர் காலத்து மதீன சமூகம், ஆரம்ப முஸ்லிம் சமூக வாழ்வின் மிக முக்கியமான அம்சங்களை வெளிக்கொண்டு வருகின்றது. கலாநிதி அக்ரம்-ளியா-அல்-உமரீ, ஸுன்னா, உஸூல்-அல்-ஹதீஸ் துறைகளின் வல்லுனர்கள் வகுத்தளித்த முறைமைகளையும் நவீன வரலாற்றுத் திறனாய்வு நெறிகளையும் ஒரு சேர்த்துக் காண்பதில் கண்டுள்ள வெற்றி, இஸ்லாமிய வரலாற்றியல் முறைமை ஒன்றினை உருவாக்கம் செய்ய வழியமைத்துக் கொடுக்கின்றது. லௌகிக, ஆன்மீக இலட்சிய வாழ்வொன்றினை யாசித்து நிற்கும் முஸ்லிம் தலைமுறையினர் அவாவுகின்ற உன்னத வாழ்வமைப்பின் ஆரம்ப அத்திவாரங்களை விளங்கிக் கொள்வதில் பெரும் பயன் நல்குவது இந்த நூல். இரண்டு பாகங்களிலான இந்த நூலின் இரண்டாம் பாகமே இப்போது வெளியாகியுள்ளது.



ஈராக்கின் மோஸூல் நகரில் 1942 ஆம் ஆண்டு பிறந்த பேராசிரியர் அக்ரம்-ளியா- அல்-உமரீ, பக்தாத் பல்கலைக் கழகத்தின் கலைமானி, முதுமானிப் பட்டங்களைப் பெற்று அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1974 ஆம் ஆண்டு கெய்ரோவின் அய்ன்-ஷம்ஸ் பல்கலைக் கழக கலாநிதிப் பட்டம் பெற்ற அன்னார், மதீனாவில் இஸ்லாமியப் பல்கலைக்கழக ஸுன்னா வரலாற்றுத் துறைப் பேராசிரியராகவும், ஸீறா கற்கைநெறித் துறைத் தலைவராகவும் நீண்ட காலம் பதவி வகித்துள்ளார். இஸ்லாமிய வரலாறு குறித்து இருபதுக்கும் அதிகமான நூல்களை யாத்தும், பதிப்பித்தும் பெருந் தொண்டாற்றியுள்ள பேராசிரியர் உமரீ, நபிகளாரின் ஸீறா கற்கை நெறியில் கொண்டுள்ள ஆழ்ந்த புலமையும் ஆளுமையும் அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டுதல்களை ஈட்டிக் கொண்டுள்ளன.

Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

ISBN: 978-955-8398-63-0